

ஒ

திருப்புகழ்—இரண்டாம் பாகம்.

வ்ஸதலப் பாடல்கள்

545

[**31**–புதிய பாடல்களுடன்].

விற்பனைக்குரிய புத்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	திருப்புகழ் முதற்பாகம்: ஆறு படைவீடுகள் மூன்றும் பதிப்பு. 450-பாடல்கள். ...	2	0	0
	ஷெ காலிகோ கட்டடம்: கில்ட் ..	2	8	0
2.	ஷெ இரண்டாம் பாகம்: பஞ்சபூத ஸ்தலங்களும்: காசிமுதல் இராமேசம் வரையிலுள்ள வேறு ஸ்தலங்களும். 545-பாடல்கள். ...	2	8	0
3.	ஷெ மூன்றும் பாகம்: 310-பொதுப் பாடல்களும், திருவகுப்பு, கந்தரந்தாதி, அலங்காரம், அநுபூதி முதலியவைகளும். }	இனி யச் சிடப்படும்.		
4.	சிவஸ்தலமஞ்சரி: இரண்டாம் பதிப்பு. தேவாரம் பெற்ற ஸ்தலங்களின் இருப்பிடம், விசேடம் முதலிய விவரங்களும், ஸ்தலத்துக்கொரு தேவாரப்பாடலும் அடங்கியது. ...	1	0	0
	ஷெ ஷெ காலிகோ கட்டடம். ...	1	4	0
5.	பிரமோத்தரகாண்டவசனம்என்னும் சிவகதைகள்	0	4	0
6.	திருநீடூர்த் தலபுராணம்.	0	4	0
7.	திருத்தணிகைத் திருப்புகழ் முதலியன. ...	0	6	0
8.	திருத்தணிகைத் தலபுராணச் சுருக்கம் (வசனம்.)	0	3	0
9.	திருத்தணிகைத் திருப்புகழ் முதலியனவும் திருத் தணிகைத் தலபுராண வசனமும். ...	0	8	0
10.	காசிமாஹாத்மியம் என்னும் சிவகதை. ...	0	1	0
11.	திருப்புகழ் பதிப்பாசிரியர்: வ. த. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் சரித்திரமும் அவர்களியற்றிய தனிப்பாடல்களும்.	0	12	0
12.	"ஆடு மயிலே"	0	0	6
13.	History of the Tamil Prose Literature: ...	0	6	0

ஒரேகாலத்திற் பத்துப் பிரதிகள் வாங்கினால் ஒரு பிரதி விலை யின்றிக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு.

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்கசெட்டித் தெரு,
சென்னை: MADRAS.

உ

விநாயகர் துணை.

முருகக்கடவுள் துணை.

சுப்பிரமணியக்கடவுள் வரப்பிரசாதியாய்த்

திருவண்ணாமலையில் லெழுந்தருளியிருந்த

அருணகிரிநாதஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்புகழ்.

இரண்டாம் பாகம்.

பஞ்சபூதஸ்தலங்களும்

ஆறு படைவீடுகள் நீங்கக்

காசிமுதல் இராமேசம் ஈறுவுள்ள வேறு பல ஸ்தலங்களும்.

இது

பல கையெழுத்துப் பிரதிரூபங்களைக்கொண்டு

திருப்பாதிரிப்புலியூர் - வித்துவான்

சிவசிதம்பர முதலியாரவர்களாலும்

சேலம் காலேஜ்-தமிழ்ப்பண்டிதர்

சரவணப்பிள்ளையவர்களாலும்,

பரிசோதிப்பித்து

வடகீதுப்பட்டு

த. சுப்பிரமணியபிள்ளையவர்கள்

பதிப்பித்தது.

பஞ்சபூதஸ்தலங்கள்-முன்றும் பதிப்பு.

ஏனைய ஸ்தலங்கள்-இரண்டாம் பதிப்பு.

தந்துபிஷு, பங்குனிமீ.

(April, 1923.)

Copyright Reserved.

இந்தப் பிரதியின் எண் : 254 257

7555

☞ புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற்கண்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம். பதிப்பாசிரியருடைய கையெழுத்து மூத்திரை (Facsimile) உள்ள புத்தகங்களையே வாங்கவேண்டுமென்பது இதனால் எல்லோருக்குந் தெரிவிக்கப்படுகின்றது.

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்கசெட்டித் தெரு,
சென்னை : MADRAS.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
திருப்புகழ்-இரண்டாம் பாகம்:		
முதற்பதிப்பின் முகவுரை	xi	
இரண்டாம்பதிப்பின் முகவுரை	xii	
பிழைதிருத்தம்	xv	
பஞ்சபூத ஸ்தலங்கள்:		204
1. காஞ்சீபுரம்	ஈசக	சச
2. திருஆனைக்கா	ஈஎசு	கச
3. திருஅருணை	ஈஅஎ	ஏஅ
4. திருக்காளத்தி	சசஅ	ஈ
5. சிதம்பரம்	சநo	சுநு
காசிமுதல் இராமேசுரம் ஈரைவுள்ள ஸ்தலங்கள்-158: (அகாதிமுறை)		341
திரு-அதிகை	நிஅஉ	உ
அத்திக்கரை	எகசு	க
அத்திப்பட்டு	எகநி	க
திரு-அம்பர்	சுஈநி	க
திரு-அரத்துறை (திருநெல்வாயில்.)	நிகசு	க
அவிநாசி	எநிநி	ஈ
திரு-ஆடானை	எஅநி	க
திரு-ஆமாத்தூர்	நிஎநி	ச
திரு-ஆரூர்	நிஅச	க
ஆய்க்குடி	எஅஉ	க
திரு-ஆரூர்	சுசஎ	எ
திரு-ஆலங்காடு	நிஈக	ச

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
திரு-ஆவடுதுறை	ரூஎங	க
இஞ்சிகுடி	ரூங்அ	க
திரு-இடைக்கழி	ரூஉஎ	அ
திரு-இடைமருதூர்	ரூஅக	ச
இந்தம்பலம்	எஅக	க
இலஞ்சி	எஎச	ச
உத்தரகோசமங்கை	எஅச	க
உத்தரமேரூர்	ரூங்ங	ச
எட்டிகுடி	ரூரூக	ச
எண்கண்	ரூரூஉ	க
எழுகரைநாடு	எகூ0	க
திரு-ஐயாறு	எ0அ	க
ஒடுக்கத்துச்செறிவாய்	எகூ0	க
திரு-ஒற்றியூர்	ரூசக	உ
திரு-ஓத்தூர்	ரூங்ச	க
கடம்பந்துறை (கடம்பர்கோயில்.)	எச0	க
கடம்பூர்	ரூகூஅ	க
திருக்-கடவூர்	ரூஉக	உ
கந்தனூர்	எகஎ	க
கந்தன்குடி	ரூங்ங	க
கரியவனகர்	ரூகரூ	க
கருவூர் (வஞ்சி)	எசக	எ
கன்னபுரம் (திருக்கண்ணபுரம்.)	ரூசஉ	க
காசி	ரூகரூ	ங
காமத்தூர்	எகூக	க
காவளூர்	எ0ங	க
ஸ்ரீகாழி	ரூ0ரூ	கச
கீரனூர்	எரூஉ	க
திருக்-குடவாயில்	ரூரூங	உ
கும்பகோணம்	ரூஅரூ	எ
திருக்-குரங்காடுதுறை	எ0க	ங

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
குளந்தைநகர் (பெரியகுளம்.)	௭சுஙூ	க
குறட்டி	௭கஙூ	உ
திருக்-குற்றாலம்	௭௭கூ	ங
திருக்-கூடலையாற்றூர்	நுகூ௭	க
கூந்தலூர்	சுகூநு	க
கொடும்பாளூர்	௭சுக	க
கோட்டையூர்	சுகூஉ	க
கோசைநகர் (கோயம்பேடு.)	நுநு0	க
கோடி (குழகர்கோயில்.)	சுசு௭	க
கோடைநகர் (வல்லக்கோடை.)	நுநுநு	௭
திருக்-கோவலூர்	நு௭கூ	க
திருக்-சக்கிரப்பள்ளி	சுகூக	க
திருக்-சத்திமுத்தம்	சுகூசு	க
சப்தஸ்தானம்	௭0சு	ஞ
சிக்கல்	சுநுநு	உ
சிங்கை (காங்கேயம்.)	௭நுக	உ
சிவபுரம்	சுகூஙூ	க
சிறுவை	நு௭உ	ச
திருச்-செங்காட்டங்குடி	சுசுச	க
சேயூர்	நுசுஅ	க
சேலம்	௭சுஅ	க
சோமநாதன்மடம்	சுநுஙூ	க
சோமேச்சுரம்	சுகூக	க
தச்சூர்	நு௭அ	க
தஞ்சை	௭0சு	ங
திருத்-தவத்துறை (லாலிகுடி.)	௭ஙூசு	உ
தனிச்சயம்	௭சுஙூ	உ
தான்தோன்றி (ஆக்கூர்.)	சுஙூஉ	க
திரிபுவனம்	சுஅசு	க
திரியம்பகபுரம்	சுநுச	க

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
திலதைப்பதி	ரூஙூச	ஙூ
திருத்-துருத்தி	ரூளக	க
திருத்-துறையூர்	நுஅநு	க
தேவனூர்	நுஅ0	ஙூ
திரு-நல்லூர்	ரூ0ஙூ	க
திரு-நள்ளாறு	ரூஙூக	க
நாகபட்டினம்	ரூநுள	ஙூ
திரு-நாகேச்சுரம்	ரூகூச	க
திரு-நாவலூர்	நுஅரூ	க
நிம்பபுரம்	நுகூரூ	க
நெடுங்களம்	எகஉ	க
திரு-நெய்த்தானம்	எக0	க
நெருவூர்	எசரூ	க
திரு-நெல்வாயில்	நுகூஉ	க
திருப்-படிக்கரை (இலுப்பைப்பட்டு.)	ரூஉஙூ	க
பட்டாலியூர்	எநுஙூ	ஙூ
திருப்-பந்தணைநல்லூர்	ரூளநு	எ
திருப்-பராய்த்துறை	எஙூக	க
திருப்-பழுவூர்	எகக	க
திருப்-பழையாறை	ரூகூஅ	க
திருப்-பனந்தாள்	ரூஅக	க
பாகை	ரூஉநு	ஙூ
பாக்கம்	நுஙூநு	உ
திருப்-பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி.)	எசள	உ
திருப்-பாதிரிப்புலியூர்	நுஅஅ	க
திருப்-புக்கொளியூர்	எநுஅ	ஙூ
திருப்-புத்தூர்	எஅஙூ	உ
ஸ்ரீ-புருஷமங்கை (நாங்குநேரி.)	எளச	ஙூ
திருப்-பூந்துருத்தி	எ0கூ	க
பூவாளூர்	எஙூஅ	க
பெரியமடம்	ரூநுஉ	க

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
பெருங்குடி	நுஙக	க
திருப்-பெருந்துறை	சுசுஅ	ங
பெரும்புலியூர்	எகஉ	க
பேரூர்	எசூ0	உ
பேறைநகர் (பெரும்பேறு.)	நுசுசு	க
திருப்-போரூர்	நுசூ0	ச
மதுராந்தகம்	நுசுசு	ங
மதுரை	எசூநு	கஉ
திரு-மயிலை	நுசஙு	க0
திரு-மயேந்திரம்	சூ0ச	க
மருத்துவக்குடி	சுஎச	க
திரு-மாகாளம்	சுஙஎ	க
மாடம்பாக்கம்	நுநுஉ	உ
திரு-மாணிகுழி	நுஅசு	க
திரு-மாந்துறை	எகசு	ஞ
மாயாபுரி	நுகஎ	க
மாயூரம்	சுஉஙு	க
திரு-முட்டம் (ஸ்ரீமுஷ்ணம்.)	சூ0க	உ
திரு-முருகன்பூண்டி	எநுநு	க
வடதிரு-மூல்லைவாயில்	நுஙுஅ	ங
மூள்வாய்	எசுஉ	க
யாழ்ப்பாணயன்பட்டினம்	சூ00	க
ராமேசுரம்	எஅஎ	உ
ராஜபுரம்	எசசு	க
திரு-வக்கரை	நுஎ0	உ
வடகூர்	நுஅச	க
வயலூர்	எஉ0	கஅ
வயிரவிவனம்	நுகஅ	க
திரு-வலஞ்சுழி	சுசுஎ	க
திரு-வலிதாயம்	நுசக	க
வலிவலம்	சுசுச	க
திரு-வல்லம்	நுஉச	க

விஷயம்.	பக்கம்.	பாடற் றொகை.
வழுவூர்	ரூசo	உ
வாகை	எகூங	க
திரு-வாஞ்சியம்	சூசங	கி
வாலிகொண்டபுரம்	எகஅ	க
திரு-வான்மியூர்	ஙஙo	க
விசயபுரம்	சூசஎ	க
விசயமங்கலம்	எஙo	க
விசுவை	எகூசு	க
விரிஞ்சிபுரம்	ஙஉஎ	ஙு
விருத்தாசலம்	ஙகூங	ங
திரு-விற்குடி	சூசஙு	சு
திரு-வீழிமிழலை	சூஎஉ	க
திரு-வெஞ்சமாக்கூடல்	எசஎ	க
திரு-வெண்ணெய்நல்லூர்	ஙஅஎ	க
வேள்ளிகரம்	ஙிகஅ	கூ
திரு-வேட்களம்	ஙிகo	உ
வேதாரணியம்	சூசூஙு	ங
வேப்பஞ்சந்தி	ஙுகூசு	க
வேப்பூர்	ஙுகூஙு	க
வேலூர்	ஙுஉஙு	உ
திரு-வேற்காடு	ஙுங்கூ	உ
வைத்தீசுரன்கோயில்	கூகசு	சூ
பாட்டு முதற்குறிப் பகராதி	[க]-[கூ]	ஙுசூஙு

☞ இவ் விரண்டாம்பாகத் துள்ள பாடல்களின் பாட பேதங்களால் ஏற்பட்ட வேறு ஸ்தலங்களும் அவற்றுக் குரிய பாடல்களின் எண்களும் :—

இராமேசுரம்	741	திருத்தணிகை	791
கச்சி	818	தென்சேரிகிரி	574
கச்சிக்கச்சாலே	485	திரு - நெல்வேலி	846
திருக்-கழுக்குன்றம்	885	திருப்-பரங்குன்றம்	805
திருக்-குற்றாலம்	485	பழமுதிர்சோலை	572, 938
கைச்சினம்	491	மதுரை	725
திருச்-செங்கோடு	475		

கணபதி துணை.

சிவமயம்.

திருப்புகழ்—இரண்டாம் பாகம்.

முதற்பதிப்பின் முகவுரை.

திருப்புகழ் முதற்பாகத்தை 1894-ஆம் வருஷமாகிய ஜயஷூல அச்சிட்டு வெளிப்படுத்தினபோது இரண்டாம்பாகத்தை விரைவில் வெளிப்படுத்த முயலுவதாக முகவுரையில் எழுதியிருந்தேன். என்னுலான வரையில் முயன்றும் இக் காரியத்தை முடிக்க இவ் வளவுகாலஞ் சென்றது. சென்ருலும் காரியம் முடிந்து கண்ணுற் பார்க்கும்படியான பாக்கியத்தை முருகக்கடவுள் தந்தருளினரே என்று மிகவும் களிப்படைகின்றேன்.

மத்தியில், திரிசிரபுரத்திலிருக்கும் ஆறுமுக நயனூர் அவர்கள் எட்டுப்பிரதி ஒன்று சம்பாதித் தனுப்பினர்கள். அதில் என்னிடம் முன் அகப்படாத பாடல்களாக கூ-பாடல்கள் வரையில் அகப் பட்டன. இப்பாடல்கள் கிடைத்தது புதையலகப்பட்டதுபோலும்.

* * * * * * * * * *

சைவாபிமானிகளாயுள்ள அனைவரும் அரும் பெரும் பிரபந்த மாகிய இத் திருப்புகழை வாங்கி வாசித்துப் பயனடைவார்களென்று சண்முகநாதனுடைய தண்ணருளை வேண்டுகின்றேன்.

திருப்புகழ் இரண்டாம் பாகம் அச்சிட்டதுடன் நில்லாமல் இன்னும் எட்டுப்பிரதிகள் சம்பாதிக்கப் பல இடங்களிலும் பிர யத்தனஞ் செய்துகொண்டிருக்கின்றேன். இது விஷயத்தில் மேலே சொன்ன ஆறுமுக நயனூரவர்கள் மெத்த வுதவிபுரிந்து வருகிறூர்கள். அவர்களைப்போல் இன்னும் சிலர் உதவிபுரிந்தால் மிகவும். அநுகூலமா யிருக்கும். நூறு பாடல்கள் சேகரமான வுடன் அச்சிட்டு வெளிப்படுத்த உத்தேசித் திருக்கின்றேன். சுப்பிரமணியக் கடவுள் துணை செய்வாராக.

மதுரைஜில்லா,
வானரமதுரை.
1901ஷூ
அக்டோபர்மீ.

வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

திருத்தணிகேசன் திருவடி வாழ்க.

திருத்தணிகேசன் திருவடிதுணை.

திருப்புகழ்—இரண்டாம் பாகம்.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

திருப்புகழ் முதற்பாகம்—மூன்றும் பதிப்பு—ஆறுபடை வீடுகளுக் குரிய பாடல்கள் 450, இதுவரை யச்சாகாத 25 - பாடல்களுடன், (1921ஹ ஜூன்மீ) துன்மதிஹ வைகாசிமீ வெளிவந்தது. அப்பாற் பஞ்சபூத ஸ்தலங்களுக்கும், ஆறுபடை வீடுகள் நீங்கக் காசிமுதல் இராமேசம் ஈறுவுள்ள வேறு ஸ்தலங்களுக்கும் உரிய, இதுவரை யச்சாகாத 31-பாடல்களுடன், 545-பாடல்கள் கொண்ட இவ்விரண்டாம் பாகம் வெளிவர இக்காலஞ் சென்றதற்குக் காரணம், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினேமாகிய எமக்குள்ள அவகாசக்குறைவும், போதிய பொருளின்மையுமேயாம். எனினும், பின்னர்க்கூறிய காரணம் எமக்கோரிடையூ றுகாவண்ணம் உதவி, எம்மை இந் நன்முயற்சியிலாக்கி, இதனை முற்றுப்பெறச் செய்தவர் முதற்பாகம் மூன்றும்பதிப்பின் முகவுரையிற் குறிப்பாற் கூறப்பட்டுள்ள எமது உத்தம நண்பரே. இவ்வாறு எமக்கு உதவிபுரிந்து புகழ்பெறும் இவர் "நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி யொல்லும்வா யுன்று நிலே"; "ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற் பொன்ரு துநிற்பதொன் றில்" என்னுந் திருக்குறட் பாக்களுக்கு ஒரு காட்டாயினர்.

இப்பதிப்பிற் காஞ்சீபுரம், திருவானைக்கா, திருவண்ணாமலே, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய பஞ்சபூத ஸ்தலங்கள் முதலிலும், இவைகளும், முதற்பாகத்திலடங்கிய ஆறுபடை வீடுகளும் நீங்கக் காசி முதல் இராமேசம் வரையுள்ள ஏனைய

ஸ்தலங்கள் பின்னரும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவ் வேனைய ஸ்தலங்களுக்குரிய பாடல்களை எளிதிற் காணும் படிப் பொருளடக்கத்தில் இத்தலங்கள் அகராதி முறையிற் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தலத்துக்கும் முத லில் அத்தலத்தின் இருப்பிடம், விசேடம் முதலியவற்றை எமக்குத் தெரிந்தவரையில் ஒருவாறு சுருங்கக் கூறியுள் ளேம். இவைகளிற் சிலவற்றிற்குத் தக்க ஆதாரம் எமக்குப் புலப்படவில்லை. இஃதிவ்வாறாக, இராமேசத்துக் குரிய பாடல்கள் முடிந்தபின், " இடம் விளங்காத ஸ்தலங்கள் " என்றே ஒரு தலைப்பிட்டு, அதன்கீழ் இருப்பிடம் முதலிய யாதொன்றும் எம்மால் அறியப்படக்கூடாத ஏழு ஸ்தலங்க ளின் பாடல்களை இறுதியில் அமைத்திருக்கின்றேம். இவ் வாறு யாம் துணிந்தெழுதியுள்ளவற்றி லுள்ள குற்றங் குறைகளை யுணர்ந்த அன்பர்கள் தயைசெய்து அவைகளை எமக்குத் தெரிவிப்பார்களாயின் இனி வரும் பதிப்புக்களி லேனும் அவைகளை நீக்கிவிடலாம்.

திருப்புகழ் முதற்பாகம்-இரண்டாம் பதிப்பின் முக வுரைக் குறிப்பில் எமது தந்தையார் கூறியாங்குச் சேகரித்த புதுப்பாடல்களில், 25-பாடல்கள் ஆறுபடை வீடுகளுக் குரியனவாதலின், அவை மூன்றும்பதிப்பான முதற்பாகத் தில் அவ்வப் படைவீட்டின் பாடல்களோடு சேர்க்கப் பட்டன. இவ்விரண்டாம் பாகத்தில் **490, 491, 610, 613, 646, 658, 661, 679, 707, 729, 730, 731, 732, 755, 756, 779, 781, 792, 807, 826, 846, 849, 875, 897, 904, 910, 927, 942, 957, 986, 995** ஆகிய எண்களுள்ள **31**-பாடல்கள் புதியன. ஒவ் வொரு புதுப் பாடலையும், நூலகத்து அதுவதுக்குரிய எண் ணின்முன் "பு" என்னும் எழுத்தை அச்சிட்டும், இறுதியிற் பாட்டு முதற்குறிப்பகராதியில் அப்பாடற் றொடக்கத்தின் முன் உடுக்குறி (*) யிட்டும் விதந்திருக்கின்றேம்.

எமது தந்தையார் திருப்புகழ் சேகரஞ் செய்யத் தொடங்கிய பின் 50-வருடங்கள் சென்றிருக்கின்றன. இக்

காலத்துக்குள்ளும் எத்தனை எட்டுப்பிரதிகள் மண்ணுக்குஞ் செல்லுக்குந் தீக்கும் இரையாயினவோ? அவற்றுள் எத்தனை அருமைப்பாடல்கள் எம்மனோர்க்கு எக்காலத்துங் கிட்டாவாயினவோ? காலகதியின் விரைவையும், கணந்தோறும் இங்ஙனம் யாமிழக்கும் இம்மை மறுமைப் பயன்களையும் எண்ணுந்தோறும் எம் மனம் பதைக்கின்றது. நீர்க்குமிழிக்கு நிகரான யாக்கையைப் பெற்ற நமது வாழ்நாள் இத்தன்மைத்தாதலின், அச்சாகாத பாடல்களை வைத்திருப்பவர்களும், அவற்றைச் சேகரிக்கக் கூடிய ஆற்றலுடையவர்களும், தத்தமக்கே திருப்தி தருவதான காரணங் கொண்டு, அப்பாடல்களை உலகத்தார்க்குப் பயன்படும்படி உடனே வெளிப்படுத்தாது சேமித்து வைத்திருப்பதும், வாளா காலங்கழிப்பதும் என்னையோ? இவற்றை யடையும் படியான பெரும்பாக்கியம் பெற்ற இவர்கள், உள்ளபோதே கொடுக்கும்படிக்கு ஸ்வாமிகள் ஆஞ்ஞாபித்திருப்பதை மறவாமல், இத் திருப்புகழ்ச் செல்வத்தை வீணுக்காது, இங்ஙனம் வறிஞராய் ஏற்கும் எமக்கும், தமக்கும், பிறர்க்கும் பயன்படும்படி ஒரு சிறிதுங் காலந்தாழ்க்காது உடனே பகிரும்படிக்கும், மேன்மேலுந் தேடிக்கொணர்ந்து பகிரும்படிக்கும் யாம் இவர்களை மிகவும் வேண்டிக் கொள்கின்றேம்.

மூன்றும் பாகத்திற் றிருப்புகழ்ப் பொதுப்பாடல்களும், திருவகுப்பும், கந்தரந்தாதியும், கந்தரலங்காரமும், கந்தரநுபூதியும், திருப்புகழ் முதலியவற்றின் ஆராய்ச்சியும், அருணகிரிநாத ஸ்வாமிகளின் சரித்திர ஆராய்ச்சியும், திருப்புகழ்ப் பாடல்களின் சந்தக்குறிப்பும் வரும். இம் மூன்றும் பாகம் விரைவில் வெளிவருமாறு எம்மையாளுடைய செவ்வேள் இனிதருள் புரிவாராக.

சென்னை : 1. 3. 1923.
292, லிங்கசெட்டித் தெரு,
துந்துபிஷு, மாசிமீ 18உ

வ. சு. சண்முகம்.
வ. சு. செங்கல்வராயன்.

பிழை திருத்தம்.

☞ புத்தகத்தைப் படிக்கத் தொடங்குமுன் பின்வரும் திருத்தங்களைச் செய்து கொள்க. எழுத்துச் சிதைவினாலும் அச்சுப் பிறழ்வினாலுஞ் சிற்சில இடங்களிலுண்டான பிழைகளை ஆங்காங்குத் தக்கவாறு திருத்திக்கொள்க.

பாட்டு.	பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
458	௯௪௯	28	ஸ்வாமிளாகத்	ஸ்வாமிகளாகத்
491	௯௯௯	12	யிட்ட	இட்ட
525	ச00	2	போதக	* போதக
	சடு0	24	திறக்கோவை	திருக்கோவை
597	சடுஎ	24	தீதித தீதி தோதிமி	திந்தித தீதி திந்திந்
612	சஎ௯	11	தனபதி	தன்பதி
634	சகஉ	26	புலிய	புலியு
	டுஎக	7	வீரட்டத்	வீரத்
753	டுகஉ	20	நகைகோ	நகைகொ
	௯0உ	1	௯ உ	௯0உ
817	௯சடு	3	சாதியிலா	சாதியிலர்
	௯௯உ	6	ஆனறோர்	ஆன்றோர்
849	௯எக	4	பெருமாளே.	பெருமாளே. (௯)
860	௯அ0	14	வசங்களா மென	வசங்க ளாமென
879	௯௯எ	30	ச்சாம்பல்.	சாம்பல்.
881	௯௯௯	5	கரம	காம
906	எஉக	20	சித்ரதது	சித்ரத்து
,,	எஉஉ	4	மயிர்	மயில்
,,	,,	22	டிட்டிடடி	டிட்டிட்டி
	எசுடு	22	பெற்றது	பெற்றது.

கணபதி துணை.

திருத்தணிகேசன் துணை.

சிவமயம்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருப்புகழ்.

பஞ்ச பூத ஸ்தலங்கள்.

1. காஞ்சிபுரம்.

[இது பஞ்சபூத ஸ்தலங்களிற் பிருதிவி ஸ்தலம். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து முப்பத்திரண்டறமும் வளர்த்தருளிய திவ்ய க்ஷேத்திரம். முத்தி ஸ்தலங்கள் ஏழனுள் ஒன்று. "நகரேஷு காஞ்சி" எனப் படும் விசேஷ நகரம். "தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித் திரு வேகம்பன் செம்பொற்கோயில்", என்றார் மாணிக்கவாசகரும். காமாக்ஷியம்மையுடைய ஆலயமாகிய காமகோட்டம், முருகபிராற் குரிய குமாரகோட்டம், வரதராஜ பெருமா னுடைய ஆலயமாகிய அத்திகிரி முதலிய பல கோயில்கள் நிறைந்துள்ள பழம்பதி. கச்சியப்பசிவாசாரியர் பாடியருளிய கந்தபுராணமுஞ் சிவஞான முனிவரும், கச்சியப்பமுனிவரும் பாடியருளிய காஞ்சிப்புராணமும் இத்தலத்துப் பெருமையை நன்கு விளக்குவன.]

451.

அதிமதங் கக்கப் பக்கமு கக்குஞ்
சரிதனங் தைக்கச் சிக்கென மெக்கங்
கணைதருஞ் செச்சைப் பொற்புய னத்தன் குறவாணர்-

அடவியர் தத்தைக் கெய்த்துரு கிச்சென்
றடிபணிந் திட்டப் பட்டும யற்கொண்
டயர்பவன் சத்திக் கைத்தல னித்தன் குமரேசன்;

துதிசெயும் சுத்தப் பத்தியர் துக்கங்
கணிபவன் பச்சைப் பகுதிட டத்துங்
துணைவனென் றர்ச்சித் திச்சைத ணித்துன் புகழ்பாடிச்-

சுருதியின் கொத்துப் பத்தியு முற்றுங்
துரியமுந் தப்பித் தத்வம னைத்துங்
தொலையுமந் தத்துக் கப்புற நிற்கும் படிபாராய்;

கதிபொருந் தக்கற் பித்துர டத்துங்
கனல்தலம் புக்குச் சக்ரமெ டுக்குங்
கடவுளும் பத்மத் தச்சனு மூட்டும் படிமோதிக்-

கதிரவன் பற்குற் றிக்குயி லைத்திண்
சிறகரிந் தெட்டுத் திக்கர்வ குக்குங்
கடகமுந் தட்டுப் பட்டொழி யக்கொன் றபிராமி;

பிரிவ்ரதம் பற்றப் பெற்றம கப்பெண்
பரிவொழிந் தக்கிக் குட்படு தக்கன்
பரிபவம் பட்டுக் கெட்டொழி யத்தன் செவிபோயப்-

பனவிபங் கப்பட் டப்படி வெட்டும்
படிமூனிந் தற்றைக் கொற்றம்வி லோக்கும்
பரமர்வந் திக்கக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (க)

452.

கினகதம் பத்தைச் செச்சையை மெச்சுங்
குடகசங் கத்துப் பொற்புய வெற்பன்
கடலுள்வஞ் சித்துப் புக்கதொர் கொக்கும் பொடியாகக்-

கறுவுசெஞ் சத்திப் பத்மக ரத்தன்
குமரனென் றர்ச்சித் தப்படி செப்புங்
கவிமொழிந் தத்தைக் கற்றற வற்றும் புவியோர்போய்;
குனகியுங் கைக்குக் கற்பக மொப்பென்
றனகனென் றிச்சைப் பட்டத ளிக்குங்
குழுணனென் றெப்பிட் டித்தனை பட்டிங் கிரவான-
குருடுகொண் டத்தச் சுத்தம னைத்துந்
திருடியுஞ் சொற்குத் தக்கதொ டுத்துங்
குலவியுங் கத்தப் பட்டக லக்கந் தெளியாதோ;
சனகனன் புற்றுப் பெற்றம டப்பெண்
தனிபெருங் கற்புச் சக்ர டத்துந்
தகையிலங் கைச்சுற் றத்தைமு ழுத்துஞ் சுடவேவெஞ்-
சமரசண் டக்கொற் றத்தவ ரக்கன்
கதிர்விடும் பத்துக் கொத்துமு டிக்குந்
தனியொரம் பைத்தொட் டுச்சுரர் விக்னங் களைவோனும்;
தினகரன் சொர்க்கத் துக்கிறை சுக்ரன்
*சசிதரன் திக்குக் கத்தர கத்யன்
திசைமுகன் செப்பப் பட்டவ சிட்டன் திரள்வேதஞ்-
செகதலஞ் சுத்தப் பத்தியர் சித்தம்
செயலொழிந் தற்றுப் பெற்றவர் மற்றும்
சிவனும்வந் திக்கக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (உ)

453.

செடியுடம் பத்தித் தெற்றியி ரத்தஞ்
செறிநரம் பிட்டுக் கட்டிய சட்டஞ்
சிறைதிரண் டொக்கத் தொக்கவி னைப்பந் தவிகாரம்-
திமிரதுங் கத்தத் துத்திரை யெற்றுஞ்
செனனபங் கத்துத் துக்கக டற்கண்
திருகுரும் பைப்பட் டுச்சுழல் தெப்பங் கரணுதி;

---

* சசி தரன் = ஈசானியன்.

குடிபுகும் பொக்கப் புக்கிலி றப்பின்
குடிலம்வெந் தொக்குக் கொட்டில்ம லத்தின்
குகைசுமந் தெட்டுத் திக்கிலு முற்றுங் தடுமாறுங்-

குவலயங் கற்றுக் கத்தியி லேக்குஞ்
சமயசங் கத்தைத் தப்பியி ருக்குங்
குணமடைந் துட்பட் டொக்கஇ ருக்கும் படிபாராய்;

படிதருங் கற்புக் கற்பக முக்கண்
கொடிபசுஞ் சித்ரக் குத்தர முத்தம்
பணிநிதம் பத்துச் சத்தி யுகக்குங் குமரேசா-

பாவசங் கெட்டெட் டக்கர நித்தம்
பரவுமன் பர்க்குச் சித்தி யளிக்கும்
பரமர்வந் திக்கத் தக்க பதத்தன் குருநாதா;

தொடியிடும் பத்மக் கைக்கு மிடைக்குஞ்
சுருள்படும் பத்திப் பட்ட குழற்குந்
தகிர்கடைந் தொப்பித் திட்ட இதழ்க்குங் குறமானின்-

சுடர்படுங் கச்சுக் கட்டு முலைக்குந்
துவளுநெஞ் சத்தச் *சுத்த இருக்கும்
சுரரும்வந் திக்கக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (ரு)

454.

கனக்ரவுஞ் சத்திற் சத்தியை விட்டன்
றசுரர்தண் டத்தைச் செற்ற விதழ்ப்பங்
கயனீமுன் குட்டிக் கைத்தலை யிட்டும் பரையாளுங்-

கடவுளன் புற்றுக் கற்றவர் சுற்றும்
பெரியதும் பிக்கைக் கற்பக முற்றங்
காதலம் பற்றப் பெற்ற வொருத்தன் ஜகதாதை;

புனவிளந் தத்தைக் கிச்சை யுரைக்கும்
புரவலன் பத்தர்க் குத்துணை நிற்கும்
புதியவன் செச்சைப் புட்ப மணக்கும் பலபாரப்-

---

* சுத்த இருக்கும் = சுத்தமாகிய இருக்கு வேதமும்.

புயனெனுஞ் சொற்கற் றுப்பிற கற்கும்
பசையொழிந் *தத்தத் திக்கென நிற்கும்
†பொருடொறும் பொத்தப் பட்டதொ ரத்தம்
பெறுவேனே;

அனல்விடுஞ் செக்கட் டிக்கய மெட்டும்
பொரவரிந் திட்டெட்ட டிற்பகு திக்கொம்
பணிதருஞ் சித்ரத் தொற்றை யுரத்தன் திடமாக-

அடியொடும் பற்றிப் பொற்கயி லைக்குன்
றதுபிடுங் கப்புக் கப்பொழு தக்குன்
றணிபுயம் பத்துப் பத்துநெ ரிப்புண் டவனீடுந்;

தனதொரங் குட்டத் தெட்பல டுக்குஞ்
சரியலன் கொற்றத் துக்கர வரக்கன்
தசமுகன் கைக்குக் கட்க மளிக்கும் பெரியோனுந்-

தலையும் பக்கத் தொக்க விருக்குஞ்
‡சயிலமுந் தெற்குச் சற்குரு வெற்புந்
தணியலும் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (ச)

455.

தெரியலஞ் செச்சைக் கொத்து முடிக்கும்
பரிதிகந் தத்தைச் சுற்ற நடத்துஞ்
சிறைவிடுஞ் சொர்க்கத் துச்சுர சைக்கங் கையில்வாழுஞ்-

சிறுவனென் றிச்சைப் பட்டு பழிக்கும்
படிபெரும் பத்திச் சித்ர கவித்வஞ்
சிறிதுமின் றிச்சித் தப்பரி சுத்தம் பிறவாதே;

---

* அத்தத்து இக்கு எனநிற்கும் = அர்த்தத்திலே கரும்புபோல் இனித்து நிற்கும்.

† பொருள் தொறும் பொத்தப் பட்டது ஓர் அத்தம் = குணம் அமையச் செய்யுள்தோறும் பொதியப்படுவதாகிய ஒரு செல்வத்தை.

‡ சயிலம் = திருச்செங்கோடு.

பரிகரஞ் சுற்றுத் தக்கப்ர புத்வம்
பதரியங் கட்டப் பட்டனர் தத்வம்
பலவையுங் கற்றுத் தர்க்க*மதத்வம் பழியாதே-
பாபதம் பற்றப் பெற்ற எவர்க்கும்
பரவசம் பற்றிப் பற்றற நிற்கும்
பாவ்ரதம் பற்றப் பெற்றிலன் மற்றென் துயர்போமோ ;
சரியுடன் துத்திப் பத்திமு டிச்செம்
பணதரங் கைக்குக் கட்டிய நெட்டன்
தனிசிவன் பக்கத் தற்புதர்†பற்பந் திரிசூலந்-
தரிகரும் பொக்கத் தக்கமொ ழிச்சுந்
தரியரும் பிக்‡கப் பித்தத னத்தந்
தரிசரும் பிக்குப் பத்சையெ வர்க்குந் தெரியாத;
பெரிய §பண் டத்தைச் சத்திய பித்தன்
பிரிதியுண் கற்புப் பச்சையெ றிக்கும்
ப்ரபையள்தண் டிற்கைப் பத்ம மடப்பெண் கொடிவாழ்வே-
பிரமரண் டத்தைத் தொட்டதொர் வெற்பும்
பிளவிடுஞ் சத்திக் கைத்தல நித்தம்
பெருமிதம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (கு)

456.

புனமடந் தைக்குத் தக்க புயத்தன்
சுமரனென் ||றெத்திப் பத்தர் துதிக்கும்
பொருளெனெஞ் சத்துக் கற்பனை முற்றும் பிறிதேதும்-
புகலு ¶ மெண் பத்தெட் டெட்டியல் தத்வம்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொதுவை o யென் றெருக்கத் தக்கதொ ரத்தந் தனைநாளும்;

---

*மதத்து வம்பு அழியாதே எனப்பிரிக்க.
† பற்பம் = பஸ்மம்: திருமு. ‡ கப்பித்த = கிளைத்த
§ பண்டத்தை = பண் தத்தை. || எத்தி = ஏத்தி.
¶ எண்பத்தெட்டு எட்டு = கூசு. o என்று = சூரியன்.

னைமுடன் தர்க்கித் துச்சிலு கிக்கொண்
*டறுவருங் கைக்குத் திட்டொரு வர்க்குந்
தெரிவரும் சத்யத் தைத்தெரி சித்துன் செயல்பாடித்-
திசைதொறுங் கற்பிக் கைக்கினி யற்பந்
திருவுளம் பற்றிச் செச்சை மணக்குஞ்
சிறுசதங் கைப்பொற் பத்ம மெனக்கென் றருள்வாயே;
கனபெருந் தொப்பைக் கெட்பொரி யப்பம்
கனிகிழங் கிக்குச் சர்க்கரை †மூக்கண்
கடலைகண் டப்பிப் பிட்டொடு மொக்குந் திருவாயன்-
கவளதுங் கக்கைக் கற்பக மூக்கண்
திகழுநங் கொற்றத் தொற்றை மருப்பன்
கரிமுகன் சித்ரப் பொற்புகர் வெற்பன் றனையீனும்;
பனவியொன் றெட்டுச் சக்ரத லப்பெண்
கவுரிசெம் பொற்பட் டுத்தரி யப்பெண்
பழயஅண் டத்தைப் பெற்ற மடப்பெண் பணிவாரைப்-
பவதரங் கத்தைத் தப்ப நிறுத்தும்
பவதிகம் பர்க்குப் புக்கவள் பக்கம்
பயில்வரம் பெற்றுக் கச்சியில் நிற்கும் பெருமாளே. (சு)

457.

கறையிலங் குக்ரச் சத்தி தரிக்குஞ்
சரவணன் சித்தத் துக்கு ளொளிக்குங்
கரவடன் கொற்றக் குக்குட வத்தன் தனிவீரக்-
கழலிடும் பத்மக் கட்செவி வெற்பன்
பழநிமன் கச்சிக் கொற்றவன் மற்றுங்
கடகவஞ் சிக்குக் கர்த்த னெனச்செந் தமிழ்பாடிக்;
குறையிலன் புற்றுக் குற்ற மறுக்கும்
‡பொறைகள்நந் தற்பப் புத்தியை விட்டென்
குணமடங் கக்கெட் டுக்குண மற்றென் றிலதான-

---

* அறுவரும் = அறுவகைச் சமயத்தாரும். † மூக்கண் = தேங்காய்.
‡ பொறைகள் நந்த அற்ப புத்தியை விட்டு எனப்பிரிக்க; நந்த = விர்த்தியாக.

குணமடைந் தெப்பற் றுக்களு மற்றுங்
குறியொடுஞ் சுத்தப் பத்த நிருக்குங்
குருபதஞ் சித்திக் கைக்கருள் சற்றுங் கிடையாதோ;
பிறைகரந் தைக்கொத் துப்பணி மத்தந்
தலையெலும் பப்புக் கொக்கிற கக்கம்
பிரமனன் றெட்டற் கற்ற திருக்கொன் றையும்வேணிப்-
பிறவுநின் றெருக்கத் தொக்கு மணக்குஞ்
சரணியம் பத்மக் கைக்கொடி- மூக்கண்
பெறகரும் பத்தக் கத்தருள் நற்பங் கயவாவி;
திறைகொளுஞ் சித்ரக் குத்து மூலைக்கொம்
பறியுமந் தத்தைக் கைக்கக மொய்க்குந்
தரிபுரைசெம் பட்டுக் கட்டு நுசுப்பின் திருவான-
தெரிவையந் தூர்க்கிச் சத்தி யெவர்க்குந்
தெரிவருஞ் சுத்தப் பச்சை நிறப்பெண்
நிறவிதாண் டார்க்குச் சித்தி யளிக்கும் பெருமாளே. (எ)

458.

செறிதரும் *செப்பத் துற்பல வெற்பும்
பிறிதுமங் கத்தைக் குற்ற விருப்புஞ்
சிகரிதுண் டிக்கக் கற்ற தனிச்செஞ் சுடர்வேலும்-
திரள்புயங் கொத்துப் பட்ட வணைத்துந்
தெளியநெஞ் சத்துப் புற்று மயக்கம்
தெகழ்ப்ரபஞ் சத்தைப் புற்புத மொக்கும் படிநாடும்;
அறிவறிந் தத்தற் கற்றது செப்புங்
கடவுளன் பத்தர்க் கச்சம றுத்தன்
பருள்பவன் பொற்புக் கச்சியுள் நிற்கும் பெருமானென்-
றவிழுமன் புற்றுக் கற்றும னத்தின்
செயலொழிந் தெட்டப் பட்டது னைச்சென்
றடைதரும் பக்வத் தைத்தமி யெற்கென் றருள்வாயே;

---

* செப்பத்து உற்பல வெற்பு = செங்கழுநீர்மலை = திருத்தணிகை.

குறியவன் செப்பப் பட்ட எவர்க்கும்
பெரியவன் கற்பிக் கப்படு சுக்ரன்
குலகுலங் துட்கச் சத்ய *மிழற்றஞ் சிறுபாலன்-

குதலையின் சொற்குத் தர்க்க முரைக்குங்
கனகனங் கத்திற் குத்தி நிணச்செங்
குடர்பிடுங் கித்திக் குற்ற முகச்சிங் கமுராரி ;

பொறிவிடுந் துத்திக் கட்செவி யிற்கண்
துயில்கொளுஞ் சக்ரக் கைக்கிரி சுத்தம்
புயலெனும் பொற்புப் பெற்ற நிறத்தன் ஜகதாதை-

புனிதசங் கத்துக் கைத்தல நிர்த்தன்
† பழையசந் தத்தைப் பெற்ற மடப்பெண்
புகலுகொண் டற்குச் சித்தி யளிக்கும் பெருமாளே.(அ)

459.

அரியயன் § புட்பிக் கக்குழு மிக்கொண்
டமரர்வந் திக்கத் தட்டுரு வச்சென்
றவுணரங் கத்தைக் குத்திமு றித்தங் கொருகோடி-

---

* மிழற்றல் = மேன்மையாகச் சொல்லல்.

† "பழைய சந்தத்தைப் பெற்ற மடப் பெண்" என்றது அரனுடைய சத்தியே அரி ஆதலால் அந்தப் பூர்வ நிலைமையைக் குறித்தது. இதை "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாற னுக்கே", "காவியங் கண்ண ளாகிக் கடல்வண்ண னுகின்ற தேவி யைப் பாகம் வைத்தார் திருப்பயற் றூர னுரே" என்னும் தேவாரத் தானும் உணர்க. சத்தியின் ஓர்அம்சம் ரகூக திருத்தியத்தினிமித்தம் தனது மாயாவல்லபத்தாற் புருஷரூபங்கொண் டுற்றதே மாயன் என்னும் விஷ்ணுவாம்.

‡ "கொண்டற்குச் சித்தியளிக்கும் பெருமாள்" என்றது, ஷண்முகக்கடவுள் திருஞானசம்பந்த ஸ்வாமிளாகத் திருஅவதாரஞ் செய்துற்ற காலத்துக் கச்சியில் தவஞ்செய்துகொண்டிருந்த விஷ்ணுமூர்த்திக்கு அநுக்கிரகஞ்செய்த முறைமையினை; இதைக் காஞ்சிப்புராணம் திருமேற்றளிப்படலத்திற் காண்க.

§ புட்பிக்க = வாய்மலர்ந்து குறைகூற.

அலகைகின் றெழுத்தித் * தித்தி யறுத்தும்
பலியங் கொட்டச் † சக்கடி கற்றந்
தரியுடன் பற்றிக் ‡குச்சரி மெச்சும் படிபாடிப்;
பரிமுகங் கக்கச் செக்கண் விழித்தும்
பவுரிகொண் டெட்டுத் திக்கை யுடைத்தும்
படுகளம் புக்குத் தொக்கு நடிக்கும் படிமோதிப்-
படைபொருஞ் சத்திப் பத்ம நினைத்துஞ்
சரவணன் கச்சிப் பொற்ப னெனப்பின்
பரவியுஞ் சித்தத் துக்கு வரத்தொண் டடைவேனே;
பெரியதண் § செச்சைக் கச்சணி வெற்பும்
சிறியவஞ் சிக்கொத் தெய்த்த நுசுப்பும்
ப்ரியொழிந் தொக்கக் கைக்கூ துத்தங் குரலாதி-
பிரிவில்கண் டிக்கப் பட்ட வுருட்டும்
கமுகமுஞ் சிற்பச் சித்ர முருக்கும்
பிரதியண் டத்தைப் பெற்றருள் சிற்றுந் தியும்நீலக்;
கரியகொண் டற்கொப் பித்த கதுப்புந்
திலதமுஞ் செப்பொற் பட்டமு முத்தின்
கனவடங் கட்டப் பட்ட கழுத்துங் திருவான-
கருணையுஞ் சுத்தப் பச்சை வனப்புங்
கருதுமன் பர்க்குச் சித்தி யளிக்குங்
கவுரியம் பைக்குப் புத்ர எவர்க்கும் பெருமாளே.(கூ)

460.

கனிதருங் || கொக்குக் ¶ கட்செவி வெற்பும்
பழநியுந் தெற்குச் சற்குரு வெற்புங்
கதிரையுஞ் சொற்குட் பட்ட திருச்செந் திலும்வேலும்-

---

* தித்தி யறுத்தல்=தாளச்சதி யறுத்தல்.
† சக்கடி=நிந்தை: பரிகாசம். ‡ குச்சரி=ஒரு பண்.
§ செச்சை=குங்குமக் குழம்பு.
|| கொக்கு=மாமரம். ¶ கட்செவி வெற்பு=நாக கிரி: திருச்செங்கோடு.

கனவிலுஞ் செப்பத் தப்பு மெனைச்சங்
கடவுடம் புக்குத் தக்கவ னைத்தும்
களவுகொண் டிட்டுக் கற்பனை யிற்கண் சுழல்வேனைப்;
புனிதனம் பைக்குக் கைத்தல ரத்நம்
பழையகங் கைக்குற் றப்புது முத்தம்
புனியிலன் றைக்கற் றெய்ப்பவர் வைப்பென் றுருகாளப்-
பொழுதும் வந்திக்கைக் கற்ற னைப்பின்
பிழையுடன் பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையையென் செப்பிச் செப்புவ தொப்பொன்
றுளதோதான்;
*அனனியம் பெற்றற் றற்றொரு பற்றுங்
தெளிதருஞ் சித்தர்க் குத்தெளி சிற்கொங்
தமலீதென் கச்சிப் பிச்சிமலர்க்கொங் தளபாரை-
அறவிறுண் பச்சைப் பொற்கொடி கற்கண்
டமுதினுங் தித்திக் கப்படு சொற்கொம்
பகிலஅண் டத்துற் பத்திசெய் முத்தின் பொலமேரூத்;
தனிவடம் பொற்புப் பெற்றமு லைக்குன்
றிணைசுமந் தெய்க்கப் பட்ட நுசுப்பின்
தருணிசங் குற்றுத் தத்துதி ரைக்கம் பையினூடே-
தவமுயன் றப்பொற் றப் † படி கைக்கொண்
டறஃமிரண் டெட்டெட் டெட்டும் வளர்க்கும்
தலைவிபங் கர்க்குச் சத்ய முரைக்கும் பெருமாளே. ()

461.

தசைதுறுந் தொக்குக் கட்டளை சட்டஞ்
சரியவெண் கொக்குக் கொக்க நரைத்தந
தலையுடம் பெய்த்தெற் புத்தளை நெக்கிந் தரியமாறித்-

---

* அநனியம் = அன்னியமின்மை.

† படி = இருநாழி நெல். படி கைக்கொண்டதைக் காஞ்சிப் புராணம் தழுவக்குழைந்த படலத்திற் காண்க.

‡ இரண்டெட்டு + எட்டு + எட்டு = ஈஉ.

தடிகொடுந் திக்குத் தப்ப நடக்கும்
தளர்வுறுஞ் சுத்தப் பித்த விருத்தன்
தகைபெறும் பற்கொத் துக்க ளனைத்துங் கழலாகின்;
றசலருஞ் செச்செச் செச்செ யெனச்சந்
தநிகளும் சிச்சிச் சிச்சி யெனத்தங்
கரிவையும் தத்தத் தத்து வெனக்கண் டுமியாமற்-
றவருகிந் திக்கத் தக்க பிறப்பிங்
* கலமலஞ் செச்சைச் சித்ர மணித்தண்
டையரவிந் தத்திற் புக்கடை தற்கென் றருள்வாயே;
குசைமுடிந் தொக்கப் †பக்கரை யிட்டெண்
டிசையினுந் தத்தப் ‡புத்தியை நத்துங்
குரகதங் கட்டிக் கிட்டி நடத்துங் §கதிர்நேமிக்-
குலரதம் புக்கொற் றைக்கணை யிட்டெண்
டிரிபுரஞ் சுட்டுக் கொட்டை பரப்புங்
குரிசில்வந் திக்கக் கச்சியில் நிற்குங் கதிர்வேலா;
திசைமுகன் தட்டுப் பட்டெழ ||வற்குஞ்
சிகரியுங் குத்துப் பட்டு விழுத்தெண்
டிரை ¶யலங் கத்துப் புக்குல விச்சென் றெதிரேறிச்-
சிரமதுங் கப்பொற் கட்டிகை யிட்டன்
றவுணர்நெஞ் சிற்குத் திக்கறை கட்கஞ்
சிதறின் றெட்டிப்பொட் டெழவெட்டும் பெருமாளே. ()

462.

புரைபடுஞ் செற்றக் குற்ற மனத்தன்
தவமிலன் சுத்தச் சத்ய அசத்யன்
புகலிலன் சுற்றச் செத்தையுள் நிற்குந் துரிசாளன்-

---

* அலம் அலம் = போதும் போதும்.
† பக்கரை = அங்கவடி.
‡ புத்தியை நத்துங் குரகதம் = வேதப் பரி.
§ கதிர்நேமி = சூரியசந்திரர்களாகிய சக்கரம்.
|| வற்கும் = வலிமைகொள்ளும். ¶ அலங்கம் = கொத்தளம்.

பொறையிலன் கொத்துத் தத்வ விகற்பஞ்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொருளுடன்பற்றுச் சற்றுமில்வெற்றன் கொடியேனின்;
கரையறுஞ் சித்ரச் சொற்புகழ் கற்குங்
கலியிலன் கட்டைப் புத்தியன் மட்டன்
கதியிலன் செச்சைப் பொற்புய வெற்புங் கதிர்வேலுங்-
கதிரையுஞ் சக்ரப் பொற்றையு மற்றும்
பதிகளும் பொற்புக் கச்சியு முற்றுங்
கனவிலுஞ் சித்தத் திற்கரு திக்கொண் டடைவேனே;
குரைதருஞ் சுற்றுச் சத்தச மூத்ரங்
கதறிவெந் துட்கக் கட்புர துட்டன்
குலமடங் கக்கெட் டொட்டொழி யச்சென் றெருருமிக்-
குவடொதுங் கச்சொர்க் கத்த ரிடுக்கங்
கெடநடுங் கத்திக் கிற்கிரி வர்க்கங்
குலிசதுங் கக்கைக் *கொற்றவ னத்தங் குடியேறத்;
தரைவிசும் பைச்சிட் டித்த இருக்கன்
சதுர்முகன் சிட்சைப் பட்டொழி யச்சந்
ததமும்வந் திக்கப் பெற்றவர் தத்தம் பகையோடத்-
தகையதண் டைப்பொற் சித்ர விசித்ரந்
தருசதங் கைக்கொத் தொத்து முழக்குஞ்
சரணகஞ் சத்திற் பொற்கழல் கட்டும் பெருமாளே. (கூ)

463.

சலமலம் விட்டத் தடம்பெ ருங்குடில்
சகல விணைக்கொத் திருந்தி டும்படி
சதிர வுறுப்புச் †சமைந்து வந்தொரு தந்தைதாயும்-
தரவரு பொய்க்குட் கிடந்த கந்தலி
லுறையு முயிர்ப்பைச் சமன்து ரந்தொரு
தனியி லிழுக்கப் படுந்த ரங்கமும் வந்திடாமுன்;

* கொற்றவன் நத்தம் எனப்பிரிக்க.
† சமைந்து உவந்து எனப்பிரிக்க.

பல*வுரு வத்தைப் பொருந்தி யன்றுயர்
படியு நெளிக்கப் படர்ந்த வன்கண
படமயில் புக்குத் தாக்கு கொண்டிகல் வென்றிவேலா-

பரிமள மிக்கச் சிவந்த நின்கழல்
பழுதற நற்சொற் றெரிந்து அன்பொடு
பகர்வதி னிச்சற் றுகந்து தந்திட வந்திடாயோ;

கிலையு மெனப்பொற் சிலம்பை மூன்கொடு
சிவமய மற்றுத் தொங்கு லெந்தவர்
திரிபுர மத்தைச் சுடுந்தி னந்தரி திண்கையாளி-

திருமகள் கச்சுப் பொருந்தி டுந்தன
தெரிவை யிரக்கத் துடன்பி றந்தவள்
திசைகளி லொக்கப் படர்ந்தி டம்பொரு கின்றஞானக்;

கலைகள ணைக்கொத் தடர்ந்து வம்பலர்
நதிகொள கத்திற் பயந்து கம்பர்மெய்
கருக இடத்திற் கலந்தி ருந்தவள் கஞ்சபாதங்-

கருணை மிகுத்துக் கனிந்து ளங்கொடு
கருது மவர்க்குப் பதங்கள் தந்தருள்
கவுரி திருக்கோட் டமர்ந்த இந்திரர் தம்பிரானே. (கஈ)

464.

தூலவலை யத்துத் தரம்பெ றும்பல
புலவர் மதிக்கச் சிகண்டி குன்றெறி
தருமயில் செச்சைப் புயங்க யங்குற வஞ்சியோடு-

தமனிய முத்துச் சதங்கை கிண்கிணி
தழுவிய செக்கச் சிவந்த பங்கய
சரணமும் வைத்துப் பெரும்ப ரம்பமி ளம்புகாளப்;

புலவ னெனத்தத் துவந்த ரந்தெரி
தலைவ னெனத்தக் கறஞ்செ யுங்குண
புருஷ னெனப்பொற் பதந்த ருஞ்சன னம்பெறுதோ-

---

* உருவம் = வர்ணம்.

பொறைய னெனப்பொய்ப் பரபஞ்ச மஞ்சிய
துறவ னெனத்திக் கியம்பு கின்றது
புதுமை யலச்சிற் பரம்பொ ருந்துகை தந்திடாதோ;
குலசயி லத்துப் பிறந்த பெண்கொடி
யுலகடை யப்பெற் றவுந்தி யந்தணி
குறைவற முப்பத் திரண்ட தம்புரி கின்றபேதை-
குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்நப் புயங்க கங்கணி
குவடு குனித்துப் புரஞ்சு டுஞ்சின வஞ்சிவீலி;
கலப விசித்ரச் சிகண்டி சுந்தரி
கடிய விடத்தைப் பொதிந்த கந்தரி
கருணை விழிக்கற் பகந்தி கம்பரி யெங்களாயி-
கருதிய பத்தர்க் கிரங்கு மம்பிகை
சுருதி துதிக்கப் படுந்தரி யம்பகி
கவரி திருக்கோட் டமர்ந்த இந்திரர்
தம்பிரானே. (கச)

465.

இதத்துப்பற் றிதழ்த்துப்பற் றிருட் பொக்கக் கருத்திட்டத்
தியக்கத்திற் றியக்குற்றுச் சுழலாதே-
எலுப்புச்சுக் கிலக்கத்தத் தடித்தொக்குக் கடத்தைப்பெற்
றெடுத்துப்பற் றடுத்தற்பத் துழலாதே;
*சுதத்தத்தச் சதத்தத்தப் பதத்தர்க்குற் றவற்றைச்சொற்
றுவக்கிற்பட் டவத்தைப்பட் டயராதே-
துணைச்செப்பத் தலர்க்கொத்துற்
பலச்செச்சைத் தொடைப்பத்திக்
கடப்பப்பொற் கழற்செப்பித் தொழுவேனே;
கொதித்துக்குத் திரக்கொக்கைச் சதித்துப்பற் றிகைக்குட்பொற்
குலத்தைக்குத் திரத்தைக்குத் தியவேலா-

---

* சுத தத் தத் சத்த அத்த பதத்தர் = அந்தந்த சத்தத்துக்கும் சுத்தமாகிய அர்த்தம் விசாரிக்கும் இலக்கணிகள்.

குறத்தித்தைக் கறத்தத்திக் கு*முத்தத்தத் தமொக்†கிக்குக்
குலத்துக்குக் குடக்கொற்றக் கொடியோனே;
கதச்சுத்தச் சுதைச்சித்ரக் களிற்றுக்கொற் றவற்குக்கற்
பகச்சொர்க்கப் புரப்பொற்பைப் புரிவோனே-
கடுக்கைக்கட் செவிக்கற்றைச் சடைப்பக்கக் கொடிக்கற்புக்
கடற்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (கரு)

466.

எனக்குச்சற் றுனக்குச்சற் றெனக்கத் ‡தத் தவர்க்கிச்சைப்
பொருட்பொற்றட் டிடிக்கைக்§குக் குடில்மாயம்-
எனக்கட்டைக் கிடைப்பட்டிட் டனற்சுட்டிட் டடக்கைக்குப்
பிறக்கைக்குத் தலத்திற்புக் கிடியாமுன்;
இனைக்குட்சித் திரக்கொச்சைக் குறத்தத்தைத் தனத்தைப்பொற்
பெறச்செச்சைப் புயத்தொப்பித் தணிவோனே-
செருக்கிச்சற் றுறக்கிச்சொற் பிரட்டத்துட் டரைத்தப்பித்
திரட்டப்பிக் கழற்செப்பத் திறல்தாராய்;
|| பணைக்கைக்கொக் கணைத்தட்டுப் படக்குத்திப் படச்சற்பப்
பணைத் ¶துட்கக் கடற்றுட்கப் பொரும்வேலா-
பரப்பற்றுச் சுருக்கற்றுப் பதைப்பற்றுத் திகைப்பற்றுப்
பலிப்பப்பத் தருக்கொப்பித் தருள்வாழ்வே;
கனிக்குத்திக் கனைத்துச்சுற் றிடப்பச்சைக் கனப்பகுதிக்
கிடைப்புக்குக் களிப்புக்குத் திரிவோனே-
கலிக்கொப்பிற் சலிப்பற்றுக் கதிக்கொத்திட் டெழிற்சத்திக்
கடற்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (கசு)

---

* முத்த அத்தத்து அம் ஒக்கு = முத்தாபரண மணிந்த தோள்களின் அழகுக்கு ஒப்பாகும்.

† இக்குக் குலத்து = கரும்புக்கு ஒத்த குலமாகிய மூங்கிற் காம்பையுடைய.

‡ அத்தவர் = பொருட்பெண்டிர்: வீலைமாதர். § கு = சிறுமை.

|| பணைக்கைக் கொக்கன் = தாருகாசுரன். ¶ துட்க = அஞ்ச.

467.

இறைச்சிப்பற் றிரத்தத்திட் டிசைக்கொக்கப் பரப்பப்பட்
டெலுப்புக்கட் டளைச்சுற்றிச் சுவர்கோலி-
எடுத்துச்செப் பெனக்கட்டிப் புதுக்குப்புத் தகத்திற்புக்
கெனக்குச்சற் றுனக்குச்சற் றெனுமாசைச் ;
சிறைக்கொத்திப் பிறப்பிற்பட் டுறக்கச்சொப் பனத்துற்றுத்
திகைக்கப்பட் டவத்தைப்பட் டுழலாதுன்-
திருப்பதமத் திறத்தைப்பற் றகைக்குச்சித் திரத்தைச்சொற்
*றிதக்கொற்றப் புகழ்ச்செப்பித் திரிவேனே ;
பிறைச்செக்கர்ப் புரைக்கொத்துச்
சடைப் பச்சைக் கொடிக்கிச்சைப்
பிறக்குற்றத் திருப்பக்கச் சிவநாதர்-
பெருக்கப்புத் தடக்கைக்†கற் பகத்தொப்பைக் கணத்துக்குப்
பிரச்சித்தக் கொடிக்குக்டக் கொடியோனே ;
பறைக்கொட்டிக் களைச்சுற்றக் குறட்செக்கட் கணத்திற்குப்
பலிக்குப்பச் சுடற்குத்திப் பகிர்வேலா—
பணப்பத்திக் கணத்துத்திப் படுக்கைக்கச் சபத்திச்சைப்
படுக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (கஎ)

468.

கடத்தைப்பற் றெனப்பற்றிக் கருத்துற்றுக் களித்திட்டுக்
கயற்கட்பொற் பிணைச்சித்ரத் தனமாதர்-
கலைக்குட்பட் டறக்கத்திச்
சலித்துக் ‡கட் டளைச்சொற்பொய்த்
திரைக்குட்பட் டறச்செத்திட் டுயிர்போனால் ;
எடுத்துக்கொட் டிடக்கட்டைப் படத்தெட்டத் தணற்றட்டக்
கொளுத்திச்சுற் றவர்ப்பற்றற் றவர்போமுன்-

---

* திதம் = நிலைமை. † கற்பக தொப்பை கணம் = விநாயக ருடைய வயிறுபோலப் பருத்த வயிற்றை யுடைய பூதகணம்.

‡ கட்டளை = கற்பனை.

இணக்கிப்பத் திமைச்செச்சைப்
பதத்தைப்பற் றுகைக்குச்சொற்
றமிழ்க்கொற்றப் புகழ்ச்செப்பித் திரிவேனே ;
அடைத்திட்டுப் புடைத்துப்பொற்
பதச்சொர்க்கத் தணைச்சுற்றிட்
டலைப்புப்பற் றெனச்சொற்றிட் டறுசூரை-
அடித்துச்செற் றிடித்துப்பொட்
டெழப்*பொர்ப்புப் படக்குத்திட்
டலைத்துச்சுற் றலைத்தெற்றுக் கடல்மாயப் ;
புடைத்திட்டுப் படிக்குட்செற் றடப்புக்குக் கதத்துக்கக்
கயிற்கொக்கைப் படக்குத்திப் பொருவோனே-
புனத்திற்பொற் குறத்திக்குப் புணர்க்கொத்தப் பசப்பெத்திப்
புணர்க்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (கஅ)

469.

கருப்பற்றிப் பருத்தொக்கத் தரைக்குற்றிட் டுருப்பெற்றுக்
கருத்திற்கட் பொருட்பட்டுப் பயில்காலங்-
கணக்கிட்டுப் பிணக்கிட்டுக் கதித்திட்டுக் கொதித்திட்டுக்
கயிற்றிட்டுப் பிடித்திட்டுச் சமணுவி;
பெருக்கப்புத் தியிற்பட்டுப் புடைத்துக்கக் கிளைப்பிற்பொய்ப்
பிணத்தைச்சுட் டகத்திற்புக் கனைவோரும்-
பிறத்தற்சுற் றமுற்றுற்றிட் டழைத்துத்தொக் கறக்கத்துப்
பிறப்புப்பற் றறச்செச்சைக் கழல்தாராய்;
பொருப்புக்கர்ப் புரக்கச்சுத் தனப்பொற்புத் தினைப்பச்சைப்
புனக்கொச்சைக் குறத்தத்தைக் கினியோனே-
புரத்தைச்சுட் டெரித்துப்பற் றலர்க்குப்பொற் பதத்தைப்பைப்
புணர்த்தப்பித் தணைக்கற்பித் தருள்வோனே ;
செருக்கக்குக் கரைக்குத்திச் செருப்புக்குப் பிடித்தெற்றிச்
சினத்திட்டுச் சிதைத்திட்டுப் பொரும்வீரா-
திருத்தத்திற் புகற்சுத்தத் தமிழ்ச்செப்புத் திரயச்சித்ரத்
திருக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (கஉ)

---

* பொர்ப்பு = பொருப்பு.

470.

கறுக்கப்பற் றுவர்ப்பிட்டுச் சிரித்துச்சற் றுறுக்கிக்கட்
பிறக்கிட்டுப் படக்கற்பித் திலேஞர்தங்-
கழுத்தைச்சிக் கெனக்கட்டித் தனச்செப்புப் படக்குத்திட்
டுருக்கிக்கற் பழிக்கப்பொற் பெழுகாதல்;
புறப்பட்டுக் களிக்கக்கற் புரத்தைப்பிட் டரச்கிப்பொற்
பணிக்கட்டிற் புறத்துற்றுப் புணர்மாதர்—
பொருத்தத்தைத் தவிர்த்துச்சற் றிரகஸித்துப் புரப்பப்பொற்
பதத்தைப்பெற் றிருக்கைக்குப் பெறுவேலேனு;
திறற்கொக்கைப் படக்குத்திச் செருக்கிக்கொக் கரித்துச்சக்
கரிக்குப்புத் திரற்குற்றுத் தலேபூணச்-
சினத்துப்பொற் பொருப்பைப் பொட்
டெழுத்தித் *திக் கரித்துப்புத்
திரத்தத்திற் சிரித்துற்றுப் பலபேய்கள்;
பறிக்கப்பச் சிறைச்சிக்கட் கறிக்குப்பைச் சிரச்சிக்குப்
பரப்பொய்க்கட் டறப்புக்குப் பொருதோனே-
பணிச்செச்சைத் தொடைச்சித்ரப் புயத்துக்ரப் படைச்சத்திப்
படைக்கச்சிப் பதிச்சொக்கப் பெருமாளே. (உ0)

471.

அற்றைக் கிரைதேடி- அத்தத் திலுமாசை;
பற்றித் தவியாத- பற்றைப் பெறுவேலேனு;
வெற்றிக் கதிர்வேலா- வெற்பைத் தொளேசிலா;
கற்றுற் றுணர்போதா- கச்சிப் பெருமாளே. (உக)

472.

முட்டுப் பட்டுக் † கதிதோறும்-
மூற்றச் சுற்றிப் பலநாளும்;
தட்டுப் பட்டுச் சுழல்வேனச்-
சுற்றுப் பற்றக் கருதாதோ;

---

* திக்கரித்து=திங்கித்து. † கதிதோறும்=தேவ மனித நரக விலங்கு என்னும் நாற்கதிகளிலும்.

*வட்டப் புட்பத் தலமீதே-
வைக்கத் தக்கத் திருபாதா;
†கட்டத் தற்றத் தருள்வோனே-
கச்சிச் சொக்கப் பெருமாளே. (உஉ)

473.

அற்றைக் கற்றைக் கொப்பித் தொப்பித்
தத்தத் தத்தத் தருவோர்தாள்-
அர்ச்சித் திச்சித் தக்கத் தக்கத்
தொக்குத் திக்குக் குடில்பேணிச்;
செற்றைப் புற்சொற் கற்றுக் கற்றுச்
செத்துச் செத்துப் பிறவாதே-
செப்பச் செப்பப் பச்சைப் பச்சைச்
செச்சைச் செச்சைக் கழல்தாராய்;
துற்றுப் பிற்புக் குற்றக் கொக்கைத்
‡ துட்கத் § திட்கப் பொரும்வேலா-
சுத்தப் பத்திச் சித்ரச் ‖ சொர்க்கச்
சொர்க்கத் தத்தைக் கினியோனே;
கற்றைப் பொற்றைப் பற்றக் குத்திக்
கத்தக் கத்தக் கலைவோனே-
கற்புச் சத்திப் பொற்புச் சத்திக்
கச்சிச் சொக்கப் பெருமாளே. (உ௫)

474.

சுத்தச் சித்தத் தொற்பத் தர்க்குச்
சுத்தப் பட்டிட் டமுரைதே-
தொக்கப் பொக்கச் சிற்கட் சிக்குட்
சொற்குற் றத்துத் துறைநாடி;

---

* வட்டப் புட்பத் தலம் = வட்டமாகிய இருதய கமல பீடம்.
† கட்டத்து அற்றத்து = துன்பப்படுஞ் சமயத்தில்.
‡ துட்க = வெருவ : பயப்பட. § திட்க = திடுக்கிட.
‖ சொர்க்கம் = கொங்கை.

பித்தத் தைப்பற் றித்தைத் தற்றுற்
ரூத்துக் கித்திப் பிணிமாதர்-
பெட்டிற் கட்டுத் தட்டுப் பட்டுப்
பிற்பட் டிட்டுத் தளர்வேனே;
அத்தத் தத்திக் கத்தற் கெய்த்தத்
தத்திக் கத்துப் பலமீவாய்-
அர்ச்சித் துப்பொற் செக்கொச் சைத்தத்
தைக்குச் செச்சைத் தொடைசூழ்வாய்;
கத்தத் தித்தத் தத்திற் கொக்கைக்
கைத்தச் சத்திப் படையேவுங்-
கற்புச் சத்திப் பொற்புச் சத்திக்
கச்சிச் சொக்கப் பெருமாளே. (உச)

475.

கொக்குக் கொக்கத் தலையிற் பற்றுச் சிக்கத் தளகக்
கொத்துற் றுக்குப் பிணியுற் றவனுகிக்-
குக்கிக் கக்கிக் கடையிற் பற்றத் துற்றுக் கழலக்
கொத்தைச் சொற்கற் றுலகிற் பலபாஷை;
திக்கித் திக்கிக் குளறிச் செப்பித் தப்பிக் கெடுபொய்ச்
செற்றைச் சட்டைக் குடிலைச் சுமைபேணும்-
சிக்கற் றுட்குக் கருணைச் சுத்தச் சித்தித் தமிழைத்
திட்டத் துக்குப் புகலப் பெறுவேனே;
அக்கிட் டிக்கிட் டமருக் கொட்டிக் கிட்டிட் டெதிரிட்
டத்ரத் தெற்றிக் கடுகப் பொருசூரன்-
அச்சுக் கெட்டுப் படைவிட் டச்சப் பட்டுக் கடலுட்
புக்குப் பட்டுத் * தருமத் தடைவாகத்;
தக்குத் திக்குத் தறுகட் டொக்குத் தொக்குற் றதுகட்
கைக்கொட் டிட்டிட் டுடல்சிற் கணமாடிச்-
சத்திக் குத்தித் துடியிற் சத்திக் கக்கைச் சமர்செய்ச்
† சத்திக் கச்சிக் குமரப் பெருமாளே. (உரு)

---

*தருமம்=மரம். †"சர்ப்பப் பொற்றைக் குமரப் பெருமாளே." என்றும் பாடம்; 'சர்ப்பப் பொற்றை' என்பது திருச்செங்கோடு.

476.

தித்தித் தத்திச் சட்டப் பட்டுச்
சத்தப் படுமைக் கடலாலே-
சர்ப்பத் தத்திற் பட்டுக் கெட்டுத்
தட்டுப் படுமப் பிறையாலே ;
சித்தத் துக்குப் பித்துற் றுச்சச்
சித்ரக் கொடியுற் றழியாதே-
செப்பக் கொற்றச் சிற்பப் பத்திச்
செச்சைத் தொடையைத் தரவேணும் ;
கொத்துத் திக்குப் பத்துட் புக்குக்
குத்திக் கிரியைப் பொரும்வேலா-
கொச்சைப் பொச்சைப் பொற்பிற் பச்சைக்
கொச்சைக் குறவிக் கினியோனே ;
சுத்தப் பத்தத் தர்க்குச் சித்தத்
துக்கத் தையொழித் திடும்வீரா-
சொர்க்கத் துக்கொப் புற்றக் கச்சிச்
சொக்கப் பதியிற் பெருமாளே. (உசு)

☞ குறிப்பு :—இப்பாடலின் ஒவ்வோ ரடியிலும் இறுதியி லுள்ள பாகத்தை எடுத்தமைக்கப் பின்வருமாறு பிறிதொரு பாட லாமாறு காண்க :—

சத்தப் படுமைக் கடலாலே-
தட்டுப் படுமப் பிறையாலே;
சித்ரக் கொடியுற் றழியாதே-
செச்சைத் தொடையைத் தரவேணும் ;
குத்திக் கிரியைப் பொரும்வேலா-
கொச்சைக் குறவிக் கினியோனே ;
துக்கத் தையொழித் திடும்வீரா-
சொக்கப் பதியிற் பெருமாளே.

477.

பொக்குப்பைக் * கத்தத் தொக்குப்பைக் குத்துப்
பொய்த்தெத்துத் † தத்துக் குடில்பேணிப்-
பொச்சைப்பிச் சற்பக் கொச்சைச்சொற் கற்றுப்
பொற்சித்ரக் கச்சுக் கிரியார்தோய்;
துக்கத்துக் கத்திற் சிக்குப்பட் டிட்டுத்
துக்கித்துக் கெய்த்துச் சுழலாதே-
சுத்தச்சித் தத்துப் பத்திப்பத் தர்க்கொத்
துச்சற்றர்ச் சிக்கப் பெறுவேனே;
திக்குத்திக் கற்றுப் ‡ பைத்தத்தத் திக்குச்
செற் § பத்ரக் கொக்கைப் பொரும்வேலா-
செப்பச்சொர்க் கத்துச் செப்பொற்றத் தைக்குச்
செச்சைக்கொத் தொப்பித் தணிவோனே;
‖ கக்கக்கைத் தக்கக் கக்கட்கக் கக்கிக்
கட்கத்தத் தர்க்குப் பெரியோனே
கற்றைப்பொற் றெத்தப் பெற்றப்பொற் சிற்பக்
கச்சிக்குட் சொக்கப் பெருமாளே. (உஎ)

478.

அயிலப்புக் கயலப்புத் தலைமெச்சுற் பலநச்சுக்
க ¶ ணுரத்தைக் கனவெற்புத் தனமேகம்-
அளகக்கொத் தெனவொப்பிப் புளுகிச்சொற் பலகற்பித்
திளகிக்கற் புளகெக்குத் தடுமாறித்;

---

* கத்தம் = மலம். † தத்து = ஆபத்து. ‡ பை தத்து அத்தி = பசிய அலைமோதுகின்ற கடல். § பத்ரம் = இலை.

‖ கக்கு அக்கை தக்க அங்க கட்கு ஆக்கு அங்கி கண் கத்த அத்தர் = பிரமன் முதலியோர் சரீரத்தினின்றும் கழன்ற எலும்பைத் தகுந்த தமது அங்கங்களுக்கு ஆபரணமாக்கிய அக்கினிக் கண்ணையுடைய கர்த்தராகிய பிதா.

¶ உரத்தைக் கனவெற்பு = உரத்த ஐ கன வெற்பு.

துயில்விட்டுச் செயல்விட்டுத் துயர்வுற்றுக் கயர்வுற்றுத்
தொடியர்க்கிப் படியெய்த்துச் சுழலாதே-
சுருதிப்பொற் பொருள்செக்கர்க் குரவிட்டுத் தமர்பற்றித்
தொழுசெச்சைக் கழல்பற்றிப் பணிவேனே ;
புயலத்தைக் குயில்தத்தைக் கிளைபுக்குத் தொளைபச்சைப்
புனமுத்தைப் புணர்சித்ரப் புயவீரா-
புரவிக்கொட் பிரதற்றத் திருள்திக்கிப் படிமட்கப்
புகல்பொற்குக் குடைவெற்றிக் கொடியோனே ;
* கயிலச்சுத் தரதத்துச் சயிலத்துத் தரநிற்கக்
† கரணிச்சித் தருள்கச்சிப் பதியோனே-
கடலிற்கொக் கடல்கெட்டுக் கரமுட்கத் தரமுட்கப்
பொருசத்திக் கரசொக்கப் பெருமாளே. (உஅ)

479.

கச்சிட் டணிமுலை தைச்சிட் டுருவிய
மச்சக் கொடிமதன் மலராலுங்-
கச்சைக் கலைமதி நச்சுக் கடலிடை
அச்சப் படவெழு மதனாலும் ;
பிச்சுற் றிவளுள மெய்ச்சுத் தளர்வது
சொச்சத் தரமல இனிதான-
பிச்சிப் புதுமலர் வைச்சுச் சொருகிய
செச்சைத் தொடையது தரவேணும் ;
பச்சைத் திருவுமை யிச்சித் தருளிய
கச்சிப் பதிதனி லுறைவோனே-
பற்றிப் பணிபவர் குற்றப் பகைகெட
உற்றுப் பொரவல கதிர்வேலா ;
இச்சித் தழகிய கொச்சைக் குறமகள்
மெச்சித் தழுவிய திருமார்பா-
எட்டுக் குலகிரி முட்டப் பொடிபட
வெட்டித் துணிசெய்த பெருமாளே. (உக)

---

* கயில் = விமானத்தின்கொடுங்கை மேற்பாகம்.
† கரணி = சிற்பவேலை செய்யும் தபதி.

480.*

*கமலரு சோகாம்பர முடிநடு வேய்பூங்கணை
கலகமர் வாய்தோய்ந்தம ளியின்மீதே-
களையற மீதூர்ந்†தெழ மதனவி டாய்போம்படி
கனவிய வாரேந்தின இளகீர்தோய்ந்;
தெமதுயிர் நீலாஞ்சன மதர்விழி யால்வாங்கிய
இவளுடன் மால்கூர்ந்திடு மதுபோகம்-
இனிவிட வேதாந்தப ரமசுக வீடாம்பொருள்
இதவிய பாதாம்புய மருள்வாயே ;
அமகர‡ஆசாம்பர அதுகர ஏகாம்பர
§அது||லன நீலாம்பர மறியாத-
¶அகமர நாளாங்கிதர் தமையுமை யாள்சேர்ந்தருள்
அறமுறு சீகாஞ்சியி லுறைவோனே ;
விமல$கி ராதாங்கண தனகிரி தோய்காங்கெய
**வெடிபடு தேவேந்திர னகர்வாழ-
விரிகடல் தீமூண்டிட நிசிசரர் வேர்மாண்டிட
வினையற வேல்வாங்கிய பெருமாளே. (ஈ0)

---

* கமலம்=முதற் கணை; அரு அசோகு=நடுக் கணை; பரம் ஆம் முடி=கனமான நீலோற்பலக் கடைக் கணை; நடு எய் பூங் கணை=இவற்றிற்கு இடையிடையாகும் மா, முல்லை என்னும் இருகணைகள் ஆகிய பஞ்சபாணங்களின். 'கமலம்+அரு அசோகு+ஆம்பரம்+முடி+நடு+எய்...கணை, எனப்பிரித்தும் பொருள்கொள்ளலாம்.

† எழமதன=எழு அ மதன. ‡ ஆசாம்பர=திகம்பர.

§ அ துல=ஒப் பில்லாத.

|| அனம் நீல அம்பரம் அறியாத = அன்னரூபங் கொண்ட பிரமன் நீலநிறமுற்ற ஆகாயத்தில் முடிதேடி யறியாத; அன்னமும் நீலக்கடல் போன்ற விஷ்ணுவும் அறியாத—என்றும் பொருள் கொள்ளலாம். ¶ அகர்=பாப ரகிதர்.

o அம் நாள அங்கிதர்=அழகிய மூலக்காம்பின் தழும் புடையவர்.

$ நிராத அங்கனை=வேடப் பெண். **வெடி=நறுமணம்.

481.

கருமமானபி றப்பற வொருகதி
காணு தெய்த்துத் தடுமாறுங்-
கலககாரண துற்குண சமயிகள்
நாணு வர்க்கக் கலிதூலின் ;
வருமநேகவி கற்பவி பரிதம
ணோபா வத்துக் கரிதாய-
மவுன பூரித சத்திய வடிவினை
மாயா மற்குப் புகல்வாயே ;
தருமவீம அருச்சுன நகுலச
காதே வர்க்குப் புகலாகிச்-
சமர பூமியில் விக்ரம வீரகொடு
நாளோர் பத்தெட் டினிலாளுங் ;
குருமகீதல முட்பட வுளமது
கோடா மற்கூத் தியர்மாளக்-
கூலவு தேர்கட வச்சுதன் மருககு
மாரா கச்சிப் பெருமாளே. (நக)

482.

கிலகலெ னப்பொற் சேந்த நூபுர
பரிபுர மொத்தித் நாந்த ணுமென
கரமல ரச்சிற் றுந்தொ மாடிய பொறியார்பைங்-
கடிதட முற்றுக் காந்த ளாமென
இடைபிடி பட்டுச் சேர்ந்த ஆலில்லை
கனதன பொற்பிட் டோங்கு மார்பொடு வடமாடச்;
சலசல சச்சச் சேங்கை பூண்வளை
பரிமள பச்சைச் சேர்ந்து லாவிய
சலசமு கத்துச் சார்ந்த வாள்விழி சுழலாடத்-
தரளக கைப்பித் தாம்ப லாரிதழ்
குலமுகி லொத்திட் டாய்ந்த வோதியர்
சரசமு ரைத்துச் சேர்ந்த தூவைய ருறவாமோ ;

திலத முகப்பொற் காந்தி மாதுமை
யெனையருள் வைத்திட் டாண்ட நாயகி
சிவனுரு வத்திற் சேர்ந்த பார்வதி சிவகாமி-
திரிபுவ னத்தைக் காண்ட நாடகி
குமரி சுகத்தைப் பூண்ட காரணி
சிவைசுடர் சத்திச் சாம்பவீ அமை யருள்பாலா;
அலகை யிரத்தத் தோங்கி மூழ்கிட
நரிகழு குப்பிச் சீர்ந்து வாயிட
அசுரர் குலத்தைக் காய்ந்த வேல்கர மூடையோனே-
அமரர் மகட்குப் போந்த மால்கொளும்
விபுத குறத்திக் காண்ட வாதின
மழகு சிறக்கக் காஞ்சி மேவிய பெருமாளே. (ஈஉ)

483.

கொத்தார் பற்கா லற்றே கப்பாழ்
*குப்பா யத்திற் செயல்மாறிக்-
கொக்கா கிக்கூ னிக்கோல் தொட்டே
கொட்டா விக்குப் புறவாசித்;
தித்தா நிற்றூர் செத்தார் கெட்டேன்
அஆ உஉ எனவேகேள்-
†செற்றே சுட்டே விட்டே றிப்போ
மப்பே துத்துக் கமறூதோ;
நித்தா வித்தா ரத்தோ கைக்கே
நிற்பாய் கச்சிக் குமரேசா-
நிட்டூ ரச்சூர் கெட்டோ டப்போர்
நெட்டோ தத்திற் பொருதோனே;
முத்தா ரத்தோ ளிற் ‡கோ டற்பூ
முட்டா திட்டத் தணிவோனே-
முற்றூ நித்தா அத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே. (ஈஈ)

---

* குப்பாயம் = சட்டை = சரீரம். † செற்று = சென்று.
‡ கோடற்பூ = வெண்காந்தள் மலர்.

484.

கோவைச் சுத்தத் துப்பத ரத்துக் கொடியார்தங்-
கோலக் கச்சுக் கட்டிய முத்தத் தனமேவிப் ;
பாவத் துக்குத் தக்கவை பற்றித் திரியாதே-
பாடப் பத்திச் சித்த மெனக்குத் தரவேணும் ;
மாவைக் குத்திக் கைத்தற எற்றிப் பொருதும்வேலா-
மாணிக் கச்சொர்க் கத்தொரு தத்தைக் கினியோனே ;
சேவற் பொற்கைக் கொற்றவ கச்சிப் பதியோனே-
தேவச் சொர்க்கச் சக்கிர வர்த்திப் பெருமாளே. (கூஅ)

485.

சிமுப்புரக் காடு நீறெழச்
சாடி நித்திரைக் கோசம் வேரறச்
சிவன் முத்தியிற் கூட வேகளித் ததுபூதி-
சேர அற்புதக் கோல மாமெனச்
சூரி யப்புவிக் கேறி யாடுகச்
சிலம் வைத்தருட் டேறி யேயிருக் கறியாமற் ;
பாசம் விட்டுவிட் டோடி போனதுப்
போது மிப்படிக் காகி லேனினிப்
பாழ்வ ழிக்கடைக் காம லேபிடித் தடியேனைப்-
பார டைக்கலக் கோல மாமெனத்
தாப ரித்து * நித் தார மீதெனப்
பாத பத்மநற் போதை யேதரித் தருள்வாயே ;
தேசில் தட்டநிட் டூர கோதுடைச்
சூரை வெட்டியெட் டாசை யேழ்புவித்
தேவர் முத்தர்கட் கேத மேதவிர்த் தருள்வோனே-
சீர்ப டைத்தழற் சூல மான்மழுப்
பாணி வித்துருப் பாத னேர்புறச்
சீர்தி கழ்ப்புகழ்ப் பாவை யினபொற் குருநாதா ;

* நித்தாரம் = நித்தியமாகிய ஆரம்.

காசி *முத்தமிழ்க் கூட †லெழ்மலைக்
‡ கோவ ◊ லத்தியிற் கான || நான்மறைக்
காடு பொற்கிரிக் காழி யாருர்பொற் புலிவேளூர்-
காள அத்தியப் பால்சி ராமலைத்
தேச முற்றுமுப் பூசை மேவிநற்
¶ காம கச்சியிற் சால மேவுபொற் பெருமாளே. (ஈநி)

486.

நச்சரவ மென்று நச்சரவ மென்று
நச்சுமிழ் களங்க மதியாலும்
நத்தொடு முழங்க னத்தொடு முழங்கு
o நத்திரை வழங்கு கடலாலும்;
இச்சையுணர் வின்றி யிச்சையென வந்த
இச்சிறுமி நொந்து மெலியாதே-
எத்தனையு நெஞ்சில் எத்தன முயங்கி
இத்தனையி லஞ்ச லெனவேணும்;
பச்சைமயில் கொண்டு பச்சைமற மங்கை
பச்சைமலை யெங்கு முறைவோனே-
பத்தியுட னின்று பத்திசெயு மன்பர்
பத்திரம ணிந்த கழலோனே;
கச்சிவர் குரும்பை $கச்சவர் விரும்பு
கச்சியில மர்ந்த கதிர்வேலா-
கற்பக வனங்கொள் கற்பக விசும்பர்
கைத்தலை களைந்த பெருமாளே. (ஈசு)

---

* முத்தமிழ்க் கூடல்=மதுரை. †ஏழ் மலை=திருவேங்கடம்.
‡ கோவல்=திருக்கோவலூர்.
◊ அத்தியின் கானம்=திரு ஆனைக் கா.
|| நான்மறைக் காடு=வேதாரணியம்.
¶ 'காம கச்சிகுற் ருல மேவு பொற் பெருமாளே' என்றும் பாடம். 'காக மச்சிகச் சாலை மேவு' எனவும் இருந்திருக்கலாம்.
o நத் திரை=விசேஷ திரை. $ கச்சவர்=வெறுத்தவர்.

☞ இப்பாடலில் ஒவ்வோ ரடியிலும் ஈற்றிலுள்ள பாகங்கள்,

நச்சுமிழ் களங்க மதியாலும்—நத்திரை வழங்கு கடலாலும்;
இச்சிறுமி நொந்து மெலியாதே-இத்தனையி லஞ்ச லெனவேணும்;
பச்சைமலை யெங்கு முறைவோனே—பத்தி ரமணிந்த கழலோனே;
கச்சியி லமர்ந்த கதிர்வேலா—கைத்தலை களைந்த பெருமாளே."

—எனப் பிறிதொரு பாட லாமாறு காண்க.

487.

படிறெ ழுக்கமு மடம னத்துள
படிப ரித்துட னெடிபேசும்-
பகடி கட்குள மகிழ மெய்ப்பொருள்
பலகொ டுத்தற வுயிர்வாடா;
மிடியெ னப்பெரு வடவை சுட்டிட
விதன முற்றிட மிகவாழும்-
விரகு கெட்டரு ந்ரகு விட்டிரு
விணைய றப்பத மருள்வாயே;
கொடியி டைக்குற வடிவி யைப்புணர்
குமர கச்சியி லமர்வோனே-
குரவு செச்சைவெண் முளரி புத்தலர்
குவளை முற்றணி திருமார்பா;
பொடிப டப்பட நெடிய விற்கொடு
புரமெ ரித்தவர் குருநாதா-
பொருதி ரைக்கடல் நிருத ரைப்படை
பொருது ழக்கிய பெருமாளே. (கூஎ)

488.

மகுடக்கொப் பாடக் காதினில்
தாதலிற்பொட் டேரக் கோதிய
மயிரிற்சுற் * றோலைப் பூவொடு வண்டுபாட-
வகைமுத்துச் சோரச் சேர்நகை
யிதழிற்சொற் சாதிப் பாரியல்
மதனச்சொற் பாடுக் கோகில ரம்பைமாதர்;

*ஓலைப் பூ=தாழம் பூ.

பகடிச்சொற் கூறிப் போர்மயல்
முகவிச்சைப் பேசிச் சீரிடை
பவளப்பட் டாடைத் தோளிரு கொங்கைமேலாப்-
பணமெத்தப் பேசித் தூதிடு
மிதயச்சுத் தீனச் சோலிகள்
பலரெச்சிற் காசைக் காரிகள் சந்தமாமோ;
தகுடத்தத் தானத் தானன
திகுடத்தித் தீதித் தோதிமி
தடுடுட்டுட் டாடப் பேரிகை சங்குவீணை-
தடமிட்டுப் பாவக் கார்கிரி
பொடிபட்டுப் போகச் சூரர்கள்
தலையிற்றிட் டாடப் போர்புரி கின்றவேலா;
திகிரிப்பொற் பாணிப் பாலனை
மறைகற்புத் தேளப் பூமனை
சினமுற்றுச் * சேடிற் சாடிய கந்தவேளே-
தினையுற்றுக் காவற் காரியை
மணமுற்றுத் தேவப் பூவொடு
திகழ்கச்சித் தேவக் கோன்மகிழ் தம்பிரானே. (ஈஅ)

489.

மக்கட்குக் கூறரி தானது
கற்றெட்டத் தான்முடி யாதது
மற்றெப்புக் கியாதுமொ வாதது மனதாலே-
மட்டிட்டுத் தேடவொ ணாதது
தத்வத்திற் கோவைப டாதது
மத்தப்பொற் போதுப கீரதி மதிசூடும்;
மூக்கட்பொற் பாளரு சாவிய
†அர்த்தக்குப் போதக மானது
மூத்திக்குக் காரண மானது பெறலாகா-

* சேடில் சாடிய = திரட்சியான் தலையிற் குட்டிய.
† அர்த்தக்கு = அர்த்தத்துக்கு.

மூட்டர்க்கெட் டாதது நான்மறை
யெட்டிற்றெட் டாதென வேவரு
முற்பட்டப் பாலியி லாவது புரிவாயே ;
செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப்பொற் பூதர மேமுதல் வெகுரூபம்-
சிட்டித்துப் பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாடம கோததி
செற்றுக்ரச் சூரனை மார்பக முதுசோரி;
கக்கக்கைத் தாமரை வேல்விடு
செச்சைக்கர்ப் பூரபு யாசல
கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்-
சுற்புத்தப் பாதுல கேழைபு
மொக்கப்பெற் ருள்விளை யாடிய
கச்சிக்கச் சாலியில் மேவிய பெருமாளே. (நகூ)

பு. 490.

மயலோது மந்த நிலையாலும் வஞ்ச
வசை பேசு கின்ற மொழியாலும்-
மறிபோலு கின்ற விழிசேரு மந்தி
மதி நேரு கின்ற நுதலாலும்;
அயிலே நிகர்ந்த விழியாலும் அஞ்ச
நடையாலும் அங்கை வளையாலும்-
அறிவே யழிந்து அயர்வாகி நைந்து
அடியேன் மயங்கி விடலாமோ;
மயிலேறி யன்று கொடிபோதி லண்டம்
வலமாக வந்த குமரேசா-
மறிதாவு செங்கை அரனு ரிடங்கொள்
மலைமாது தந்த முருகேசா;

பு. இவ்வெழுத்தை முன்னேகாண்ட எண்ணுடைய இப்பாடல் இதற்குமுன் அச்சிடப்படாதது; இனியும் இப்படியே கொள்க.

தயவா னுயர்ந்த மணிமாட மும்பர்
நடுவே நிறைந்த மதிசூழ்-
நறைவீசு கும்ப குடமேவு கம்பை
நகர்மீத மர்ந்த பெருமாளே. (சு0)

பு. 491.

முத்து ரத்ந சூத்ர மொத்த சித்ர மார்க்கர்
முற்செ மத்து மூர்க்கர் வெகுபாவர்-
முத்து தித்த வார்த்தை யொத்த பத்ர வாட்கண்
மூச்சர் மெத்த சூட்சர் நகையாலே;
எத்தர் குத்தி ரார்த்தர் துட்ட முட்ட காக்கர்
யிட்ட முற்ற கூட்டர் விலைமாதர்-
எக்கர் தூக்கர் வாழ்க்கை யுற்ற சித்த நோய்ப்புண்
இப்ப டிக்கு மார்க்கம் உழல்வேனே;
தித்தி மித்தி மீத்த னத்த னத்த மூட்டு
சிற்று டுக்கை சேட்டை தவில்பேரி-
திக்கு மக்க ளாக்கை துக்க வெற்பு மீக்கொள்
செக்க டற்கு ளாழ்த்து விடும்வேலா;
கற்பு ரத்தை வீட்டி நட்ட மிட்ட நீற்றர்
கத்தர் பித்தர் கூத்தர் குருநாதா-
கற்கு றிச்சி வாழ்ப்பெ ணைக்க வெற்றி வேற்கொள்
* கச்சி நத்தி நாட்கொள் பெருமாளே. (சக)

492.

வம்ப ருச்சில கன்ன மிடுஞ்சம
யத்துக் கத்துத் திரையாளர்-
வன்க லாத்திரள் தன்னை யகன்றும
னத்திற் பற்றற் றருளாலே;
தம்ப ராக்கற நின்னை யுணர்ந்துரு
கிப்பொற் பதமக் கழல்சேர்வார்-

* "கைச்சி னத்தி னுட் கொள்" எனவும் இருந்திருக்கலாம்; கைச்சினம்-சோழநாட்டில் தேவாரம் பெற்ற தொரு ஸ்தலம்.

தங்கு ழாத்தினி லென்னையு மன்பொடு
வைக்கச் சற்றுக் கருதாதோ;
வெம்ப ராக்ரம மின்னையில் கொண்டொரு
வெற்புப் பொட்டுப் படமாசூர்-
வென்ற பார்த்திப பன்னிரு திண்புய
வெட்சிச் சித்ரத் திருமார்பா;
கம்ப ராய்ப்பணி மன்னு புயம்பெறு
கைக்குக் கற்புத் தவறாதே-
கம்பை யாற்றினி லன்னை தவம்புரி
கச்சிச் சொக்கப் பெருமாளே. (சஉ)

493.

வாய்ந்தப்பிடை கீடு குலாவிய
நீர்ந்திப் *பது மாதியை மீதினி
லூர்ந்துற்பல வோடையில் நீடிய உகள்சேலை-
• வார்ந்துப்பக ழீயெதி ராகிமை
கூர்ந்துப்பரி யாவரி சேரவை
சேர்ந்துக்குழை யோடுச லாடிய விழியாலே;
சாய்ந்துப்†பணை யூணவ ரானபொ
‡லாய்ந்துப்§பணி ஞரிரு தாளினில்
வீழ்ந்திப்படி மீதினி லேசிறி தறிவாலே-
சாந்தப்பிய மாமலி நேர்மூலி
சேர்ந்துப்||படி வீணினி லேயுயிர்
மாய்ந்திப்படி போகினு மோர்மொழி மறவேனே;
சார்ந்தப்பெரு நீர்வெள மாகவெ
பாய்ந்தப்பொழு தாருமி லாமலெ
காந்தப்பெரு நாதனு மாகிய ¶மதராலே-

---

* பதும ஆதியை = தாமரையாகிய முதன்மையான மலரை.

†பணை ஊணவர் ஆன போல் = பனங்களை உண்டவர் ஆகிய கொண்டதுபோல. ‡ ஆய்ந்து = மயங்கிச் சிறிது ஆராய்ந்து.

§ பண்ணினர் = இசைபாடும் பொதுமகளிர். || படி = படிந்து.

¶ மதர் = களிப்பு.

தாந்தக்கிட தாகிட தாகிட
தோந்திக்கிட தோதிமி தோதிமி
சேஞ்செக்கண சேகெண சேகெண வெனதாளம்;
காந்தப்பத மாறியு லாவுய
*ராந்தற்குரு நாதனு மாகியெ
போந்தப்பெரு மான்மூரு காவொரு பெரியோனே-
காந்தக்கலு மூசியு மேயென
ஆய்ந்துத்தமி ழோதிய சீர்பெறு
காஞ்சிப்பதி மாநகர் மேவிய பெருமாளே. (சஈ)

494.

அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத-
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து
அவரைவாழ்த் தித்தி ரிந்து பொருள்தேடிச்;
சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து
தெரிவைமார்க் குச்சொ ரிந்து அவமேயான்-
திரியுமார்க் கத்து நிந்தை யதனைமாற் றிப்ப ரிந்து
தெளியமோ கூதத்தை யென்று அருள்வாயே;
இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம்வேற் றுப்பி ரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்-
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே;
குறவர்கூட் டத்தில் வந்து இழவனைப்ப் புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த தவமானக்-
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே. (சச)

* அந்தன் = சர்வசங்காரன்.

2. திருவானைக்கா.

[இது பஞ்சபூத ஸ்தலங்களில் "அப்பு" ஸ்தலம். மூவர் தேவாரமும் பெற்றது. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கு 2½-மைல். வெள்ளையானை வழிபட்ட ஸ்தல மாதலால் "ஆனைக்கா" என்றும், ஜம்பு நாவல் (வெள்ளை நாவல்) மரத்தடியிற் சிவபிரான் எழுந்தருளி யிருப்பதால் "ஜம்புகேஸ்வரம்" என்றும் பெயர் வந்தன. கச்சியப்ப முனிவர் பாடிய ஸ்தல புராணம் ஒன் றுளது.]

495.

அஞ்சன வேல்விழி யிட்டழைக்கவு
மிங்கித மாகந கைத்துருக்கவு
மம்புயல் நேர்குழ லேக்குலைக்கவும் நகரேகை-
அங்கையின் மூலம்வெ ளிப்படுத்தவு
மந்தர மாமுலை சற்றசைக்கவு
மம்பரம் வீணில விழ்த்துடுக்கவு மிளைஞோர்கள்;
நெஞ்சினி லாசைசெ ருப்பெழுப்பவும்
வம்புரை கூறிவ ளைத்திணைக்கவு
மன்றிடை யாடிம ருட்கொடுக்கவு மெவரேனும்-
நிந்தைசெ யாதுபொ ருட்பறிக்கவு
மிங்குவ லார்கள்கை யிற்பிணிப்பற
நின்பத சேவைய நுக்ரகிப்பது மொருநாளே;
குஞ்சர மாமுக விக்கிநப்ரபு
அங்குச பாசக ரப்ரசித்தனெர்
கொம்பன்ம கோதரன் மூக்கண் விக்ரம கணராஜன்-
கும்பிடு வார்வினை பற்றறுப்பவன்
எங்கள் விநாயக னக்கர்பெற்றருள்
குன்றைய ரூபக கற்பகப்பிளை யிளையோனே;

துஞ்சலி லாதச டகூரப்*பிர
பந்த சடானன துஷ்டநிக்ரக
தும்பிகள் சூழவை யிற்றமிழ்த்ரய பரிபாலா-
துங்க † கஜாரணி யத்திலுத்தம
சம்பு தடாகம டுத்ததக்ஷிண
சுந்தர மாறன்ம திட்புறத்துறை பெருமாளே. (க)

496.

அம்புலி நீரைச் சூடிய செஞ்சடை மீதிற் ருவிய
ஐந்தலை நாகப் பூஷண ரருள்பாலா-
அன்புட னுவிற் பாவது சந்தத மோதிப் பாதமு
மங்கையி ணுளிற் பூசையு மணியாமல்;
வம்பணி பாரப் பூண்முலை வஞ்சியர் மாயச் சாயலில்
வண்டுழ லோதித் தாழலி லிருகாதில்-
மண்டிய நீலப்பார்வையில் வெண்டுகிலாடைச்சேர்வையில்
மங்கிய யேழைப் பாவிய னழிவேனோ;
கொம்பணி நீலக் கோமளை அம்புய மாலைப் பூஷணி
குண்டலி யாலப் போசனி யபிராமி-
கொஞ்சிய வானச் சானவி சங்கரி வேதப் பார்வதி
குன்றது வார்பொற் காரிகை யருள்பாலா;
செம்பவ ளாயக் கூரிதழ் மின்குற மானைப் பூண்முலை
திண்புய மாரப் பூரண மருள்வோனே-
செந்தமிழ் பாணப் பாவலர் சங்கித யாழைப் பாடிய
தென்திரு வானைக் காவுறை பெருமாளே. (உ)

497.

அனித்த மான வூனுரு மிருப்ப தாக வேநசி
யடைத்து வாயு வேர்ட்டாத வகைசாதித்-
தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடு மாயாச
அசட்டு யோகி யாகாமல் மலமாயை;

---

* பிரபந்தம் = பத்திக்கப்படும் ஷட்கோண யந்திரம்.

† கஜாரணியம் = திருவானைக்கா.

செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான்வேறெ னுடல்வேறு-
செகத்தி யாவும் வேறுக நிகழ்ச்சி யாம நோதீத
சிவச்சொ ரூப மாயோகி யெனஆள்வாய்;
தொனித்த நாத வேயூது சகஸ்ர நாம கோபால
சுதற்கு நேச மாருத மருகோனே-
சுவர்க்க லோக மீகாம சமஸ்த லோக பூபால
கொடுக்க நீடு வேல்வீர வயலூரா;
மேவு காவேரி
மலைமோதும்-
அனைத்து லோக மான்வாரு
பர் பெருமாளே. (கூ)

498.

ரப் பீறியற மேலிட்
—— ள் வாடத் துறவோரை-
ஆசைமட லூர்வித் தாளுமதி பாரப்
பாளித படீரத் தனமானுர்;
காரளக நீழற் காதளவு மோடிக்
காதுமபி ராமக் கயல்போலக்-
காலனுடல் போடத் தேடிவரு நாளிற்
காலமற வாமற் புகல்வேணு;
பாரடைய வாழ்வித் † தாரபதி பாசச்
சாமளக லாபப் பரியேறிப்-
பாய்மதக போலத் தாளெடிக லாமுற்
‡பாடிவரு மேழைச் சிறியோனே;
சூரர்புர சூறைக் காரசுரர் காவற்
காரஇள வேனற் புனமேவுந்-
தோகைதிரு வேளைக் காரதமிழ் வேதச்
சோதிவளர் காவைப் பெருமாளே. (சு)

*காவை என்பது திருவானைக் கா. † ஆரபதி = அரபதி = சர்ப்பராஜன். ‡ பாடிவரல் = வளைந்தோடி வருதல்; பாடியோட்டம் = ஒரு விளையாட்டு.

499.

ஆலம் வைத்தவி ழிச்சிகள் சித்தச
ஞை மக்கலை கற்றச மர்த்திக
ளார்ம னத்தையு மெத்திவ ளைப்பவர் தெருவூடே-
ஆர வட்டமு லைக்குவி லைப்பண
மாயி ரக்கல மொட்டிய ளப்பினு
மாசை யப்பொரு ளொக்கந டிப்பவ ருடன்மாலாய்;
மேலி ளைப்புமு சிப்பும வத்தையு
மாயெ டுத்தகு லைப்பொடு பித்தமு
மேல்கொ ளத்தலை யிட்டவி திப்படி யதனுலே-
மேதி னிக்குள பத்தனெ னப்பல
பாடு பட்டுபு முக்கொள்ம லக்குகை
வீடு கட்டியி ருக்குமெ னக்குநி னருள்தாராய்;
பீலி மிக்கம யிற்றுர கத்தினி
லேறி மூட்டவ ளைத்துவ குத்துடல்
பீற லுற்றவு யுத்தக ளத்திடை மடியாத-
பேர ரக்கரெ திர்த்தவ ரத்தனை
பேரை யுக்ரக ளப்பலி யிட்டுயர்
பேய்கை கொட்டிந டிப்பம ணிக்கழு குடனுட;
ஏலம் வைத்தபு யத்தி லணைத்தருள்
வேலெ டுத்தச மர்த்தையு ரைப்பவர்
ஏவ ருக்கும னத்தில்நி னைப்பவை யருள்வோனே-
ஏழி சைத்தமி ழிற்பய னுற்ற*வே
ணுவ லுற்றடி யிற்பயி லுத்தம
ஈசன் மூக்கணி ருத்தன ளித்தருள் பெருமாளே.(நு)

500.

உரைக்கா ரிகைப்பா லெனக்கே முதற்பே
ருனக்கோ மடற்கோவை யொன்றுபாட-
உழப்பா திபக்கோ டெழுத்தா ணியைத்தே
டுணைப்பாரி லொப்பார்கள் கண்டிலேன்யான்;

* வெண் ணுவல்—திரு ஆனைக்காவிற் கோயிலி லுள்ள விருக்ஷம்.

75552

குரைக்கான வித்யா கவிப்பூ பருக்கே
குடிக்காண் முடிப்போடு கொண்டுவாபொன்-
குலப்பூ ணிரத்நா திபொற்றூ செடுப்பா
யெனக்கூ றிடர்ப்பாடின் மங்குவேனே;
அரைக்காடை சுற்றூர் தமிழ்க்கூட லிற்போய்
அனற்கே புனற்கேவ ரைந்தவடிட்-
டறத்தா யெனப்பேர் படைத்தாய் புனற்சே
லறப்பாய் வயற்கீழ மர்ந்தவேளே;
திரைக்கா விரிக்கே கரைக்கா னகத்தே
சிவத்யான மூற்றூர் *தி லந்திநூல்செய்-
திருக்கா வணத்தே யிருப்பா ரருட்கூர்
திருச்சால கச்சோதி தம்பிரானே. (சு)

501.

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவ ரெவராலும்-
ஓத வரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனு மூயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்;
சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமஞ்-
சாரு மதுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனே;
வால குமர குகசுந்த குன்றெறி
வேல மயில எனவந்து சூம்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் கூளவோனே-
வாச களப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை பூணியும் ரணரங்க புங்கவ வயலூரா;

* சிலந்தி நூல்செய் திருக் காவணம்-திரு ஆனைக்கா.

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி-
நாத வடிவி *யகிலம் பரந்தவ
ளாலி னுதர முளபைங் கரும்புவே
ணுவ லரசு மணிவஞ்சி தந்தருள் பெருமாளே. (எ)

502.

கருமுகில்திர ளாகக் கூடிய
இருளெனமரு ளேறித் தேறிய
கடிகமழள காயக் காரிகள் புவிமீதே-
கனவியவிலை யோலைக் காதிகள்
மூழுமதிவத னேரப் பாவைகள்
களவியமுழு மோசக் காரிகள் மயலாலே;
பரநெறியுண ராவக் காமுகர்
உயிர்பலிகொளு மோகக் காரிகள்
பகழியைவிழி யாகத் தேடிகள் முகமாயப்-
பகடிகள்பொரு ளாசைப் பாடிக
ளுருவியதன பாரக் கோடுகள்
படவுளமழி வேனுக் கோரருள் புரிவாயே;
மரகதவித நேர்முத் தார்நகை
குறமகளதி பாரப் பூண்முலை
மருவியமண வாளக் கோலமு முடையோனே-
வனிதருபெரு ஞாலத் தாழ்கடல்
முறையிடநடு வாகப் போயிரு
வரைதொளைபட வேல்விட் டேவிய அதிதீரா;
அரவணைதனி லேறிச் சீருடன்
விழிதுயில்திரு மால்சக் ராயுதன்
அடியிணைமுடி தேடிக் காணவும் அரிதாய-
அலைபுனல்சடை யார்மெச் சாண்மையும்
உடையதொர்மயில் வாசிச் சேவக
அழகிய திரு வானைக் காவுறை பெருமாளே. (அ)

* அகிலம் பரந்தவள் = அகிலாண்ட நாயகி.

503.

காவிப் பூவை யேவை யிகல்வன
நீலத் தால கால நிகர்வன
காதிப் போக மோக மருள்வன இருதோடார்-
காதிற் காதி மோதி யுழல்கண
மாயத் தார்கள் தேக பரிசன
காமக் ரோத லோப மத மிவை சிதையாத ;
பாவிக் காயு வாயு வலம்வர
*லாலிப் பார்கள் போத கருமவு
பாயத் தான ஞான நெறிதனை யினிமேலன்-
பா†லெக் காக யோக ஜெபதப
‡ நேசித் தார வார பரிபுர
பாதத் தாளு மாறு திருவுள நினையாதோ ;
கூவிக் கோழி வாழி யெனமயி
லாலித் தால கால மெனவுயர்
கூளிச் சேனை வான மிசைதனில் விளையாடக்-
கோரத் தீர சூர னுடலினை
பாறச் சீறு § லேன பதிதனை
கோலக் கால மாக அமர்செய்த வடிவேலா ;
‖ ஆவிச் சேல்கள் பூக மடலிள
பாளைத் தாறு கூறு படவுய
ராலிச் சோலை மேலை வயலியி லுறைவோனே-
ஆசைத் தோகை மார்க ளிசையுட
ணாடிப் பாடி நாடி வருதிரு
ஆனைக் காவில் மேவி யருளிய பெருமாளே. (கூ)

---

* லாலித்தல் = அன்புவைத்தல். † லெக்காக = லக்கு ஆக்க.
‡ நேசித்து = நேசிப்பித்து.
§ ஏனபதி = ஆதிவராகம். முருகக் கடவுள் வராகத்தொடு பொருது அதன் மருப்பைச் சிவபிராற் கணியத் தந்ததைக் கந்த புராணம் இரணியன் யுத்தப்படலம் உசு-ஆம் செய்யுளிலும், மூன்றாள் பானுகோபன் யுத்தப்படலம் சுசு-ஆம் செய்யுளிலுங் காண்க. ‖ ஆவி = வாவி : குளம்.

504.

சுருதிபு லாலென்பு தோன ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சித மண்டிய
குடர்நிணம் சோமங்கள் மூளை யென்பன பொதிகாயக்-

கூடிலிடை யோரைந்து வேட ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கொடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனுலே;

சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியைக்ரி யாவண்டர் பூசை வந்தனை
துதியொடு நாடுந்தி யான மொன்றையு மூயலாதே-

* சுமடம தாய்வம்பு † மால்கொ ளுந்திய
திமிரசொ டேபந்த மாய் வருந்திய
துரிசற ஆநந்த வீடு கண்டிட அருள்வாயே;

ஒருதனி வேல்கொண்டு கீள்க்ர வுஞ்சமும்
கிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா-

உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி யின்புற வுறைவோனே;

கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராச னண்புறு மருகோனே-

கமலனு மாகண்ட லாதி யண்டரு
மெமது பிரானென்று தாள்வ ணங்கிய
‡ கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே. (கo)

---

* சுமடம் = அறிவின்மை.

† மால்கொளுந்திய = மால் கொள்ளும் தீய.

‡ கரி வனம் = திருஆனைக் கா.

505.

நாடித் தேடித் தொழுவார்பால்-
* நானத் தாகத் திரிவேனே;
மாடக் கூடற் பதிஞான-
வாழ்வைச் சேரத் தருவாயே;
பாடற் காதற் புரிவோனே-
பாலைத் தேனைத் தருள்வோனே;
ஆடற் ரோகைக் கினியோனே-
ஆனைக் காவிற் பெருமாளே. (கக)

506.

நிறைந்த துப்பிதழ் தேனூறல் நேரென
மறந்த ரித்தக ணூலால நேரென
நெடுஞ்சு ருட்குழல் †ஜீமூத நேரென நெஞ்சின்மேலே-
நெருங்கு பொற்றன மாமேரு நேரென
மருங்கு நிட்கள ஆகாச நேரென
நிதம்ப முக்கணர் பூணூர நேரென நைந்துசீவன்;
குறைந்தி தப்பட வாய்பாடி யாதர
வழிந்த ழைத்தணை மேல்வீழு மாலொடு
குமண்டை யிட்டுடை சோராவி டாயில மைந்துநாபி-
குடைந்தி ளைப்புறு மாமாய வாழ்வருள்
மடந்தை யர்க்கொரு கோமாள மாகிய
குரங்கை யொத்துழல் வேனெம ணூலைய
மென்றுசேர்வேன்;
மறந்த சுக்ரிப மாரீசன் வாசலி
விருந்து ஹத்தநி யோராத தேதுசொல்
மனங்க ளித்திட லாமோது ரோகித முன்புவாலி-
வதஞ்செய் விக்ரம சீராம ணூனில
மறிந்த திச்சர மோகோ கெடாதினி
வரும்ப டிக்குரை யாய்பார் பலாகவ மென்றுபேசி;

---

* நான் நத்து ஆக = நான் நத்துத லாக. 'நா னெனத்தாக' எனவும் பாடம். † ஜீமூதம் = நீருண்ட மேகம்.

அறந்த ழைத்தது மாலேடு மாகடல்
வரம்ப டைத்ததின் மேலேறி ராவண
னரண்கு லத்தெதிர் போராடு நாரணன் மைந்தனை-
அநங்கன் மைத்துன வேளே கலாபியின்
விளங்கு செய்ப்பதி வேலா யுதாவிய
னலங்*கயப்பதி வாழ்வான தேவர்கள் தம்பிரானே.(கஉ)

507.

பரிமள மிகவுள சாந்து மாமத
முருகவிழ் வகைமலர் சேர்ந்து கூடிய
பலவரி யளிதுயில் கூர்ந்து வாணுறு முகில்போலே-
பரவிய இருள்செறி கூந்தல் மாதர்கள்
பரிபுர மலரடி வேண்டி யேவிய
பணிவிடை களிலிறு மாந்த கூளனே நெறிபேணு;
விரகனே யசடனே வீம்பு பேசிய
விழலனே யுறுகலி யாய்ந்தி டாமுழு
வெகுளியை யறிவது போங்க பாடனே மலமாறு-
வினையனே யுரைமொழி சோர்ந்த பாவியை
விளிவுறு நரகிடை வீழ்ந்த மோடனே
வினவிமு னருள்செய்து பாங்கினுள்வது மொருநாளே;
கருதலர் திரிபுர மாண்டு நீறெழ
மலைசிலை யொருகையில் வாங்கு நாரணி
கழலணி மலைமகள் காஞ்சி மாநக ருறைபேதை-
களிமயில் சிவனுடன் வாழ்ந்த மோகினி
கடலுடை யுலகினை யின்ற தாயுமை
கரிவன முறையகி லாண்ட நாயகி யருள்பாலா;
முரணிய சமரினில் மூண்ட ராவண
னிடியென அலறிமு னேங்கி வாய்விட
முடிபல திருகிய நீண்ட மாயவன் மருகோனே-
பூதலொரு குறமகள் நேர்ந்த நூலிடை
யிருதன கிரிமிசை தோய்ந்த காமுக
முதுபழ மறைமொழி யாய்ந்த தேவர்கள் பெருமாளே.()

* கயப் பதி = திருவானைக் கா.

508.

வேலைப் போல்விழி யிட்டும ருட்டிகள்
காமக் ரோதம்வி ளைத்திடு துட்டிகள்
வீதிக் கேதிரி பப்பர மட்டைகள் முலையாலே-

மேலிட் டேபொர விட்டபொ றிச்சிகள்
மார்பைத் தோலைய சைத்துந டப்பிகள்
வேளுக் காண்மைசெ லுத்துச மர்த்திகள் களிகூருஞ்;

சோலைக் கோகில மொத்தமொ ழிச்சிகள்
காசற் ரூரையி தத்திலொ ழிச்சிகள்
தோலைப் பூசிமி னுக்கிபு ருக்கிகள் எவரேனும்-

தோயப் பாயல ழைக்கும வத்திகள்
மோகப் போகமு யக்கிம யக்கிகள்
சூறைக் காரிகள் தூக்கவ லைப்பட லொழிவேனே;

காலைக் கேமுழு கிக்குண திக்கினில்
ஆதித் யாயள னப்பகர் தர்ப்பண
காயத் ரீசெப மர்ச்சனை யைச்செபு முநிவோர்கள்-

கானத் தாசிர மத்தினி லுத்தம
வேள்விச் சாலைய ளித்தல்பொ ருட்டெதிர்
*காதத் தாடகை யைக்கொல்க்ரு பைக்கடல்
மருகோனே ;

ஆலைச் சாறுகொ தித்துவ யற்றலை
பாயச் சாலித ழைத்திர தித்தமு
தாகத் தேவர்கள் மெச்சிய செய்ப்பதி யுறைவேலா-

ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த்திரு
ரீநிட் டான்மதிள் சுற்றிய பொற்றிரு
ஆனைக் காவினி லப்பர்ப்ரி யப்படு
பெருமாளே. (கசு)

---

* காதம்=காதகம்.

3. திருவருணை.

[திருவருணை என்பது திருவண்ணாமலை. ரெயில்வே ஸ்டேஷன். பஞ்சபூத ஸ்தலங்களில் தேயு ஸ்தலம். நினைக்க முத்தியளிக்கும் நிர்மல க்ஷேத்திரம். விஷ்ணுவும் பிரமனும் அடி முடி தேடிக் காணுத சோதிகிரி. இதற்குச் சோணகிரி, சோணசலம், அருணசலம் என்னும் பெயர்களுமுண்டு. இந்த ஐதிஹ்யத்தைக்கொண்டு இத்தலத்திற் கார்த்திகைக் கிர்த்திகைத் தீபதரிசனம் மிகவும் விசேஷம். இத்தலம் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ-அருணகிரிநாத ஸ்வாமிகளுடைய ஜனனபூமி; இங்கே இவர் முருகபிரானால் தடுத்தாட் கொள்ளப்பட்டு மௌனோபதேசம் பெற்றார். கோயிலில் மேலைப் பிராகாரத்தில் இவர் அடக்கமான இடத்தில் இவருடைய உருவம் ஒன்று சிறிதாகச் செய்துவைக்கப்பட்டிருக்கின்றது. இவருக்கு அநுக்கிரகஞ் செய்த முருகக் கடவுளி னுருவும் கோயிலுக்குக் கிழக்கே ஒரு ஸ்தம்பத்திலிருக்கின்றது. அவருக்குக் "கம்பத் திளையனார்" என்று பெயர். இதற்கு மேற்கே உள்ள கோபுர வாயிலுக்கு வடக்கில் "கோபுரத்திளையனார்" என்னும் முருகபிரானுடைய சந்நிதியும் ஸ்ரீ-அருணகிரிநாத ஸ்வாமிக ளுடைய சில யுருவமும் இருக்கின்றன. மலைப் பிரதக்ஷிணம் 8-மைல் தூரம். ஸ்தல புராணமுண்டு.]

509.

குமர குருபர குணதர நிகிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபகி ரதிசுத சுரபதி குலமானுங்-
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரணென வுருகுதல் சிறிதுமில்
கொடிய வினையினை யவலனை யசடனை யதிமோகக்;
கமரில் விழவிடு மழகுடை யரிவையர்
களவி னெடுபொரு ளளவள வருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனை யினிதாளக்-

கருணை யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே ;
தமர மிகுதிரை யெறிவளை கடல்குடல்
மறுகி யலைபட விடநதி யுமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு வடமாகச்-
சகல வுலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர வினியதொ ரமுதினை யொருதனி கடையாநின்;
றமரர் பகிகெட வுதவிய க்ருபைமுகில்
அகில புவனமு மளவிடு குறியவன்
அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே-
அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே.(க)

510.

அருவ மிடையென வருபவர் தவரிதழ்
அமுது பருகியு முருகியு மருகமத
அளக மலையவு மணிதுகி லகலவு மதிபார-
அசல மூலபுள கிதமெழ அமளியில்
அமளி படஅந வரதமு மவசமொ
டணையு மழகிய கலவியு * மலமல மூலகோரைத்;
தருவை நிகரிடு புலமையு மலமல
முருவு மிளமையு மலமலம் விபரித
சமய கலைகளு மலமல மலமரும் வினைவாழ்வுஞ்-
† சலில லிபியன சனனமு மலமல
மினியு னடியரொ டொருவழி படஇரு
தமர பரிபுர சரணமு மவுனமு மருள்வாயே ;

* அலம் அலம் = போதும் போதும்.

† சலில லிபி யன = நீர்மே லெழுத்துக்கு நேரான.

* உருவு கரியதொர் கணைகொடு பணிபதி
யிருகு தையுமுடி தமனிய தநுவுட
னுருவி யிருசுடர் வலவனு மயனென மறைபூணும்-
உறுதி படுசர தமிசை யடியிட
நெறுநெ றெனமுறி தலுநிலை பெறுதவம்
உடைய வொருவரு மிருவரு மருள்பெற வொருகோடி;
தெருவு நகரியு நிசிசரர் முடியொடு
சடச டெனவெடி படுவன புகைவன
திகுதி கெனவரி வன அனல் நகைகொடு முனிவார்தஞ்-
சிறுவ வனசரர் சிறுமியொ டுருகிய
பெரும அருணையி லெழுநிலை திகழ்வன
சிகரி மிசையொரு கலபியி லுலவிய பெருமாளே. (உ)

511.

கருணை சிறிதுமில் பறிதலை † நிசிசரர்
பிசித அசனம றவரிவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்-
கலக லெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலிகொடு
கருத அரியதை விழிபுனல் வரமொழி குழறுவன்;
புருகி யுனதருள் பரவுகை வரில்விர
கொழியி லுலகியல் பிணைவிடி லுரைசெய
லுணர்வு கெடியுயிர் புணரிரு வினையள றதுபோக-
உதறி லெனதெனு மலமறி லறிவினி
லெளிது பெறலென மறைபறை யறைவதொ
ருதய மரணமில் பொருளினை யருளுவ தொருநாளே;
தருணி சததள பரிமள பரிபுர
சரணி தமனிய தநுதரி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதிபயி ரவிசூலி-

---

* உருவு கரிய தொர் கண் = கரியவன் = விஷ்ணு.

† நிசிசரர் பிசித அசன மறவர் = ராக்ஷதரையும் புலாலுண்ணும் மறவரையும் ஒத்த சமணர்.

சடில தரியது பவையுமை திரிபுரை
சகல புவனமு முதவிய பதிவ்ருதை
சமய முதல்வித னயபகி ரதிசுத சதகோடி ;
அருண ரவியினு மழகிய ப்ரபைவிடு
கருணை வருணித தனுபர குருபர
அருணை நகருறை சரவண குரவணி புயவேளே-
அடவி சரர்குல மரகத வனிதையு
மமரர் குமரியு மனவர தமுமரு
கழகு பெறநில பெறவர மருளிய பெருமாளே. (நு)

512.

தகிலு மருகமத பரிமள அளகமு
நெகிழ இருதன கிரியசை தரஇடை
துவள மனிதரு மமரரு முநிவரு முடனேடித்-
தொடர வனமணி மகரமி லகுகுழை
யடரு வனவிட மிளிர்வன ரதிபதி
சுருதி மொழிவன கயல்விழி புரள்தர நடுவாக ;
வகிரு மதிபுரை தநுநுதல் பனிவர
வனச பதயுக பரிபுர மொலிபட
மறுகு தொறுமுல வியினிய கலவியை விலைகூறும்-
வரைவி லிவையர் தருசுக சலதியி
லலையு மெனதுயி ரதினெறிதரு
மவுன சிவசுக சலதியில் முழுகுவ தெர்ருநாளே ;
முகிலு மதியமும் ரவியெழு புரவியு
நெடிய குலமிட றிடறமு துகசன
முகடு கிழிபட வளர்வன கமுகின மிசைவாளை-
முடுகு கயலுகள் வயல்களு முருகவிழ்
தடமு முளரிய அகழியு மதில்களு
முழுது முடையதொ ருணையி லுறைதரு மிளையோனே ;
அகிலு மருதமு முகுளித வகுளமு
மமுத கதலியும் அருணமும் வருடைய
மபரி மிதமத கரிகளு மரிகளு முடனேகொண்-

டருவி யிழிதரு மருவரை தனிலொரு
சவர வனிதையை முகிதரு புனிதையை
அவச முடன்மல ரடிதொழு தருகிய பெருமாளே. (ச)

513.

மகர மெறிகடல் விழியினு மொழியினு
மதுப முரல்குழல் வகையினு நகையினும்
வளமை யினுமுக நிலவினு மிலவினு நிறமூசும்-

மதுர இதழினு மிடையினு நடையினு
மகளிர் முகுளித முலையினு நிலையினும்
வனச பரிபுர முனினு முலரினு மவர்நாமம்;

பகரு கினுமவர் பணிவிடை திரிகினு
முருகி நெறிமுறை தவறினு மவமொடு
பகடி யிடுகினு மமளியி லவர்தரு மதராகப்-

பரவை படியினும் வசமழி யினுமுத
லருணை நகர்மிசை கருணையொ டருளிய
பரம வொருவச னமுமிரு சரணமு மறவேனே;

ககன சுரபதி வழிபட எழுகிரி
கடக கிரியொடு மிதிபட வடகுல
கனக கனகுவ டடியொடு முறிபட முதுசூதங்-

கதறு சுழிகட லிடைகிழி படமிகு
கலக நிசிசரர் பொடிபட நடவிய
கலப மரகத துரகத ந்ருபகிரி மயில்வாழ்வே;

தகன கரதல சிவசுத கணபதி
சகச சரவண பரிமள சததள
சயன வனசரர் கதிபெற முனிபெறு புனமானின்-

தரள முகபட நெறிபட நிமிர்வன
தருண புளகித ம்ருகமத தனகிரி
தழுவ மயல்கொடு தனிமட லெழுதிய பெருமாளே. (ஞ)

514.

முகிலி யிகல்பொரு முழுவிருள் குழலென
முதிய மதியது முகமென *துதலிணை
முரணர் வரிசிலை முடுகிடு கணைவிழி யெனமூவா-
முளரி தனின்முகு ளிதமலர் முலையென
முறுவல் தினையிரு குழைதினை மொழிதினை
மொழிய வரியதொர் தெரிவையர் வினையென மொழிகூறிப்;
பகலு மிரவினு மிகமன மருள்கொடு
பதியி லவர்வடி வுளதழ கெனவொரு
பழுது மறஅவர் பரிவுற இதமது பகராதே-
பகைகொ டெதிர்பொரு மசுரர்கள் துகைபட
விகட முடனடை பயில்மயில் மிசைவரு
பவனி தினையது தினைவினை யெனஅருள் பகர்வாயே;
புகல வரியது பொருளிது எனவொரு
புதுமை யிடஅரி யதுமுத லெனுமொரு
பொதுவை யிதுவென தவமுடை முனிவர்கள் புடைசூழ்-
புரமு மெரியெழ நகையது புரிபவர்
புனலும் வளர்மதி புனைசடை யினரவர்
புடவி வழிபட புதை பொருள் விரகொடு புகல்வோனே;
அகில கலைகளு மறிவறி முறைமையு
மகில மொழிதரு புலவரு முலகினி
லறிஞர் தவமுயல் பவர்களு மியலிசை யதனுலே-
அறுவர் முலையுணு மறுமுக னிவனென
அரிய நடமிடு மடியவ ரடிதொழ
அருணை நகர்தனி லழகுடன் மருவிய பெருமாளே. (சு)

515.

முருகு செறிகுழல் சொருகிய விரகிகள்
முலைக ளளவிடு முகபட பகடிகள்
முதலு முயிர்களு மளவிடு களவியர் முழுநீல-

*துதல் = புருவம்.

முழுகு புழுககில் குழைவடி வழகியர்
முதிர வளர்கனி யதுகவ ரிதழியர்
மூணெகொ ளய்லென விழியெறி கடைகிய ராதராகம்;
மருவி யமளியி னலமிடு கலவியர்
மனது திரவிய மளவள வளவியர்
வசன மொருகொடி நிலைமையில் கபடியர் வழியேநான்-
மருளு மறிவின னடிமுடி யறிகிலன்
அருணை நகர்மிசை கருணையொ டருளிய
மவுன வசனமு மிருபெரு சரணமு மறவேனே;
கருதி யிருபது கரமுடி யொருபது
கனக மவுலிகொள் புரிசைசெய் பழையது
கடிய வியனகர் *புகவரு கனபதி கனல்மூழ்கக்-
கவச அதுமணெ டெழுபது கவிவிழ
அணையி லலியெதி யெதிரமர் பொருதிடு
களரி தனிலொரு கணைவிடு மடலரி மருகோனே;
சருவு மவுணர்கள் தளமொடு பெருவலி
யகல நிலைபெறு சயிலமு மிடிசெய்து
தரும னவர்பதி குடிவிடு பதனிசை மயில்வீரா-
தருண மணியவை பலபல செருகிய
தலையள் தூகிலிடை யழகிய குறமகள்
தனது தனமது பரிவொடு தழுவிய பெருமாளே. (எ)

516.

விடமு மமுதமு மிளிர்வன இணைவிழி
வனச மலதழல் முழுகிய சரமென
விரைசெய் மருகமத அளகமு முகிலவொருஞான-
விழியின் வழிகெட இருள்வதொ ரிருளென
மொழியு மமுதல வுயிர்கவர் வலியென
விழையு மிளநகை தளவல களவென வியனுபித்;
தடமு மடுவல படுகுழி யெனஇடை
துடியு மலமத னுருவென வனமுலை
சயில மலகொலை யமனென மூலமிசை புரள்கோவை-

* புகவரு=புகுவதற்கு அரிதாகிய.

தரள மணியில யமன்விடு கயிறென
மகளிர் மகளிரு மலபல வினைகொடு
சமயமு மருவென வுணர்வொடு புணர்வது மொருநாளே;
அடவி வனிதையர் தனகிரு பரிபுர
சரண மலரடி மலர்கொடு வழிபட
அசல மிசைவீசு புனமதி னினிதுறை தனிமானும்—
அமர ரிரைவயு மிருபுடை யினும்வர
மூகர மூகபட கவளத வளகர
அசல மிசைவரு மபிநவ கலவியும் விளையாடுங்;
கடக புளகித புயகிரி சமுக*வி
கடக கசரத துரகத நிசிசரர்
கடக † பயிரவ ‡ கயிரவ மலர்களும் எரிதீயுங்-
கருக வொளிவிடு தனுபர கவுதம
புனித முநிதொழ அருணையி லறம்வளர்
கருணை யமைதரு சரவண சுரபதி பெருமாளே. (அ)

517.

§ கமரி மலர்குழல் சரிய புளகித
கனக தனகிரி யசைய பொருவிழி
கணைக ளெனநுதல் புரள துகிலைதை நெகிழ்மாதர்-
கரிய மணிபுர ளரிய கதிரொளி
பரவ இணைகுழை யசைய நகைகதிர்
கனக வளைகல நடைகள் பழகிகள் மயில்போலத்;
திமிரு மதபுழு கொழுக தெருவினி
லலைய விலைமுலை தெரிய மயல்கொடு
திலத மணிமுக அழகு சுழலிக ளிதமூறல்-
திணையி லமுதென கழைகள் பலசுவை
யெனவு மவர்மயல் தழுவு மசடனை
திருகு புலிகொலை கலிகள் சிதறிட அருள்தாராய்;

---

* விகட அக. † பயிரவன் = பயங்கரத்தைச் செய்வோன்.
‡ கயிரவம் = செவ்வல்லி.
§ கமரி = கம அரி ; கமம் = நிறைவு ; அரி = வண்டு.

குமர குருபர குமர குருபர
குமர குருபர குமர குருபர
குமர குருபர குமர குருபர எனதாளங்-

குரைசெய் முரசமொ டரிய விருதொலி
டமட டமடம டமட டமவென
குமுற திமிலைச லரிகி னரிமுத விவைபாட;

அமரர் முநிவரு மயனு மீனவரு
மதுகை மலர்கொடு தொழுது பதமுற
அசுரர் பரிகரி யிரத முடைபட விடும்வேலா-

அகில புவனமொ டடைய வொளிபெற
அழகு சரண்மயில் புறம தருளியொ
ரருண கிரிகுற மகளை மருவிய பெருமாளே. (கூ)

518.

கயல்விழித் தேனெனைச் செயலழித் தாயெனக்
கணவகெட் டேனெனப் பெறுமாது-
கருதுபுத் ராளனப் புதல்வரப் பாளனக்
கதறிடப் பாடையிற் றலைமீதே;
பயில்குலத் தாரழப் பழையநட் பாரழப்
பறைகள்கொட் டாவரச் சமனரும்-
பரியகைப் பாசம்விட் டெறியுமப் போதெனைப்
பரிகரித் தாவியைத் தரவேணும்;
அயிலறச் சேவல்கைக் கினிதரத் தோகையுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே-
அமரரத் தாசிறுக் குமரிமுத் தாசிவத்
தரியசொற் பாவலர்க் கெளியோனே;
புயலினைப் பாறுபொற் சயிலமொய்ச் சாரலிற்
புனமறப் பாவையைப் புணர்வோனே-
பொடிபடப் பூதரத் தொடுகடற் சூரனைப்
பொருமுழுச் சேவகப் பெருமாளே. (கo)

519.

கறுவுமிக் காவியைக் *கலகுமக் காலனைத்
திலகுகட் சேல்களிப் புடனுடக்-
கருதிமுற் பாடு † கட் டனையுடற் பேசியுட்
களவினிற் காசினுக் குறவாலுற்;
றுறுமலர்ப் பாயலிற் றுயர்வினைத் தூடலுற்
றுயர் பொருட் கோதியுட் படுமாதர்-
ஒறுவினைக் கேயுளத் தறிவுகெட் டேனுயிர்ப்
புணையினைத் தாள்தனைத் தொழுவேனே;
மறையெடுத் தோதிவச் சிரமெடுத் தானுமைச்
செறிதிருக் கோலமுற் றணைவானும்-
‡ மறைகள் புக் காரெனக் குவடுநெட் டாழிவற்
றிட அடற் சூரனைப் பொரும்வேலா;
அறிவுடைத் தாருமற் றுடனுனைப் பாடலுற்
றருணையிற் கோபுரத் துறைவோனே-
அடவியிற் றேகைபொற் றடமூலைக் காசையுற்
றயருமச் சேவகப் பெருமாளே. (கக)

520.

பரியகைப் பாசம்விட் டெறியுமக் காலனுட்
பயனுயிர்ப் போயகப் படமோகப்-
படியிலுற் றுரெனப் பலர்கள்பற் றுவடற்
படரெரிக் கூடுவிட் டலறீரிற்;
பிரியுமிப் பாதகப் பிறவியுற் றேமிகப்
பிணிகளுக் கேயினைத் துழல்நாயேன்-
பிழைபொறுத் தாயெனப் பழுதறுத் தாளெனப்
பிரியமுற் றுதிடப் பெறுவேனே;
கரியமெய்க் கோலமுற் றரியினற் றுமரைக்
கமைவபற் றுசையக் கழலோர்முன்-

---

* கலகும் = கலக்கும். †சட்டளை உடல் = அளவான பொருள்.
‡ மறைகள் புக்கார் என = அடைக்கலம் புகுந்தா ரென.

கலிவகுத் தோதிவெற் பதுதொலைத் தோனியற்
கடவுள்செச் சேவல்கைக் கொடியோனென்;
றரியநற் பாடலைத் தெரியுமுற் றேர்கிளைக்
கருணையிற் கோபுரத் துறைவோனே-
அடவியிற் றேனைபொற் றடமுலைக் காசையுற்
றயருமச் சேவகப் பெருமாளே. (கூ)

521.

தருணமணி வானி லத்தி லருணமணி யால விட்ட
தழலமளி மீதெ றிக்கு நிலவாலே-
தலைமைதவி ராம னத்தி னிலைமையறி யாதெ திர்த்த
தறுகண்மத வேள்தொ டுத்த கணையாலே;
வருணமட மாதர் கற்ற வசையின் மிகை பேச மூற்று
மருவுமென தாவி சற்று மழியாதே-
மகுடமணி வாரி சைக்கும் விகடமது லாவு சித்ர
மயிலின் மிசை யேறி நித்தம் வரவேணும்;
கருணையக லாவி ழிச்சி களபமழி யாமு லைச்சி
கலவிதொலை யாம றத்தி மணவாளா-
கடுவுடைய ராநி ரைத்த சடிலமுடி மீது வைத்த
கடியமல ராத ரித்த கழல்வீரா;
அருணமணி யால மைத்த கிரணமணி சூழும் வெற்றி
அருணை நகர் கோபு ரத்தி லுறைவோனே-
அசுரர்குலம் வேர றுத்து வடவனலை மீதெ ழுப்பி
அமரர்சிறை மீள விட்ட பெருமாளே. (கஙூ)

522.

முழுகிவட வாமு கத்தி னெழுகனலி லேபி றக்கு
முழுமதிநி லாவி னுக்கும் வசையாலும்-
மொழியுமட மாத ருக்கு மினியதனி வேயி சைக்கு
முகியமத ராஜ னுக்கு மழியாதே;
புழுகுதிகழ் நீப மத்தி லழகியகு ராநி ரைத்த
புதுமையினி லாறி ரட்டி புயமீதே-

புணரும்வகை தானி னைத்த துணரும்வகை நீல சித்ர
பொருமயிலி லேறி நித்தம் வரவேணும் ;
எழுமகர வாவி சுற்று பொழிலருணை மாந கர்க்கு
ளெழுதரிய கோபு ரத்தி லுறைவோனே-
இடைதுவள வேடு வச்சி படமசைய வேக னத்த
இளமூலவி டாத சித்ர மணிமார்பா ;
செழுமகுட நாக மொய்த்த ஒழுகுபுனல் வேணி வைத்த
சிவனீ மூத லோது வித்த குருநாதா-
திசைமுகன்மு ராரி மற்று மரியபல தேவ ருற்ற
சிறையடைய மீள விட்ட பெருமாளே. (கச)

523.

வடவையன லூடு புக்கு முழுகியெழு மாம திக்கு
மதுரமொழி யாழி சைக்கு மிருநாலு-
வரைதிசைவி டாது சுற்றி யலறுதிரை வாரி திக்கு
மடியருவ வேள்க ணைக்கு மறவாடி ;
நெடுகனக மேரு வொத்த புளகமூல *மாத ருக்கு
நிறையுமிகு காத லுற்ற மயல்தீர-
நினைவினொடு பீலி வெற்றி மாகதக லாப சித்ர
நிலவுமயி லேறி யுற்று வரவேணும் ;
மடலவிழு மாலை சுற்று புயமிருப தோடு பத்து
மவுலியற வாளி தொட்ட அரிராமன்-
மருகபல வான வர்க்கு மரியசிவ னுர்ப டிக்க
மவுனமறை யோது வித்த குருநாதா ;
இடையரியு லாவு முக்ர அருணகிரி மாந கர்க்கு
ளினியகுண கோபு ரத்தி லுறைவோனே-
எழுபுவிய ளாவு வெற்பு முடலிலெடு நாக மெட்டு
மிடையுருவ வேலை விட்ட பெருமாளே. (கஞ)

---

* மாதருக்கு = மாது அருக்கு ; அருக்கு = அருமை.

524.

ஆலவிழி நீலத் தாலதர பானத்
தாலளக பாரக் கொண்டலாலே-
ஆரநகை யால்விற் போர்நுதலி னுல்வித்
தாரநடை யால்நற் கொங்கையாலே;
சாலமய லாகிக் காலநிரி சூலத்
தாலிறுகு பாசத் துன்பமுழ்கித்-
தாழ்விலுயிர் வீழ்பட் டுழ்வினைவி டாமற்
சாவதன்மு னேவற் கொண்டிடாயோ ;
சோலைதரு காணிற் கோலமற மானைத்
தோளிலுற வாகக் கொண்டவாழ்வே-
சோதிமுரு காநித் தாபழய ஞானச்
சோணகிரி வீதிக் கந்தவேளே ;
பாலகக லாபக் கோமளம யூரப்
பாகவுமை பாகத் தன்குமாரா-
பாதமலர் மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர் தோழத் தம்பிரானே. (கசு)

525.

பேதகவி ரோதத் தோதகவி நோதப்
பேதையர்கு லாவைக் கண்டுமாலின்-
பேதைமைபு ருமற் றேதமக லாமற்
பேதவுடல் பேணித் தென்படாதே ;
*சாதகவி காரச் சாதலவை போகத்
தாழ்விலுயி ராகச் சிந்தையாதுன்-
தாரைவடி வேலைச் சேவல்தனை யேனற்
சாரல்மற மானைச் சிந்தியேனே;
†போதகம யூரப் போதகக டாமற்
போதருணை வீதிக் கந்தவேளே-

---

* சாதக விகாரச் சாதல்=துன்பமான பிறப்பு இறப்பு.

† போதக மயூர போது அக அகடு ஆ மன் போது=யானை, மயில் இவைகளின் மேல் மல ராசனமிட்ட மத்திய ஸ்தானத்தி லெழுந்தருளி வருகின்ற.

போதகக லாபக் கோதைமுது வானிற்
போனகிறை மீளச் சென்றவேலா ;

பாதகப தாதிச் சூரன்முதல் வீழப்
பாருலகு வாழக் கண்டகோவே-

பாதமலர் மீதிற் போதமலர் தூவிப்
பாடுமவர் தோழத் தம்பிரானே. (கஎ)

526.

அமுத மூறுசொ லாகிய தோகையர்
பொருளு ளாரையெ ணணையு ணணையெ
னருகு வீடிது தானதில் †வாருமெ னுரைகூறும்-

அசடு மாதர் ‡கு வாதுசொல் கேடிகள்
தெருவின் மீதுகு லாவியு லாவிகள்
அவர்கள் மாயைப டாமல் கெடாமல்நி னருள்தாராய் ;

குமரி காளிவ ராகிம கேஸ்வரி
கவுரி மோடிசு ராரிகி ராபரி
கொடிய சூலிசு டாரணி யாமளி மகமாயி-

குறளு ரூபமு ராரி சகோதரி
யுலக தாரி உதாரி பராபரி
குரூப ராரிவி காரி நமோகரி அபிராமி;

சமர நீலிபு ராரித ணயகி
மலைகு மாரிக பாலிக ணரணி
சலில மாரிசி வாயம ணேகரி பரையோகி-

சவுரி வீரிமு நீர்விட போஜனி
திகிரி மேவுகை யாளிசெ யாளொரு
சகல வேதமு மாயின தாயுமை யருள்பாலா;

---

* போதக கலாப கோதை முது வான் = தெய்வயானையம்மை அவதரித்த முதிய விண்ணுலகம்.

† வாரும் என உரை கூறும். ‡ குவாது = குதர்க்கம்.

திமித மாடுசு ராரிங சாசரர்
முடிக டோறு*க டாவியி டேயொரு
சிலப சாசு†கு ணுவிங ணுமுண விடும்வேலா-
திருவு லாவுசொ ணேசர ணுமலை
முகிலு லாவுவி மானந வோங்கிலை
சிகர மீதுகு லாவியு லாவிய பெருமாளே. (கஅ)

527.

உருகு மாமெழு காகவு மேமயல்
பெருகு மாசையு ளாகிய பேர்வரி°
லுரிய மேடையில் வார்குழல் நீவிய வொளிமானர்-
உடைகொள் ‡மேகலை யால்முலை மூடியும்
நெகிழ நாடிய தோதக மாடியு
முவமை மாமயில் போல்நிற மேனிய ருரையாடுங்;
கரவ தாமன மாதர்கள் நீள்வலை
கலக வாரியில் வீழடி யேனெறி
கருதொ ணுவதி பாதக னேசம தறியாத-
கசட மூடனை யாளவு மேயருள்
கருணை வாரிதி யேயிரு நாயகி
கணவ னேயுன தாளிணை மாமலர் தருவாயே ;
சுருதி மாமொழி வேதியன் வானவர்
பரவு கேசனை யாயுத பாணிநல்
துளப மாலையை மார்பணி மாயவன் மருகோனே-
தொலைவி லாவசு ரேசர்க ளானவர்
துகள தாகவு மேயெதி ராடிடு
சுடரின் வேலவ னேயுல கேழ்வலம் வருவோனே ;
அருணர் கோடியி னொளி வீசிய
தருண வாண்முக மேனிய னேயர
னணைய நாயகி பாலக னேநிறை கலையோனே-

---

* கடாவி யிடேய்=கடாவி யிட்டு ஏய்.

† குணவி நிணம் உண=குணலையிட்டு நிணம் உண்ண.

‡ மேகலை=ஆடை.

அணிபொன் மேருயர் கோபுர மாமதி
ளதிரு மாரண வாரண வீதியு
ளருணை மாநகர் மேவிய லாவிய பெருமாளே. (சகூ)

528.

கரியுரி அரவ மணிந்த மேனியர்
கலைமதி சலமு நிறைந்த வேணியர்
கனல்மழு வுழையு மமர்ந்த பாணியர் கஞ்சமாதின்-

கனமுலை பருகி வளர்ந்த காமனை
முனிபவர் கயிலை யமர்ந்த காரணர்
கதிர்விரி மணிபொ னிறைந்த தோளினர் கண்டகாள ;

விரிவென வனது ளுகந்த வேலென
மிகவிரு குழைபு மடர்ந்து வேளினை
யனையவ ருயிரை விழுங்கி மேலும்வெ குண்டுநாடும்-

வினைவிழி மகளிர் தனங்கள் மார்புற
விதமிகு கலவி பொருந்தி மேனியு
மெழில்கெட நினைவு மழிந்து மாய்வதொ ழிந்திடாதோ;

எரிசொரி விழியு மிரண்டு வாளெயி
றிருபிறை சயில மிரண்டு தோள்முகி
லெனவரு மசுரர் சிரங்கள் மேருஇ டிந்துவீழ்வ-

தெனவிழ முதுகு பிளந்து காளிக
ளிடுபலி யெனவு நடந்து தாள்தொழ
எதிர்பொரு துதிர மூகந்த வேகமு கைந்தவேலா;

அரிகரி யுழுவை யடர்ந்த வாண்மலை
அருணையி லறவு முயர்ந்த கோபுர
மதிலுறை குமர அருந்த வேதமொ ழிந்துவாழும்-

அறுமுக வடிவை யொழிந்து வேடர்கள்
அடவியி லரிவை குயங்கள் தோய்புய
அரியர பிரம புரந்த ராதியர் தம்பிரானே. (உo)

529.

கனைகடல் வயிறுகு ழும்பி வாய்விட
வடதம னியகிரி கம்ப மாய்நட
கணபண விபரித கந்த காளபு யங்கராஜன்-
கயிறென அமரர நந்த கோடியு
முறைமுறை யழுதுக டைந்த நாளொரு
கதியற வுலகைவி ழுங்கு மேகவொ ழுங்குபோல ;
வினமத கரிகளு மெண்டி சாமுக
கிரிகளு முறுகிட அண்ட கோளகை
வெடிபட எவரையும் விஞ்சி வேலிடு நஞ்சுபோல-
விடுகுழை யளவும ளந்து காமுக
ருயிர்பலி கவர்வுறு பஞ்ச பாதக
விழிவலை மகளிரொ டன்பு கூர்வதொ ழிந்திடாதோ;
மூனைபெற வளைய அ ணைந்த மோகர
நிசிசரர் கடகமு றிந்து தூளெழ
முகிலென வுருவமி ருண்ட தாருக னஞ்சமீன-
முழுகிய திமிரத ரங்க சாகர
மூறையிட இமையவர் தங்க ளூர்புக
முதுகிரி யுருவமு னிந்த சேவக செம்பொன்மேரு;
அனையன கனவித சண்ட கோபுர
அருணையி லுறையும ருந்து ணைமுலை
அபிநவ வனிதைத ருங்கு மாரெ ருங்குமால்கொண்-
டடவியில் வடிவுக ரந்து போயொரு
குறமகள் பிறகுதி ரிந்த காமுக
அரியர பிரமபு ரந்த ராதியர் தம்பிரானே. (உக)

530.

இரவியு மதியுந் தெரிவுற எழுமம்
புவிதனி வினமொன் றிடுமாதும்-
எழில்புதல் வருநின் றழுதுள முருகும்
மிடர்கொடு *நடலம் பலகூறக்;

* நடலம்=துன்பமொழி.

கருகிய வுருவங் கொடுகனல் விழிகொண்
டுயிரிணை நமனுங் கருதாமுன்-
கலிகொடு பலதுன் பமுமக லிடநின்
கழலிணை கருதும் படிபாராய்;
திருமரு வியதிண் புயனயன் விரியெண்
டிசைகிடு கிடவர் திடுசூரன்-
திணிபுய மதுசிந் திடஅலை கடலஞ்
சிடவலி யொடுகன் றிடும்வேலா;
அருமறை யவரந் தரமுறை பவரன்
புடையவ ருயஅன் றறமேவும்-
அரிவையு மொருபங் கிடமுடை யவர்தங்
கருணையி லுறையும் பெருமாளே. (உஉ)

531.

விரகொடு வஞ்சங் கடமது தருவெம்
* பிணிகொடு விழிவெங் கனல்போல-
வெறிகொடு சமனின் றுயிர்கொளு நெறியின்
றினைவிதி வழிவந் திடுபோதிற்;
கரவட மதுபொங் கிடுமன மொடுமங்
கையருற வினர்கண் புனல்பாயுங்-
கலகமும் வருமுன் குலவிண களையுங்
கழல்தொழு மியல்தந் தருள்வாயே;
பரவிடு மவர்சிந் தையர்விட முமிழும்
படவர வணைகண் டுயில்†மாலம்-
பழமறை மொழிபங் கயனிமை யவர்தம்
பயமற விடமுண் டெருதேறி;
அரவொடு மதியம் பொதிசடை மிசைகங்
கையுமுற அனலங் கையில்மேவ-
அரிவையு மொருபங் கிடமுடை யவர்தங்
கருணையில் மருவும் பெருமாளே. (உங)

---

* பிணி = பாசக்கயிறு.

† மால் அம் பழமறை மொழி பங்கயன் எனப்பிரிக்க.

532.

இடமடு சுறவை முடுகிய மகர
மெறிகட லிடையெழு திங்களாலே-
இருவினை மகளிர் மருவிய தெருவி
லெரியென வருசிறு தென்றலாலே;
தடநடு வுடைய கடிபடு கொடிய
சரம்விடு தறுகண நங்கனாலே-
சரிவளை கழல மயல்கொளு மிளைவை
தனிமல ரணையின லங்கலாடோ;
வடகுல சயில நெடுவுட லசுரர்
மணிமுடி சிதறள திந்தவேலா-
மறமக ளமுத புளகித களப
வளரிள முலையைய மணந்தமார்பா;
அடலணி விகட மரகத மயிலி
லழகுட னருணையி னின்றகோவே-
அருமறை விததி முறைமுறை பகரு
மரியய பிரமர்கள் தம்பிரானே. (உச)

533.

கெஜநடை மடவார் வசமதி லுருகா
கிலெசம துறுபாழ் வினையாலே-
கெதிபெற நினையா துதிதன யறியா
கெடுசுக மதிலாழ் மதியாலே;
தசையது மருவீ வசையுட லுடனே
தரணியில் மிகவே யுலைவேனே-
சததள மலர்வார் புனைநின கழலார்
தருநிழல் புகவே தருவாயே;
திசைமுக வனிதீள் சிறையுற விடுவாய்
திருநெடு கருமால் மருகோனே-

திரிபுர நகரு ரிடமதில் மகிழ்வார்
திரிபுரை யருள்சீர் முருகோனே ;
நிசிசர ருறைமா கிரியிரு பிளவா
நிறையயில் முடுகா விடுவோனே-
நிலமிசை புகழார் தலமெனு மருணை
நெடுமதில் வடசார் பெருமாளே. (உநி)

534.

அருக்கார் கலத்தைத் திரிப்பார் மனத்துக்
கடுத்தாசை பற்றித் தளராதே-
அடற்கா லனுக்குக் *கடைக்கால் மிதித்திட்
டறப்பே தகப்பட் டழியாதே ;
†கருக்காரர் நட்பைப் பெருக்கா சரித்துக்
கலிச்சா கரத்திற் பிறவாதே-
கருத்தா லெனக்குத் திருத்தா ளளித்துக்
கலைப்போ தகத்தைப் புகல்வாயே ;
ஒருக்கால் நினைத்திட் ‡டிருக்கால் மிகுத்திட்
டுரைப்பார்கள் சித்தத் துறைவோனே-
உரத்தோ ளிடத்திற் குறத்தேனை வைத்திட்
டொளித்தோடும் வெற்றிக் குமரேசா ;
செருக்கா தருக்கிச் §சுரச்சூர் நெருக்கச்
செருச்சூர் மரிக்கப் பொரும்வேலா-
திறப்பூ தலத்திற் றிரட் ||சோண வெற்பிற்
றிருக்கோ புரத்திற் பெருமாளே. (உசு)

---

* கடைக்கால் மிதித்திட்டு = அடிப்படை கோலி.

† கருக்காரர் = பிறவிக்கேதுவாகும் செய்கையோர்.

‡ இருக் கால் = இரண்டு திருவடிகளையும்.

§ சுரச் சூர் நெருக்கு = சுரர்களாகிய தெய்வத்தன்மையோரை ஒடுக்கிய. || சோண வெற்பு என்பது திருவண்ணமலை.

535.

அருமா மதணைப் பிரியா தசரக்
கயலார் நயனக் கொடியார்தம்-
அழகார் புளகப் புழுகார் சயிலத்
தணையா வலிகெட் டுடல்தாழ ;
இருமா நடைபுக் குரைபோ யுணர்வற்
றிளையா வுளமுக் குயிர்சோர-
எரிவாய் நரகிற் புகுதா தபடிக்
கிருபா தமெனக் கருள்வாயே ;
ஒருமால் வரையைச் சிறுதூள் படவிட்
டுரமோ டெறிபொற் கதிர்வேலா-
உறைமா னடவிக் குறமா மகளுக்
குருகா திருபொற் புயவீரா ;
திருமால் கமலப் பிரமா விழியிற்
றெரியா வரனுக் கரியோனே-
செழுநீர் வயல்சூ ழருணை புரியிற்
றிருவீ தியினிற் பெருமாளே. (உள)

536.

அழுதுமா வாவெனத் தொழுதுமூ டுடுநெக்
கவசமா யாதரக் கடலூடுற்-
றமைவில்கோ லாகலச் சமயமா பாதகர்க்
கறியொணா மோனமுத் திரைநாடிப்;
பிழைபடா ஞான மெய்ப்பொருள்பெரு தேவிணைப்
பெரியஆ தேசபுற் புதமாய-
பிறவிவா ராகரச் சுழியிலே போய்விழப்
பெறுவதோ ரானினிப் புகல்வாயே;
பழைய பா கீரதிப் படுகை மேல் வாழ்வெனப்
படியு * மா ரூயினத் † தனசாரம்-

---

* ஆறு ஆய் = (கார்த்திகை மாதர்களாகிய) ஆறு தாய்மார்.

† தன சாரம் = மூலைப் பால்.

பருகுமா முனைச் சிறுவ சோ ணைசலப்
பரமமா யூரவித் தகவேளே ;
பொழுதுசூழ் போதுவெற் பிடிபடா பார்முதற்
பொடிபடா வோடமுத் தெறிமீனப்-
புனரிகோ கோவெனச் சுருதிகோ கோவெனப்
பொருதவே லாயுதப் பெருமாளே. (உஅ)

537.

ஆணவிக் கோடிளநிர்ப் பாரமுலைச் சாரசைபட்
டாடைமறைத் தாடுமலர்க் குழலார்கள்-
ஆரவடத் தோடலையப் பேசிநகைத் தாசைபொருட்
டாரையுமெத் தாகமயக் கிடுமோகர்;
சோணமழைப் பாரவிழித் தோகைமயிற் சாதியர்கைத்
தூதுவிடுத் தேதபொருளைப் பறிமாதர்-
தோதகமுற் றேழ்நரகிற் சேருமழற் காயனையுட்
சோதியொளிப் பாதமளித் தருள்வாயே ;
தானதனத் தீதிமிலப் பேரிகைகொட் டாசமலைச்
சாயகடற் சூரைவதைத் திடுவோனே-
தாளவியற் சோதிநிறக் காலினெழக் கோலியெடுத்
தாபரம்வைத் தாடுபவர்க் கொருசேயே;
தேனிரசக் கோவையிதழ்ப் பூவைகுறப் பாவைதனத்
தேயுருகிச் சேருமணிக் கதிர்வேலா-
சிரருணைக் கோபுரமுற் முனபுனத் தோகையுமெய்த்
தேவமகட் கோர்கருணைப் பெருமாளே. (உக)

538.

இடருக் கிடராகிய கொடுமைக் கணைமேல்வரு
மிறுதிச் சிறுகால்வரு மதனுலே-
இயலைத் தருகானக*முயலைத் தருமேனியி
லெரிலையத் தருமாமதி நிலவாலே;

*முயலைத் தருமேனி = முயற்களங்கத்தைக் காட்டும் வடிவம்.

தொடரக் கொடுவாதையி லடையக் கரைமேலலை
தொலையத் தனிவீசிய கடலாலே-
துணையற் றணிபூமல ரணையிற் றனியேனுயிர்
தூவளத் தகுமோதுயர் தொலையாதோ ;
வடபொற் குலமேருவின் மூடுகிப் பொருசூரனை
மடியச் சுடவெய்ய வடிவேலா-
மறவக் குலமாமொரு குறமெய்த் திருமாமகள்
மகிழப் புனமேவிய மயில்வீரா ;
அடரப் படர்கேதகை மடலிற் றழைசேர்வய
லருணைத் திருவீதியி லுறைவோனே-
அவனித் திருமாதொடு சிவனுக் கிமையாவிழி
அமரர்க் கரசாகிய பெருமாளே. (நo)

539.

இமராஜனி லாவதெ றிக்குங் கனலாலே-
இளவாடையு மூருமொ றுக்கும் படியாலே;
சமராகிய மாரனை டுக்குங் கணையாலே-
தனிமாவுயிர் சோருமு தற்கொன் றருள்வாயே;
குமராமுரு காசடி லத்தன் குருநாதா-
குறமாமக ளாசைத ணிக்குந் திருமார்பா ;
அமராவதி வாழ்வம ரர்க்கன் றருள்வோனே-
அருணைபுரி வீதியி னிற்கும் பெருமாளே. (நக)

540.

இரத சுரதமூல களுமார்பு குத்த துதல்வேர் வரும்ப
அமுத நிலையில்விர லுகிரேகை தைக்க மணிபோல் விளங்க
இசலி யிசலியுப ரிதலீலை யுற்று இடைநூல் துடங்க
வளமகிழ்ச் சியிலேடே-

இருவ ருடலுமொரு வுருவாய் நயக்க முகமே லழுந்த
அளக மவிழவளை களுமேக விக்க நயனர் விந்த
லகரி பெருகஅத ரமுமே யருத்தி முறையே யருந்த
உரையெழப் பரிவாலே;

புருவ நிமிரஇரு*கணவாள் நிமைக்க வுபசார மிஞ்ச
அவச கவசமள வியலே தரிக்க அதிலே யநந்த
புதுமை விளையஅது பரமா பரிக்க இணைதோளு மொன்றி
அதிசுகக் கலையாலே-

புளக முதிரவிர கமென்வாரி தத்த வரைநாண் மழுங்க
மனமு மனமுமுரு கியெயாதரிக்க வுயிர்போ லுகந்து
பொருள தளவுமரு வுறுமாய வித்தை விலைமாதர் சிங்கி
விடஅருட் புரிவாயே ;

பரவு மகரமுக ரமுமேவ லுற்ற சகரால் விளைந்த
தமர திமிரபிர பலமோக ரத்ந சலராசி கொண்ட
படியை முழுதுமொரு நொடியே மதித்து வலமாக வந்து
சிவனிடத் தமர்சேயே-

பழநி மிசையிலிசை யிசையே ரகத்தில் திருவா வினன்கு
டியினில் பிரமபுர மதில்வாழ் திருத்த ணிகையூடு மண்டர்
பதிய முதியகதி யதுவா யெனுக்கு முறவாகி நின்று
கவிதையைப் புனைவோனே ;

அரிய மயனுமம ரருமாய சிட்ட பரிபால னன்ப
ரடையு மிடைமுடு கியெநூறதுட்ட கொலைகார னென்ற
அசுரர் படையையடை யவும்வே ரறுத்த அபிராம செந்தி
லுரகவெற் புடையோனே.

அருண கிரணகரு ணையபூ ணைச்ச ரணமே லெழுந்த
இரண காணமுர ணுறுசூர னுட்க மயிலேறு கந்த
அருணை யிறையவர்பெ ரியகோபுரத்தில் வடபாலமர்ந்த
அமுமுகப் பெருமாளே. (கூஉ)

541.

இரவு பகற் பலகாலும்-இயலிசைமுத் தமிழ்கூறித்;
திரமதனைத் தெளிவாகத்-திருவருளைத் தருவாயே;
பரகருணைப் பெருவாழ்வே-பரசிவதத் துவஞானு;
அரனருள்சற் புதல்வோனே-அருணகிரிப் பெருமாளே.(கூங)

---

* கண்வாள் என்பது கணவாள் என்றுயிற்று.

542.

இருவர் மயலோ அமலி விதமோ
எனென செயலோ அணுகாத-
இருடி அயன்மா லமர ரடியா
ரிரையு மொலிதா னிவைகேளா;
தொருவ னடியே னலறு மொழிதா
னொருவர் பரிவாய் மொழிவாரோ-
உனது பததூள் புவன கிரிதா
னுனது கிருபா கரமேதோ;
பரம குருவா யணுவி லசைவாய்
பவன முதலா கியபூதப்-
படையு முடையாய் சகல வடிவாய்
பழைய வடிவா கியவேலா;
அரிய மயனே டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே-
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமாளே. (ஙச)

543.

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி-
இனவரு ளன்பு மொழிய கடம்பு
வினதக முங்கொ டளிபாடக்;
கரிமுக னெம்பி முருகென வண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்-
கருணை பொழிந்து முகமு மலர்ந்து
கடுகி நடங்கொ டருள்வாயே;
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட விடையேறிச்-
சிவம்வெளி யங்க ணருள் குடிகொண்டு
திகழ நடஞ்செய் தமையீண;

அரசி யிடங்கொள் மழுவுடை யெந்தை
அமலன் மகிழ்ந்த குருநாதர்-
அருணை யிலங்கல் மகிழ்ந்துற மங்கை
அமளி நலங்கொள் பெருமாளே. (கூடு)

544.

இருவினை யுண்ப சும்பை கருவினை கூன்கு டம்பை
யிடரடை பாழ்ம்பொ தும்ப கிதவாரி-
இடைதிரி சோங்கு கந்த மதுவது தேங்கு கும்ப
மிரவிடை தூங்கு கின்ற பிணைநோவுக் ;
குருவியல் பாண்ட மஞ்சு மருவிய கூண்டு நெஞ்சொ
டுயிர்குடி போங்கு ரம்பை யழியாதென்-
றுலகுட னேன்று கொண்ட கருமபி ராந்தொ ழிந்து
னுபயப தாம்பு யங்க ளடைவேனே ;
அருணையி லோங்கு துங்க சிகரக ராம்பு யங்க
ளமரர் குழாங்கு விந்து தொழுவாழும்-
அடியவர் பாங்க பண்டு புகலகி லாண்ட முண்ட
அபிநவ சார்ங்க கண்டன் மருகோனே ;
கருணைம்ரு கேந்த்ர அன்ப ருடனுர கேந்த்ரர் கண்ட
கடவுள்க டேந்த்ரர் மைந்த வரைசாடுங்-
கலபக கேந்த்ர தந்த்ர அரசநி சேந்த்ர கந்த
கருகுலி சேந்த்ர தங்கள் பெருமாளே. (கூசு)

545.

இருளளக மவிழமதி போத முத்த ரும்ப
இலகுகயல் புரளஇரு பார பொற்ற னங்கள்
இளகஇடை துவளவனி பூச லிட்டி ரங்க எவராலும்-
எழுதரிய கலிகெகிழ ஆசை மெத்த வுந்தி
யினியசுழி மடுவினிடை மூழ்கி கட்பொ டுந்த
இதழமுது பருகியுயிர் தேக மொத்தி ருந்து
முனிவாறி ;

546.

இலகு மணிமுலை மருவு தாரளமு
மெரியு முமிழ்மதி நிலவாலே-
†இரவி யெனதுயிர் கவர வருகுழ
லிசையி னுறுகட லலையாலே;
தறுகண் ரதிபதி மதனன் விடுகொடு
சரமி லெளியெனு மழியாதே-
தருண மணிபொழி லருணை நகருறை
சயில மிசையினில் வாவேணும்;
முறுகு திரிபுர மறுகு கனலெழ
முறுவ லுடையவர் குருநாதா-

---

* வாரணம்=கோழி. † இரவி=இராவி : வருத்தி.

முடிய கொடுமுடி யசுரர் பொடிபட
முடுகு மரகத மயில்வீரா;
குறவர் மடமக ளமுத கனதன
குவடு படுமொரு திருமார்பா-
கொடிய சுடரிலை தணையு மெழுகடல்
குதுக விடவல பெருமாளே. (கூஅ)

547.

உலையிலன லொத்த வுடலினனல் பற்றி
யுடுபதியை முட்டி யமுதூற-
லுருகிவர விட்ட பரமசுக முற்று
வுனதடியை நத்தி நினையாமற்;
சிலைநுதலி லிட்ட திலதமவிர் பொட்டு
திகழ்முகவர் முத்து நகையாலே-
சிலுகுவலை யிட்ட மயல்கவலை பட்டு
திருடனென வெட்கி யலைவேனை;
கலைகனக வட்ட திமிலைபறை கொட்ட
கனகமயில் விட்ட கதிர்வேலா-
கருதலரின் முட்டி கருகிவரு துட்ட
கதவமண ருற்ற சூலகாலா;
அலைகடலு டுத்த தலமதனில் வெற்றி
அருணைவளர் வெற்பி லுறைவோனே-
அசுரர்களை வெட்டி யமரர்சிறை விட்டு
அரசுநில யிட்ட பெருமாளே. (கூகூ)

548.

கடல்பரவு தரங்க மீதெழு திங்களாலே-
கருதிமிக மடந்தை மார்சொல்வ தந்தியாலே;
வடவனலை மூணிந்து வீசிய தென்றலாலே-
வயலருணையில் வஞ்சி போதக லங்கலாமோ;

இடமுமையை மணந்த நாதரி றைஞ்சுமம்மீரா-
எழுகிரிகள் பிளந்து வீழ னிந்தகோவே-
அடலசுரர் கலங்கி யோடமு தம்பிரானே. (சo)
அரிபிரம புரந்த ராதியர்

549.

கமலமுகப் பிறைதுதல்பொற் சிலையெனவச் சிரகணைநற்
கயலெனபொற் சுழலும்விழிக் குழல்கார்போல்-
கதிர்தரளொப் பியதசனக் கமுகுகளப் புயகழைபொற்
கரகமலத் துகிர்விரலிற் கிளிசேருங்;
குமரிதனத் திதலிமலைக் கிசலியிணைக் கலசமெனக்
குவிமுலைசற் றசையமணிக் கலணுட்-
கொடியிடைபட் டுடைநடைபொற் சரணமயிற் கெனமெனைக்
குனகிபொருட் பறிபவருக் குறவாமோ;
திமிலையுடுக் குடன்முரசப் பறைதிமிதித் திமிதிமெனட்
டிமிடிமிடிட் டிகுர்திமிதித் தொலிதாளம்-
செகணசெக் கணகதறத் திடுதிடெனக் கொடுமுடியெட்
டிகைசிலைபட் டுவரிபடச் சிலை*கோடித்;
துமிலவுடற் றசரர்முடிப் பொடிபடரத் தமுள்பெருகத்
தொகுதசைதொட் டலகையுணத் தொடும்வேலா-
துவனிதிணைப் புனமருவிக் குறமகளைக் களவுமயற்
சுகமொடணைத் தருணகிரிப் பெருமாளே. (சக)

550.

கமல மொட்டைக் கட்ட ழித்துக் குமிழியை
நிலகு லத்துப் பொற்கு டத்தைத் தமனிய
கலச வர்க்கத் தைத்த கர்த்துக் குலையற இளநீரைக்-
கறுவி வட்டைப் பிற்று ரத்திப் பொருதப
சயம்வி ளைத்துச் செப்ப டித்துக் குலவிய
கரிம ருப்பைப் புக்கொ டித்துத் திறல்மத †னபிஷேகம்;

---

* கோடி = கோட்டி: வளைத்து. † அபிஷேகம் = கிரீடம்.

அமலர் நெற்றிக் கட்ட ழற்குட் பொடிசெய்து
அதிக சக்ரப் புட்ப றக்கக் கொடுமையி
னடல்படைத்தச் சப்ப டுத்திச் சபதமொ டிருதாளம்-
அறைதல் கற்பித் துப்பொ ருப்பைப் பரவிய
சிறக றுப்பித் துக்க திர்த்துப் புடைபடு
மபிந வச்சித் ரத்த னத்துத் திருடிக ளுறவாமோ ;
தமர மிக்குத் திக்க திர்க்கப் பலபறை
தொகுதொ குக்குத் தொத்தொ குக்குத் தொகுதொகு
தரிகி டத்தத் தத்த ரிக்கத் தரிகிட எனவோதிச்-
* சவடு றப்பக் கப்ப ழொத்திப் புகையெழ
விழிக ளுட்செக் கச்சி வத்துக் குறளிகள்
தசைகள் பட்சித் துக்†க ளித்துக் கழுதொடு கழுகாட ;
அமலை யுற்றுக் கொக்க ரித்துப் படுகள
அசுர ரத்தத் திற்கு ளித்துத் திமியென
அடிந டித்திட் டிட்டி டித்துப் பொருதிடு மயிலோனே-
அழகு மிக்கச் சித்ர பச்சைப் புரவியி
னுலவு மெய்ப்ரத் யகூ நற்சற் குருபர
அருணை யிற்சித் தித்தெ னக்குத் தெளிவருள்
பெருமாளே. (சஉ)

551.

கரிமுகக் கடகளிற் றதிககற் பகமதக்
கஜமுகத் தவுணனைக் கடியானை-
கடலையெட் பயறுநற் கதலியிற் கனிபலக்
கனிவயிற் றினிலடக் கியவேழம் ;
அரிமுகத் தினனெதிர்த் திடுகளத் தினின்மிகுத்
தமர்புரிக் கணபதிக் கிளையோனே-
அயிலெடுத் தசுரர்வெற் பலவுறப் பொருதுவெற்
றியைமிகுத் தறுமுகக் குமரேசா ;

* சவடு உற பக்க பழு ஒத்தி=பக்கத்துப் பழுவெலும்புகள் நெரிய மூடக்கிய கைகளை ஒத்தித் துணங்கைக்கூத் தாடி.

† களித்து=களிக்க.

கரிமிகுக் கிளைகளைப் பரியெனக் *கடிவளக்
கையில்பிடித் தெதிர்நடத் திடுமீசன்-
நடனமிப் படியிடத் தினுமிசைத் தரையினிற்
கரியுரித் தணிபவற் கொருசேயே ;
†துரிபெறச் சரிபொழிற் கனவயற் கழகுளத்
‡துரியமெய்த் தரளமொய்த் திடவீறிச்-
சுரர்துதித் திடமிகுத் தியல்தழைத் தருணையிற்
சுடரயிற் சரவணப் பெருமாளே. (சஉ)

552.

கருநி றஞ்சிறந் தகல்வன புகல்வன
மதன தந்திரங் கடியன கொடியன
கனக குண்டலம் பொருவன வருவன §பரிதாவும்-
கடலு டன்படர்ந் தடர்வன தொடர்வன
விளையு நஞ்சளந் தொளிர்வன ||பிளிர்வன
கணைய நின்றுநின் றெதிர்வன முதிர்வன
இளையோர்முன்;
¶செருவை மூண்டகஞ் சிறுவன வுறுவன
களவு வஞ்சகஞ் சுழல்வன வுழல்வன
தெனன தெந்தனந் தெனதென தெனதென எனநாதம்-
தெரிசு ரும்பைவென் றிடுவன அடுவன
மருள்செய் கண்கள்கொண் டணைவர்த முயிரது
திருகு கின்றமங் கையர்வச மழிதலை யொழிவேனே ;
மருவு தண்டைகிண் கிணிபரி புரமிவை
கலக லன்கலின் கலினென இருசரண்
மலர்கள் நொந்துநொந் தடியிட வடிவழு மிகவேரும்-

---

* கடிவளம் = கடிவாளம். †துரி = (காய்கனிகள் ஆகிய) சுமை.
‡துரிய மெய்த் தரளம் = தூய்மையான முத்துக்கள்.
§ பரி = வடவாமுகாக்கினி.
|| பிளிர்வன = கொப்புளிப்பன. ¶ செருவை மூண்டு அகம் சிறுவன = போர் மூண்டு அகங் கொண்டு சீறுவன.

வலிய சிங்கமுங் கரடியு முழுவையு
முறைசெ ழும்புனந் தினைவிளை யிதண்மிசை
மறவர் தங்கள்பெண் கொடிதனை யொருதிரு வளநாடி;

அருகு சென்றடைந் தவள்சிறு பதயுக
சதத ளம்பணிர் ததிவித கலவியு
ளறம ருண்டுநெஞ் சவளுடன் மகிழ்வுட னணைவோனே-

அமரர் சங்கமுங் கூடிபுக ழொடியினில்
நிருதர் சங்கமும் பொடிபட அமர்செய்து
அருளை வந்துதென் திசைதனி லுறைதரு
பெருமாளே. (சச)

553.

காணுத தூர நீணுத வாரி
காதார வாரம தண்பிணலே-

காலாளும் வேளும் ஆலால நாதர்
காலால் நிலாவு*மூ னிந்து†பூமேல்;

நாணன தோகை நூலாடை சோர
நாடோர்க ளேசஅ ழிந்துதானே-

நாணப வாத மேலாக ‡ஆக
நாடோறும் வாடிம யங்கலாமோ;

சோணைச லேச பூணுர நீடு
தோளாறு மாறும்வி ளங்குநாதா-

தோலாத வீர வேலால டாத
சூராளன் மாளவெ குண்டகோவே;

சேணுடர் லோகம் வாழ்மாதி யாண
தீராத காதல்சி றந்தமார்பா-

தேவாதி கூடு மூவாதி மூவர்
தேவாதி தேவர்கள் தம்பிரானே. (சஞ)

---

* முனிந்து=முனிய. † பூ=பூமி. ‡ ஆகம்.

554.

காரா டக்குழ லாலா லக்கணை
கண்சள் சுழன்றிட வேமு கங்களி
லூலா பச்சிலை யாலே *மெற்புசி
மஞ்சள் கலந்தணி வாளி கொந்தள
காதா டக்கலன் மேலா டக்குடி
யின்ப ரசங்குட மார்ப ளிங்கொளி கொங்கைமாதர்-

காசா சைச்செய லாலே சொக்கிடு
விஞ்சையர் கொஞ்சிடு வாரி ளங்குயில்
போலே நற்றெரு வூடா டித்†துயல்
தொங்கல் நெகிழ்ந்திடை யேது வண்டிட
கால்தா விச்சதி யோடே சித்திர
மென்ப நடம்புரி வாரு டன்செயல் மிஞ்சலாகிச்;

சீரா டிச்சில நாள்போய் மெய்த்திரை
வந்து கலந்துயி ரோட வங்கமொ
டூடா டிப்பல நோயோ டுத்தடி
கொண்டு குரங்கென வேக டந்துசொல்
சீயோ டிக்கிடை பாயோ டுக்கிய
டங்கி யழிந்துயி ரோடு ளைஞ்சொளி யுங்கண்மாறிச்-

சேரா மற்‡பொறி கேளா மற்செவி
துன்பமொ டின்பமு மேம றந்துபின்
ஊரார் சுற்றமு மாதோர் மக்களு
மண்டியு மண்டையு டேகு விந்திது
சீசீ சிச்சிசி போகா நற்சனி
யன்கட வென்றிட வேகி டந்துடல் மங்குவேளை;

மாரோன் மூப்புர நீரு யுற்றிட
அங்கி யுமிழ்ந்திடு வோரி பம்புலி

---

* மெற் புசி = மேல் பூசி.† துயல் = அசைகின்ற.
‡ பொறி = அறிவு.

தோல்*சி யத்தொடை †யேகா சர்ச்சடை
கங்கை யிளம்பிறை யார ணிந்தவர்
மாடே றிக்கட லாலா லத்தையு
முண்டவ ரெந்தை‡சி வாது பங்குறை யென்றன்மாதா-

மாலோ னுக்கிளை யாள்மா பத்தினி
யம்பிகை சங்கரி மோக சுந்தரி
§வேதா மக்கலை ரூபாள் மூக்கணி
ரம்பிய கொங்கையி லுள்ப யந்தருள்
மாஞா னக்கும ராதோ கைப்பரி
யின்பத வண்குரு வே||யெ னஞ்சுரர் தொண்டுபாடச்;

சூரார் மக்கிட மாமே ருக்கிட
அங்கட லெண்கிரி யோடி பங்கொடு
¶தீபே ழுற்றிட பாதா ளத்துறை
நஞ்சர வின்பண மாயி ரங்கெட
சூழ்வா ளக்கிரி தூளா கிப்பொடி
விண்கணி றைந்திட வேக டம்புரி கின்றவேலா-

---

* சிவபெருமான் சிங்கத்தின் தோலையும், தலையையும் அணிந்தவர் என்பதற்குத் "தரியாவுள மால்கொடு தன்னிகழு, மரியோடு கைம மாவை யடற்புலியை, யுரியாமிசை போர்வை யுடுக்கை யெனப், பரியாவர னுற்றது பார்த்திலையோ" என்னுங் கந்த புராணம்-காமதகனப்படலம் கூஉ-ஆம் பாடலையும், "புலிபுலி யதளுடுக்கும்" என்னும் ஸ்ரீகாளத்திப் புராணம்-தென்கைலாயச் சருக்கம் கூஅ-ஆம் பாடலில் "வெந்திறற் சீயஞ் சீயத் தலைபுனை தருந்தென் வெள்ளிச் சயிலத்தி னிறக்கின் மன்னே" என்பதையும், "ஏனையோர்க் கிறைமை யின்மை காட்டி, மூடங்களை மடங்கள் முகனடுக் கோத்த, வெண்டலை மாலை கண்டவர் வெருவத், தண்டாது கிடக்குந் திண்டோட் பொருப்பன்" என்னும் இவ்விடலிங்க அகவலையும் நோக்குக.

† ஏகாசம்=போர்வை, ஏகாசர்=போர்வையை யுடையவர்.

‡ சிவ அநுபங்கு உறை = சிவபெருமானோடு கூட (அவர் திருமேனியிற்) பாதியாக உறையும். § வேதாம=வேதாகம.

|| எனஞ்சுரர்=என அம் சுரர். ¶ தீபு ஏழ்=ஏழு தீவு

சோர்வே தத்தலை மேலா டிச்சுக
பங்கய செங்கர மோட கம்பெற
வாகா னக்குற மாதோ டற்புத
*மங்குல ணங்குட னேம கிழ்ந்துகல்
†தூணே டிச்சுட ராகா சத்தைய
ணைந்துவி ளங்கரு ணாச லந்திகழ் தம்பிரானே. (சசு)

555.

கார்மரு வும்பெருகு சோலைமரு வுங்கொடிய
‡காகளம டங்கவுழு ழுங்கு மதனுலே-
காலடர வம்பமளி மேலடர வந்துபொரு
காமன்விடு விஞ்சுகணை அஞ்சு மலராலே;
ஊருமூல கும்பழைய பேருகம்வி ளைந்ததென
ஓரிரவு வந்தெனது சிந்தை யழியாதே-
ஊடியிரு கொங்கைமிசை கூடிவரி வண்டினமு
லாவியக டம்பமலர் தந்தருளுவாயே;
ஆருமர வும்பிறையு நீருமணி யுஞ்சடைய
ராதிபர வும்படிநி னைந்த குருநாதா-
ஆறுமுக முங்குரவு மேறுமயி லுங்குறவி
யாளுமுர முந்திருவும் அன்பு முடையோனே;
மேருமலை யும்பெரிய சூருமலை யுங்கரிய
வேலையலை யும்பகையும் அஞ்ச விடும்வேலா-
மேதினியி றைஞ்சுமரு ணாபுரிவி ளங்குதிரு
வீதியிலெ ழுந்தருளி நின்ற பெருமாளே.(சஎ)

556.

தீத விநோத மெச்சு சூரலாலே-
கீறு மையார் முடித்த குழலாலே;
நீதி யிலாத ழித்து முழலாதே-
நீமயி லேறி யுற்று வரவேணும்;

---

* மங்குல் அணங்கு = விண்ணுலகப் பெண் = தெய்வயானை.
† தூண் = சிவமாகிய அக்கினி ஸ்தம்பம்.
‡ காகளம் = (குயிலாகிய) எக்காளம்.

சூதமர் சூர ருட்க பொருசூரா-
சோண கீரியி லுற்ற குமரேசா ;
ஆதியர் காதை தாருச்சொ லருள்வோனே-
ஆனைமுகார் கனிட்ட பெருமாளே. (சுஅ)

557.

சூரவநறு மளகசுழல் கோதிக் காட்டியெ
குலவுமிரு கயல்கள்விழி மோதித் தாக்கியெ
குமுதமல ரொளிபவள வாயைக் காட்டியெ குழையாத-
குணமுறுக இனிதுபயில் கூறிக் காட்டியெ
சூலையிரு கலைநெகிழ வீசிக் காட்டியெ
*குடவியிடு மரிவையர்க ளாசைப் பாட்டிலெ
கொடியேன்யான் ;
பொருளிளமை கலைமனமு மேகப் போக்கிய
புலையனிவ னெனவுலக மேசப் போக்கென
பொறிவழியி லறிவழிய பூசைச் சேட்டைகள் பெருகாதே-
புதுமலர்கள் மருவுமிரு பாதத் தாற்றியெ
பொதுவகையி லருணைநிலை நீள்கர்த் தாத்தென
புகழடிமை தனையுனது பார்வைக் காத்திட நினையாதோ;
அரவமுட னறுகுமதி யார்†மத் தாக்கமு
மணியுமொரு சடைமவுலி நாதர்க் கேற்கவெ
அறிவரிய வொருபொரு ளோதத் தேற்றிய அறிவோனே-
அழகுசெறி குழலியர்கள் ‡வானத் தாட்டியர்
தருமமுது சரவணையில் வாவித் தேக்கிய
அறிவில வொருவுடல மாகித் தோறிய இளையோனே;
சுரருலவ அசுரர்கள மாளத் தூட்பட
துயவுமுட லயிலிலவிடு மாவுக் ராக்ரம
சுவறியெழு கடலுமுறை யாகக் கூப்பிட முனிவோனே-

---

* குடவியிடும் = வஞ்சிக்கும்.

† மத்த அக்கமும் = ஊமத்தையும் உருத்திராக்கமும்.

‡ வானத்தாட்டியர் = கார்த்திகை மாதர்கள்.

துடிமுழவு மறவரிட சேவற் காட்டினில்
துணைமலரி னணுகிநினை காவற் *காத்தணை
சுரியகுழல் குறமகளை வேளைக் காத்தணை பெருமாளே.()

558.

குழவியு மாய்மோக மோகித குமரனு மாய்வீடு காதலி
குலவனு மாய்நாடு காடொடு தடுமாறிக்-

குனிகொடு கூனீடு மாகிடு கிழவனு மாயாவி போய்விட
விறகுட னேதூளி யாவது †மறியாதாய்ப் ;

பழயச டாதார மேனிகழ் கழியுடல் காணு ‡நிராதர
பரிவிலி வா§ஞலை நாடொறு மடைமாறிப்-

பலபல வாம்யோக சாதக வுடல்கொடு மாயாத போதக
பதியழி யாவீடு போயினி யடைவேனை;

எழுகடல் தீமூள மேருவு மிடிபட வேதாவும் வேதமு
மிரவியும் || வாய்பாறி யோடிட மூதுசேடன்-

இருளறு பாதாள லோகமு மிமையமு நீருக வாள்கிரி
யிருபிள வாய்வீழ மாதிர மலைசாய ;

அழகிய மாபாக சாதன னமரரு மூர்பூத மாறுசெய்
அவுணர்த மாசேனை தூளெழ விளையாடி-

¶அமரினை மேவாத சூரரை அமர்செயும் வேலாயு தாவுயர்
அருணையில் வாழ்வாக மேவிய பெருமாளே. (நிம்)

---

*காத்தணை = காத்த அன்னை. †அறியா தாய் = அறிந்து தாவி.

‡ நிராதர பரிவு இலி வான் = நிராதார மாகிய தன்பமில்லாத ஆகாயத்தில்.

§ ஞாலை மடை மாறி = கழிந்துபோகும் நாலங்குலப் பிரமாண வாயுவைக் கழியாது திருப்பி.

|| வாய் பாறி = இடம்விட்டுப் பெயர்ந்து.

¶ அமரினை மேவாத = அமைதியைப் பொருந்தாத.

559

*கேதகைய பூமுடித்த மாதர்தம யாலிலுற்று
கேவலம தான அற்ப நினைவாலே-
கேள்வியதி லாதிருக்கு மூழ்வினையி னல்மிகுத்த
கேடுறுக வேநினைக்கும் வினையாலே;
வேதனையி லேமிகுத்த பாதகனு மாயவத்தில்
மேதினியெ லாமுழற்று மடியேனை-
வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
வீறுமயில் மீதிலுற்று வருவாயே;
நீதிநெறி யேயழித்த தாருகனை வோறுத்து
நீடுபுகழ் தேவரிற்கள் குடியேற-
நீடருளி னல்விடுத்த பாலகும ராசெழித்த
நீலநிற மால்தனக்கு மருகோனே;
சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
† சோபைவட கோபுரத்தி லுறைவோனே-
சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி
தோளின்மிசை வாளெடுத்த பெருமாளே. (நிக)

560.

கோடான மடவார்கள் முலைமீதே-
கூர்வேலை யினையான விழியூடே;
ஊடாடி யவரோடு முழலாதே-
ஊராக திகழ்பாத மருள்வாயே;
நீடாழி சுழல்தேசம் வலமாக-
நீடோடி மயில்மீது வருவோனே;
சூடான தொருசோதி மலைமேவு-
சோணாடு புகழ்தேவர் பெருமாளே. (நிஉ)

---

*கேதகைய பூ = தாழையின் பூ. †சோபை = அழகு : ஒளி.

561.

கோடுசெறி மத்த கத்தை வீசுபலி தத்த வொத்தி
கூறுசெய்த ழித்து ரித்து நடைமாணுர்-
கோளுலவு மூப்பு ரத்தை வாளெரிகொ ளுத்தி விட்ட
* கோபதுத லத்த ரத்தர் குருநாதர்;
நீடுகன கத்த லத்தை யூடுருவி மற்ற வெற்பு
நீறெழமி தித்த நித்த மனதாலே-
† நீபமலர் பத்தி மெத்த வோதுமவர் சித்த மெத்த
நீலமயில் தத்த விட்டு வரவேணும்;
ஆடலணி பொற்சி லம்பை வேடுவர்பு னக்கு றத்தி
ஆரமது மெத்து சித்ர முலைமீதே-
ஆதரவு பற்றி மெத்த மாமணிநி றைத்த வெற்றி
ஆறிருதி ருப்பு யத்தில் அணைவீரா;
தேடிமையொர் புத்தி மெத்தி நீடு றநி னைத்த பத்தி
சீருறவு ளத்தெ ரித்த சிவவேளே-
தேறருணை யிற்ற ரித்த சேண்முகடி டத்த டர்த்த
தேவர்சிறை வெட்டி விட்ட பெருமாளே. (நிஉ)

562.

சிலைநுதல் வைத்துச் சிறந்த குங்கும
திலதமு மிட்டுக் குளிர்ந்த பங்கய
திருமுக வட்டத் தமர்ந்த மென்குமிழ் தனிலேறிச்-
செழுமணி ரத்நத் திலங்கு பைங்குழை
தினைமுனி வற்றுச் சிவந்து நஞ்சுணி
செயலினை யொத்துத் தயங்கு வஞ்சக விழிசீறிப்;
புலவிமி குத்திட் டிருந்த வஞ்சியர்
பதமல ருக்குட் பணிந்த னிந்தனி
புரிவுசை கைக்குட் கலின்க லென்றிட அநுராகம்-

---

* கோப நுதல்=கோபங் குறித்த.

† நீப மலர் பத்தி=நீப மலர் சூடிய புய பந்திகளின் சிறப்பை

புகழ்நல மெத்தப் புரிந்து கொங்கையி
லுருகிய ஊனத்துப் பெரும்பரி யங்கொடு
புணரினும் நிற்பொற் பதங்கள் நெஞ்சினுள் மறவேனே;

கலைமதி வைத்துப் புனைந்து செஞ்சடை
மலைமகள் பக்கத் தமர்ந்தி ருந்திட
கணகண கட்கட் கணின்க ணென்றிட நடமாடுங்-

கருணைய னுற்றத் தியம்ப கந்தரு
முருகப னத்திற் றிரிந்த மென்கொடி
கனதன வெற்பிற் கலந்த ணைந்தருள் புயவீரா;

அலைகடல் புக்குப் பொரும்பெ ரும்படை
யவுணரை வெட்டிக் களைந்து வென்றுயர்
அமரர்தொ ழப்பொற் சதங்கை கொஞ்சிட வருவோனே-

அடியவ ரச்சத் தழுங்கி டுந்துயர்
தனையொழி வித்துப் ப்ரியங்கள் தந்திடும்
அருணகி ரிக்குட் சிறந்த மர்ந்தருள் பெருமாளே. (இசை)

563.

சிவமா தடனே அதுபோ கமதாய்
சிவனா னமுதே பசியாறித்-
திகழ்வோ டிருவோ ரொருரு பமதாய்
திகைலோ கமெலா மதுபோகி;

இவனே யெனமா லயனே டமரோ
ரிலையோ னெனவே மறையோத-
இறையோ னிடமாய் விளையா டுகவே
யியல்வே லுடன்*மா அருள்வாயே;

†தவலோ கமெலா முறையோ வெனவே
தழல்வேல் கொடுபோ யசுராரைத்-
தலைதூள் படவஞ் சுடல்தூள் படமா
தவம்வாழ் வுறவே விடுவோனே;

---

* மா = மயிலாகிய குதிரை. † தவ = மிகவும்.

கவர்பூ வடிவாள் குறமா துடன்மால்
கடனு மெனவே அணைமார்பா-
கடையேன் மிடிதூள் படநோய் விடவே
*கனல்மால் வரைசேர் பெருமாளே. (நிநி)

564.

சின †மூடுவல் நரிகழுகு டன்பருந் தின்கணங்
கொடிகெருடன் அலகைபுழு வுண்டுகண் டின்புறுஞ்
செடமளறு மலசல்மொ டென்புதுன் றுங்கலந்
துன்பமேவு-
சனனவலி மரணவலி ரண்டுமுன் பின்தொடர்ந்
தணுகுமூட லநகவடி விங்கடைந் தம்பரஞ்
சிறுமணலி யளவிடினு மங்குயர்ந் திங்குலந்
தொன்றுநாயேன் ;

கனகபுவி நிழல்மருவி யன்புறுந் தொண்டர்பங்
குறுகஇனி யருள்கிருபை வந்து‡தந் தென்றுமுன் •
கடனெனது உடலுயிரு முன்பரந் தொண்டுகொண்
டன்பரோடே-
கலவிநல மருவிவடி வஞ்சிறந் துன்பதம்
புனர்கரண மயில்புறமொ டின்புகொண் டுண்டருங்
கனகமலர் பொழியுன தன்புகந் தின்றுமுன்
சிந்தியாதோ ;

தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தகுகுகுகு குகுகுகுகு டங்குடங் குந்தடந்
தவில்முரசு பறைதிமிலி டிங்குடிங் குந்தடர்ந் தண்டர்பேரி-
தடுடுடுடு டுடுடுடு டுண்டுடுண் டுண்டுடுண்
டிமிடிமிட டகுர்திகுகு சங்குவெண் கொம்புதின்
கடையுகமொ டொலியகட லஞ்சவஞ் சன்குலஞ்
சிந்திமாளச்;

---

* கனல் மால் வரை = திருவண்ணமலை.
†மூடுவல் = நாய். ‡ தந்து = தர.

சினமுடுகி அயிலருளி யும்பரந் தம்பரந்
திகையுரகர் புவியுளது மந்தரம் பங்கயன்
செகமுழுது மகிழஅரி அம்புயன் தொண்டுகொண்
டஞ்சல்பாடத்-
திருமுறுவ லருளியென தெந்தையின் பங்குறுங்
கவுரிமன முருகவொரு கங்கைகண் டன்புறுந்
திருவருண கிரிமருவு சங்கரன் கும்பிடுந்
தம்பிரானே. (நிசு)

565.

சுக்கி லச்சுரொணி தத்தி லுற்றுநளி
னத்தி லப்புவென ரத்த முற்றிசுக
சுக்கி லக்குளிகை யொத்து கெர்ப்பகுகை வந்துகோலத்-
தொப்பை யிட்டவயி றிற்பெ ருத்துமிக
வட்ட மிட்டுடல வெப்ப முற்றுமதி
சொற்ற பத்தின்மறி யகூ ரத்தினுடை விஞ்சையாலே ;
கூகை நற்புவியி லுற்ற ரற்றிமூலை
யைக்கொ டுக்கவமூர் தைப்பு சித்து*வளர்
கைக்க சத்தியொடு ழைத்து தத்துநடை அந்தமேவிக்-
கற்று வெற்றறிவு பெற்று †தொக்கைமயி
லொத்த மக்கள்மய லிற்கு ளித்துநெறி
கட்டி யிப்படிபி றப்பி லுற்றுடல மங்குவேளே ;
தெற்க ரக்கர்பவி ஷைக்கு லைத்து ‡விட
ணற்கு நத்தரச ளித்து முத்திகொடு
சித்தி ரத்திருவு ரத்த சக்கிரிதன் மருகோனே-
செக்க ரத்தின்மலை மூப்பு ரத்திலெரி
யிட்ட §சத்திசிவ னுற்று நத்தமிகு
சித்த னேத்தையும்வி ழித்த சத்தியுமை தந்தபாலா ;

---

* வளர்கைக்கு அசத்தியொடு எனப்பிரிக்க.
† தொக்கை = தோகை. ‡ விடணற்கு = விபீஷணற்கு.
§ சத்தி = வன்மை.

தர்க்க மிட்டசுர சைக்கெ லித்துமலை
யுக்கெ முக்கடல்கொ ளுத்தி அட்டதிசை
தட்ட முட்டையடை யக்கொ டிப்புகையின் மண்டும்வேலா-

தத்தை வித்ருமநி றத்தி முத்தணிகு
றத்தி கற்பகவ னத்தி சித்தமவை
தக்கு நத்தஅரு ணாக்கி ரிக்குள்மகிழ் தம்பிரானே. (நிஎ)

566.

செஞ்சொற் பண்பெற் றிடுகுட மாமுலை
கும்பத் தந்திக் குவடென வாலிய
தெந்தப் பந்தித் தரளம தாமென விடராவி-

நிந்திக் கந்தித் திடுகலை யாமுன
தங்கத் தம்பொற் பெதுவென வோதுவ
*திண்டுப் புந்தித் திடுகனி தானுமு னிதழாமோ ;

மஞ்சொக் குங்கொத் தளகமெ னுமிடை
கஞ்சத் தின்புற் றிடுதிரு வேயிள
வஞ்சிக் கொம்பொப் பெனுமயி லேயென முறையேய-

வந்தித் திந்தப் படிமட வாரொடு
கொஞ்சிக் கெஞ்சித் தினமவர் தாடொழு
மந்தப் புந்திக்†கசடனெ னாளுன தடிசேர்வேன் ;

நஞ்சைக் கண்டத் திடுபவ ‡ ராரொடு
திங்கட் பிஞ்சக் காவணி வேணியர்
நம்பர்ச் செம்பொற் பெயரசு ரேசனை யுகிராலே-

நந்தக் கொந்திச் சொரிகுடல் சோர்வர
§நந்திக் கம்பத் தெழுநர கேசரி
நஞ்சக் குண்டைக் கொருவழி யேதென மிகநாடி ;

---

* திண்டுப்புந் தித்திடு கனிதானும்=திண் தப்பும் தித்தித் திடு கனிதானும்; தப்பு=பவளம்.

† கசடனெனாள்=கசடன் எந் நாள். ‡ ஆர்=ஆத்தி.

§ நந்தி= தோன்றி.

வெஞ்சச் சிம்புட் சொருபம தானவர்
பங்கிற் பெண்கற் புடையபெ ணுயகி
விந்தைச் செங்கைப் பொலிசுத வேடுவர் புனமீதே-

வெண்டித் தங்கித் திரிகிழ வாவதி
நுங்கத் துங்கக் கிரியரு ணுபுரி
வெங்கட் சிங்கத் தடிமயி லேறிய பெருமாளே. (நுஅ)

567.

தமர குரங்களுங் காரி ருட்பி ழம்பு
மெழுகிய அங்கமும் பார்வை யிற்கொ ளுந்து
தழலுயிழ் கண்களுங் காள மொத்த கொம்பு
மூளசதக் கடமாமேல்-

தனிவரு மந்தகன் பாசம் விட்டெ றிந்து
அடவரு மென்றுசிந் தாகு லத்தி ருந்து
தமரழ மைந்தருஞ் சோக முற்றி ரங்க
மரணபக் குவமாநாள் ;

கமல முகங்களுங் கோம ளத்தி லங்கு
நகையு நெடுங்கணுங் காதி னிற்று லங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க
தமுமடற் சுடர்வேலுங்-

கடிதுல கெங்கணுங் * தாடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை
கழலொலி தண்டையங் காலு மொக்க வந்து
வரமெனக் கருள்கூர்வாய் ;

இமகிரி வந்தபொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலம்பெறும் பூவை சத்தி யம்பை
யிளமுலை யின்செழும் பால்கு டித்தி லங்கு
மியல்நிமிர்த் திடுவோனே-

---

* தாடி = தாவடி : பிரயாணம்.

இறைவ ரிறைஞ்சகின் முக மப்ர சங்க
முரைசெய் திடும்ப்ரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூரு டற்பி ளந்த
அயிலுடைக் கதிர்வேலா ;

அமண ரடங்கலுங் கூட லிற்றி ரண்டு
கழுவி லுதைத்துதைத் தேற விட்டு நின்ற
அபிநவ துங்கசங் காந திக்கு மைந்த
அடியவர்க் கெளியோனே-

அமரர் வணங்குகந் தாகு றத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொ
லருணை யெடுத்தடங் கோபு ரத்த மர்ந்த
அறுமுகப் பெருமாளே. (நிகூ)

568.

தனனுதன தனனுதன தாந்தன தாந்தனதந்
தனனுதன தனனுதன தாந்தன தாந்தனதந்
தனனுதன தனனுதன தாந்தன தாந்தன்தந் தனதான.

தமிழோதிய குயிலோமயி லாண்டலை யாம்புறவங்
கிளிகாடையி †ணணிலோளி யாங்குரல் வாய்ந்ததிசெந்
தகுமாமிட றெலியாரித ழாஞ்சுளை தேன்கனியின்
சுவைசேருந்-

தனபாரமு மலையாமென வோங்கிட மாம்‡பொறிசிந்
திடவேல்விழி நுதலோசிலை வான்பிறை மாந்துளிரின்
சரிசார்குழ லிருளாநகை யோங்கிய வான்கதிரின்
சுடர்பாயக்;

குமிழ்நாசியின் முகமோமதி யாங்குளிர் சேங்கமலஞ்
சரிதோடிணை செவியாடுச லாங்கள பூங்கமுகங்
கொடிநூலிடை யுடையாரன மாம்ப்ரியர் மாண்புரிமின்
கொடிமாதர்-

---

* அணில்=அன்றில். † பொறி சிந்திட=தேமல் சிதறிட.

குணமோடம ளியினுடினு மோங்கிய பூங்கமலஞ்
சரணூபுர குரலோசையு மேந்திடு மாண்டலையின்
கொடியோடெழு தரிதாம்வடி வோங்கிய பாங்கையுமன்
தகையேனே;

திமிதோதிமி திமிதோதிமி தாங்கண தீங்கணதொந்
தகுதோதகு தகுதோதகு டோங்குட தீங்கடதொந்
திகுடோடிமி டிமிடோடிமி டாங்குட மூந்தகமென்
றியல்பேரி-

திசைமூடுக கடலேழ்பொடி யாம்படி யோங்கியவெங்
கரிதேர்பரி யசுரார்களை மாண்டிட நீண்டாவின்
சிரமீள்பட குவடோதுகள் வான்பெற வாங்கியவண்
கதிர்வேலா;

கமழ்மா*விதழ் சடையாரடி யேன்துயர் தீர்ந்திடவெண்
தழல்†மாபொடி யருள்வோரடல் மான்துடி தாங்கியவண்
கார்மாடரு ளுமையாளெமை யீன்றவ ளீன்றருள்மென்
குரவோனே-

கடையேனிரு வினைநோய்மல மாண்டிட தீண்டியவெண்
சுகமோகினி வளிகாயகி பாங்கனெ னும்பகர்மின்
கலைநூலுடைமுருகா‡வழலோங்கிய வோங்கலின்வண்
பெருமாளே. (சுo)

569.

தூலையை மழித்துச் சிவந்த துணியை யரைக்குப் புனைந்து
சடையை வளர்த்துப் புரிந்து புலியாடை-

சதிரொடு வப்பப் புனைந்து விரகொடு கற்கப் புகுந்து
தவமொரு சத்தத் தறிந்து திருநீறு;

கலையை மிகுத்திட் டணிந்து கரண வலைக்குட் புகுந்து
கதறு நிலைக்கைக் கமர்ந்த எழிலோடே-

கனக மியற்றித் திரிந்து துவரு மெனைச்சற் றறிந்து
கவலை யொழித்தற் கிரங்கி யருள்வாயே;

---

* இதழ்=இதழி : கொன்றை. † மா பொடி=திரு நீறு.
‡ அழ லோங்கிய ஒங்கல்=திருவண்ணாமலை.

அலைகட லிற்கொக் கரிந்து மருவரை யைப்பொட் டெறிந்து
மமருல கத்திற் புகுந்து முயராளை-
அருளொடு கைப்பற்றி வந்து மருண கிரிப்புக் கிருந்து
மறிவுள பத்தர்க் கிரங்கு மிகோயோனே ;
மலையை வளைத்துப் பறந்து மருவு புரத்தைச் சிவந்து
வறிது நகைத்திட் டிருந்த சிவனுர்தம்-
மதலை புனத்திற் புகுந்து நரவடி வுற்றுத் திரிந்து
மறமயி லேச்சுற் றிவந்த பெருமாளே. (சுக)

570.

திருட்டு வாணிப விக்ரம துட்டிகள்
மதத்த ரூபிகள் துர்ச்சன பொட்டிகள்
செகத்து நீலிகள் கெட்டப ரத்தைகள் மிகநாணுர்-
கிலேக்கு நேர்புரு வப்பெரு நெற்றிக
ளெடுப்பு மார்பிக ளெச்சிலு தட்டிகள்
சிரித்து மாதுடர் சித்தமு ருக்கிகள் விழியாலே ;
வெருட்டி மேல்விழு பப்பற மட்டைகள்
மிகுத்த பாவிகள் வட்டமு கத்தினை
மினுக்கி யோலைகள் பித்தளை யிற்பணி மிகரீறல்-
விளக்கி யேகுழை யிட்டபு ரட்டிகள்
தமக்கு மால்கொடு நிற்கும ருட்டனை
விடுத்து நாளொரு மித்திரு பொற்கழல் பணிவேனே ;
தரித்த தோகண தக்கண செக்கண
குகுக்கு கூகுகு குக்குகு குக்குகு
தகுத்த தீதிகு தக்குகு திக்குகு எனதாளந்-
தடக்கை தாளமு மிட்டியல் மத்தள
மிடக்கை தாளமு மொக்கர டித்தொளி
தரித்த கூளிகள் தத்திமி தித்தென கணபூதம் ;
அருக்க னொளி யிற்ப்ரபை யுற்றிடு
மிரத்ந மாமுடி யைக்கொடு கக்கழ
லடக்கை யாடிநி ணத்தையெ டுத்துண அறவேதான்-

அரக்கர் சேனைகள் பட்டுவி ழச்செறி
திருக்கை வேல்தனை விட்டரு ளிப்பொரும்
அருட்கு காவுந னைப்பதி யுற்றருள் பெருமாளே. (சுஉ)

571.

தோதென வாச முற்ற கீதவி நோத மெச்சு
தேனளி சூழ மொய்த்த மலராலே-

சீறும ராவெ யிற்றி லூறிய காளம் விட்ட
சித நிலாவெ றிக்கு மனலாலே ;

போதனை நீதி யற்ற வேதனை வாளி தொட்ட
போர்மத ராஜ னுக்கு மழியாதே-

போக மெலாநி றைத்து மோக விடாய்மி குத்த
பூவையை நீய ணைக்க வரவேணும் ;

மாதினை வேணி வைத்த நாதனு மோது பச்சை
மாயனு மாத ரிக்கு மயில்வீரா-

வானவர் சேனை முற்றும் வாழம ராப திக்குள்
வாரண மான தத்தை மணவாளா ;

மேதினி யோர்த ழைக்க வேயரு ணாச லத்து
வீதியின் மேவி நிற்கு முருகோனே-

மேருவை நீறெ ழுப்பி *நான்முக னர்ப தத்தில்
வேலடை யாள மிட்ட பெருமாளே. (சுங)

572.

தோத கப்பெ ரும்ப யோத ரத்தி யங்கு
தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே-

சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று
சூழ்பி ணிக்க ணங்க ளணுகாதே ;

பாத கச்ச மன்தன் மேதி யிற்பு குந்து
பாசம் விட்டெ றிந்து பிடியாதே-

* "நான்முகன் மார்பகத்தில்" என்றும் பாடம்.

*பாவ லற்கி ரங்கி நாவ லர்க்கி சைந்த
பாடல் மிக்க செஞ்சொல் தரவேணும் ;
வேத மிக்க விந்து நாத மெய்க்க டம்ப
வீர பத்ர கந்த மூருகோனே-
மேரு வைப்பி ளந்து சூர னீக்க டிந்து
வேலை யிற்றெ ரிந்த கதிர்வேலா ;
கோதை பொற்கு றிஞ்சி மாது கச்ச ணிந்த
கோம ளக்கு ரும்பை புணர்வோனே-
†கோல முற்றி லங்கு சோண வெற்பு யர்ந்த
கோபு ரத்த மர்ந்த பெருமாளே. (சுச)

573.

பாண மலரது தைக்கும் படியாலே-
பாவி யிளமதி கக்குங் கனலாலே ;
நாண மழிய வுரைக்குங் குயிலாலே-
நானு மயலி லிளைக்குந் தரமோதான் ;
சேணி லரிவை யணைக்குந் திருமார்பா-
தேவர் மகுட மணக்குங் கழல்வீரா ;
காண அருணையில் நிற்குங் கதிர்வேலா-
காலன் முதுகை விரிக்கும் பெருமாளே. (சுநி)

574.

பாலாய் நூலாய் தேனுய் ‡நீளாய்
பாகாய் வாய்சொற் கொடியார்தாம்-
§பாடா வாடா வேடா வாலே
பாடா யீடற் றிடைபீறுந் ;
தோலா லேகா லாலே யூனு
லேசூழ் பாசக் குடில்மாசு-

* பாவலன் = நக்கீரதேவர். † "கோலமுற் றுயர்ந்த சோலை வேற்பிலங்கு" என்னும் பாடம். ‡ நீள் ஆய் பாகாய் = நீண்டு வருகின்ற ஆய்ந்த பாகாய். § பாடா ஆடா வேள் தாவாலே = பாடி ஆடி வேட்கின்ற வலிமையினாலே.

தோயா மாயா வோயா நோயால்
சோர்வாய் மாளக் கடவேனே;
ஞாலா மேலா வேதா போதா
நாதா *சோதிக் கிரியோனே-
ஞான சாரா வாணுள் கோனே
நானு வேதப் பொருளோனே;
வேலா பாலா † சீலா காரா
வேளே வேடக் கொடிகோவே-
வீரா தாரா ஆறு தாரா
வீரா வீரப் பெருமாளே. (சுசு)

575.

புணர்முலை மடந்தை மாதர் வலையினி லுழன்ற நேக
பொறியுட லிறந்து போன தளவேதுன்-
புகழ்மறை யறிந்து கூறு மினியென தகம்பொ ருகி
பொருளென நினைந்து நாயெ னிடர்தீர;
மணமுளர் மடந்தை மாரொ டொளிர்திரு முகங்க ளாறு
மணி ‡ கிரி யிடங்கொள் பாது வெயிலாசை-
வரிபர வநந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து போத
மயில் மிசை மகிழ்ந்து நாடி வரவேணும்;
பணைமுலை யரம்பை மார்கள் குயில்கிளி யினங்கள் போல
பரிவுகொ டுகந்து வேத மதுகூறப்-
பறைமுர சுகந்த பேரி முறை முறை ததும்ப நீசர்
படைகட லிறந்து போக விடும்வேலா;
அணிசுக நரம்பு வீணை குயில்புற வினங்கள் போல
அமளியில் களங்க ளோசை வளர்மாது-
அரிமகள் மணங்கொ டேகி யெனதிட ரெரிந்து போக
அருணையின் விலங்கல் மேவு பெருமாளே. (சுஎ)

---

* "சேரிக் கிரி" என்றும் பாடம்; சேரிக்கிரி=தென்சேரிகிரி.
† சீல ஆகாரா=பரிசுத்த வடிவனே. ‡ கிரியிடம்=கிரீடம்.

576.

புலைய ஞன மாவீனன் விஞையி லேகு மாபாதன்
பொறையி லாத கோபீகன் மூழுமூடன்-
புகழி லாத தாமீகன் அறிவி லாத காபோதி
பொறிக ளோடு போய்வீழு மதிசூதன்;
நிலையி லாத கோமாளி கொடையி லாத ஊதாரி
நெறியி லாத வேமாளி குலபாதன்-
நினது தாளை நாடோறு மனதி லாசை வீடாமல்
நினையு மாறு நீமேவி யருள்வாயே;
சிலையில் வாளி தானெவி யெதிரி ராவ ணுர்தோள்கள்
சிதையு மாறு போராடி யொருசிதை-
சிறையி லாம லேகூடி புவனி மீதி லேவீறு
திறமி யான மாமாயன் மருகோனே;
அலைய மேரு மாசூரர் பொடிய தாக வேலேவி
அமர தாடி யேதோகை மயிலேறி-
அதிக தேவ ரேசூழ உலக மீதி லேகூறும்
அருணை மீதி லேமேவு பெருமாளே. (சுஅ)

577.

*போககற் பக்கடவுட் பூருகத் தைப்புயலைப்
பாரியைப் பொற்குவையுச் சிப்பொ ழுதிலீயும்-
போதுடைப் புத்திரரைப் போலவொப் பிட்டுலகத்
தோரைமெச் சிப்பிரியப் பட்டு மிடிபோகத்;
த்யாகமெத் தத்தருதற் காசுநற் சித்திரவித்
தாரமுட் பட்டதிருட் டுக்க விகள்பாடித்-
தேடியிட் டப்படுபொற் பாவையர்க் கிட்டவர்கட்
சேல்வலைப் பட்டடிமைப் பட்டு விடலாமோ;

---

* போக கற்ப கடவுட் பூருகம் = இஷ்டபோகத்தை யளிக்கும் கற்பகமாகிய தெய்வவிருகூம்.

ஆகமப் பத்தருமற் றூரணைச் சுத்தருமூற்
றூதரிக் கைக்கருணைத் துப்பு மதில்சூழும்-
ஆடகச் சித்ரமணிக் கோபுரத் துத்தரதிக்
காகவெற் றிக்கலபக் கற்கி யமர்வோனே;
தோகையைப் பெற்ற இடப் பாக *சொற் றைப்பகழித்
† தூணிமூட் டச்சுவறத் திக்கி லெழுபாரச்-
சோதிவெற் பெட்டுமுதிர்த் தூளிதப் பட்டமிழச்
சூரனைப் பட்டுருவத் தொட்ட பெருமாளே.(சுகூ)

578.

மானை விடத்தைதத் தடத்தி னிற்கயல்
மீனை நிரப்பிக் குனித்து விட்டனை
வாளி யைவட்டச் சமுத்தி ரத்தினை வடிவேலை-
வாலை ‡ வனத் துற் பலத்தி னைச் §செல
மீனை விழிக்கொப் பெனப்பி டித்தவர்
மாய வலைப்பட் டிலைத்||தூடக்¶குழல் மணமாறும்;
ஊன விடத்தைச் சடக்கெ னக்கொழு
நூறு முபத்தக் கருத்த டத்தினை
பூதி பிணத்தைக் குணத்ர யத்தொடு தடுமாறும்-
ஊசலி நித்தத் த்வமற்ற செத்தையு
பாதியை யொப்பித் துனிப்ப வத்தற
வோகை செலுத்திப் ப்ரமிக்கு மிப்பாமை தெளியாதோ;
சானகி கற்புத் தனைச்சு டத்தன
சோக வனத்திற் சிறைப்ப டுத்திய
தாசை யரக்கற் குலத்த ரத்தினை வருமாளச்-

---

*ஒற்றைப் பகழி = திரிபுர சம்மாரத்தில் அம்பாக உற்ற விஷ்ணு; † தூணி = அந்த அம்பு தங்கும் கூடாகிய கடல்.

‡ வனம் = ஜலம். § செலமீன் = சேல் அம் மீன்.

|| தூடக்கு = மகளிர் சூதகம்.

¶ உழல் = ஊழல்; ஊழல் மணம் = துர்நாற்றம்.

சாலே மரத்துப் புறத்தொ ளித்தடல்
வாலி யுரத்திற் சரத்தை விட்டொரு
தாரை தணிச்சுக் ரிவற்க ளித்தவன் மருகோனே;
சோணை மிகுத்துத் திரட்பு னத்தினி
லாணை மதத்துக் கிடக்கு மற்புத
சோண கிரிச்சுத் தர்பெற்ற கொற்றவ மணிநீபத்-
தோள்கொடு சக்ரப் பொருப்பி னேப்பொடி
யாகநெ ருக்கிச் செருக்க ளத்திதிர்
சூரனை வெட்டித் துணித்த டக்கிய பெருமாளே. (எ0)

579.

முகத்து லக்கிக *ளாசா ரவினிகள்
விலேச்சி றுக்கிகள் நேரா வசடிகள்
மூழுச்ச மர்த்திகள் காமா விரகிகள் மூந்துசூது-
மொழிப்ப ரத்தைகள் காசா சையில்மூலே
பலர்க்கும் விற்பவர் நாளை வதுபவ
முயற்று பொட்டிகள் மோகா வலமுறு கின்றமூடர்;
செகத்தி லெத்திகள் சார்வாய் †மயகிகள்
திருட்டு மட்டைகள் மாயா சொருபிகள்
சிரித்து ருக்கிகள் ஆகா வெனநகை சிந்தைமாயத்-
திரட்பொ றிச்சிகள் மாபா விகளப
கடத்த சட்டைகள் மூதே விகளொடு
தினேத்த லற்றிரு சீர்பா தமுமினி யென்றுசேர்வேன்;
தொகுத்தொ குத்தொகு தோதோ தொகுதொகு
செகுச்செ குச்செகு சேசே செகணை
தொகுத்தொ குத்தொகு தோதோ தொகுதொகு
தொந்த தீதோ-
துடுட்டு டுட்டுடு டூடூ டுடுடுடு
திகுத்தி குத்திகு தீதோ எனவொரு
துவக்க நிர்த்தன மாடா வுறைபவர் தொண்டர்பெணும்;

* ஆசார ரனிகள். † மயகிகள் = மயக்கிகள்.

மலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

அகத்தி யப்பனு மால்வே தனும்அறம்
வளர்த்த கற்பக மாஞர லியுமகி
ழவுற்ற நித்தபி ராமே அருணையில் நின்றகோவே.
அமர்க்க ளத்தொரு சூரே சனைவிழ
முறித்து ழக்கி*ய வாஞர் குடிபுக
அமர்த்தி விட்டசு வாமீ அடியவர் தம்பிரானே. (எக)

580.

மேக மொத்தகுழ லார்சி லைப்புருவ
வாளி யொத்தவிழி யார்மு கக்கமல
மீது பொட்டிடழ கார்க ளத்திலணி வடமாட-
மேரு வொத்தமுலை யார்ப ளப்பளென
மார்பு துத்திபுய வார்வ ளைக்கடகம்
வீறி டத்துவளு நூலொ டொத்தஇடை யுடைமாதர்;
தோகை பகநிகடை யார்ப தத்திவிடு
நூபு ரக்†குரல்கள் பாட கத்துகில்கள்
சோர நற்றெருவு டேந டித்துமுலை விலைகூறிச்-
சூத கச்சரச மோடெ யெத்திவரு
வோரை நத்திவிழி யால்ம ருட்டிமயல்
தூள்‡ம ருத்திடுயி ரேப றிப்பவர்க ளுறவாமோ;
சேக ணைச்செகண தோதி மித்திகுட
டாடு டுட்டமட டூகு தத்தொகுர்த்தி
தீத கத்திமித தோவு டுக்கைமணி மூசோதை-
தேச மூட்கவர ஆயி ரச்சிரமு
மூளி பட்டுமக மேரு வுக்கவுணர்
தீவு கெட்டுமுறை யோவெ னக்கதற விடும்வேலா;
ஆக மத்திபல கார ணத்தியெனை
யீண சத்திஅரி ஆச னத்திசிவ
ஞக முற்றசிவ காமி பத்தினியின் மூருகோனே-

---

* அவ் வாஞர் † குரல்கள் பாட ஆகத் துகில்கள் சோர எனப்பிரிக்க; ஆகத் துகில் = மார்பு வஸ்திரம்.
‡ மருத்திடு = மருந்திட்டு.

ஆர ணற்குமறை தேடி யிட்டதிரு
மால்ம கட்கிறுமி மோக சித்ரவளி
ஆசை பற்றிஅரு ணாச லத்தின்மகிழ் பெருமாளே. (எஉ)

581.

மொ ழிய றிறங்கறுத்து மகர வினங்கலக்கி
முடிய வளைந்தரற்று கடலாலும்-
முதிர விடம்பரப்பி வடவை முகந்தழற்குள்
முழுகி யெழுந்திருக்கு நிலவாலும்;
மழைய ளகந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயல்தணி யும்படிக்கு நிணவாயே-
மரகத துங்கவெற்றி விகட நடங்கொள்சித்ர
மயிலினில் வந்து முத்தி தரவேணும்;
அழகிய மென்குறத்தி புளகித சந்தனத்தி
னமுத தனம்படைத்த திருமார்பா-
அமரர் புரந்தனக்கு மழகிய செந்திலுக்கு
மருண வளம்பதிக்கு மிறையோனே;
எழுபுவ னம்பிழைக்க அசுரர் சிரந்தெறிக்க
எழுசயி லந்தொளைத்த சுடர்வேலா-
இரவிக ளந்தரத்தர் அரியர பங்கயத்த
ரிவர்கள் பயந்தவிர்த்த பெருமாளே. (எங)

582.

வலிவாத பித்தமொடு களமாலை விப்புருதி
வறள்சூலை குட்டமொடு குளிர்தாகம்-
மலிநீ ரிழிச்சல்பெரு வயிறீளை கக்குகளை
வருநீ ரடைப்பினுடன் வெகுகோடி;
சிலைநோ யடைத்தவுடல் புவிமீ தெடுத்துழல்கை
தெளியா வெனக்குமினி முடியாதே-
சிவமார் திருப்புகழை எனுளு வினிற்புகழ
சிவஞான சித்திதரு மருள்வாயே;

தொலையாத பத்தியுள திருமால் களிக்கவொரு
சுடர்வீசு சக்ரமதை யருள்ஞான-

துவர்வேணி யப்பன்மிகு சிவகாமி கர்த்தன்மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே ;

அலைசூரன் வெற்புமரி முகஞான வத்திரெனு
டசுரா ரிறக்கவிடு மழல்வேலா-

அமுதா சனத்திகுற மடவாள் * களிப்பெணும்
அருணை சலத்திலுறை பெருமாளே. (மச)

583.

விடுமத வேள்வாளியின் விசைபெறு † மாலாகல
விழிகொடு வாபோவென வுரையாடும்-

விரகுட னூருயிர மனமூடை மாபாவிகள்
ம்ருகமத கோலாகல முலைதோய ;

அடையவு மாசாபர வசமுறு கோமாளியை
அவனியு மாகாசமும் வசைபேசும்-

அசடஅ நாசாரனை அவலனை ஆபாசனை
அடியவ ரோடாள்வது மொருநாளே ;

வடகுல கோபாலர்த மொருபதி ஞருய்யிரம்
வனிதையர் தோள்தோய்தரு மபிராம-

மரகத நாராயணன் மருமக சோணசல
மகிபச தாகாலமு மிளையோனே ;

உடுபதி சாயாபதி சுரபதி மாயாதுற
உலகுய வாரார்கலி வறிதாக-

உயரிய மாநாகமு நிருதரு ரூர்ய்விழ
ஒருதனி வேலேவிய பெருமாளே. (எஞ)

---

* களிப் பெண் = தெய்வயானையம்மை. † ஆலாகல = ஆலகால.

584.

விதிய தாகவெ பருவ மாதரார்
விரகி லேமனந் தடுமாறி-
விவர மானதொ ரறிவு மாறியே
விணையி லே அலைந் திடுமூடன் ;
முதிய மாதமி ழிசைய தாகவே
மொழிசெய் தேநினைந் திடுமாறு-
முறைமை யாகநி னடிகள் மேவவே
முனிவு தீரவந் தருள்வாயே ;
சதிய தாகிய அசுரர் மாமுடி
தரணி மீதுருஞ் சமராடிச்-
சகல லோகமும் வலம தாகியே
தழைய வேவருங் குமரேசா ;
அதிக வானவர் கவரி வீசவே
அரிய கோபுரந் தனில்மேவி-
அருணை மீதிலெ மயிலி லேறியே
அழக தாய்வரும் பெருமாளே. (எசு)

585.

விந்துப் புளகித இன்புற் றுருகிட
சிந்திக் கருவினி லுண்பச் சிறுதுளி
விரித்த *கமலமெல் தரித்து ளொருசுழி
யிரத்த குளிகையொ டுதித்து வளர்மதி
விண்டுற் றருள்பதி கண்டுற் றருள்கொடு
†மிண்டிச் செயலினி ரம்பித் துருவொடு
மெழுக்கி லுருவென வலித்து ளெழுமதி
கழித்து ‡வயிர்குட முகுப்ப வொருபதில்
விஞ்சைச் செயல்கொடு கஞ்சச் சலவழி
வந்துப் புவிமிசை பண்டைச் செயல்கொடு

---

* கமல மெல்=கமல மேல். † மிண்டி=வலிகொண்டு.
‡ வயிறு என்பது சந்தநோக்கி வயிர் என்றுயிற்று.

விழுப்பொ டுடல்தலை அழுக்கு மலமொடு
கவிழ்த்து விழுதழு துகுப்ப அணைவரு மருள்கூர-

மெண்*பற் றுருகிமு கந்திட் டணைமுலை
யுண்டித் தரகொடு†வுண்கிச் ‡சொலிவளர்
வளத்தொ டணைமல சலத்தொ §டுழைகிடை
துடித்து தவழ்நடை வளர்த்தி யெனதகு
வெண்டைப் பரிபுர தண்டைச் சரவட
முங்கட் டியல்முடி பண்பித் தியல்கொடு
விதித்த முறைபடி படித்து மயல்கொள
தெருக்க ளினில்வரு வியப்ப இளமுலை
விந்தைக் கயல்விழி கொண்டற் குழல்மதி
துண்டக் கரவளை கொஞ்சக் குயில்மொழி
விடுப்ப துதைகலை நெகிழ்த்தி மயிலென
நடித்த வர்கள்மயல் ||பிடித்திடவர்வரு வழியேபோய்ச்;

சந்தித் துறவொடு பஞ்சிட் டணைமிசை
கொஞ்சிப் பலபல விஞ்சைச் சரசமொ
டணைத்து மலரிதழ் கடித்து இருகர
மடர்த்த குவிமுலை யழுத்தி புர¶மிடர்
சங்குத் தொனியொடு பொங்கக் குழல்மலர்
சிந்தக் கொடியிடை தங்கிச் சுழலிட
சரத்தொ டிகள்வெயி லெறிப்ப மதிதுதல்
வியர்ப்ப பரிபுர மொலிப்ப எழுமத
சம்பத் திதுசெய லின்பத் திருள்கொடு
வம்பிற் பொருள்கள்வ ழங்கிற் றிதுபிணை
சலித்து வெகுதுய ரீளைப்பொ டுடல்பிணி
o பிடித்தி டணைவரும் நகைப்ப கருமயிர் நரைமேவித்-

---

* பற்றுருகி = பாசத்தினு லுருகி. † உண்கி = உண்டு.
‡ சொலி = சொலித்து. § உழை கிடை = உழைத்துக்கிடத்து.
|| பிடித்திட அவர் வரு எனப்பிரிக்க.
¶ மிடறு என்பது சந்தநோக்கி மிடர் என்றுயிற்று; மிடறு = கழுத்து. o பிடித்திட அணைவரும் எனப்பிரிக்க.

தன்கைத் தடிகொடு குந்திக் *கவியென
உந்திக் கசனம றந்திட் டுளமிக
சலித்து வுடல்சல மிகுத்து மதிசெவி
விழிப்பு மறைபட கிடத்தி மணையவள்
சம்பத் துறைமுறை யண்டைக் கொளுகையில்
சண்டக் கருநம னண்டிக் கொளுகயி
றெடுத்து விசைகொடு பிடித்து வுயிர்தனை
பதைப்ப தனிவழி யடித்து கொடுசெல
சந்தித் தவரவர் பங்குக் கழுதடி
ரங்கப் பிணமெடு மென்றிட் டுறைபறை
தடிப்ப சுடலையி லிறக்கி விறகொடு
கொளுத்தி யொருபிடி பொடிக்கு மிலையெனு முடலாமோ:
திந்தித் திமிதிமி திந்தித் திமிதிமி
திந்தித் திமிதிமி திந்தித் திமிதிமி
திமித்தி திமிதிமி திமித்தி திமிதிமி
திமித்தி திமிதிமி திமித்தி திமிதிமி
என்பத் துடிகள்த வுண்டைக் கிடுபிடி
பம்பைச் சலிகைகள் சங்கப் பறைவகை
திகுர்த்த திகுதிகு டுடுட்டு டுடுடுடு
டிடிக்கு நிகரென வுடுக்கை முரசொடு
செம்பொற் குடமுழ வுந்தப் புடன்மணி
பொங்கச் சுரர்மலர் சிந்தப் பதமிசை
செழித்த மறைசிலர் துதிப்ப முநிவர்கள்
களித்து வகை †மனி முழக்க அசுரர்கள் களமீதே
சிந்திக் குருதிக ளண்டச் சுவரகம்
ரம்பக் கிரியொடு பொங்கிப் பெருகிய
சிவப்ப அதில்கரி மதர்த்த புரவிகள்
சிரத்தொ டிரதமு மிதப்ப நிணமொடு
செம்புட் கழுகுக ளுண்பத் தலைகள்த
ஆம்பக் கருடன டங்‡கொட் டிடகொடி

---

* கவி = குரங்கு. † மனி = மன்னி : பொருந்தி.
‡ கொட்டிட = கோட்டிட : வளைக்க : வட்டமிட.

மறைப்ப ரிகண மிகுப்ப குறளிகள்
நடி.க்க இருள்மலை கொளுத்தி யலைகடல்
செம்பொற் பவளமு டங்கிக் கமர்விட
வெந்திட் *டிகமலை விண்டுத் துகள்பட
†சிமக்கு முரகனு முழக்கி விடபட
மடைத்த சதமுடி நடுக்கி யலைபட விடும்வேலா ;

தொந்தத் தொகுகுட எண்பக் கழலொலி
பொங்கப் பரிபுர செம்பொற் பதமணி
சுழற்றி நடமிடு நிருத்த ரயன்முடி
கரத்த ரிகரி யுரித்த கடவுள்மெய்
தொண்டர்க் கருள்பவர் வெந்தத் துகளணி
கங்கைப் பணிமதி கொன்றைச் சடையினர்
தொடுத்த மதனுரு பொடித்த விழியினர்
மிகுத்த புரமதை யெரித்த நகையினர்
தும்பைத் தொடையினர் கண்டக் கறையினர்
தொந்திக் கடவுளை தந்திட் டவரிட
சுகத்தி மழுவுழை கரத்தி மரகத
நிறத்தி முயலக பதத்தி அருளிய முருகோனே-

துண்டச் சசிதுதல் சம்பைக் கொடியிடை
ரம்பைக் கரசியெ ‡னும்பற் றருமகள்
சுகிப்ப மணவறை களிக்க அணையறு
முகத்தொ டுறமயல் செழித்த திருபுய
செம்பொற் கரகம லம்பத் திருதல
மம்பொற் § சசியெழ சுந்தப் பலபடை
செறித்த கதிர்முடி கடப்ப மலர்தொடை
சிறப்பொ டொருகுடில் மருத்து வனமகள்

---

* இக மலை = இங்குள்ள மலைகள். † சிமக்கும் = சுமக்கும்.
‡ உம்பல் தரு மகள் = தெய்வயானையம்மை.
§ சசி யெழ = சந்திரனைப்போல் ஒளியெழ.

தொந்தப் புணர்செயல் கண்டுற் றடியெனி
டஞ்சற் பொடிபட முன்புற் றருளயில்
தொடுத்து மிளநகை பரப்பி மயில்மிசை
நடித்து *அழல்கிரி பதிக்குள் மருவிய பெருமாளே. (எஎ)

586.

விறுபுழு கானபனி நீர்கள்மல தோயல்விடு
மேருகிரி யானகொடு தனபார-
மீதுபுர ளாபரண சோதிவித மானநகை
மேகமனு காடுகட லிருள்மேவி ;
நாறுமலர் வாசமயிர் தூலிடைய தேதுவள
நாணமழி வார்களுட னுறவாடி-
நாடியது வேகதிய ஞசுழலு மோடனேகின்
ஞானசிவ மானபத மருள்வாயே ;
கூறுமடி யார்கள்வினை வீறுபட வே அரிய
கோலமயி லானபத மருள்வோனே-
கூடஅர னேடுநட மாடரிய காளியருள்
கூருசிவ காமியுமை யருள்பாலா;
ஆறுமுக மானகதி பாலகுற மாதுதன
மாரவிளை யாடிமண மருள்வோனே-
ஆதிரகு ராமஜய மாலின்மரு காபெரிய
ஆதியரு ணாபுரியில் பெருமாளே. (எஅ)

* அழல்கிரி பதி = திருவண்ணாமலை.

4. திருக்காளத்தி.

[ரெயில்வே ஸ்டேஷன். இது சித்தூர் ஜில்லா ரேணுகுண்டா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு 15-மைல். பஞ்சபூதஸ்தலங்களில் வாயு ஸ்தலம். கோயில் சுவர்ணமுகி (பொன்முகரி) நதியின் கீழ்க்கரையில் மலையடிவாரத்தில் இருக்கின்றது. (ஸ்ரீ=) சிலந்தி, (காளம்=) பாம்பு, (அத்தி=)யானை யாகிய இம் மூன்றும் பூசித்த ஸ்தலம். கண்ணப்பநாயனார் முத்தியடைந்த முது நகர். இது தக்ஷிண கைலாசம் எனவும் பெயர்பெறும். மூவர் தேவாரமும் பெற்ற தலம். இதற்குத் திருகாளத்திப் புராணம், ஸ்ரீ காளத்திப் புராணம் என இரண்டு ஸ்தல புராணங்கள் உள்ளன.]

587.

*சரக்கே றித்தப் பதிவாழ் தொந்தப்
பரிக்கா யத்திற் பரிவோ டைந்துச்
சதிக்கா ரர்ப்புக் குலமே விந்தச் செயல்மேவிச்-
சலித்தே மெத்தச் சமுசா ரம்பொற்
சுகித்தே சுற்றத் தவரோ டின்பத்
தழைத்தே மெச்சத் தயவோ டிந்தக் குடிபேணிக்;
† குரக்கோ ணத்திற் கழுநா யுண்பக்
குழிக்கே வைத்துச் சவமாய் நந்திக்
குடிற்கே நத்திப் பழுதாய் மங்கப் படுவேஷக்-
குறித்தே மூத்திக் கு ‡மறு வின்பத்
தடத்தே பற்றிச் சகமா யம்பொய்க்
குலக்கால் வற்றச் சிவஞா னம்பொற் கழல்தாராய்;

---

*சரக்கு ஏறு இந்த பதி=பொருள்கள் மிகுந்த இப் புவியிடம்.

† குரக் கோணத்திற் கழு=குளம்புத் தன்மையுள்ள மூக்கையுடைய கழு. ‡ மறு=மாறு.

புரக்கா டற்றுப் பொடியாய் மங்கக்
கழைச்சா பத்*தைச் சடலா னுங்கப்
புகைத்†தீ பற்றப் புகலோ ரன்புற் றருள்வோனே-
புடைத்தே யெட்டுத் திசையோ ரஞ்சத்
தனிக்கோ லத்துப் புகுரூர் மங்கப்
புகழ்ப்போர் சத்திக் கிரையா கந்தத் தருள்வோனே;
திருக்கா னத்திற் பரிவோ டந்தக்
குறக்கோ லத்துச் செயலா ளஞ்சத்
திகழ்ச்சே ரத்திக்‡கழல்வா வென்பப் புணர்வோனே-
சிவப்பே றுக்குக் கடையேன் வந்துட்
புகச்சீர் வைத்துக் கொளுஞா னம்பொற்
றிருக்கா ளத்திப் பதிவாழ் கந்தப் பெருமாளே. (க)

588.

சிரத்தா னத்திற் பணியாதே-
செகத்தோர் பற்றைக் குறியாதே;
வருத்தா மற்றெப் பிலதான-
மலர்த்தாள் வைத்தெத் தணையாள்வாய்;
நிருத்தா கர்த்தத் துவநேசா-
நினைத்தார் சித்தத் துறைவோனே;
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே-
திருக்கா ளத்திப் பெருமாளே. (உ)

589.

பங்கய னுர்பெற் றிடுஞ்ச ராசர
அண்டம தாயுற் றிருந்த பார்மிசை
பஞ்சவர் கூடித் திரண்ட தோர்நர உருவாயே-
பந்தம தாகப் பிணிந்த ஆசையில்
இங்கித மாகத் திரிந்து மாதர்கள்
பண்பொழி சூதைக் கடந்தி டாதுழல் படிறுயே;

---

* ஐ சடலான் = அழகிய தேகத்தையுடைய மன்மதன்.

† தீ பற்று அ புகலோர் = அக்கினிபற்றச் செய்த அந்த வெற்றியாளர், ‡ அழல் வா என்ப = அழாதே, வா என்ன.

சங்கட னெகித் தளர்ந்து நோய்வினை
வந்துடல் மூடக் கலங்கி டாமதி
தந்தடி யேனைப் புரந்தி டாயுன தருளாலே-

சங்கரர் வாமத் திருந்த தூபுர
சுந்தரி யாகித் தருஞ்சு தாபத
தண்டைய னேகுக் குடம்ப தாகையின் முருகோனே;

திங்களு லாவப் பணிந்த வேணியர்
பொங்கர வாடப் புனைந்த மார்பினர்
திண்சிலை சூலத் தழுந்து பாணியர் நெடிதாழ்வார்-

சிந்துவி லேயுற் றெழுந்த காளவி
டங்கள மீதிற் சிறந்த சோதியர்
திண்புய மீதிற் றவழ்ந்து வீறிய குருநாதர்;

சிங்கம தாகத் திரிந்த மால்கெரு
வம்பொடி யாகப் பறந்து சீறிய
சிம்புள தாகச் சிறந்த காவென வருகோமுன்-

செங்கதி ரோனைக் கடிந்த தீவினை
துஞ்சிட வேநற் றவஞ்செய் தேறிய
தெனிகயி லாயத் தமர்ந்து வாழ்வருள் பெருமாளே. (கூ)

5. சிதம்பரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். பஞ்சபூதஸ்தலங்களில் ஆகாயஸ்தலம். தரிசிக்க முத்தியளிக்குந் தலம். மூவர் தேவாரமுந் திருவாசகமுந் திறிக்கோவையாரும் பெற்ற முதுநகர். இது தில்லை, பெரும் பற்றப்புலியூர், புலியூர், புலிசை, புலீச்சுரம், மன்று, திருச்சிற்றம் பலம் எனவும் பெயர்பெறும். பஞ்ச சபைகளில் இது கநகசபை. இங்குத் தாண்டவதரிசன ப்ரபாவத்தையுந் தில்லை மூவாயிரர் பெருமையையும் அருணகிரிநாதர் மிகச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். ஸ்தலபுராணங்க ளுண்டு.]

590.

தினகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்-
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்;
வினவுமடி யாரை மருவிவினை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்-
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்;
சனகிமண வாளன் மருகனென * வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்-
சரணசிவ காமி † யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்;
இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்-
இணையி‡லிப தோகை மதியின்மக ளோடு
மியல் புலியுர் வாழ் பொற் பெருமாளே. (க)

591.

கைகத்தருண சோதி யத்திமுக வேத
கற்பகச கோத்ரப் பெருமாள்காண்-
கற்புசிவ காமி நித்யகலி யாணி
கத்தர்குரு நாதப் பெருமாள்காண்;
§ வித்துருப ராம ருக்குமரு கான
வெற்றியயில் பாணிப் பெருமாள்காண்-

---

* வேத சதம்=வேத மெல்லாம்.

† இரண குல ஹரி=போர்செய்யும் அவுணர் குலத்தை ஹரித்தவள்.

‡ இப தோகை=தேவயானையம்மை.

§ வித்துருபம்=விந்துருபம்: மழைத்துளிபெய்யும் மேகவண்ணம்.

வெற்புளக டாக முட்குதிர வீசு
வெற்றிமயில் வாகப் பெருமாள்காண்;
சித்ரமுக மாறு முத்து மணி மார்பு
திக்கினினி லாதப் பெருமாள்காண்-
தித்திமிதி தீதெ னெத்திவினை யாடு
சித்திரகு மாரப் பெருமாள்காண்;
சுத்த*விர சூர் பட்டுவிழ வேலை
தொட்டகவி ராஜப் பெருமாள்காண்-
தப்பு†வளி யோடு மப்புலியுர் மேவு
சுத்தசிவ ஞானப் பெருமாளே. (உ)

592.

இருவினையின் மதிம யங்கித் திரியாதே-
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே;
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே-
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே;
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே-
சிவனருளு முருக செம்பொற் கழலோனே;
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே-
கனகசபை மருவு கந்தப் பெருமாளே. (ஊ)

593.

சுகனெ குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினி லின்பக்
குழலி சிவவழு தூறுக வந்திப் பசியாறிக்-
கொடிய இருவினை மூலமும் வஞ்சக்
கலிகள் பிணியிவை வேரோடு சிந்திக்
குலைய நமசிவ யோமென கொஞ்சிக் களிகூரப்;

---

* வீர † வள்ளியோடும்.

பகலு மிரவுமி லாவெளி யின்புக்
குறுகி யிணையிலி நாடக செம்பொற்
பரம கதியிது வாமென சிந்தித் தழகாகப்-

பவள மனதிரு மேனியு டன்பொற்
சரண அடியவ ராள்மன வம்பொற்
றருண சரண்மயி லேறியு னம்பொற் கழல்தாராய்;

தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தொந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட் டியல்தாளம்-

*தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
†கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடி‡ய ழனவுக மாருத சண்டச் சமரேறிக்;

ககன மறைபட ஆடிய செம்புட்
பகிகள் தணிவுற சூரர்கள் மங்கக்
கடல்க ளெறிபட நாகமு மஞ்சத் தொடும்வேலா-

கயிலை மலைதனி லாடிய தந்தைக்
குருக மனமுன நாடியெ தொஞ்சிக்
கனக சபைதனில் மேவிய கந்தப் பெருமாளே. (ச)

594.

வண்டையொத் துக்கயல் கண்சுழற் றுப்புரு
வஞ்சிலைக் குத்தொடு அம்பை யொத் துத்தொடை
வண்டுசுற் றுக்குழல் கொண்டலொத் துக்கமு கென்பக்ரீவம்-

மந்தரத் தைக்§கட பொங்கிபத் துப்பணை
கொம்பையொத் தத்தன முந்து ||குப்பத்தெரு
வந்துளத் திப்பொரு மங்கையர்க் கைப்பொரு ளன்பிலாலே;

---

* தபலை=பதலை: ஒருவித வாத்தியம். †கரடி=கரடிகை: ஒரு பறை. ‡ அழன், அழனம்=பிணம்.

§ கடம் பொங்கு என்பது கட பொங்கு என்றுயிற்று; கடம்=மதம். ||குப்ப=கூம்ப=குவிய.

கொண்டழைத் துத்தழு வுங்கைதட் டிற்பொருள்
கொண்டுதெட் டிச்சர சம்புகழ்க் குக்குன
குங்*குழற் கிப்படி நொந்துகெட் டுக்குடில் மங்குறுமல்-
கொண்டுசத் திக்ர கட லுண்டுகுப் பத்துனி
னன்பருக் குச்செயல் தொண்டுபட் டுக்கமழ்
குங்குமத் திற்சர ணம்பிடிச் துக்கரை யென்றுசேர்வேன்;
அண்டமிட் டிக்குட டிண்டிமிட் டிக்குகு
டந்தகொட் டத்தகு டிங்குதாக் கத்தம
டஞ்சகட் டைக்குண கொம்புடக் கைக்கிட லென்பதாளம்-
அண்டமெட் டுத்திசை யும்பல்சர்ப் பத்திரள்
கொண்டல்பட் டுக்கிரி யும்பொடித் துப்புல
னஞ்சவித் துத்திர ளண்டமுட் டத்துகள் வந்தசுரர்;
கண்டமற் றுக்குட லென்புநெக் குத்தச
னங்கடித் துக்குடி லஞ்சிவப் பச்†செநீர்
கண்தெறிக் கத்தலீல பந்தடித் துக்கையி லங்குவேலால்-
கண்களிக் கக்கக னந்துளுக் கப்புக
ழிந்திரற் குப்பதம் வந்தளித் துக்கன
கம்பலத் திற்குற மங்கைபக் கத்துறை தம்பிரானே. ()

595.

கங்கு லின்குழற் கார்மு கஞ்சகி
மஞ்ச லின்புயத் தார்ச ரம்பெறு
கண்கள் கொன்தளக் காது கொஞ்சக செம்பொனூரம்-
சுந்த ரந்தரித் தாடு கொங்கைக
ளும்ப லின்குவட் டாமெ னுங்கிரி
கந்த முஞ்சிறுத் தேம னும்பட சும்பைபோல;
அங்க மைந்திடைப் பாளி தங்கொடு
§குந்தி யின்குறைக் கால்ம றைந்திட
அண்சி லம்பொலிப் பாட கஞ்சரி கொஞ்சமேவும்-

---

*குழற்கு = குழலையுடையார்க்கு, † கடல் உண்டு உகுப்ப தன் நின் அன்பர் = அகஸ்தியர். ‡ செநீர் = செந்நீர்: இரத்தம்.
§ குந்தியின் குறைக்கால் = குதிகால்.

அஞ்சு கங்குயிற் பூவை யின்குரல்
அங்கை பொன்பறிக் கார பெண்களொ
டண்டி மண்டையர்க் கூழி யஞ்செய்வ தென்றுபோமோ;
சங்கு பொன்தவிற் காள மூர்*துரி
யங்கள் துந்துமிக் காட திர்ந்திட
சந்த செந்தமிழ்ப் பாணர் கொஞ்சிட அண்டகோசம்-
சந்தி ரன்பதத் தோர்வ ணங்கிட
இந்தி ரன்குலத் தார்†பொ ழிந்திட
தந்தி ரம்புயத் தார்பு கழ்ந்திட வந்தசூரைச்;
செங்கை யுஞ்சிரத் தோடு பங்கெழ
அந்த கன்புரத் தேற வஞ்சகர்
செஞ்ச ரந்தொடுத் தேந் டம்புரி கந்தவேளே-
திங்க ளொண்முகக் காமர் கொண்டவன்
கொங்கை மென்குறப் பாவை யுங்கொடு
செம்பொ னம்பலத் தேசி றந்தருள் தம்பிரானே. (சு)

596.

கொந்த ளம்‡புழு கெந்த வண்பனி
ரம்ப சம்ப்ரம ணிந்த மந்தர
கொங்கை வெண்கரி கொம்பி ணங்கிய மடமாதர்-
கொந்த ணங்குழ லின்ப மஞ்சள
ணிந்து சண்பக வஞ்சி ளங்கொடி
கொஞ்சு பைங்கிளி யன்பெ னுங்குயில் மயில்போலே;
வந்து பஞ்சணை யின்ப மூங்கொடு
கொங்கை யும்புய முந்த முழ்புற
மஞ்சு வொண்கலை யுங்கு லைந்தவ மயல்மேலாய்-
வஞ்சி னங்கள்தி ரண்டு கண்செவி
யுஞ்சு கங்கள்தி ரும்பி முன்செய்த
வஞ்சி னங்களு டன்கி டந்துட லழிவேனே;

---

* தூரியம் = தூரியம் : முரசப்பறை. † பொழிந்திட = புஷ்ப மாரி சொரிய. ‡ புழு கெந்த = புழுகு கந்த.

தந்த னந்தன தந்த னந்தன
தந்தி மிந்திமி தந்தி மிந்திமி
சங்கு வெண்கல கொம்பு துந்துமி பலபேரி-

சஞ்ச லஞ்சல கொஞ்சு கிண்கிணி
தங்கு டுண்டுடு டுண்டு டன்பல
சந்தி ரம்பறை பொங்கு வஞ்சகர் களமீதே ;

சிந்த வெண்கழு கொங்கு பொங்கெழு
செம்பு ளங்கரு டன்ப ருந்துகள்
செங்க ளந்திகை யெங்கு மண்டிட விடும்வேலா-

திங்க ளிந்திர னும்ப ரந்தர
ரும்பு கழ்ந்துரு கும்ப ரன்சபை
சேம்போ னும்பல மங்கொ ளன்பர்கள் பெருமாளே. (எ)

597.

மந்தர மென்குவ டார்த னங்களி
லாரம முந்திட வேம ணம்பெறு
சந்தன குங்கும சேறு டன்பனி
நீர்கள் கலந்திடு வார்மு கஞ்சசி
மஞ்சுறை யுங்குழ லார்ச ரங்கயல்
வாள்விழி செங்கழு நீர்த தும்பிய கொந்தளோலை-

வண்சுழ லுஞ்செவி யார்து டங்கிடை
வாடர டம்புரி வார்ம ருங்திடு
விஞ்சையர் கொஞ்சிடு வாரி ளங்குயில்
மோகன வஞ்சியர் போல கம்பெற
வந்தவ * ரெந்தவூர் நீர றிந்தவர்
போல இருந்தது மையங்கிட இன்சொல்கூறிச் ;

சுந்தர †வங்கண மாய்நெ ருங்கிநிர்
வாருமெ னும்படி யால கங்கொடு
பண்சர சங்கொள வேணு மென்றவர்

---

* எந்த வர் = எந்த ஊர். † வங்கணமாய் = உற்ற நேசமாய்.

சேம வளந்துறு தேன ருந்திட
துன்றுபொ னங்கையின் மீது கண்டவ
ரோடு விழைந்துமெ கூடி யின்புறு மங்கையோரால்-

துன்பமு டங்கழி நோய்சி ரங்கொடு
சீபுழு வஞ்சல மோ*டி றங்கிய
புண்குட வன்கடி யோடி ளஞ்†சனி
சூலமி குந்திட வேப றந்துடல்
துஞ்சிய மன்பதி யேபு குந்துய
ராழிவிடும்படி சீர்பதம்பெறு விஞ்சைதாராய் ;

அந்தர துந்துமி யோடு டன்கண
நாதர் புகழ்ந்திட வேத விஞ்சைய
ரிந்திர சந்திரர் சூரி யன்கவி
வாணர்த வம்புலி யோர்ப தஞ்சலி
அம்புய னந்திரு மாலொ டிந்திரை
வாணிய ணங்கவ ளோட ருந்தவர் தங்கள்மாதர்-

அம்பர ரம்பைய ரோடு டன்திகழ்
மாவுர கன்புவி யோர்கள் மங்கையர்
அம்புவி மங்கைய ரோட ருந்ததி
மாதர் புகழ்ந்திட வேத டம்புரி
அம்புய செம்பதர் மாட கஞ்சிவ
காம சவுந்தரி யாள்ப யந்தருள் கந்தவேளே ;

திந்திமி திந்திமி தோதி மிந்திமி
தீததி தீதித தீதி தோதிமி
தந்தன தந்தன ணுத னந்தன
தானத னந்தன ணுவெ ணும்பறை
செந்தவில் சங்குட னேமு ழங்கச
ராக்கள் சிரம்பொடி யாய்வி டுஞ்செயல் கண்டவேலா-

செந்தினை யின்புன மேர்கு றிஞ்சியில்
வாழுமி ளங்கொடி யாள்ப தங்களில்
வந்துவ ணங்கி‡நி ணேமு கம்பெறு

---

* இறங்கிய = இறங்க. † சனி = சன்னி. ‡ நிணே = நின்றே.

*தாளழ கங்கையின் வேலு டன்புவி
செம்போ னம்பல மேல கம்பிர
காரச மந்திர மீத மர்ந்தருள் தம்பிரானே. (அ)

598.

வந்து வந்துவித் தூறி யென்றணுடல்
வெந்து வெந்துவிட் டோட நொந்துயிரும்
வஞ்சி னங்களிற் காடு கொண்டவடி வங்களாலே-
மங்கி மங்கிவிட் டோன யுன்றனது
சிந்தை சந்தொஷித் தாளு கொண்டருள
வந்து சிந்துரத் தேறி யண்டரொடு தொண்டர்சூழ;
எந்தன் வஞ்சனைக் காடு சிந்திவிழ
சந்த ரண்டிசைத் தேவ ரம்பையர்க
ளிந்து பந்தடித் தாடல் கொண்டுவர †மந்திமேவும்-
எண்க டம்பணித் தோளு மம்பொன்முடி
சுந்த ரந்திருப் பாத பங்கயமும்
என்றன் முந்துறத் ‡தோணி யுன்றனது சிந்தைதாராய்;
அந்த ரந்திகைத் தோட விஞ்சையர்கள்
சிந்தை §மந்திரத் தோட கெந்தருவ
ரம்பு யன்சலித் தோட எண்டிசையு யுண்டமாயோன்-
அஞ்சி யுன்பதச் சேவை தந்திடென
வந்த வெஞ்சினர்க் காடெ ரிந்துவிழ
அங்கி யின்குணக் கோலி யுந்திவிடு செங்கைவேலா;
சிந்து ரம்பணைக் கோடு கொங்கைகுற
மங்கை யின்புறத் தோள ணைந்துருக
சிந்து ரந்தனைச் சீர்ம ணம்புணர்ந்தல் கந்தவேளே-
சிந்தி முன்புரக் காடு மங்கநகை
கொண்ட செந்தழற் கோல ரண்டர்புகழ்
செம்போ னம்பலத் தாடு மம்பலவர் தம்பிரானே.(கூ)

---

* தாளழக அங்கையின், எனப்பிரிக்க. † மந்தி = வண்டு.
‡ தோணி = தோன்றி. § மந்திரம் = விசாரம்.

599.

கதித்துப்*பொங் கலுக்கொத்துப்
பணைத்துக் † கொம் பெனத்தெற்றிக்
‡ கவித்துச்செம் பொனைத்துற்றுக் குழலார்பின்-
கழுத்தைப்பண் புறக்கட்டிச்
சிரித்துத்§தொங் கலைப்பற்றிக்
கலைத்துச்செங் குணத்திற்பித் திடுமாதர்;
பதித்துத்தந் தனத்தொக்கப்
பிணித்துப்பண் புறக்கட்டிப்
பசப்பிப்பொன் தரப்பற்றிப் பொருள்மாளப்-
பறித்துப்பின் துரத்துச்சொற்
கபட்டுப்பெண் களுக்கிச்சைப்
பலித்துப்பின் ||கசுத்திப்பட் டுழல்வேனே;
கதித்துக்கொண் டெதிர்த்துப்பிற்
கொதித்துச்சங் கரித்துப்பற்
கடித்துச்சென் றுழக்கித்துக் கசுரோரைக்-
கழித்துப்பண் ¶டமர்க்குச்செப்
பதத்தைத்தந் தளித்துக்o கைக்
கணிக் $குச்சந் தரத்தைச்சுத் தொளிர்வேலா;
சிதைத்திட்டம் புரத்தைச்சொற்
கயத்தைச்சென் றுரித்துத்தற்
சினத்தக்கன் சிரத்தைத்**தட் சிவனுர்தஞ்-

---

*பொங்கு அல்லுக்கு ஒத்து = மிகுந்த இருளுக்குச் சமானமாகி.

† கொம்பு என தெற்றி = கொம்புபோலச் சடைபின்னி.

‡ கவித்து செம்பொனை = ஜடைபில்லை கவித்து.

§ தொங்கலை = தொங்கும்படி தரித்த வஸ்திரத்தை.

|| கசுத்தி = கஸ்தி: வருத்தம்.

¶ அமர்க்குச் செப்பதத்தை = அமரர்க்குச் செம்பதத்தை.

o கைக்கு அணி = கையினிடத்து அணிந்த.

$ குச்ச தரத்து ஐசுத்த ஒளிர் வேலா = குஞ்சம் கட்டிய அச்சத்தைத் தரும் அழகிய பரிசுத்தமான பிரகாசிக்கின்ற வேலை யுடையவரே. ** தள் சிவனுர்.

செவிக்குச்செம் பொருட்கற்கப்
புகட்டிச்செம் பரத்திற்செய்த்
திருச்சிற்றம் பலச்சொக்கப் பெருமாளே. (கo)

600.

சிரித்துச் சங்கொளி யாமின லாமென
வுருக்கிக் கொங்கையி னுலுற மேல்விழு
செணத்திற் சம்பள மேபறி காரிகள் சிலபேரைச்-

சிமிட்டிக் கண்களி னுலுற வேமயல்
புகட்டிச் செந்துகி லால்வெளி யாயிடை
திருத்திப் பண்குழ லேய்முகி லோவிய மயில்போலே;

அருக்கிப் பண்புற வேகலி யால்முலை
மறைத்துச் செந்துவர் வாயமு தூறல்க
ளளித்துப் பொன்குயி லாமென வேகுரல் மிடறோதை-

அசைத்துக் கொந்தள வோலிக ளார்பணி
மினுக்கிச் சந்தன வாசனை சேறுட
னமைத்துப் பஞ்சணை மீதணை மாதர்க ளுறவாமோ;

இரைத்துப் பண்டம ராவதி வானவ
ரொளித்துக் கந்தசு வாமிப ரா*பர
மெனப்பட் டெண்கிரி ஏழ்கடல் தூள்பட அசுரார்கள்-

இறக்கச் சிங்கம தேர்பரி யாணையொ
டுறுப்பிற் செங்கழு கோரிகள் கூளியொ
டிரத்தச் சங்கம தாடிட வேல்விடு மயில்வீரா;

சிரித்திட் டம்புர மேமத னுருட
லெரித்துக் கண்டக பாலியர் பாலுறை
திகழ்ப்பொற் சுந்தரி யாள்சிவ காமிநல் கியசேயே-

திருச்சித் தந்தனி லேகுற மானைத
யிருத்திக் கண்களி கூர்திக ழாடக
திருச்சிற் றம்பல மேவிய லாவிய பெருமாளே. (கக)

---

* பரம் என = காப்பது உன் பாரம் என.

601.

தத்தையென் றெப்பிடுந் தோகைநட் டங்கொளுவர்
*பத்திரங் கட் †கயங் காரியொப் புங்குழல்கள்
‡சச்சையங் கெச்சையுந் தாளவொத் தும்பதுமை
யென்பரீலச்-

சக்கரம் பொற்குடம் பாலிருக் குந்தனமொ
டொற்றிநன் சித்திரம் போலவத் தும்பறியர்
§சக்களஞ் சக்கடஞ் சாதிதுக் கங்கொலையர் சங்கமாதர்;

‖சுத்திடும் பித்திடும் சூதுகற் குஞ்சதியர்
முற்பணங் ¶கைக்கொடுந் தாருமிட் டங்கொளுவர்
oசொக்கிடும் புக்கடன் சேருமட் டுந்தனகும்
விஞ்சையோர்பால்

தொக்கிடுங் கக்கலுஞ் சூலபக் கம்பிளவை
விக்கலுந் துக்கமுஞ் சீதபித் தங்கள்கொடு
தப்படங் கிப்படுஞ் சோரனுக் கும்பதவி யெந்தாளோ;

குத்திரங் கற்றசண் டாளர் $ சத் தங்குவடு
பொட்டெழுந் திட்டுநின் முட ** எட் டந்திகையர்
கொற்றமுங் கட்டியம் பாடநிர்த் தம்பவுரி கொண்டவேலா-

---

* பத்திரம் = அம்பு. † கயம் காரி = நீருண்ட கார்மேகம்.

‡ சச்சை அம் கெச்சை = சத்திக்குங் காற் சதங்கை.

§ சக்களம் சக்கடம் சாதி = மூழுப்பொய்யைப் பரிகாசத்தி ஞற் சாதிக்கின்ற.

‖ சுத்திடும் பித்து இடும் = தங்கள் வசத்திற் சுழலும்படியான பித்தேற்றுகின்ற; சுத்து - இது சுற்று என்பதன் மரூஉ.

¶ கை கொடு உந்து ஆரும் = கையிற் கொண்டு செலுத்தும் யாரையும்.

o சொக்கு இடும்பு கடன் சேரு மட்டும் தனகும் = சொக்கும் படியான இடும்பு வார்த்தைகளைச் சொல்லிப் பொருள் பற்றிக் கொள்ளும் வரையில் லீலாவிநோதம் பாராட்டும்.

$ சத்த அம் குவடு = ஏழு மலைகள்.

** எட்டு அம் திகையர் = அஷ்டதிக்குப் பாலகர்.

கொற்றப்பங் குற்றசிந் தாமணிச் செங்குமரி
பத்தரன் புற்றளந் தாயெழிற் கொஞ்சுகிளி
கொட்புரந் தொக்கவெந் தாடவிட் டங்கிவிழி
மங்கைபாலா;
சித்திரம் பொற்குறம் பாவைபக் கம்புணர
செட்டியென் றெத்திவந் தாடிநிர்த் தங்கள்*புரி
சிற்சிதம் பொற்புயஞ் சேரமுற் றும்புணரு
மெங்கள்கோவே-
சிற்பரன் தற்பரன் சீர்திகழ்த் தென்புலியூர்
ருத்திரன் †பத்திரஞ் சூலகர்த் தன்சபையில்
நித்தியென் றெத்திநின் றாடுசிற் றம்பலவர்
தம்பிரானே. (கஉ)

602.

தனத்திற்குங் குமத்தைச்சந்
தனத்தைக்கொண் டணைத்துச்சங்
-கிலிக்கொத்தும் பிலுக்குப்பொன்
தனிற்கொத்துந் தரித்துச்சுந்
தரத்திற்பண் பழித்துக்கண்
சுழற்றிச்சண் பகப்புட்பங் குழல்மேவித்-
தரத்தைக்கொண் டசைத்துப்பொன்
தகைப்பட்டுந் தரித்துப்பின்
சிரித்துக்கொண் டழைத்துக்கொந்
தளத்தைத்தண் குலுக்கிச்‡சங்
கலப்புத்தன் கரத்துக்கொண்
டணைத்துச்சம் ப்ரமித்துக்கொண் டுறவாடிப்;
புனித்தப்§பஞ் சணைக்கட்டிண்
படுத்துச்சந் தனப்பொட்டுங்
குலைத்துப்பின் புயத்தைக்கொண்

---

* புரி=புரிந்து. † பத்திர அம் சூலம்=இலகுவாயுடைய அழகிய சூலாயுதம்.

‡ சங்கு அலம்பு=வளையல்கள் சப்திக்கும்.

§ பஞ்சணைக்கண் திண்படுத்து எனப்பிரிக்க.

டணைத்துப்பின் சுகித்திட்டின்
புகட்டிப்பொன் சரக்கொத்துஞ்
சிதைப்பப்பொன் தரப்பற்றும் பொதுமாதர்-

புணர்ப்பித்தும் பிடித்துப்பொன்
கொடுத்துப்பின் பிதிர்ச்சித்தன்
திணிக்கட்டுஞ் சிதைத்துக்கண்
சிறுப்பப்புண் பிடித்தப்புண்
புடைத்துக்கண் பழுத்துக்கண்
டவர்க்குக்கண் புதைப்பச்சென் றுழல்வேனே';

சினத்துக்கண் சிவப்பச்சங்
கொலிப்பத்திண் கவட்டுச்செங்
குவட்டைச்சென் றிடித்துச்*செண்
டரைத்துக்கம் பிடிக்கப்பண்
சிரத்தைப்பந் தடித்துக்கொண்
டிறைத்துத்தெண் கடற்றிட்டுங் கொளேபோகச்-

செழித்துப்பொன் சுரர்ச்சுற்றங்
களித்துக்கொண் டளிப்புட்பஞ்
சிறக்கப்பண் சிரத்திற்கொண்
டிறைத்துச்செம் பதத்திற்கண்
திளைப்பத்தந் தலைத்†தழ்த்தம்
புகழ்ச்செப்புஞ் சயத்துத்திண் புயவேளே ;

‡பனித்துட்கங் கசற்குக்கண்
பரப்பித்தன் சினத்திற்றிண்
புரத்தைக்கண் டெரித்துப்பண்
கயத்தைப்பண் டுரித்துப்பன்
பகைத்தக்கன் தவத்தைச்சென்
றழித்துக்கொன் றடற்பித்தன் தருவாழ்வே-

---

* சேண் தரை துக்கம் பிடிக்கப் பண் = விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையுந் துக்கம் பிடிக்கப் பண்ணிய.

† தழ்த்தம் புகழ்செப்பும் = தாழ்த்து அம்புகழ் செப்பும்; தாழ்த்து = தாழ்த்தி. ‡பனித்து உட்க = நடுங்கி உதிர.

||

*படைத்துப்பொன் றுடைத்திட்பன்
தணைக்குட்டும் படுத்திப்பண்
கடிப்புட்பங் கலைச்சுற்றும்
பதத்தப்பண் புறச்சிற்றம்
பலத்திற்கண் களித்தப்பைம்
புனத்திற்செங் குறத்திப்பெண் பெருமாளே.(கஉ)

603.

திருடிக ளிணக்கிச் சம்ப ளம்பறி
நடுவிகள் மயக்கிச்†சங்க முண்கிகள்
‡ சிதடிகள் மூலைக்கச் சும்பல் கண்டிகள் சதிகாரர்-

செவிடிகள் மதப்பட் டுங்கு குண்டிகள்
அசடிகள் §பிணக்கிட் டும்பு றம்பிகள்
செழுமிக ளழைத்திச் சங்கொ ளுஞ்செயர் வெகுமோகக்;

குருடிகள் நகைத்திட் டம்பு லம்புக
ளுதடிகள் கணக்கிட் டும்பி ணங்கிகள்
‖குசலிகள் ¶மருத்திட் டுங்கொ டுங்குணர் விழியாலே-

கொளுவிகள் மினுக்குச் oசங்$கி ரங்கிகள்
நடனமு நடித்திட் **டொங்கு சண்டிகள்
குணமதில் முழுச்சுத் தசங்க்ய சங்கிக ளுறவாமோ;

இருடிய ரினத்துற் றும்ப தங்கொளு
மறையவ னிலத்தொக் குஞ்சு கம்பெறு
மிமையவ ரினக்கட் டுங்கு லைந்திட வருசூரர்-

---

* படை துப்பு ஒன்றடை திட்பன் = படைக்கும் வல்லமை யுடைய வலியோனுகிய பிரமன்.

† சங்கம் = சையோகம். ‡ சிதடிகள் = அறிவிலிகள்.

§ பிணக்கிட்டும் = பிணக்கிடும். ‖ குசலிகள் = தந்திரவாதிகள்.

¶ மருத்திட்டும் = மருத்திடும் = மருந்திடும்.

o சங்கு = வஞ்சனை. $இரங்கல் = ஒலித்தல். **ஒங்கு = ஓங்கு.

இபமொடு *வெதித்தச் சிங்க மும்பல
இரதமொ †டெதத்திக் கும்பி ளந்திட
இவுளியி ரதத்துற் றங்க மங்கிட விடும்வேலா ;

‡அரிகரி யுரித்திட் டங்க சுன்புர
மெரிதர நகைத்துப் பங்க யன்சிர
மளவொடு மறுத்துப் பண்ட ணிந்தவ ரருள்கோனே-

அமரர்த மகட்கிட் டம்பு ரிந்துரல்
குறவர்த மகட்பக் கஞ்சி றந்துற
அழகிய திருச்சிற் றம்ப லம்புகு பெருமாளே. (கசு)

604.

கொந்த ரங்குழ லிந்து வண்புரு
வங்கள் கண்கய லுஞ்ச ரங்கணை
கொண்ட ரம்பைய ரந்த முஞ்சசி துண்டமாதர் -

கொந்த ளங்கதி ரின்கு லங்களி
லுஞ்சு ழன்றிர சட்ப லங்கனி
கொண்ட ரண்பித ழின்ச கங்குயி லின்சொல்மேவுந்;

தந்த வந்தர ளஞ்சி றந்தெழு
கந்த ரங்கமு கென்ப பைங்கமை
தண்பு யந்தளி ரின்கு டங்கைய ரம்பொனரந் -

தந்தி யின்குவ டிந்த னங்களி
ரண்டை யுங்குலை கொண்டு விண்டவர்
தங்க டம்படி யுங்க வண்டிய சிந்தையாமோ ;

மந்த ரங்கட லுஞ்சு ழன்றமிர்
தங்க டைந்தவ னஞ்சு \மங்குலி
மந்தி ரஞ்செல்வ முஞ்ச கம்பெற எந்தவாழ்வும் -

---

*வெதித்த=வேதித்த: பேதித்த. †எதத் திக்கும்=எந்தத் திக்கும்.
‡அரி=நரமடங்கல். \ மங்குலி=இந்திரன்.

வந்த ரம்பையெ ணும்ப கிர்ந்துக
டங்கொ ளுந்திரு மங்கை பங்கினன்
வண்டர் லங்கையு ளன்சி ரம்பொடி கண்டமாயோன்;
உந்தி யின்புவ னங்க ளெங்குமெ
டங்க வுண்டகு டங்கை யன்புக
ழொண்பு ரம்பொடி கண்ட எந்தையர் பங்கின்மேவும்-
உம்ப ரின்கலை மங்கை சங்கரி
மைந்த னென்றய ணும்பு கழ்ந்திட
வொண்ப ரந்திரு வம்ப லந்திகழ் தம்பிரானே. (கநி)

605.

தியங்குஞ்சஞ் சலந்துன்பங்
கடந்தொந்தஞ் செறிந்தைந்திந்
த்ரியம்பந்தந் தருந்துன்பம் படுமேழை-
* திதம்பண்பொன் றிலன்பண்டன்
† தலன்குண்டன் சலன்கண்டன்
தெளிந்துன்றன் பழந்தொண்டென் றுயர்வாகப்;
புயங்கந்திங் களின்துண்டங்
குருந்தின்கொந் தயன்றன்கம்
பொருந்துங்கங் கலந்தஞ்செஞ் சடைசூடி-
புகழ்ந்துங்கண் டுகந்துங்கும்
பிடுஞ்செம்பொன் சிலம்பென்றும்
புலம்பும்பங் கயந்தந்தென் குறைதீராய்;
இயம்புஞ்சம் புகந்துன்றுஞ்
சுணங்கன்செம் பருந்தங்கங்
கிணங்குஞ்‡செந் தடங்கண்டுங் களிகூர-
இடும்பைங்கண் சிரங்கண்டம்
பதந்தந்தங் கரஞ்சந்தொன்
றெறும்புஞ்சிந் திடும்பங்கஞ் செயும்வேலா;

---

* திதம்=நிலைமையான. † தலன்=ஞானவன்.
‡ செந்தடம்=ரணகளம்.

தயங்கும்பைஞ் சுரும்பெங்குந்
தனந்தந்தந் தனந்தந்தந்
தடந்தண்பங் கயங்கொஞ்சுஞ் சிறுகூரா-

தவங்கொண்டுஞ் செபங்கொண்டுஞ்
சிவங்கொண்டும் ப்ரியங்கொண்டுந்
தலந்துன்றம் பலந்தங்கும் பெருமாளே. (கசு)

606.

பருவம் பணைத்தி ரண்டு கரிகொம் பெனத்தி ரண்டு
பவளம் பதித்த செம்பொ னிறமார்பிற்-
படருங் கனத்த கொங்கை மினல்கொந் தளித்து சிந்த
பலவிஞ் சையைப் புலம்பி யழகான ;

புருவஞ் சுழற்றி யிந்த்ர தநுவந் துதித்த தென்று
புளகஞ் செலுத்தி ரண்டு கயல்மேவும்-
பொறிகண் சுழற்றி *ரம்ப பரிசம் பயிற்றி மந்த்ர
பொடிகொண் டழிக்கும் வஞ்சர் உறவாமோ ;

உருவந் தரித்து கந்து கரமும் பிடித்து வந்து
உறவும் பிடித்†த ணங்கை வனமீதே-
ஒளிர்கொம் பிணைச்ச வந்த ரியவும் பலிக்கொ ணர்ந்து
ஒளிர்வஞ் சியைப்பு ணர்ந்த மணிமார்பா ;

செருவெங் களத்தில் வந்த அவுணன் தெறித்து மங்க
சிவமஞ் செழுத்தை மூந்த விடுவோனே-
தினமுங் களித்து செம்பொ னுலகந் துதித்தி றைஞ்சு
திருவம் பலத்த மர்ந்த பெருமாளே. (கள)

---

* ரம்ப = நிரம்ப.

† அணங்கு ஐ வன மீதே = தெய்வத்தன்மை பொருந்திய அழகிய கற்பக வனத்திலே.

607.

மதவெங் கரிக்கி ரண்டு வலுகொம் பெனத்தி ரண்டு
வளருந் தனத்த ணிந்த மணியாரம்-

வளைசெங் கையிற்சி றந்த வொளிகண் டு*நித்திலங்கு
வரருந் திகைத்தி ரங்க வருமானுர் ;

விதவிங் கிதப்ரி யங்கள் நகைகொஞ் சுதற்கு ணங்கள்
மிகைகண் டுறக்க லங்கி மருளாதே-

†விடுசெங் கையற்று ணர்ந்து வலம்வந் துணைப்பு கழ்ந்து
‡மிகவிஞ்சு பொற்ப தங்கள் தருவாயே ;

நதியுந் திருக்க ரந்த மதியுஞ் சடைக்க ணிந்த
நடமம் பருத்தி ருந்த கயிலாய-

நகமங் கையிற்பி டுங்கு மசுரன் சிரத்தொ டுங்கம்
நவதுங்க ரத்த முந்து திரடோளுஞ் ;

சிதையும் படிக்கொ ரம்பு தணிமூன் தொடுத்த கொண்டல்
திறல்செங்க ணச்சு தன்றன் மருகோனே-

தினமுங் கருத்து ணர்ந்து சுரர்வந் துறப்ப ணிந்த
திருவம் பலத்த மர்ந்த பெருமாளே. (கஅ)

608.

முகசந்திர புருவஞ்சிலே விழியுங்கயல் நீல
முகிலங்குழ லொளிர்தொங்கலொ டிசைவண்டுகள் பாட
மொழியுங்கிளி யிதழ்பங்கய நகைசங்கொளி காதிற்
குழையாட-

முழவங்கர சமுகம்பரி மளகுங்கும வாச
முலையின்பர சுகடங்குவ டிணைகொண்டுரல் மார்பில்
முதுஞ்சிறு பவளந்தர ளவடந்தொடை யாடக்
கொடிபோலத் ;

---

* நித்து = நீத்து : துறந்து. † விடு = விட்டு.
‡ மிக = மேன்மையுடைய.

துகிரின்கொடி யொடியும்படி நடனந்தொடை வாழை
மறையும்படி *துயல்சுந்தர சுகமங்கைய ரோடு
துதைபஞ்சணை மிசையங்கசன் ரதியின்பம தாகச்
செயல்மேவித்-

தொடைசிந்திட மொழிகொஞ்சிட அளகஞ்சுழ லாட
விழிதுஞ்சிட இடை †தொய்ஞ்சிட மயல்கொண்
‡ டணைகீனுஞ்]
சுகசந்திர முகமும்பத அழகுந்தமி யேனுக் கருள்வாயே;

§அகரந்திரு ||உயிர்பண்புற அரியென்பது மாகி
உறையுஞ்சுட ரொளியென்கணில் வளருஞ்சிவ காமி
அழுதம்பொழி பரையந்தரி உமைபங்கர ரூருக் கொருசேயே-

அசுரன்சிர மிரதம்பரி சிலையுங்கெட கோடு
சரமும்பல படையும் ¶பொடி கடலுங்கிரி சாய
அமர்கொண்டயில் விடுசெங்கர வொளிசெங்கதிர் போலத்
திகழ்வோனே;

மகரங்கொடி நிலவின்குடை மதனன்திரு தாதை
மருகென்றணி விருதும்பல மூரசங்கலி யோத
மறையன்றலை யுடையும்படி நடனங்கொளு மாழைக்
கதிர்வேலா-

வடிவிந்திரன் மகள்சுந்தர மணமுங்கொடு மோக
சரசங்குற மகள்பங்கொடு வளர்தென்புலி யூரில்
மகிழும்புகழ் திருவம்பல மருவுங்கும ரேசப்
பெருமாளே. (ககூ)

---

* துயல் = அசைந்தாடுகின்ற.

† தொய்ஞ்சிட = தளர. ‡ அணைகீனும் = அணைஇனும்.

§ அகர அம் திரு = எல்லா உயிர்களோடும் மெய்களோடுங் கலந்தும் வேறாகத் தனித்தும் நிற்கும் அகர எழுத்துப்போலச் சித்தும் அசித்தும் ஆகிய பிரபஞ்சமுற்றுந் தோய்ந்தும் வேறாகத் தனித்தும் நிற்கின்ற செல்வி.

|| உயிர் பண்பு உற = ஆத்மகோடிகள் ரகூணையைப் பொருந்த.

¶ பொடி = பொடிந்து தூளாகி.

609.

*சந்திர வோலைகு லாவ கொங்கைகள்
†மந்தர மாலை நீர்த்த ‡ம்பநல்
சண்பக மாலைகு லாவி ளங்குழல் மஞ்சுபோலத்-

தண்கயல் வாளிக ணூரி ளம்பிறை
விண்புரு வாரிதழ் கோவை யின்கனி
தன்செய லார்நகை சோதி யின்கதிர் சங்குமேவுங் ;

கந்தரர் §தேமலு மார்ப ரம்பநல்
சந்தன சேறுட னுர்க வின்பெறு
கஞ்சுக மாமிட றூதை கொஞ்சிய ரம்பையாரைக்-

கண்களி கூர ||வெ காசை கொண்டவர்
பஞ்சணை மீதுகு லாவி னுந்திரு
கண்களி ராறுமி ராறு திண்புய மூங்கொள்வேனே ;

இந்திர லோகமு ளாரி தம்பெற
சந்திர சூரியர் தேர்க டந்திட
எண்கிரி சூர்கு ழாமி றந்திட கண்டவேலா-

இந்திரை கேள்வர்பி தாம கன்கதி
ரிந்துச டாதரன் வாச வன்தொழு
தின்புற வேமனு நூல்வி ளம்பிய கந்தவேளே ;

¶சிந்துர மால்குவ டார்த னஞ்சிறு
பெண்கள்சி காமணி மோக வஞ்சியர்
செந்தினை வாழ்வளி நாய கொண்குக அன்பரோது-

செந்தமிழ் ஞானத டாக மென்சிவ
கங்கைய ளாவுமெ கா சிதம்பர
திண்சபை மேவுமெ ஞான வுந்தர தம்பிரானே. (உ0)

---

* சந்திரவோலை = சந்திரனைப்போற் சீதள காந்தியைத் தருங் காதோலை. † மந்தரம் ஆல = மந்தரகிரிபோல் அசைய.
‡ நல் நீர் ததும்ப = நல்ல நீர்மை பெருக.
§ தேமலும் மார் பரம்ப எனப்பிரிக்க; பரம்ப = பரவ.
|| வெகு ஆசை. ¶ சிந்தூரம் = செங் குங்குமம். oமலை = மன்னை.

பு. 610.

தாய மாய வீடு மீறிய கூடு நந்து
புற்பு தந்த னிற்கு ரம்பை கொண்டுநாளுங்-
காசி லாசை தேடி வாழ்வினை நாடி யிந்திரி
யப்ர மந்த டித்த லைந்து சிந்தைவேறுய் ;
வேயி லாய தோள மாமட வார்கள் பங்க
யத்து கொங்கை யுற்றி ணைங்கி நொந்திடாதே-
வேத கீத போத மோனமெய் ஞான நந்த
மூற்றி டின்ப முத்தி யொன்று தந்திடாயோ ;
மாய வீர தீர சூரர்கள் பாற நின்ற
விக்ர மங்கொள் வெற்பி டந்த செங்கைவேலா-
வாகை வேடர் பேதை காதல வேழ மங்கை
யைப்பு ணர்ந்த வெற்ப கந்த செந்தில்வேளே ;
ஆயும் வேத கீத மேழிசை பாட *வஞ்செ
முத்த ழங்க முட்ட நின்று துன்றுசோதீ-
ஆதி நாத நாடு நாடக சாலை யம்ப
லச்சி தம்ப ரத்த மர்ந்த தம்பிரானே. (உக)

611.

அவகுண விரகனே வேதாள ரூபனே
அசடனே மசடனே ஆசார ஈனனே
அகதியை மறவனே †ஆதாளி வாயனே அஞ்சுபூதம்-
‡அடைகிய §சவடனே மோடாதி மோடனே
அழிகரு வழிவரு வீணுதி வீணனே
அழுகலை யவிசலை ஆருன ஊணனே அன்பிலாத ;

---

* அஞ்செழுத்து தழங்க என்பது அஞ்செழுத் தழங்க என வந்தது; தழங்க = முழங்க.

† ஆதாளி வாயன் = வீம்பு பேசுவோன்.

‡ அடைகிய = ஒதுக்கிய. § சவடு = வண்டல்.

கவடணை விகடணை நாலு விகாரணை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியணை அலியணை *ஆதேச வாழ்வணை வெம்பிவீழுங்-
களியணை யறிவுரை பேணுத மாதுட
கசனியை யசனியை மாபாத ஞகிய
கதியிலி தணையடி நாயேண யாளுவ தெந்தநாளோ ;
மவுலியி லழகிய பாதாள லோகனு
மரகத முழுகிய †காகோத ராஜனு
மநுநெறி யுடன்வளர் சோணுடர் கோனுட னும்பர்சேரும்-
மகபதி புகழ்புலி யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வாளுடர் கோவென
மலைமக ளுமைதரு வாழ்வே மனோக மன்றளாடும் ;
சிவசிவ ஹரஹர தேவா நமோநம
தெரிசன பரகதி யாளுய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோநம செஞ்சொல்சேருந்-
திருதரு கலவி மணுளா நமோநம
திரிபுர மெரிசெய்த கோவே நமோநம
ஜெயஜெய ஹரஹர தேவா சுராதிபர் தம்பிரானே. (உஉ)

612.

கட்டி முண்டகர பாலி யங்கிதணை
முட்டி யண்டமொடு தாவி விந்துவொலி
கத்த மந்திரவ தான வெண்புரவி மிசையேறிக்-
கற்ப கந்தெருவில் வீதி கொண்டுசுடர்
பட்டி மண்டபமு டாடி யிந்துவொடு
கட்டி விந்துபிச காமல் வெண்பொடிகொ டசையாமற் ;
சுட்டு வெம்புரசு முக விஞ்சைகொடு
தத்து வங்கள்விழ சாடி யெண் குணவர்
சொர்க்கம் வந்துகையு ளாக எந்தைபத முறமேவித்-

---

* ஆதேசம் = திரிபு.

† காகோத ராஜன் = சர்ப்பராஜ ஞகிய பதஞ்சலி.

துக்கம் வெந்துவிழ ஞான மூண்டுகுடில்
வச்சி ரங்களென மேனி தங்கமுற
சுத்த கம்புகுத வேத விந்தையொடு புகழ்வேனே;
*எட்டி ரண்டுமறி யாத என்செவியி
லெட்டி ரண்டுமிது வா†மி லிங்கமென
எட்டி ரண்டும்வெளி யாமொ ழிந்தகுரு முருகோனே-
‡எட்டி ரண்டுதிசை யோட செங்குருதி
யெட்டி ரண்டுமுரு வாகி வஞ்சகர்மெ
லெட்டி ரண்டுதிசை யோர்கள் பொன்றஅயில்
விடுவோனே;
செட்டி யென்றுஞ்சிவ காமி தனபதியில்
கட்டு செங்கைவளை கூறு மெந்தையிட
சித்த முங்||குளிர நாதி வண்பொருளை நவில்வோனே-
செட்டி யென்றுவன மேவி ¶யின்பரச
சத்தி யின்செயலி ஞளை யன்புருக
o தெட்டி வந்துபுலி யூரீன் மன்றுள்வளர் பெருமாளே.()

இதன் முற்பாதியின் பதவுரை.

கட்டி = பிராண வாசியைப் பாழில் ஓடவொட்டாமல் அதன் ஸ்தானத்திற் பிடித்துக்கட்டி,—முண்டக அரபாலி அங்கிதனை = மூலாதார கமலத்துள்ள அருள்பாலிக்குஞ் சிவாக்கினியை,—மூட்டி = மூண்டு எழச்செய்து,—அண்டமொடு தாவி = அண்ட மாகிய கபாலபரியந்தம் தாவச்செய்து,—விந்து ஒலி கத்த = விந்து

---

* எட்டு இரண்டு = அகார உகாரங்கள்; அவற்றின் பிரபாவம் குருமுகமாக உணரற்பாலது. "பட்டி மண்டப மேற்றினை யேற்றினை, எட்டி னோடிரண் டும்மறி யேனையே" என்பது திருவாசகம்.

† இலிங்கம் = சிவக்குறி.

‡ எட்டு இரண்டு திசை = அஷ்டதிக்குக்களும் கீழும்மேலும்.

§ சிவகாமி தன் பதியில் = தேவிக்கு ஆதிக்கஸ்தான மாகிய மதுரையில். || குளிர அநாதி என்று பிரிக்க. ¶ இன்ப ரச சத்தியின் செயலினை = இச்சா சத்தி மயமான வள்ளிநாயகியை.

o தெட்டி = எத்தி.

நாதம் தோன்றிமுழங்க,—மந்திர அவதான வெண்புரவி மிசை ஏறி=கட்டப்பட்ட கூடத்திற் சாவதானமாக நிற்கும் அச் சுவேதப் புரவியின்மேல் ஆரோகணித்து,—கற்பக அம் தெருவில்=கற்பகம் போல் விரும்பியவெல்லாம் அளிக்கத்தக்க அழகிய மேலைச் சிவ வீதியில்,—வீதிகொண்டு=நேராக ஓடச்செலுத்தி,—சுட்டர் பட்டி மண்டபம்=எல்லாத் தத்துவங்களும் ஒன்றுபடும் ஸ்தானமாகிய பிரகாசிக்கின்ற லலாடஸ்தான மண்டபத்தில்,—ஊடாடி=பிரத்தி யாகார தாரணை தியானதிகளைப் பழகி,—இந்துவொடு விந்து பிச காமல் கட்டி=சந்திரகலை சலியாமலும், விந்து கழலாமலும் உறுதி பெறக்கட்டி,—சுட்டு வெம் புரம் நீறு ஆக=திரிபுரமாகிய மும்மலங் களும் வெந்து நீறாகும்படிச் சுட்டு,—வெண்பொடிகொடு=அந்த வெண்ணீற்றை அணிந்து கொண்டு,—அசையாமல்=ஸ்தாபரமாக நின்று,—விஞ்சை கொடு=சித்து வித்தைக ளெல்லாங் கைவரப் பெற்று,—தத்துவங்கள் வீழ சாடி=தத்துவ சேஷ்டைகளெல்லாம் வேரற்று விழும்படிச் சாடி,—எண் குணவர் சொர்க்கம்=எண்குண ராகிய சிவபதவி,—வந்து கையுள் ஆக=கை கூடி வந்து சித்திக்க,— எந்தை பதம் உற மேவி=அச்சிவபதவியில் உற்றுப்பொருந்தி,— தீக்கம் வெந்து விழ=பிறவித் துன்பமென்பது பஸ்மீகரமாய்ப் போக,—ஞானம் உண்டு=ஞானமிர்த பானம் பண்ணி,—குடில் வச்சிரங்கள் என=தேகம் வச்சிர காய மாக,—மேனி தங்கம் உற= நிறம் தங்கவர்ண மாக,—சுத்த அகம் புகுத=நிர்மல வீடு கூட,— வேத விந்தையொடு=வேத வித்திரத்துடனே,—புகழ்வேனே= உனது திருப்புகழை யெடுத்துப் பாடுவேனே ?

பு. 613.

நெஞ்சினைப் போலுமன வஞ்சகக் கோளர்களை
நம்புதற் றீதெனநி னைந்துநாயேன்-
நண்*புகப் பாதமதி லன்புறத் தேடியுனை
நங்களப் பாசரண மென்றுகூறல்;
உன்செவிக் கேறலிகொல் † பெண்கள்‡மெற் பார்வையைகொல்
உன் சொலைத் தாழ்வுசெய்து மிஞ்சுவாரார்-

---

* உக=பெருக்க. † பெண்கள்=தெய்வயானையம்மை, வள்ளி யம்மை. ‡ மெல்=மேல்.

உன்றனக் கே*பரமும் என்றனக் கார்துணைவர்
உம்பருக் †காவதினின் வந்து‡தோணுய்;

கஞ்சனைத் தாவிமுடி முன்பு§குட் டேயமிகு
கண்களிப் பாகவிடு செங்கையோனே-

கண்கயற் பாவைகுற மங்கைபொற் ரூடழுவு
கஞ்சுகப் பான்மைபுனை பொன்செய்தோளாய்;

அஞ்சவெற் பேழுகடல் மங்கநிட் டூர்க்குலம்
அந்தரத் தேறவிடு கந்தவேளே-

அண்டமுற் பார்புகழு மெந்தைபொற் பூர்புலிசை
அம்பலத் தாடுமவர் தம்பிரானே. (உச)

614.

செங்கலச மூலியார்பால் - சிந்தைபல தடுமாறி ;
அங்கமிக மெலியாதே - அன்புருக அருள்வாயே ;
செங்கைபிடி கொடியோனே-செஞ்சொல்தெரி புலவோனே;
மங்கையுமை தருசேயே - மன்றுள்வளர் பெருமாளே. (உஞ)

615.

கரிய மேக மெனுங்குழ லார்பிறை
நிலைகொள் வாகு வெனும்புரு வார்விழி
கயல்கள் வாளி யெனுஞ்செய லார்மதி துண்டமாதர்-

கழுக கீரவர் புயங்கழை யார்தன
மலைக ளாஇணை யுங்குவ டாரக
கமல வாழை மனுந்தொடை யார்சர சுங்கமாடை;

வரிய பாளித முந்துடை யாரிடை
துடிகள் நூலிய லுங்கவி ஞரல்குல்
மணமு லாவிய ரம்பையி னர்பொருள் சங்கமாதர்-

---

* பரம் = பாரம். † ஆவதினின் = ஆவதுபோல்.

‡ தோணுய் = தோற்றாய்.

§ குட்டி எய. ‖ அண்ட முதலான.

மயில்கள் போல நடம்புரி வாரியல்
குணமி லாத வியன்செய லார்வலை
மசகி நாயெ னழிந்திட வோவுன தன்புதாராய்;
சரியி லாத சயம்பவி யார்முகி
லளக பார பொனின்சடை யாள்சிவை
சருவ லோக சவுந்தரி யாளருள் கந்தவேளே-
சதப ணம குடம்பொடி யாய்விட
அவுணர் சேனை மடிந்திட வேயொரு
தழல்கொள் வேலை யெறிந்திடு சேவக செம்பொன்வாகா;
அரிய மேனி யிலங்கை யிராவணன்
முடிகள் வீழ சரந்தொடு மாயவன்
அகில மீரெழு முண்டவன் மாமரு கண்டரோதும்-
அழகு சோபித அங்கொளு மானன
விபுதை மோகி குறிஞ்சியின் வாழ்வளி
அருள்கொ டாடி சிதம்பர மேவிய தம்பிரானே. (உசு)

616.

கூந்த லாழவி ரிந்து சரிந்திட
காந்து மாலைகு லைந்து பளிங்கிட
கூர்ந்த வாள்விழி கெண்டை கலங்கிட கொங்கைதானுங்-
*கூண்க ளாமென பொங்கர லம்பெறு
காந்தள் மேனிம ருங்குது வண்டிட
கூர்ந்த ஆடைகு லைந்துப ரண்டிர சங்கள்பாயச்;
சாந்து வேர்வின ழிந்து மணந்தப
வோங்க வாவில்க லந்து முகங்கொடு
தான்ப லாசுவை யின்சுவை கண்டித முண்டுமோகந்-
தாம்பு மமயி லின்குரல் கொஞ்சிட
வாஞ்சை மாதரு டன்புள கங்கொடு
சார்ந்து நாயென ழிந்துவி ழுந்துடல் மங்குவேனோ;

---

* கூண்கள் = குண்கள் = குன்றுகள்; குன்று என்பது குண் என மருவி முதல் நீண்டது.

தீந்த தோதக தந்தன திந்திமி
ஆண்ட பேரிகை துந்துமி சங்கொடு
சேர்ந்த பூரிகை பம்பை தவண்டைகள் பொங்குசூரைச்-
சேண்சு லாமகு டம்பொடி தம்பட
வோங்க வேழ்கட லுஞ்சுவ றங்கையில்
சேந்த வேலது கொண்டு நடம்பயில் கந்தவேளே;
மாந்த ணுருவ னங்குயில் கொஞ்சிட
தேங்கு வாழைக ரும்புகள் விஞ்சிடு
வான்கு லாவுசி தம்பரம் வந்தமர் செங்கைவேலா-
மாண்ப்ர காசத னங்கிரி சுந்தர
மேய்ந்த நாயகி சம்பைம ருங்குபொன்
வார்ந்த ரூபிகு றம்பெண் வணங்கிய தம்பிரானே. (உஎ)

617.

அத்த னன்னை யில்லம் வைத்த சொன்னம் வெள்ளி
அத்தை நண்ணு செல்வ ருடனுகி-
அத்து பண்ணு கல்வி சுற்ற மென்னு மல்ல
லற்று நின்னை வல்ல படிபாடி;
முத்த னென்ன வல்லி யத்த னென்ன வள்ளி
முத்த னென்ன வுள்ள முணராதே-
முட்ட வெண்மை யுள்ள பட்ட னெண்மை கொள்ளு
முட்ட னிங்ங னேவ தொழியாதோ;
தித்தி மன்னு தில்லை நிர்த்தர் கண்ணி னுள்ளு
தித்து மன்னு பிள்ளை முருகோனே-
சித்தி மன்னு செய்ய சத்தி துன்னு கைய
சித்ர வண்ண வல்லி யலர்சூடும்;
பத்த ருண்மை சொல்லு ளுற்ற செம்மல் * வெள்ளி
பத்தர் கன்னி புல்லு மணிமார்பா-
பச்சை வன்னி யல்லி செச்சை சென்னி யுள்ள
பச்சை மஞ்ஞை வல்ல பெருமாளே. (உஅ)

* வெள் இபத்தர் = வெள்ளை யானையை யுடைய தேவேந்திரன்.

618.

இருள்காட்டு செவ்வி திதிகாட்டி வில்லி
னுதல்காட்டி வெல்லு மிருபாண-
இயல்காட்டு கொல்கு வளைகாட்டி முல்லை
நகைகாட்டு வல்லி யிடைமாதர்;
மருள்காட்டி நல்கு ரவுகாட்டு மில்ல
இடுகாட்டி னெல்லை நடவாத-
வழிகாட்டி நல்ல நிவுகாட்டி மெல்ல
* வினை வாட்டி யல்லல் செயலாமோ-
தெருள்காட்டு தொல்லை மறைகாட்டு மல்லல்
மொழிகாட்டு தில்லை யிளையோனே-
திணைகாட்டு கொல்லை வழிகாட்ட வல்ல
குறவாட்டி புல்லு மணிமார்பா;
அருள்காட்டு கல்வி நெறிகாட்டு செல்வ
அடல்காட்டு வல்ல சுரர்கோபா-
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே. (உசு)

619.

முல்லைமலர் போலுமுத் தாயுதிர்ந் தானநகை
வள்ளைகொடி போலுநற் காதிலங் காடுகுழை
முல்லைமலர் மாலைசுற் றுடுகொங் தாருகுழ லலைபோதம்-
மொள்குகிலை வாணுதற் பார்வையம் பானகையல்
கிள்ளைகுர லாரிதழ்ப் பூவெனும் போதுமுக
முன்னல்கமு கார்களத் தோய்சுணங் காயமுலை மலையாளை;
வல்லகுவ டாலிலைப் போலுசந் தானவயி
றுள்ளதுகில் நூலிடைக் காமபண் டாரஅல்குல்
† வழ்ழைதொடை யார்மலர்க் காலணிந் தாடுபரி புரவோசை-

---

* வினை வாட்டி அல்லல் செயல் ஆமோ = வினையை வாட்டிய பின்னரும் அது துன்பஞ் செய்ய லாகுமா ?

† வழ்ழை = வாழை.

மல்லிசலி யாடபட் டாடைகொண் டாடமயல்
தள்ளுநடை யோடுசற் றேமொழிந் தாசைகொடு
வல்லவர்கள் போலபொற் சூறைகொண் டார்கள்மய
லுறவாமோ;

அல்லல்வினை போகசத் தாதிவிண் டோடநய
வுள்ளமுற வாகவைத் தாளுமெந் தாதைமகி
ழுள்ளமைய ஞானவித் தோதுகந் தாகுமர முருகோனே-

அன்னநடை யாள்குறப் பாவைபந் தாடுவிர
லென்னுடைய தாய்வெண்முத் தார்கடம் பாடுகுழ
லன்னவலி சேர்தனக் கோடிரண் டானவளி மணவாளா;

செல்லுமுக ஏழ்கடற் பாழிவிண் டோடதிர
வல்லசுரர் சேனபட் டேமடிந் தேகுருதி
செல்லதிசை யோடுவிட் டாடுசிங் காரமுக வடிவேலா-

தெள்ளுதமிழ் பாடியிட் டாசைகொண் டாட *சசி
வல்லியொடு கூடிதிக் கோர்கள்கொண் டாடஇயல்
தில்லைநகர் கோபுரத் தேமகிழ்ந் தேகுலவு பெருமாளே.()

620.

அடப்பக் கம்பிடித்துத் தோளொடு தோள்பொர
வளைத்துச் செங்கரத்திற் சீரொடு பாவொடு
அணுக்கிச் †செந்துணுக்கிற் ‡கோவித ழேறல்க ளதுகோதி-

அணிப்பொற் பங்கயத்துப் பூண்முலை மேகலை
நெகிழ்த்துப்§பஞ்சரித்துத் தாபண மேயென
||அருட்டிக் கண்சிமிட்டிப் பேசிய மாதர்க ளுறவோடே;

படிச்சித் தங்களித்துத் தான்மிக மாயைகள்
படித்துப் பண்பயிற்றிக் காதல்கள் மேல்கொள
பசப்பிப் பின்பிணக்கைக் கூறிய வீணிக ளவமாயப்-

---

* சசி வல்லி = இந்திராணியின் மக ளாகிய தெய்வயானை.
† செந்துணுக்கில் = சிவந்த பவளத்துண்டை யொத்த.
‡ கோவிதழ் = கோப இதழ் = இந்திரகோபத்தை யொத்த இதழ்.
§ பஞ்சரித்து = குதலைமொழி பேசி.
|| அருட்டி = சாக்கிரதைபண்ணி.

*பரத்தைக் †குண்டுணர்த்துத் தோதக பேதைகள்
பழிக்குட் சஞ்சரித்துப் போடிடு மூடனை
பரத்திற் றண்பதத்துப் போதக மீதென அருள்தாராய்;
தடக்கைத் தண்டெடுத்துச் சூரரை வீரரை
நொறுக்கிப் பொன்றவிட்டுத் தூளெழ நீறெழ
தகர்த்துப் பந்தடித்துச் சூடிய தோரண கலிவீரா-
தகட்டுப் பொன்சுவட்டுப் பூவணை மேடையில்
சமைப்பித் தங்கொருத்திக் கோதில மாமயில்
தனிப்பொற் பைம்புனத்திற் கோகில மாவளி மணவாளா;
திடத்திற் றிண்பொருப்பைத் தோள்கொடு சாடிய
அரக்கத் திண்குலத்தைச் சூறைகொள் வீரிய
திருப்பொற் பங்கயத்துக் கேசவர் மாயவர் அறியாமல்-
திமித்தத் திந்திமித்தத் தோவென ஆடிய
சமத்தர்ப் பொன்புவிக்குட் டேவர்க ணுயக
திருச்சிற் றம்பலத்துட் கோபுர மேவிய பெருமாளே. (ஙக)

621.

‡அக்குப் பீளைமு ளாவிளை மூளையொ
டுப்புக் §காய்பனி நீர்மயிர் தோல்||குடி
லப்புச் சீபுழு வோடடை யார்தசை யுறமேவி-
¶அத்திப் பால்பல நாடிகு ழா oயள்வ
ழுப்புச் சார்வல மேவிளை யூளைகொ
ளச்சுத் தோல்குடி லாமதி லேபொறி விரகாளர்;
$சுக்கத் தாழ்கட லேசுக மாமென
புக்கிட் டாசைபெ ணைசம ணைசைகள்
தொக்குத் தீவினை யூழ்வினை காலமொ டதனூலே-

---

* பரத்தை = பரத்தைகள்.
† குண்டு உணர்த்து = தாழ்வான செய்கையை யுணர்த்தும்.
‡ அக்குப் பீளை = கண்பீளை. § காய் = புரைகுழல்.
|| குடிலப் பூச்சி = வளைவான நாகப்பூச்சி.
¶ அத்தி = எலும்பு. o அள் வழுப்பு = காது குறும்பி.
$ சக்கம் = களவு; ஒதுக்கு.

துக்கத் தேபர வாமல் சதாசிவ
மூத்திக் கேசுக மாக பராபர
சொர்க்கப் பூமியி லேறிட வேபத மருள்வாயே;
தக்கத் தோகிட தாகிட தீகிட
செக்கச் சேகண தாகண தோகண
தத்தத் தானன மூகுட டாடுடு வெனதாளந்-
தத்திச் சூர்கு ழாமொடு தேர்பரி
கெட்டுக் கேவல மாய்கடல் மூழ்கிட
சத்திக் கேயிரை யாமென வேவிடு கதிர்வேலா;
திக்கத் தோகண தாவென வே *பொரு
†சொச்சத் தாதையர் தாமென வேதிரு
செக்கர்ப் பாதம தேபதி யாசுதி யவைபாடச்-
செப்பொற் பீலியு லாமயில் மாமிசை
பக்கத் தேகுற மாதொடு சீர்பெறு
தேற்குக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே. ()

622.

ஆரத் தோடணி மார்பினை யானைகள்
போருக் காமென மாமூலை யேகொடு
ஆயத் தூகினை மேவிய தூலிடை மடமாதர்-
ஆலைக் கோதினி லீர மிலாமன
நேசத் தோடுற வானவர் போலுவர்
‡ ஆருக் கேபொரு ளாமென வேநினை வதனுலே;
காருக் கேநிக ராகிய வோதிய
மாழைத் தோடணி காதொடு மோதிய
காலத் தூதர்கை வேலெனு நீள்விழி வலையாலே-
காதற் சாகர மூழ்கிய காமுகர்
மேலிட் டேயெறி §கீலிகள் நீலிகள்
காமத் தோடுற வாகையி லாவருள் புரிவாயே;

---

* பொரு = நடம்பொரு : நடனஞ் செய்கின்ற.
† சொச்சம் = நிர்மலம். ‡ ஆருக்கே = யாராலே.
§ கீலிகள் = கீலகிகள் : தந்திரவாதிகள்.

சூரர்க் கேயொரு கோளரி யாமென
நீலத் தோகைம யூரம தேறிய
தூளிக் கேகடல் தூர நிசாசரர் களமீதே-
சோரிக் கேவெகு ரூபம தாவடு
தானத் தானன தானன தானன
சூழிட் டேபல *சோகுக ளாடவெ பொரும்வேலா;
வீரத் தால்வல ராவண னுர்முடி-
போகத் தாலொரு வாளியை யேவிய
மேகத் தேநிக ராகிய மேனியன் மருகோனே-
வேதத் தோன்மூத லாகிய தேவர்கள்
பூசித் தேதொழ வாழ்புலி யூரினில்
மேலைக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே. (ஈஈ)

623.

கோதைக் காதி மெத்த மோதிக் கேள்வி யற்ற
காமப் பூச லிட்டு மதியாதே-
காசொத் தேய்ந்தி றத்த வோதிக் காவ னத்தி
னீழற் கேத ருக்கி விரோயாடிச்;
சேதித் தேக ருத்தை நேருற் றேபெ ருத்த
சேலொத் தேவ ருத்தும் விழிமானுர்-
தேமற் பார வெற்பில் மூழ்கித் தாப மிக்க
தீமைக் காவி தப்ப நெறிதாராய்;
மாதைக் காத லித்து வேடக் கான கத்து
வாசத் தாள்சி வப்ப வருவோனே-
வாரிக் கேயொ ளித்த மாயச் சூரை வெட்டி
மாளப் போர்தொ லைத்த வடிவேலா;
வீதித் தேர்ந டத்து தூளத் தால ருக்கன்
வீரத் தேர்ம றைத்த புலியூர்வாழ்-
மேலைக் கோபு ரத்து மேவிக் கேள்வி மிக்க
வேதத் தோர்து திக்க பெருமாளே. (ஈச)

* சோகுகள் = பேய்கள்.

624.

கொள்ளை யாசைக் காரிகள் பாதக
வல்ல மாயக் காரிகள் சூறைகள்
கொள்ளும் ஆயக் காரிகள் வீணிகள் விழியாலே-

கொல்லும் லீலைக் காரிகள் யாரையும்
வெல்லு மோகக் காரிகள் சூதுசொல்
கொவ்வை வாய்நிட் டூரிகள் மேல்விழு மவர்போலே;

உள்ள *நோவைத் தேயுற வாடியர்
அல்லை நேரொப் பாமன தோஷிகள்
உள்வி ரோதக் காரிகள் மாயையி லுழல்நாயேன்-

உய்ய வேபொற் றூள்களும் ஆறிரு
கையு நீபத் தார்முக மாறுமுன்
உள்ள ஞானப் போதமு நீதர வருவாயே;

கள்ள மாயத் தாருகன் மாமுடி-
துள்ள நீலத் தோகையின் மீதொரு
கையின் வேல்தொட் டேவிய சேவக மூருகோனே-

கல்வி லேபொற் றூள்பட வேயது
நல்ல ரூபத் தேவர காணிடை
கௌவை தீரப் போகுமி ராகவன் மருகோனே;

தெள்ளி †யேமுற்‡றீரமு ணேதிய
சொல்வ ழாமற் றுணெரு வாறுறு
செல்வி மார்பிற் பூஷண மாயணி மணவாளா-

தெள்ளு மேனற் சூழ்புன மேவிய
வள்ளி வேளைக் காரம ணேகர
தில்லை மேலைக் கோபுர மேவிய பெருமாளே. (சுநி)

---

* நோவைத்து=நோவ வைத்து.

† ஏமுற்று=ஏமம் உற்று: இன்பமுற்று.

‡ ஈரம் முன் ஓதிய சொல் = அன்பினுலே முன்செய்த வாக்குத் தத்தம்.

625.

தாது மாமலர் முடியா லேபத
மூத நூபுர அடியா லேகர
தாள மாகிய நொடியா லேமடி பிடியாலே-

சாடை பேசிய வகையா லேமிகு
வாடை பூசிய நகையா லேபல
தாறு மாறுசொல் மிகையா லேயன நடையாலே;

மோதி மீறிய மூலியா லேமூலி
மீதி லேறிய கலியா லேவெகு
மோடி நாணய விலியா லேமையல் தருமானுர்-

மோக வாரிதி தனிலே நாடொறு
மூழ்கு வேனுன தடியா ராகிய
மோன ஞானிக ளுடனே சேரவு மருள்வாயே;

காத லாயருள் புரிவாய் நான்மறை
மூல மேயென வுடனே மாகரி
காண நேர்வரு திருமால் நாரணன் மருகோனே-

காதல் மாதவர் வலமே சூழ்சபை
நாத னுர்தம திடமே வாழ்கிவ
காம நாயகி தருபா லாபுலி சையில்வாழ்வே;

வேத நான்முறை வழுவா மேதினம்
வேள்வி யாலெழில் புனைமூ வாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே-

வீறு சேர்வரை யரசாய் மேவிய
மேரு மால்வரை யெனநீள் கோபுர
மேலை வாயிலின் மயில்மீ தேறிய பெருமாளே. ()

626.

எலும்புத் தோல்மயிர் நாடிகு ழாமிடை
இறுக்குச் சீபுழு வோடடை மூளைகள்
இரத்தச் சாகர நீர்மல மேவிய கும்பியோடை-

இளைப்புச் சோகைகள் வாதம் விலாவலி
உளைப்புச் சூலையொ டேவலு வாகிய
இரைப்புக் கேவல மூலவி யாதியொ டண்டவாதங் ;
குலைப்புக் காய்கனல் சீரிழி வீளையொ
டளைப்புக் காதடை கூனல்வி சூசிகை
குருட்டுக் கால்முட மூமையு ளுடறு கண்டமாலை-
குடிப்புக் கூனமி தேசத மாமென
எடுத்துப் பாழ்வினை யாலுழல் நாயெனு
னிடத்துத் தாள்பெற ஞான சதாசிவ அன்புதாராய்;
கெலிக்கப் போர்பொரு சூரர்கு ழாமுமி
ழிரத்தச் சேறெழ தேர்பரி யாளிகள்
கெடுத்திட் டேகடல் சூர்கிரி தூள்பட கண்டவேலா-
கிளர்ப்பொற் ரூளிச ராசர மேவிய
யசைத்துப் பூசைகொள் ஆயிப ராபரி
*கிழப்பொற் காளமெ லேறு†மெ நாயகி
பங்கின்மேவும்;
வலித்துத் தோள்மலை ராவண னைவன்
எடுத்தப் போதுடல் கீழ்விழ வேசெய்து
மகிழ்ப்பொற் பாதசி வாயந மோஅர சம்புபாலா-
மலைக்கொப் பாழுலை யாள்குற மாதினை
அணைத்துச் சீர்புலி யூர்பர மாகிய
வடக்குக் கோபுர வாசலில் மேவிய தம்பிரானே. ()

627.

நீல மாமுகில் போலும் வார்குழ
லார்கள் மாலுகு லாவ வேல்கணை
நீள வாள்விழி பார்வை காதிரு குழையாட-
நீடு மார்பணி யாட வோடிய
கோடு போலிணை யாட நூலிடை
நேச பாளித சோலை மாமயி லெனவேகிக் ;

* கிழமை பொன் காளை = உரிமையாகிய அழகிய காளை.
† எ நாயகி = எம் நாயகி = எம்முடைய பிராட்டி.

காலி னூபுர வோசை கோவென
ஆடி மால்கொடு நாணி யேவியர்
காய மோடணு பாகு பால்மொழி விலைமாதர்-

காத லாயவ ரோடு பாழ்வினை
மூழ்கி யேழ்நர காழ மூடனை
காரிர் பாருமை யாசி வாபத மருள்வாயே;

கோல மாமயி லேறி வார்குழை
யாட வேல்கொடு வீர வார்கழல்
கோடி கோடிடி யோசை போல்மிக *மெருதாளாய்க்-

கோகொ கோவென ஆழி பாடுகள்
தீவு தாடசு ரார்கு லாமொடு
கூள மாகவி ணேர்கள் வாழ்வுற விடும்வேலா;

நாலு †வேதமு டாடு வேதனை
யீண கேசவ னுர்ச கோதரி
நாதர் பாகம்வி டாள்சி காமணி உமைபாலா-

ஞான பூமிய தான பேர்புலி
யூரில் வாழ்தெய்வ யானை மாணெடு
நாலு கோபுர வாசல் மேவிய பெருமாளே. (நஅ)

628.

வாத பித்தமொடு சூலை விப்புருதி
யேறு கற்படுவ னீரை பொக்கிருமல்
‡ மாலை புற்றெழுத லாசல் பற்சனியொ §டுந்திமாலை-

மாச டைக்குருடு காத டைப்பு செவி
டுமை கெட்டவலி மூல ‖ முற்றுதரு
¶ மாலை யுற்றதொணு ரூறு சத்துவர்க ளுண்டகாயம்;

---

* மெரு = மேரு. † வேதம் ஊடாடு = வேதம் பயின்ற.
‡ மாலை = கண்டமாலை. § அந்திமாலை = மாலைக்கண்.
‖ முற்று தரு = முதிரும்படியான விருகூம்.
¶ மாலை யுற்ற = முறைமையாகப் பொருந்திய.

வேத வித்துபரி கோல முற்றுவிளை
யாடு வித்தகட லோட மொய்த்தபல
வேட மிட்டுபொரு ளாசை பற்றியுழல் *சிங்கியாலே-
வீடு கட்டிமய லாசை பட்டுவிழ
†வோசை கெட்டுமடி யாமல் மூத்திபெற
‡வீட ளித்துமயி லாடு சுத்தவெளி சிந்தியாதோ;
§ ஓத அத்திமுகி லோடு சர்ப்பமுடி
நீறு பட்டலற சூர வெற்பவுண
ரோடு பட்டுவிழ வேலை விட்டபுக ழுங்கிவேலா-
ஓக மச்சிவய சாமி சுத்தஅடி
யார்க ளுக்குமுப காரி பச்சையுமை
ஓர்பு றத்தருள்சி காம ணிக்கடவுள் தந்தசேயே;
ஆதி கற்பகவி நாய கற்குபிற
கான பொற்சரவ ணா|| ப ரப்பிரம
ஞதி யுற்றபொருள் ¶ஓது வித்தமைய றிந்தகோவே-
ஆசை பெற்றகுற மாதை நித்தவன
மேவி சுத்தமண மாடி நற்புலியு
ராட கப்படிக கோபுரத்தின்மகிழ் தம்பிரானே. ()

629.

சுரும்புற்ற பொழில்தோறும் விரும்புற்ற குயில்கூவ
துரந்துற்ற குளிர்வாடை யதனலுந்-
துலங்குற்ற மருவாளி விரைந்துற்ற படி o யால
தொடர்ந்துற்று வருமாதர் வசையாலும்;
அரும்புற்ற மலர்மேவு செழுங்கொற்ற அணையாலு
மடைந்திட்ட விடைமேவு மணியாலும்-

---

* சிங்கியாலே = அழிசெயலாலே.
† ஓசை கெட்டு = உள்ளோசையாகிய நாதம் போய்.
‡ வீடளித்து = வீடளிக்க.
§ ஓத அத்தி = ஓதத்தையுடைய கடல். || பரப்பிரம அஞ்தி.
¶ ஓதுவித்தமை = ஓதுவிக்குந் தன்மை. o ஆல = சோர.

அழிந்துற்ற மடமானை யறிந்*தற்ற மதுபேணி
அசைந்துற்ற மதுமாலை தரவேணும் ;
கருங்கொற்ற மதவேழ முனிந்துற்ற †கலிமேவி
கரந்துற்ற மடமானி னுடனேசார்-
கரும்புற்ற வயல்சூழ் பெரும்பற்ற புலியூரில்
களம்பற்றி நடமாடு மரன்வாழ்வே ;
இருந்துற்று மலர்பேணி யிடும்பத்தர் துயர்தீர
இதம்பெற்ற மயிலேறி வருகோவே-
இனந்துற்ற வருசூர னுருண்டிட்டு விழவேல்கொ
டெறிந்திட்டு விளையாடு பெருமாளே. (சo)

630.

இணங்கித் தட்பொடு பால்மொழி பேசிகள்
மணந்திட் டுச்சுக மாய்விளை யாடிகள்
இளஞ்சொற் செப்பிகள் சாதனை வீணிகள் கடிதாகும்-
இடும்பைப் பற்றிய தாமென மேயினர்
பெருஞ்சொற் பித்தனை தானும்வை யாதவர்
இரும்பிற் பற்றிய கூர்விழி மாதர்கள் எவரேனும் ;
பணஞ்சுற் றிக்கொளு பாயவு தாரிகள்
மணங்கட் டுக்குழல் வாசனை வீசிகள்
பலஞ்செப் பித்தர மீளழை யாதவர் அவரோடே-
பதந்துய்த் துக்கொடு தீமைய மாநர
கடைந்திட் டுச்சவ மாகிவி டாதுன
பதம்பற் றிப்புக ழானது கூறிட அருள்வாயே ;
வணங்கச் சித்தமி லாதஇ ராவணன்
சிரம்பத் துக்கெட வாளிக டாவியெ
மலங்கப் ‡பொக்கரை யீடழி மாதவன் மருகோனே-

---

* அற்றம் = சமயம். † கலி = காலி.
‡ பொக்கர் = பொய்யையுடைய இராக்கதர்.

மதம்பட் டுப்பொரு சூரபன் மாதியர்
குலங்கொட் டத்திகல் கூறிய மோடரை
வலைந்திட் டுக்கள மீதினி லேகொல விடும்வேலா ;

பிணம்பற் றிக்கழு கோடுபல் கூளிகள்
பிடுங்கிக் கொத்திட வேயம ராடியெ
பிளந்திட் டுப்பல மாமயி லேறிய மூருகோனே-

பிரிந்திட் டுப்பரி வாகிய ஞானிகள்
*சிலம்பத் தக்கழல் சேரவெ நாடிடு
பெரும்பற் றப்புலி யூர்தனில் மேவிய பெருமாளே.()

631.

†விடுங்கைக் கொத்தக டாவுடை யானிட
மடங்கிக் ‡கைச்சிறை யானஅ நேகமும்
விழுங்கப் பட்டற வேயற லோதியர் விழ்யாலே-

விரும்பத் தக்கன போகமு மோகமும்
விளம்பத் தக்கன ஞானமு மானமும்
§வெறுஞ்சுத் தச்சல மாய்வெளி யாயுயிர் விடுநாளில்;

இடுங்கட் டைக்கிரை யாயடி யேனுடல்
கிடந்திட் டுத்தம ரானவர் கோவென
இடங்கட் டிச்சுடு காடுபு காமுன மனதாலே-

இறந்திட் டுப்பெற வேகதி யாயினும்
இருந்திட் டுப்பெற வேமதி யாயினும்
இரண்டிற் றக்கதொ ரூதியம் நீதர இசைவாயே ;

---

* சிலம்பு அத்த கழல் சேர = சிலம்பையும் பொன்னுற் செய்யப்பட்ட வீரக்கழலையும் அணிந்த திருவடிகளைச் சேர.

† விடும் கைக்கு ஒத்த கடா=ஏறி நடத்துவற்கு ஏற்ற கருமைக்கடா.

‡ கைச் சிறையான=கைவசத்தி லிருந்த.

§ வெறும் சுத்த சலமாய்=வெறும் பொய்யாகி.

*கொடுங்கைப் பட்டம ராமர மேழுடன்
நடுங்கச் சுக்ரிவ னேடம ராடிய
சுரங்கைச் செற்றும கோததி தூளெழ நிருதேசன்-
குலங்கட் பட்டநி சாசரர் கோவென
இலங்கைக் குட்டழ லோனெழ வீடிய
†குமண்டைக் குத்திர ராவண னுர்முடி அடியோடே ;
பிடுங்கத் தொட்டச ராதிப னுரதி
ப்ரியங் ‡கொட் டக்கநன் மாமரு காஇயல்
ப்ரபஞ்சத் துக்கொரு பாவல னுரென விருதூ தும்-
ப்ரசண்டச் சொற்சிவ வேதசி காமணி
ப்ரபந்தத் துக்கொரு நாதச தாசிவ
பெரும்பற் றப்புலி யூர்தனில் மேவிய பெருமாளே.(சஉ)

632.

கொந்தள வோலைக ளாடப்பண்-
சங்கொளி போல்நகை வீசித்தண்
கொங்கைகள் மார்பினி லாடக்கொண் டையென்மேகம்-
§கொங்கெழு தோள்வளை யாடக்கண்
செங்கயல் வாளிகள் போலப்பண்
கொஞ்சிய கோகில மாகப்பொன் பறிகாரர் ;
தந்திர மாமென வேகிப்பொன்
தொங்கலொ டாரமு மாடச்செந்
தம்பல வாயொடு பேசிக்கொண் டுறவாடிச்-
சம்பள மீதென வோதிப்பின்
பஞ்சணை மேல்||மய லாடச்சஞ்
சங்கையில் மூளியர் பால்வைக்குஞ் செயல்தீராய் ;

---

* கொடுங்கை = கொடுமை
† குமண்டை = செல்வமேலீட்டா லுண்டாகுஞ் செருக்கு.
‡ கொட்டக்க = கொள்ளத்தக்க.
§ கொங்கு = வாசனை.
|| மயலாடு அச்சம் சங்கை இல் மூளியர் எனப்பிரிக்க.

அந்தக னுருயிர் போகப்பொன்
திண்புர மோடெரி பாயப்பண்
டங்கச னுருடல் வேகக்கண் *டழல்மேவி-
அண்டர்க ளோடட லார்தக்கன்
சந்திர சூரியர் வீழச்சென்
றம்பல மீதினி லாடத்தன் குருநாதா ;
சிந்தூ ரமோடரி தேர்வர்க்கம்
பொங்கமொ டேழ்கடல் சூர்பத்மன்
சிந்திட வேல்விடு வாகைத்திண் புயவேளே-
செங்குற மாதுமி னுளைக்கண்
டிங்கித மாயுற வாடிப்பண்
செந்தமிழ் மால்புலி யூர்நத்தம் பெருமாளே. (சக)

633.

நகையா லெத்திகள் வாயிற்றம்
பலமோ டெத்திகள் †நாணற்றின்
நயனு லெத்திகள் நாறற்புண் தொடைமாதர்-
நடையா லெத்திக ளாரக்கொங்
கையினு லெத்திகள் மோகத்தின்
நவிலா லெத்திகள் தோகைப்பைங் குழல்மேகச் ;
சிகையா லெத்திக ளாசைச் ‡சங்
கடியா லெத்திகள் பாடிப்பண்
திறனு லெத்திகள் பாரத்திண் தெருவூடே-
சிலர்கூ டிக்கொடு ஆடிக்கொண்
டுழல்வா ருக்குழல் நாயெற்குன்
செயலா லற்புத ஞானத்திண் கழல்தாராய் ;
பகையா ருட்கிட வேலைக்கொண்
டுவரா ழிக்கிரி நாகத்தின்
படமோ டிற்றிட சூரைச்சங் கரிசூரா-

---

* அழல்மேவி = தக்கன் செய்த யாகத்தினிடத்திற் சென்று.
† நாண் அற்று இன் நயனுல்; நயனுல் = நயனத்தால்.
‡ சம் கடி = சுகத்தைத்தரும் வாசனை.

பணஙா கத்திடை சேர்முத்தின்
சிவகா மிக்கொரு பாகத்தன்
பரிவால் சத்துப தேசிக்குங் குரவோனே ;

சுகஞா னக்கடல் மூழ்கத்தந்
தடியே னுக்கருள் பாலிக்குஞ்
சுடர்பா தக்குக னேமுத்தின் கழல்வீரா-

சுகரே சத்தன பாரச்செங்
குறமா தைக்கள வால்கித்தஞ்
சுகமூழ் கிப்புலி யூர்கத்தும் பெருமாளே. (சச)

634

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்-
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது ;

கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானுர்-
கடனுன தபய மடிமையு னடிமை
கருகியு னடிகள் தருவாயே ;

விழுதிக ழழகி மாகத வடிவி
விமலிமு னருளு முருகோனே-
விரிதல மெரிய குலகிரி தெரிய
விசைபெறு மயிலில் வருவோனே ;

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே-
இமையவர் முகிவர் பாவிய புலிய
ரினில்நட மருவு பெருமாளே. (சநி)

635.

தறுகணன் மறலி மூறுகிய கயிறு
தலைகொடு விசிறீக் கொடுபோகுஞ்-
*சளமது தவிர அளவிடு சுருதி
தலைகொடு பலசாத் திரமோதி ;
அறுவகை சமய முறைமுறை சருவி
யலைபடு தலைமூச் சினையாகும்-
அருவரு வொழிய வடிவுள பொருளை
†அலம்வர அடியேற் கருள்வாயே ;
நறுமல ரிறைவி யரிதிரு மருக
‡நகமுத வியபார்ப் பதிவாழ்வே-
நதிமதி யிதழி பணியணி சுடவுள்
நடமிடு புலியூர்க் குமரேசா ;
கறுவிய நிருதர் எறிதிரை பரவு
கடலிடை பொடியாப் பொருதோனே-
கழலிணை பணியு மவருடன் முனிவு
கனவிலு மறியாப் பெருமாளே. (சசு)

636.

இரசபா கொத்தமொழி யமுர்தமா ணிக்கநகை
யிணையிலா சத்திவிழி யார்பசும் §பொனிரர்
எழிலிதே சொத்தஇரு ளளகபா ரச்செயல்க
ளெழுதொணா தப்பிறையி னூரும் புருவர்
எழுதுதோ டிட்டசெவி பவளநீ லக்கொடிக
ளிகலியா டப்படிக மோ||டும் பொனுரு ¶திங்கள்மேவும்-

---

* சளம் = வஞ்சனை. † அலம்வர = அமைவுண்டாக.

‡ நகம் உதவிய பார்ப்பதி = பர்வதராஜ புத்திரியாகிய பார்வதி; நகம் = மலை.

§ பொனிரர் = பொன்னின் நீரார்; நீர் = குணம்: தன்மை.

|| அடும் = அடுக்கும். ¶ திங்கள் = திங்கள் போன்ற முகம்

இலவுதா வித்தஇதழ் குமிழைநே ரொத்தஎழி
லிலகுநா சிக்கமுகு *மாலசங் கெனுளி
யிணைசொல்க்ரீ வத்தாள வினவொள்தா லப்பணையி
னியல்கலா புத்தகமொ டோர்சிறந் தவடி-
யிணையிலா னைக்குவடெ †னுளிநிலா துத்திபட
ரிகலியா ரத்தொடையு மாருமின் பரச தங்கமார்பின்;

வரிகள்தா பித்தமுலை யிசையஆ லிற்றளிரின்
வயிறுநா பிக்கமல மாமெனுஞ் சுழிய
மடுவுரோ மக்கொடியென் அளிகள்சூழ் வுற்றநிரை
மருவுநூ லொத்தஇடை யாரசம் பையல்குல்
மணமெலா முற்றநறை கமலபோ துத்தொடையென்
வளமையார் புக்கதலி சேருசெம் பொனுடை ரம்பைமாதர்-

மயலதா லிற்றடியெ னவர்கள்பா லுற்றுவெகு
மதனபா ணத்தினுடன் மேவிமஞ் சமிசை
வதனம்வேர் வுற்றவிர முலைகள்பூ ரிக்க‡மிடர்
மயில்புரு தத்தைதுயில் போலிலங் கமளி
வசனமாய் பொத்தியிடை துவளமோ கத்துளமிழ்
வசமெலாம் விட்டுமற வேறுநிந் தனையை
தந்துஆள்வாய்;

முரசுபே ரித்திமிலை துடிகள்பூ ரித்தவில்கள்
முருடுகா ளப்பறைகள் தாரைகொம் புவலை
முகடுபேர் வுற்றவொலி யிடிகள்போ லொத்தமறை
முதுவர்பா டிக்குமுற வேயிறந் தசுரர்
முடிகளோ டெற்றியரி யிரதமா னைப்பிணமொ
டிவுளிவே லைக்குருதி நீர்மிதந் துதிசை யெங்குமோட-

முடுகிவேல் விட்டுவட குவடு§வாய் விட்டமரர்
முனிவரா டிப்புகழ வேதவிஞ் சையர்கள்
முழுவுவீ ணைக்கினரி யமுர்தகீ தத்தொனிகள்

---

* மால சங்கு = மாலினுடைய சங்கு.
† ஒளி நிலா = ஒளி நிலாவுகின்ற.
‡ மிடறு என்பது சந்தநோக்கி மிடர் என்றுயிற்று.
§ வாய்விட்ட = வாய்விட.

முறையதா கப்பறைய வோதிரம் பையர்கள்
மூலைகள்பா ரிக்கவுட னடனமா டிற்றுவர
முடிபதா கைப்பொலிய வோ டங்குலவு
கந்தவேளே ;

அரசுமா *கற்பகமொ டகில்பலா †இர்ப்பைமகி
ழழகுவே யத்திகமு கோடரம் பையுடன்
அளவிமே கத்திலொளிர் வனமொடா டக்குயில்க
ளளிகள்தோ கைக்கிளிகள் கோவெனம் பெரிய
அழூர்தவா விக்கழனி வயலில்வா ளீக்கயல்க
‡ளடையுமே ரக்கனக நாடெனும் பலியூர் சந்தவேலா-

அழகுமோ கக்குமரி விபுதையே னற்புனவி
யளிகுலா வுற்றகுழல் சேர்கடம் புதொடை
அரசிவே தச்சொருபி §கமலபா தக்கரவி
யரியவே டச்சிறுமி யாளணைந் தபுகழ்
அருணரூ பப்பதமொ டிவுளிதோ கைச்செயல்கொ
டணைதெய்வா ணைத்தனமு மேமகிழ்ந் துபுணர்
தம்பிரானே. (சள)

637.

இருளு மோர்கதி ரணுகொ ணுதபொ
னிடம தேறியெ னிருநோயும்-
எரிய வேமல மொழிய வேசுட
ரிலகு மூலக வொளிமேவி ;
அருவி பாயஇ னமுத மூறவுன்
அருளெ லாமென தளவாக-
அருளி யேசிவ மகிழ வேபெற
அருளி யேயிணை யடிதாராய் ;

---

* கற்பகம் = தென்னைமரம். † இர்ப்பை = இலுப்பை மரம்.

‡ அடையும் ஏர் = அடைகின்ற அழகினாலே.

§ கமல பாதக் கரவி = கமலம் போன்ற பாதத்தையுங் கரத்தையு முடையவள்.

பரம தேசிகர் குருவி லாதவர்
பரவை வான்மதி தவழ்வேணிப்-
பவள மேனியர் எனது தாதையர்
பரம ராசியர் அருள்பாலா ;
மருவி நாயெனை யடிமை யாமென
மகிழ்மெய் ஞானமு மருள்வோனே-
மறைகு லாவிய புலியூர் வாழ்குற
மகள்மெ லாசைகொள் பெருமாளே. (சஅ)

638

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்-
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே ;
சீவ னெடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுரிக்கும் பரஞான-
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே ;
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா-
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலெ மெச்சுங் கதிர்வேலா ;
* தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா-
சூரர் மிகக்கொண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே. (சகூ)

---

* தூவிகள் = அன்னங்கள்.

'தூவி நிணத்தின் சேறு வழுக்குந் தோறு நகைக்கும் பலபூதம்' என்னும் பாடம்.

639.

கோதிக் கோதிக் கூந்தலி லேமலர்
* பாவித் தாகச் சாந்தணி வார்மூலை
† கோடுத் தானைத் தேன்துவர் வாய்மொழி குயில்போலக்-
கூவிக் கூவிக் ‡ காண்டிசை போலவெ
நாணிக் கூனிப் பாய்ந்திடு வார்சிலர்
கூடித் தேறிச் சூழ்ந்திடு வார்பொருள் வருமோவென் ;
சூதித் தோளிற் பூந்துகி லால்மூலை
மூடிச் சூதிற் § றூங்கமி லார்தெரு
வோடித் தேடிச் சோம்பிடு வார்சில விலைமாதர்-
‖ ஒருச் சேரச் ¶ சேர்ந்திடு வார்கலி
சூலைக் காரச் ○ சாங்கமி லார்சில
வோரைச் சாகத் தீம்பிடு வார்செய லுறவாமோ ;
வேதத் தோனைக் காந்தள்கை யால்தலை
மேல்குட் டாடிப் பாந்தள் சதாமுடி
வீரிட் டாடக் காய்ந்தசு ராகள்மெல் விடும்வேலா-
வேலைச் சீறித் $தூங்கலொ டே**வய
மாவைத் தோலைச் சேர்ந்தணி வாரிட
மீதுற் றுள்பொற் சாம்பவி மாதுமை தருசேயே ;
†† நாதத் தோசைக் காண்டுணை யே ‡‡ சுடர்
மூலத் தோனைத் தூண்டிட வேஷ்§§யுயிர்
நாடிக் காலிற் சேர்ந்திட வேயருள் சுரமானை-

---

* பாவித்து = பாவ முடித்து.
† கோடுத்தானை = கோடாகிய சேனையோடு
‡ காண்டு = (ஆடவர்களைக்) கண்டு. § தூங்கம் = தூக்கம்.
‖ ஒருச்சேர = ஒருசேர: ஒருமிக்க.
¶ சேர்ந்திடுவார் கலி = கலியைச் சேர்த்திடுவார்கள்;
கலி = தரித்திரம்.
○ சாங்கம் = ஒழுங்கு. $ தூங்கல் = யானை. ** வயமா = புலி.
†† நாதத்து ஓசைக்கு = திருச்சிலம்போசை கேட்பிப்பதற்கு.
‡‡ சுடர் மூலத்தோனை = மூலாதாரக் கனலை.
§§ உயிர் நாடிக் காலில்சேர்ந்திட = பிராணவாசி சுழிமுனை நாடி மார்க்கத்திற் சார்வதற்கு.

ஞானப் பால்முத் தேன்சுரு பாள்வளி
மாதைக் காணிற் சேர்ந்தணை வாய்சிவ
ஞானப் பூமித் தேன்புலி யூர்மகிழ் பெருமாளே. ()

640.

*சகசம்பக் குடைசூழ் சிவிகைமெல்
மதவின்பத் துடனே பலபணி
†தனிதம்பட் டுடையோ டிகல்முர சொலிவீணை-

‡தவளந்தப் புடனே §கிடுகிடு
நடைதம்பட் டமிடோல் பலவொலி
||சதளம்பொற் றடிகா ருமிவை புடைசூழ;

வெகுகும்பத் துடனே பலபடை
கரகஞ்சுற் றிடவே வரஇசை
வெகுசம்பத் துடனே யழகுட னிதமேவும்-

¶விருமஞ்சித் திரமா மிதுநொடி
மறையும்பொய்ப் oபவுஷோ டுழல்வது
விடவும்பர்க் கரிதா மிணையடி தருவாயே;

திகுதந்தித் திகுதோ திகுதிகு
திகுதந்தித் திகுதோ திகுதிகு
திகுர்தஞ்செச் செகசே செகசண எனபேரி-

திமிர்தங்கற் குவடோ டெழுகட
லொலிகொண்டற் றருவோ டலறிட
திரள்சண்டத் தவுணேர் பொடிபட விடும்வேலா;

அகரம்பச் சுருவோ டொளியுறை
படிகம்பொற் செயலா ளரனரி
அயனண்டர்க் கரியா ளுமையருள் முருகோனே-

---

* சக சம்பக் குடை=ஜகத்தோர் மெச்சும்பொருட்டு எதிரில் விருதாகப் பிடிக்குங் குடை.

† தனிதம்=மேக கர்ச்சனை. ‡ தவளம்=தவளச்சங்கு.

§ கிடுகிடு=ஒரு பறை. || சதளம்=ஜனக்கூட்டம்.

¶ விருமம்=பிரமை: பிராந்தி. o பவுஷ்=வாழ்வு: சம்பிரமம்.

அமுர்தம்பொற் குவடோ டிணைமூலை
மதிதுண்டப் புகழ்மான் மகளொடும்
அருள்செம்பொற் புலியூர் மருவிய பெருமாளே. ()

641.

சிகுடமுந்துங் கடலடைந்துங்
குளமகிழ்ந்துந் தோய்சங்கங்
கமுகடைந்தண் டமுதகண்டந்
தாளகந்தந் தேர்கஞ்சஞ்
சரமெனுங்கண் குமிழுதுண்டம்
புருவெனுஞ்செஞ் சாபம்பொன் திகழ்மாதர்-

சலசகெந்தம் புழுகுடன்சண்
பகமணங்கொண் டேய்ரண்டர்
தனகனம்பொன் கிரிவணங்கும்
பொறிபடுஞ்செம் பேர்வந்தண்
சலனசம்பொன் றிடைபணங்கின்
கடிதடங்கொண் டாரம்பொன் தொடர்பார்வை;

புகலல்கண்டஞ் சரிகரம்பொன்
சரணபந்தந் தோதித்தம்
புரமுடன்கிண் கிணிகிலம்பும்
பொலியலம்புந் தாள்ரங்கம்
புணர்வணைந்தண் டுவரொடுந்தொண்
டிடர்கிடந்துண் டேர்கொஞ்சுங் கடைநாயேன்-

புகழடைந்துன் கழல்பணிந்தொண்
பொடியணிந்தங் காகந்தம்
புனல்படிந்துண் டவசமிஞ்சுந்
தவசர்சந்தம் போலுந்திண்
புவனிகண்டின் றடிவணங்குஞ்
செயல்கொளஞ்செஞ் சீர்செம்பொன் கழல்தாராய் ;

திகுடதிந்திந் தகுடதந்தந்
திகுடதிந்திந் தோதிந்தம்
டகுடடண்டண் டிகுடடிண்டிண்
டகுடடண்டண் டோடிண்டிண்
டிமுடடிண்டிண் டுமுடடுண்டுண்
டிமுடடிண்டென் றேசங்கம் பலபேரி-

செகணஞ்சஞ் சலிகைபஞ்சம்
பறைமுழங்கும் போரண்டஞ்
சிலையிடிந்துங் கடல்வடித்தும்
பொடிபறந்துண் டோர்சங்கஞ்
சிரமுடைந்தண் டவுணரங்கம்
பிணமலைந்தன் முடுஞ்செங் கதிர்வேலா;

அகிலஅண்டஞ் சுழலஎங்கும்
பவுரிகொண்டங் காடுங்*கொன்
புகழ்விளங்குங் கவுரிபங்கன்
குருவெனுஞ்சிங் காரங்கொண்
டறுமுகம்பொன் சதிதுலங்குந்
திருபதங்கந் தாளன்றென் றமரோர்பால்-

அலர்பொழிந்தங் கரமுகிழ்ந்தொண்
சரணமுங்கொண் டோதந்தம்
புனகுறம்பெண் சிறுமியங்கம்
புணர்செயங்கொண் டேயம்பொன்
அமைவிளங்கும் †புலிசரம்பொன்
திருநடங்கொண் டார்‡கந்தம் பெருமாளே. (நூஉ)

642.

சரத்துட னேபுழுகு தோய்ந்தழ கார்குழலே
மோந்துப யோதரமே தணையாகச்-
சாய்ந்துப்ர தாபமுடன் வாழ்ந்தது ராகசுக
காந்தமொ டுசியென மடவார்பால்;

---

* கொன்=கோன். † புலிசரம்=புலீச்சுரம்: புலியூர்.
‡ 'க்ந்த அம் பெருமாளே' எனப் பிரித்துக்கொள்க.

கூர்ந்தக்ரு பாமனது போந்துன தாள்குறுகி
ஓர்ந்துண ராவுணர்வி லடிநாயேன்-
கூம்பவிழ் கோகநக பூம்பத கோதிலிணை
பூண்டுற வாடுதின மூளதோதான்;
பாந்தளின் மீதினிதி ணேங்குக ணேதுயில்கொள்
நீண்டிடு மாலொடைய னறியாது-
பாம்புரு வானமுநி வாம்புலி யானபதன்
ஏய்ந்தெதிர் காணநட மிடுபாதர்;
பூந்துணர் பாதிமதி வேய்ந்தச டாமகுட
மாங்கன காபுரியி லமர்வாழ்வே-
பூங்கமு கார்வுசெறி யூங்கந காபுரிசை
சூழ்ம்புலி யூரிலுறை பெருமாளே. (நிநு)

643.

சூடரணிய திருமேனி யுடையழகு முதுஞான
சொரூப*கிரி யிடமேவு †முகமாறும்-
சுரர்தெரிய ளிபாட மழலைகதி நறைபாய
துகிரிதழின் மொழிவேத ம்ணம்வீச;
அடர்பவள வொளிபாய அரியபரி புரமாட
அயில்கரமொ டெழில்தோகை மயிலேறி-
அடியனிரு வினைநீறு படஅமர ‡ரிதுபூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்;
விடைபரவி அயன்மாலொ டமரர்முநி கணமோட
மிடறடைய விடம்வாரி யருள்நாதன்-
மினலணைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகமகிழ அதுபூதி யருள்வோனே;

---

* கிரியிடம்=கிரீடம். † முகம் ஆறும்=முகம் ஆறுந் தோன்ற.

‡ இது பூரை அதிசயம் என அருள்பாட=இவன் ஏதுமற்றவன்; இவனுக்குக் கடவுள் அருள்செய்வது என்ன ஆச்சரியம் என்று திருவுளக்கொண்டாட; பூரை=ஒன்றுமில்லாமை.

§ விடைபரவி=விடைபெற்றுப் பரவி.

இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதி
னிணையிளகிர் முலைமார்பி னணைமார்பா-
இனியமுது புலிபாத னுடனரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்ஞான பெருமாளே. (நிச)

644.

தத்தைமயில் போலுமியல் பேசிபல மோகநகை
யிட்டுமுட ஞணிமுலை மீதுதுகில் மூடியவர்
சற்றவிடம் விடுமினி வாருமென வோடிமடி பிடிபோல-
*தைச்சரச மோடுறவெ யாடியக மேகொடுபொ
யெத்தியணை மீதி†லிது காலமெனிர் போவதென
தட்டுபுழு கோடுபனி நீர்பலச வாதையவ ருடல்பூசி;
வைத்துமுக மோடிரச வாயிதழி னூறல்பெரு
கக்குழல ளாவசுழல் வாள்விழிக ளேபதற
வட்டமுலை மார்புதைய வேர்வைதர தோளிறுகி யுடைசோர-
மச்சவிழி பூசலிட ‡வாய்புலியு லாசமுட
னெப்பியிரு வோருமயல் மூழ்கியபின் ஆபரணம்
வைத்தடகு தேடுபொருள் சூறைகொளு வார்கலவி
செயலாமோ;
சத்திசர சோதிதிரு மாதுவெகு ரூபிசுக
நித்தியகல் யாணியெனை யீணமலை மாதுசிவை
தற்பரனெ டாடுமபி ராமிசிவ காமியுமை யருள்பாலா-
சக்ரகிரி மூரிமக மேருகடல் தூளிபட
ரத்நமயி லேறிவிளை யாடியசு ராரைவிழ
சத்தியினை யேவிஅம ரோர்கள்சிறை மீளநட
மிடுவோனே;
துத்திதன பாரவெகு மோகசுக வாரிமிகு
சித்ரமுக ரூபியென தாயிவளி நாயகியை
சுத்தஅணை யூடுவட மாமுலைவி டாதகர மணிமார்பா-

---

*தை=தைக்கும்படியான. † இது காலம் என் நீர் போவது எனத்.
‡ வாய் புலி=வாய்த்த புல்லி.

* சுத்தவம காதவசி காமணியெ ணேதும்வர்
சித்தமதி லேகுடிய தாவுறையும் ஆறுமுக
சுப்ரமணி யாபுலியூர் மேவியுறை தேவர்புகழ்
பெருமாளே. (ரூரூ)

645.

துத்தி பொற்றன மேரு வாமென
வொத்தி பத்திரள் வாகு வாயவிர்
துப்பு முத்தொடு மார்பி ணிடட மயில்போலே-

சுக்கை மைக்குழ லாட நூலிடை
பட்டு விட்டவிர் காம ணரல்குல்
சுற்று வித்துறு வாழை சேர்தொடை விலைமாதர் ;

தத்தை புட்குர லோசை நூபுர
மொத்த நட்டமொ டாடி மார்மூலை
சற்ற சைத்துகு லாவும் வேசிய ரவரோடே-

தர்க்க மிட்டுற வாடி யீளா†நொய்
கக்கல் விக்கல்கொ ளூளை நாயென
சிச்சி சிச்சி‡யெ ணல்வர் கூறிட வுழல்வேனே ;

தித்தி மித்திமி தீத தோதக
தத்த னத்தன தான தீதிமி
திக்கு முக்கிட மூரி பேரிகை தவில்போடச்-

சித்ர வித்தைய ராட வானவர்
§பொற்பு விட்டிடு சேசெ சேயென
செக்கு விட்டசு ரோர்கள் தூள்பட விடும்வேலா ;

செத்தி டச்சம ணர்க டாபட
அற்று தைத்தசு வாமி யாரிட
சித்தி ரச்சிவ காமி யாரருள் முருகோனே-

---

* சுத்த அம் மகாதவ. † நொய்=நோய்.
‡ என நால்வர் கூறிட எனப்பிரிக்க.
§ பொற்பு விட்டிடு=பொற்பூ இட்டு இட்டு.

தெற்க ரக்கர்கள் தீவு நீறிட
விட்ட அச்சுத னீன மாஞெடு
சித்தி ரப்புலி யூரில் மேவிய பெருமாளே.(நூசு)

பு. 646.

நாடா பிறப்புமுடி யாதோ வெனக் கருதி
நாயே மரற்று மொழி விணையாயின்-
நாதா திருச்சபையி னேறுது சித்தமென
நாலா வகைக்குமென தருள்பேசி ;
வாடா மலர்ப்பதவி தாதா எனக்குழறி
வாய்பாறி நிற்குமடி யவரோடு-
வாராய் மனக்கவலை தீராய் எனத்தொழுது
வாரே னெனக்கு மெதிர் வரவேணும் ;
சூடா மணிப்பிரபை ரூபா கனத்தவரி
சூழா சலத்தி யுமை யருள்பாலா-
தூயா துதித்தவர்கள் நேயா வெமக்கமிர்த
தோழா கடப்பமல ரணிவோனே ;
ஏடார் குழற்சுருபி *ஞான தனத்திமிகு
மோராள் குறத்திதிரு மணவாளா-
ஈசா தனிப் புலிசை வாழ்வே சுரத்திரளே
ஈடேற வைத்தபுகழ் பெருமாளே. (நூஎ)

647.

நாலுசது ரத்த பஞ்சறை மூலகம லத்தி லங்கியை
நாடியின டத்தி மந்திர பந்தியாலே-
நாரண புரத்தி லிந்துவி னூடுற இணக்கி நன்சுடர்
நாறிசை நடத்தி மண்டல சந்தியாறிற் ;
கோலமு முதிப்ப கண்டுள நாலினை மறித்தி தம்பெறு
கோவென முழக்கு சங்கொலி விந்துநாதங்-

* ஞான ஆதனத்தி = ஞானசனத்தை உடையவள்.

கூடிய முகப்பி லிந்திர வானவமு தத்தை யுண்டொரு
கோடிநட னப்ப தஞ்சபை யென்றுசேர்வேன் ;
*ஆலமல ருற்ற சம்பவி †வேரிலி குலக்கொ ழுந்திலி
ஆரணர் தலைக்க லங்கொளி செம்பொன்வாசி-
ஆணவ மயக்க முங்‡கலி காமிய மகற்றி யென்றனை
ஆளுமை பரத்தி சுந்தரி தந்தசேயே ;
வேலதை யெடுத்து மிந்திரர் மால்விதி பிழைக்க வஞ்சகர்
வீடெரி கொளுத்தி யெண்கட லுண்டவேலா-
வேதசது ரத்தர் தென்புலி யூருறை யொருத்தி பங்கினர்
வீறுநட னர்க்கி சைந்தருள் தம்பிரானே. (நிஅ)

இதன் முற்பாதியின் பதவுரை.

மூல கமலத்தில் அங்கியை=மூலாதார கமலத்துள்ள அக்கினியை,- நாலு சதுரத்த பஞ்ச அறை=நாற்சதுரப் பிரமபீடமாகிய சம்மாரக் கிரமத்தின் அஞ்சாம் வீடாகிய சுவாதிஷ்டானத்திற் செல்லும்படி,—மந்திர பந்தியாலே=மந்திர ஒழுங்கினாலே,—நாடியின் நடத்தி=சுழிமுனை நாடி மார்க்கத்திற் செலுத்தி,—நாரண புரத்தில்=விஷ்ணு வீடாகிய மணிபூரகத்தில் உள்ள,—இந்துவின் ஊடு=அர்த்த சந்திராகாரமாகிய விஷ்ணுபீடத்தில்,—உற இணக்கி=பொருந்தச் சேர்த்து,—நன்சுடர் நாற=நல்லசுடர் தோற்றும்படியாக,—இசை நடத்தி=அநாகத முதலிய மற்ற ஸ்தானங்களிலும் இணங்க நடத்தி,—மண்டல சந்தி ஆறில்=அக்கினியாதி மும்மண்டலங்களிலுஞ் சந்தித்துள்ள ஆறுதாரங்களிலும் பொருந்திய,—கோலமும் உதிப்ப-விநாயகராதி சதாசிவாந்தமாகிய மூர்த்திகளின் திருக்கோலங்களும் பிறவும் பிரசன்னமாக,-கண்டு=அவைகளைத் தரிசித்து,—உள=சரீர நிலைக்கு ஆதாரமாகவுள்ள,—நாலினை=நாலங்குலப் பிராணகலையை,—மறித்து=ஒவ்வொரு சுவாசங்களின் வழியாகவும் சிறிது சிறிதாகக் கழிந்து

---

* ஆலம் மல ருற்ற=கைலாசகிரியினின்றும் கங்கை முதலிய நதிகளை விரித்த; ஆலம்=நீர்.

† வேரிலி குலக்கொழுந்திலி=ஆதியந்த மில்லாதவள்.

‡ கலி=கல்வி : தோண்டி வேரறுத்து.

போகாதபடி தடுத்து,—இதம் பெறு=இனிமையாகிய,—கோ எனமுழக்கு சங்கு ஒலி=கோ என்று முழங்கும் சங்கத்தொனியாகிய,—விந்து நாதம்=விந்து சம்பந்த நாத ஒலி,—கூடிய முகப்பில்=கூடிமுழங்கும் இடத்து நின்று,—இந்திர வான அமுதத்தை=இந்திரபோக மாகிய தேவாமிர்தத்தை,—உண்டு=பருகி,—ஒரு கோடிநடன பத அம் சபை=அநந்தாநந்த நடநம்புரியுங் குஞ்சிதபாதஅழகிய திருச்சபையை,—என்று சேர்வேன்=அடியேன் எக்காலத்து அடையப் பெறுவேன்?

648.

நீலக்குழ லார்முத்தணி வாய்சர்க்கரை யார்தைப்பிறை
நீளச்சசி யார் பொட்டணி துதல்மாதர்-

நீலக்கய லார்பத்திர வேலொப்பிடு வார்நற்*கணி
நேமித்தெழு தாசித்திர வடிவார்தோள்;

ஆலக்கழை யார் †துத்திகொ ளாரக்குவ டார் கட்டீர
யாகத்தமி யேனித்தமு முழல்வேனை-

ஆசைப்பத மேல்புத்திமெய் ஞானத்துட னேபத்திர
மாகக்கொள வேமுத்தியை யருள்வாயே;

மாலக்குழ லாளற்புத வேதச்சொரு பாளக்கினி
மார்பிற்பிர காசக்கிரி தனபார-

வாசக்குயி லாள்நற்சிவ காமச்செய லாள்பத்தினி
மாணிக்கமி ளஞ்சிஷ்கள உமைபாகர்;

சூலக்கையி ளரக்கினி மேனிப்பர ளருக்கொரு
சோதிப் பொருள் கேள்விக்கிடு முருகோனே-

சோதிப்பிர காசச்செய லாள்முத்தமிழ் மாலைப்புனர்
சோதிப்புலி யூர் நத்திய பெருமாளே. (நிகூ)

---

* கணி=குறித்து எழுதுவோன். †துத்தி=தேமல்.

649.

பனிபோ லத்துளி * சலவா யுட்கரு
பதின்மா தத்திடை தலைகீழாய்ப்-
படிமே விட்டுடல் தவழ்வார் தத்தடி
பயில்வா ருத்தியில் சிலநாள்போய்த்;
தனமா தர்க்குழி விழுவார் தத்துவர்
சதிகா ரச்சமன் வருநாளிற்-
றரியா † ரிற்சடம் விடுவா ரிப்படி
தளர்மா யத்துய சொழியாதோ;
வினைமா யக்கிரி பொடியா கக்கடல்
விகடா ருக்கிட விடும்வேலா-
விதியோ னைச்சது முடிநால் பொட்டெழ
மிகவே குட்டிய குருநாதா;
நினைவோர் சித்தமொ டகலா மற்புகு
நிழலாள் பத்தினி மணவாளா-
நிதியா மிப்புவி புலியூ ருக்கொரு
நிறைவே பத்தர்கள் பெருமாளே. (சுo)

650.

மகரமொ டுறுகுழை யோலை காட்டியு
மழைதவழ் வனைகுழல் மாலை காட்டியும்
வரவர வாதித மூற லூட்டியும் வலைவீசும்-
மகரவி ழிமகளிர் பாடல் வார்த்தையில்
வழிவழி யொழுகுமு பாய வாழ்க்கையில்
வளமையி லினமையில் ‡மாடை வேட்கையில் மறுகாதே;
இகலிய பிரமக பால பாத்திர
மெழில்பட இடுதிரு நீறு சேர்த்திற
மிதழியை யழகிய வேணி யார்த்ததும் விருதாக-

---

* சலவாயுள்கரு = சலத்துவார வழியாய்க் கருத்தரித்து.

† இல் சடம் = தனக்கு வீடாகிய சரீரம். ‡ மாடை = பொன்.

எழில்பட மழுவுடன் மானு மேற்றது
மிசைபட இசைதரு ஆதி தோற்றமு
மிவையிவை யெனவுப தேச மேற்றவ தொருநாளே ;

ஜகதல மதிலருள் ஞான வாட் கொடு
தலைபறி யம்மணர்ச மூக மாற்றிய
தவமுனி சகமுளர் பாடு பாட்டென மறைபாடி-

தரிகிட தரிகிட தாகு டாத்திரி
கிடதரி கிடதரி தாவெ ஞச்சில
சபதமொ டெழுவன தாள வாச்சிய முடனேநீள் ;

அகுகுகு குகுவென ஆளி வாய்ப்பல
அலகைக ளடைவுட னூடு மாட்டமு
மரனவ னுடனெழு காளி கூட்டமு மகலாதே-

*அரிதுயில் சயனவி யாள மூர்த்தனு
மணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனு
மரிதென முறைமுறை யாடல் காட்டிய பெருமாளே.(சுக)

651.

†மச்ச மெச்சு சூத்ரம் ரத்த பித்த மூத்ரம்
வைச்சி றைச்ச பாத்ர மதுபோகம்-

மட்க விட்ட சேக்கை உட்பு ழுத்த வாழ்க்கை
மட்கு லப்ப தார்த்த மிடிபாறை ;

எய்ச்சி லேச்ச பேய்க்கு மெய்ச்சி லேச்ச நாய்க்கு
மெய்ச்சி லேச்ச ஈக்கு மிரையாகும்-

இக்க டத்தை நீக்கி ‡அக்க டத்து ளாக்கி
இப்ப டிக்கு மோகூ மருள்வாயே ;

பொய்ச்§சி னத்தை மாற்றி மெய்ச்சி னத்தை யேற்றி
பொற்ப தத்து ளாக்கு புலியூரா-

---

* அரி துயில் சயன வியாள மூர்த்தன் = பதஞ்சலி பகவான்.
† மச்சம் = சப்பிரமஞ்சம் : அலங்கரித்த கட்டில்.
‡ அக்கடம் = சுத்ததேகம்.
§ சினம் = சின்னம்: அடையாளம்.

*பொக்க ணத்து †நீற்றை யிட்டொ ருத்த னுர்க்கு.
புத்தி மெத்த காட்டு ‡புனவேடன் ;
பச்சி லைக்கும் வாய்க்கு ளெச்சி லுக்கும் வீக்கு
பைச்சி லைக்கு மாட்கொ ளான்வாழ்வே-
பத்தி சித்தி காட்டி அத்தர் சித்த மீட்ட
பத்த ருக்கு வாய்த்த பெருமாளே. (கூஉ)

652.

மதிய மண்குண மஞ்சு நால்முக
நகர முன்கலை கங்கை நால்குண
மகர முன்சிக ரங்கி மூணிடை தங்குகோண-
மதன முன்தரி சண்ட மாருத
மிருகு ணம்பெறி லஞ்செ லோர்தெரு
வகர மிஞ்சிய கன்ப டாகமொ டொன்றுசேருங் ;
கதிர டங்கிய அண்ட கோளகை
யகர நின்றிடும் ரண்டு கால்மிசை
ககன மின்சுழி ரண்டு கால்பரி கந்துபாயுங்-
கருணை யிந்திரி யங்கள் சோதிய
அருண சந்திர மண்ட லீகரர்
கதிகொள் யந்திர விந்து நாதமொ டென்றுசேர்வேன் ;
அதிர பம்பைகள் டங்கு டாடிக
முதிர அண்டமொ டைந்து பேரிகை
டகுட டண்டட தொந்த தோதக என்றுதாளம்-
அதிக விஞ்சையர் தும்பு ரார்தரொ
டிதவி தம்பெறு சிந்து பாடிட
அமரர் துந்துமி சங்கு தாரைகள் பொங்கவூடு ;

---

* பொக்கணம் = ஒருவகை விபூதிப் பை.
† நீற்றையிட்ட ஒருத்தனர் = சிவகோசரியார்.
‡ புனவேடன் = கண்ணப்ப நாயனர்.

உதிர மண்டல மெங்கு மாயொளி
யெழுகு மண்டியெ ழுந்து சூரரை
உயர்ந ரம்பொடெ லும்பு மாமுடி சிந்திவீழ-
உறுசி னங்கொடெ திர்ந்த சேவக
மழைபு குந்துய ரண்டம் வாழ்வுற
வுரக னும் புலிகண்ட வூர்மகிழ் தம்பிரானே. (சுங)

653.

மருவு கடல்முகி லனைய குழல்மதி
வதன நுதல்சிலை பிறைய தெணும்விழி
மச்சப் பொற்கணை மூக்குப் பொற்குமி
ழொப்பக் கத்தரி யொத்திட் டச்செவி
குமுத மலரித ழமுத மொழிநிரை
தாள மெனுநகை மிடறு கழுகென
வைத்துப் பொற்புய பச்சைத் தட்டையொ
டொப்பிட் டுக்கம லக்கைப் பொற்றுகிர்
வகைய விரலொடு கிளிகள் முகநக
மெனவு மிகலிய குவடு மிணையென
வட்டத் துத்திமு கிழ்ப்பச் சக்கிரம்
வைத்தப் பொற்குட மொத்திட் டுத்திகழ் மூலமேவும்-
வடமு நிரைநிரை தாள பவளமொ
டசைய பழுமர இலைவ யிறுமயி
ரற்பத் திக்கிணை பொற்புத் தொப்புளும்
அப்புக் குட்சுழி யொத்துப் பொற்கொடி
மதன னுருதடி யிடையு மினலென
அரிய கடிதட மமிர்த கழைரச
மட்டுப் பொற்கம லத்திற் சக்கிரி
துத்திப் பைக்கொரு மித்துப் பட்டுடை
மருவு தொடையிணை கதலி பரடுகொள்
கணையு முழலென கமட மெழுதிய
வட்டப் புத்தக மொத்துப் பொற்சர
ணத்திற் பிற்புற மெத்துத் தத்தைகள் மயில்போலே;

தெருவில் முலைவிலை யுரைசெய் தவரவர்
மயல்கொ டணைவர மருள்செய் தொழில்கொடு
தெட்டிப் பற்பல சொக்கிட் டுப்பொருள்
பற்றிக் கட்டில ணைக்கொப் பிப்புணர்
திலத மழிபட விழிகள் சுழலிட
மலர்க ளணைகுழ லிடைகொள் துகில்பட
தித்தித் துப்பிதழ் வைத்துக் கைக்கொடு
கட்டிக் குத்துமு லைக்குட் கைப்பட
திரையி லமுதென கழையில் ரசமென
பலவில் சுளையென வுருக வுயர்மயல்
சிக்குப் பட்டுடல் கெட்டுச் சித்தமும்
வெட்கித் துக்கமு முற்றுக் கொக்கென நரைமேவிச்-

செவியொ டொளிர்விழி மறைய மலசல
மொழுக பலவுரை குழற தடிகொடு
தெத்திப் பித்தமு முற்றித் தற்செய
லற்றுச் சிச்சியெ னத்துக் கப்பட
சிலர்கள் முதுவுடல் வினவு பொழுதினி
லுவரி நிறமுடை நமனு முயிர்கொள
செப்பற் றுப்பிண மொப்பித் துப்பெய
ரிட்டுப் பொற்பறை கொட்டச் செப்பிடு
சென்ன மிதுவென அழுது முகமிசை
அறைய ணைபவ ரெடென சுடலையில்
சிற்றிக் குக்கிரை யிட்டிட் டிப்படி
நித்தத் துக்கமெ டுத்திட் டுச்சட முழல்வேனே ;

குருவி னுருவென அருள்செய் துறையினில்
குதிரை கொளவரு நிறைத வசிதலை
கொற்றப் பொற்பதம் வைத்திட் டற்புத
மெற்றிப் பொற்பொரு ளிட்டுக் கைக்கொளு
முதல்வ ரிளகலை மதிய மடைசடை
அருண வுழைமழு மருவு திருபுயர்
கொட்டத் துப்புரர் கெட்டுப் பொட்டெழ
விட்டத் திக்கணை நக்கர்க் கற்புத

குமர னெனவிரு தொலியு மூரசொடு
வளையு மெழுகட லதிர முழுவொடு
கொட்டத் துட்டரை வெட்டித் தட்கட
லொப்பத் திக்கும டுத்துத் தத்திட அமர்மேவிக்-

குருகு கொடிசில குடைகள் மிடைபட
மலைகள் பொடிபட வுடுக ளுதிரிட
கொத்திச் சக்கிரி பற்றப் பொற்பரி
எட்டுத் திக்குமெ டுத்திட் டுக்குரல்
குமர குருபர குமர குருபர
குமர குருபர எனவொ தமரர்கள்
கொட்டப் புட்பமி றைத்துப் பொற்சர
ணத்திற் கைச்சிரம் வைத்துக் *குப்பிட
குலவு நரிசிறை கழுகு கொடிபல
கருட னடமிட குருதி பருகிட
கொற்றப் பத்திர மிட்டுப் பொற்கக
னத்தைச் சித்தமி ரகஷித் துக்கொளு மயில்வீரா;

சிரமொ டிரணிய னுடல்கி ழியவொரு
பொழுதி னிகிர்கொடு அரியெ னடமிடு
சிற்பர்த் திட்பதம் வைத்துச் சக்கிர
வர்த்திக் குச்சிறை யிட்டுச் சுக்கிரன்
அரிய விழிகெட இருப தமுமுல
கடைய நெடியவர் திருவு மழகியர்
தெற்குத் திக்கில ரக்கர்க் குச்சின
முற்றுப் பொற்றசர் தற்குப் புத்திர
செயமு மனவலி சிலைகை கொடுகர
மிருப துடைகிரி சிரமொர் பதும்விழ
நிக்கெட் டைக்கக னத்தர்க் குக்கொடு
பச்சைப் பொற்புய லுக்குச் சித்திர மருகோனே-

---

* குப்பிட=கும்பிட.

திலத மதிமுக அழகி மரகத
வடிவி பரிபுர நடனி மலர்பத
சித்தர்க் குக்குறி வைத்திட் டத்தன
முத்தப் பொற்கிரி யொத்தச் சித்திர
சிவைகொள் திருசர சுவதி வெகுவித
சொருபி முதுவிய கிழவி யியல்கொடு
செட்டிக் குச்சுக முற்றத் தத்துவ
சித்திற் சிற்பதம் வைத்தக் கற்புறு
திரையி லமுதென மொழிசெய் கவுரியி
னரிய மகனென புகழ்பு லிஙகரில்
செப்புப் பொற்றன முற்றப் பொற்குற
தத்தைக் குப்புள கித்திட் டொப்பிய பெருமாளே. (சுஎ)

654.

முத்த மோகன தத்தையி னுர்குர
லொத்த வாயித சர்க்கரை யார்நகை
முத்து வாரணி பொற்குவ டார்முலை விலைமாதர்-
* மொக்கை போக †செ குத்திடு வார்பொருள்
பற்றி வேறும ழைத்திடு வார்சிலர்
‡ முச்ச லீலிகை சொக்கிடு வாரிடர் கலிசூழ்;
§ சித்தி லாடஅ ழைத்திடு வார்கவ
டுற்ற மாதர்வ லைப்புகு நாயெனை
சித்தி ஞானம்வெ ளிப்பட வே || சுடர் மடமீதே-
சித்தெ லா¶மொரு மித்துன தாறினம்
வைத்து நாயென ருட்பெற வேபொருள்
செப்பி யாறுமு கப்பரி வோடுணர் வருள்வாயே;

---

* மொக்கை=வெட்கம். †செகுத்தல்=அழித்தல்.

‡ முச் சலீலிகை சொக்கு=வாய்நீர், சிறுநீர், நாதநீர் ஆகிய மூன்று நீரின் சம்பந்தமான சொக்குமருந்து; சலிலம்=நீர்.

§ சித்து=மாயவித்தை.

|| சுடர் மாடம்=நந்தி ஒளி காணும் லலாடஸ்தானம்.

¶ ஒருமித்த உனது ஆறு எனப்பிரிக்க; உனது ஆறு=உன்னுடைய சடாக்ஷரத்தை; இனம் வைத்து=இனமாகவைத்து.

தந்த னானன தானன தானென
டுக்கை பேரிமு ழக்கிட வேகடல்
சுத்த தீவுத யித்தியர் மாளிட விடும்வேலா-
சந்தி லோகப ரப்பர மேசுர
நிர்த்த மாடுக முற்கரு ணாகர
தற்ப ராபர நித்தனெர் பாலுறை யுமைபாலா;
துத்தி மார்முலை முத்தணி மோகன
பொற்ப காசமு ளக்குற மான்மகள்
துப்பு வாயிதழ் வைத்தணை சோதி பொன் மணிமார்பா-
* சுட்டி நீலஇ ரத்தின மாமயி
லுற்று மேவிய ருட்புலி யூர்வளர்
சுத்த னேசகி பெற்றபெ ணையகி பெருமாளே. (சுரு)

---

* சுட்டி = உச்சிக்கொண்டை.

கா சி.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னையிலிருந்து (கல்கத்தா வழியாய்) 1467-மைல். கங்கை நதி இங்கு வடக்குமுகமாக ஓடுகின்றது. கங்கையின் இடது கரையில் அமைந்துள்ள மஹா விசேஷமான ஸ்தலம். முத்தித்தலங்கள் ஏழனுள் ஒன்று.]

655.

தார ணிக்கதி பாவி யாய்வெகு
சூது மெத்திய மூட ஞ்மன
சாத னைக்கள வாணி யாயுறு மதிமோக-
தாப மிக்குள வீண ஞ்பொரு
வேல்வி ழிச்சிய ராகு மாதர்கள்
தாமு யச்செயு மேது தேடிய நினைவாகிப் ;
பூர ணச்சிவ ஞான காவிய
மோது தற்புணர் வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறி டாஇரு வினையேனைப்-
பூசி மெய்ப்பத மான சேவடி
காண வைத்தருள் ஞான மாகிய
போத சுத்தினை யேயு மாறருள் புரிவாயே ;
வார ணத்தினை யேக ராவுமு
னேவ லேத்திடு போது மேவிய
மாய வற்கித மாக வீறிய மருகோனே-
வாழு மூப்புர வீற தானது
நீறெ ழுப்புகை யாக வேசெய்த
மாம திப்பிறை வேணி யாரருள் புதல்வோனே;
கார ணக்குறி யான நீதிய
ரான வர்க்குமு ஞக வேநெறி
காவி யச்சிவ ஞாலை யோதிய கதிர்வேலா-

கான கக்குற மாதை மேவிய
ஞான சொற்கும ராப ராபர
காசி யிற்பிர தாப மாயுறை பெருமாளே. (க)

656.

மங்கைக் கணவனும் வாழ்சிவ ணுமயல்
பங்கப் படமிசை யேபனி போல்மதம்
வந்துட் பெருகிட வேவிதி யானவ னருள்மேவி-

வண்டுத் தடிகைபொ லாகிய நாள்பல
பந்துப் பணபழ மோடிள நீர்குட
மண்டிப் பலபல வாய்வீண கோலும வழியாலே ;

திங்கட் பதுசெல வேதலை கீழுற
வந்துப் புவிதனி லேமத லாயென
சிந்தைக் குழவியெ னவீண தாதையு மருள்கூரச்-

செம்பொற் றடமுலை பால்குடி நாள்பல
பண்புத் தவழ்நடை போய்வித மாய்பல
சிங்கிப் பெருவிழி யாரவ மாயதி லழிவேனே;

அங்கைத் தரியென வேயொரு பாலக
னின்பக் கிருபைய தாயொரு தூண்மிசை
அம்பற் கொடுவரி யாயிரண் யாசுர னுடல்பீறி-

அண்டர்க் கருள்பெரு மான்முதி ராவணி
சங்குத் திகிரிக ரோனரி நாரவ
ரங்கத் திருவணை மேல்துயில் நாரணன் மருகோனே;

கங்கைச் சடைமுடி யோனிட மேவிய
தங்கப் பவளொளி பால்மதி போல்முக
கங்குற் றரிகுழ லாள்பர மேஸ்வரி யருள்பாலா-

கந்துப் பரிமயில் வாகன மீதிரு
கொங்கைக் குறமக ளாசையொ டேமகிழ்
கங்கைப் பதிநதி காசியில் மேவிய பெருமாளே. (உ)

657.

வேழ முண்ட விளாகனி யதுபோல-
மேனி கொண்டு வியாபக மயலூறி;
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி-
நானு நைந்து விடாதருள் புரிவாயே;
மாள அன்றம ணீசர்கள் கழுவேற-
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா;
காள கண்ட னுமாபதி தருபாலா-
காசி கங்கையில் மேவிய பெருமாளே. (ரு)

மாயாபுரி.

[மூத்தித் தலங்கள் எழனுள் இதுவும் ஒன்று; ஆயினும் இடம் விளங்க வில்லை.]

பு. 658.

*சிகர †மருந்த ‡வாழ்வது சிவஞானம்-
சிதறி யலைந்து போவது §செயலாசை;
‖மகர நெருங்க ¶வீழ்வது மகமாய-
மருவி நினைந்தி டாவருள் புரிவாயே;
o அகர நெருங்கி $ணமய மூறவாகி-
அவச மொடுங்**கை யாரெடு மூனமேகிக்;
ககன மிசைந்த †† சூரியர் புக‡‡மாயை-
கருணை பொழிந்து மேவிய பெருமாளே.

* சிகரம் = 'சி' என்னும் எழுத்து. † அருந்த = உச்சரிக்க.
‡ வாழ்வது = உண்டாவது. § செயலாசை = பற்று.
‖ மகரம் = 'ம' என்னும் எழுத்து.
¶ வீழ்வது = வந்துசேர்வது. o அகரம் = வீதி.
$ ஆமயம் = நோய். ** கையாறு = செயலற்றல்.
†† சூரியர் = ஆதித்தர் பன்னிருவர்.
‡‡ மாயை = மாயாபுரி என்னும் ஸ்தலம்.

வயிரவி வனம்.

[இது பஞ்சாப் மாகாணத்திற் சரஸ்வதி நதிக்கரையில் இருப்பதாகத் தெரிகின்றது; ஆயினுஞ் சரியான இடம் விளங்கவில்லை.]

659.

அருவரை யெடுத்த வீர னெரிபட விரற்க ளூணு
மரனிட மிருக்கு மாயி யருள்வோனே-
அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு
மணிமயில் நடத்து மாசை மருகோனே ;
பருதியி ளெளிக்கண் வீறும் அறுமுக நிரைத்த தோள்ப
னிருகர மிருத்த பார மூருகாநின்-
பதமல ருளத்தி னூடு நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே;
சுருதிக ளுரைத்த வேத னுரைமொழி தனக்கு ளாதி
சொலுவென வுரைத்த ஞான குருநாதா-
சுரர்பதி தழைத்து வாழ அமர்சிறை யீனத்து மீள
துணிபட அரக்கர் மாள விடும்வேலா ;
மருமலர் மணக்கும் வாச நிறைதரு தருக்கள் சூழும்
வயல்புடை கிடக்கு நீல மலர்வாவி-
வளமுறு தடத்தி னோடு சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே.

வெள்ளிகரம்.

[இது அறக்கோணத்துக்கு வடக்கு 22-மைல் தூரத்திலுள்ள வேப்பதண்டா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கு 12-மைல். வழியில் 10-ஆவது மைலிற் பள்ளிப்பட்டு என்னும் ஊரிருக்கின்றது.]

660.

அடலரி மகவு விதிவழி யொழுகு
மைவரு மொய்க்கு ரம்பை யுடனுறும்-
அலைகட லுலகி லலம்வரு கலக
வைவர்த மக்கு டைந்து தடுமாறி;
இடர்படு மடிமை யுளமுரை யுடலொ
டெல்லிவி டப்ர பஞ்ச மயல்தீர-
எனதற நினது கழல்பெற மவுன
வெல்லுகு றிப்ப தொன்று புகல்வாயே;
வடமணி முலையு மழகிய முகமும்
வள்ளெய னத்த யங்கு மிருகாதும்-
மரகத வடிவு மடலிடை யெழுதி
வள்ளிபு னத்தில் நின்ற மயில்வீரா;
விடதர திருண ரசசிதர் நிமலர்
வெள்ளிம லைச்ச யம்பு குருநாதர-
விகசித கமல பரிபுர முளரி
வேள்ளிக ரத்த மர்ந்த பெருமாளே. (க)-

பு. 661.

சிகரிக ளிடிய நடநவில் *கலவி
செவ்வி மலர்க்க டம்பு சிறுவாள்வேல்-
திருமுக சமுக சததள முளரி
திவ்ய கரத்தி ணங்கு பொருசேவல்;
அகிலடி பறிய எறிதிரை யருவி
ஐவன வெற்பில் வஞ்சி கணவாளன்-
றகிலமு மூணர மொழிதரு மொழியி
னல்லது பொற்பதங்கள் பெறலாமோ;
நிகரிட அரிய †சிவசுத பரம
நிர்வச னப்ர சங்க குருநாதா-

---

* கலவி=கலாபி : மயில். † 'அதிவித மதுர' என்றும் பாடம்.

நிசைதிகழ் பொதுவர் நெறிபடு பழைய
நெல்லி மரத்த மர்ந்த அபிராம;

வெகுமுக ககன நதிமதி யிதழி
வில்வ முடித்த சம்பர் பெருவாழ்வே-

விகசித கமல பரிமள கமல
வெள்ளி கரத்த மர்ந்த பெருமாளே. (உ)

662.

சுவலய மல்கு *தவலிகள் முல்லை
சுளிர்நகை சொல்லு முதுபாகு-

குழையிள வள்ளை யிடைசிறு வல்லி
குயமுலை கொள்ளை †விழைமேவிக்;

கவலைசெய் வல்ல தவலரு முள்ள
‡கலவியில் தெள்ளு கவிமாலை-

கடிமல ரைய அணிவன செய்ய
கழலிணை பைய அருள்வாயே;

தவநெறி யுள்ளு சிவமுனி துள்ளு
தனியுழை புள்ளி யுடனுடித்-

தருபுன வள்ளி மலைமற வள்ளி
தருதிரு மெள்ள நகர்வோனே;

அவநெறி சொல்லு மவரவை கொல்லு
மழகிய §வெள்ளி நகர்வாழ்வே-

அடையலர் செல்வ மளறிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (ஙு)

---

* தவலிகள்=குறைவானவர்கள்.

† விழைமேவி=விழைந்துமேவி.

‡ கலவியில்=கலவியிலும்; உம் விகாரத்தால் தொக்கது.

§ வெள்ளிநகர் என்பது வெள்ளிகரம்.

663.

பொருவன கள்ள இருகயல் வள்ளை
புரிகுழை தள்ளி விளையாடும்-
புளகித வல்லி யிளகித வல்லி
புரியிள முல்லை நகைமீதே;
உருகிட வுள்ள விரகுடை யுள்ள
முலகுயி ருள்ள பொழுதேதின்-
றுமைதரு செல்வ னெனமிகு கல்வி
யுணர்வொடு சொல்ல வுணராதோ;
மருவலர் வள்ளி புரமுள வள்ளி
மலைமற வள்ளி மணவாளா-
வளர்புவி யெல்லை யளவிடு தொல்லை
மரகத நல்ல மயில்வீரா;
அருவரை வில்ள அயில்விடு மள்ள
அணிவயல் வெள்ளி நகர்வாழ்வே-
அடையலர் செல்வ மளறிடை செல்ல
அமர்செய வல்ல பெருமாளே. (ச)

664.

கொள்ள முள்ள வல்ல வல்லி
கையி லள்ளி பொருளீயக்-
*கல்லு நெல்லு வெள்ளி தெள்ளு
கல்வி செல்வர் கிளைமாய;
அள்ளல் துள்ளி ஐவர் செல்லு
மல்லல் சொல்ல முடியாதே-
†ஐய ரைய மெய்யர் மெய்ய
ஐய செய்ய கழல்தாராய்;
வள்ளல் புள்ளி நவ்வி நல்கு
வள்ளி கிள்ளை மொழியாலே-

*கல்லு = நவமணிகள். †ஐயர் ஐய = முனிவர்க்கு முனிவனே.

மைய லெய்து மைய செய்யில்
வையில் வெள்வ ளைகளேற;
மெள்ள மள்ளர் கொய்யு நெல்லின்
*வெள்ள வெள்ளி நகர்வாழ்வே-
வெய்ய †சைய வில்லி சொல்லி
வெல்ல வல்ல பெருமாளே. (நி)

665.

தொய்யில் செய்யில் ‡நொய்யர் கையர்
தொய்யு மைய இடையாலுந்-
துள்ளி வள்ளை தள்ளி யுள்ளல்
சொல்லு கள்ள விழியாலும்;
மைய செவ்வி மவ்வல் மூல்லை
மல்கு நல்ல குழலாலும்-
மையல் கொள்ள எள்ளல் செய்யும்
வல்லி சொல்லி மகிழ்வேனே;
செய்ய துய்ய புள்ளி நவ்வி
செல்வி கல்வ ரையிலேனல்-
தெய்வ வள்ளி மையல் கொள்ளு
செல்வ பிள்ளை முருகோனே;
மெய்யர் மெய்ய பொய்யர் பொய்ய
வெள்ளை வெள்ளி நகர்வாழ்வே-
வெய்ய சைய வில்லி சொல்லி
வெல்ல வல்ல பெருமாளே. (சு)

666.

இல்லையென நாணி யுள்ளதின் மறுமை
லெள்ளினள வேனும் பகிராரை-
எவ்வமென நாடி யுய்வகையி லேனை
யெவ்வகையு நாமங் கவியாகச்;

---

* வெள்ளம் = மிகுதி. † சைய வில்லி = மலையாகிய வில்லை யுடையவர். ‡ நொய்யர் = தளருந்தன்மை யுடையோர்.

சொல்லவறி யேனை யெல்லிதெரி யாத
தொல்லைமுத லேதென் றுணரேனைத்-
தொய்யுமுடல் பேணு பொய்யனெவி டாது
துய்யகழ லாளுந் திறமேதோ ;
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
மையவனை பாகம் படமோது-
மையுலவு சோலை செய்யகுளிர் சாரல்
வள்ளிமலை வாழுங் கொடிகோவே ;
வெல்லுமயி லேறு வல்லகும ரேச
வெள்ளிதுட னீபம் புனைவோனே-
வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வேள்ளிநகர் மேவும் பெருமாளே. (எ)

667.

பையரவு போலு நொய்யவிடை மாதர்
பையவரு கோலந் தினநாடிப்-
பையலென வோடி மையல்மிகு மோக
பவ்வமிசை வீழுந் தனிநாயேன் ;
உய்யவொரு கால மையவுப தேச
முள்ளுருக நாடும் படிபேசி-
உள்ளதுமி லாது மல்லதவி ரோத
* உல்லசவி நோதந் தருவாயே ;
வையமுழு தாளு மையகும ரேச
வள்ளிபடர் கானம் புடைசூழும்-
வள்ளிமலை வாழும் வள்ளிமண வாள
மையுததி யேழுங் கனல்மூள ;
வெய்யகிரு தேசர் சையமுடன் வீழ
வெல்லயில்வி நோதம் புரிவோனே-
வெள்ளிமணி மாட மல்குதிரு வீதி
வேள்ளிநகர் மேவும் பெருமாளே. (அ)

* உல்லச = உல்லாச.

668.

தனன தனதன தனன தனதன தய்ய தனத்த தந்த
தானதன தானந் தானன தந்தான.

வதன சரோருக நயன சிலீமுக வள்ளி புனத்தில் நின்று
வாராய்*பதி காதங் காதரை யொன்றுமூரும்-

வயலு மொரேவிடை யெனவொரு காவிடை வல்ல மற்றழிந்து
மாலாய்மட லேறுங் காமுக எம்பிரானே ;

இதவிய காணிவை தானெய வேடுவ னெய்திடு மெச்சில் நின்று
லீலாசல மாடுந் தூயவன் மைந்தனாளும்-

இளையவ மூதுரை மலைகிழ வோனென வெள்ள மெனக்கலந்து
நூறுயிர பேதஞ் சாதமொ ழிந்தவாதான் ;

கதைதன சாபதி கிரிவளை வாளொடு கைவசி வித்த நந்த
கோபாலம கிபன் தேவிம கிழ்ந்துவாழக்-

கயிறெ †டுலோகல முருள வுலாவிய கள்வ னறப்பயந்து
ஆகாயக பாலம் பீறநி மிர்ந்துளே ;

விதாண மாவலி வெருவ மகாவ்ருத வெள்ள வெளுக்க நின்ற
நாராயண மாமன் ‡சேயைமு னிந்தகோவே-

விளையய லூடிடை வளை விளை யாடிய வெள்ளி தகர்க் கமர்ந்த
வேலாயுத மேவுந் தேவர்கள் தம்பிரானே. (சூ)

திருவல்லம்.

[செயில்வே ஸ்டேஷன். வேலூருக்குக் கிழக்கு 8-மைல். நீவா என்னும் நதியின் மேற்கரையி லிருக்கின்றது. திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. கந்தரந்தாதியிற் சொல்லப்பட்டுள்ளது.]

---

* பதி=திருத்தணிகை. † உலோகலம்=உரல். ‡ சேய்=பிரமன்.

669.

நிசையொடு தோலுந் தசைதுறு நீரும்
நடுநடு வேயென் புறுகீலும்-
நலமுறு வேயொன் றிடஇரு கால்நன்
றுறநடை யாருங் குடிலூடே ;
விசையுறு காலம் புலனெறி யேவெங்
கனலுயிர் வேழந் திரியாதே-
விழுமடி யார்முன் பழுதற வேள்கந்
தனுமென வோதும் விறல்தாராய்;
இசையுற வேயன் றசைவற வூதும்
எழிலரி வேழம் எனையாளென்-
றிடர்கொடு மூலந் தொடர்வுட னேதும்
இடமிமை யாமுன் வருமாயன்;
திசைமுக னுருந் திசைபுவி வானுந்
*திரிதர வாழுஞ் சிவன்மூதூர்-
தெரிவையர் தாம்வந் தருநட மாடுந்
திருவல மேவும் பெருமாளே.

வேலூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். காட்டுப்பாடி ஜங்ஷனிலிருந்து 4-மைல். காஞ்சீபுரத்துக் கடுத்த வாலாஜாபாத் ஸ்டேஷனுக் கருகில் "இளையனூர் வேலூர்" என்னும் சுப்ரமண்ய ஸ்தலம் இருக்கின்றது.]

670.

அதிக ராய்ப்பொரு ளீவார் நேர்படில்
ரசனை காட்டிக ளீயார் கூடினும்
அகல வோட்டிகள் மாயா ரூபிகள் நண்புபோலே-

---

*திரிதர=வலஞ்சுழ்ந்து திரிய.

அசட ராக்கிகள் மார்மே லேபடு
மூலைகள் காட்டிகள் கூசா தேவிழும்
அழகு காட்டிக ளாரோ டாகிலு மன்புபோலே ;
சதிர தாய்த்திரி வோயா வேசிகள்
கருணை நோக்கமி லாமா பாவிகள்
சருமு பேட்சைசெய் தோஷா தோஷிகள் நம்பொணை-
சரச வார்த்தையி னூலே வாதுசெய்
விரக மாக்கி விடாமூ தேவிகள்
தகைமை நீத்துன தாளே சேர்வதும் எந்தநாளோ ;
மதுரை நாட்டினி லேவாழ் வாகிய
அருகர் வாக்கினி லேசார் வாகிய
வழுதி மேற்றிரு நீறே பூசிநி பிர்ந்துகூனும்-
மருவு மாற்றெதிர் வீறே டேறிட
அழகி போற்றிய மாரு லாகிய
மகிமையாற் சமண் வேரோ டேகெட வென்றகோவே ;
புதிய மாக்கனி வீழ்தே னூறல்கள்
பகலி ராத்திரி யோயா ஆலைகள்
புரள மேற்செல வூருர் பாயஅ ணைந்துபோதும்-
புகழி னற்கடல் சூழ்பார் மீதினி
லளகை போற்பல வாழ்வால் வீறிய
புலவர் போற்றிய வேலூர் மேவிய தம்பிரானே. (க)

671.

சலால மொன்று செங்கண் வேலாலும் வென்று மைந்தர்
சீர்வாழ்வு சிந்தை பொன்ற முதல்நாடி-
தேன்மேவு செஞ்சொ லின்சொல் தாணேதி வந்த ணைந்து
தீராத துன்ப இன்ப முறுமாதர் ;
கோலாக லங்கள் கண்டு மாலாகி நின்ற னன்பு
கூராமல் மங்கி யங்க மழியாதே-
கோள்கோடி பொன்ற வென்று நாடோறு நின்றி யங்கு
கூர்வாய்மை கொண்டி றைஞ்ச அருள்தாராய் ;

மாலாலு முன்ற ணங்கை யார்மாம தன்க ரும்பின்
வாகோட ழிற்தொ டுங்க முதல்நாடி-
வாழ்வான கந்த முந்த மாறுகி வந்த டர்ந்த
மாசூரர் குன்ற வென்றி மயிலேறீ ;
மேலாகு மொன்ற மைந்த மேனுடர் நின்றி ரங்க
வேலாலெ றிந்து குன்றை மலைவோனே-
வேய்போல வுந்தி ரண்ட தோள்மாதர் வந்தி றைஞ்சு
வேலூர்வி ளங்க வந்த பெருமாளே. (உ)

விரிஞ்சிபுரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். வேலூருக்கு மேற்கிற் காட்டுப்பாடி ஜங்ஷனி லிருந்து 8-மைல். வரகவி-மார்க்க சகாய தேவராலிய "திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்" என்னும் மிக அருமையான நூல் அச்சிடப்பட்டுள்ளது. "கரபுரி" "கரபுரம்" எனவும் இத்தலத்துக்குப் பெயர் வழங்கும். ஸ்தல புராணம் உண்டு.]

672.

ஒருவரைச் சிறுமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட் டதனலே-
ஒருவருக் கொருவர்சக் களமையிற் சருவவிட்
டுருவுபத் திரமெடுத் தறையின்மற் புரியவிட்
டுயிர்பிழைப் பதுகருத் தளவிலுச் சிதமெனச் செயுமானுர்;
தருமயற் ப்ரமைதனிற் றவநெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிவிறைத் தெவருமுற் றிகழ்வுறத் திரிவேனைச்-
சகலதுக் கமுமறச் சகலசற் குணம்வரத்
தரணியிற் புகழ்பெறத் தகைமைபெற் றுனதுபொற்
சரணமெப் பொழுதுநட் பொடுகினைத் திடஅருட்
டருவாயே ;

குருமொழித் தவமுடைப் புலவரைச் சிறையில்வைத்
தறவுமுக் கிரம்வினைத் திடுமரக் கரைமுழுக்
கொடியதர்க் குணஅவத் தரைமுதற் றரிசறுத் திடும்வேலா-

குயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திளநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடைக் குறமகட் டிருவினைப்
புணர்வோனே ;

கருதுசட் சமயிகட் கமைவுறக் கிறியுடைப்
பறிதலைச் சமணரைக் குலமுதற் பொடிபடக்
கலகமிட் டுடலுயிர்க் கழுவினுச் சியினில்வைத் திடுவோனே-

கமுகினிற் குலையறக் கதலியிற் கனியுகக்
கழையின்முத் தமுதிரக் கயல்குதித் துலவுநற்
கனவயற் றிகழ்திருக் கரபுரத் தமுமகப் பெருமாளே. (க)

673.

குலையமயி ரோதி குவியவிழி வீறு
குருகினிசை பாடி முகமீதே-

குறுவியர்வு லாவ அமுதினினி தான
குதலையுமொ ராறு படவேதான் ;

பலவிதவி நோத முடனுபய பாத
பரிபுரமு மாட அணைமீதே-

பரிவுதரு மாசை விடமனமொ வாத
பதகனையு மாள நினைவாயே ;

சிலைமலைய தான பரமர்தரு பால
சிகிபரிய தான குமரேசா-

திருமதுரை மேவு மமணர்குல மான
திருடர்கழு வேற வருவோனே ;

கலின்வடிவ மான அகலிகைபெ ணான
கமலபத மாயன் மருகோனே-

கழனிநெடு வாளை கமுகொடிய மோதி
கரபுரியில் வீறு பெருமாளே. (உ)

674.

நிகரில் பஞ்ச பூதமு நினையு நெஞ்சு மாவியு
நெகிழ வந்து நேர்படு மவிரோதம்-
நிகழ்த்த ரும்ப்ர பாகர நிரவ யம்ப ராபர
நிருப அங்கு மாரவெ ளெனவேதம் ;
சகர சங்க சாகர மெனமு ழங்கு வாதிகள்
சமய பஞ்ச பாதக ரறியாத-
தனிமை கண்ட தானகிண் கிணிய தண்டை சூழ்வன
சரண புண்ட ரீகம தருள்வாயே ;
மகர விம்ப சீகர முகர வங்க வாரிதி
மறுகி வெந்து வாய்விட நெடுவான-
வழிதி றந்து சேனையு மெதிர்ம லிந்த சூரனு
மடிய இந்தி ராதியர் குடியேறச் ;
சிகர துங்க மால்வரை தகர வென்றி வேல்விடு
சிறுவ சந்த்ர சேகரர் பெருவாழ்வே-
திசைதெ றும்ப்ர பூபதி திசைமு கன்ப ராவிய
திருவி ரிஞ்சை மேவிய பெருமாளே. (ரூ)

675.

பரவி யுனதுபொற் கரமு முகமுமுத்
தணியு முரமுமெய்ப் ப்ரபையு மருமலர்ப்
பதமும் விரவுகுக் குடமு மயிலுமுட் பரிவாலே-
படிய மனதில்வைத் துறுதி சிவமிகுத்
தெவரு மகிழ்வுறத் தரும நெறியின்மெய்ப்
பகியில் வருமவர்க் கசன மொருபிடிப் படையாதே;
சருவி யினியநட் புறவு சொலிமுதற்
பழகு மவரெனப் பதறி யருகினிற்
சரச விதமளித் துரிய பொருள்பறித் திடுமானுர்-
தமது ம்ருகமதக் களப புளகிதச்
சயில நிகர்தனத் திணையின் மகிழ்வுறத்
தழுவி யவசமுற் றுருகி மருளெனத் திரிவேனு;

கரிய நிறமுடைக் கொடிய அசுரரைக்
கெருவ மதமொழித் துடல்கள் துணிபடக்
கழுகு பசிகெடக் கடுகி அயில்விடுத் திடுதீரா-

கமல அயனுமச் சுதனும் வருணனக்
கினியு நமனுமக் கரியி லுறையுமெய்க்
கணனு மமரரத் தினையு நிலைபெறப் புரிவோனே;

இரையு முதகியிற் கடுவை மிடறமைத்
துழுவை யதளுடுத் தரவு பணிதரித்
திலகு பெறநடிப் பவர்மு னருளுமுத் தமவேளே-

இசையு மருமறைப் பொருள்கள் தினமுரைத்
தவனி தனிலெழிற் கரும முனிவருக்
கினிய கரபுரப் பதியி லறுமுகப் பெருமாளே. (ச)

676.

மருவு மஞ்சு பூத முரிமை வந்தி டாது
மலமி தென்று போட அறியாது-

மயல்கொ ளிந்த வாழ்வு அமையு மெந்த நாளும்
வகையில் வந்தி ராத அடியேனும்;

உருகி யன்பி னோடு உனைநி னைந்து நாளும்
உலக மென்று பேச அறியாத-

உருவ மொன்றி லாத பருவம் வந்து சேர
உபய துங்க பாத மருள்வாயே;

அரிவி ரிஞ்சர் தேட அரிய தம்பி ரானும்
அடிப ணிந்து பேசி கடையூடே-

அருளு கென்ற போது பொருளி தென்று காண
அருளு மைந்த ஆதி குருநாதா;

திரியு மும்பர் நீடு கிரி பிளந்து சூர்
செரு வடங்க வேலை விடுவோனே-

செயல மைந்த வேத தொனியு முழங்கு வீதி
திருவி ரிஞ்சை மேவு பெருமாளே. (நி)

திருவாலங்காடு.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னைக்கு மேற்கு 37-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். பஞ்ச சபைகளுள் இது "ரத்நசபை". 'பழையனூர்' என்னும் ஸ்தலம் திருவாலங் காட்டுக்குக் கிழக்கு]-மைல் தூரத்திலுள்ளது. ஸ்தலபுராணம் உண்டு.]

677.

கனவாலங் கூர்விழி மாதர்கள்
மனசாலஞ் சால்பழி காரிகள்
கனபோகம் போருக மாமிணை முலைமீதே-

கசிவாருங் கீறுகி ளாலுறு
வசைகாணுங் காளிம வீணிகள்
களிகூரும் பேயமு தூணிடு கசுமாலர் ;

மனவேலங் கிலக லாவிகள்
மயமாயங் கீதவி நோதிகள்
மருளாருங் காதலர் மேல்விழு மகளீர்வில்-

மதிமாடம் வானிகழ் வார்மிசை
மகிழ்கூரும் பாழ்மன மாமுன
மலர்பேணுந் தாளுன வேயருள் எருளாயோ ;

தனதானந் தானன தானன
எனவேதங் கூறுசொல் மீறளி
தைதசேர்தண் பூமண மாலிகை யணிமார்பா-

தகரேறங் காரச மேவிய
குகவீரம் பாகும ராமிகு
தகைசாலன் பாரடி யார்மகிழ் பெருவாழ்வே ;

தினமாமன் பாபுன மேவிய
தனிமானின் தோளுட னுடிய
திணமாவின் பாவுயர் தேவர்கள் தலைவாமா-

திகழ்வேடங் காளியொ டாடிய
ஜகதீசங் கேசந டேசுரர்
திருவாலங் காடினில் வீறிய பெருமாளே. (க)

678.

பொன்றுமன் றுக்கும் புதல்வரும்
நன்றுமன் றுக்கின் றுறுதுணை
*பொன்றுனென் றுட்டம் பெருகிய புவியூடே-

பொங்காவெற் கூற்றம் பொதிதரு
சிங்காரஞ் சேர்த்திங் குயரிய
புன்கூடொன் றுய்க்கொண் டுறைதரு முயிர்கோல ;

நின்றுனின் றேத்தும் படிநினை
வுந்தானும் போச்சென் றுயர்வற
நிந்தாகும் பேச்சென் பதுபட நிகழாமுன்-

நெஞ்சாலஞ் சாற்பொங் கியவினை
விஞ்சாதென் பாற்சென் றகலிட
நின்தாள்தந் தாட்கொண் டருள்தர நினைவாயே ;

குன்றுல்விண் டாழ்க்குங் குடைகொடு
கன்றுமுன் காத்துங் குவலய
முண்டார்கொண் டாட்டம் பெருகிய மருகோனே-

கொந்தார்பைந் தார்த்திண் குயகுற
மின்தாள்சிந் தாச்சிந் தையில்மயல்
கொண்டேசென் றுட்கொண டருளென மொழிவோனே;

அன்றுலங் காட்டண் டருமுய
நின்றுடுங் கூத்தன் திருவருள்
அங்காகும் பாட்டின் பயனினை யருள்வாழ்வே-

அன்பால்நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கந் தரவல பெருமாளே. (உ)

---

* பொன் தான் என்று எனப்பிரிக்க.

பு. 679.

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி யிடையூடே-
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகல்வழி நாலுந் தாக்கி வருகாயம் ;
பவவினை நூறுங் காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
பசுபதி பாசங் காட்டி புலமாயப்-
படிமிசை போவென் றேட்டி அடிமையை நீவந் தேத்தி
பரகதி தானுங் காட்டி யருள்வாயே ;
சிவமய ஞானங் கேட்க தவமுனி வோரும் பார்க்க
திருநட மாடுங் கூத்தர் முருகோனே-
திருவளர் மார்பன் போற்ற திசைமுக னுளும் போற்ற
ஜெகமொடு வானங் காக்க மயிலேறிக் ;
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு குமரேசா-
குவலயம் யாவும் போற்ற *பழனையி லாலங் காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே. (கூ)

680.

வடிவது கீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்-
மகனெடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி யுயிர்போமுன் ;
படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்து னடியேனப்-
பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென் றுட்கொ டருள்வாயே ;
முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே-

* பழனை = பழைய னூர்.

முருகவிழ் தாருஞ் சூட்டி யொருதனி வேழங் கூட்டி
முதல்மற மானின் சேர்க்கை மயல்கூர்வாய் ;
இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி
யெதிர்பொரு சூரன் தாக்க வரஏகி-
இலகிய வேல்கொண் டார்த்து உடலிரு கூறன் முக்கி
யிமையவ ரேதந் தீர்த்த பெருமாளே. (ச)

திருவோத்தூர்.

[காஞ்சீபுரத்துக்குத் தென்மேற்கு 19-மைல். கோயிலுக்கு மேற்புறத்திற் சேயாறு ஓடுகின்றது. திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஆண்பனை பெண்பனை யான ஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

681.

தவர்வாட் டோமர சூலந் தரியாக் காதிய சூருந்
தணியாச் சாகர மேழுங் கிரியேழுஞ்-
சருகாக் காய்கதிர் வேலும் பொருகாற் சேவலு நீலந்
தரிகூத் தர்டிய மாவுந் திணைகாவல் ;
துவர்வாய்க் கானவர் மானுஞ் சுரநாட் டாளொரு தேனுந்
துணையாத் தாழ்வற வாழும் பெரியோனே-
துணையாய்க் காவல்செய் வாயென் றணராப் பாவிகள் பாலுந்
தொலையாப் பாடலி யானும் புகல்வேனே ;
* பலமாய்த் தாணது வாகும் பணிகாய்த் தேமண நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் படிவேதம்-
படியாப் பாதகர் பாயன் றியுடாப் பேதைகள் கேசம்
பறிகோப் பாளிகள் யாருங் கழுவேறச் ;

---

* பவ மாய்த்து ஆணது வாகும் எனப்பிரிக்க.

சிவமாய்த் தேனமு தூறுந் திருவாக் காலொளி சேர்வெண்
டிருநீற் றுலம ராடுஞ் சிறியோனே-
செழுநீர்ச் *சேய்நதி †யாரங் கொழியாக் கோமளம் வீசுந்
திருவோத் தூர்தனில் மேவும் பெருமாளே.

பாக்கம்.

[சென்னையிலிருந்து அறக்கோணம் போகும் வழியில் உள்ள தின்னனூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல்.]

682.

கார்க்கொத்த மேனிகடல் போற்சுற்ற மானவழி
காய்த்தொட்டொ ணுதவுரு ஒருகோடி-
காக்கைக்கு நாய்கழுகு பேய்க்கக்க மானவுடல்
காட்டத்தி னீளெரியி லுறவானிற் ;
கூர்ப்பித்த சூலனத னுற்குத்தி யாவிகொடு
போத்துக்க மானகுறை யுடையேனைக்-
கூப்பிட்டு சாவருளி வாக்கிட்டு நாமமொழி
கோக்கைக்கு நூலறிவு தருவாயே ;
போர்க்கெய்த்தி டாமறலி போற்குத்தி மேவசுரர்
போய்த்திக்கெ லாமடிய வடிவேலாற்-
பூச்சித்தர் தேவர்மழை போற்றுர்க்க வேபொருது
போற்றிச்செய் வார்சிறையை விடுவோனே;
பார்க்கொற்ற நீறுபுனை வார்க்கொக்க ஞானபர
ஞப்பப்பத்தி கூர் மொழிகள் பகர்வாழ்வே-
‡ பாக்கொத்தி னுலியலர் நோக்கைக்கு வேல்கொடுயர்
பாக்கத்தில் மேவவல பெருமாளே. (க)

---

* சேய் நதி = சே யாறு.

† ஆரம் கொழியா = முத்துக்களைக் கொழித்து.

‡ பாக் கொத்து = பாமாலை.

683.

பாற்றுக் கணங்கள் தின்று தேக்கிட் டிடுங்கு ரம்பை
நோக்கிச் சுமந்து கொண்டு பதிதோறும்-
பார்த்துத் திரிந்து முன்று ஆக்கத் தையுந்தெ ரிந்து
ஏக்கற்று நின்று நின்று தளராதே ;
வேற்றுப் புலன்க ளொந்து மோட்டிப் புகழ்ந்து கொண்டு
கீர்த்தித்து நின்ப தங்க ளடியேனும்-
வேட்டுக் கலந்தி ருந்து ஈட்டைக் கடந்து நின்ற
வீட்டிற் புகுந்தி ருந்து மகிழ்வேனே ;
மாற்றற்ற பொன்து லங்கு வாட்சக்கி ரந்தெ ரிந்து
வாய்ப்புற்ற மைந்த சங்கு தடிசாப-
மாற்பொற்க லந்து லங்க நாட்டச்சு தன்ப ணிந்து
வார்க்கைத்த லங்க ளென்று திரைமோதும் ;
பாற்சொற்ற டம்பு குந்து வேற்கட்சி னம்பொ ருந்து
பாய்க்குட் டுயின்ற வன்றன் மருகோனே-
பாக்குக் கரும்பை கெண்டை தாக்கித் தடம் படிந்த
பாக்கத் தமர்ந்தி ருந்த பெருமாளே. (உ)

திருவேற்காடு.

[சென்னப்பட்டணத்துக்கு மேற்கேயுள்ள ஆவடி ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து தென்கிழக்கு சுமார் 4-மைல். பூவிருந்த வல்லிக்கு வடக்கு 2-மைல். திருஞானசம்பந்தஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. இதற்கு ஸ்தலபுராணம் இருக்கின்றது.]

684.

ஆலம்போ லெழுலே மேலங்காய் வரிகோல
மாளம்போர் செயுமாய விழியாலே-
ஆசம்பால் தொடைசால ஆலுங்கோ புரவார
ஆடம்பார் குவிகேய முலையாலே;

சாலந்தாழ் வுறுமால ஏலங்கோர் பிடியாய
வேளங்கார் துடி *நீப இடையாலே-
சாரஞ்சார் விலனுய நேகங்கா யமன்மீறு
காலந்தா ணெழிவேது உரையாயோ ;
பாலம்பால் மணநாறு காலங்கே † யிறிலாத
மாதம்பா தருசேய வயலூரா-
பாடம்பார் திரிசூல நீடந்தா கரவீர
பாசந்தா திருமாலின் மருகோனே ;
வேலம்பார் குறமாது மேலும்பார் தருமாதும்
வீறங்கே யிருபாலு முறவீறு-
வேதந்தா வபிராம நாதந்தா வருள்பாவு
வேலங்கா டுறைசில பெருமாளே. (க)

685.

கார்ச்சார்குழ லார்விழி யாரயி
லார்ப்பால்மொழி யாரிடை தூலெழு
வார்ச்சாரிள நீர்முலை மாதர்கள் மயலாலே-
காழ்க்காதல தாமன மேமிக
வார்க்காமுக ணுபுறு சாதக
மாப்பாதக ணுமடி யேணிநி னருளாலே ;
பார்ப்பாயலை யோவடி யாரொடு
சேர்ப்பாயலை யோவுன தாரருள்
கூர்ப்பாயலை யோவுமை யாள்தரு குமரேசா-
பார்ப்பாவல ரோதுசொ லால்முது
நீர்ப்பாரினில் மீறிய கீரரை
யார்ப்பாயுன தாமரு ளாலொர்சொ லருள்வாயே;
வார்ப்பேரரு ளேபொழி காரண
நேர்ப்‡பாவச காரண மாமத
ஏற்பாடிக ளேயழி வேயுற அறைகோப-

---

* நிபம்–உவம உருபு சந்தநோக்கி நீண்டது.
† இறிலாத = ஈறிலாத.
‡பாவ ச காரணமாம் = பாவத்துக்குத் துணைக்காரண மாகிய.

வாக்காசிவ மாமத மேமிக
ஊக்காதிப யோகம தேயுறு
*மாத்தாசிவ பாலகு காவடி- யர்கள்வாழ்வே ;
வேற்காடவல் வேடர்கள் மாமக
ளார்க்கார்வநன் மாமகி ணைதிரு
வேற்காடுறை வேதபு ரீசுரர் தருசேயே-
வேட்டார்மக வான்மக ளானவ
ளேட்டார்திரு மாமண வாபொனி
ணூட்டார்பெரு வாழ்வென வேவரு பெருமாளே.(உ)

வட திருமுல்லை வாயில்.

[சென்னப்பட்டணத்துக்கு மேற்கேயுள்ள ஆவடி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு 3-மைல். அம்பத்தூர் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கு 1½-மைல். சுந்தரமூர்த்திஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

686.

அணிசெவ்வி யார்திரை சூழ்புவி
தனிவ்வி யேகரை யேறிட
அறிவில்லி யாமடி யேனிட ரதுதீர-
அருள்வல்லி யோநெடு நாளின
மிருளில்லி லேயிடு மோவுன
தருளில்லை யோஇன மானவை யறியேனே;
குணவில்ல தாமக மேரிஜ
யணிசெல்வி யாயரு ணாசல
குருவல்ல மாதவ மேபெறு குணசாத-
குடிலில்ல மேதரு நாளெது
மொழிநல்ல யோகவ ரேபணி
குணவல்ல வாசிவ னேசிவ குருநாதா;

---

* ஆத்தா = கடவுளே.

பணிகொள்ளி மாகண பூதமொ
டமர்கள்ளி கானக நாடக
பரமெல்லி யார்பர மேஸ்வரி தருகோவே-

படரல்லி மாமலர் பாணம
துடைவில்லி மாமத ஞரஜ
பரிசெல்வி யார்மரு காசர முருகேசா;

மணமொல்லை யாகி நகாகன
தனவல்லி மோகன மோடமர்
மகிழ்தில்லை மாநட மாடின ரருள்பாலா-

மருமல்லி மாவன நீடிய
பொழில்மெல்லி காவன மாடமை
வடமுல்லை வாயிலின் மேவிய பெருமாளே. (க)

687.

சோதி மாமதி போல்முக முங்கிளர்
மேரு லாவிய மாமுலை யுங்கொடு
தூர வேவரு மாடவர் தங்கள்மு னெதிராயே-

சோலி பேசிமு ளிலி ணங்கிய
மாதர் போலிரு தோளில்வி ழுந்தொரு
சூதி னல்வர வேமஜ கொண்டவ ருடன்மேவி;

மோதி யேகனி வாயத ரந்தரு
நாளி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
மோன மாயவ மேசில சண்டைக ளுடனேசி-

மோச மேதரு தோதக வம்பியர்
மீதி லேமய லாகிம னந்தளர்
மோட ஞகிய பாதக னுங்கதி பெறுவேனே;

ஆதி யேயெனும் வானவர் தம்பகை
யான சூரஜ மோதிய ரும்பொடி
யாக வேமயி லேறிமு னிந்திடு நெடுவேலா-

ஆயர் வாழ்பதி கோறுமு கந்துர
லேறி யோடுறி மீதலை யுங்கள
வாக வேகொடு போதது கர்ந்தவன் மருகோனே ;

வாதி னல்வரு காளியை வென்றிடு
மாதி நாயகர் வீறுத யங்குகை
வாரி ராசனு மேபணி யுந்திரு நடபாதர்-
வாச மாமல ரோனெடு செந்திரு
மார்பில் வீறிய மாயவ னும்பணி
*மாசி லாமணி யீசர்ம கிழ்ந்தருள் பெருமாளே. (உ)

688.

மின்னிடை கலாப தொங்கலொ
டுன்னமயில் நாண விஞ்சிய
மெல்லியர்கு ழாமி சைந்தொரு தெருமீதே-
மெள்ளவுமு லாவி யிங்கித
கொல்குயில்கு லாவி நண்பொடு
வில்லியல்பு ரூர கண்கணை தொடுமோக ;

கன்னியர்கள் போலி தம்பெறு
மின்னணிக லார கொங்கையர்
கண்ணியில்வி ழாம லன்பொடு பதஞான-
கண்ணியிலு ளாக சுந்தர
பொன்னியல்ப தார மும்கொடு
கண்ணுறுவ ராம லின்பமொ டெனையாள்வாய்;

சென்னியிலு டாடி ளம்பிறை
வன்னியும ராவு கொன்றையர்
செம்மணிகு லாவு மெங்கையர் குருநாதா-
செம்முகஇ ராவ ணன்தலை
விண்ணுறவில் வாளி யுந்தொடு
தெய்விகபொ ருப்பி வண்கையன் மருகோனே;

---

* மாசிலாமணீசுரர் வடதிருமுல்லைவாயிலில் அமர்ந்தருளியிருக்குஞ் சிவபெருமான்.

துன்னியெதிர் சூரர் மங்கிட
சண்முகம தாகி வன்கிரி
துள்ளிடவெ லாயு தந்தணை விடுவோனே-
சொல்லுமுனி வோர் தவம்புரி
முல்லைவட வாயில் வந்தருள்
துல்யபர ஞான வும்பர்கள் பெருமாளே. (நூ)

திருவலிதாயம்.

[இந்தஸ்தலம் பாடியென வழங்கிவருகின்றது. இது சென்ன பட்டணத்துக்கு மேற்கேயுள்ள வில்லிவாக்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு 2-மைல். குறட்டூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு ½-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய தேவாரம் பெற்றது. ஸ்தல மான்மியம் உளது.]

689.

மருமல்லி யார்குழலின் மடமாதர்-
மருளுள்ளி நாயடிய னலியாமல்;
இருநல்ல வாகுமுன தடிபேணி-
னினவல்ல மானமன தருளாயோ;
கருநெல்லி மேனியரி மருகோனே-
கனவள்ளி யார்கணவ முருகேசா;
திருவல்லி தாயமதி லுறைவோனே-
திகழ்வல்ல மாதவர்கள் பெருமாளே.

திருவொற்றியூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். சென்னைக்கு வடக்கு 5-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். ஸ்தல புராணம் உண்டு.]

690.

கரியமுகில் போலு மிருளளக பார
கயல்பொருத வேலின் விழிமாதர்-
கலவிகளில் மூழ்கி ம்ருகமத ப டீர
களபமுலை தோய அணையூடே;
விரகமது வான மதனகலை யோது
வெறியனென நாளு மூலகோர்கள்-
விதரணம தான வலகநகைகள் கூறி
விடுவதன்முன் ஞான அருள்தாராய்;
அரிபிரமர் தேவர் முனிவர்சிவ யோகர்
அவர்கள்புக ழோத புவிமீதே-
அதிகநட ராஜர் பரவுகுரு ராஜ
அமரர்குல நேச குமரேசா;
சிரகர கபாலர் அரிவையொரு பாகர்
திகழ்கநக மேனி யுடையாளர்-
திருவளரு * மாதி புரியதனில் மேவு
ஜெயமுருக தேவர் பெருமாளே. (க)

691.

தனதத்தன தானதன தனதத்தன தானதன
தனதத்தன தானதன தனதானை.

சொருபப்பிர காசவிசு வருபப்பிர மாகசிச
சுகவிப்பிர தேசரச சுபமாயா-
தூலியப்பிர காசமத சொலியற்ற சாசவித
தொகைவிக்ரம மாதர்வயி றிடையூறு;
கருவிற்பிற வாதபடி யுருவிற்†பிர மோதஅடி
கள்‡யெத்திடி ராகவகை யதின்மீறிக்-

---

* ஆதிபுரி யென்பது திருவொற்றியூர். கோயம்புத்தூர் ஜில்லாவி லுள்ள "பேரூர்" என்னுந் தலத்துக்கும் "ஆதிபுரி" என்னும் பெயர் உண்டு. †பிரமோத = விரும்பத்தக்க.
‡ எத்திடி இராகவகை எனப்பிரிக்க.

கருணைப்பிர காசவுன தருளுற்றிட ஆசில்சிவ
கதிபெற்றிட ரானவையை யொழிவேனே ;
குருகுக்குட வாரகொடி செருவுக்கிர *ஆதபயில்
பிடிகைத்தல ஆதியரி மருகோனே-
குமரப்பிர தாபகுக சிவசுப்பிர மாமணிய
†குணமுட்டர வாவசுரர் குலகாலா ;
‡திருவொற்றியு ருமருவு நகரொற்றியுர் வாரிதிரை
யருகுற்றிடு மாதிசிவ னருள்பாலா-
திகழுற்றிடு யோகதவ மிகுமுக்கிய மாதவர்க
ளிதயத்திட மேமருவு பெருமாளே. (உ)

திருமயிலை.

[இது மயிலாப்பூர் எனவழங்கும். சென்னைக்குத் தெற்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உளது.]

692.

அமரு மமாரினி லதிக னயனுமரி
யவரும் வெருவவரு மதிகாளம்-
அதனை யதகரண விதன பரிபுரண
மமைய னவர்கரண அகிலேச ;
நிமிர வருள்சரண நிபிட மதெனவுன
நிமிர சமிரமய நியமாய-
நிமிட மதனிலுண வலசி வசுதவர
நினது பதவிதர வருவாயே ;

---

* ஆதபயில் = ஆதப அயில்.

† குணமுட்டர் அவா அசுரர் எனப்பிரிக்க.

‡ திரு வொற்றி யுரு மருவு = லக்ஷ்மி சேர்ந்து உற்றிருக்கும்.

* சமர சமரசுர † அசுர விதரபர
‡ சரத விரதஅயில் விடுவோனே-
தகுர்த தகுர்தகிகு திகுர்த திகுர்ததிகு
தர ரரரரிரி தகுர்தாத ;
எமர நடனவித மயிலின் முதுகில்வரு
மிமைய மகள்குமர எமதீச-
இயலி னியல்மயிலே நகரி வினிதுறைபு
மெமது பரகுரவ பெருமாளே. (க)

693.

அயிலொத் தெழுமிரு விழியாலே-
அமுதொத் திடுமரு மொழியாலே ;
சயிலத் தெழுதுணை முலையாலே-
தடையுற் றடியனு மடிவேனே ;
கயிலைப் பதியரன் முருகோனே-
கடலக் கரைதிரை யருகேசூழ் ;
மயிலைப் பதிதனி லுறைவோனே-
மகிமைக் கடியவர் பெருமாளே. (உ)

694.

அறமி லாவதி பாதக வஞ்சத் தொழிலாலே-
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் றிளையாதே ;
திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்-
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே ;
விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் பொரும்வேலா-
விமல மாதபி ராமித ருஞ்செய்ப் புதல்வோனே ;
மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா-
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே. (ங)

---

* சமர சமரசுர = ஒற்றுமையான பெருந்தன்மையுடைய தேவர்களுக்கு.

† அசுர இதர பர = பகைவராகிய கீழான அசுரர்மேல்.

‡ சரத விரத அயில் = உண்மையான ஆக்ராசத்தியாகிய வேலை.

695.

இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவு முலகினி லிகமுறு பிறவியி
னினிமை பெறவரு மிடருறு மிருவினை யதுதீர-
இசையு முனதிரு பதமலர் தனைமன
மிசைய நினைகிலி யிதமுற வுனதரு
ளிவர வருகிலி அயர்கிலி தொழுகிலி உமைபாகர் ;
மகிழு மகவென அறைகிலி நிறைகிலி
மடமை குறைகிலி மதியுணர் வறிகிலி
வசன மறவுறு மவுனமொ டுறைகிலி மடமாதர்-
மயம தடரிட இடருறு மடியனு
மினிமை தருமுன தடியவ ருடனுற
மருவ அருள்தரு கிருபையின் மலிகுவ தொருநாளே ;
சிகர தனகிரி குறமக ளினிதுற
சிலத நலமுறு சிலபல வசனமு
றிறைய அறைபயி லறமுக நிறைதரு மருணீத-
சிரண புரணவி தரணவி சிரவண
சரணு சரவண பவகுக சயஜெளி
திரவ பரவதி சிரமறை முடிவுறு பொருணீத ;
அகர உகரதி மகரதி சிகரதி
யகர அருளதி தெருளதி வலவல
அரண முரணுறு மசுரர்கள் கெட அயில் விடுவோனே-
அழகு மிலகிய புலமையு மகிமையும்
வளமு முறைதிரு மயிலையி லதுதின
மமரு மரகர சிவசுத அடியவர் பெருமாளே. (ச)

696.

இணையதில தாமி ரண்டு கடல்களென வேபு ரண்டு
இருகுழையின் மீத டர்ந்து அமராடி-
இலகுசில வேள்து ரந்த கணையதிலு மேசி றந்த
இருநயனர் வாரி ணங்கு மதிபாரப்;

பணிமுலையின் மீத ணிந்த தரளமணி யார்து லங்கு
பருவரதி போல வந்த விலைமானுர்-
பயிலுநடை யாலு ழன்று அவர்களிட மோக மென்ற
படுகுழியி லேம யங்கி விழலாமோ ;
கணகணென வீர தண்டை சரணமதி லேவி ளங்க
கலபமயில் மேலு கந்த குமரேசா-
கறுவிவரு சூர னங்க மிருபிளவ தாக விண்டு
கதறிவிழ வேலை றிந்த முருகோனே ;
மணிமகுட வேணி கொன்றை அறுகுமதி யாற ணிந்த
மலையவிலி னுய கன்றன் ஒருபாக-
மலையரையன் மாது தந்த சிறுவனென வேவ ளர்ந்து
மயிலேகர் வாழ வந்த பெருமாளே. (நி)

697.

களபமணி யார முற்ற வனசமுலை மீது கொற்ற
கலகமத வேள்தொ டுத்த கணையாலுங்-
கனிமொழிமி னுர்கள் முற்று மிசைவசைகள் பேச வுற்ற
கனலெனவு லாவு வட்ட மதியாலும் ;
வளமையணி நீடு புஷ்ப சயனஅணை மீ*து ருக்கி
வனிதைமடல் நாடி நித்த நலியாதே-
வரியளியு லாவு துற்ற இருபுயம ளாவி வெற்றி
மலரணையில் நீய ணைக்க வரவேணும் ;
துளபமணி மார்ப சக்ர தரனரிமு ராரி சர்ப்ப
துயிலதர னுத ரித்த மருகோனே-
சுருதிமறை வேள்வி மிக்க மயிலேகர் மேவு முக்ர
துரகதக லாப பச்சை மயில்வீரா ;
அளகைவணி கோர்கு லத்தில் †வனிதையுயிர் மீள முழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா-
அருவரையை றேறெ ழுப்பி நிருதர்தமை வேர றுத்து
அமரர்பதி வாழ வைத்த பெருமாளே. (சு)

---

* உருக்கி=உருகி. †வனிதை=பூம்பாவை.

698.

கடிய வேக மாறுத விரத சூத ராபாதர்
கலக மேசெய் பாழ்மூடர் வினைவேடர்-
கபட மின ராகாத இயல்பு நாடி யேநீடு
கனவி காரமேபேசி நெறிபேணுக் ;
கொடிய னேது மோராது விரக சால மேமூடு
குடிலின் மேவி யேநாளு மடியாதே-
குலவு தோகை மீதாறு முகமும் வேலு மீராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே ;
படியி லோடு மாமேரு அதிர வீசி யேசேட
பணமு மாட வேநீடு வரைசாடிப்-
பரவை யாழி நீர்மோத நிருதர் மாள வாணுடு
பதிய தாக வேலேவு மயில்வீரா;
வடிவு லாவி யாகாச மிளிர்ப லாவி னீள்சோலை
வனச வாவி பூவோடை வயலோடே-
மணி செய்மாட மாமேடை சிகர மோடு வாகான
மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே. (ஏ)

699.

திரைவார் கடல்சூழ்புவி தனிலே யுலகோரொடு
திரிவே னினையோதுதல் திகழாமே-
தினகா ரணமூனேதுதி மனதா ரபினேசிவ
சுதனே*திரி தேவர்கள் தலைவாமால்;
வரைமா துமையாள்தரு மணியே குகனேயென
அறையா வடியேனுமு னடியாராய்-
வழிபா டுசாரொடு அருளா தரமாயிடு
மகநா ளுளதாசொல அருள்வாயே;
இறைவா ரணதேவனு மிடராவா ரவரேவரு
மிழிவா கிமுனேயிய விலராகி-

* திரி தேவர்கள் = மும் மூர்த்திகள்.

இருளா மனதேயுற அசுரே சர்களேமிக
இடரே செயவேயவ ரிடர்தீர ;
மறமா வயிலேகொடு வடலே யிருகூறெழ
மதமா மிகுசூரனை மடிவாக-
வதையே செயுமாவலி யுடையா யழகாகிய
மயிலா புரிமேவிய பெருமாளே. (அ)

700.

நிரைதரு மணியணி யார்ந்த பூரித
ம்ருகமத களபகில் சார்ந்து சேரிய
இளமுலை யுரமிசை தோய்ந்து மாமல ரணைமீதே-
நெகிழ்தர அரைதுகில் வீழ்ந்து மாமதி
முகம்வெயர் வெழுவிழி பாய்ந்து வார்குழை
யொடுபொர இருகர மேந்து நீள்வளை யொலிகூர ;
விரைமலர் செறிகுழல் சாய்ந்து நூபுர
மிசைதர இலவிதழ் மோந்து வாயமு
திபல்பொடு பருகிய வாஞ்சை யேதக வியலுடும்-
வினையனை யிருவினை யீண்டு மாழ்கட
லிடர்படு சுழியிடை தாழ்ந்து போமதி
யிருகதி பெறஅருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே ;
பரையபி நவைசிவை சாம்ப வீயுமை
யகிலமு மருளரு ளேய்ந்த கோமளி
பயிரவி திரிபுரை யாய்ந்த நூல்மறை சதகோடி-
பகவதி யிருசுட ரேந்து காரணி
மலைமகள் கவுரிவி தார்ந்த மோகினி
படர்சடை யவனிட மேங்கு ரூதவள் தருகோவே ;
குரைகடல் மறுகிட மூண்ட சூரர்க
ளணிகெட நெடுவரை சாய்ந்து தூளெழ
முடுகிய மயில்மிசை பூர்ந்து வேலைவிடு முருகோனே-
குலநறை மலரளி சூழ்ந்து னீவிய
மயிலையி [illegible]தருசேந்த சேவக
[illegible]வணபவ வாய்ந்த தேவர்கள் பெருமாளே. (சு

701.

வருமயி லொத்தவ ரீவார் மாமுக
மதியென வைத்தவர் தாவா காமிகள்
வரிசையின் முற்றிய வாகா ராமியல் மடமாதர்-

மயலினி லுற்றவர் மோகா வாரிதி
யதனிடை புக்கவ ராளாய் நீணிதி
தருவிய லுத்தர்கள் மாடா மாமதி மிக*மூழ்கி ;

தருபர வுத்தம வேளே சீருறை
அறுமுக ரற்றவ லீலா கூருடை
அயிலுறை கைத்தல சீலா பூரண பரயோக-

சரவண வெற்றிவி நோதா மாமணி
தருமர வைக்கடி நீதா வாமணி
மயிலுறை வித்தவ ஞதா ராமணி பெறுவேளே ;

திரிரிரி தித்திதி தீதீ தீதிதி
தொகுதொகு தொத்தொகு தோதோ தோதிகு
திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி தொதிதீதோ-

தெனவரி மத்தள மீதார் தேமுழ
திடுவென மிக்கியல் வேதா வேதொழு
திருநட மிட்டவர் காதே மூடிய குருபோதம் ;

உரைசெயு முத்தம வீரா ரூரணி
உமையவ ளுத்தர பூர்வா காரணி
உறுஜக ரக்ஷணி நீரா வாரணி தருசேயே-

உயர்வர முற்றிய கோவே யாரண
மறைமுடி வித்தக தேவே காரண
ஒருமயி லேப்பதி வாழ்வே தேவர்கள் பெருமாளே. (கo)

---

* மூழ்கி = மூழ்குகிறவன்.

திருவான்மியூர்.

[சைதாபேட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 4-மைல். மயிலாப்பூருக்குத் தெற்கு 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உளது.]

702.

குசமாகி யாருமலி மரைமாது ஞாலினிடை
குடிலான ஆல்வயிறு குழையூடே-
குறிபோகு மீனவிழி மதிமாமு காருமலர்
குழல்கார தானகுண மிலிமாதர் ;
புசவாசை யால்மனது உணைநாடி டாதபடி
புலியேனு லாவிமிகு புணர்வாகிப்-
புகழான பூமிமிசை மடிவா யிருதவகை
பொலிவான பாதமல ரருள்வாயே ;
நிசநார ணுதிருமரு காவு லாசமிகு
நிகழ்போத மானபர முருகோனே-
நிதிஞான போதமர னிருகாதி லேயுதவு
நிபுணநி சாசரர்கள் குலகாலா ;
திசைமாமு காழியரி மகவான்மு னோர்கள்பணி
சிவநாத ராலமயில் அமுதேசர்-
திகழ்பால மாகமுற மணிமாளி மாடமுயர்
திருவான்மி யூர்மருவு பெருமாளே.

கோசைநகர்.

[கோசைநகர் என்பது கோயம்பேடு. சென்னைக்கு மேற்கு 6-மைல். பூவிருந்தவல்லிக்குப் போகும் வழி.]

703.

ஆதவித பாரமுலை மாதரிடை நூல்வயிற
தாலிலேயெ ணுமதன் கலலீலை-
யாவும்விளை வானகுழி யானதிரி கோணமதி
லாசைமிக வாயடிய னலையாமல்;
நாதசத கோடிமறை யோலமிடு நூபுரமு
ணுனபத மாமலரை நலமாக-
நானது திணுதினமு மேநினைய வேகிருபை
நாடியரு ளேயருள வருவாயே;
சீதமதி யாடரவு வேரறுகு மாஇறகு
சீதசல மாசடில பரமேசர்-
சீர்மைபெற வேயுதவு கூர்மைதரு வேலசிவ
சீறிவரு மாவசரர் குலகாலா;
கோதைதகுற மாதுகுண தேவமட மாதுமிரு
பாலுமுற வீறிவரு குமரேசா-
கோசைநகர் வாழவரு மீசடியர் நேசசரு
வேசமுரு காவமரர் பெருமாளே.

பெருங்குடி.

[சரியான இடம் விளங்க இல்லை. சைதாபேட்டை, மதுரை, திருவாரூர், வலங்கைமான், (திருநெல்வேலி ஜில்லாவில்) ராதாபுரம், ஆகிய சப்டிஸ்ட்ரிக்டுக்களிற் 'பெருங்குடி' என்னும் பெயருடைய கிராமங்கள் இருக்கின்றன.]

704.

தலங்களில் வருங்கன † இலங்கொடு மடந்தையர்
தழைந்தவு தரந்திகழ் தசமாதஞ்-
சமைந்தனர் பிறந்தனர் கிடந்தன ரிருந்தனர்
தவழ்ந்தனர் நடந்தனர் சிலகாலந்;

---

* ஆதம் = விருப்பம். † இலம் கொடு = இல்லம் கொண்டு.

துலங்கு நலபெண்களோ முயங்கினர் மயங்கினர்
தொடுந்தொழி லுடன்*தம க்ரகபாரஞ்-
சுமந்தன ரமைந்தனர் குறைந்தன ரிறந்தனர்
சுடும்பினை யெனும்பவ மொழியேனே;
இலங்கையி லிலங்கிய இலங்களு ளிலங்கரு
ளிலெங்கணு மிலங்கென முறையோதி-
இடுங்கனல் குரங்கொடு நெடுங்கடல் நடுங்கிட
எழுந்தருள் முகுந்தனன் மருகோனே;
பெலங்கொடு விலங்கலு நலங்கழ யில்கொண்டெறி
ப்ரசண்டக ரதண்டமிழ் வயலூரா-
†பெரும்பொழில் கரும்புக ளரம்பைகள் நிரம்பிய
பெருங்குடி மருங்குறை பெருமாளே.

மாடம்பாக்கம்.

[செங்கற்பட்டுஜில்லா வண்டலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 7-மைல்.]

705.

தோடு றுங் ‡குழை யாலே கோல்வளை
சூடு செங்கைக ளாலே யாழ்தரு
கீத மென்குர லாலே தூமணி நகையாலே-
தூம மென்குழ லாலே பூரிய
தேனி லங்கித ழாலே யாலவி
லோச னங்களி னாலே சோபித அழகாலே;
பாட கம்புனை தாளா லேமிக
வீசு தண்பணி நீரா லேவளர்
பாரகொங்கைக ளாலே §கோலிய வீலைமாதர்-

---

* தம=தம்முடைய. † "பெரும்பொழி லரம்பைகள் கரும்புக ணெருங்கிய" என்றும் பாடம்.

‡ குழை=காது; இஃது ஆகுபெயர். § கோலிய=வளைத்த.

பாவ கங்களி னூலே யான்மயல்
மூழ்கி நின்றய ராதே நூபுர
பாத பங்கய மீதே யாள்வது கருதாயோ;
* நாட ருஞ்சுடர் தாணு வோதுசி
வாக மங்களி னணு பேதவ
நாத தந்த்ரக லாமா போதக வடிவாகி-
நால்வி தந்தரு வேதா வேதமு
நாடி நின்றதொர் மாயா தீதம
னூல யந்தரு நாதா ஆறிரு புயவேளே;
†வாட யங்கிய வேலா லேபொரு
சூர்த டிந்தருள் வீரா மாமயி
லேறு கந்தவி நோதா கூறென அரனர்முன்-
வாச கம்பிற வாதோர் ஞானசு
கோத யம்புகல் ‡வாசா தேசிக
§மாடை யம்பதி வாழ்வே தேவர்கள் பெருமாளே.()

706.

விலைய றுக்கவு மூலைம றைக்கவு
மணந்தன் றுஞ்செ முந்தார்
புனைமு கிற்குழல் தனைய விழ்க்கவும்
விடங்கஞ் சஞ்ச ரஞ்சேர்
விழிவெ ருட்டவு மொழிப ரட்டவு
நிணந்தன் றுஞ்ச லம்பா யுதிரநீ ருடனே-
வெளியி னிற்கவும் வலிய மூட்டரை
யெதிர்ந்தும் பின்தொ டர்ந்தே
யிலைசு ணப்பொடி பிளவெ டுத்திடை
திரும்பும் பண்ப ரன்றே
யெனவு ரைத்தவர் தமைவ ரப்பணி
யுடன்கொண் டன்பு டன்போய் சயனபா யலின்மேல்;

---

* நாடருஞ் சுடர்=சிவபெருமான்.
† வா டயங்கிய=வாள் தயங்கிய=ஒளி பொருந்திய.
‡ வாசா தேசிகன்=உபதேச குரு.
§ மாடையம்பதி யென்பது மாடம்பாக்கம்.

கலைஞெ கிழ்க்கவு மயல்வி லைக்கவு
நயங்கொண் டங்கி ருந்தே
குணுகி யிட்டுள பொருள்ப றித்தற
முனிந்தங் கொன்று கண்டே
கலக மிட்டவ ரகல டித்தபின்
வரும்பங் கங்கு ணங்கோர் புதியபே ருடனே -

கதைகள் செப்பவும் வலச மர்த்திகள்
குணங்கண் டுந்து ளங்கா
மனித னிற்சிறு பொழுது முற்றுற
நினைந்துங் கண்டு கர்தே
கடிம லர்ப்பத மணுகு தற்கறி
விலன் பொங்கும்பெ ரும்பா தகனையா லுவையோ;

சிலைத னைக்கொடு மிகஅ டித்திட
மனந்தந் தந்த ணந்தா
மரைமலர்ப்பிர மனைந டுத்தலை
யரிந்துங் கொண்டிரந்தே
திரிபு ரத்தெரி புகந கைத்தருள்
சிவன்பங் கங்கி ருந்தா ளருளுமா முருகா -

செருவி டத்தல கைகள் தெனத்தென
தெனந்தெந் தெந்தெ னந்தா
எனஇ டக்கைகள் மணிக ணப்பறை
டிகுண்டிங் குண்டி குண்டா
டிகுகு டிக்குகு டிகுகு டிக்குகு
டிகுண்டிங் குண்டி குண்டெ யெனஇரா வணனீள்;

மலையெ னத்திகழ் முடிகள் பத்தையு
றெய்
ருவ கைப்பட
மவகுணடம பான்றெ றிந்தோன்
மதலை மைத்துன அசுர சைக்குடல்
திறந்தங் கம்பி ளந்தே மயிலின்மேல் வருவாய்-

வயல்க ளிற்கய லினமி குத்தெழு
வரம்பின் கண்பு ரண்டே
பெருகயற் *கொடு சொரியு நித்தில
நிறைந்தெங் குஞ்சி றந்தே
வரிசை பெற்றுயர் †தமனி யப்பதி
யிடங்கொண் டின்பு றுஞ்சீர் இளைய நாயகனே. (உ)

கோடைநகர்.

[இது 'வல்லக்கோட்டை' என வழங்கும். திருவள்ளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 11-மைல் தூரத்தி லுள்ள ஸ்ரீபெரும்பூதூருக்குத் தெற்கு 6-மைல். வண்டலூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 12-மைல். சிங்கபெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 10-மைல். வாலாஜாபாத் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 12-மைல். ஸ்வாமி பெயர் "கோடையாண்டவர்." இரண்டு தேவிமார்களுடனும் வீற்றிருக்கின்றார்.]

பு. 707.

ஆதிமுத ளரி லென்றன் தாயுடலி லேயி ருந்து
ஆகமல மாகி நின்று புவிமீதில்-
ஆசையுட னேபி றந்து நேசமுட னேவ ளர்ந்து
ஆளழக ஞகி நின்று விளையாடிப் ;
பூதல மெலாம லைந்து மாதருட னேக லந்து
பூமிதனில் வேணு மென்று பொருள்தேடிப்-

---

* கொடு=கோடு=சங்கு.

† தமனியப்பதி என்பது மாடம்பாக்கம். அல்லது, இது "பொன்னூர்" என்னுந் தேவார வைப்பு ஸ்தலமாகவு மிருக்கலாம். மாயூரத்துக்குச் சமீபத்திற் பொன்னூர் என ஒரு ஊர் இருக்கின்றது.

போகமதி லேயு ழன்று பாழ் நரகெய் தாம லுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே;
சிதைகொடு போகு மந்த ராவணனை மாள வென்ற
தீரனரி நார ணன்றன் மருகோனே-

தேவர்முநி வோர்கள் கொண்டல் மாலரிபிர் மாவு கின்று
தேடஅரி தான வன்றன் முருகோனே;
கோதைமலி வாழு கின்ற நாதரிட பாக நின்ற
கோமளிய நாதி தந்த குமரேசா-

கூடிவரு சூரர் தங்கள் மார்பையிரு கூறு கண்ட
கோடைநகர் வாழ வந்த பெருமாளே. (க)

708.

சாலநெடு நாள்ம டந்தை காயமதி லேய லைந்து
சாமளவ தாக வந்து புவிமீதே-

சாதகமு மான பின்பு சீறியமு தேகி டந்து
தாரணியி லேத வழ்ந்து விளையாடிப்;
பாலனென வேமொ ழிந்து பாகுமொழி மாதர் தங்கள்
பாரதன மீத ணைந்து பொருள்தேடிப்-

பார்மிசையி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லொன்று
பாதமலர் சேர அன்பு தருவாயே;
ஆலமமு தாக வுண்ட ஆறுசடை நாதர் தங்கள்
ஆடரவு பூணர் தந்த முருகோனே-

ஆனைமடு வாயி லன்று மூலமென வோல மென்ற
ஆதிமுதல் நார ணன்றன் மருகோனே;
கோலமலர் வாவி யெங்கு மேவுபுனம் வாழ்ம டந்தை
கோவையமு தூற லுண்ட குமரேசா-

கூடிவரு சூர டங்க மாளவடி வேலெ றிந்த
கோடைநகர் வாழ வந்த பெருமாளே. (உ)

709.

*ஏரு ஞலே நீரூய் மாயா
† வேளே வாசக் கணையாலே-
ஏயா வேயா மாயா வேயா
லாமே ழோசைத் தொனையாலே ;
மாரு பூரு யிரூய் மாலாய்
வாடா மாணைக் கழியாதே-
வாராய் பாராய் சேரா யாஞல்
வாடா நீபத் தொடைதாராய் ;
சீரு வீரு ஈரேழ் பார்சூழ்
சீரார் தோகைக் குமரேசா-
தேவா சாவா மூவா ஈதா
தீரா கோடைப் பதியோனே ;
வேரூய் மாரு யாரு மாசூர்
வேர்போய் வீழப் பொருதோனே-
வேதா போதா வேலா பாலா
வீரா வீரப் பெருமாளே. (ங)

710.

நூல மெங்கும் வளைத்த ரற்று கடலாலே-
நாளும் வஞ்சி யருற்று ரைக்கும் வசையாலே;
ஆல முண்து மதித்த ழற்கும் அழியாதே-
ஆறி ரண்டு புயத்த ணைக்க வருவாயே ;
கோல மொன்று குறத்தி யைத்த முவுமார்பா-
கோடை யம்பதி யுற்று நிற்கு மயில்வீரா ;
கால னஞ்ச வரைத்தெ ளைத்த ‡முதல்வாஞர்-
கால்வி லங்கு களைத்த நித்த பெருமாளே. (ச)

---

* ஏரு ஆ ஞலே = இடபமும் பசுவும் கலந்து வருதலாலும்.

† வேள் ஏ வாசம் கணையாலே = மன்மதன் ஏவுகின்ற புஷ்ப பாணத்தாலும். ‡ முதல் = முதல்வனே.

711.

தாழுமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்த குண்டர்கள் பெரியோரைத்-
தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்க
ளீவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்;
வாழுநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே-
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் * சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே;
ஏழு மராங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையு மடைவேமுன்-
ஈடழி யும்படி சந்த்ர னுஞ்சிவ
சூரிய னுஞ்சு ரும்ப தம்பெற
ராம சரந்தொடு புங்க வன்திரு மருகோனே;
கோழி சிலம்பந லம்ப யின்றக
லாப நடஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மெங்கும்வி ளங்கு மங்கல வயலூரா-
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேல னெனும்பெய ரன்பு டன்புகழ்
கோடை யெனும்பதி வந்த இந்திரர் பெருமாளே. (இ)

712.

தாடப் பாமற் றூய்தப் பாணிச்
சூழ்துற் றூர்துற் றழுவாருந்-
தூரப் போகக் கோரப் பாரச்
சூலப் பாசச் சமனுரும்;

---

* சொம்=சொத்து: உடைமை.

பாடைக் கூடத் தியிற் றேறிப்
பாழ்பட் டேபட் டழியாதே-
பாசத் தேனைத் தேசுற் றூர்பொற்
பாதத் தேவைத் தருள்வாயே;
ஆடற் சூர்கெட் டோடத் *தோயத்
தாரச் சீறிப் பொரும்வேலா-
ஆனைச் சேனைக் கானிற் றேனுக்
காரத் தாரைத் தரும்வீரா;
† கூடற் பாடிக் கோவைப் பாவைக்
கூடப் பாடித் திரிவோனே-
கோலச் சாலிச் சோலைச் சீலக்
கோடைத் தேவப் பெருமாளே. (சு)

713.

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக-
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி;
‡ யோசித்த யாரு டம்பை நேசித்து ழுத லிந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக-
யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ;
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா-
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னல்ம யங்கி
லீவுடிச்சி காலி லன்று விழுவோனே;
கூசிப்பு காவொ துங்க §மாமற்றி காத ரிந்த
|| கூளப்பு ராரி தந்த சிறியோனே-
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமாளே. (எ)

---

* தோயம் = சமுத்திரம். † கூடற்பாடி மதுரைநகர்.
‡ யோசித்து = கூட்டி. § மாமன் திகாது அரிந்த = மாம னுகிய தக்கனைத் தடைபடாது தலையரிந்த.
|| கூளப் புரம் = எளிய திரிபுரம்.

திருப்போரூர்.

[இது செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 16-மைல். சிதம்பர ஸ்வாமிகள் பாடிய "திருப்போரூர்ச் சந்நிதி முறை" இத்தலத்து மூர்த்தியின் பெருமையை நன்கு விளக்கும்.]

714.

அணுத்தே னேர்மொழி யாலே மாமய
லுடைத்தார் போலவு மோர்நா ளானதி
லடுத்தே தூதுகள் நூறு ருனதும் விடுவார்கள்-
அழைத்தே வீடினி லேதா னேகுவர்
நகைத்தே மோடிக ளாவார் காதலொ
டடுத்தே மாமூலி மீதே மார்புற அணைவார்பின்;
குனித்தே பாகிலி யீவார் பாதியில்
கடிப்பார் வாயிதழ் வாய்நீ ரானது
குடிப்பார் தேனென நாளு லீலைகள் புரிவார்கள்-
குறித்தே மாமய லாலே நீள்பொருள்
பறிப்பா ராசுகள் சூழ்மா பாதக
குணத்தார் மாதர்கள் மே*லா சாவிட அருள்வாயே;
வனத்தே வேடுவர் மாதா மோர்மிணை
யெடுத்தே தான்வர வேதான் யாவரும்
வியத்தே சூழவு மோர்வா ளால்வெலும் விறல்வீரா-
மலர்த்தே ணெடையி லோர்மா வானதை
பிடித்தே நீள்கர †வாதா டாழியை
மனத்தா லேவிய மாமா லானவர் மருகோனே;
சினத்தே சூரர்கள் போராய் மாளவு
மெடுத்தோர் வேல்விடு தீரா தாரணி
திருத்தோ ளாயிரு ‡பாதா தாமரை முருகோனே-

---

* ஆசா = ஆசை. † வாதாடாழியை = வாதாட ஆழியை.
‡ பாதா தாமரை = பாத தாமரை.

திருத்தேர் சூழ்மதி ளேரார் தூபிக
ளடுக்கார் மாளிகை யேநீ ளேருள
திருப்போ ரூருறை தேவா தேவர்கள் பெருமாளே.()

715.

உருக்கார் வாளி கண்கள் பொருப்பார் வார்த னங்கள்
உகப்பார் வால சந்த்ர னுதனூலாம்-
உருச்சேர் நீண்ம ருங்குல் பணைத்தோ ளோதி கொண்ட
லுவப்பா மேல்வி முந்து நிரிவோர்கள் ;
அருக்கா மாதர் தங்கள் வசைக்கே யோடி யின்ப
வலைக்கே பூணு நெஞ்ச னதிபாவி-
அசட்டால் மூடு கின்ற மசக்கால் மாயு மிந்த
அவத்தா னீன மின்றி யருள்வாயே ;
எருக்கார் தாளி தும்பை மருச்சேர் போது கங்கை
யினைச்சூ டாதி நம்பர் புதல்வோனே-
இருக்கா லேநி னைந்து துதிப்பார் நாவி னெஞ்சி
லிருப்பா யானை தங்கு மணிமார்பா ;
செருக்கா லேமி குந்த கடற்சூர் மாள வென்ற
திறற்சேர் வேல்கை கொண்ட முருகோனே-
திணைக்கோர் காவல் கொண்ட குறத்தேன் மாது பங்க
திருப்போ ரூர மர்ந்த பெருமாளே. (உ)

716.

சீரு லாவிய வோதிம மான மாநடை மாமயில்
சேய சாயல்க லாமதி முகமானுர்-
தேனு லாவிய மாமொழி மேரு நேரிள மாமுலை
சேலு லாவிய கூர்விழி குமிழ்நாசி ;
தாரு லாவிய நீள்குழல் வேய ளாவிய தோளியர்
சார்பி லேநிரி வேனினி னருளாலே-
சாம வேதியர் வானவ ரோதி நாண்மலர் தூவிய
தாளில் வீழ வினுமிக அருள்வாயே ;

காரு லாவிய நீள்புன வேடர் மால்வரை மீதுறை
காவல் மாதினை டாவல்செய் தணைவோனே-
காண ஆகம வேதப ராண நூல்பல வோதிய
கார ணகரு ணாகர முருகோனே ;
போரு லாவிய சூரனை வாரி சேறெழ வேல்விடு
பூப சேவக மாமயில் மிசையோனே-
போதன் மாதவன் மாதுமை பாதி யாதியு மேதொழு
போரி மாநகர் மேவிய பெருமாளே. (ங)

717.

திமிர மாமண மாமட மடமை யேனிட ராணவ
திமிர மேயரி சூரிய திரிலோக-
தினக ராசிவ காரண பனக பூஷண ஆரண
சிவசு தாவரி நாரணன் மருகோனே ;
குமரி சாமளை மாதுமை அமலி யாமளை பூரணி
குணக லாநிதி நாரணி தருகோவே-
குருகு காகும சேசர சரவ ணாசக ளேசுர
குறவர் மாமக ளாசைகொள் மணியேசம் ;
பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக
*பசுர பாடன பாளித பகளேச-
பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்
பரவு பாணித பாவல பரயோக ;
சமப ராமத சாதல சமய மாறிரு தேவத
சமய நாயக மாமயில் முதுவீர-
சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே. (ச)

---

* 'பாசுரம்' குழங்கிற்று.

உத்தரமேரூர்.

[செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு 18-மைல்.]

718.

சுருதி மறைக ளிருநாலு திசையி லதிபர் முனிவோர்கள்
துகளி லிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்-
சொலவில் முடிவில் முகியாத *பகுதி புருடர் நவநாதர்
தொலைவி லுடுவி னுலகோர்கள் மறையோர்கள் ;
அரிய சமய மொருகோடி அமரர் சாணர் சதகோடி
அரிய மயனு மொருகோடி பிவர்கூடி-
அறிய அறிய அறியாத அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியு மறிவூற அருள்வாயே ;
வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியு மழிவாக
மகர சலதி அளறாக மூதுசூரும் -
மடிய அலகை நடமாட விஜய வனிதை மகிழ்வாக
மவுலி சிதறி இரைதேடி வருநாய்கள் ;
நரிகள் கொடிகள் பசியாற உதிர நதிக ளலைமோத
நமனும் வெருவி யடிபேண மயிலேறி-
நளின வுபய கரவேலை முடுகு முருக †வடமேரு
நகரி யுறையு மிமையோர்கள் பெருமாளே. (க)

719.

தோலை லும்பு சிர ரம்பு பீளை துன்று கோழை பொங்கு
சோரி பிண்ட மாயு ருண்டு வடிவான-
தூல பங்க காயம் வம்பி லேசு மந்து நான்மெ யிந்து
சோரு மிந்த நோய கன்று துயராறு;

---

* பகுதி புருடர்=பிரகிருதி புருஷர்.
† வடமேரு நகரி=உத்தர மேரூர்.

ஆல முண்ட கோன கண்ட லோக முண்ட மால்வி ரிஞ்ச
ஞர ணங்க ளாக மங்கள் புகழ்தாளும்-

ஆன னங்கள் மூவி ரண்டு மாறி ரண்டு தோளு மங்கை
யாடல் வென்றி வேலு மென்று நினைவேனே;

வால சந்த்ர சூடி சுந்த வேத மந்த்ர ரூபி யம்பை
வாணி * பஞ்ச பாணி தந்த முருகோனே-

மாயை யைந்து வேக மைந்து பூத மைந்து நாத மைந்து
வாழ்பெ ருஞ்ச ராச ரங்க ளுறைவோனே ;

வேலை யன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேடர் மங்கை யோடி யஞ்ச அணைவோனே-

வீர மங்கை வாரி மங்கை பாரின் மங்கை மேவு கின்ற
மேரு மங்கை யாள வந்த பெருமாளே. (உ)

720.

நீள்புயற் குழல்மாதர் பேரினிற் க்ருபையாகி
நேசமுற் றடியேனு நெறிகேடாய்-

நேமியிற் பொருள்தேடி யோடியெய்த் துளம்வாடி
நீதியிற் சிவவாழ்வை நினையாதே ;

பாழினுக் கிரையாய நாமம்வைத் தொருகோடி
பாடலுற் றிடவேசெய் திடுமோச -

பாவியெப் படிவாழ்வ னேயர்கட் குளதான
பார்வைசற் றருளோடு பணியாயோ ;

ஆழியிற் றுயில்வோனு மாமலர்ப் பிரமாவு
மாகமப் பொருளோரு மனைவோரும்-

ஆனமத் தகவோனும் ஞானமுற் றியல்வோரு
மாயிரத் திருநூறு மறையோரும் ;

வாழுமுத் தரமேரூர் மேவியற் புதமாக
வாகுசித் திரதோகை மயிலேறி-

---

* பஞ்சபாணி என்பது பார்வதிக் கொருபெயர்.

மாறெனப் பொருசூர னீறெழப் பொரும்வேல
மான்மகட் குளனை பெருமாளே. (சு)

721.

மாதர் கொங்கையில் வித்தா ரத்திரு
மார்பி லங்கியல் முத்தா ரத்தினில்
வாச மென்குழ லிற்சே லைப்பொரும் விழிவேலில்-

மாமை யொன்றும லர்த்தாள் வைப்பினில்
வாகு வஞ்சியில் மெய்த்தா மத்தினில்
வானி ளம்பிறை யைப்போல் நெற்றியில் மயலாகி ;

ஆத ரங்கொடு கெட்டே யிப்படி
ஆசை யின்கட லுக்கே மெத்தவும்
ஆகி நின்றுத வித்தே நித்தலும் அலைவேனை-

ஆறி ரண்டுப ணைத்தோ ளற்புத
ஆயி ரங்கலை கத்தா மத்திப
னுயு ழன்றலை கிற்பே னுக்கருள் புரிவாயே ;

சாத னங்கொடு தத்தா மெத்தென
வேக டந்துபொய் பித்தா வுத்தர
மேதை னும்படி தற்காய் நிற்பவர் சபையூடே-

தாழ்வில் சுந்தர னைத்தா னெற்றிகொள்
நீதி தங்கிர நற்சார் புற்றருள்
சால நின்றுச மர்த்தா வெற்றிகொ ளான்வாழ்வே ;

வேத முங்கிரி யைச்சூழ் நித்தமும்
வேள்வி யும்புவி யிற்ற ழைத்தருள்
வேர்வி ழும்படி செய்த்தேர் மெய்த்தமிழ் மறையோர்வாழ்-

மேரு மங்கையி லத்தா வித்தக
வேலொ டும்படை குத்தா வொற்றிய
வேடர் மங்கைகொள் சித்தா பத்தர்கள் பெருமாளே. (சு)

மதுராந்தகம்.

[ரெயில்வே ஸ்டேஷன். செங்கற்பட்டுக்குத் தெற்கு 15-மைல்.]

722.

குதிபாய்ந்தி ரத்தம் வடிதொளைத்தொக்
கிந்த்ரி யக்கு ரம்பை விளைகூர்தார்-
குணபாண்ட முற்ற கிலமெனக்கைக்
கொண்டி ளைத்த யர்ந்து சுழலாதே ;
உதிதாம்ப ரத்தை *யுயிர்கெடப்பொற்
கிண்கி ணிச்ச தங்கை விதகீத-
உபயாம்பு யப்பு ணையையினிப்பற்
றுங்க ருத்தை யென்று தருவாயே ;
கதைசார்ங்க கட்கம் வரியடற்சக்
ரந்த ரித்த கொண்டல் மருகோனே-
கருணைஞ்ச னக்க மலவிழிப்பொற்
பைம்பு னக்க ரும்பின் மணவாளா ;
மதனந்த கர்க்கு மகவெனப்பத்
மந்த னிற்பி றந்த குமரேசா-
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே. (க)

723.

சயிலாங்க னைக்கு ருகியிடப்பக்
கங்கொ டுத்த கம்பர் வெகுசாரி-
சதிதாண்ட வத்தர் சடையிடத்துக்
கங்கை வைத்த நம்பர் உரைமாளச் ;
செயல்மாண்டு சித்த மவிழாநித்தத்
த்வம்பெ றப்ப கர்ந்த வுபதேசஞ்-

* உயிர் கெட = ஆன்மத்துவம் நீங்க.

சிறியேன்த னக்கு முரைசெயிற்சற்
றுங்கு ருத்து வங்கு றையுமோதான் ;
அயில்வாங்கி யெற்றி யுததியிற்கொக்
கன்ற ணைப்பி ளந்து சுரர்வாழ-
அகிலாண்ட முற்று மொடியினிற்சுற்
றுந்தி றற்ப சண்ட முழுநீல ;
மயில்தாண்ட விட்டு முதுகுலப்பொற்
குன்றி டித்த சங்க்ர மவிநோதா-
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே. (உ)

724.

மணமாண்சுத ரான சுணங்கரு
மனம்வேந்தணை யான தனங்களு
மடிவேன்றணை யீண அணங்குறு வம்பராதி -
மயமாம்பல வான கணங்குல
மெனப்ராந்தியும் யானென தென்றுறு
வனவாம்பிர மாத குணங்குறி யின்பசார ;
இனவாம்பரி தான்ய தனம்பதி
விடஏன்றெணை மோன தடம்பர
மிகுதாம்பதி காண கணங்கன வும்பரேசா-
இடவார்ந்தன சானு நயம்பெறு
கடகாங்கர சோண வியம்பர
இடமாங்கன தாளரு ளும்படி யென்றுதாளே ;
தனதாந்தன தான தனந்தன
தெனதோங்கிட தோன துனங்கிட
தனவாம்பர மான நடம்பயில் எம்பிரானர்-
தமதாஞ்சுத தாபர சங்கம
மெனவோம்புறு தாவன வம்படர்
தகுதாம்பிர சேவித ரஞ்சித வும்பர்வாழ்வே ;

மூனவாம்பத மூடிக வந்தன
முயல்வான்பிடி மாடிமை யைங்கரர்
* முகதாம்பின மேவுறு சம்ப்ரம †சங்கணுறு-

முககாம்பிர மோடமர் சம்பன
மதுராந்தக மாநக ரந்திகழ்
‡ முருகாந்திர மோடம ரும்பர்கள் தம்பிரானே. (கூ)

சேயூர்.

[இது 'செய்யூர்' என வழங்கும். மதுராந்தகத்துக்குக் கிழக்கு 16-மைல். அந்தகக்கவி-வீராகவ முதலியார் பாடியருளிய "சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்" அச்சிடப்பட்டுள்ளது.]

725.

முகிலாமெனும் வார்குழ லார்சிலை
புருவார்கயல் வேல்விழி யார்சகி
முகவார்தர ளாமென வேநகை புரிமாதர்-

முலைமாலிணை கோபுர மாமென
வடமாடிட வேகொடி நூலிடை
முதுபாளித சேலைகு லாவிய மயில்போல்வார் ;

§ அகிசேரல்கு லார்தொடை வாழையின்
அழகார்கழ லார்தர வேய்தரு
அழகார்கன தூபுர மாடிட நடைமேவி-

அனமாமென யாரையு மால்கொள
விழியால்சுழ லாவிடு பாவையர்
அவர்பாயலி லேயடி யேனுட லழிவேனே ;

---

* முகதா ஆம் பின்ன = எதிரில் தோற்றிய தம்பீ.
† சம் கண = அழகு செய்கின்ற கூட்டமாகிய.
‡ முருக அம் திரமோடு அமர் எனப்பிரிக்க.
§ அகி = பாம்பு.

ககனர்பதி யோர்முறை கோவென
இருள்காரசு ரார்படை தூள்பட
கடலேழ்கிரி நாகமு நூறிட விடும்வேலா-
கமலாலய நாயகி வானவர்
தொழுமீசுர னரிட மேவிய
கருணாகர ஞானப ராபரை யருள்பாலா ;
மகிழ்மாலதி நாவல்ப லாகமு
குடனூடநி லாமயில் கோகில
மகிழ்நாடுறை மால்வளி நாயகி மணவாளா-
மதிமாமுக வாவடி யேனிரு
வினைதூள் படவேயயி லேவிய
*வளவாபுரி வாழ்மயில் வாகன பெருமாளே.

பேறைநகர்.

[இது பெரும்பேறு. செங்கற்பட்டு ஜில்லாவில் அச்சிறுபாக்கத்திற் கடுத்த ரெயில்வே ஸ்டேஷன்.]

726.

நீலமயில் சேரு மந்தி மாலிங்க ராகி யந்த
காரமிக வேகி றைந்த குழலாலும்-
நீடுமதி ரேக இன்ப மாகியச லாப சந்த்ர
னேர்தருமு காரி விந்த மதனாலும் ;
ஆலினிக ரான வுந்தி யாலுமட வார்கள் தங்கள்
ஆசைவலை வீசு கெண்டை விழியாலும்-
ஆடியக டாமி சைந்த வார்முலைக ளாலு மந்த
ணகிமயல் நானு மூன்று திரிவேனே ;

---

* வளவாபுரி என்பது சேயூர்; இதனைச் சேயூர் - முருகன் பிள்ளைத் தமிழிற் காண்க.

'மதுராபுரி மேவி யுலாவிய பெருமாளே' என்னும் பாடம்.

கோலவுரு வாயெ ழுந்து பாரதனை யேயி டந்து
கூவிடுமு ராரி விண்டு திருமார்பன்-
கூடமுறை நீடு செம்பொன் மா*மதலை யூடெ ழுந்த
கோபவரி நார சிங்கன் மருகோனே ;
பீலிமயில் மீது றைந்து சூரர்தமை யேசெ யங்கொள்
பேர்பெரிய வேல்கொள் செங்கை முருகோனே-
பேடைமட வோதி மங்கள் கூடிவிளை யாடு கின்ற
பேறைநகர் வாழ வந்த பெருமாளே.

திருவக்கரை.

[தென்னற்காடு ஜில்லாவி லுள்ள மயிலம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல் சென்று, மயிலம் சேர்ந்து அங்கிருந்து வானூர் போகும்வழியில் 4½-மைல் சென்று, அங்கு வழியைவிட்டு வயல்வழியாகச் செல்லும் வண்டிப் பாதையில் 5-மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

727.

கலகலெ னச்சில கலிகள் பிதற்றுவ
தொழிவ துணைச்சிறி துரையாதே-
கருவழி தத்திய மடுவ தனிற்புகு
கடுநர குக்கிடை யிடைவீழா ;
உலகு தனிற்பல பிறவி தரித்தற
வுழல்வது விட்டினி யடிநாயேன்-
உனதடி மைத்திரள் அதனினு முட்பட
வுபய மலர்ப்பத மருள்வாயே ;
குலகிரி பொட்டெழ அலைகடல் வற்றிட
நிசிசர னப்பொரு மயில்வீரா-

---

* மதலை = தூண்.

குணதர வித்தக குமர புனத்திடை
குறமக ளேப்புணர் மணிமார்பா ;
அலைபுன லிற்றவழ் வளைநில வைத்தரு
மணிதிரு வக்கரை யுறைவோனே-
அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே. (க)

728.

பச்சிலை யிட்டுமு கத்தைமி னுக்கிகள்
குத்திர வித்தைமி குத்தச மர்த்திகள்
பப்பர மட்டைகள் கைப்பொருள் பற்றிட நினைவோர்கள்-
பத்திநி ரைத்தவ ளத்தர ளத்தினை
யொத்தந கைப்பில்வி ழிப்பில்ம யக்கிகள்
பசுமி குத்திட முக்கனி சர்க்கரை யிதழூறல் ;
எச்சி லளிப்பவர் கச்சணி மெத்தையில்
இச்சக மெத்தவு ரைத்துந யத்தொடு
மெத்திய ழைத்துஅ ணைத்தும யக்கிடு மடமாதர்-
இச்சையி லிப்படி நித்தம னத்துயர்
பெற்றுல கத்தவர் சிச்சியெ னத்திரி
இத்தொழி லிக்குணம் விட்டிட நற்பத மருள்வாயே;
நச்சர விற்றுயில் பச்சைமு கிற்கரு
ணைக்கடல் பத்மம லர்த்திரு வைப்புணர்
நத்துத நித்தக ரத்தர்தி ருத்துள வணிமார்பர்-
நட்டந டுக்கட லிற்பெரு வெற்பினை
நட்டர வப்பணி சுற்றிம தித்துள
நத்தமு தத்தையெ முப்பிய ளித்தவர் மருகோனே;
கொச்சைமொ ழிச்சிக றுத்தவி ழிச்சிசி
றுத்தஇ டைச்சிபெ ருத்தத னத்திகு
றத்திக னக்கும னப்ரிய மூற்றிடு குமரேசா-
கொத்தவிழ் பத்மம லர்ப்பழ னத்தொடு
குற்றம றக்கடி கைப்புனல் சுற்றிய
கொட்புள நற்றிரு வக்கரை யுற்றுறை பெருமாளே. (உ)

சிறுவை.

[சரியான இடம் விளங்கவில்லை. விக்கிரவாண்டிக்குச் சமீபத்திற் சிறுவை என ஒரூர் இருப்பதாகத் தெரிகின்றது.]

பு. 729.

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ் மீற அருளாலே-
அந்தரியொ டெனுஞ் சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக;
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
* மஞ்சினனு மயனுரு மெதிர்காண-
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
† மைந்துமயி லுடனுடி வரவேணும்;
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள வுயர்தோளா-
பொங்குகட லுடனுகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா;
தண்டாள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா-
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே. (க)

பு. 730.

சீதள வாரிஜ பாதாந மோநம
நாரத கீதவி நோதாந மோநம
சேவல மாமயில் ப்ரீதாந மோநம மறைதேடுஞ்
சேகர மானப்ர தாபாந மோநம
ஆகம சாரசொ ரூபாந மோநம
தேவர்கள் சேனம கீபாந மோநம கதிதோயப்;

* மஞ்சினன் = இந்திரன். † மைந்து = வலிமை.

போதக * நீவுகு டாராந மோநம
மாவசு ரேசக டோர்ராந மோநம
பாரினி லேஜய வீராந மோநம மலைமாது-
பார்வதி யாள்தரு பாலாந மோநம
நாவல ஞானம ளேலாந மோநம
பாலகு மாரசு வாமீந மோநம அருள்தாராய் ;
போதக மாமுக னேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி யிகல்சூரா -
போதக மாமறை ஞாணுத யாகர
தேனவிழ் நீபந மூவாரு மார்பக
பூரண மாமதி போலாறு மாமுக மூருகேசா ;
மாதவர் தேவர்க ளோடேமு ராரியு
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
மாநில மேழினு மேலான நாயக வடிவேலா-
வானவ ரூரினும் வீரூகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் பெருமாளே. ()

பு. 731.

பிறவி யான சடமி றங்கி வழியி லாத துறைசெ றிந்து
பிணிக ளான துயரு ழன்று தடுமாறிப்-
பெருகு தீய வினையி னெந்து கதிக டோறு மலைபொ ருந்தி
பிடிப டாத ஜனன நம்பி யழியாதே ;
நறைவி ழாத மலர்மு கந்த வரிய மோன வழிதி றந்த
நளின பாத மெனது சிந்தை யகலாதே-
நரர்சு ராதி பரும்வ ணங்கு மினிய சேவை தனைவி ரும்பி
நலன தாக அடிய னென்று பெறுவேனே ;
பொறிவ ழாத முநிவர் தங்கள் நெறிவ ழாத பிலனு ழன்று
பொருநி சாச ரனைநி னைந்து வினைநாடிப்-

* நீவு = அழிக்கும்.

பொருவி லாம லருள்பு ரிந்து மயிலி னேறி நொடியில் வந்து
புளக மேவ தமிழ்பு னைந்த முருகோனே ;
சிறுவ ராகி யிருவ ரந்த கரிப தாதி கொடுபொ ருஞ்சொல்
சிலையி ராம னுடனெ திர்ந்து சமராடிச் -
செயம தான நகர மர்ந்த அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே. (ரு)

பு. 732.

வேலி ரண்டெனு நீள்விழி மாதர்கள்
காத லின்பொருள் மேவின பாதகர்
வீணில் விண்டுள நாடிய ரூமைகள் விலைகூறி-
வேனி யென்பதி லாவசை பேசியர்
வேசி யென்பவ ராயிசை மோகிகள்
மீது நெஞ்சழி யாசையி லேயுழல் சிறியேனும் ;
மால யன்பர ஞரிமை யோர்முனி
வோர் புரந்தர ஞதிய ரேதொழ
மாத வம்பெறு தாளிணை யேதின மறவாதே-
வாழ்த ருஞ்சிவ போகந னுனெறி
யேவி ரும்பிவி னவு டனேதொழ
வாழ்வ ரந்தரு வாயடி யேனிடர் கலைவாயே ;
நீல சுந்தரி கோமளி யாமளி
நாட கம்பயில் நாரணி பூரணி
நீடு பஞ்சமி சூலினி மாலினி யுமைகாளி-
நேயர் பங்கெழு மாதவி யாள்சிவ
காம சுந்தரி யேதரு பாலக
நீர்பெ ருஞ்சடை யாரருள் தேசிக முருகேச ;
ஆலில் நின்றுல கோர்நில யேபெற
மாநி லங்களெ லாநில யேதரு
ஆய னந்திரு வூரக மல்திரு மருகோனே-
ஆட கம்பயில் கோபுர மாமதி
லால யம்பல வீதியு மேநிறை
வான தென்சிறு வாபுரி மேவிய பெருமாளே. (ச)

திருவாமாத்தூர்.

[விழுப்புரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 4-மைல். மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

733.

அடல்வடி வேல்கள் வாளிக ளைவைவிட வோடல் நேர்படு
மயில்விழி யாலு மாலெனு மதவேழத்-
தளவிய கோடு போல்வினை யளவள வான கூர்முலை
யதின்முக மூடு மாடையி னழகாலுந்;
துடியிடை யாலும் வாலர்கள் துயர்வுற மாய மாயொரு
துணிவுட னோடு மாதர்கள் துணையாகத்-
தொழுதவர் பாத மோதியுன் வழிவழி யானெ னுவுயர்
துலையலை மாறு போலுயிர் சுழல்வேனே;
அடவியி னோடு வேடர்க ளரிவையொ டாசை பேசியு
மடிதொழு தாடு மாண்மையு மூடையோனே-
அழகிய தோளி சாறுடை அறுமுக வேளெ னுவுனை
அறிவுட னேது மாதவர் பெருவாழ்வே;
விடை*யெறு மீசர் நேசமு மிகநினை வார்கள் தீவினை
யுகநெடி தோட மேலணை பவர்மூதூர்-
விரைசெறி தோகை மாதர்கள் விரகுட னோடு மாதையில்
விறல்மயில் மீது மேவிய பெருமாளே. (க)

734.

கிண்கயற் பிணை மாலுறு வண்டெ னக்கழை தோளான துர்
நன்†க மைக்கின மாமாமென முகையான-
கஞ்ச மொத்தெழு கூர்மாமுலை குஞ்ச ரத்திரு கோடோடுற
விஞ்சு மைப்பொரு கார்கோதைகொ டுயர்காலன்;
பெண்ட னக்குள கோலாகல மின்றெ டுத்தினை யோராவிகள்
மன்பி டிப்பது போல்நீள்வடி வுடைமாதர்-

* எறும்=எனும். † அமை=மூங்கில்.

பின்பொ ழித்திடு மாமாயையி லன்பு வைத்தழி யாதேயுறு
கிஞ்சி லத்தினை தாள்பேணிட அருள்தாராய்;
விண்ட னக்குற வாலேனுடல் கண்ப டைத்தவன் வேதாவொடு
விண்டு வித்தகன் வீழ்த்தாளினர் விடையேறி-
*வெந்த னத்துமை யாள்மேவிய சந்த னப்புய மாதீசுரர்
வெங்க யத்துரி யார்போர்வையர் மிகுவாழ்வே;
கண்பு டைப்பொழில் சூழ்மாதையில் நண்பு வைத்தருள் தாராதல
மூங்கி லேத்திட வானீள்திசை யொடுதாவித்-
தண்டாரக்கர்கள் கோகோவென விண்டி டத்தட மாமீமிசை
சண்ட விக்ரம வேலேவிய பெருமாளே. (உ)

735.

கருமுகில் போல்மட் டாகிய அளகிகள் தேனிற் பாகொடு
கனியமு தூறித் தேறிய மொழிமாதர்-
கலவிகள் நேரொப் பாகிகள் மதனிகள் காமக் ரோதிகள்
கனதன பாரக் காரிகள் செயலோடே;
பொருகயல் வாவீத் தாவிய விழியினர் சூறைக் காரிகள்
பொருளள வாசைப் பாடிகள் புவிமீதே-
பொதுவிகள் போகப் பாவிகள் வசமழி வேனுக்கோரருள்
புரிவது தானெப் போதது புகல்வாயே;
தருவடு தீரச் சூரர்கள் அவர்கிளை மாளத் தூளெழ
சமனிலை யேறப் பாரெடு கொடிவீழத்-
தனதன தானத் தானன எனஇசை பாடிப் பேய்பல
தசையுண வேல்விட் டேவிய தனிவீரா;
அரிதிரு மால்சக் ராயுத னவனிளை யாள்†முத் தார்ங்கை
அழகுடை யாள்மெய்ப் பாலுமை யருள்பாலா-
அரவொடு பூளைத் தார்மதி அறுகொடு வேணிச் சூடிய
அழகர்தென் மாதைக் கேயுறை பெருமாளே. (ங)

---

* வெம்=விருப்பம்.

† "முத்தாம்பிகை யம்மை" திருவாமாத்தூரிற் றேவியார் திருநாமம்.

756.

காலமு கிலென நினைவுகொ டுருவிலி
காதி யமர்பொரு கணையென வடுவகிர்
காணு மிதுவென இளைஞர்கள் *விதவிடு கயலாலுங்-

கான மமர்குழ லரிவையர் சிலுகொடு
காசி னளவொரு தலையணு மனதினர்
காம மிவர்சில கபடிகள் படிறுசொல் கலையாலுஞ்;

சால மயல்கொடு புளகித கனதன
பார முறவண முருகவிழ் மலரணை
சாயல் தனின்மிகு கலவியி லழிவுறும் அடியேனைச்-

சாதி குலமுறு படியினின் முழுகிய
தாழ்வ தறஇடை தருவன வெளியுயர்
தாள தடைவது தவமிக நினைவது தருவாயேஃ

வேலை தனில்விழி துயில்பவ னரவணை
வேயி னிசைபது நிரைதனி லருள்பவன்
வீர துரகத ரபதி வனிதையர் கரமீதே-

வேறு வடிவுகொ டுறிவெணெய் தயிரது
வேடை கெடவமு தருளிய பொழுதினில்
வீசு கயிறுட னடிபடு சிறியவ னதிகோப;

வாலி யுடனெழு மரமற நிசிசரன்
வாகு முடியொரு பதுகர மிருபது
மாள வொருசரம் விடுமொரு கரியவன் மருகோனே-

வாச முறுமலர் விசிறிய பரிமள
மாதை நகர்தனி லுறையுமொ ருறுமுக
வானி லடியவ ரிடர்கெட அருளிய பெருமாளே.(ச)

---

* விதவிடல் = விசேடித்துரைத்தல்.

தச்சூர்.

[பொன்னேரி, ஆரணி, கள்ளக்குறிச்சி, திட்டக்குடி ஆகிய சப்டிஸ்டிரிக்டுக்களிலும், புதுக்கோட்டைக்குச் சமீபத்திலும், 'தச்சூர்' எனப் பெயரிய கிராமங்கள் இருக்கின்றன.]

737.

அச்சா யிறுக்காணி காட்டிக் கடைந்த
செப்பார் முலைக்கோடு நீட்டிச் சரங்க
ளாப்போல் விழிக்கூர்மை நோக்கிக் குழைந்து உறவாடி-

அத்தா னெனக்காசை கூட்டித் தயங்க
வைத்தா யெனப்பேசி மூக்கைச் சொறிந்து
அக்கா லொருக்கால மேக்கற் றிருந்தி நிலையாசை ;

வைச்சா யெடுப்பான பேச்சுக் கிடங்க
ளொப்பா ருனக்கீடு பார்க்கிற் கடம்பன்
மட்டோ எனப்பாரின் மூர்க்கத் தனங்க ளதனாலே-

மைப்பா கெனக்கூறி வீட்டிற் கொணர்ந்து
புற்பா யலிற்காலம் வீற்றுக் கலந்து
வைப்பார் தமக்காசை யாற்பித்த லொந்து திரிவேனே ;

எச்சாய் மருட்பாடு மேற்பட் டிருந்த
பிச்சா சருக்கோதி கோட்டைக் கிலங்க
மிக்கா நினைப்போர்கள் வீக்கிற் பொருந்தி நிலையாயே-

எட்டா மெழுத்தேழை யேற்குப் பகர்ந்த
முத்தா வலுப்பான போர்க்குட் டொடங்கி
யெக்காலு மக்காத சூர்க்கொத் தரிந்த சினவேலா ;

தச்சா மயிற்சேவ லாக்கிப் பிளந்த
சித்தா குறப்பாவை தாட்குட் படிந்து
சக்காகி யப்பேடை யாட்குப் புகுந்து மணமாகித்-

தப்பாம லிப்பூர்வ மேற்குத் தாங்கள்
தெற்காகு மிப்பாரில் கீர்த்திக் கிசைந்த
*தச்சூர் வடக்காகு மார்க்கத் தமர்ந்த பெருமாளே.

திருக்கோவலூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். தென்னற்காடு ஜில்லாவிலுள்ளது. அஷ்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. அந்தகாசுரனைச் சம்ஹரித்த ஸ்தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல்கள் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

738.

பாவ நாரிகள் மாமட மாதர் வீணிக ளாணவ
பாவை யாரிள நீரன முலையாலும்
பார்வை யாமிகு கூரயி லாலு மாமணி யார் குழை
பார காரன வார்குழ லதனாலுஞ்;
சாவ தார விதாரமு தார்த்த ராவித ழூறித
சாத மூரலி தாமதி முகமாலுஞ்
சார்வ தாவடி யேனிடர் வீற மாலறி வேமிகு
சார மாயதி லேயுற லொழிவேனே;
ஆவ ஆர்வன நான்மறை யாதி மூல பராவரி
யாதி காணரி தாகிய பரமேசர்
ஆதி யாரருள் மாமுரு கேச மால்†மரு கேசர
ஞாதி தேவர்க ளியாவர்கள் பணிபாத;
கோவ தாமறை யோர்மறை யோது மோதம் விழாவொலி
கோடி யாகம மாவொலி மிகவீறும்
கோவை மாநகர் மேவிய வீர வேலயி லாயுத
கோதை யாணையி னுடைமர் பெருமாளே.

---

*பொன்னேரி தாலூகா, ஜமீன் கிராமம் தச்சூருக்கு வடக்கில் "ஆண்டார் குப்பம்" என்னும் சுப்பிரமண்ய ஸ்தலம் இருக்கின்றது.

† மருகேசர அனுஜ எனப் பிரிக்க.

தேவனூர்.

[இது தென்னற்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக்கு வடகிழக்கு 5-மைல். திருக்கோவலூருக்கு 2-மைலிலும், செய்யூர், கள்ளக்குறிச்சி, ஜயங்கொண்டசோழபுரம் ஆகிய சப் டிஸ்டிரிக்ட்டுக்களிலும், 'தேவனூர்' என்னும் கிராமங்கள் உள்ளன. தேவார வைப்பு ஸ்தலம்.]

739.

ஆறு மாறு மஞ்சு மஞ்சும் ஆறு மாறு மஞ்சு மஞ்சும்
ஆறு மாறு மஞ்சு மஞ்சும் அறுநாலும்-
ஆறு மாய சஞ்ச லங்கள் வேற தாவி ளங்கு கின்ற
ஆர ணாக மங்க டந்த * கலையான;
ஈறு கூற ரும்பெ ருஞ்சு வாமி யாயி ருந்த நன்றி
யேது வேறி யம்ப லின்றி யொருதானுய்-
யாவு மாய்ம னங்க டந்த மோன வீட டைந்தொ ருங்கி
யான வாவ டங்க என்று பெறுவேனே;
மாறு கூறி வந்தெ திர்ந்த சூரர் சேனை மங்க வங்க
வாரி மேல்வெ குண்ட சண்ட விததாரை-
வாகை வேல கொன்றை தும்பை மாலை கூவி ளங்கொ ழுந்து
வால சோம னஞ்சு பொங்கு பகுவாய;
சீறு மாசு ணங்க ரந்தை ஆறு வேணி கொண்ட நம்பர்
தேசி காக டம்ப லங்கல் புனைவோனே-
தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூர்வி ளங்க வந்த பெருமாளே. (க)

740.

தார காசு ரன்ச ரிந்து வீழ வேரு டன்ப றிந்து
சாதி பூத ரங்கு லுங்க மூதுமீனச்-
சாக ரோதை யங்கு ழம்பி நீடு தீகொ ளுந்த அன்று
தாரை வேல்தொ டுங்க டம்ப மததாரை;

* கலையான ஈறு = உபதேச கலையாகிய சித்தாந்தம்.

ஆர வார வும்பர் கும்ப வார ணைச லம்பொ ருந்து
மானை யாளு நின்ற குன்ற மறமானும்-
ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேளே;
பார மார்த மூம்பர் செம்பொன் மேனி யாளர் கங்கை வெண்க
பால மாலை கொன்றை தும்பை சிறுதாளி-
பார மாசு ணங்கள் சிந்து வார வார மென்ப டம்பு
பான்ல் கூவி ளங்க ரந்தை அறுகோடே;
சேர வேம ணைந்த நம்ப ரீச னரி டஞ்சி றந்த
சீத ளார விந்த வஞ்சி பெருவாழ்வே-
தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூர்வி ளங்க வந்த பெருமாளே. (உ)

741.

காணெ ணுதது உருவோ டருவது
பேசொ ணுதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்-
காய பாசம தனிலே யுறைவது
மாய மாயுட லறியா வகையது
காய மானவ ரெதிரே யவரென வந்துபேசிப்;
பேணெ ணுதது வெளியே யொளியது
மாய ஞய னறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்-
பேரு மாய்கலை யறிவாய் துரியவ
தீத மானது வினையேன் முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே;
வீணெ ணுதென அமையா தசுரரை
நூறி யேயுயிர் நமனீ கொளுவென
வேல்க டாவிய கரனே யுமைமூலை யுண்டகோவே-
வேத நான்முக மறையோ னெடும்விளை
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா குறவர்கு றிஞ்சியூடே;

சேணெ ணுயிடு மிதண்மே லரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா வருடரு கந்தவேளே -
சேரொ ணுவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிக ளுளமே யுறைதரு
*தேவ னூர்வரு குமரா வமரர்கள் தம்பிரானே. (ஈ)

திருவதிகை.

[இது தென்ஞற்காடு ஜில்லா பண்ணுருட்டி ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 1½-மைல். கெடில நதியின் வட கரையி லுள்ளது. மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

742.

பரவுவரிக் கயல்குவியக் குயில்கிளியொத் துரைபதறப்
பவளநிறத் ததரம்விளைத் தமுதூறல்-
பருகிநிறத் தாளமணிக் களபமுலைக் குவடசையப்
படைமதனக் கலியடவிப் பொதுமாதர் ;
சொருகுமலர்க் குழல்சரியத் தளர்வுறுசிற் றிடைதுவளத்
துகிலகலக் கருபைவிளைவித் துருகாமுன்-
சொரிமலர்மட் டலரணைபுக் கிதமதுரக் கலவிதனிற்
சுழலுமனக் கவலையொழித் தருள்வாயே ;
கருகுநிறத் தசரன்முடித் தலையொருபத் தறமுடுகிக்
கணைதொடுமச் சுதன்மருகக் குமரேசா-
கயிலைமலைக் கிழவனிடக் குமரிவிருப் பொடுகருதக்
கவிநிறையப் பெறும்வரிசைப் புலவோனே ;
திரள்கமுகிற் றலையிடறிப் பலகதலிக் குலைசிதறிச்
செறியும்வயற் கதிரலையத் திரைமோதித்-

---

* "தேவை யூர்வரு" என்றும் பாடம் ; தேவை என்பது இராமேசரம்.

திமிதிமெனப் பறையறையப் பெருகுபுனற் கெடிலநதித்
திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே. (க)

743.

விடமும் வேலன மலரன விழிகளு
மிரத மேதரு மமுதெனு மொழிகளும்
விரகி லுலெழு மிருதன வகைகளு மிதமாடி-

மிகவு மாண்மையு மெழினல முடையவர்
வினையு மாவியு மூடனிரு வலியிடை
வெளியி லேபட விசிறிய விஷமிக ளுடன்மேவா ;

இடரு ருதுனை நினைபவர் துணைகொள
இனிமை போலெழு பிறவியெ னுவரியி
னிடைகெ டாதினி யிருவினை யிழிவினி லிழியாதே-

இசையி லுடொறு மிமையவர் முனிவர்கள்
ககன பூபதி யிடர்கெட அருளிய
இறைநி றைறிரு புயமென வுரைசெய அருள்வாயே;

படரு மார்பினி லிருபது புயமதொ
டரிய மாமணி முடியொளி சொருபது
படியி லேவிழ வொருகணை தொடுபவ ரிடமாராய்-

பரவை யூடெரி பகழியை விடுபவர்
பரவு வார்வினை கெடஅரு ளுதவியெ
பரவு பால்கட லரவணை துயில்பவர் மருகோனே ;

அடர வேவரு மசுரர்கள் குருதியை :
அரக ராவென அலகைகள் பலியுண
அலையும் வேலையும் அலறிட எதிர்பொரு மயில்வீரா-

அமர ராதிய ரிடர்பட அடர்தரு
கொடிய தானவர் திரிபுர மெரிசெய்த
அதிகை மாநகர் மருவிய சசிமகள் பெருமாளே. (உ)

திருவாமூர்.

[இது திருவதிகைக்குச் சமீபத்தி லுள்ளது. பண்ணுருட்டியி லிருந்து 5-மைல். இது திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய தமக்கை யாராகிய திலகவதியார் என்பவர் அவதரித்துச் சிவபுண்ணியஞ் செய்து புகழை வளர்ப்பதற்கு ஆதாரஸ்தானமாக இருந்த தலம்.]

744.

தீத மதிய மெறிக்குந் தழலாலே-
சீறி மதனன் வலிக்குஞ் சிலையாலே ;
ஓத மருவி யலைக்குங் கடலாலே-
ஊழி யிரவு தொலைக்கும் படியோதான் ;
* மாது புகழை வளர்க்குந் திருவாமூர்-
வாழு மயிலி லிருக்குங் குமரேசா ;
காத லடியர் கருத்தின் பெருவாழ்வே-
காலன் மூதுகை விரிக்கும் பெருமாளே.

வடகூர்.

[இஃது 'ஆண்டார் கோயில்' என வழங்குகின்றது. புதுச் சேரிக்கு மேற்கு 10-மைலி லுள்ள சின்னபாபு சமுத்திரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 2-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

745.

அரியய னறியா தவரெரி புரமூ
ணதுபுக நகையே வியநாதர்-
அவிர்சடை மிசையோர் வனிதையர் பதிசீ
றழலையு மமுநேர் பிடிநாதர் ;
வரைமக ளொருகூ றுடையவர் மதனு
கமும்விழ விழியே வியநாதர்-

* மாது = திலகவதியார்.

மனமகிழ் குமரா எனவுன திருதாள்
மலரடி தொழுமா றருள்வாயே ;
அருவரை யிருகூ றிடவொரு மயில்மே
லவனியை வலமாய் வருவோனே-
அமரர்க ளிகல்நீ டசுரர்கள் சிரமே
லயில்தனி விசையாய் விடுவோனே ;
வரிசையொ டொருமா திணைதரு வனமே
மருவியொர் குறமா தணைவேடா-
மலைகளில் மகிழ்வாய் மருவிநல் வடகூர்
வருதவ முனிவோர் பெருமாளே.

திருத்துறையூர்.

[இது 'திருத்தலூர்' என மருவி வழங்குகின்றது. பண்ணுருட்டிக்கு வடமேற்கு 5-மைல். விழுப்புரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 1½-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

746.

ஆரத்தன பாரத்துகில் மூடிப்பலர் காணக்கையில்
யாழ்வைத்திசை கூரக்குழ லுடைசோர-
ஆகப்பனி நீரப்புழு கோடக்குழை யாடப்பிரை
யாசப்படு வார்பொட்டணி சகிநேர்வாள் ;
கூரக்கணை வேல்கட்கயல் போலச்சுழல் வார்சர்க்கரை
கோவைக்கனி வாய்பற்கதி ரொளிசேருங்-
கோலக்குயி லார்பட்டுடை நூலொத்திடை யார்சித்திர
கோபச்செய லார்பித்தர்க ளுறவாமோ ;
பூரித்தன பாரச்சடை வேதக்குழ லாள்பத்தர்கள்
பூசைக்கியல் வாள்பத்தினி சிவகாமி-
பூமிக்கடல் மூவர்க்குமு னுள்பத்திர காளிப்புணர்
போகர்க்குப தேசித்தருள் குருநாதா ;

சூரக்குவ டாழித்தவி டாய்முட்டசு ராருக்கிட
சோர்விற்கதிர் வேல்விட்டருள் விறல்வீரா-
தோகைச்செய லாள்பொற்பிர காசக்குற மான்முத்தொடு
சோதித்துறை யூர்நத்திய பெருமாளே.

திருகாவலூர்.

[இது 'திருநாமநல்லூர்' என வழங்குகின்றது. பண்ணுருட்டிக்கு மேற்கு 11-மைல். உளுந்தூருக்குப் போகும் பாதை. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

747.

கோலமறை யொத்த மாலைதனி லுற்ற
கோரமதன் விட்ட கணையாலே-
கோதிலத ருக்கள் மேவுபொழி லுற்ற
கோகிலமி குத்த குரலாலே ;
ஆலமென விட்டு வீசுகலி பற்றி
ஆரழலி றைக்கு நிலவாலே-
ஆவிதளர் வுற்று வாடுமெனை நித்த
மாசைகொட ணைக்க வரவேணும் ;
நாலுமறை கற்ற நான்முகனு தித்த
நாரணனு மெச்சு மருகோனே-
நாவலர்ம திக்க வேல்தனையெ டுத்து
நாகமற விட்ட மயில்வீரா ;
சேலெனும் விழிச்சி வேடுவர் சிறுக்கி
சீரணி தனத்தி லணைவோனே-
சீதவயல் சுற்று நாவல்தனி லுற்ற
தேவர்சிறை விட்ட பெருமாளே.

திருவெண்ணெய்நல்லூர்.

[பண்ணுருட்டிக்கு மேற்கு 15-மைல். திருக்கோவலூருக்குப் போகும் பாதை. விழுப்புரம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 12-மைல். திருக்கோவலூரி லிருந்து 14-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

748.

பலபல தத்துவ மதனை யெரித்திருள்
பரையர ணப்படர் வடவன லுக்கிரை
படநட நச்சுடர் பெருவெளி யிற்கொள விடமேவிப்-
பவன மொழித்திரு வழியை யடைத்தொரு
பருதி வழிப்பட விடல்கக னத்தொடு
பவுரி கொளச்சிவ மயமென முற்றிய பரமூடே ;
கலகலெ னக்கழல் பரிபுர பொற்பத
வொலிமலி யத்திரு நடன மியற்றிய
கனக சபைக்குளி லுருகி நிறைக்கட லதில்மூழ்கிக்-
கவுரி மினற்சடை யரனெடு நித்தமொ
டனக சகத்துவம் வருதலு மிப்படி
கழிய நலக்கினி நிறமென விற்றுட லருள்வாயே ;
புலையர் பொடித்தலும் அமண ருடற்கலை
நிரையில் கழுக்களி லுறவிடு சித்திர
புலவனெ னச்சில விருது படைத்திடு மிளையோனே-
புனமலை யிற்குற மகளய லுற்றெரு
கிழவ னெனச்சுனை தனில வளைப்புய
புளகித முற்றிபம் வரவணை யப்புணர் மணிமார்பா ;
மலைசில பற்றிய கடவு ளிடத்துறை
கிழவி யறச்சுக குமரி *தகப்பனை
மழுகொடு வெட்டிய நிமலிகை பெற்றருள் முருகோனே-

---

* தகப்பனை மழுகொடு வெட்டிய நிமலிகை=பிதாவாகிய (மதியாத) தக்கனை (வீரபத்திரரால்) மழுக்கொண்டு வெட்டுவித்த நின்மலி.

[*மகிழ்பெணை யிற்கரை பொழில்முகில் சுற்றிய
திருவேணெய் நற்பதி புகழ்பெற அற்புத
மயிலின் மிசைக்கொடு திருநட மிட்டுறை பெருமாளே.

திருப்பாதிரிப்புலியூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். கூடலூருக்கு வடக்கு 3-மைல். கெடில நதியின் தென்கரையி லுள்ளது. திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

749.

நிணமொடு குருதி நரம்பு மாறிய
தசைகுடல் மிடையு மெலும்பு தோலிவை
நிரைநிரை செறியு முடம்பு நோய்படு முதுகாயம்-
நிலைநிலை யுருவ மலங்க ளாவது
நவதொளை யுடைய குரம்பை யாமிதில்
நிகழ்தரு பொழுதில் முயன்று மாதவ முயவோரும் ;
உணர்வினி செபமுத லொன்று தானினி
நிறையினி முறையினி யன்பு தானினி
உயர்வினி யெனினுமெ னெஞ்சு தானினை வழியாமுன்-
ஒருதிரு *மரகத துங்க மாமிசை
யறுமுக மொளிவிட வந்து நான்மறை
யுபநிட மதனை விளங்க நீயருள் புரிவாயே ;
புணரியில் விரவி யெழுந்த ஞாயிறு
விலகிய புரிசை யிலங்கை வாழ்பதி
பொலமணி மகுட சிரங்கள் தாமொரு பதுமாறிப்-
புவியிடை யுருள முனிந்து கூர்கணை
யுறுசில வளைய வலிந்து நாடிய
புயலதி விறலரி விண்டு மால்திரு மருகோனே ;

* மரகத துங்க மா = மயில்.

அணிதரு கயிலே நடுங்க வோரெழு
குலகிரி யடைய இடிந்து தூளெழ
அலையெறி யுததி குழம்ப வேல்விடு முருகோனே-

அமலமு னரிய தவஞ்செய் பாடல
வளநகர் மருவி யமர்ந்த தேசிக
அறுமுக குறமக ளன்ப மாதவர் பெருமாளே.

தி ரு மா ணி கு ழி.

[இந்த ஸ்தலம் திருப்பாதிரிப்புலியூருக்கு 4-மைல் தூரத்தி லுள்ளது. திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

750.

மதிக்கு நேரெனும் வாண்*மூகம் வான்மக
நதிக்கு மேல்வரு சேலேனு நேர்விழி
மணத்த வார்குழல் மாமாத ராரிரு கொங்கைமூழ்கி-

மதித்த பூதர மாமாம ஞலையர்
செருக்கி மேல்விழ நாடோறு மேமிக
வடித்த தேன்மொழி வாயூற லேநுகர் பண்டகாயேன்;

பதித்த நூபுர சீர்பாத மாமலர்
படைக்குள் மேவிய சீராவொ டேகலே
பணைத்த தோள்களொ டீராறு தோடுகள் தங்குகாதும்-

பணிக்க லாபமும் வேலோடு சேவலும்
வடிக்கொள் சூலமும் வாள்வீசு நீள்சிலே
படைத்த வாகையு நாடாது பாழில்ம யங்கலாமோ;

கதித்து மேல்வரு மாசூரர் சூழ்படை
நொறுக்கி மாவுயர் தேரொடு மேகரி
கலக்கி யூர்பதி தீமூள வேவிடும் வஞ்சவேலா-

---

* மூகம் = முகம்.

களித்த பேய்கண மாகாளி கூளிகள்
திரட்பி ரேதமெ லேமேவி மூளிகள்
கடித்த பூதமொ டேபாடி யாடுதல் கண்டவீரா ;
குதித்து வானர மேலேறு தாறுகள்
குலைத்து நீள்கமு கூடாடி வாழைகொள்
குலைக்கு மேல்விழ வேரேறு போகமும் வஞ்சிதோயுங் -
குளத்தி லூறிய தேனூறல் *மாதுகள்
குடித்து லாவியெ சேலோடு மாணிகொள்
குழிக்குள் மேவிய வாளேர்க ளேதொழு தம்பிரானே.

திருவேட்களம்.

[சிதம்பரத்திற்குக் கிழக்கு 2-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் இவர்களுடைய பாடல் பெற்றது.]

751.

சதுரத்தரை நோக்கிய பூவொடு
கதிரொத்திட ஆக்கிய கோளகை
தழையச்சிவ பாக்கிய நாடக அநுபூதி-
சரணக்கழல் காட்டியெ ணைவ
மலமற்றிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறுங் ;
கதிர்சுற்றுக நோக்கிய பாதமு
மயிலிற்புற நோக்கிய ணமென
கருணைக்கடல் காட்டிய கோலமும் அடியேணக்-
கனகத்தினு நோக்கினி தாயடி
யவர்முத்தமி ழாற்புக வேபர
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே ;

---

* மாதுகள் = மிகுந்த மகரந்தங்கள்.

சிதறத்தரை நாற்றிசை பூதர
நெரியப்பறை மூர்க்கர்கள் மாமுடி
சிதறக்கட லார்ப்புற வேயயில் விடுவோனே-
சிவபத்தினி கூற்றினை மோதிய
பதசத்தினி மூத்தவி நாயகி
செகமிப்படி தோற்றிய பார்வதி யருள்பாலா ;
விதுரற்குமு ராக்கொடி யாணையும்
விகடத்துற வாக்கிய மாதவன்
விசையற்குயர் தேர்ப்பரி யூர்பவன் மருகோனே-
வெளியெட்டிசை சூர்ப்பொரு தாடிய
கொடிகைக்கொடு கீர்த்தியு லாவிய
விறல்மெய்த்திரு வேட்கள மேவிய பெருமாளே. (க)

752.

மாத்திரை யாகிலு நாத்தவ ருளுடன்
வாழ்க்கையை நீடென மதியாமல்-
மாக்களை யாரையு மேற்றிடு சீலிகள்
மாப்பரி வேயெய்தி அதுபோக;
பாத்திர மீதென மூட்டிடு மாசைகள்
பாற்படு ஆடக மதுதேடப்-
பார்க்கள மீதினில் மூர்க்கரை யேகவி
பாற்கட லானென வுழல்வேனை;
சாத்திர மாறையு நீத்தம னோலய
சாத்தியர் மேவிய பதவேளே-
தாத்தரி தாகிட சேக்கெனு மாநட
தாட்பர னுர்தரு குமரேசா;
*வேத்திர சாலம தேற்றிடு வேடுவர்
†மீக்கமு தாமயில் மணவாளா-
வேத்தம தாமறை யார்த்திடு சீர்திரு
வேட்கள மேவிய பெருமாளே. (உ)

---

* வேத்திர சாலம்=அம்புக் கூட்டம். † மீக் கமுது=மிக்க அமுது.

திருக்கல்வாயில்.

[இது சிவபுரி என வழங்கும். சிதம்பரத்துக்குத் தென்கிழக்கு 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

753.

அறிவி லாதவ ரீனர்பேச் சிரண்டு
பகரு நாவினர் லோபர்தீக் குணங்க
ளதிக பாதகர் மாதர்மேற் கலன்கள் புனை*யாதர்-
அசடர் பூமிசை வீணராய்ப் பிறந்து
திரியு மானுடர் பேதைமார்க் கிரங்கி
யழியு மாலினர் நீதிநூற் பயன்கள் தெரியாத;
நெறியி லாதவர் சூதினுற் கவர்ந்து
பொருள்செய் பூரியர் மோகமாய்ப் ப்ரபஞ்ச
நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறி-
நினைவு பாழ்படு வாடிநோக் கிழந்து
வறுமை யாகிய தீயின்மேற் கிடந்து
நெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே;
நறிய வார்குழல் வானநாட் டரம்பை
மகளிர் காதலர் தோள்கள்வேட் டிணங்கி
நகைகோ டேழிசை பாடிமேற் பொலிந்து களிகூர-
நடுவி லாதகு ரோதமாய்த் தடிந்த
தகுவர் மாதர்ம ஞளர்தோட் பிரிந்து
நசைபொ ருதழு தாகமாய்த் தழுங்கி யிடர்கூர;
மறியு மாழ்கட லூடுபோய்க் கரந்து
கவடு கோடியின் மேலுமாய்ப் பரந்து
வளரு மாவிரு கூறதாய்த் தடிந்த வடிவேலா-
மருவு காளமு கீல்கள்கூட் டெழுந்து
மதியு லாவிய மாடமேற் படிந்த
வயல்கள் மேவுநெல் வாயில்வீற் றிருந்த பெருமாளே.

---

* ஆதர் = அறிவிலார்.

விருத்தாசலம்.

[கூடலூருக்குத் தென்மேற்கு 35-மைல். சிதம்பரத்திலிருந்து 28-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர். ஸ்தல புராணம் உண்டு.]

754.

சூடத்தாமரை யாமென வேயிரு
தனத்தார்மதி வாணுத லாரிருள்
குழற்காடின மாமுகில் போல்முது கலிமோதக்-
குலக்கார்மயி லாமென வேகயல்
விழித்தார்கர மேல்கொடு மாமுலை
குடத்தியாழ்கிளி யாமென வேகுயில் குரலோசை;
படித்தார்மயி லாமென வேநடை
நெளித்தார்பல காமுகர் வார்கலி
பழிப்பாரவ ராசையை மேல்கொடு விலைமாதர்-
படிக்கார்மின லாமென வேநகை
புரித்தார்பலர் வாயிதழ் சேர்பொருள்
பறிப்பார்பழி காரிகள் நாரிக ளுறவாமோ;
அடைத்தார்கட லோர்வலி ராவண
குலத்தோடரி யோர்சர ஞர்சின
மழித்தார்முகி லேய்நிற ராகவர் மருகோனே-
அறுத்தாரய னுர்தலை யேபுர
மெரித்தாரதி லேபுல ருயி
ரளித்தாருடல் பாதியி லேயுமை அருள்பாலா;
விடத்தாரசு ரார்பதி வேரற
அடித்தாய்கதிர் வேல்கொடு சேவகம்
விளைத்தாய்குடி வாழம ரோர்சிறை மிடிதீர-
விழித்தாமரை போலழ காகுற
மகட்கான *வ ணுளை தாயுறை
விருத்தாசலம் வாழ்மயில் வாகன பெருமாளே. (க)

* வணு = வண்ணு = அழகனே.

பு. 755.

திருமொழி யுரைபெற அரனுன தருளிணை
செயமுன மருளிய *குளவோனே-

திறலுயர் மதுரையி லமணரை யுயிர்கழு
தெறிபட மதுகிட விடுவோனே;

ஒருவரு முனதருள் பரிவில ரவர்களி
னுறுபட ருறுமெனை யருள்வாயோ-

உலகினி லனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருகொடி தனில்வரு மயில்வீரா;

கருவரி யுறுபொரு கணைவிழி குறமகள்
கணினெதிர் தருவென முனமானுய்-

கருமுகில் பொருநிற அரிதிரு மருமக
கருணையில் மொழிதரு முதல்வோனே;

முருகலர் தருவுறை யமரர்கள் சிறைவிட
மூரணுறு மசுரனை முனிவோனே-

முடிபவர் வடிவுறு சுசிகர முறைதமிழ்
முதுகிரி வலம்வரு பெருமாளே. (உ)

பு. 756.

பசையற்ற வுடல்வற்ற வினைமுற்றி நடைநெட்டி
பறியக்கை சொறியப்பல் வெளியாகிப்-

†படலைக்கு விழிகெட்ட குருடுற்று மிகநெக்க
பழமுற்று நரைகொக்கி னிறமாகி;

விசைபெற்று வருபித்தம் வளியைக்க ணிலைகெட்டு
மெலிவுற்று விரல்பற்று தடியோடே-

வெளிநிற்கும் விதமுற்ற இடர்பெற்ற ஜனனத்தை
விடுவித்து னருள்வைப்ப தொருநாளே;

‡அசைவற்ற நிருதர்க்கு மடிவுற்ற பிரியத்தி
னடல்வஜ்ர கரன்மற்று மூளவாவேனோர்-

---

* குளவோன் = குளத்தில் உற்பவித்தவன்.
† படலை = படலம். ‡ அசைவு = சலிப்பு.

அளவற்ற மலர்விட்டு நிலமுற்று மறையச்செய்
*அதுலச்ச மரவெற்றி யுடையோனே;
வசையற்று முடிவற்று வளர்பற்றி னளவற்ற
வடிவுற்ற முகில்கிட்ணன் மருகோனே-
மதுரச்செ மொழிசெப்பி யருள்பெற்ற சிவபத்தர்
வளர் விர்த்த கிரியுற்ற பெருமாளே. (நு)

வேப்பூர்.

[விருத்தாசலம் ஆற்காடு, குடியேத்தம் ஆகிய சப்டிஸ்டிரிக்
ஒக்களில் வேப்பூர் எனப் பெயரிய கிராமங்கள் இருக்கின்றன.]

757.

சூரைகட லுலகினி லுயிர்கொடு போந்து
கூத்தாடு கின்ற குடில்பேணிக்-
குகையிட மருவிய கருவிழி மாந்தர்
†கோட்டாலை யின்றி யவிரோதம்;
வர இரு வினையற உணர்வொடு தூங்கு
வார்க்கே விளங்கு மதிபூதி-
வடிவினை யுனதழ கியதிரு வார்ந்த
வாக்கால்மொ ழிந்த ருளவேணும்;
திரள்வரை பகமிகு குருகுல வேந்து
தேர்ப்பாகன் மைந்தன் மறையோடு-
தெருமர நிசிசரர் மனைவியர் சேர்ந்து
தீப்பாய இந்த்ர புரிவாழ;
விரிதிரை யெரியெழ முதலுற வாங்கு
வேற்கார கந்த புவியேழும்-
மிடிகெட விளைவன வளவயல் சூழ்ந்த
வேப்பூர் மர்ந்த பெருமாளே.

---

* அ துல = சமான மில்லாத. † கோட்டாலை = தண்பம்.

நிம்பபுரம்.

[நிம்பபுரம் என்பதும் வேப்பூரா யிருக்கலாம்; நிம்பம்=வேம்பு.]

758.

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாது மறியாத-
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு பெறுமாறு;
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனி னாடி வனமீது-
வந்தசர ணூர விந்தமது பாட
வண்டமிழ்வி னோத மருள்வாயே;
குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமப டீர வதிரேகக்-
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்றுதடு மாற இகல்கோப;
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே-
விம்பமதில் சூழ நிம்பபுர வாண
விண்டலம கீபர் பெருமாளே.

வேப்பஞ்சத்தி.

[இது வேப்பூரோ வேறு தலமோ விளங்கவில்லை.]

759.

நாட்டந் தங்கிக் கொங்கைக் குவடிற் படியாதே-
நாட்டுந் தொண்டர்க் கண்டக் கமலப் பதமீவாய்;
வாட்டங் கண்டுற் றண்டத் தமரப் படைமீதே-
மாற்றந் தந்துப் பந்திச் சமருக் கெதிரானோர்;

கூட்டங் கந்திச் சிந்திச் சிதறப் பொருவோனே-
கூற்றன் பந்திச் சிந்தைக் குணமொத் தொளிர்வேலா;
வேட்டங் தொந்தித் தந்திப் பரணுக் கிளையோனே-
வேப்பஞ் சந்திக் கந்தக் குமரப் பெருமாளே.

திருக்கூடலையாற்றூர்.

[இது மணிமுத்தாநதியும் வெள்ளாறும் கூடு மிடத்தில் இருக்கின்றது. விருத்தாசலத்தி லிருந்து 14-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

760.

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப் பாய்ந்துகட வோடடமொ டாடிவிடு
விஞ்சையாலே-

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ் வன்புகூரத்;
தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னூடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் பேர்ந்துவினை மூடியடி யேனுமுன
தன்பிலாமல்-

தேட்டமுறத் தேர்ந்து*மமிர் தாமெனவெ யேகிநம
னோட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுலி காலனணு காநினரு ளன்புதாராய்;
வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேந்தகதிர் வேல்கொடட மாடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கநிலை யாக †வைகும்
விஞ்சையோனே-

---

* அமிருத்து ஆம் எனவே = சாவு இல்லை யென்று.
† வைகும் = வைக்கும்.

வேற்றுருவிற் போந்துமது சாபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் றூங்குமழு வாளியென தாதைபுர
மேட்டையெரித் தாண்டசிவ லோகன்விடை யேறியிட
மூங்கொளாயி;

கோட்டுமுலைத் தாங்குமிழை யானஇடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ காகனிவ காமிவிறல்
கூற்றுவனைக் காய்ந்தஅபி ராமிமன தாரஅருள் கந்தவேளே-

கூட்டுநதித் தேங்கிய*வெ ளாறுதர ளாறுதிகழ்
நாட்டிலுறைச் சேந்தமயி லாவளிதெய் வானையொடெ
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில் வாழ்குமர தம்பிரானே.

கடம்பூர்.

[சிதம்பரத்துக்குத் தென்மேற்கு 15-மைலிலுள்ள மன்னூர் குடிக்குத் தெற்கு 4-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

761.

வாருமிங் கேவிடி தோபணம் பாஷாண
மால்கடந் தேபோமெ னியலூடே-

வாடிபெண் காள்பாயை போடுமென் றுசார
வாசகம் போல்கூறி யணைமீதே;

சேருமூன் காசாடை வாவியும் போதாமை
தீமைகொண் டேபோமெ னடமாதர்-

சேரிடம் போகாம லாசுவந் தேறுமல்
சீதளம் பாதார மருள்வாயே;

நாரணன் சீராம கேசவன் கூராழி
நாயகன் பூவாயன் மருகோனே-

---

* வெள்ளாறு தளாறு திகழ் நாடு=வெள்ளாறும் மணிமுத்த நதியுங் கூடும் இட மாகிய கூடலையாற்றூர்; தள ஆறு=மணிமுத்த நதி.

நாதனும் பூர்த்த மோதநின் றேயாடு
நாடகஞ் சேய்தாள ரருள்பாலா;
சூரணங் கோடாழி போய்கிடந் தேவாட
சூரியன் தேரோட அயிலேவி-
தூநறுங் காவேரி சேருமொண் சிறு
சூழ்கடம் பூர்தேவர் பெருமாளே.

திருவாத்துறை.

[இது 'திருநெல்வாயில் அரத்துறை' எனப்படும். விருத்தாசலத்துக்குத் தென்மேற்கு 11-மைல் தூரத்தி லுள்ள பெண்ணாகடத்துக்குத் தென்மேற்கு 4-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். இங்குச் சிவபெருமான் திருஞானசம்பந்த ஸ்வாமிகளுக்கு முத்துக் குடையும் முத்துச் சிவிகையும் அளித்தருளியது இத் திருப்புகழிற் கூறப்பட்டுளது.]

762.

கறுவி மைக்கணிட் டினித ழைத்தியற்
கவிசொ லிச்சிரித் துறவாடிக்-
களவு வித்தையிட் டுளமு ருக்கிமுற்
கருதி வைத்தவைப் பவைசேரத்;
தறுக ணிற்பறித் திருக ழுத்துறத்
தழுவி நெக்குநெக் குயிர்சோரச்-
சயன மெத்தையிற் செயல ழிக்குமித்
தருணி கட்ககப் படலாமோ;
பிறவி யைத்தணித் தருளு நிட்களப்
பிரம சிற்சுகக் கடல்மூழ்கும்-
பெருமு னித்திரட் பரவு செய்ப்பதிப்
ப்ரபல *கொச்சையிற் சதுர்வேதச்;

---

* கொச்சை = சீகாழி.

சிறுவ நிற்கருட் கவிகை நித்திலச்
சிவிகை யைக்கொடுத் தருளீசன்-
செகத லத்தினிற் புகழ்ப டைத்தமெய்த்
திருவ ரத்துறைப் பெருமாளே.

யாழ்ப்பாணயன்பட்டினம்.

['யாழ்ப்பாணயன்பட்டினம்' என்பது அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவ ராகிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனருடைய ஊராகிய திரு எருக்கத்தம்புலியூ ராக இருக்கலாம். கடுகோட்டில் விருத்தாசலத்துக்குத் தெற்கு 7-மைல். ஈழநாட்டில் 'யாழ்ப்பாணம்' என்னும் ஊர் இருக்கின்றது.]

763.

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூ தும்-
*போற்றாய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்ற ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயங் கற்றமை விழியின ரழுதூ றல்;
வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்புர ம்ருகமத மகிலாரம்-
மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
†வேட்பூ ணாகங் கெட்டெனை யுனதுமெய்
பழிபட அருளாயோ;
ஆததாள மாலதங் கைச்சிக னிகையுமை
கூத்தா டாநந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவனேசை-

---

* போற் றாய்=போல் தாய்; தாய்=தாவி.
† வேட் பூணு=வேட்கை பூண்டு.

ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவள் பெறுசேயே ;
ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு முருகோனே-
ஏற்போர் தாம் *வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணையன் பட்டின மருவிய பெருமாளே.

ஸ்ரீ மு ஷ் ட ம்.

[சிதம்பரத்திலிருந்து 24-மைல். விருத்தாசலத்துக்குத் தெற்கு 7-மைலிலுள்ள 'ராஜேந்திர பட்டணம்' எனப்படும் எருக்கத்தம்புலியூருக்குக் கிழக்கு 4-மைல். விஷ்ணு க்ஷேத்திரம்.]

764.

கழைமுத்து மாலை புயல்முத்து மாலை
கரிமுத்து மாலை மலைமேவுங்-
கடிமுத்து மாலை வளைமுத்து மாலை
கடல்முத்து மாலை யரவீனும் ;
அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பி
னடைவொத்து லாவ அடியேன்முன்-
அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு
மடிமைக்கு ழாமொ டருள்வாயே ;
மழையொத்த சோதி குயில்தத்தை போலு
மழலைச்சொ லாயி யெமையீனு-
மதமத்த நீல களநித்த நாதர்
மகிழ்சத்தி யீனு முருகோனே ;

---

* வந்து = வர.

செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை
திருமுத்தி மாதின் மணவாளா-
சிறையிட்ட சூரர் தலைவெட்டி ஞான
திருமுட்ட மேவு பெருமாளே. (க)

765.

சரம்வெற் றிக்கய லாமெனும் வேல்விழி
சிலைவட் டப்புரு வார்குழல் கார்முகில்
தனமுத் துக்கிரி யாமெனு நூலிடை மடவார்கள்-
சனுமெத் தப்பரி வாகிய மாமய
லிடு*முத் தித்திகழ் மால்கொடு பாவையர்
தகுதத் தக்கிட தோதகு தீதென விளையாடும் ;
விரகத் தூர்க்குண வேசைய ராசையர்
பணமெத் தப்பறி காரிகள் மாறிகள்
விதமெத் தக்கொடு மேவிகள் பாவிகள் அதிபோக-
மெலிவுற் றுக்குறி நாறிகள் பீறிகள்
கலகத் தைச்செயு மோடிகள் பீடிகள்
விருதிட் டுக்குடி கேடிகள் சேடிகள் உறவாமோ ;
பொருவெற் றிக்கழை வார்சிலை யாளுட
லெரிபட் டுச்சரு காய்விழ வேநகை
புகுவித் தப்பிறை வாழ்சடை யாணிட மொருமாது-
புகழ்சத் திச்சிவ காவண மீதுறை
சிவபத் திப்பர மேஸ்வரி யாள்திரி
புவனத் தைப்பரி வாய்முத லீனுமை யருள்பாலா ;
திரையிற் பொற்கிரி யாடவும் வாசுகி
புனைவித் தத்தலை நாளமு தார்சுவை
சிவபத் தர்க்கிது வாமென வேபகி ரரிராமர்-
திருவுற் றுப்பணி யாதிவ ராகர்த
மகளைப் பொற்றன வாசையெ டாடிய
திருமுட் டப்பதி வாழ்முரு காசுரர் பெருமாளே. (உ)

---

* உத்தி = யுக்தி.

திருநல்லூர்.

[சிதம்பரத்துக் கடுத்த கொள்ளிடம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 3-மைல். இஃது 'ஆச்சாபுரம் நல்லூர்' என வழங்கும். 'திருநல்லூர்ப் பெருமணம்' என்ப திதுவே. திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. அவருடைய திருமணம் நடந்த திருப்பதி. ஸ்தல புராணம் உண்டு.]

766.

பூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூணு மண்டல *அ
தார சந்திமுக மாறு மிந்த்ரதரு வுந்தளாமேல்-
மூது ரம்பலவர் பீட மந்தமுமி
லாத பந்தவொளி யாயி ரங்கிரண
மூணு மிந்துவொளிர் சோதி விண்படிக விந்துநாதம்;
ஓல மென்றுபல தாள சந்தமிடு
சேவை கண்டமுதை வாரி யுண்டுலகி
சேழு கண்டுவிளை யாடி யிந்துகதி ரங்கிசூலம்-
ஓடு மந்தகலி காலொ டுங்கநடு
தூணில் தங்கவரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி சந்த்ரவொளி சந்தியாதோ;
சூலி யந்தரிக பாலி சங்கரிபு
ராரி யம்பரிகு மாரி யெண்குணசு
வாமி பங்கிசிவ காம சுந்தரியு கந்தசேயே-
சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பருப கார சுந்தரகு
காள னுஞ்சுருதி யோல மொன்றநட னங்கொள்வேலா;
சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி லேறு மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்த்ரமுக கந்தவேளே-

* அதார=ஆதார.

தேவ ரம்பையமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர *சங்கரதி
யாகர் வந்துறைந லூர மர்ந்துவளர் தம்பிரானே.

திருமயேந்திரம்.

[ஆச்சாபுரத்துக்கு வடகிழக்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

767.

வண்டணி யுங்கமழ் கூந்த லார்விழி
அம்பிய லுஞ்சில போந்த வாணுதல்
வண்டர ளந்திக ழாய்ந்த வார்நகை குயில்போல-

வண்பயி லுங்குவ டாண்ட மார்முலை
யின்பொறி யங்குமி ழாம்பல் தோள்கர
வஞ்சிய னுங்கொடி சேர்ந்த நூலிடை மடவார்பொன்;

கண்டவு டன்களி கூர்ந்து பேசிகள்
குண்டுணி யுங்குரல் சாங்க மோதிகள்
கண்சுழ லும்படி தாண்டி யாடிகள் சதிகாரர்-

கஞ்சுளி யுந்தடி யீந்து போவென
நஞ்சையி டுங்கவ டார்ந்த பாவிகள்
கம்பையி லுஞ்சட மாய்ந்து நாயனு முழல்வேனே;

அண்டரு டன்தவ சேந்து மாதவர்
புண்டரி கன்திரு பாங்கர் கோவென
அஞ்சலெ னும்படி போந்து வீரமொ டசுராரை-

---

* "சிவலோகத் தியாகர்" என்பது ஆச்சாபுர நல்லூரிற் சிவபெருமான் திருநாமம்.

கும்பகோணத்துக் கடுத்த சுந்தரபெருமாள் கோயில் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 2-மைல் தூரத்தி லுள்ள நல்லூர் என்னுந் தேவாரம் பெற்ற ஸ்தலத்தில் வீதிவிடங்கத் தியாகர் மூன்று நாள் வந்து உறைந்ததாகத் திருநல்லூர்ப் புராணம் கூறும்.

அங்கமொ டுங்கிட மாண்டொ டாழிக
ளெண்கிரி யும்பொடி சாம்பர் நூறிட
அந்தக னுங்கயி றுங்கை வீசிட விடும்வேலா ;
செண்டணி யுஞ்சடை பாந்தள் நீர்மதி
யென்பணி யன்கன சாம்பல் பூசிய
செஞ்சட லன்சுத சேந்த வேலவ முருகோனே-
திங்கள்மு கந்தன சாந்து மார்பின
ளென்றனு ளம்புகு பாங்கி மாலைடு
சிந்தைம கிழ்ந்தும யேந்த்ர மேவிய பெருமாளே.

சீகாழி.

[ரெயில்வே ஸ்டேஷன். சிதம்பரத்திற்குத் தெற்கு 11-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருவவதாரஞ் செய்தருளிய திருப்பதி. மூவர் தேவாரமும் பெற்ற முதலாகர். புகலி, சண்பை, பிரமபுரம், கோசீசை, கழுமலம், பூந்தராய் என்பன ஸ்ரீகாழியின் திருநாமங்கள். ஸ்தல புராணம் உண்டு.]

768.

அலைகடல் சிலைமதன் அந்தி யூதையும்
அரிவையர் வசையுட னங்கி போல்வர
அசைவன விடைமணி யன்றில் கோகிலம் அஞ்சிநா னும்-
அழலிடு மெழுகென வெம்பி வேர்வெழ
அகிலொடு மருகமத நஞ்சு போலுற
அணிபணி மணிபல வெந்து நீறெழ அங்கம்வேறுய்;
மூலைகனல் சொரிவர முன்பு போல்நினை
வழிவச மறஅற நின்று சோர்வுற
முழுதுகொள் விரகனல் மொண்டு வீசிட மங்கிடாதே-
முருகவிழ் திரள்புய முந்து வேலணி
முளரியொ டழகிய தொங்கல் தாரினை
முனிவற நினதருள் தந்தென் மாலைமு னிந்திடாதோ;

சிலைதுதல் கயல்விழி செஞ்சொல் வானவி
திரிபுரை பயிரவி திங்கள் சூடிய
திகழ்சடை நெடியவள் செம்பொன் மேனியள் சிங்கமேறி-

திரள்படை யலகைகள் பொங்கு கோடுகள்
திமிலையொ டறைபறை நின்று மோதிட
சிவனுட னடம்வரு மங்கை மாதுமை தந்தவேளே ;

மலைதனி லொருமுனி தந்த மாதுதன்
மலரடி வருடிய நின்று நாடொறு
மயில்பயில் குயில்கிளி வம்பி லேகடி தொண்டிஞனே-

மழைமுகில் தவழ்தரு மண்டு கோபுர
மதில்வயல் புடையுற விஞ்சு காழியில்
வருமொரு கவுணியர் மைந்த தேவர்கள் தம்பிரானே. (க)

769.

இரத மான தேனூற லதர மான மாமாத
ரெதிரி லாத பூணர முலைமீதே-

இனிது போடு மேகாச உடையி னுலு மாலால
விழியி னுலு மாலாகி யதராக ;

விரக மாகி யேபாய விடைவி டாமல் நாடோறு
ம்ருகம தாதி சேரோதி நிழல்மூழ்கி-

விளையு மோக மாமாயை கழலு மாறு நாயேனும்
விழல னுய்வி டாதேகி னருள்தாராய் ;

அரக ராள ணமூடர் திருவெ ணீறி டாமூடர்
அடிகள் பூசி யாமூடர் கரையேற-

அறிவு தூல்க லாமூடர் நெறியி லேகி லாமூடர்
அறம்வி சாரி யாமூடர் நரகேழிற் ;

புரள வீழ்வ தீராறு கரவி நோத சேய்சோதி
புரண பூர ணுகார முருகோனே-

புயலு லாவு சேணுடு பரவி நாளு மீடேறு
புகலி மேவி வாழ்தேவர் பெருமாளே. (உ)

770.

உனனத்தசை தோல்கள் சுமந்த காயப்பொதி மாய மிகுந்த
ஊசற்சுடு நாறு குரம்பை மறைநாலும்-

ஓதப்படு நாலு முகன்ற னுலுற்றிடு கோல மெழுந்து
ஓடித்தடு மாறி யுழன்று தளர்வாகிக் ;

கூனித்தடி யோடு நடந்து ஈனப்படு கோழை மிகுந்த
கூளச்சட மீதை யுகந்து புவிமீதே-

கூசப்பிர மாண ப்ரபஞ்ச மாயக்கொடு நோய்க ளகன்று
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே ;

சேனக்குரு கூடலி லன்று ஞானத்தமிழ் நூல்கள் பகர்ந்து
சேணிச்சம ணேர்கழு வின்கண் மிசையேறத்-

தீரத்திரு நீறு புரிந்து மீனக்கொடி யோனுடல் துன்று
தீமைப்பிணி தீர வுவந்த குருநாதா ;

கானச்சிறு மானை நினைந்து ஏனற்புன மீது நடந்து
காதற்கிளி யோடு மொழிந்து சிலிவேடர்-

காணக்*கணி யாக வளர்ந்து ஞானக்குற மானை மணந்து
காழிப்பதி மேவி யுகந்த பெருமாளே. (கூ)

771.

ஓய்யா ரச்சிலை யாமென வாசணை
மெய்யா ரப்பணி பூஷண மாலிக
ஞெய்யா நற்கலை யேகொடு மாமத விதமாகி-

ஓவ்வா ரிப்படி யோரென வேயிரு
கையா ரக்கணை மோதிர மேய்பல
வுள்ளார் செப்பிட ஏழுற நாளிலு மூடல்பேணிச்;

செய்வா ரிப்படி யேபல வாணிப
மிய்யா ரிற்பண மேயொரு காசிடை
செய்யார் சற்பணை காரர்பி சாசரு னடிபேணைச்-

---

* கணி=வேங்கைமரம்.

செய்வா ரிற்படு நாளெரு பாதகன்
மெய்யா எப்படி யோர்கரை சேர்வது
செய்யா யற்புத மேபெற வோர்பொரு ளருள்வாயே;

மையா ரக்கிரி யேபொடி யாய்விட
பொய்சூ ரப்பதி யேகெட வானவர்
வையாய் பொற்சர ணுளன வேதொழ விடும்வேலா-

வையா ளிப்பரி வாகன மாகொளு
துவ்வா ழிக்கட லேழ்மலை தூளிசெய்
மைபோ லக்கதி ரேய்நிற மாகிய மயில்வாழ்வே;

தெய்வா னைக்கா சேகுற மான்மகிழ்
* செய்யா முத்தமி ழாகர னேபுகழ்
தெய்வீ கப்பர மாகுரு வேயென விருதூதத்-

தியா ரக்கழு வேறிட நீறிடு
கையா அற்புத னேபிர மாபுர
செய்கா ழிப்பதி வாழ்முரு காசுரர் பெருமாளே. (ச)

772.

கிட்கா மக்ரோ தத்தே கட்சி
மிழ்த்தோர் கட்குக் கவிபாடிக்-

கச்சா பிச்சா கத்தா வித்தா
ரத்தே யக்கொட் களைநீளக்;

கொட்கா லக்கோ லக்கோ ணத்தே
யிட்டா சைப்பட் டிடவேவை-

கொட்டா னக்கூ னுக்கா எய்த்தே
னித்தீ தத்தைக் களைவாயே;

வெட்கா மற்பாய் சுற்றா மர்ச்சேர்
விக்கா னத்தைத் தரிமாறன்-

வெப்பா றப்பா டிக்கா ழிக்கே
புக்காய் வெற்பிற் குறமானை;

---

* செய்யா = அழகா.

மூட்கா னிற்கால் வைத்தோ டிப்போய்
முற்சார் செச்சைப் புயவீரா-
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் பெருமாளே. (நி)

773.

கொங்கு லாவிய குழலினு நிழலினு
நஞ்ச ளாவிய விழியினு மிரணிய
குன்று போல்வளர் முலையினு நிலையினு மடமாதர்-
கொம்பு சேர்வன இடையினு நடையினு
மன்பு கூர்வன மொழியினு மெழில்குடி
கொண்ட சேயித ழமுதினு நகையினு மனதாய ;
சங்கை யாளியை அணுவிடை பிளவள
வின்சொல் வாசக மொழிவன இவையில
சம்ப்ர தாயனை அவலனை ஒளிதிக ழிசைகூருந்-
தண்டை நூபுர மணுகிய இருகழல்
கண்டு நாளவ மிகையற விழியருள்
தந்த போருள் கனவினு நனவினு மறவேனே ;
வங்க வாரிதி முறையிட நிசிசரர்
துங்க மாமுடி பொடிபட வடவனல்
மங்கி நீறெழ அலகைகள் நடமிட மயிலேறி-
வஞ்ச வேல்கொடு முனிபவ அழகிய
சண்பை மாநக ருறையுமொ ரறுமுக
வந்த வானவர் மனதினி லிடர்கெட நினைவோனே ;
பங்க வீரியர் பறிதலை விரகினர்
மிஞ்சு பாதக ரறநெறி பயனிலர்
பந்த மேவிய பகடிகள் கபடிகள் நிலைகேடர்-
பண்பி லாதவர் கொலைசெயு மனதின
ரிங்கெ ணுயிர ருயரிய கழுமிசை
பஞ்ச பாதகர் *மூனைகெட அருளிய பெருமாளே. (சு)

* 'உறையவு மருளிய' என்னும் பாடம்.

774.

சிந்த னம்பரி மளபுழு கொடுபுனை
கொங்கை வஞ்சியர் சரியொடு கொடுவலை
தங்கு செங்கையர் அனமென வருகடை மடமாதர்-

சந்த தம்பொலி வழகுள வடிவினர்
வஞ்ச கம்பொதி மனதின ரணுகினர்
தங்கள் நெஞ்சக மகிழ்வுற நிதிதர அவர்மீதே ;

இந்தை வஞ்சக நயமொடு பொருள்கவர்
தந்த்ர மந்த்ரிகள் தசணியி லணைபவர்
செம்பொ னிங்கினி யிலையெனில் மிகுதியு முனிவாகித்-

திங்க ளொன்றினில் நெனல்பொரு ளுதவில
னென்று சண்டைகள் புரிதரு மயலியர்
சிங்கி யுங்கொடு மிடிமையு மகலநி னருள்கூர்வாய் ;

மந்த ரங்குடை யெனநிரை யுறுதுயர்
சிந்த அன்றடர் மழைதனி லுதவிய
மஞ்செ னும்படி வடிவுறு மரிபுகழ் மருகோனே-

மங்கை யம்பிகை மகிழ்சர வணபவ
துங்க வெங்கய முகன்மகிழ் துணைவநல்
வஞ்சி தண்குற மகள்பத மலர்பணி மணவாளா ;

தந்த னந்தன தனதன தனவென
வண்டு விண்டிசை முரல்தரு மணமலர்
தங்கு சண்பக முகிளள வுயர்தரு பொழில்மீதே-

சங்கு நன்குமிழ் தாளமு மெழில்பெறு
துங்க வொண்பணி மணிகளும் வெயில்விடு
சண்பை யம்பதி மருவிய அமரர்கள் பெருமாளே. ()

775.

சிருவி யிகழ்ந்து மருண்டு வெகுண்டுறு
சமயமு மொன்றிலை யென்ற வரும்பறி
தலையரு நின்று கலங்க விரும்பிய தமிழ்கூறுஞ்-

*சலிகையு நன்றியும் வென்றியு மங்கள
பெருமைக ளுங்கன முங்குண மும்பயில்
சரவண மும்பொறை யும்புக ழுந்திகழ் தனிவேலும்;
விருது துலங்க சிகண்டியி லண்டரு
முருகி வணங்க வரும்பத மும்பல
விதரண மூந்திற மூந்தர மூந்தினை புனமானின்-
மருகமத குங்கும கொங்கையில் நொந்தடி
வருடிம ணந்துபு ணர்ந்தது வும்பல
விஜயமு மன்பின்மொ ழிந்தமொ ழிந்தியல் மறவேனே;
கருதியி லங்கை யழிந்துவி டும்படி
அவுணர டங்கம டிந்துவி ழும்படி
கதிரவ னிந்து விளங்கி வரும்படி விடுமாயன்-
கடகரி யஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வும்புய லிந்திரை
கணவன ரங்க முகுந்தன் வருஞ்சக டறமோதி;
மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன லங்கல் புனைந்தரு ளுங்குறள்
வடிவென டுங்கடல் மங்கவொ ரம்புகை தொடுமீளி-
மருகபு ரந்தர னுந்தவ மொன்றிய
பிரமபு ரந்தனி லுங்குக னென்பவர்
மனதினி லும்பரி வொன்றிய மர்ந்தருள் பெருமாளே. (அ)

776.

சிந்தூற்றெழு மாமதி அங்கித் திளாலே-
தென்றற்†றரு வாசமி குந்தூற் றெழலாலே;
அந்திப்பொழு தாகிய கங்குற் றிளாலே-
அன்புற்றெழு பேதைம யங்கித் தனியாளுள்;
நந்தூற்றிடு வாரியை மங்கத் திகழாயே-
நஞ்சொத்தொளிர் வேலினை யுந்திப் பொருவேளே;
சந்தக்கவி நூலினர் தஞ்சொற் கினியோனே-
சண்பைப்பதி மேவிய கந்தப் பெருமாளே. (கூ)

---

*சலிகை = செல்வாக்கு.

† தரு வாசம் = சந்தனச் சோலையின் பரிமளம்.

777.

செக்கர்வா னப்பிறைக் கிக்குமா ரற்கலத்
தெற்கிலு தைக்கனற் றணியாத-
சித்ரவீ ணைக்கலர்ப் பெற்றதா யர்க்கவச்
சித்தம்வா டிக்கனக் கவிபாடிக் ;
கைக்கபோ லக்கிரிப் பொற்கொள்ரா சிக்கொடைக்
கற்பதா ருச்செகத் த்ரயபாது-
கற்றபேர் வைப்பெனச் செத்தையோ கத்தினர்க்
கைக்குணன் வெட்கிநிற் பதுபாராய் ;
சக்ரபா ணிக்குமப் பத்மயோ னிக்குநித்
தப்ரதா பர்க்குமெட் டரிதாய-
தத்வவே தத்தினுற் பத்திபோ தித்தஅத்
தத்வரூ பக்கிரிப் புரைசாடிக் ;
கொக்கிலே புக்கொளித் திட்டசூர் பொட்டெழக்
குத்துரா வுத்தபொற் குமரோனே-
கொற்றவா வுற்பலச் செச்சைமா லைப்புயக்
கோச்சைவாழ் முத்தமிழ்ப் பெருமாளே. (கo)

778.

தினமணி சார்ங்க பாணி யென மதிள் நீண்டு சால
தினகர னேய்ந்த மாளி கையிலாரஞ்-
செழுமணி சேர்ந்த பீடி கையிலிசை வரய்ந்த பாடல்
*வயிரியர் சேர்ந்து பாட இருபாலும் ;
இனவளை பூண்கை யார்க வரியிட வேய்ந்து மாலை
புழுககில் சாந்து பூசி யரசாகி-
இனிதிறு மாந்து வாழு மிருவினை நீண்ட காய
மொருபிடி சாம்ப லாகி விடலாமோ ;
வனசர ரேங்க வான முகடுற வோங்கி ஆசை
மயிலொடு பாங்கி மார்க ளருகார்க-

* வயிரியர் = பாணர்; புகழ்ந்து பாடுவோர். "வயிரியர் தோள் வலி புகழ" என்பர் பொதுப்பாடலினும்.

மயிலொடு மான்கள் சூழ வளவரி வேங்கை யாகி
மலைமிசை தோன்று மாய வடிவோனே;
கனசமண் மூங்கர் கோடி கழுமிசை தூங்க நீறு
கருணைகொள் பாண்டி நாடு பெறவேதக்-
கவிதரு காந்த பால கழுமல பூந்த ராய
கவுணியர் வேந்த தேவர் பெருமாளே. (கக)

பு. 779.

பூமாதர மேயணி மான்மறை
வாய்நா லுடை யோன்மலி வானவர்
கோமான்முநி வோர்முதல் யாருமி யம்புவேதம்-
பூராயம தாய்மொழி நூல்களும்
ஆராய்வ திலாதட லாசுரர்
போரால்மறை வாயுறு பீதியின் வந்துகூடி;
நீமாறரு ளாயென ஈசனை
பாமாலிக ளால்தொழு தேதிரு
நீரூர்தரு மேனிய தேனியல் கொன்றையோடு-
நீசோர்தரு சானவி மாமதி
காகோதர மாதுமை கூவிளை
நேசோடடம் விளாமுத லார்சடை யெம்பிரானே;
போமாறினி வேறெது வோதென
வேயாரரு ளாலவ ரீதரு
போர்வேலவ நீலக லாவியி வர்ந்துநீடு-
பூலோகமொ டேயறு லோகமு
நேசோர் நொடி யேவரு வோய்சர
சேனபதி யாயவ னேயுனை யன்பிலேடுங்;
காமாவறு சோம ஸமானன
தாமாமணி மார்தரு நீப*சு
தாமாவென வேதுதி யாதுழல் வஞ்சனேனைக்-

* சு தாமம் = நல்ல ஒளி.

காவாயடி நாளசு ரேசரை
யேசாடிய கூர்வடி வேலவ
காரார்தரு காழியின் மேவிய தம்பிரானே. (கூ)

780.

மதனச்சொற் காரக் காரிகள் பவளக்கொப் பாடச் சீறிகள்
மருளப்பட் டாடைக் காரிக ளழகாக-
மவுனச்சுட் டாடிச் சோலிகள் இசலிப்பித் தாசைக்காரிகள்
வகைமுத்துச் சாரச்சூடிகள் விலைமாதர் ;
குதலைச்சொற் சாரப் பேசிகள் *நரகச்சிற் சாடிப் பீடிகள்
† குசலைக்கொட் சூலைக் காலிகள் மயல்மேலாய்க்-
கொளுவிக்கட் டாசைப் பாசனை பவதுக்கக் காரச் சூதனை
குமுதப்பொற் பாதச் சேவையி லருள்வாயே ;
கதறக்கற் சூரைக் கார்கட லெரியத்திக் கூறிற் பாழ்பட
ககனக்கட் டாரிக் காயிரை யிடும்வேலா-
கதிர்சுற்றிட் டாசைப் பால்கிரி யுறைபச்சைப் பாசக் கோகில
கவுரிப்பொற் சேர்வைச் சேகர முருகோனே ;
திதலைப்பொற் பாணிக் கார்குயி லழகிற்பொற் றோகைப் பாவையை
தினமுற்றுச் சாரத் தோள்மிசை யணைவோனே-
திலதப்பொட் டாசைச் சேர்முக மயிலுற்றிட் டேறிக் காழியில்
சிவன்மெச்சக் காதுக் கோதிய பெருமாளே. (கஙு)

பு. 781.

விடமெனமி குத்தவட வனலென வுயர்த்தூவி
விரிகதி னெனப்பரவு நிலவாலே-
விதனமிக வுற்றுவரு ரதிபதி கடுத்துவிடு
விரைதரு விதட்கமல கணையாலே ;

---

* நரக அச்சில் சாடி பீடிகள் = நரக மாகிய அச்சிற் சாய்வித்துத் துன்பப்படுத்துவோர்.

† குசலை கொள் சூலை காலிகள் = (தமது செய்கைக்குத்) தடையாக வந்த கர்ப்பத்தை வெளிப்படுத்துவோர்.

அடலமரி யற்று * திசை யினில்மருவி மிக்கவனல்
அழலொடு கொதித்துவரு கடைநாளில்—
அணுகிநம னெற்றமயல் கொளு †மநிலை சித்த முற
அவசமொ டணைத்தருள வரவேணும் ;
அடவிதனில் மிக்கபரு வரையவ ளளித்ததிரு
அணையமயில் முத்தமணி ‡ சுரயாணை—
அழகிய மணிக்கலச முலைகளில் மயக்கமுறு
மதிவிரக சித்ரமணி மயில்வீரா ;
கடதடக ளிற்றுமுக ரிஷயவ கிரிக்குமரி
கருணையொ டளித்ததிற முருகோனே—
கமலமல ரொத்தவிழி யரிமருக பத்தர்பணி
கழுமல நகர்க்குமர பெருமாளே. (சச)

கரியவனகர்.

[இது ஸ்ரீகாழி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு $3\frac{1}{2}$—மைல் தூரத்திலுள்ள 'கொண்டல் வள்ளுவக்குடி' என்னுந் தலமாய் இருக்கலாம். 'கொண்டல் வண்ணன்குடி' என்பது 'கொண்டல் வள்ளுவக்குடி' என மருவியதுபோலும். 'கொண்டல்' எனத் தேவாரத்தில் வைப்பு ஸ்தல மொன்றுண்டு.]

782.

அளிசுழ லளகக் காடு காட்டவும்
விழிகொடு கலவித் தீயை மூட்டவும்
அமளியில் முடியப் போது போக்கவும் இளைஞோர்கள்—
அவர்வச மொழுகிக் காசு கேட்கவும்
அழகிய மயிலிற் சாயல் காட்டவும்
அளவிய தெருவிற் போயு லாத்தவும் அதிபார ;

---

* திசையினில் = சமயத்தில்.
† அ நிலை = அந் நிலை : அச் சமயம். ‡ சுர யாணை = தேவ யானை.

இளமுலை மிசையிற் றூசு நீக்கவும்
முகமொடு முகம்வைத் தாசை யாக்கவும்
இருநிதி யிலரைத் தூர நீக்கவும் இனிதாக-

எவரையு மளவிப் போய ணுப்பவும்
நினைபவ ரளவிற் காதல் நீக்கியென்
இடாது தொலையத் தான்கள் காட்டினின் அருள்தாராய் ;

நெளிபடு களமுற் றூறு போற்சுழல்
குருதியில் முழுகிப் பேய்கள் கூப்பிட
நிணமது பருகிப் பாறு காக்கைகள் கழுகாட-

நிரைநிரை யணியிட் டோரி யார்த்திட
அதிர்தரு சமரிற் சேனை கூட்டிய
நிசிசரர் மடியச் சாடு வேற்கொடு பொரும்வீரா ;

களிமயில் தனில்புக் கேறு தாட்டிக
அழகிய கனகத் தாம மார்த்தொளிர்
கனகிரி புயமுத் தார மேற்றருள் திருமார்பா-

கரியவ னகரிற் றேவ பார்ப்பதி
யருள்சுத குறமற் பாவை தாட்பணி
கருணைய தமிழிற் பாடல் கேட்டருள் பெருமாளே.

வைத்தீசுரன் கோயில்.

[ரெயில்வே ஸ்டேஷன். இது தேவாரத்திற் 'புள்ளிருக்கு வேளூர்' எனப்படும். ஸ்ரீகாழிக்கு மேற்கு 3½-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

783.

உரத்துறை போதத் தனியா[illegible]
உனைச்சிறி தோதத் தெரியா[illegible]
மரத்துறை போலுற் றடியேனும்-
மலத்திருள் மூடிக் கெடலாமோ ;

பரத்துறை சீலத் தவர்வாழ்வே-
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே ;
வரத்துறை நீதர்க் கொருசேயே-
வயித்திய நாதப் பெருமாளே. (க)

784.

எத்தனை கோடி கோடி விட்டுட லோடி யாடி
யெத்தனை கோடி போன தளவேதோ-
இப்படி மோக போக மிப்படி யாகி யாகி
யிப்படி யாவ தேது இனிமேலோ ;
சித்திடில் சீசி சீசி குத்திர மாய மாயை
சிக்கினி லாயு மாயு மடியேனைச்-
சித்தினி லாட லோடு முத்தமிழ் வாண ரோது
சித்திர ஞான பாத மருள்வாயே ;
நித்தமு மோது வார்கள் சித்தமெ வீடு தாக
நிர்த்தம் தாடு மாறு முகவோனே-
நிட்கள ரூபர் பாதி பச்சுரு வான மூணு
நெட்டிலை சூல பாணி யருள்பாலா ;
பைத்தலை நீடு மாயி ரத்தலை மீது பீறு
பத்திர பாத நீல மயில்வீரா-
பச்சிள பூக பாலை செய்க்கயல் தாவு வேளூர்
பற்றிய மூவர் தேவர் பெருமாளே. (உ)

785.

பாட கச்சிலம் போடு செச்சை மணி
கோவெ னக்கலந் தாடு பொற்சரணர்
பாவை சித்திரம் போல்வர் பட்டுடையி னிடைநூலார்-
பார பொற்றனங் கோபு ரச்சிகர
மாமெ னப்படர்ந் தேம லிப்பரித
பாகு நற்கரும் போடு சர்க்கரையின் மொழிமாதர் ;

ஏட கக்குலஞ் சேரு மைக்குழலொ
டாட ளிக்குலம் பாட நற்றெருவி
லேகி புட்குலம் போல பற்பலசொ லிசைபாடி-
ஏறி யிச்சகம் பேசி யெத்தியிதம்
வாரு மூற்பணந் தாரு மிட்டமென
வணி வைத்துவந் தேற விட்டிடுவர் செயலாமோ ;
சேட னுக்கசண் டாள ரக்கர் குல
மாள அட்டகுன் றேழு லக்கடல்கள்
சேர வற்றநின் ரூட யிற்காமி ரறுதோள்மேல்-
சேணி லத்தர் பொன் பூவை விட்டிருடி
யோர்கள் கட்டியம் பாட எட்டரசர்
சேசெ யொத்த செந் தாம ரைக்கிழவி புகழ்வேலா;
நாட கப்புனங் காவ லுற்றசுக
மோக னத்திமென் தோளி சித்ரவளி
நாய கிக்கிதம் பாடி நித்தமணி புனைவோனே-
ஞான வெற்புகந் தாடு மத்தர் * தையல்
நாய கிக்குநன் பாக ரக்கணியும்
நாதர் மெச்சவந் தாடு முத்தமருள் பெருமாளே.(ரு)

786.

மாலி னுலெ டுத்த கந்தல் சோறி னுல்வ ளர்த்த பொந்தி
மாறி யாடெ டுத்த சிந்தை யநியாய-
மாயை யாலெ டுத்து மங்கி னேனை யாள னக்கி ரங்கி
வாரை யாயி னிப்பி றந்து இறவாமல்;
வேலி னுல்வி னைக்க ணங்கள் தூள தாள ரித்து உன்றன்
வீடு தாப ரித்த அன்பர் கணமூடே-
மேவி யானு னைப்பொல் சிந்தை யாக வேக ளித்து கந்த
வேளெ யாமெ னப்†ப ரிந்து அருள்வாயே ;

---

* தையல் நாயகி என்பது வைத்தீஸ்வரன்கோயிலி லெழுந் தருளியிருக்கும் உமாதேவியாரின் பெயர்.

† பரிந்து = பரிய : அன்புகூர்ந்திருக்க.

காலி னுலை னப்ப ரந்த சூரர் மாள வெற்றி கொண்ட
கால பாது சத்தி யங்கை முருகோனே-
காம பாண மட்ட நந்த கோடி மாத ரைப்பு ணர்ந்த
காளை யேறு கர்த்த னெந்தை யருள்பாலா ;
சேலை நேர்வி ழிக்கு றம்பெ ணுசை தோளு றப்பு ணர்ந்து
சீரை யோது பத்த ரன்பி லுறைவோனே-
தேவர் மாதர் சித்தர் தொண்டர் ஏக * வேளு ருக்கு கந்த
சேவல் கேது சுற்று கந்த பெருமாளே. (சு)

787.

பூலா தாரமொ டேற்றி யங்கியை
ஆரு தாரமொ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்று நன்சுழி மூணியூடே-
மூதா தார†ம ரூப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தணை விலகாமல் ;
மாலா டீணெடு சேர்த்தி தம்பெற
நாலு வேத‡ம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னுபுரி யேற்றி மந்திர தவிசூடே-
மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூணொளி காட்டி சந்திர
வாகார் தேனமு தூட்டி யென்றணை யுடனுள்வாய் ;
சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி
மாதா ராபகல் § காத்த மைந்தணை
சூடோ டூர்வினை வாட்டி || மைந்தரெ னெமையாளுந்-
தூயாள் மூவரை நாட்டு மெந்தையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா னுபரொ டேற்றி ருந்தவ ளருள்பாலா ;

---

* வேளுருக்கு உகந்த எனப்பிரிக்க.
† மரூப்பில் = மருப்பில். ‡ ம சாத்திரம் = மகா சாஸ்திரம்.
§ காத் தமைந் தணை = காத்து அமைந்த அன்னை.
|| மைந்தர் என எமையாளும் எனப்பிரிக்க.

வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே -

வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே. (நு)

788.

மேக வார்குழல தாடதன பாரமிசை
யார மாடகுழை யாடவிழி யாடபொறி
மேனி வாசனைகள் வீசஅல்குல் மோதிபரி மளமேற-

மீனு லாடையிடை யாடமயில் போலநடை
யோல மோலமென பாதமணி நூபுரமு
மேல்வில் வீசபணி *கீரகுயில் போலகுரல் முழவோசை ;

ஆக வேயவைகள் கூடிடுவர் வீதிவரு
வோரை வாருமென வேசரச மோடுருகி
ஆசை போலமனை யேகொடனை வார்கள்குவ டதிபார-

ஆணி மாமுலையின் மூழ்கிசுக வாரிகொடு
வேர்வை பாயஅணை யூடமளி யாடியிட
ரான சூலைபல நோய்கள்கட லாடியுட லுழல்வேனை;

நாக லோகர்மதி லோகர்பக லோகர்விதி
நாடு ளோர்களம ரோர்கள்கண நாதர்விடை
நாதர் வேதியர்கள் ஆதிசர சோதிதிகழ் முனிவோர்கள்-

நாத ரேநரர்ம ரரணர்பு ராணவகை
வேத கீதவொலி பூரையிது பூரையென
நாச மாயசுரர் மேவுகிரி தூளிபட விடும்வேலா ;

தோகை மாதுகுற மாதமுத மாதுவினல்
தோழி மாதுவளி நாயகிமி ஞாசுக
சோக மோடிழகி மார்முலவி டாமலணை புணர்வோனே-

---

* கீரம் = பால்.

தோளி ராறுமுக மாறுமயில் வேலழகு
மீதெய் வானவடி வாதொழு*தெ ணு†வயனர்
சூழ ‡காவிரியும் வேளூர் முரு காவமரர் பெருமாளே. (சு)

திருக்கடவூர்.

[மாயூரத்துக்குத் தென்கிழக்கு 13-மைல். ஸ்ரீகாழி ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கு 14-மைல். தரங்கம் பாடிக்குப் போகும் வழி; மூவர் தேவாரமும் பெற்றது. அட்ட வீரத் தலங்களுள் யமனை உதைத்தருளிய தலம்.]

789.

ஏட்டின்வி திப்படி யேகொடு மாபுர
வீட்டில டைத்திசை வேகசை மூணதி
லேற்றிய டித்திட வேகட லோடம தெனவேகி-
ஏற்குமெ னப்பொரு ளாசைபெ ணுசைகொ
ளாத்துவெ னத்திரி யாபரி யாதவ
மேற்றியி ருப்பிட மேயறி யாமலு முடல்பேணிப் ;
பூட்டுச ரப்பளி யேமத ஞமென
ஆட்டிய சைத்திய லேதிரி நாளையில்
பூத்தம லக்குகை யோபொதி சோறென கழுகாகம்-
போற்றிந மக்கிரை யாமென வேகொள
நாட்டிலொ டுக்கென வேவிழு போதினில்
பூட்டுப ணிப்பத மாமயி லாவருள் புரிவாயே ;
வீட்டில டைத்தெரி யேயிடு பாதக
ணுட்டைவி டுத்திட வேபல சூதினில்
வீழ்த்தவி திப்படி யேகுரு காவலர் வனமேபோய்-

---

* எணு = எண்ணி. † வயனர் = சடாயு சம்பாதியென்னும் பறவை வடிவினர்; வயானம் = பறவை.

‡ கா விரியும் = சோலை விரிகின்ற.

வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது
பார்த்துமு டித்திட வேயொரு பாரத
மேற்புனை வித்தம காவிர மாயவன் மருகோனே ;

கோட்டைய ழித்தசு ரார்பதி கோவென
மூட்டியெ ரித்தப ராபர சேகர
கோத்தம ணிக்கதி ரேநிக ராகிய வடிவேலா-

கூற்றும ரித்திட வேயுதை பார்வதி
யார்க்குமி னித்தபெ ணாகிய மான்மகள்
கோட்டுமு லக்கதி பாகட வூருறை பெருமாளே.(க)

790.

நூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாத டக்கி
தூயவொளி காண முத்தி விதமாகச்-

சூழுமிருள் பாவ கத்தை வீழஅழ லூடெ ரித்து
சோதிமணி பீட மிட்ட மடமேவி ;

மேலெவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவியரு ணாச லத்தி னுடன்முழ்கி-

வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க அருள்தாராய் ;

ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பு
மூடுருவ வேல்தொ டுத்த மயில்வீரா-

ஓதுகுற மான்வ னத்தில் மேவியவள் கால்பி டித்து
லோமெனுப தேச வித்தொ டணைவோனே ;

காலனெடு மேதி மட்க வூழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி யருள்பாலா-

காலமுதல் வாழ்புவிக்க தாரகர்கோ புரத்துள்
கானமயில் மேல்த ரித்த பெருமாளே. (உ)

திருப்படிக்கரை.

[இது 'திருமண்ணிப்படிக்கரை' யெனவும், 'இலுப்பைப்பட்டு' எனவும் வழங்கும். வைத்தீசுரன்கோயிலுக்கு மேற்கு 6-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

791.

அருக்கி மெத்தெனச் சிரித்து மைக்கணிட்
டழைத்தி தப்படச் சிலகூறி-
அரைப்ப ணத்தைவிற் றுடுத்த பட்டவிழ்த்
தணைத்தி தழ்க்கொடுத் தநுராகத்;
துருக்கி மட்டறப் பொருட்ப றிப்பவர்க்
குளக்க ருத்தினிற் ப்ரமைகூரா-
துரைத்து செய்ப்பதித் தலத்தி னைத்துதித்
துனைத்தி ருப்புகழ்ப் பகர்வேனே;
தருக்கு மற்கடப் படைப்ப லத்தினிற்
றடப்பொ ருப்பெடுத் தணையாகச்-
சமுத்தி ரத்தினைக் குறுக்க டைத்ததிற்
றரித்த ரக்கர்பொட் டெழவேபோர்;
செருக்கு விக்ரமச் சரத்தை விட்டுறச்
செயித்த வுத்தமத் திருமாமன்-
திருத்த கப்பன்மெச் சொருத்த முத்தமிழ்த்
* திருப்படிக்கரைப் பெருமாளே.

மாயூரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

* "திருத்த ணிப்பதிப் பெருமாளே".—என்றும் பாடம்.

அழுதினை மெத்தச் சொரிந்து மாவின
தினியப ழுத்தைப் பிழிந்து பானற
வதனெடு தித்தித் த*கண்ட ளாவிய விதழாராய்-

அழகிய பொற்றட் டி+ணெண்டு வேடையின்
வருபகி யர்க்குற் றவன்பி னுணை
வருள்பவ மொத்துத் தளர்ந்த காமுகர் மயல்தீரக்;

‡ குமுதம் விளர்க்கத் தடங்கு லாவிய
நிலவெழு முத்தைப் புனைந்த பாரிய
குலவிய சித்ரப் ப்ரசண்ட பூரண தனபாரக்-

குவடிள கக்கட் டியுந்தி மேல்விழு
மவர்மய லிற்புக் கழிந்த பாவியை
குரைகழல் பற்றிப் புகழ்ந்து வாழ்வுற அருள்வாயே;

வமிசமி குத்துப் ப்ரபஞ்சம் யாவையு
§ மறுகிட வுக்ரக் கொடும்பை யானபுன்
மதிகொ டழித்திட் டிடும்பை ராவணன் மதியாமே-

மறுவறு கற்பிற் சிறந்த சீதையை
விதனம் விளைக்கக் குரங்கி னுலவன்
வமிச மறுத்திட் டிலங்கு மாயவன் மருகோனே;

ஏமதும லத்தைக் களைந்து பாடென
அருள அதற்குப் புகழ்ந்து பாடிய
இயல்கவி மெச்சிட் டுயர்ந்த பேறருண் முருகோனே-

எழில்வளை மிக்கத் தவழ்ந்து லாவிய
பொனிநதி தெற்கிற் றிகழ்ந்து மேவிய
இணையிலி ரத்னச் || சிகண்டி யூருறை பெருமாளே.

---

* கண்டு=கற்கண்டு. † தொண்டு=மொண்டு.
‡ குமுதம் விளர்க்க=வாய் வெளுக்க. § மறுகிட=கலக்கமுற.
|| சிகண்டியூர்=மாயூரம்.

பாகை.

[இது மாயூரத்துக்குச் சமீபத்திலுள்ள "பாகசாலை" என்னும் சுப்பிரமணிய ஸ்தலமா யிருக்கலாம். 'கடல் கழி பாயும் பாகை'—என 794-ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ளது.]

793.

ஆடல் மாமத ராஜன் பூசல் வாளியி லேநொந்
தாகம் வேர்வுற மால்கொண் டயராதே-
ஆர வாணகை யார்செஞ் சேலி னேவலி லேசென்
றூயு வேதனை யேயென் றுலையாதே ;
சேடன் மாமுடி மேவும் பாரு ளோர்களுள் நீடுந்
த்யாக மீபவர் யாரென் றலையாதே-
தேடி நான்மறை நாடுங் காடு மோடிய தாளுந்
தேவ நாயக நானின் றடைவேனே ;
பாடு நான்மறை யோனுந் தாதை யாகிய மாலும்
பாவை பாகனு நாளுந் தவறாதே-
பாக நாண்மலர் சூடுஞ் சேக ராமதில் சூழ்தென்
பாகை மாநக ராளுங் குமரேசா ;
கூட லான்முது கூனன் றோட வாதுயர் வேதங்
கூறு நாவல மேவுந் தமிழ்வீரா-
கோடி தானவர் தோளுந் தாளும் வீழவு லாவுங்
கோல மாமயி லேறும் பெருமாளே. (க)

794.

ஈளை சுரங்குளிர் வாத மெனும்பல
நோய்கள் வளைந்தற இளையாதே-
ஈடு படுஞ்சிறு கூடு புகுந்திடு
காடு பயின்றுயி ரிழவாதே ;
மூளை யெலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படுந்தழல் முழுகாதே-

மூல மெனுஞ்சிவ யோக பதந்தனில்
வாழ்வு பெறும்படி மொழிவாயே ;
வாலை நெருங்கிய வாவியி லுங்கயல்
சேல்கள் மறிந்திட வலைபீறு-
வாகை துதைந்தணி கேதகை மங்கிட
மோதி வெகுண்டிள மதிதோயும் ;
பாலை கறுங்கமழ் பூக வனந்தலை
சாடி நெடுங்கடல் கழிபாயும்-
பாகை வளம்பதி மேவி வளஞ்செறி
தோகை விரும்பிய பெருமாளே. (உ)

795.

சுவலை பொருதிரு குழையை முடுகிய
கோல வேல்விழி மடவார்தங்-
கொடிய ம்ருகமத புளக தனகிரி
கூடி நாடொறு மயலாகித் ;
துவள வுருகிய சரச விதமது
சோர வாரிதி யலையூடே-
சுழலு மெனதுயிர் மவுன பரமசு
கோம கோததி படியாதோ ;
கவள கரதல கரட விகடக
போல பூதர முகமான-
கடவுள் கணபதி பிறகு வருமொரு
கார ணகதிர் வடிவேலா ;
பவள மரகத கநக வயிரக
பாட கோபுர * அரிதேரின்-
பரியு மிடறிய புரிசை தழுவிய
பாகை மேவிய பெருமாளே. (ஈ)

---

* அரி = சூரியன்.

திருவிடைக்கழி.

[மாயூரத்துக்குத் தென்கிழக்கு 13-மைல் தூரத்தி லுள்ள திருக்கடவூரி லிருந்து 4-மைல். இதற்குத் திருவிசைப்பாவிற் சேந்தனர் பாடல் உள்ளது. இங்குத் திருக் குராமர நீழலில் முருகக்கடவுள் வீற்றிருக்கின்றார்.]

796.

அனலப் பரிபுக் கருணத் ரயம்வைத்
தடர்பொய்க் குருதிக் குடில்பேணு-
அவலக் கவலைச் சவலைக் கலிகற்
றதனிற் பொருள்சற் றறியாதே ;
குனகித் தனகிக் கனலொத் துருகிக்
குலவிக் கலவிக் கொடியார்தங்-
கொடுமைக் கடுமைக் குவளைக் கடையிற்
குலைபட் டலையக் கடவேனே ;
தினைவித் தினநற் புனமுற் றகுறத்
திருவைப் புணர்பொற் புயவீரா-
தெளியத் தெளியப் பவளச் சடிலச்
சிவனுக் கொருசொற் பகர்வோனே ;
கனகச் சிகரக் குலவெற் புருவக்
கறுவிப் பொருகைக் கதிர்வேலா-
கழியைக் கிழியக் கயல்தத் துமிடைக்
கழியிற் குமரப் பெருமாளே. (க)

797.

இரக்குமவர்க் கிரக்கமிகுத்
தளிப்பனசொப் பனத்திலுமற்
றெனக்கியலுக் கிசைக்கெதிரெப் புலவோரென்-
றெடுத்தமுடித் தடக்கைமுடித்
திரட்டையுடுத் திலச்சினையிட்
டடைப்பையிடப் ப்ரபுத்துவமுற் றியல்மாதர் ;

குரக்குமுகத் திணைக்குழலைப்
பனிப்பிறையொப் பெனப்புயலொப்
பெனக்குறுகிக் கலைக்குள்மறைத் திடுமானின்-
குளப்படியிற் சளப்படுமிப்
பவக்கடலைக் கடக்கஇனிக்
குறித்திருபொற் கழற்புணையைத் தருவாயே ;
அரக்கரடற் கடக்கஅமர்க்
களத்தடையப் புடைத்துலகுக்
கலக்கணறக் குலக்கிரிபொட் டெழுவாரி-
அனைத்தும்வறப் புறச்சுரர்கற்
பகப்புரியிற் புகக்கமலத்
தணைச்சிறையிட் டிடைக்கழியிற் பயில்வோனே ;
கரக்கரடக் களிற்றுமருப்
புலக்கையினிற் கொழித்தமணிக்
கழைத்தரளத் திணைத்*திணையிற் குறுவாளைக்-
கணிக்குறவக் குறிச்சியினிற்
சிலைக்குறவர்க் கிலச்சைவரக்
கயத்தொடுகைப் பிடித்தமணப் பெருமாளே. (உ)

798.

பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனு மெப்படிப் பலவாழ்வும்-
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும் ;
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்-
புலன கற்றிடப் பலவி தத்திணைப்
புகழ்ப லத்திணைத் தரவேணும் ;
தகரி லற்றகைத் தலம்வி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே-

* திணையிற் குறுவாள் = திணைபோலக் குற்றி விளையாடுபவள்.

தனிவ னத்தினிற் புனம றத்தியைத்
தழுவு பொற்புயத் திருமார்பா;
சிகர வெற்பினைப் பகிரும் வித்தகத்
திறல யிற்சுடர்க் குமரேசா-
செழுமை லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி டைக்கழிப் பெருமாளே. (ஈ)

799.

படிபுனல்நெ ருப்படற் பவனம்வெளி பொய்க்கருப்
பவமுறைய வத்தைதமுக் குணநீடு-
பயில்பிணிகள் மச்சைசுக் கிலமுதிர மத்திமெய்ப்
பசிபடுநி ணச்சடக் குடில்பேணும்;
உடலது பொறுத்தறக் கடைபெறுபி றப்பினுக்
குணர்வுடைய சித்தமற் றடிநாயேன்-
உழலுமது கற்பலக் கழலிணைய னக்களித்
தனதுதம ரொக்கவைத் தருள்வாயே;
கொடியவொரு குக்குடக் கொடியவடி விற்புனக்
கொடிபடர்பு யக்கிரிக் கதிர்வேலா-
குமாசம ரச்*சினக் குமரவணி யத்தன்மெய்க்
குமரமகிழ் முத்தமிழ்ப் புலவோனே;
தடவிகட மத்தகத் தடவரைய ரத்தரத்
தடலனுச வித்தகத் துறையோனே-
தருமருவு மெத்தலத் தருமருவ முத்தியைத்
தருதிருவி டைக்கழிப் பெருமாளே. (ச)

800.

பழியுறுசட் டகமான குடிலையெடுத் திழிவான
பகரும்வினைச் செயல்மாதர் தருமாயப்-
படுகுழிபுக் கினிதேதும் வழிதடவித் தெரியாது
பழமைபிதற் றிடுலோக மூழ்மூடர்;

* சினக்கும் அரவு அணி அத்தன் எனப்பிரிக்க; சினக்கும் = கோபிக்கும்.

உழலும்விருப் புடனேது பலசவலைக் கலைதேடி
யொருபயனைத் தெளியாது விளியாமுன்-
உனகமலப் பதநாடி யுருகியுளத் தமுதூற
உனதுதிருப் புகழோத அருள்வாயே;
தெழியுவரிச் சலராசி மொகுமொகெனப் பெருமேரு
திடுதிடெனப் பலபூதர் விதமாகத்-
திமிதிமெனப் பொருசூர் னெறுகெறெனப் பலதேவர்
ஜெயஜெயெனக் கொதிவேலை விடுவோனே;
அழகுதரித் திடுகீப சரவணவுற் பவவேல
அடல்தருகெற் கிதநீல மயில்வீரா-
அருணைதிருத் தணிகாக மலைபழநிப் பதிகோடை
அதிபஇடைக் கழிமேவு பெருமாளே. (நி)

801.

பெருக்க மாகிய நிதியினர் வரின்மிக
நகைத்து வாமென அமளிய ருகுவிரல்
பிடித்து போயவர் தொடையொடு தொடைபட வுறவாடிப்-
பிதற்றி யேயள விடுபண மதுதம
திடத்தி லேவரு மளவுக ளுரைகொடு
பிலுக்கி யேவெகு சரசமொ டுணைகுவர் கனமாலாய்;
முருக்கி னேரித ழமுதுப ருகுமென
வுரைத்து லீலைக ளதிவித மொடுமலி
முலைக்கு ளேதயில் கொளமயல் புரிகுவர் பொருள்தீரின்-
முறுக்கி யேயுதை கொடுவசை யுரைதரு
மனத்து ரோகிக ளிடுதொழில் வினையற
முடுக்கி யேயுன திருகழல் மலர்தொழ அருள்தாராய்;
நெருக்கி யேவரு மவுணர்கள் குலமற
வுறுக்கி யேமயில் மூளுகினில் விசைகொடு
நிலத்தி லேசமர் பொருதவ ருயிர்பலி கொளும்வேலா-
நெகத்தி லேஅயன் முடிபதி யிறைதிரி
புரத்தி லேநகை புரிபர னடியவர்
நினைப்பி லேயருள் தருசிவ னுதவிய புதல்வோனே;

செருக்கு வேடுவர் தருமொரு சிறுமியை
மருக்கு லாவிய மலரணை மிசைபுணர்
திருக்கை வேல்வடி வழகிய குருபர முருகோனே-

சிறக்கு மாதவ முனிவரர் மகபதி
யிருக்கு வேதனு மிமையவர் பரவிய
திருக்கு ராவடி நிழல்தனி லுலவிய பெருமாளே. (சு)

802.

மருக்கு லாவிய மலரணை கொதியாதே-
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே;
கருக்கு லாவிய அயலவர் பழியாதே-
கடப்ப மாலையை யினிவர விடவேணும்;
தருக்கு லாவிய கொடியிடை மணவாளா-
சமர்த்த னேமணி மரகத மயில்வீரா;
திருக்கு ராவடி நிழல்தனி லுறைவோனே-
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே. (எ)

803.

முலைகு லுக்கிகள் கபடிகள் வடிபு முக்கைக ளசடிகள்
முறைம சக்கிகள் திருடிகள் மதவேணூல்-

மொழிப சப்பிகள் விகடிகள் அமூம னத்திகள் தகுரகை
முகமி னுக்கிகள் கசடிகள் இடையேசூழ்;

கலெ கிழ்த்திக ளிளைஞர்கள் பொருள்ப றித்தம ளியின்மிசை
கனியி தழ்ச்சுருள் பிளவிலை யொருபாதி-

கலவி யிற்றரும் வசவிகள் விழிம யக்கினில் வசமழி
கவலை யற்றிட நினதருள் புரிவாயே;

அலெ ருப்பெழ வடவரை பொடிப டச்சம ணர்கள்குலம்
அணிக ழுப்பெற நடவிய மயில்வீரா-

அர னிப்பிர மர்கள்முதல் வழிப டப்பிரி யமும்வர
அவர வர்க்கொரு பொருள்புகல் பெரியோனே;

சிலமொ ளுக்கென முறிபட மிதிலி யிற் *சர கமனருள்
திருவி னைப்புண ரிரிதிரு மருகோனே-
திரள்வ ருக்கைகள் கழுகுகள் சொரிமத துக்கத விகள்வளர்
திருவி டைக்கழி மருவிய பெருமாளே. (அ)

தான் தோன்றி.

[இஃது ஆக்கூர் என்னும் ஸ்தலம். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல்பெற்றது. மாயூரத்துக்குக் கிழக்கு 10-மைல். இத்தலத்தி லுள்ள ஆலயத்துக்குத் "தான்தோன்றி மாடம்" எனப் பெயர். "தான் தோன்றி யப்பர்" என்பது ஆக்கூரிற் சிவபிரான் திருநாமம்.]

804.

சூழ்ந்தேன்ற துக்கவினை சேர்ந்தூன்று மப்பில்வளர்
தூண்போன்ற இக்குடிலு மூலசூடே-
சோர்ந் †தூய்ந்து மக்கினியில் தூண்சாம்பல் பட்டுவிடு
தோம்பாங்கை யுட்பெரிது மூணராமே ;
வீழ்ந்தீண்டி நற்கலிகள் தான்தோண்டி மிக்கபொருள்
வேண்‡டுங்கை யிட்டுவர குழுவார்போல்-
வேம்பாங்கு மற்றுவினை யாம்பாங்கு மற்றுவினை
வாம்பாங்கில் நற்கழல்கள் தொழுவாளாய் ;
வாழ்ந்தான்ற கற்புடைமை வாய்ந்தாய்ந்த நற்றவர்கள்
வான்தோன்று மற்றவரு மடிபேண-
மான்போன்ற பொற்றொடிகள் தாந்தோய்ந்த நற்§புயமும்
வான்தீண்ட வுற்றமயில் மிசையேறித் ;

* சரக மன்=ஜரக ராஜன். † ஊய்தல்=பத னழிதல்.

‡ஈங்கையிட்டு வர குழுவார் போல்=பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுபவர்போல ; ஈங்கை=ஈகை : பொன். 'பொற் கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்' என்பர் உய்யவந்த தேவ நாயனாரும். (திருவுந்தியார்-உஅ.)

§ புயமும்=புயமும் பிற அங்கமும் தோன்ற.

தாழ்ந்தாழ்ந்த மிக்ககடல் வீழ்ந்தீண்டு வெற்பசுரர்
சாய்ந்தேதங்க வுற்றமர்செய் வடிவேலா-
தான்தோன்றி யப்பர்குடி வாழ்ந்தின்ற நற்புதல்வ
தான்தோன்றி நிற்கவல பெருமாளே.

கந்தன்குடி.

[சோழநாட்டிற் பேரளம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல். அம்பகரத்தூர் ஸ்டேஷனி லிருந்து 1-மைல்.]

805.

*எந்தன்சட லங்கம்பல பங்கம்படு தொந்தங்கணை
யென்றுந் துயர் பொன்றும்படி யொருநாளே-
இன்பந்தரு செம்பொன்கழ லுந்துங்கழல் தந்தும்பிணை
†யென்றும்படி பந்தங்கெட மயிலேறி ;
வந்தும்பிர சண்டம்பகி ரண்டம்புவி யெங்குந் திசை
மண்டும்படி நின்றுஞ்சுட ரொளிபோலும்-
வஞ்சங்குடி. கொண்டுந்திரி நெஞ்சன்தக ளென்றுங்கொளும்
வண்டன்தமி யன்றன்பவம் ஒழியாதோ ;
தந்தந்தன திந்திந்திமி யென்றும்பல சஞ்சங்கொடு
தஞ்சம்புரி கொஞ்சுஞ்சிறு மணியாரம்-
சந்தந்தெனி கண்டும்புய லங்கன்சிவ னம்பன்பதி
சம்பந்தொழ நின்றுந்தினம் விளையாடும் ;
கந்தன்குக னென்றன்குரு வென்றுந்தொழு ‡மன்பன்கவி
கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே-
கண்டின்கனி சிந்துஞ்சுவை பொங்கும்புனல் §தங்குஞ்சுனை
கந்தன்குடி யின்தங்கிய பெருமாளே.

---

* எந்தன் = என்றன் ; மருஉ.

† என்றும்படி = எப்போதும் போல. ‡ அன்பன் = நக்கீரர்.

§ 'தங்கும்பொழில் கந்தங்கொள்ப ரந்தனீறமர்' எனவும் பாடம்.

திலைத்ப்பதி.

[இத்தலம் "கோயிற்பத்து" என வழங்கும். பேரளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்மேற்கு ¼-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

806.

இறையத் தணியோ அதுதானும்-
இலையிட் டுணலேய் தருகாலம் ;
அறையிற் பெரிதா மலமாயை-
அலையப் படுமா றினியாமோ ;
*மறையத் தணமா சிறைசாலை-
வழியுய்த் துயர்வா னுறுதேவர் ;
சிறையைத் தவிரா விடும்வேலா-
திலதைப் பதிவாழ் பெருமாளே. (க)

பு. 807.

பனகப் படமி சைந்த முழையிற் றரள நின்று
படர்பொற் பணிபு னைந்த மூலமீதிற்-
பரிவற் றெரியு நெஞ்சில் மூகிலிற் கரிய கொண்டை
படுபுட் பவன மூன்றி லியலாரும் ;
அனமொத் திடுசி றந்த நடையிற் கிளியி னின்சொல்
அழகிற் றனித ளர்ந்து மதிமோக-
மளவிப் புளக கொங்கை குழையத் தழுவி யின்ப
அலையிற் றிரிவ னென்று மறிவேனே ;
தனனத் தனன தந்த தனனத் தனன தந்த
தனனத் தனன தந்த தனதா னன-
தகிடத் தகிட தந்த திமிதத் திமித வென்று
தனிமத் தளமு முங்க வருவோனே ;

* மறை அத்தனே = பிரமனே.

செனெனற் கழனி பொங்கி திமிலக் கமல மண்டி
செறிநற் கழைதி ரண்டு வளமேவித்-
திருநற் சிகரி துங்கி வரையைப் பொருவு கின்ற
திலதைப் பதிய மர்ந்த பெருமாளே. (உ)

808.

மிகரக் குழைக்கு ளுந்து நயனக் கடைக்கி லங்கு
வசியச் சரத்தி யைந்த குறியாலே-
வடவெற் பதைத்து ரந்து களபக் குடத்தை வென்று
மதர்விற் பிணைத்தெ ழுந்த முலைமீதே ;
உகமெய்ப் பதைத்து நெஞ்சும் விரகக் கடற்பொ திந்த
வுலைபட் டலர்ச்ச ரங்கள் நலியாமல்-
உலகப் புகழ்ப்பு லம்பு கலியற் றுணர்ச்சி கொண்டு
னிரிமைப் புகழ்ப்ப கர்ந்து திரிவேனே ;
புகர்கைக் கரிப்பொ திந்த முளரிக் குளத்தி ழிந்த
பொழுதிற் காதத்தொ டர்ந்து பிடிகாளிற்-
பொருமித் திகைத்து நின்று வரதற் கடைக்க லங்கள்
புகுதக் கணத்து வந்து கையிலாருந் ;
திகிரிப் படைத்து ரந்த வரதற் குடற்பி றந்த
சிவைதற் பரைக்கி சைந்த புதல்வோனே-
சிவபத்தர் முத்த ரும்பர் தவசித்தர் சித்த மொன்று
திலதைப் பதிக்கு கந்த பெருமாளே. (ஊ)

திருவம்பர்.

[பேளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 3¾-மைலி லுள்ள 'அம்பர் மாகாளம்' என்னும் தலத்துக்குக் கிழக்கு ¾-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

809.

சோதி மந்திரம் போத கம்பரவு
ஞான கம்பரந் தேயி ருந்தவெளி
தோட லர்ந்தபொன் பூவி ருந்த இட மூங்கொளாமல்-

சூது பந்தயம் பேசி யஞ்சுவகை
சாதி விண்பறிந் தோடு கண்டர்மிகு
தோத கம்பரிந் தாடு சிந்துபரி கந்துபாயும் ;

வீதி மண்டலம் பூண மர்ந்துகழி
கோல மண்டி நின் ரூடி யின்பவகை
வேணு மென்று கண் சோர ஐம்புலனெ டுங்குபோதில்-

வேதி யன்புரிந் தேடு கண்டளவி
லோடி வெஞ்சுடுங் காட ணைந்துசுட
வீழ்வி வெங்*துகுந் தீடு மிந்த இட ரென்றுபோமோ ;

†ஆதி மண்டலஞ் சேர வும்பரம
சோம மண்டலங் கூட வும்பதும
வாளன் மண்டலஞ் சார வுஞ்சுழிப டர்ந்ததோகை-

ஆழி மண்டலந் தாவி யண்ட முழுத
லான மண்டலந் தேடி யொன் ‡றதொழு
கான மண்டலஞ் சேட னங்கணயில் கொண்டுலாவிச்;

சூதர் மண்டலந் தூளெ ழுந்து பொடி
யாகி விண்பறந் தோட மண்டி யொரு
சூரி யன்திரண் டோட கண்டுநகை கொண்டவேலா-

சோடை கொண்டுளங் கான மங்கைமய
லாடி இந்திரன் தேவர் வந்து தொழ
சோழ மண்டலஞ் சாரு மம்பர் வளர் தம்பிரானே.

---

* உருந்தீடும் = உருந்திடும்; சந்தநோக்கி நீண்டது.

ம்.

† அண்டமுகடியாலை மண்டலம் = பாதாள லோகம்.

திருமாகாளம்.

[இஃது அம்பர் மாகாளம் என்னும் ஸ்தலமாய் இருக்கலாம். போளத்துக்குத் தென்கிழக்கு $3\frac{3}{4}$-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. கீழ்வேளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு $2\frac{1}{2}$-மைல் தூரத்தில் 'ஆனைமாகாளம்' என்னும் ஒரு ஸ்தலம் இருக்கின்றது.]

810.

காதோடு தோடிகலி யாடவிழி வாள்சுழல
கோலாக லாரமூலை மார்புதைய பூணகல
காரோடு கூடலக பாரமல ரோடலைய அணைமீதே-

காலோடு காலிகலி யாடபரி நூபுரமொ
டேகாச மானவுடை வீசியிடை நூல்துவள
காவீர மானஇத ழூறல்தர நேசமென மிடறூதை;

நாதான கீதகுயில் போல அல்குல் மால்புரள
மார்போடு தோள்கரமொ டாடிமிக நாணழிய
நாணுவி நோதமுற மாதரொடு கூடிமயல் படுவேனை-

நாளுரு நீயெவனெ ணுமெலன தாவிகவர்
சீர்பாத மேகவலை யாயுமுன வேநிதமு
நாதாகு மாரமுரு காளனவு மோத அருள் புரிவாயே;

பாதாள சேடனுட லாயிரப ணமகுட
மாமேரொ டேழுகட லோதமலை சூரருடல்
பாழாக தூளிவிணி லேறபுவி வாழவிடு சுடர்வேலா-

பாலாழி மீதரவின் மேல்திருவொ டேயமளி
சேர்நீல ரூபன்வலி ராவணகு ழாமிரிய
பாரேவை யேலியரு ராரியைவர் தோழனரி மருகோனே;

மாதாபு ராரிசுக வாரிபரை நாரியுமை
ஆகாச ரூபியபி ராமிவல மேவுசிவன்
மாடேறி யாடுமொரு நாதன்மகிழ் போதமருள் குருநாதா-

*வானோர்க ளீசன்மயி லோடுகுற மாதுமண
வாளாகு காகுமர மாமயிலின் மீது திரு
மாகாள மாநகரில் மாலொடாடி யார்பாவு பெருமாளே.

இஞ்சிகுடி.

[இது பேரளம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம்.]

811.

குங்குமகற் பூர நாவி யிமசல
சந்தனகஸ் தூரி லேப பரிமள
கொங்கைதனைக் கோலி நீடு முகபட நகரேகை-

கொண்டைதனைக் கோதி வாரி வகை வகை
துங்கமுடித் தால கால மென வடல்
கொண்டவிடப் பார்வை காதி னெதிர்பொரு மழுதேயாம்;

அங்குளநிட் டூர மாய விழிகொடு
வஞ்சமனத் தாசை கூறி யெவரையு
மன்புடைமெய்க் கோல ராக விரகினி லுறவாடி-

அன்றளவுக் கான காசு பொருள்கவர்
மங்கையர்பொய்க் காதல் மோக வலிவிழ
லன்றியுனைப் பாடி வீடு புகுவது மொருநாளே;

சங்கதசக் ரீவ னெடு சொலவள
மிண்டுசெயப் போன வாயு சுதனெடு
சம்பவசக் ரீவ ரெதி யெழுபது வெளமாகச்-

சண்டகவிச் சேனை யால்மு னலைகடல்
குன்றிலடைத் தேறி மோச நிசிசரர்
தங்கினைகெட் டோட ஏவு சரபதி மருகோனே;

---

* வானோர்க ளீசன் மயில் = தேவேந்திரனுடைய மகளாகிய தெய்வயானை.

எங்குநினைப் போர்கள் நேச சரவண
சிந்துரகற் பூர ஆறு முககுக
எந்தனுடைச் சாமி நாத வயலியி லுறைவேலா-
இன்புறுபொற் கூட மாட நவமணி
மண்டபவிஸ் தார வீதி புடைவளர்
இஞ்சிகுடிப் பார்வ தீச ரருளிய பெருமாளே.

திருநள்ளாறு.

[ரெயில்வே ஸ்டேஷன். காரைக்காலுக்கு மேற்கு 3-மைல். மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

812.

*பச்சை யொண்கிரி போலிரு மாதன
மூற்றி தம்பொறி சேர்குழல் வாளயில்
பற்று புண்டரி காமென வேய்கயல் விழிஞான-
பத்தி வெண்டர ளாமெனும் வாணகை
வித்ரு மஞ்சிலை போல்நுத லாரிதழ்
பத்ம செண்பக மாமது பூதியி னழகாளென் ;
றிச்சை யந்தரி பார்வதி மோகினி
தத்தை பொன்கவி ஞலிலை போல்வயி
றிற்ப சுங்கிளி யாணமி னூலிடை யபிராமி-
எக்கு லங்குடி லோடுல கியாவையு
மிற்ப திந்திரு நாழிநெ லாலற
மெப்பொ தும்பகிர் வாள்கும ராளன வுருகேனே ;

*"பச்சை" எனத்தொடங்கி உமாதேவியாரின் பெருமையை ஓதும் இச் செய்யுள், மதுரையிற் சமணர்கள் சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளுடன் வாது செய்கையில், ஸ்வாமிகள், தேவாரத் திருப்பதிகங்களுள், திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் உமாதேவியாரின் பெய ராகிய "போக மார்த்தபூண் முலையினுள்..." என்னும், அத்தலத்துப் பாட லுள்ள ஏட்டைத் திருவருளாற் பெற்று அதனை நெருப்பிலிட, அது பச்சையாகவே இருந்த அற்புதத்தைக் குறிப்பால் விளக்குகின்றது.

கச்சை யுந்திரு வாளுமி ராறுடை
பொற்பு யங்களும் வேலுமி ராறுள
கட்சி வங்கம லாமுக மாறுள முருகோனே-
கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகர்ச பாசென
கட்ட வெங்கொடு சூர்கிளை வேரற விடும்வேலா;
நச்சு வெண்படம் மீதணை வார்முகில்
பச்சை வண்புய னூர்கரு டாசனர்
நற்க ரந்தரு கோல்வளை நேமியர் மருகோனே-
நற்பு னந்தனில் வாழ்வளி நாயகி
யிச்சை கொண்டொரு வாரண மாதொடு
நத்தி வந்துரு ளாறுறை தேவர்கள் பெருமாளே.

வழுவூர்.

[இது தேவார வைப்பு ஸ்தலம். மாயூரத்திலிருந்து திருவாரூருக்குப் போகும் வழியில் உள்ள 'மங்கை நல்லூர்' ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு மைல் தூரத்திலுள்ளது. அஷ்டவீரத் தலங்களுள் ஒன்று. தாருகாவன இருடிகள் ஏவிய யானையைச் சிவபிரான் உரித்தருளிய ஸ்தலம்.]

813.

திருவூரிசை யாரமு தார்நிகர்
குயிலார்மொழி தோதக மாதர்கள்
தணியாமய லாழியி லாழவு மமிழாதே-
தழலேபொழி கோரவி லோசன
மெறிபாசம காமுனி சூலமுள்
சமனார்முகில் மேனிக டாவினி லணுகாதே
கருவூறிய நாளுமு னூறெழு
மலதேகமு மாவலு மாசைக
படமாகிய பாதக தீதற மிடிதீரக்-

கனிவீறிய போதமெய் ஞானமு
மியலார்சிவ நேசமு மேவர
கழல்சேரணி நூபுர தாளிணை நிழல்தாராய்;

புருகூதன்மி ஞலொரு பாலுற
சிலைவேடுவர் மாஞெரு பாலுற
புதுமாமயில் மீதணை யாவரு மழகோனே-

புழுகார்பனிர் மூசிய வாசணை
யுரகாலணி கோலமென் மாலைய
புரிநூலுமு லாவுது வாதச புயவீரா;

மருவூர்குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமு மேபுணை வளமூதூர்-

மகதேவர்பு ராரிச தாசிவர்
சுதராகிய தேவசி காமணி
வழுவூரில்நி லாவியெ வாழ்வருள் பெருமாளே. (சு)

814.

தூலகா ளிற்பத மேத்தி யன்புற
வுபதே சப்பொரு ளுட்டி மந்திர
தவஞா னக்கட லாட்டி யென்றணை யருளாலுன்-

சதுரா கத்தொடு கூட்டி யண்டர்க
ளறியா முத்தமி ழூட்டி முண்டக
தளிர்வே தத்துறை காட்டி மண்டலம் வலமேவுங்;

கலிசோ திக்கதிர் காட்டி நன்சுட
ரொளிநா தப்பர மேற்றி முன்சுழி
கமழ்வா சற்படி நாட்ட முங்கொள விதிதாவிக்-

கமலா லப்பதி சேர்த்து முன்பதி
வெளியா கப்புக ஏற்றி யன்பொடு
கதிர்தோ கைப்பரி மேற்கொ ளுஞ்செயல் மறவேனே;

சிலவீ ழுக்கடல் கூட்ட முங்கெட
அவுணே சைத்தலை வாட்டி *யம்பர
சிரமா லைப்புக வேற்ற வுந்தொடு கதிர்வேலா-

சிவகா மிக்கொரு தூர்த்த சென்தையர்
வரிகா கத்தொடை யார்க்கு கந்தொரு
சிவஞா னப்பொரு ளூட்டு முண்டக அழகோனே;

மலைமே வித்தினை காக்கு மொண்கிளி
யமுதா கத்தன வாட்டி யிங்துள
மலர்மா லைக்குழ லாட்ட ணங்கிதன் மணவாளா-

வரிகோ ழிக்கொடி மீக்கொ ளும்படி
நடமா டிச்சுரர் போற்று தண்பொழில்
வழுவூர் நற்பதி வீற்றி ருந்தருள் பெருமாளே. (உ)

கண்ணபுரம்.

[இது 'கண்ணபுரம்' என்னுந் தலமா யிருக்கலாம்; நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம்.]

815.

அன்னமிசைச் செந்நளிநச் சென்மிகணைக் கந்நியமத்
தன்னமயப் புலால்யாக்கை துஞ்சிடாதென்-
றந்நினைவுற் றன்னினைவுற் றன்னியரிற் றன்னெறிபுக்
கன்னியசற் றுலாமூச்ச டங்கயோகம்;
என்னுமருட் கின்னமுடைப் பன்னைவகற் றின்னைவவிட்
டின்னணமெய்த் தடாமார்க்க மின்புறுதென்-
றின்னதெனக் கென்னுமதப் புன்மைகெடுத் தின்னல்விடுத்
தின்னதெனப் படாவாழ்க்கை தந்திடாதோ;

---

* அம்பர சிர மாலைப் புக ஏற்ற = ஆகாயத் தச்சியி லுள்ள சுவர்க்கத்தில் இந்திரனைக் குடியேற்ற; மால் = இந்திரன்.

கன்னல்மொழிப் பின்னளகத் தன்னநடைப் பன்னவுடைக்
கண்ணவிரச் சுருவீட்டு கெண்டையாலைக்-
கன்னமிடப் பின்னிரவிற் றுன்னுபுரைக் கன்முழையிற்
கன்னிலையிற் புகாவேர்த்து நின்றவாழ்வே;
பொன்னசலப் பின்னசலச் சென்னியினற் கன்னபுரப்
பொன்னிநதிக் காராீர்ப்பு யங்கனுதா-
பொன்மலையிற் பொன்னினகர்ப் புண்ணியர்பொற் பொன்மவுலிப்
பொன்னுலகத் திராசாக்கள் தம்பிரானே.

திருவாஞ்சியம்.

[நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 6½-மைல். திருவாரூருக்கு வடமேற்கு 11-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம்.]

816.

இபமாந்தர் சக்ர பதிசெறி
படையாண்டு சக்ர வரிசைக
ளிடவாழ்ந்து திக்கு விசயம ணரசாகி-
றுமாந்து வட்ட வணிமிசை
விரிசார்ந்து வெற்றி மலர்தொடை
யெழிலார்ந்த பட்டி வகைபரி மளலேபந்;
தபனுங்க ரத்ந வணிகல
னிவைசேர்ந்த விச்சு வடிவது
தமர்சூழ்ந்து மிக்க வுயிர்நழு வியபோது-
தழல்தாங்கொ ளுத்தி யிடவொரு
பிடிசர்ம்பல் பட்ட தறிகிலர்
தனவாஞ்சை மிக்கு னடிதொழ நினையாரே;
உபசாந்த சித்த குருகுல
பவபாண்ட வர்க்கு வரதன்மை
யுருவோன்ப ரசித்த நெடியவன் ரிஷிகேசன்-

உலகின்ற பச்சை யுமையணன்
வடவேங்க டத்தி லுறைபவ
னுயர்சார்ங்க சக்ர கரதலன் மருகோனே;
த்ரிபுராந்த கற்கு வரசுத
ரதிகாந்தன் மைத்து னமுருக
திறல்பூண்ட சுப்ர மணியஷண் முகவேலா-
திரைபாய்ந்த பத்ம தடவய
லியில்வேந்த *முத்தி யருள்தரு
திருவாஞ்சி யத்தி லமர்கள் பெருமாளே.

திருச்செங்காட்டங்குடி.

[நன்னிலம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 6-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. சிறுத்தொண்ட நாயனு ருடைய ஸ்தலம்.]

817.

†வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசஇதழ் மலர்போல-
மஞ்சாடு சாபநுதல் வாளனைய வேல்விழிகள்
கொஞ்சார மோகஇளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ ணைசமய மிடுமாதர்;

---

* திருவாஞ்சியம் முத்தியளிக்குந் தலங்களுள் ஒன்று;
"தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்."—என்னும் பாடல் கவனிக்கற் பாலது.

† வங்காரம்=பொன்.

* சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர்சுழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் சாதியிலா
சண்டாளர் சிசியவர் மாயவலை யோடடியெ ஐழலாமற்-
சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெந்தோட மூலஅழல் வீசவுப தேசமது
தண்காதி லோதியிரு பாதமலர் சோதருள் புரிவாயே ;
சிங்கார ரூபமயில் வரகனந மோநமென
கந்தாகு மாரசிவ தேசிகந மோநமென
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென விருதோதை-
சிந்தான சோதிகதிர் வேலவந மோநமென
கங்காள வேணிகுரு வானவந மோநமென
திண்சூர ராழிமலை தூள்படவை வேலைவிடு முருகோனே ;
இங்கித வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
யின்பான தேனிரச மார்முலைவி டாதகர மணிமார்பா-
எண்டோளர் காதல்கொடு † காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர் பெருமாளே.

திருவிற்குடி.

[திருவாரூருக்கு வடக்கு 4½-மைல் தூரத்திலுள்ள வெட்டாறு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 3½-மைல். அஷ்டவீரத் தலங்களுள் ஒன்று. சலந்தரனைச் சங்கரித்த தலம். திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

818.

சித்தி ரத்திலுமி குத்த பொற்பவள
மொத்த மெத்தஅழ குற்ற குத்துமுலை
சிற்ப சிற்பமயி சொத்த சிற்றிடைய வஞ்சிமாதர்-

* சங்கம் = சங்கமம் : கூடுகை.

† காதல் கறி = காதலன் கறி : பிள்ளைக்கறி; பிள்ளை = சீராளன்.

சித்த மத்தனையு முற்ற ளப்பகடல்
மொய்த்த சிற்றுமண லுக்கு மெட்டியது
சிக்கு மைக்குழல்கள் கவ்து ரிப்பரிம ளங்கள்வீசப் ;

பத்தி ரத்திலுமி குத்த கட்கயல்கள்
வித்து ருத்தநுவ ளைத்த நெற்றிவனே
பற்க ளாப்பளிரெ னச்சி ரித்துமயல் விஞ்சைபேசிப்-

பச்சை ரத்நமயி லேப்பொ லத்தெருவி
லத்தி யொத்தமத மொத்து நிற்பார்வலே
பட்டு ழைத்து*குழி யுற்ற அத்தியென மங்குவேனே ;

தத்த னத்தனத னத்த னத்தனன
திந்தி மித்திமிதி மித்தி மித்திமித
தக்கு டுக்குடுடு டுக்கு டுக்குடென சங்குபேரி-

சத்த முற்றுகடல் திக்கு லக்கிரிகள்
நெக்கு விட்டுமுகி லுக்கு சர்ப்பமுடி
சக்கு மூக்கிவிட கட்க துட்டசுர ரங்கமாள ;

வெற்றி யுற்ற † கதிர் பத்தி ரத்தையரு
ளிச்சு ரார்க்கதிப திப்ப தத்தையுறு
வித்த வித்துமதி பெற்ற தத்தைமண முண்டவேலா-

‡வெட்கி டப்பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லத்துசிறை வைத்து முத்தர் புகழ்
விற்கு டிப்பதியி விச்சை யுற்றுமகிழ் தம்பிரானே.

---

* குழி யுற்ற அத்தி = படுகுழியில் வீழ்ந்த யானை.

† கதிர் பத்திரம் = வேலாயுதம்.

‡ " வெட்கி டப்பிரம னைப்பி டித்துமுடி
யைக்கு லத்துசட லச்செ ருக்கையழி
வித்த றத்தர்புகழ் கச்சி யுற்றுமகிழ் தம்பிரானே." என்றும் பாடம்.

விஜயபுரம்.

[இது திருவாரூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து திருவாரூருக்குப் போகும் வழியில் உள்ளது.]

819.

குடல்நிண மென்புபுலால்கமழ் குருதிநரம்பிவை தோலிடை
குளுகுளெ னும்படி மூடிய மலமாசு-
குதிகொளு மொன்பது வாசலு டையகு ரம்பையை நீரெழு
குமிழியி னுங்கடி தாகியெ யழிமாய ;
அடலையு டம்பைய வாவியெ அநவர தஞ்சில சாரமி
லவுடத மும்பல யோகமு முயலாநின்-
றலமரு சிந்தையி னுகுல மலமல மென்றினி யானுநி
னழகிய தண்டைவி டாமல ரடைவேனே;
இடமற மண்டு நிசாசர ரடைய மடிந்தெழு பூதர
மிடிபட இன்ப மகோததி வறிதாக-
இமையவ ருஞ்சிறை போயவர் பதியு ளிலங்க *விடாதர
எழில்பட மொன்று மொராயிர முகமான ;
விடதர கஞ்சுகி மேருவில் வலீவதன் முன்புர நீறெழ
வெயில்நகை தந்த புராரிம தனகோபர்-
விழியினில் வந்து பகீரதி மிசைவள ருஞ்சிறு வாவட
விஜய புரந்தனில் மேவிய பெருமாளே.

திருவாரூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். நாகபட்டினத்துக்கு மேற்கு 14-மைல். மூவர் தேவாரமும் பெற்ற முதுநகர்.

தன் மகன் ஏறிச்சென்ற தேரின் கீழ்ப்பட்டு மடிந்த கன்றின் தாயான பசுவின் துயரைச் சகியாது அம் மகன் பட்டமடிய அவன் மீது தேர் ஊர்ந்து சென்ற "மநுநீதி கண்ட சோழன்" அரசு புரிந்த திருப்பதி. இதனை யீத்தலத்துக் குரிய திருப்புகழ் சு-ஆம் பாடலிற் காண்க. ஸ்தல புராணம் உண்டு.]

* விடு ஆதர = விடும் ஆதரவானவனே.

820.

கூசா தேபா ரேசா தேமால்
கூரு நூல்கற் றுளம்வேறு-
கோடா தேவேல் பாடா தேமால்
கூர்கூ தாளத் தொடைதோளில் ;
வீசா தேபேர் பேசா தேசீர்
வேதா தீதக் கழல்மீதே-
வீழா தேபோய் நாயேன் வாணுள்
வீணே போகத் தகுமோதான் ;
நேசா வாணே ரீசா வாமா
நீபா கானப் புனமானே-
நேர்வா யார்வாய் சூர்வாய் சார்வாய்
நீள்கார் சூழ்கற் பகசாலத்;
தேசா தீனு தீனு ரீசா
சீரா ரூரிற் பெருவாழ்வே-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (க)

821.

கூர்வாய் நாராய் வாராய் போனுர்
கூடா ரேசற் றலஆவி-
கோதா னேன்மா தாமா ருணுள்
கோளே கேள்மற் றிளவாடை ;
ஈர்வாள் போலே மேலே வீசா
ஏரு வேறிட் டதுதீயின்-
ஈயா வாழ்வோர் பேரே பாடா
ஈடே ரூரிற் கெடலாமோ ;
சூர்வா ழாதே மாரு தேவாழ்
சூழ்வா னோர்கட் கருள்கூருந்-

தோல்லா வேலா வீரு ரூர்வாழ்
சோதீ பாகத் துமையூடே ;
சேர்வாய் நீதீ வானோர் வீரா
சேரா ரூரைச் சுடுவார்தஞ்-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (உ)

822.

பாலோ தேனே பாகோ வானோர்
பாரா வாரத் தமுதேயோ-
பாரோர் சீரோ வேளோர் வாழ்வோ
பானே வான்முத் தெனநீளத் ;
தாலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் துணுசாரந்-
தாரா தேபே ரீயா தேபே
சாதே யேசத் தகுமோதான் ;
*ஆலோல் கேளா மேலோர் நாண்மா
லானு தேனற் புனமேபோய்-
ஆயாள் தாள்மேல் வீழா வாழா
ஆளா வேளைப் புகுவோனே ;
சேலோ டேசே ராரால் சாலார்
சீரா ரூரிற் பெருவாழ்வே-
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமாளே. (ஈ)

823.

நீதானைத் தனையாலும் - நீடேழிக் க்ருபையாகி;
மாதானத் தனமாக - மாஞானக் கழல்தாராய்;
வேதாமைத் துனவேளே - வீராசற் குணசீலா;
ஆதாரத் தொளியானே - ஆரூரிற் பெருமாளே. (ச)

* ஆலோலம் = பறவை யோட்டு மொலி.

824.

மகரம துகெட இருகுமி ழுடைசி
வாரார்ச ரங்க ளெனநீளும்-
மதர்விழி வலிகொ டுலகினில் மனிதர்
வாணுள டங்க வருவார்தம்;
பகர்தரு மொழியில் ம்ருகமத களப
பாடீர கும்ப மிசைவாவிப்-
படிமன துனது பரிபுர சரண
பாதார விந்த நினையாதோ;
நகமுக சமுக நிருதரு மடிய
நாணுவி லங்கல் பொடியாக-
நதிபதி கதற வொருகணை தெரியு
நாராய ணன்றன் மருகோனே;
அகனக கனக சிவதல முழுது
மாராம பந்தி யவைதோறும்-
அரியளி விததி முறைமுறை கருது
மாரூர் மர்ந்த பெருமாளே. (நி)

825.

கரமு முளரியின் மலர்முக மதிகுழல்
கனம தெணுமொழி கனிகதிர் முலைநகை
கலக மிடுவிழி கடலென விடமென மனதூடே-
கருதி யனநடை கொடியிடை யியல்மயில்
கமழு மகிலுட னிளகிய ம்ருகமத
களப புளகித கிரியினு மயல்கொடு திரிவேனும்;
இரவு பகலற இகலற மலமற
இயலு மயலற விழியினி ரிழிவர
இதய முருகியெ யொரு*குள பதமுற மடலூடே-

---

* குள பதம் = சர்க்கரைப் பாகு பதம்.

யெழுத அரியவள் குறமக ளிருதன
கிரியில் முழுகின இளையவ னெனுமுரை
யினிமை பெறுவது மிருபத மடைவது மொருநாளே;

சுரபி மகவினை யெழுபொருள் வினவிட
மனுவி னெறிமணி * யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுமி னதிதீது-

துணிவி லிதுபிழை பெரிதென வருமது
உருகி யரகர சிவசிவ பெறுமதொர்
சுரபி யலமர விழிபுனல் பெருகிட நடுவாகப் ;

பரவி யதனது துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
படிய ரதமதை நடவிட மொழிபவ னருளாரூர்ப்-

படியி லறமுக சிவசுத கணபதி
யிளைய குமரநி ருபபதி சரவண
பரவை முறையிட அயில்கொடு நடவிய பெருமாளே. (சு)

பு. 826.

பாலோ தேனே பலவுறு சுளையது
தானே வானோர் அமுதுகொல் கழைரச
பாகோ வூனே †டுருகிய ‡மகனுண வருண்ஞானப் -

பாலோ வேலோ மொழியென அடுகொடு
வேலோ கோலோ விழியென மூகமது
§பானே வானூர் நிலவுகொ லென ||மகண் மகிழ்வேனே;

¶ நாலாம் ரூபா கமலஷண் முகவொளி
யேதோ o மாதோம் எனதகம் வளரொளி
நானே நீயோ படிகமொ டொளிரிட மதுசோதி-

---

* அசைவுறவிசை = அசைவு உறு அ இசை.
† உருகிய = ஒன்றுபட்ட. ‡ மகன் = திருஞான சம்பந்தர்.
§ பானே = பாதுவோ. || மகள் = பெண்கள்.
¶ நாலாம் = பல. o மா தோம் = பெருங் குற்றம்.

நாடோ வீடோ * நடுமொழி யெனநடு
துணோர் தோளா சுரமுக கனசடை
நாதா தாதா எனவுரு கிடஅருள் புரிவாயே ;
மாலாய் வாணோர் மலர்மழை பொழியவ
தாரா சூரா எனமுகி வர்கள்புகழ்
மாயா ரூபா அரகர சிவசிவ † எனவோதா-
‡ வாதா டுரோ டவுணரொ டலைகடல்
கோகோ கோகோ எனமலை வெடிபட
வாளால் வேலால் மடிவுசெய் தருளிய முருகோனே ;
§ சூலாள் மாலாள் மலர்மகள் கலைமகள்
‖ ஓதார் சீராள் கதிர்மதி குலவிய
தோடாள் கோடா ரிணைமுலை குமரிமுன் அருள்பாலா-
தூயா ராயார் இதுசுக சிவபத
வாழ்வா ¶ மீனே வதிவமெ னுணர்வொடு
சூழ்சீ ராநூர் மருவிய இமையவர் பெருமாளே. (எ)

பெரியமடம்.

[இது திருவாரூரி லிருப்பதாகக் கேள்வி. சரியான இடம் விளங்கவில்லை. கும்பகோணத்தி லிருப்பதாகவுஞ் சொல்லுவர்.]

827.

கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்பொய்
களவுமத னூல்பலப டித்தவா வேட்கை
கனதனமு மார்புமுற விச்சையா லார்த்து கழுநீரார்-

---

* நடுமொழி=உண்மையை மொழி. † ஓதா=ஓதாமல்.

‡ "வாதாடு அவுணரொடு ஊரொடு" என மாற்றிப் பொருள் கொள்க.

§ சூலாள்=தர்க்கை. ‖ ஓது ஆர் சீராள்.

¶ ஈனே வதிவம்=இத்தலத்திலேயே உறைவோம்.

கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வார்த்து
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்ச்செய்
கருமமறி யாதசிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே ;
தலமடைசு சாளரமு கப்பிலே காத்து
நிறைபவுசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தெனவருகி யோடியொரு சற்றுளே வார்த்தை தடுமாறித்-
தழுவியது ராகமும்வி ளைத்துமா யாக்கை
தினையுமரு நாளையும வத்திலே போக்கு
தலையறிவி லேனெறி நிற்கநீ தீகைசூ தரவேணும் ;
அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி
அருணைநகர் கோபுரவி ருப்பனே போற்றி
அடல்மயில்க டாவியப்ரி யத்தனே போற்றி அவதானி-
அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி
அகிலதல மோடிவரு கிர்த்தனே போற்றி
அருணகிரி நாதனெனும் அப்பனே போற்றி அசுரேசர்;
பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி பெருவாழ்வாம்-
பிரமனறி யாவிரத தக்ஷிணை மூர்த்தி
பரசமய கோளரித வத்திருவ் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே *யோக்யர் பெருமாளே.

சோமநாதன் மடம்.

[இதுவுந் திருவாரூரி லிருப்பதாகக் கேள்வி; சரியான இடம் விளங்கவில்லை.]

828.

ஒருவழிப டாது மாயை யிருவினைவி டாது நாளு
முழலுமது ராக மோக அதுபோகம்-
உடலுமுயிர் தானு மாயு னுணர்விலொரு காலி ராத
வுளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக்;

---

* யோக்யர் = யோகியர்.

பிரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீர
மெனமொழியும் வீசு பாச கனகோப-
எமபடரை மோது மோன வுரையிலுப தேச வாலே
யெனதுபகை தீர நீயும் அருள்வாயே;
அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ ருது பேணும் அறிவாளன்-
அமணர்குல கால ஞகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோமநாதன் மடமேவும்;
முருகபொரு சூரர் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவோனே-
மொழியுமடி யார்கள் கோடி குறைகருதி ஞலும் வேறு
முனியஅறி யாத தேவர் பெருமாளே.

திரியம்பகபுரம்.

[இது 'மதுரமாணிக்கம்' என்னுந் தலம் என்பர். திருவாரூரி லிருந்து 8-மைல்.]

829.

உரையொ ழிந்துநின் றவர்பொரு ளெளிதென
வுணர்வு கண்டுபின் திரவிய இகலரு
ளொருவர் நண்படைந் துளதிரள் கவர்கொடு பொருள்தேடி-
உளம கிழ்ந்துவந் தரிமையில் நினைவுறு
சகல இந்த்ரதந்த் ரமூம்வல வினைமக
ளுபய கொங்கையும் புளகித மெழமிக வுறவாயே;
விரக வன்புடன் பரிமள மிகவுள
முழுகி நன்றியொன் றிடமல ரமளியில்
வெகுவி தம்புரிந் தமர்பொரு சமயம துறுநாளே-
வினோத னங்கவர்ந் திடுபல மனதிய
ரயல்த னங்களுந் தமதென நினைபவர்
வெகுளி யின்கணின் றிழிதொழி லதுவற அருள்வாயே;

செருநீ னைந்திடுஞ் சினவலி யசுரர்க
ளுகமு டிந்திடும் படியெழு பொழுதிடை
செகம டங்கலும் பயமற மயில்மிசை தனிலேறித்-
திகுதி குந்திகுந் திகுதிகு திகுதிகு
தெனதெ னந்தெனந் தெனதென தெனதென
திமிதி மிந்திமிந் திமிதிமி திமியென வருபூதங்;
கையி றந்திடுங் கடலென மருவிய
வுதிர மொண்டுமுண் டிடவமர் புரிபவ
கலவி யன்புடன் குறமகள் தழுவிய முருகோனே-
கனமு றுந்தரியம் பகபுர மருவிய
கவுரி தந்தகந் தறுமுக எனவிரு
கழல்ப ணிந்துநின் றமரர்கள் தொழுவல பெருமாளே.

சிக்கல்.

[ரெயில்வே ஸ்டேஷன். நாகபட்டினத்துக்கு மேற்கு 3-மைல். ஸ்வாமி சந்நிதி கட்டுமலைமே லிருக்கின்றது. திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

830.

கன்ன லொத்த மொழிச்சொல் வேசியர்
வன்ம னத்தை யுருக்கு லீலையர்
கண்வெ ருட்டி விழித்த பார்வையர் இதமாகக்-
கையி லுற்ற பொருட்கள் யாவையும்
வையெ னக்கை விரிக்கும் வீணியர்
கைகள் பற்றி யிழுத்து மார்மூலை தனில்வீழப்;
பின்னி விட்ட சடைக்கு ளேமலர்
தன்னை வைத்து முடிப்பை நீயவி
ழென்னு மற்ப குணத்த ராசையி லுழலாமற்-
பெய்யு முத்த மிழிற்ற யாபர
என்ன முத்தர் துதிக்க வேமகிழ்
பிஞ்ஞ கர்க்குரை செப்பு நாயக அருள்தாராய்;

வன்னி யொத்த படைக்க ளாதிய
தூன்னு கைக்கொ ளரக்கர் மாமுடி
மண்ணி லற்று விழச்செய் மாதவன் மருகோனே-
மன்னு பைப்பணி யுற்ற நீள்விட
மென்ன விட்டு முடுக்கு சூரனை
மல்லு டற்று முருட்டு மார்பற அடைவாகச்;
சென்னி பற்றி யறுத்த கூரிய
மின்னி ழைத்த திறத்த வேலவ
செய்ய பொற்புன வெற்பு மானணை மணிமார்பா-
செம்ம னத்தர் மிகுத்த மாதவர்
நன்மை பெற்ற வுளத்தி லேமலர்
செல்வ சிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே. (க)

831.

புலவரை ரகஷிக் குந்தரு வேமது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய திக்கெட் டும்போயு லாவிய புகழாளா-
பொருவரு நட்புப் பண்பான வாய்மையி
லுலகிலு னக்கொப் புண்டோவெ னுரல
பொருள்கள் நிரைத்துச் செம்பாக மாகிய கவிபாடி;
விலையில்த மிழ்ச்சொற் குன்போலு தாரிக
ளெவரென மெத்தக் கொண்டாடி வாழ்வெனும்
வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர-
மிகவரு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றுத வாழ்வையு மருள்வாயே;
இலகிய வெட்சிச் செந்தாம மார்புய
சிலைநுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே-
இளையகொ டிச்சிக் கும்பாக சாதன
னுதவுமொ ருத்திக் குஞ்சில நாயக
எழிலியெ ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே;

அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு மூப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி யிசையூரே-
அழகிய சிக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே. (உ)

நாகபட்டினம்.

[ரெயில்வே ஸ்டேஷன். மூவர் தேவாரமும் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

832.

ஓல மிட்டி ரைத்தெ ழுந்த வேலை வட்ட மிட்ட இந்த
ஊர்மு கிற்ற ருக்க ளொன்று மவராரென்-
றூம ரைப்ர சித்த ரென்று மூட ரைச்ச மர்த்த ரென்றும்
ஊன ரைப்ர புக்க ளென்று மறியாமற் ;
கோல முத்த மிழ்ப்ர பந்த மால ருக்கு ரைத்த நந்த
கோடி யிச்சை செப்பி வம்பி னுழல்நாயேன்-
கோப மற்று மற்று மந்த மோக மற்று ணைப்ப ணிந்து
கூடு தற்கு முத்தி யென்று தருவாயே ;
வாலி துர்க்கை சத்தி யம்பி லோக கத்தர் பித்தர் பங்கில்
மாது பெற்றெ டுத்து கந்த சிறியோனே-
வாரி பொட்டெ ழுக்க வுஞ்சம் வீழ வெட்ட யிற்று ரந்த
வாகை மற்பு யப்ர சண்ட மயில்வீரா ;
ஞால வட்ட முற்ற வுண்டு நாக மெத்தை யிற்று யின்ற
*நார ணற்க ருட்சு தந்த மருகோனே-
நாலு திக்கும் வெற்றி கொண்ட சூர பத்ம னைக்க ளைந்த
நாக பட்டி னத்த மர்ந்த பெருமாளே. (க)

---

* விஷ்ணு மூர்த்திக்குச் சிவசாரூப்பிய மளித்தது.

833.

மார்பு ரம்பினளி னங்கிரியெ னுந்தனமொ
டார மும்படித ரம்பொறியு டன்பணிகள்
மாலை யொண்பவள மும்பரிம ளங்கலவை தொங்கலாட-
வாள்ச ரங்கணிய லுங்குழைத ளம்பளக
பார தொங்கலணி பெண்கள்வத னங்கள்மதி
வாகை யென்பஇத ழுஞ்சலச மென்பகள சங்குமோக;
சார மஞ்சள்புய மும்கிளிமு கங்களுகிர்
பாளி தம்புனித வண்டிடையொ டின்பரச
தாழி யென்பஅல்கு லுந்துளிர ரம்பைதொடை ரம்பைமாதர்-
தாள்ச தங்கைகொ லுசுங்குலசி லம்புமணி
யாடல் கொண்டமட மங்கையரு டன்கலவி
தாக முண்டுழல்கி லுங்கழலு றுங்கழல்ம றந்திடேனே;
வீர வெண்டையமு ழங்கவரி சங்குமூர
சோடு பொன்பறைத துந்துபிதி யுஞ்சுரரும்
வேத விஞ்சையரு டன்குமுற வெந்துகவ டார்ந்தசூரன்-
வீற டங்கமுகி லுங்கமற நஞ்சுடைய
ஆயி ரம்பகடு கொண்டவுர கன்குவடு
மேகொ ளுந்தபலசி ரந்தனெய நிந்துவட னங்கொள்வேலா;
நார சிங்கவடி வங்கொடுப்ர சண்டிரணி
யோன டுங்கவட னஞ்செய்துஇ லங்கைவலி
ராவ ணன்குலம டங்கசிலை கொண்டகரர் தந்தமூல-
ஞான மங்கையமு தஞ்சொருபி யென்றவொரு
தாய ணங்குகுற மங்கையமண வந்தபுய
நாகை யம்பதிய மர்ந்துவளர் நம்பர்புகழ் தம்பிரானே. (உ)

834.

விழு*தா தெனவே கருதா துடலை
விணைசேர் வதுவே புரிதாக-
விருதா விளிலே †புலகா யதமே
லிடவே மடவார் மயலாலே;

---

* தாது = சுக்கிலம். † உலகாயதம் = தேகமே ஆத்மா, போகமே மோக்ஷம் என்னும் மதம்.

அழுதா கெடவே அவமா கிடநா
ளடைவே கழியா துணையோதி-
அலர்தா ளடியே னுறவாய் மருவோ
ரழியா வரமே தருவாயே;
தொழுதார் வினைவே ரடியோ டறவே
துகள்தீர் பரமே தருதேவா-
சுரர்பூ பதியே கருணை லயனே
சுகிர்தா வடியார் பெருவாழ்வே;
எழுதா மறைமா முடிவே வடிவே
லிறைவா எனையா ளுடையோனே-
இறைவா எதுதா வதுதா தனையே
இணைநா கையில்வாழ் பெருமாளே. (ந)

எட்டிகுடி.

[இது நாகபட்டினத்துக்குச் சமீபத்தி லுள்ள கீழ்வேளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 7-மைல் தூரத்தி லுள்ள 'திருக்கோளிலி' என்னும் ஸ்தலத்துக்குச் சமீபம். சுப்பிரமணிய க்ஷேத்திரம். இங்குச் சித்திராபௌர்ணமி யன்று அநேகங் காவடிகள் வருகின்றன.]

835.

உரமுற் றிருசெப் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடமாயே-
உடைசுற் றுமிடைச் சுமையொக் கஅடுத்
தமிதக் கெறுவத் துடன்வீறு;
தரமொத் துபயக் களபத் தளமிக்
கவனத் தருணத் தனமீதே-
சருவிச் சருவித் தழுவித் தழுவித்
தவமற் கவிடுத் துழல்வேனே;
அரிபுத் திரசித் தசஅக் கடவுட்
கருமைத் திருமைத் துனவேளே-

அடல்குக் குடநற் கொடிகட்டி யனர்த்
தசுரப் படையைப் பொருவோனே;
பரிவுற் றவருக் கருள்வைத் தருள்வித்
தகமுத் தமிழைப் பகர்வோனே-
பழனத் தொளிர்முத் தணியேட் டிகுடிப்
பதியிற் குமரப் பெருமாளே. (க)

836.

ஓங்கு மைம்புல னோடை நினைத்தின் பயர்வேனை-
ஓம்பெ றும்ப்ரண வாதி யுரைத்தெந் தனையாள்வாய்;
வாங்கி வெங்கணை சூர்குல க்கொம் புகடாவி-
வாங்கி நின்றன எவி லுகைக்குங் குமரேசா;
மூங்கி லம்புய வாச மணக்குஞ் சரிமானு-
மூண்ட பைங்குற மாது மணக்குந் திருமார்பா;
காங்கை யங்கறு பாசில் மனத்தன் பர்கள்வாழ்வே-
*காஞ்சி ரங்குடி ஆறு முகத்தெம் பெருமாளே. (உ)

837.

கடலொத்த விடமொத்த கணையொத்த பிணையொத்த
கயலொத்த மலரொத்த விழிமானுர்-
கனசெப்பு நளினத்து முகைவெற்பை நிகர்செப்பு
கதிர்முத்து முலைதைக்க அகலாதே;
மிடலுற்ற கலவிக்கு ளுளநச்சி வளமற்று
மிடிபட்டு மடிபட்டு மனமாழ்கி-
மெலிவுற்ற தமியற்கு னிருபத்ம சரணத்தை
மிகநட்பொ டருள்தற்கு வருவாயே;
தடையற்ற கணைவிட்டு மணிவஜ்ர முடிபெற்ற
தலைபத்து டையதுட்ட னுயிர்போகச்-
†சலசத்து மயிலுற்ற சிறைவிட்டு வருவெற்றி
தருசக்ர தரனுக்கு மருகோனே;

---

* 'காஞ்சிரங் குடி' என்பது 'எட்டி குடி.'

† சலசத்து மயில்=சிதை; சல சம்=தாமரை.

திடமுற்ற கனகப்பொ துவில்நட்பு டனடித்த
சிவனுக்கு விழியொத்த புதல்வோனே-
செழுநத்து மிழுமுத்து வயலுக்குள் நிறைபெற்ற
திகழெட்டி குடியுற்ற பெருமாளே. (ஈ)

838.

மைக்குழ லொத்தவை நீலோ மாலோ
அக்கணி ணைக்கிணை சேலோ வேலோ
மற்றவர் சொற்றெளி பாலோ பாகோ வடிதேனே-
வத்திர மெய்ச்சசி தாணே நாணு
குத்துமு லைக்கிள நீரோ மேரோ
வைப்பதி டைக்கிணை தூலோ மேலோ வெனமாதர்;
தக்கவு றுப்பினுள் மாலே மேலாய்
லச்சைய றப்புணர் வாதே காதே
சைச்சையெ னத்திரி நாயே னையா தலையாதே-
தற்பொறி வைத்தருள் பாராய் தாராய்
தற்சமை யத்தக லாவே னுதா
தத்தும யிற்பரி மீதே நீதான் வருவாயே;
முக்கணர் மெச்சிய பாலா சீலா
சித்தசன் மைத்துன வேளே தோளார்
மொய்த்தம ணத்தது ழாயோன் மாயோன் மருகோனே-
முத்தமிழ் வித்வவி நோதா கீதா
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்திகொ டுத்தடி யார்மேல் மாமால் முருகோனே;
இக்குநி சைத்தவி ராலூர் சேலூர்
செய்ப்பழ நிப்பதி யூரா வாரூர்
மிக்கவி டைக்கழி வேளூர் தாளூர் வயலூரா-
எச்சுரு திக்குளு நீயே தாயே
சுத்தவி றற்றிறல் வீரா தீரா
எட்டிகு டிப்பதி வேலா மேலோர் பெருமாளே. (சு)

எண்கண்.

[இது திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் போகும் வழியில் உள்ள திருமதிக்குன்றம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம். எண்கண், எட்டிகுடி, சிக்கல் மூன்றிலும் உள்ள முருகக்கடவுளின் திருவுருவங்கள் ஒரே சிற்பியினுடைய கைவேலை என ஆனரூர் கூறுவர்.]

839.

சிந்த னந்தி மிர்ந்த ணைந்து குங்கு மங்க டம்பி லங்கு
சண்ப கஞ்செ றிந்தி லங்கு திரடோளுந்-
தண்டை யஞ்சி லம்ப லம்ப வெண்டை யஞ்ச லன்ச லென்று
*சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச மயிலேறித்;
திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்த னந்த னந்த னென்று
சென்ற சைந்து கந்து வந்து க்ருபையோடே-
†சிந்தை யங்கு லம்பு குந்து சந்த தம்பு கழ்ந்து ணர்ந்து
செம்ப தம்ப ணிந்தி சென்று மொழிவாயே;
அந்த மந்தி கொண்டி லங்கை வெந்த ழிந்தி டும்ப கண்டன்
அங்க முங்கு லைந்த ரங்கொள் பொடியாக-
அம்ப கும்ப னுங்க லங்க வெஞ்சி னம்பு ரிந்து கின்று
அம்பு கொண்டு வென்ற கொண்டல் மருகோனே;
இந்து வுங்க ரந்தை தும்பை கொன்றை யுஞ்ச லம்பு னைந்தி
டும்‡ப ரன்ற னன்பில் வந்த குமரேசா-
§இந்தி ரன்ப தம்பெ றண்டர் தம்ப யங்க டிந்த பின்பு
எண்க ணங்க மர்ந்து ருந்த பெருமாளே.

---

* சஞ்சிதம் = சஞ்சு இதம்; சஞ்சு = சாயல்.

† சிந்தை அம் குலம் = மனமாகிய அழகிய கோயில்.

‡ "பரஞ்சி லம்ப மர்ந்த" என்றும் பாடம்; பரன் சிலம்பு = திருப்பரங் குன்றம்.

§ இந்திரன் பதம்பெற அண்டர்தம் பயங்கடிந்து எனப்பிரிக்க.

திருக்குடவாயில்.

[திருவாரூரிலிருந்து நீடாமங்கலம் போகும் வழியி லுள்ள குறடாச்சேரி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 8-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

840.

அயிலார் மைக்கடு விழியார் மட்டைகள்
அயலார் நத்திடு விலைமாதர்-
அணிமீ திற்றுயில் பொழுதே தெட்டிக
ளவரே வற்செய்து தமியேனும்;
மயலா கித்திரி வதுதா னற்றிட
மலமா யைக்குண மதுமாற-
மறையால் மிக்கருள் பெறவே யற்புத
மதுமா லீப்பத மருள்வாயே;
கயிலா யப்பதி யுடையா ருக்கொரு
பொருளே கட்டீளை யிடுவோனே-
கடலோ டிப்புகு முதுசூர் பொட்டெழ
கதிர் வேல் விட்டிடு திறலோனே;
குயிலா லித்திடு பொழிலே சுற்றிய
குடவா யிற்பதி யுறைவோனே-
குறமா தைப்புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் பெருமாளே. (க)

841.

சுருதி யாயிய லாயியல் கீடிய
தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்
தொடர்பு மாயடி யாய்நடு வாய்மிகு துணையாய்மேல்-
துறவு மாயற மாய்நெறி யாய்மிகு
விரிவு மாய்விளை வாயருள் ஞானிகள்
சுகமு மாய்முகி லாய்மழை யாயெழு சுடர்வீசும்;

பருதி யாய்மதி யாய்நிறை தாரகை
பலவு மாய்வெளி யாயொளி யாயெழு
பகலி ராவிலை யாய்நிலை யாய்மிகு பரமாகும்-

பரம மாயையி னேர்மையை யாவரு
மறியொ ணாததை நீகுரு வாயிது
பகரு மாறுசெய் தாய்முதல் நாளுறு பயனேதான் ;

கருது மாறிரு தோள்மயில் வேலிவை
கருதொ ணாவகை யோரர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னுயுமை கனபாரக்-

களப பூண்முலை பூறிய பாலுணு
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னுய்வில யாடிடம் வாதிகள் கழுவேறக் ;

குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட நீடிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனி குலையாவான்-

குடிப் கீரென மாமது ராபுரி
யிலை யாரண வூரென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே. (உ)

வலிவலம்.

[திருவாரூருக்குத் தென்கிழக்கு சு-மைல். மூவர் பாடலும் பெற்றது.]

842.

தொடுத்த நாள்முதல் மருவிய இனனும்
இருக்க வேறொரு பெயர்தம திடமது
துவட்சி யேபெறி லவருடன் மருவிடு பொதுமாதர்-

துவக்கி லேயடி படருறு மலரயன்
விதித்த தோதக வினையுறு தகவது
துறக்க நீறிட அரகர வெனவுள மையமாதே ;
அடுத்த பேர்மனை துணைவியர் தமர்பொருள்
பெருத்த வாழ்வித சதமென மகிழ்வுறு
மசட்ட ஞதுலன் அவமது தவிரநி னடியாரோ-
டமர்த்தி மாமலர் கொடுவழி படவினை
யிருத்தி யேபர கதிபெற மயில்மிசை
யரத்த மாமணி யணிகழ லிணைதொழ அருள்தாராய் ;
எடுத்த வேல்பிழை புகலரி தெனவெதிர்
விடுத்து ராவணன் மணிமுடி துணிபட
எதிர்த்து மோர்கணை விடல்தெரி கரதலன் மருகோனே-
ருக்கு மாலிகை குவளைபி னறுமலர்
கடுக்கை மாலிகை பகிரதி சிறுபிறை
யெலுப்பு மாலிகை புனைசடி லவனருள் புதல்வோனே ;
வடுத்த மாவென நிலைபெறு நிருதனை
அடக்க ஏழ்கட லெழுவரை துகளெழ
வடித்த வேல்விடு கரதல ம்ருகமத புயவேளே-
வனத்தில் வாழ்குற மகள்முலை முழுகிய
கடப்ப மாலிகை யணிபுய அமரர்கள்
மதித்த சேவக வலிவல நகருறை பெருமாளே.

வே தா ர ணி ய ம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருத்தருப்பூண்டி ஜங்ஷனிலிருந்து 21-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தல புராணங்கள் உள்ளன.]

843

சூழும்வி னைக்கட் டுன்பமெ டும்பிணி கழிகாமஞ்-
சோரமி தற்குச் சிந்தைநி னைந்துறு துணையாதே ;

ஏழையெ னித்துக் கங்களு டன்றின முழல்வேலே-
ஏதம கற்றிச் செம்பத சிந்தனை தருவாயே ;
ஆழிய டைத்துத் *தங்கையி லங்கையை யெழுநாளே-
ஆண்மைசெ லுத்திக் கொண்டக ரும்புயல் மருகோனே ;
வேழமு கற்குத் தம்பியெ னுந்திரு முருகோனே-
வேத வனத்திற் சங்கார் தந்தருள் பெருமாளே. (க)

844.

சீலை யுடுத்துந டந்து மாலை யவிழ்த்துமு டிந்து
சீத வரிக்குழல் கிண்டி யளிமூசத்-
தேனி னிளிக்கமொ ழிந்து காமு கரைச்சிறை கொண்டு
தேச மனைத்தையும் வென்ற விழிமாளர் ;
மாலை மயக்கில்வி ழுந்து காம கலிக்குளு ளாந்து
மாலி லகப்பட நொந்து திரிவேலே-
வால ரவிக்கிர ணங்க ளாமென வுற்றப தங்கள்
மாயை தொலைத்திட வுன்ற னருள்தாராய் ;
பாலை வனத்தில்ந டந்து நீல அரக்கியை வென்று
பார மலைக்குள கன்று கணையாலேழ்-
பார மரத்தினள் மங்க வாலி யுரத்தையி டந்து
பால்வ ருணத்தலை வன்சொல் வழியாலே ;
வேலை யடைத்துவ ரங்கள் சாடி யரக்கரி லங்கை
வீட ணருக்கருள் கொண்டல் மருகோனே-
மேவு திருத்தணி செந்தில் நீள்பழ நிக்குளு கந்து
வேத வனத்தில மர்ந்த பெருமாளே. (உ)

845.

நூலினை யொத்த மருங்குல் தேரினை யொத்த நிதம்பம்
நூபுர மொய்த்த பதங்கள் இவையாலும்-
நூறிசை பெற்ற பதங்கொள் மேருவை யொத்த தனங்கள்
†நூல்வல்ம லர்ப்பொரு ‡ துண்டம் அவையாலும்;

---

* 'எழுநாளே ஆண்மை செலுத்தி யிலங்கையைத் தம் கைக் கொண்ட கரும்புயல்' எனப் பிரித்துக்கொள்க.

† நூல்வல் மலர் = தாமரை. ‡ துண்டம் = முகம்.

சேலினே யொத்திடு கண்க ளாலும ழைத்திடு பெண்கள்
தேனிதழ் பற்றுமொ ரின்ப வலைமூழ்கிச்-
சீலம னைத்து மொழிந்து காமவி தத்தி லழுந்தி
தேறுத வத்தை யிழந்து திரிவேனே ;
வாலஇ ளப்பிறை தும்பை யாறுக டுக்கை கரந்தை
வாசுகி யைப்புனை நம்பர் தருசேயே-
மாவலி யைச்சிறை மண்ட ஓரடி யொட்டிய ளந்து
வாளிப ரப்பியி லங்கை யரசாளேன் ;
மேல்முடி பத்தும ரிந்து தோளிரு பத்தும ரிந்து
வீரமி குத்தமு குந்தன் மருகோனே-
மேவுதி ருத்தணி செந்தில் சீர்பழ நிக்குளு கந்து
வேதவ னத்தில மர்ந்த பெருமாளே. (சு)

கோடி (குழகர் கோயில்.)

[இது வேதாரணியம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த அகத்தியான்பள்ளி ஸ்டேஷனுக்குத் தெற்கு 5-மைல். சுந்தர மூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

பு. 846.

நீலமுகி லானகுழ லானமட வார்கள்தன
நேயமதி லேதினமு முழலாமல்-
நீடுபுவி யாசைபொரு ளாசைமரு ளாகியலை
நீரிலுழல் மீனதென முயலாமற் ;
காலனது நாவரவ வாயிலிடு தேரையென
காயமரு வாவிவிழ அணுகாமுன்-
காதலுட னேதுமடி யார்களுட னடியொரு
கால்முருக வேளெனவு மருள்தாராய் ;
சோலைபரண் மீதுநிழ லாகதினை காவல்புரி
தோகைகுற மாதினுட னுறவாடிச்-

சோரனென நாடிவரு வார்கள்வன *வேடர்விழ
சோதிகதிர் வேலுருவு மயில்வீரா ;
கோலவழல் கீறுபுனை யாதிசரு வேசரொடு
கூடிவினை யாடுமுமை தருசேயே-
† கோடுமுக வானைபிற கானதுணை வாகுழகர்
கோடிநகர் மேவிவளர் பெருமாளே.

திருப்பெருந்துறை.

[இது அறந்தாங்கி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 8-மைல். தேவார வைப்பு ஸ்தலம். இங்கு மாணிக்கவாசக ஸ்வாமிகள் ஞானோபதேசம் பெற்றனர். இங்குச் சிவபிரானுக்குக் "குருந்த நீழற் குரு மூர்த்தி" என்னும் ஒரு திருநாமம் உண்டு. இவை "ஞானப்ரசங்கத் திருப்பெருந்துறை", "குருத்வ சங்கரர்" எனத் திருப்புகழிற் பாராட்டப்பட்டுள்ளன. ஸ்தலபுராணம் உண்டு.]

847.

இரத்த முஞ்‡சியு மூளை யெலும்புட்
டசைப்ப சுங்குடல் நாடிபு ணைந்திட்
டிறுக்கு மண்சல வீடுபு குந்திட் டதில்மேவி-
இதத்து டன்புகல் சூதுமி குந்திட்
டகைத்தி டும்பொரு ளாசையெ னும்புட்
டெருட்ட வுந்தெளி யாதுப றந்திட் டிடஃமாயா ;

---

* வேடர் விழ வே லேவிய விஷயத்தை விஜயமங்கலத்துக் குரிய பாடலில் ஏழாவது அடியிலுங் காண்க.

† "கோடுமுக வானைபிற கானமயி லாசருதி
கோடிவனம் வாழ்வேள பெருமாளே"— எனவும்,
"கோடுமுக வானைபிற கானதுணை வாசருதி
கூர்திருநெல் வேலியுறை பெருமாளே"— எனவும் பாட பேதங்க ளுள்ளன.

‡ சியும்=சீயும். ஃ மாயா பிரத்தம் வந்து=மாயை அதிகரித்து.

பிரத்தம் வந்தடு வாதசு ரம்பித்
துளைப்பு டன்பல வாயுவு மிஞ்சிப்
பெலத்தை யுஞ்சில நாளுளொ டுங்கித் தடிமேலாய்ப்-

பிடித்தி டும்பல நாள்கொடு மந்திக்
குலத்தெ னும்படி கூனிய டங்கிப்
பிசக்கு வந்திடு போதுபி னஞ்சிச் சடமாமோ ;

தரித்த னந்தன தானன தந்தத்
திமித்தி மிந்திமி தீதக திந்தத்
தடுட்டு டுண்டுடு டுடுடி மிண்டிட் டியல்தாளம்-

தனத்த குந்தகு தானன தந்தக்
கொதித்து வந்திடு சூருடல் சிந்தச்
சலத்து டன்கிரி தூள்படெ றிந்திட் டிடும்வேலா ;

சிரத்து டன்கர மேடுபொ ழிந்திட்
டிரைத்து வந்தம சோர்கள்ப டிந்துச்
சிரத்தி னுங்கமழ் மாலைம ணம்பொற் சரணேனை-

செகத்தி னின்குரு வாகிய தந்தைக்
களித்தி டுங்குரு ஞானப்ர சங்கத்
திருப்பெ ருந்துறை மேவிய கந்தப் பெருமாளே.(க)

848.

வரித்தகுங் குமமணி முலைக்குரும் பையர்மன
மகிழ்ச்சிகொண் டிடஅதி விதமான-

வளைக்கரங் களிலெடு வளைத்திதம் படவுடன்
மயக்கவந் ததிலறி வழியாத ;

கருத்தழிந் திடஇரு கயற்கணும் புரள்தர
களிப்புடன் களிதரு மடமாதர் -

கருப்பெருங் கடலது கடக்கவுன் திருவடி
கலைத்தருந் திருவுள மினியாமோ ;

பொருப்பகம் பொடிபட அரக்கர்தம் பதியொடு
புகைப்பரந் தெரியெழ விடும்வேலா-

புகழ்ப்பெருங் கடவுளர் களித்திடும் படிபுவி
பொறுத்தமந் தரகிரி கடலூடே ;

திரித்தகொண் டலுமொரு மறுப்பெறுஞ் சதுமுக
திருட்டியெண் கணன்முத லடிபேணத்-

திருக்குருந் தடியமர் குருத்வசங் கரரொடு
திருப்பெருந் துறையுறை பெருமாளே. (உ)

பு 849.

புகர வண்டெழுங் கருமுகி லலையவு
முதிய நஞ்சுமிழ்ந் தயில்விழி குவியவு
முகிள சந்திரன் பொருதுதல் வெயரவு மழுதாறும்-

முருகு தங்குசெங் துகிரிதழ் தெரியவு
மருவு சங்கநின் றெலிகொடு பதறவு
மூழுது மன்புதந் தமளியி னுதவிய அநுராகச் ;

சிகர கும்பகுங் குமபுள கிததன
மிருபு யம்புதைந் திடநடு விடைவெளி
தெரிய வின்றியொன் றிடவுயி ருயிருட னுறமேவித்-

திமிர கங்குலின் புதவிடு மவசர
நினைவு நெஞ்சினின் றறவவர் முகமது
தெரிச னஞ்செயும் பரிவற இனியருள் புரிவாயே ;

மகர நின்றதெண் டிரைபொரு கடைகடல்
மறுகி யஞ்சிவந் தடிதொழு திடவொரு
வடிகொள் செஞ்சரந் தொடுபவ னிருபது புயவீரன்-

மடிய வங்குசென் றவலெரு பதுமுடி
முடிய மூன்புமண் டமர்பொரு தமர்நிழல்
மதிலி லங்கையும் பொடிபட அருளரி மருகோனே;

நிகரி லண்டமெண் டிசைகளு மகிழ்வுற
விசகு கொண்டுநின் றழகுறு மயில்மிசை
நினைவி னுந்தியம் புவிதனி வலம்வரு மிளையோனே-

நிலவ ரும்புதண் டாளமு மிளிரொளிர்
பவள மும்பொரும் பழனமு மழகுற
நிழல் குருந்தமுஞ் செறிதுறை வளர்வுறு பெருமாளே.

திருத்துருத்தி.

[திருத்துருத்தி என்பது குற்றாலம். ரெயில்வே ஸ்டேஷன். மாயூரத்துக்குத் தென்மேற்கு 5½-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

850.

மலைக் கனத்தென மார்பினி லேயிரு
மூலைக் கனத்துற வேயிடை நூலென
*வளைத்து குப்பமை யார்குழல் தோளொடும் அலைமோத-
மயிற் குலத்தவ ராமென நீள்கலை
நெகிழ்த்து வித்திரு வார்விழி வேல்கொடு
மயக்கி நத்தினர் மேல்மறு பாடும விழியேயி;
விலைக் கெனத்தன மாயிர மாயிர
மூலைக்க ளப்பினு மாசைபொ தாதென
வெறுப்பர் குத்திர காரியர் வேசையர் மயல்மேலாய்-
வெடுக் கெடுத்துமை காபிணி மேலிட
மூடக்கி வெட்கு மதாமத வீணன
மினற் பொலிப்பத மோடுற வேயருள் புரிவாயே;
அலைக் கடுத்த சுரார் பதி கோவென
விடப் பணச்சிர மாயிர சேடனும்
அதிர்த்தி டக்கதிர் வேல்விடு சேவக மயில்வீரா-
அடைக் கலப்பொரு ளாமென நாயென
அழைத்து முத்திய தாமது பூதியெ
னருட்டி ருப்புக ழோதுக வேல்மயி லருள்வோனே;

---

*வளைத்து உகுப்ப = வளைத்துவிட.

சிலேக்கை முப்புர நீறெழ வேதிரு
வுளத்தி லற்பமெ னுநினை தேசிகர்
சிறக்க முத்தமி ழாலொரு பாவக மருள்பாலா-

திருக் கடப்பலர் சூடிய வார்குழல்
குறத்தி கற்புட னேவினை யாடியொர்
திருத் துருத்தியில் வாழ்முரு காசுரர் பெருமாளே.

திருவீழிமிழலை.

[இது குற்றாலத்துக்குத் தெற்கு 6-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

851.

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் வினைவாகி-

இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல;

ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே-

ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்;

முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே-

முநிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா ;

திருமால் பிரமா வறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே-

செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

திருவாவடுதுறை.

[மாயூரத்துக்கு மேற்கு 10-மைல் தூரத்திலுள்ள நாரசிங்கன் பேட்டை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 1½-மைல். மூவர் தேவாரமும் பெற்றது.]

852.

சொற்பிழைவ ராம லுணைக்கனக் கத்துதித்து
நிற்பதுவ ராத பவக்கடத் திற்சுழற்றி
சுக்கிலவ தார வழிக்கிணைக் கிக்களித்து விலைமாதர்-

துப்பிறைய தான இதழ்க்கனிக் குக்கருத்தை
வைத்துமய லாகி மனத்தைவிட் டுக்கடுத்த
துற்சன*ம காத கரைப்புவிக் குட்டழைத்த நிதிமேவு;

கற்பகஇ ராச னெனப்படைக் குப்பெருத்த
அர்ச்சுனர ராதி யெனக்கவிக் குட்பதித்து
கற்றறிவி லுவை யெடுத்தடுத் துப்படித்து மிகையாகக்-

கத்திடுமெ யாக வலிக்கலிப் பைத்தொலைத்து
கைப்பொருளி லாமை யெணைக்கலக் கப்படுத்து
கற்பணவி டாம லலைத்திருக் கச்சலிக்க விடலாமோ;

எற்பணிய ராவை மிதித்துவெட் டித்துவைத்து
பற்றியக ராவை யிழுத்துரக் கக்கிழித்து
எட்கரிப டாம லிதத்தபுத் திக்கஞ்சிக்கு நிலையோதி-

எத்தியப சாசின் மூலைக்குடைத் தைக்குடித்து
முற்றுயிரி லாம லடக்கிவிட் டுச்சிரித்த
யிற்கணையி ராமர் சுகித்திருக் கச்சினத்த திறல்வீரா;

வெற்பெனம தாணி நிறுத்துருக் கிச்சமைத்து
வர்க்கமணி யாக வடித்திருத் தித்தகட்டின்
மெய்க்குலம தாக மலைக்கமுத் தைப்பதித்து வெகுகோடி-

---

* ம காதகரை = மகா காதகரை.

விட்கதிர தாக நிகர்த்தொளிக் கச்சிவத்த
ரத்தினப டாக மயிற்பரிக் குத்தரித்து
மிக்கதிரு வாவ துநற்புறைக் குட்செழித்த பெருமாளே.

மருத்துவக்குடி.

[இஃது ஆடுதுறை ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 2-மைல்.]

853.

கருத்தி தப்படு காமா லீலைகள்
விதத்தை நத்திய வீணு வீணிகள்
கவட்டு விற்பன மாயா வாதிகள் பலகாலுங்-
கரைத்து ரைத்திடு மோகா மோகிக
ளளிக்கு லப்பதி கார்போ லோதிகள்
கடைக்க ணிற்சுழ லாயே பாழ்படு வினையேனை;
உரைத்த புத்திகள் கேளா ரீசனை
யவத்த *மெத்திய ஆசா பாசனை
யுளத்தில் மெய்ப்பொரு ளோரா மூடனை யருளாகி-
உயர்ச்சி பெற்றிடு மேலா மூதுரை
யளிக்கு நற்பொரு ளாயே மாதவ
வுணர்ச்சி பெற்றிட வேநீ தாளினை யருள்வாயே;
செருக்கி வெட்டிய தீயோ ராமெனு
மதத்த துட்டர்கள் மாரூ ராதிய
சினத்தர் பட்டிட வேவே லேவிய முருகோனே-
சிவத்தை யுற்றிடு தூயா தூயவர்
கதித்த முத்தமிழ் மாலா யோதிய
செழிப்பை நத்திய சீலா வீதிய மயில்வீரா;
வரைத்த வர்க்கரர் சூலா பாணிய
ரதிக்கு ணத்தர் தீரா தீரர்த்த
மனத்தி யற்படு ஞான தேசிக வடிவேலா-

* மெத்திய = மிகுந்த.

வருக்கை யிற்கனி சாறுய் *மேலிடு
தழைத்த செய்த்தலை யூடே பாய்தரு
மருத்து வக்குடி வாழ்வே தேவர்கள் பெருமாளே.

திருப்பந்தணைநல்லூர்.

[இது திருவிடைமருதூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 7½-மைல். குற்றாலம் ஸ்டேஷனுக்கு வடமேற்கு 6-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

854.

இதசந்தன புழுகுஞ்சில மணமூந்தக வீசி
யணையுந்தன கிரிகொண்டிணை யழகும்பொறி சோர
இருளுங்குழல் மழையென்பர வரசங்கொளு மோகக்
குயில்போலே-

இடையுங்கொடி மதனன்தளை யிடுகுந்தள பார
இலையுஞ்சுழி தொடைரம்பையு மழுதந்தட மான
இயலங்கடி தடமும்பொழி மதவிஞ்சைகள் பேசித்
தெருமீதே;

பதபங்கய மணியும்பரி புரமங்கொலி வீச
நடைகொண்டிடு மயிலென்பன கலையுஞ்சுழ லாட
பரிசும்பல மொழியுஞ்சில கிளிகொஞ்சுகை போலப்
பரிவாகிப்-

பணமுண்டென தவலம்படு நினைவுண்டிடை சோர
இதுகண்டவர் மயல்கொண்டிட மனமுஞ்செயல் மாற
பகலுஞ்சில இரவுந்துயில் சிலவுஞ்சகர் மாயைத்
துயர்தீராய்;

திதி திந்திமி தனதந்தன டுடு டுண்டுடு பேரி
டகுடங்குகு டிகுடிங்குகு படகந்துடி வீணை
செகணஞ்செக வெனவும்பறை திசையெங்கினு மோதக்
கொடுசூரர்-

* மேலிடு = மேலிட்டு.

சிரமுங்கர வுடலும்பரி யிரதங்கரி யாளி
நிணமுங் குடல் தசையுங்கட லெனசெம்புன லோட
சிலசெம்புள்கள் கழுகுஞ் சிறு நரியுங்கொடி யாடப்
பொரும் வேலா ;

மதவெங்கய முரிகொண்டவர் மழுவுங்கலை பாணி
யிட மன்பொடு வளருஞ்சிவை புகழ்சுந்தரி யாதி
வளருந்தழ லொளிர் சம்பவி பரைவிண்டிள தோகைத்
தருசேயே-

வதனஞ்சசி யமுதம்பொழி முலை நன்குற மாதொ
டிசையுஞ்சுரர் தருமங்கையொ டிதயங்களி கூர
வருபந்தணை நகர்வந்துறை விமலன்குரு நாதப்
பெருமாளே. (க)

855.

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச மலமாய-

எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறித் ;

திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல-

சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழுக டஞ்செய் கழல்தாராய் ;

மருதொடு கஞ்ச ஐயிர்பலி கொண்டு
மகிழரி விண்டு மருகோனே-

வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற
வலம்வரு செம்பொன் மயில்வீரா ;

அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
மமலனு கந்த முருகோனே-

அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிக லங்கொள் பெருமாளே. (உ)

856.

எகினி னம்பழி நாடக மாடிகள்
மயிலெ னுஞ்செய லா*ரகி நேரல்குல்
இசையி டுங்குர லார்கட ணுளிகள் வெகுமோகம்-
எனவி ழுந்திடு வார்முலை மேல்துகி
லலைய வுந்திரி வாரெவ ராயினு
மிளகு கண்சுழல் வார்விலை வேசியர் வலைவீசும் ;
அகித வஞ்சக பாவனை யால்மயல்
கொடுவி ழுந்திட ராகமு நோய்பிணி
யதிக மூங்கொடு நாயடி யேனினி யுழலாமல்-
அமுத மந்திர ஞானெ பதேசமு
மருளி யன்புற வேமுரு காவென
அருள்பு குந்திட வேகழ லார்கழ லருள்வாயே ;
ககன விஞ்சையர் கோவென வேகுவ
டவுணர் சிந்திட வேகடல் தீவுகள்
கமற வெந்தழல் வேல்விடு சேவக முருகோனே-
கரிநெ டும்புலி தோலுடை யாரெனை
யடிமை கொண்டசு வாமிச தாசிவ
கடவு ளெந்தையர் பாகம் விடாவுமை யருள்பாலா ;
செகமு மண்டமு மோருரு வாய்நிறை
நெடிய அம்புயல் மேனிய னாரி
திருவு றைந்துள மார்பக னுர்திரு மருகோனே-
தினைவ னந்தனில் வாழ்வளி நாயகி
வளர்த னம்புதை மார்பழ காமிகு
திலக பந்தணை மாநகர் மேவிய பெருமாளே. (ஈ)

857.

சும்பமு நிகர்த்த கொங்கையை வளர்த்த
கொஞ்சுகிளி யொத்த மொழிமானர்-

---

* அகி=பாம்பு.

குங்குமம் பணிக்குள் வண்புழுகு விட்ட
கொந்தளகம் வைத்த மடவார்பால் ;
வம்புகள் விளைத்து நண்புகள் கொடுத்து
மங்கிடர கத்தில் மெலியாமல்-
வண்கயிலை சுற்றி வந்திடு பதத்தை
வந்தனைசெய் புத்தி தருவாயே ;
பம்புநதி யுற்ற பங்கொருச மர்த்தி
பண்டுளை தவத்தி லருள்சேயே-
பைம்புய லுடுத்த தண்டலை மிகுத்த
பந்தணை நகர்க்கு ளுறைவோனே ;
சம்புநிழ லுக்குள் வந்தவ ரிடத்த
சங்கரர்த மக்கு மிறையோனே-
சங்கணி காத்த ரும்பர்பய முற்ற
சஞ்சல மறுத்த பெருமாளே. (ச)

858.

கெண்டைகள்பொ ருங்கண்மங் கையர்மலர்க்
கொண்டைகள்கு லுங்கநின் றருகினிற்
கெஞ்சுபலு டன்குழைந் தமளியிற் கொடுபோய்வண்-
கெந்தபொடி யும்புனைந் துறவணைத்
தின்பவச னந்தருந் தொழிலடுக்
கின்றமய லின்படுங் துயரறப் ப்ரபைவீசுந் ;
தண்டைகள் கலின்கலின் கலினெனைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனைத்
தண்கொலு சுடன்சிலம் பசையவுட் பரிவாகிச்-
சந்ததமும் வந்திரும் பரிமளப்
பங்கய பதங்களென் கொடுவினைச்
சஞ்சல மலங்கெடும் படியருட் புரிவாயே ;
தொண்டர்கள் சரண்சரண் சரணெனைக்
கொம்புகள் குகுங்குகுங் குகுமெனத்
துந்துமி திமிர்திமிர் திமினெனைக் குறுமோசை-

சுந்தரி மணஞ்செயுஞ் சவுரியக்
கந்தகுற வஞ்சிதங் கருவனத்
துங்க மலை யும்புரந் தமரருக் கிடர்கூரும் ;
பண்டர்கள்பு யங்களும் பொடிபடக்
கண்டவப்ர சண்டகுஞ் சரியெழிற்
பைந்தருவ னம்புரந் தகழையிற் புடைசூழும்-
பந்திவரு மந்திசெண் பகமகிற்
சந்துசெறி கொன்றைதுன் றியவனப்
பந்தணையில் வந்திடுஞ் சரவணப் பெருமாளே. (நு)

859.

தேனி ருந்தஇத ழார்ப ளிங்குநகை
யார்கு ளிர்ந்தமொழி யார்ச ரங்கள்விழி
சீர்சி றந்தமுக வாரி ளம்பிறைய தென்புரூவர்-
தேன மர்ந்தகுழ லார்க ளங்கமுகி
னூர்பு யங்கழையி னூர்த னங்குவடு
சேர்சி வந்தவடி வார்து வண்டஇடை புண்டரீகம் ;
சூனி யங்கொள்செய லார ரம்பைதொடை
யார்ச ரண்கமல நேரி ளம்பருவ
தோகை சந்தமணி வாரு டன்கலவி யின்பமூடே-
சோக முண்டுவிளை யாடி னுங்கமல
பாத மும்புயமி ராறு மிந்துளபல்
தோட லங்கலணி மார்ப மும்பரிவ ளங்கொள்வேனே ;
ஓக மந்தசிவ ரூபி யஞ்சுமுக
நீலி கண்டிகலி யாணி விந்துவொளி
யோசை தங்குமபி ராமி யம்பிகைப யந்தவேளே-
ஓல மொன்றவுணர் சேனை மங்கையர்கள்
சேறு டன்குருதி யோட எண்டிசையும்
ஓது கெந்தருவர் பாட நின்றுநட னங்கொள்வேலா;
ஏனல் மங்கைசசி ஞான ரம்பையென
தாயி சந்த்ரமுக பாவை வஞ்சிகுற
மானெ டும்பர்தரு மான ணைந்தழகி லங்குமார்பா-

ஏர்க ரந்தையறு கோடு கொன்றைமதி
யாற ணிந்தசடை யார்வி ளங்குமொழி
லீறில் பந்தணநு லூர மர்ந்துவளர் தம்பிரானே. (கூ)

860.

மதியஞ்சத்திரு நிறைந்த மாமுக
மயிலஞ்சக்கிளி யினங்க ளாமென
மதுரஞ்செப்பிய மடந்தை மேனகை ரதிபோல-

மருவும்பொற்குட மெழுந்த மாமுலை
வளர்வஞ்சிக்கொடி நடந்த வாறென
வருதுங்கக்கட லணங்கு போல்பவர் தெருவூடே ;

நிதமிந்தப்படி யிருந்து வாறவர்
பொருள்தங்கப்*பணி கலந்து போய்வர
நெறிதந்திட்டவர் வசங்களா மென வுழலாதே-

நிதிபொங்கப்பல தவங்க ளாலுனை
மொழியும்புத்திகள் தெரிந்து நானுனை
நிகர்சந்தத்தமிழ் சொரிந்து பாடவு மருள்தாராய் ;

நதிமிஞ்சச்சடை விரிந்த நாயக
னுமையன்பிற்செயு மிகுந்த பூசனை
நலமென்றுட்குளிர் சிவன்ப ராபர னருள்பாலா-

நவகங்கைக்கிணை பகர்ந்த மா†மணி
நதிபங்கிற்குலவு‡கந்து காபுரி
நகர்பொங்கித் தழைய வந்து வாழ்வுறு முருகோனே;

கெதிதங்கத்தகு கணங்கள் வானவ
§ரிகஞ்சத்தவர் முகுந்தர் நாவலர்
இகபொங்கக் க்ருபை புரிந்து வாழ்கென அருள்நாதா-

---

* பணி=பண்ணி. † மணிநதி=மண்ணியாறு.
‡ கந்துகாபுரி=பந்தணை நல்லூர் ; கந்துகம்=பந்து.
§ அரி=இந்திரன்.

கெருவம்பற்றிகல் விளைந்த சூரொடு
தளமஞ்சப்பொரு தெழுந்து தீயுகள்
கிரவுஞ்சக்கிரி வகிர்ந்த வேலுள பெருமாளே. (எ)

திருப்பனந்தாள்.

[கும்பகோணத்துக்கு வடகிழக்கு 10-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

861.

கொந்தார் மைக்குழ லிந்தார் சர்க்கரை
யென்றே செப்பிய மொழிமாதர்-
கொங்கார் மூத்துவ டந்தா னிட்டத
னந்தா னித்தரை மலைபோலே;
வந்தே சுற்றிவ ளைந்தா லற்பம
னந்தா னிப்படி யுழலாமல்-
மங்கா நற்பொரு ளிந்தா வற்புத
மென்றே யிப்படி அருள்வாயே;
இந்தோ டக்கதிர் கண்டோ டக்கட
மண்டா நற்றவர் குடியோட-
எங்கே யக்கிரி யெங்கே யிக்கிரி
யென்றே திக்கென வருசூரைப்;
பந்தா டித்தலை விண்டோ டக்களம்
வந்தோ சைச்சில ரணகாளிப்-
பங்கா கத்தரு கந்தா மிக்கப
னந்தா ளுற்றருள் பெருமாளே.

திருவிடைமருதூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். கும்பகோணத்துக்கு வடகிழக்கு 5-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

862.

அறுகுதுனி பனியணைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய் அவரொரு பெரியோராய்-

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய் அவியுறு சுடர்போலே;

வெறுமிடிய ளெருதவசி யழுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்மூடுகி யவர்களொடு
சிறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகிலெடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிடா விதிதனே நினையாதே-

மினுகுமினு கெனுமுடல மறமூறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோனஞ
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலா யாளி வாயராய் மிடையுற வருநாளில்;

வறுமைகளு மூடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென வுமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய் மனையவள் மனம்வேறுய்-

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள் மனிதர்கள் பலபேச;

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் எரிதனி லிடும்வாழ்வே-

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமூ மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை *பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே. (க)

863.

இலகு குழைகிழிய வூடு போயுலவி
யடர வருமதன னூல ளாவியெதி
ரிளைஞ ருயிர்கவர வாசை நேர்வலைபொ திந்தலம்-

இனிமை கரைபுரள வாகு லாவுசரி
நெறிவு கலகலென வாசம் வீசுகுழ
லிருளின் முகநிலவு கூர மாணுடைய கன்றுபோக;

மலையு மிதழ்பருகி வேடை தீரவுட
லிறுக இறுகியது ராக போகமிக
வளரு மிளகுதன பார மீதினில்மு யங்குவேனை-

* "பரமசுக மதனையரு ளியசுருதி" என்றும் பாடம்.

மதுர கவியடைவு பாடி வீடறிவு
முதிர அரியதமி ழோசை யாகவொளி
வசன முடையவழி பாடு சேருமருள் தந்திடாதோ;
கலக அசுரர்கிளை மாள மேருகிரி
தவிடு படவுதிர வோல வாரியலை
கதற வரியரவம் வாய்வி டாபசித ணிந்தபோகக்-
கலப மயிலின்மிசை யேறி வேதகெறி
பரவு மமரர்குடி யேற நாளுமினிதா
கடிய கொடியவினை வீழ வேலைவிட வந்தவாழ்வே;
அலகை யுடனடம தாடு காதைசெவி
நிறைய மவுனவுரை யாடு நீபமழி
லடவி தனிலுறையும் வேடர் பேதையைம ணந்தகோவே-
அமணர் கழுவில்விளை யாட வாதுபடை
கருது குமரகுரு நாத நீதியுள
தருளு மிடைமருதில் மேவு மாமுனிவர் தம்பிரானே. (உ)

864.

படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமுஞ் * சம்புவும்
பரவரிய நிருபன்வர கன்சடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்-
பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு மூளரியொடு திங்களுங் கொன்றையும்
பரியகுமி ழுறுகுகன தும்பையுஞ் செம்பையுந் துன்றுமூலச்;
சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில்வருமுதலிகொந்தகன்கந்தனென் றுய்ந்துபாடித்-
தணியவொலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
பகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவறெறியி லொழுகிவழி பண்படுங் கண்கணஞ்
சிந்தியாதோ ;

* சம்பு=பிரமன்.

கடுஞ்சொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங் கண்டுசேரக்-
கழுகுகரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலிகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா ;
அடல்புனையு மிடைமருதில் வந்திணங் குங்குணம்
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி லுறைகுமரி சந்திலங் குந்தனந் தங்குமார்பா-
அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமும் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே. (ஈ)

865.

புழுகொடுபனி நீர்ச வாதுட னிருகரமிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையாலே-
பொதுவினில்விலை கூறு மாதர்கள் மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே;
மெழுகெனவுரு காவ னுர்தம தியகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதணை கொண்டுநாயேன்-
மிடைபடுமல மாயை யால்மிக கலவியஅறி வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்;
எழுகிரிநிலை யோட வாரிதி மொகுமொகுவென வீச மேதினி
யிடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக-
இமையவர்சிறை மீள நாய்நரி கழுகுகள்கக ராசன் மேலிட
ரணமுகசண பூத சேனைகள் நின்றுலாவச்;
செழுமதகரி லீல கோமள அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவளர் கந்தவேளே-
திரைபொருகரை மோது காவிரி வருபுனல்வயல் வாவி சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே. (ஊ)

திரிபுவனம்.

[இது திருவிடைமருதூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 2-மைல். தேவார வைப்பு ஸ்தலம்.]

866.

தனுதுதல் வெயர்வெழ விழிகுழி தாவலீ
சத்நிக் கச்சில தித்திக் கப்படும் அன்புபேசித்-
தழுவிய மகளிர்த முகிழ்முலை யுரமிசை
தைக்கச் சர்க்கரை கைக்கப் பட்டன தொண்டையூறல்;
கனவிலு துகர்தரு கலவியின் வலியிடை
கட்டுப் பட்டுயிர் தட்டுப் பட்டழி கின்றதோதான்-
கதிபெற விதியிலி மதியிலி யுனதிரு
கச்சுற் றச்சிறு சேச்சைப் பத்மப தம்பெறேனே;
மூனைமலி குவிசைதன் மருகமத புளகித
முத்தச் சித்ரத னத்துக் கிச்சித அம்புராசி-
முறையிட முதுகிசி சரர்திரள் முதுகிட
முட்டப் பொட்டெழ வெட்டிக் குத்தும டங்கல்வீரா;
அனுபவ மளிதரு நிகழ்தரு மொருபொருள்
அப்பர்க் கப்படி யொப்பித் தர்ச்சனை கொண்டநாதா-
அகிலமு மழியினு நிலைபெறு திரிபுவ
னத்துப் பொற்புறு சித்திச் சித்தர்கள் தம்பிரானே.

கும்பகோணம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

867.

இந்துகதிர்ச் சோருணப் பந்திருடுத் தூணெளிபட்
டின்பரசப் பாலமுதச் சுவைமேவு-

எண்குணமுற் றோனடனைச் சந்த்ரவொளிப் பீடகமுற்
றெந்தைநடித் தாடுமணிச் சபையூடே;
கந்தமெழுத் தோடுறுசிற் கெந்தமணப் பூவிதழைக்
கண்டுகளித் தேயமுதக் கடல்மூழ்கிக்-
கந்தமதித் தாயிரவெட் டண்டமதைக் கோல்புவனக்
கண்டமதைக் காணவெனக் கருள்வாயே;
திந்ததிமித் தீதகுடட் டுண்டுமிடட் டாடுடிட்
டிந்தமெனக் காளமணித் தவிலோசை-
சிந்தைதிகைத் தேழுகடற் பொங்கவரிச் சூர்மகுடச்
செண்டுகுலத் தாடுமணிக் கதிர்வேலா;
குந்தியரித் தாழ்துளபச் செந்திருவைச் சேர்களபக்
கொண்டல்நிறத் தோன்மகளோத் தரைமீதே-
கும்பிடகைத் தாளமெடுத் தம்பொனுருப் பாவைபுகழ்க்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே. (க)

868.

தும்பிமுகத் தானைபணைக் கொம்பதெனத் தாவிமயற்
றோந்தமெனப் பாயுமூலைக் கனமாதர்-
தும்பிமலர்ச் சோலைமுகிற் கங்குலிருட் காரினிறத்
தொங்கல்மயிற் சாயலெனைக் குழல்மேவிச் ;
செம்பொனுருக் கானமொழிச் சங்கிலொளிக் காமரகைச்
செங்கயலைப் போலும்விழிக் கணையாலே-
சிந்தைதகர்த் தாளுமிதச் சந்த்ரமுகப் பாவையர்த்தித்
திந்திமெனுற் றுடுமவர்க் குழல்வேனே;
தம்பிவரச் சாதிதிருக் கொம்புவரக் கூடவனச்
சந்தமயிற் சாய்விலகிச் சிறைபோகச்-
சண்டர்முடித் தூள்கள்படச் சிந்தியரக் கோர்கள்விழுத்
தங்கநிறத் தாள்சிறையைத் தவிர்மாயோன்;
கொம்புகுறிக் காளமடுத் திந்தமெனுற் றுடிநிரைக்
கொண்டுவளைத் தேமகிழச் சுதனீண-
கொஞ்சுசுகப் பாவையினைக் கொங்கைதனிற் றுவிமகிழ்க்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே. (உ)

869.

கெண்டைநே ரொத்தவிழி மங்கைமோ கக்கலவை
கெந்தவா சப்புழுகு மணநாறுங்-
கிம்புரீ சக்களப கொங்கையா னேச்சிறிது
கிஞ்சுகா ணப்பெருகி யடியேனும் ;
மண்டிமோ சக்கலவி கொண்டுகா மித்துருகி
வண்டனு கப்புவியி லுழலாமல்-
வந்துளா னப்பொருளி லொன்றுபோ தித்துனது
மஞ்சுதா ளேத்தினமு மருள்வாயே;
அண்டர்வா ழப்பிரமை சண்டமே ருக்கிரிய
ளேந்துவீ ழப்பொருத கதிர்வேலா-
*அஞ்சுவா யிற்பரமெ நெஞ்சிலு றித்தவசி
னன்புளா ரைச்சிறையி டசுரோரைக்;
கொண்டுபோய் †வைத்தகழு நெஞ்சிலே றக்கழுகு
கொந்தியா டத்தலையை யரிவோனே-
கொண்டல்சூ ழக்கழனி சங்குலா விப்பரவு
கும்பகோ ணத்திலுறை பெருமாளே. (ஈ)

870.

பஞ்சுசேர் நிர்த்தப் பதமாதர்-
பங்கமார் தொக்கிற் படியாமற்;
செஞ்சொல்சேர் சித்ரத் தமிழாலுன்-
செம்பொனுர் வத்தைப் பெறுவேனே;
பஞ்சபா ணத்தற் பொருதேவர்-
பங்கில்வாழ் சத்திக் குமரேசா;
குஞ்சரீ வெற்புத் தனநேயா-
கும்பகோ ணத்திற் பெருமாளே. (ச)

---

* அஞ்சு வாயில் = பஞ்சேந்திரிய வழிகளாலும்.

† வைத்த = கூர்மையாகிய.

871.

மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி-

வாரிருத னங்கள் பூணெடுகு லுங்க
மால்பெருகி நின்ற மடவாரைச்;

சாலைவழி வந்து போமவர்க ணின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்-

தாகமயல் கொண்டு மாலிருள முழ்ந்தி
சாலமிக நொந்து தவியாமற்;

காலையிலெ முழ்ந்து முமமெமொ ழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்-

காலமுமு ணர்ந்து ஞானவெளி கண்கள்
காணஅரு ளென்று பெறுவேனே;

கோலமுட னன்று சூர்படையின் முன்பு
கோபமுட னின்ற குமரேசா-

கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோணநகர் வந்த பெருமாளே. (நு)

872.

கறுத்த குஞ்சியும் வெளிறியெ முங்கொத்
துருத்த வெண்பலு மடையவி முந்துட்
கருத்து டன்திகழ் மதியும முண்டுச் சுருள்நோயாற்-

கலக்க முண்டல மலமுற *வெண்டிப்
பழுத்தெ மும்பிய முதுகுமு டங்கக்
கழுத்தில் வந்திளை யிருமலொ தும்கக் கொழுமேனி;

அறத்தி ரங்கியொர் தடிகைகொ டுங்கப்
பிடித்†தி டும்புறு மணவியு நிந்தித்
தடுத்த மைந்தரும் வசைகள்வி ளம்பச் சடமாகி-

---

* வெண்டி = நீர்வற்றி. † இடும்பு = அவமதிப்பு.

அழுக்க டைந்திடர் படுமூடல் பங்கப்
பிறப்பெ னுங்கட லழியலொ ழிந்திட்
டடுத்தி ருந்திரு வடிதனை யென்றுற் றிடுவேனே;

புறத்த லம்பொடி படமிக வுங்கட்
டறப்பெ ருங்கடல் வயிறுகு ழம்பப்
* புகட்ட ரங்கிய விரகது ரங்கத் திறல்வீரா-

பொருப்பு ரம்படர் கிழிபட வென்றட்
டரக்கர் வன்றலை நெரியநெ ருங்கிப்
புதைக்கு ரும்தசை குருதிகள் பொங்கப் பொரும்வேலா;

சிறுத்த தண்டைய மதலையொ ரஞ்சச்
சினத்து மிஞ்சரி திரிதரு குன்றத்
தினைப்பு னந்திகழ் குறமகள் கொங்கைக் கிரிமேவிச்-

செருக்கு நெஞ்சுடை முருகசி கண்டிப்
பரிச்ச மந்திடு குமரக டம்பத்
திருக்கு டந்தையி லுறைதரு கந்தப் பெருமாளே.()

873.

செனித்தி டுஞ்சல சாழலு மூழலும்
விளைத்தி டுங்குடல் பீறியு மீறிய
செருக்கொ டுஞ்சதை பீலியு மீளியு முடலூடே-

தெளித்தி டும்பல சாதியும் வாதியும்
இரைத்தி டுங்குல மேசில கால்படர்
சினத்தி டும்பவ நோயென வேயிதை யணைவோருங்;

கனைத்தி டுங்கலி காலமி தோவென
வெடுத்தி டுஞ்சுடு காடுபு காவென
கவிழ்த்தி டுஞ்சட மோபொடி யாய்விடு முடல்பேணிக்-

கடுக்க னுஞ்சில பூடண மாடைகள்
இருக்கி டுங்கலை யேபல வாசைகள்
கழித்தி டுஞ்சிவ யோகமு ஞானமு மருள்வாயே;

---

* புகட் டரங்கிய = புகவிட்டு அரங்கிய; அரங்கிய = அரக்கிய.

தனத்த னந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து துந்துமி தாரைவி ராணமொ டடல்பேரி-
சமர்த்த மொன்றிய தானவர் சேனைய
வளைத்து வெஞ்சின வேல்விடு சேவக
சமத்து ணர்ந்திடு மாதவர் பாலருள் புரிவோனே;
திணைப்பு னந்தனி லேமய லாலொரு
மயிற்ப தந்தனி லேசர ணுனென
திருப்பு யந்தரு மோகன மானினை யணைவோனே-
சிவக்கொ ழுஞ்சுட ரேபர ஞகிய
தவத்தில் வந்தருள் பாலக்ரு பாகர
திருக்கு டந்தையில் வாழ்முரு காசுரர் பெருமாளே. (எ)

சோமீச்சுரம்.

[இது சோமநாதர் கோயில். கும்பகோணத்தி லுள்ள சிவாலயங்களி லொன்று. தேவார் வைப்பு ஸ்தலம்.]

874.

கூரியகுழல் சரியமுகம் வேர்வாட வாசமுறு
களபமுலை புளகமெழ நேரான வேல்விழிகள்
கயல்பொருது செயலதென நீள்பூச லாடநல கனிவாயின்-
கமழ்குமுத அதரவிதழ் தேனூறல் பாயமிகு
கடலமுத முதவியிரு தோள்மாலை தாழவளை
கலகலென மொழிபதற மாமோக காதலது கரைகாணு;
தெரியணுகு மெழுகுபத மாய்மேவி மேவியினை
யிருவருட லொருவரென நாணுது பாயல்மிசை
யிளமகளிர் கலவிதனி லேமூழ்கி யாழுகினு மிமையாதே-
இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை யிராறு தோள்நிசையும்
இருபதமு மறுமுகமும் யானுனை ஞானமதை யருள்வாயே;

உரியதவ நெறியில்நம நாராய ணாயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமூட
ஞானதிறை வனெதனி லுள ளேதாய டாவெனும்
னுறுதூணில்-
உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிர
ஞகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
உவணபதி கெடியவனும் வேதாவும் நான்மறையு
முயர்வாக;
வரியளிக ளிசைமுரல வாகான தோகையிள
மயிலிடையில் நடனமிட ஆகாச மூடுருவ
வளர்கமுகின் விரிகுலைகள் பூணர மாகியிட மதில்சூழும்-
மருதரசர் படைவிடுதி வீடாக நாடிமிக
மழவிடையின் மிசையிவரு சோமீசர் கோயில்தனில்
மகிழ்வுபெற வுறைமுருக னேபேணு வானவர்கள்
பெருமாளே.

கொட்டையூர்.

[இது கும்பகோணத்துக்கு மேற்கு 2-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய தேவாரம் பெற்றது.]

ப. 875.

பட்டுமணிக் கச்சிறுகக் கட்டியவிழ்த் துத்தரியப்
பத்தியின்முத் துச்செறிவெற் பிணையா*மென்-
†பற்பமுகைக் குத்துமுலைத் தத்தையர்கைப் புக்குவசப்
பட்டுருகிக் கெட்ட வினைத் தொழிலாலே;
துட்டனெனக் கட்டனெனப் பித்தனெனப் ‡ப்ரட்டனெனச்
சுற்றுமறச் சித்தனெனத் திரிவேனைத்-
துக்கமறுத் துக்கமலப் பொற்பதம்வைத் துப்பதவிச்
சுத்தியணைப் பத்தரில்வைத் தருள்வாயே;

---

* என்=என்று சொல்லும். † பற்பம்=பத்மம்: தாமரை.
‡ ப்ரட்டன்=ப்ரஷ்டன்.

சுட்ட*பொருட் கட்டியின்மெய்ச் செக்கமலப் பொற்கொடியைத்
துக்கமுறச் †சொர்க்கமுறக் கொடியாழார்-
சுத்தரதத் திற்கொடுபுக் குக்கடுகித் தெற்கடைசிச்
சுற்றுவனத் திற்சிறைவைத் திடுதீரன் ;
கொட்டமறப் புற்றரவச் செற்றமறச் சத்தமறக்
குற்றமறச் சுற்றமறப் பலதோளின்-
கொற்றமறப் பத்துமுடிக் கொத்துமறுத் திட்டதிறற்
கொற்றர்பணிக் கோட்டைநகர்ப் பெருமாளே.

சிவபுரம்.

[கும்பகோணத்துக்குத் தென்கிழக்கு 3-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

876.

மினமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லே‡பதி மூணெழு வகையாலே -
வருசு கந்துய ராசையி லேயுழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனெநி னருள்சேராய் ;
செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி யெண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா-

---

*பொருட்கட்டி=பொற்கட்டி.

† சொர்க்க மூறக் கொடி யா ழார் சுத்த ரதம்=ஆகாயத்தை அளாவும் யாழ்க் (வீணை) கொடியைப் பெற்ற (ராவணனது) ரதம்.

‡பதிமூணு எழு வகை=(தத்துவம் கூ; இதிற் சிவதத்துவம் நு-நீங்க மற்ற) கூக-தத்துவக்கூட்டம்.

சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேறற
சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே ;

கனக னங்கையி லுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே-

கதற வென்றுடல் கீணவ ருரயி
ருதிர முஞ்சித ருதமு தாயுணு
கமல வுந்திய னுகிய மால்திரு மருகோனே ;

தினக ரன்சில வேளருள் மாதவர்
சுரர்க ளிந்திர னுரு காதிபர்
திசைமு கன்செழு மாமறை யோர்புக முழுகோனே-

*திரும டந்தையர் நாலிரு வோர்நிறை
அகமொ டம்பொனி லுலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக பெருமாளே.

திருநாகேச்சுரம்.

[ரெயில்வே ஸ்டேஷன். கும்பகோணத்துக்குக் கிழக்கு 4-மைல். மூவர் பாடலும் பெற்றது.]

877.

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னுணைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்-

ஆகாத னுமற் பொசித்த துட்டர்கள்
நானவு பாயச் சரித்ர துட்டர்க
ளாவேச நீரைக் குடித்த துட்டர்கள் தமியோர்சொங் ;

---

* திரு மடந்தையர் நா லிருவோர் = அஷ்ட லக்ஷ்மி.

கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள் குருசேவை-
கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப்பி றப்பினி லுழல்வாரே ;
வீசாவி சாலப் பொருப்பெ டுத்தெறி
பேராச வாரச் சமுத்தி ரத்தினில்
மீளாம லோடித் துரத்தி யுட்குறு மொருமாவை-
வேரோடு வீழத் தறித்த டுக்கிய
போராடு சாமர்த் தியத்தி ருக்கையில்
வேலாயு தாமெய்த் திருப்பு கழ்ப்பெறு வயலூரா ;
நாசாதி ப்ராரத் ததுக்க மிக்கவர்
மாயாவி காரத் தியக்க றுத்தருள்
ஞானோப தேசப் ப்ரகித்த சற்குரு வடிவான-
நாதாவெ னுமுற் றுதித்தி டப்புவி
யாதார மாய்கைக் குமுட்ட முற்றருள்
நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே.

கூந்தலூர்.

[இது கும்பகோணத்துக்குத் தென்கிழக்கு 7-மைல் தூரத்திலுள்ள 'பேணு பெருந்துறை' என்னுந் தலத்துக்கு அருகி லுள்ளது. தேவார வைப்பு ஸ்தலம்.]

878.

தூரையினில் வெகுவழி சார்ந்த மூடனே
வெறியனே நிறைபொறை வேண்டி டாமத
சடலனே மகிமைகள் தாழ்ந்த வீணனே மிகுகேள்வி-
தவநெறி தனைவிடு தாண்டு காலியை
யவமதி யதனில்பொ லாங்கு தீமைசெய்
சமடனே வலியஅ சாங்க மாகிய தமியேனை ;

விரைசெறி குழலியர் வீம்பு காரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழிவலை மகளிரொ டாங்கு கூடிய வினையேனை-

வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறு பரிவொடு வீழ்ந்து தாடொழ அருள்வாயே;

ஒருபது சிரமிசை போந்த ராவண
னிருபது புயமுட னேந்து *மேதியு
மொருகணை தனிலற வாங்கு மாயவன் மருகோனே-

உனதடி யவர்புக ழாய்ந்த நூலின
ரமரர்கள் முனிவர்க †ளீந்த பாலகர்
உயர்கதி பெறஅரு ளோங்கு மாமயி லுறைவோனே;

குரைகழல் பணிவொடு கூம்பி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்
குலமுழு தினவரு மாய்ந்து தூளெழ முனிவோனே-

கொடுவிட மதுதனை வாங்கி யேதிரு
மிடறினி லிருவென வந்து மீசுரர்
குருபர னெனவரு கூந்த லூருறை பெருமாளே.

திருச்சத்திமுத்தம்.

[கும்பகோணத்துக்குத் தென்மேற்கு 4-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய தேவாரம் பெற்றது.]

879.

கடகரிம ருப்பிற்க திர்த்துப்ர மிக்கமிக
வுரமிடெ ருக்கிப்பி டித்துப்பு டைத்துவளர்
கனகருட மொத்துக்க னத்துப்பெ ருத்தமணி யணியாலே-

---

* எதி=வாள். † ஈந்த பாலகர்=கொடுத்து ரக்ஷிப்போர்.

கதிர்த்திகழு செப்பைக்க திக்கப்ப தித்துமகிழ்
கமலமுகை பட்சத்தி ருத்திப்பொ ருத்துமூலை
கமழ்விரைகொள் செச்சைக்க லப்பைப்பொ தித்ததனே
விலகாது ;

கடுவைவடு வைப்பற்றி விற்சிக்க வைத்தசெய
லெனநிறமி யற்றிக்கு யிற்றிப்பு ரட்டிவரு
கயல்விழிவெ ருட்டித்து ரத்திச்செ விக்குழையின்
மிசைதாவுங்-

களமதன னுக்குச்ச யத்தைப்ப டைத்துலவு
கடுமொழிப யிற்றக்க ளைத்துக்கொ டிச்சியர்கள்
கஞியினில கப்பட்ட ழுத்தத்து யர்ப்படுவ தொழியேனே;

*அடலைபுனை முக்கட்ப ரற்குப்பொ ருட்சொலரு
மறைதனையு ணர்த்திச்செ கத்தைப்பெ ருத்தமயில்
அதனைமுன டத்திக்க ணத்திற்றி ரித்துவரு மழகோனே-

அபகடமு ரைத்தத்த மெத்தப்ப டைத்துலகி
லெளியரைம ருட்டிச்செ கத்திற்பி ழைக்கவெணு
மசடர்தமனத்தைக்கலக்கித்து ணித்தடரு மதிசூரா;

விடவரவ ணைக்குட்டு யிற்கொட்க்ரு பைக்கடவு
†ளுலவுமலை செப்பைச்செ விக்கட்செ றித்துமிக
விரைவிலுவ ணத்திற்சி றக்கப்ரி யத்தில்வரு
மொருமாயோன்-

விழைமருக கொக்கிற்ச முத்ரத்தி லுற்றவனே
நெறுநெறென வெட்டுக்ர சத்தித்த னிப்படைய
விடையவர்தி ருச்சத்தி முந்தத்தி னிற்குலவு பெருமாளே.

திருவலஞ்சுழி.

[கும்பகோணத்துக்கு மேற்கு 4-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள் திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

---

* அடலை=சம்பல். † உலவுமலை செப்பு=யானை கூப்பிட்டது.

880.

மகர குண்டல மீதே மோதுவ
வருண பங்கய மோபூ வோடையில்
மருவு செங்கழு நீரோ நீவிடு வடிவேலோ-
மதன்வி டுங்கணை யோவா ளோசில
கயல்கள் கெண்டைக ளோசே லோகொலே
மறலி யென்பவ ணோமா னுமது நுகர்கீத ;
முகர வண்டின மோவான் மேலெழு
நிலவ ருந்துபு ளோமா தேவருண்
முதிய வெங்கடு வோதே மாவடு வகிரோபார்-
முடிவெ னுங்கட லோயா தோவென
வுலவு கண்கொடு நேரே சூறைகொள்
முறைய றிந்தப சாசே போல்பவ ருறவாமோ ;
நிகரில் வஞ்சக மாரீ சாதிகள்
தசமு கன்படை கோடா கோடிய
நிருத ரும்பட வோரே வேவியெ யடுபோர்செய்-
நெடிய னங்கனு மாணை டேயெழு
பதுவெ ளங்கவி சேனு சேவித
நிருப னம்பர்கோ மான் ராகவன் மருகோனே ;
சிகர வும்பர்கள் பாகீ ராதிகள்
பிரமை யொன்றுபி ராசா தாதிகள்
சிவச டங்கமொ டீசா னுதிகள் சிவமோனர்-
தெளியு மந்த்ரக ளாபா யோகிக
ளயல்வி ளங்குசு வாமீ காமரு
திருவ லஞ்சுழி வாழ்வே தேவர்கள் பெருமாளே.

திருப்பழையாறை.

[கும்பகோணத்துக்குத் தென்மேற்கு 4-மைல் தூரத்தி லுள்ள பட்டீச்சுரத்திலிருந்து வடதளி, பம்பைப்படை என்னும் ஊர்கள் வழியாக 1-மைல் சென்றால் இந்தத் தலத்தை யடையலாம். திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

881.

தோடுற்றுக் காதள வோடிய
வேலுக்குத் தானிக ராயெழு
சூதத்திற் கரமணி ராசத விழியாலே-
சோடுற்றத் தாமரை மாமுகை
போலக்கற் பூரம ளாவிய
தோல்முத்துக் கோடென வீறிய மூலைமாலுர் ;
கூடச்சிக் காயவ ளூழிய
மேபற்றிக் காதலி னேடிய
கூளச்சித் தாளணை மூளணை விணையேணைக்-
கோப்பித்துத் தாயென நீயொரு
போதத்தைப் பேசவ தாலருள்
கோடித்துத் தானடி யேனடி பெறவேணும் ;
வேடிக்கைக் காரவு தாரகு
ணுபத்மத் தாரணி காரண
வீரச்சுத் தாமகு டாசமர் அடுதீரா-
வேலைக்கட் டாணிம காரத
சூரற்குச் சூரண வேல்விடு
வேழத்திற் சீரரு ளூறிய விளையோனே;
ஆடத்தக் காருமை பாதியர்
வேதப்பொற் கோவண வாடையர்
ஆலித்துத் தானரு ளூறிய முருகோனே-
ஆடப்பொற் கோபுர மேவிய
ஆடிக்கொப் பாமதிள் சூழ்பழை
யாறைப்பொற் கோயிலின் மேவிய பெருமாளே.

திருச்சக்கிரப்பள்ளி.

[தஞ்சாவூருக்கு வடகிழக்கு 11-மைல் தூரத்தி லுள்ள ஐயம் பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கு ½-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

882.

திட்டெ னப்பல செப்பைய டிப்பன
பொற்கு டத்தையு டைப்பன வுத்தர
திக்கி னிற்பெரு வெற்பைவி டுப்பன வதின்மேலே-

செப்ப வத்திம ருப்பையொ டிப்பன
புற்பு தத்தையி மைப்பி ழிழிப்பன
செய்த்த லைக்கம் லத்தைய லைப்பன திறமேய ;

புட்ட னைக்கக னத்தில்வி டுப்பன
சித்த முற்பொர விட்டுமு றிப்பன
† புட்ப விக்கன்மு டிக்குறி யுய்ப்பன இளநீரைப்-

புக்கு டைப்பன மூத்திரை யிட்டத
னத்தை விற்பவர் பொய்க்கல விக்குழல்
புத்தி யுற்றமை யற்றிட எப்பொழு தருள்வாயே ;

துட்ட நிக்ரக சத்திதரப்ர
லப்ர சித்தச மர்த்தத மிழ்த்ரய
துட்க ரக்கவி தைப்புக லிக்கர செனுநாமச்-

சொற்க நிற்கசொ லட்சண தட்சண
குத்த ரத்தில கத்திய னுக்கருள்
சொற்கு ருத்வம கத்துவ சத்வஷண் முகநாத ;

தட்ட றச்சமை யத்தைவ ளர்ப்பவ
ளத்தன் மூற்புகழ் செப்பவ நுக்ர
சத்து வத்தைய ளித்திடு செய்ப்பதி மயிலேறி-

சட்ப தத்திரள் மொய்த்தம ணப்பொழில்
மிக்க ரத்நம திற்புடை சுற்றிய
சக்கி ரப்பளி முக்கணர் பெற்றருள் பெருமாளே.

---

* புள் = சக்ரவாகப்புள். † புட்ப இக்கன் = மன்மதன்.

திருக்குரங்காடுதுறை.

[வட குரங்காடுதுறை என்னுந் தலம் கும்பகோணத்துக் கடுத்த ஐயம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து 4-மைல். வழியில் திருச்சக்கிரப்பள்ளி என்னும் ஸ்தலம் இருக்கின்றது. திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.

தென் குரங்காடுதுறை என்பது ஆடுதுறை. ரெயில்வே ஸ்டேஷன். திருவிடைமருதூருக்குக் கிழக்கு $2\frac{1}{4}$-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

883.

அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக் கவசத் திரடோளும்-

அலந்தாம மணித்திரளைப் புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வனைக் கடகச் சுடர்வேலுஞ்;

சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணத்த மலர்ப் புனைபாதந்-

திமிந்தோதி திமித்திமிதித் தனக்தான தனத்தனனத்
தினந்தோறு நடிப்பது மற் புகல்வேளே;

இலங்கேசர் வனத்துள்வனக் குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தா தலர்த் திருவைச் சிறை*மீளும்-

இளங்காள முகிற் கடுமைச் சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கான நடக்குமவற் கினியோனே;

குலங்கோடு படைத்தசுரப் பெருஞ்சேனை யழிக்கமுனைக்
கொடுந்தாரை வெயிற் கயிலைத் தொடும்வீரா-

கொழுங்காவின் மலர்ப்பொழிலிற் கரும்பாலை புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக் குமரப் பெருமாளே. (க)

* மீளும் = மீட்கும்.

884.

குறித்தநெஞ் சாசை விரகிகள்
நவிற்றுசங் கீத மிடறிகள்
குதித்தாங் கேறு நடனிகள் எவரோடுங்-
குறைப்படுங் காதல் குனகிகள்
அரைப்பணங் கூறு விலையினர்
கொலைக்கொடும் பார்வை நயனிகள் நகரேகை;
பொறித்தசிங் கார முலையினர்
வடுப்படுங் கோவை யிதழிகள்
பொருட்டினந் தேடு கபடிகள் தவர்சோரப்-
புரித்திடும் பாவ சொருபிகள்
உருக்குசம் போக சரசிகள்
புணர்ச்சிகொண் டாடு மருளது தவிர்வேலே;
நெறித்திருண் டாறு பதமலர்
மணத்தபைங் கோதை வகைவகை
நெகிழ்க்குமஞ் சோதி வனசரி மணவாளா-
நெருக்குமிந்த் ராதி யமரர்கள்
வளப்பெருஞ் சேனை யுடையவர்
நினைக்குமென் போலு மடியவர் பெருவாழ்வே;
செறித்தமந் தாரை மகிழ்புனை
மிகுத்ததண் சோலை வகைவகை
தியக்கியம் பேறு நதியது பலவாறுந்-
திரைக்கரங் கோலி நவமணி
கொழித்திடுஞ் சாரல் வயலணி
திருக்குரங் காடு துறையுறை பெருமாளே. (உ)

885.

சுடங்கள் நிரைத்தேறு தடங்கள் குறித்தார
வடங்கள் *அசைத்தார செயநீலங்-

---

* அசைத்தார = அசைத்தவர்களுடைய.

*குதம்பை யிடத்தேறு வடிந்த †குழைக்காது
குளிர்ந்த முகப்பார்வை வலையாலே;
உடம்பு மறக்கூனி நடந்து மிகச்சாறி
யுலந்து மிகக்கோலு மகலாதே-
‡உறங்கி விழிப்பாய பிறந்த பிறப்பேனு
முரங்கொள பொற்பாத மருள்வாயே;
விடங்கள் கதுப்பேறு §படங்க ணடித்தா ||ட
விதங்கொள் முதற்பாய லுறைமாயன்-
¶ விலங்கை முறித்தோடி யிடங்கள் வளைத்தேறு
விளங்கு முகிற்கான மருகோனே;
தடங்கொள் வரைச்சாரல் நளுங்கு மயிற்பேடை
தழங்கு மியற்பாடி யளிசூழத்-
தயங்கு வயற்சாரல் குரங்கு குதித்தாடு
$ தலங்க ளிசைப்பான பெருமாளே. (ஈ)

கா வலூர்.

[இது சோழநாட்டில் திட்டை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 6-மைல்.]

886.

மானே நேர்விழி யொத்தம டந்தையர்
பாலே நேர்மொழி யொத்துவி ளம்பியர்
வாச மாமலர் கட்டும ரம்பைய ரிருதோளும்-

---

* குதம்பை = காதுவளர்க்குந் தக்கை. † குழைக் காது = குழையைக் காதுகின்ற. ‡ "உறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி" — சுந்தரர் (திருவாரத்துறை) தேவாரம். § படங்கண் நடித்து ஆடு = காளிங்கனது படத்தின்மீது ஆடி நடிக்கும். || அவிதம் கொள் முதல் பாயல் = அத்தகைமைகொண்ட சர்ப்ப சயனம். ¶ வில் அங்கை முறித்து = வில்லைக் கையால் முறித்து. $ "தடங் கதலிக்கான" என்றும் பாடம்; கதலிக்கானம் என்பது திருக்கழுக்குன்றம்.

மார்பு மீதினு முத்துவ டம்புரள்
காம பூரண பொற்கட கம்பொர
வாரி நீலவ ளைக்கைபு லம்பிட அதுராகம்;
ஆன நேரில்வி தத்திர யங்களும்
நாண மாறம யக்கியி யம்பவும்
ஆடை சோரநெ கிழ்த்தியி ரங்கவும் உறவாடி-
ஆர வாரந யத்தகு ணங்களில்
வேளி னூல்கலை கற்றவி ளம்பவும்
ஆகு மோகவி பத்துமொ ழிந்துனை யடைவேனே;
சான கீதுய ரத்தில ருஞ்சிறை
போன போதுதொ குத்தசி னங்களில்
தாப சோபமொ ழிப்பதி லங்கையு மழிவாகத்-
தாரை மாஞெரு சுக்கிரி பன்பெற
வாலி வாகுத லத்தில்வி ழுந்திட
சாத வாளிதொ டுத்தமு குந்தனன் மருகோனே;
கான வேடர்சி றுக்குடி லம்புன
மீதில் வாழித ணத்திலு றைந்திடு
காவல் கூருகு றத்திபு ணர்ந்திடு மணிமார்பா-
காவு லாவிய பொற்கமு கின்திரள்
பாளை வீசம லர்த்தட முஞ்செறி
காவ ளூர்தனில் முத்தமி ழுந்தெரி பெருமாளே.

தஞ்சை.

[இது தஞ்சாவூர். ரெயில்வே ஸ்டேஷன். தேவார வைப்பு ஸ்தலம்.]

887.

அஞ்சன வேல்விழி மடமாதர்-
அங்கவர் மாயையி லேவேணு;
விஞ்சுறு மாவுன தடிசேர-
விம்பம தாயரு ளருளாதோ;

நஞ்சமு தாவுணு மரணுர்தம்-
நன்குமு ராவுமை யருள்பாலா;
தஞ்சென வாமடி யவர்வாழத்-
தஞ்சையில் மேவிய பெருமாளே. (க)

888.

அம்பு ராசியிற் கெண்டை சேலொளித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்-
அங்க ணூரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையிலுலே;
எம்பி ராணுனைச் சிந்தி யா*தொழித்
திந்த்ர சாலஇப் ப்ரமைதீர-
இங்கு வாவெனப் பண்பி லுலழைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய்;
கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல்குழற் கனமேருக்-
குன்று போல்முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா;
சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா-
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே. (உ)

889.

கந்த வார்குழல் கோதி மாலை யைப்பு னைந்து
மஞ்ச ளாலழ காக மேனி யிற்றி மிர்ந்து
கண்ட மாலிக ளான ஆணி முத்த ணிந்து தெருவூடே-
கண்ட பேரையெ லாம வாவி னிற்கொ ணர்ந்து
வண்ப யோதர பார மேரு வைத்தி றந்து
கண்க ளாகிய கூர வேலை விட்டெ றிந்து விலைகூறி;

---

* ஒழித்த இந்த்ரசால எனப்பிரிக்க.

வந்த பேர்களை யேகை யாலெ டுத்த ணைந்து
கொண்டு தேனித ழூறு வாயை வைத்த ருந்தி
மந்த மாருதம் வீசு பாய லிற்பு ணர்ந்து மயல்பூணு-

மங்கை மாரது போக தீவி னைப்ப வங்கள்
மங்கி யேகிடு மாறு ஞான வித்தை தந்து
வண்டு லாவிய சீப மாலை சற்றி லங்க வருவாயே ;

இந்த்ர தாருவை ஞால மீதி னிற்கொ ணர்ந்த
சங்க பாணிய ஞதி கேச வப்ர சங்க
னென்று வாழ்மணி மார்பன் வீர விக்ர மன்றன் மருகோனே-

எண்டி சாமுக வேலை ஞால முற்று மண்டு
கந்த தாருக சேனை நீறு பட்டொ துங்க
வென்று பேரொளி சேர்ப்ர காசம் விட்டி லங்கு
கதிர்வேலா ;

சந்த்ர சேகரி நாக பூஷ ணத்தி யண்ட
முண்ட நாரணி யால போஜ னத்தி யம்பை
தந்த பூரண ஞான வேள்கு றத்தி துஞ்சு மணிமார்பா-

சண்ட நீலக லாப வாசி யிற்றி கழ்ந்து
கஞ்சன் வாசவன் மேவி வாழ்ப திக்கு யர்ந்த
தஞ்சை மாநகர் ராஜ கோபு ரத்த மர்ந்த பெருமாளே. (சு)

சப்தஸ்தானம்.

[இவை திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்னும் ஏழு ஸ்தலங்கள். ஒவ்வொன்றும் பாடல் பெற்றது. திருவையாற்றுப் பஞ்சநதேஸ்வரர் ஏனைய ஆறு ஸ்தலங்களுக்கும் வந்து காக்ஷி கொடுத்தருளும் சப்த ஸ்தான உற்சவம் சித்திரை பௌர்ணமியிற் கொண்டாடப்படும்.]

890.

மருவு லாவிடு மோதிகு லப்பவர்
சமர வேலெனு நீடுவி ழிச்சியர்
மனதி லேகப ரூப ரத்தைய ரதிகேள்வர்-

மதன னூடுறழ் பூசலி டைச்சிய
ரிளைஞ ராருயிர் வாழுமு லச்சியர்
மதுர மாமொழி பேசுகு ணத்தியர் தெருமீதே ;

சருவி யாரையும் வாவென ழைப்பவர்
பொருளி லேவெகு ஆசைப ரப்பிகள்
சகல தோதக மாயைப டிப்பரை யணுகாதே-

சலச மேவிய பாதநி னைத்துமு
னருணை நாடதி லோதுதி ருப்புகழ்
தணிய வோகையி லோதள னக்கருள் புரிவாயே ;

அரிய கானக மேவுகு றத்தித
னிதணி லேசில நாளுமை னத்துட
னடவி தோறுமெ வாழியல் பத்தினி மணவாளா-

அசுரர் வீடுகள் தூறுபொ டிப்பட
உழுவர் சாகர மோடியொ ளித்திட
அமரர் நாடுபொன் மாரிமி குத்திட நினைவோனே;

திருவின் மாமக மார்பழ னப்பதி
அயிலு *சோறவை யாளுது றைப்பதி
திசையி னான்மறை தேடிய முற்குடி விதியாதிச்-

சிரமு மாநிலம் வீழ்தரு மேய்ப்பதி
பதும நாயகன் வாழ்பதி நெய்ப்பதி
திருவை யாறுட னேழுதி ருப்பதி பெருமாளே.

---

* சோறவை யாளு துறைப்பதி = திருச்சோற்றுத்துறை.
நான்மறை தேடிய முற்குடி = திருவேதிகுடி.
விதி சிரம் வீழ்தரு பதி = திருக்கண்டியூர்.
பதுமநாயகன் வாழ் பதி = திருப்பூந்துருத்தி.
நெய்ப்பதி = திருநெய்த்தானம்.

திருவையாறு.

[தஞ்சாவூருக்கு வடக்கு 7-மைல். சப்த ஸ்தானங்களுள் முதன்மையானது. மூவர் தேவாரமும் பெற்றது.]

891.

சரியு மாமுகி லோஇரு ளோகுழல்
சுடர்கொள் வாளிணை யோபிணை யோவிழி
சுரர்த மாரமு தோகுயி லோமொழி யிதழ்கோவை-
துவர தோஇல வோதெரி யாஇடை
துகளி லாவன மோபிடி யோநடை
துணைகொள் மாமலை யோமுலை தானென உரையாடிப் ;
பரிவி னுலெணை யாளுக நாளெரு
பழுதி லானென வாணுத லாரொடு
பகடி யேபடி யாவொழி யாஇடர் படுமாயப்-
பரவை மீதழி யாவகை ஞானிகள்
பரவு நீள்புக ழேயது வாமிரு
பரம வீடது சேர்வது மாவது மொருநாளே ;
கரிய மேனிய னுனிரை யாள்பவன்
அரிய ராவணை மேல்வளர் மாமுகில்
கனகன் மார்பது பீறிய வாளரி கனமாயக்-
கபடன் மாமுடி யாறுட னுலுமோர்
கணையி னுல்நில மீதுற வூறிய
கருணை மால்*கவி கோபக்ரு பாகரன் மருகோனே ;
திரிபு ராதிகள் தூளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
தெரிவை பாதியர் சாதியி லாதவர் தருசேயே-
சிகர பூதர நீறுசெய் வேலவ
திமிர †மோகர வீரதி வாகர
திருவை யாறுறை தேவக்ரு பாகர பெருமாளே.

---

* கவி கோப = வாலியைக் கோபித்த. † மோகரம் = மயக்கம்.

திருப்பூந்துருத்தி.

[தஞ்சாவூருக்கு வடமேற்கு 8-மைல். சப்தஸ்தானங்களுள் ஒன்று. திருநாவுக்கரசு ஸ்வாமிக ளுடைய தேவாரம் பெற்றது.]

892.

விங்கு பச்சிள நீர்போல் மாமூலி
சேர்ந்த ணைத்தெதிர் மார்பூ டேபொர
வேண்டு சர்க்கரை பால்தே னேரிதழ் உண்டுதோயா-
வேண்டு தைத்துகில் வேழுய் மோகன
வாஞ்சை யிற்களி கூரா வாள்விழி
மேம்ப டக்குழை மீதே மோதிட வண்டிராசி;
ஓங்கு மைக்குழல் சாதா வீறென
வீந்து புட்குரல் கூவா வேள்கலி
யோர்ந்தி டப்பல க்ரீடா பேதமு யங்குமாகா-
ஊண்பு ணர்ச்சியு மாயா வாதனை
தீர்ந்து னக்களி தாயே மாதவ
மூன்று தற்குமெய்ஞ் ஞான சாரம்வ ழங்குவாயே;
தாங்கு நிற்சார் சேஞ நீதரு
ணங்கு ருத்ரகு மாரா கோஷண
தாண்ட வற்கருள் கேகீ வாகன துங்கவீரா-
சாங்கி பற்சுகர் சீனு தீசுர
சேந்த்ரன் மெச்சிய வேலா போதக
சாந்த வித்தக ஸ்வாமீ நீபவ லங்கன்மார்பா;
பூங்கு ளத்திடை தாரா வோடன
மேய்ந்த செய்ப்பதி நாதா மாமலி
போன்ற விக்ரக சூரா ரீபதி ரண்டரூபா-
போந்த பத்தர்பொ லாநோய் போயிட
வேண்ட நூக்க போதா மேவிய
பூந்து ருத்தியில் வாழ்வே தேவர்கள் தம்பிரானே.

திருநெய்த்தானம்.

[இதுவும் சப்தஸ்தானங்களில் ஒன்று. திருவையாற்றுக்கு மேற்கு 1-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

893.

முகிலைக் காரைச் சருவிய குழலது
சரியத் தாமத் தொடைவகை நெகிழ்தர
முளரிப் பூவைப் பணிமதி தனிநிகர் முகம்வேர்வ-
முனையிற் காதிப் பொருகணை யினையிள
வடுவைப் பானற் பரிமள நறையிதழ்
முகையைப் போலச் சமர்செயு மிருவிழி குழைமோதத்;
துகிரைக் கோவைக் கனிதனி நிகரிதழ்
பருகிக் காதற் றுயரற வளநிறை
துணைபொற் றோளிற் குழைவுற மனமது களிகூரச்-
சுடர்முத் தாரப் பணியணி ம்ருகமத
நிறைபொற் பாரத் திளகிய முகிழ்முலை
துவளக் கூடித் துயில்கினு முனதடி மறவேனே;
குகுகுக் கூகுக் குகுகுகு குகுவென
திமிதித் தீதித் திமிதியென் முரசொடு
குழுமிச் சீறிச் சமர்செயு மசுரர்கள் களமீதே-
குழறிக் கூளித் திரளெழ வயிரவர்
குவிபக் கூடிக் கொடுவர அலகைகள்
குணலிட் டாடிப் பசிகெட அயில்விடு குமரேசா;
செகசெச் சேசெச் செகவென மூரசொலி
திகழச் சூழத் திருநட மிடுபவர்
செறிகட் காளப் பணியணி யிறையவர் தருசேயே-
சிகரப் பாரக் கிரியுறை குறமகள்
கலசத் தாமத் தனகிரி தழுவிய
* திருநெய்த் தானத் துறைபவ சுரபதி பெருமாளே.

* "திருநெய்த் தானச் சுரர்பதி பரவிய" என்றும் பாடம்.

திருப்பழூர்.

[திருவையாற்றுக்கு வடக்கு 10 - மைல். அரியலூருக்குப் போகும் பாதை. திருஞான சம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

894.

விகட சங்கட வார்த்தை பேசிகள்
அவல மங்கைய ரூத்தை நாமிகள்
விரிவ டங்கிட மாற்றும் வாறென வருவார்தம்-

விதம்வி தங்களே நோக்கி யாசையி
லுபரி தங்களே மூட்டி யேதம
இடும ருந்தொடு சோற்றை யேயிடு விலைமாதர்;

சகல மஞ்சன மாட்டி யேமுலை
படவ ளைந்திசை மூட்டி யேவரு
சரச இங்கித நேத்தி யாகிய சுழலாலே-

சதிமு ழங்கிட வாய்ப்ப ணைதுய
மலர வுந்தியை வாட்டி யேயிடை
தளர வுங்கணை யாட்டும் வேகிய ருறவாமோ;

திகிரி கொண்டிரு ளாக்கி யேயிரு
தமையர் தம்பியர் மூத்த தாதையர்
திலக மைந்தரை யேற்ற சூரரை வெகுவான-

செனம டங்கலு மாற்றி யேயுடல்
தகர அங்கவர் கூட்டை யேநரி
திருகி யுண்டிட ஆர்த்த கூளிக ளடர்பூமி;

அகடு துஞ்சிட மூட்டு பாரத
மூடிய அன்பர்க ளேத்த வே*யரி
யருளு மைந்தர்கள் வாழ்த்து மாயவன் மருகோனே-

---

* அரி அருளு மைந்தர் = தரும வீம அருச்சுனர் ;
அரி = இயமன்: வாயு: இந்திரன்.

அமர ரந்தணர் போற்ற வேகிரி
கடல திர்ந்திட நோக்கு மாமயி
லழகொ டும்பழ வூர்க்குள் மேவிய பெருமாளே.

பெரும்புலியூர்.

[இது திருவையாற்றுக்கு மேற்கு 2½-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

895.

சதங்கைமணி வீரச் சிலம்பினிசை பாடச்
சரங்களொளி வீசப் புயமீதே-
தனங்கள்குவ டாடப் படர்ந்தபொறி மால்பொற்
சரங்கண்மறி காதிற் குழையாட;
இதங்கொள்மயி லேரொத் துகந்தநகை பேசுற்
றிரம்பையழ கார்மைக் குழலாரோ-
டிழைந்தமளி யோடுற் றழுந்துமெனை நீசற்
றிரங்கியிரு தாளைத் தருவாயே;
சிதம்பரகு மாரக் கடம்புதொடை யாடச்
சிறந்தமயில் மேலுற் றிடுவோனே-
சிவந்தகழு காடப் பிணங்கள்மலை சாயச்
சினந்தசுரர் வேரைக் கலைவோனே;
பெதும்பையெழு கோலச் செயங்கொள்சிவ காமிப்
ப்ரசண்டஅபி ராமிக் கொருபாலா-
பெரும்புனம தேகிக் குறம்பெண்ணெடு கூடிப்
பெரும்புலியூர் வாழ்பொற் பெருமாளே.

கெடுங்களம்.

[திரிசிரப்பள்ளிக்கு அடுத்த திருவெறும்பியூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு 7-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

896.

பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனவ ரிந்துபொடி யங்கமாகிப்-
பண்டறவு டன்பழைய தொண்டர்களு டன்பழகி
பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக் ;
குஞ்சரமு கன்குணமொ டந்தவனம் வந்துலவ
கொஞ்சியசி லம்புகழ்ல் விந்துநாதங்-
கொஞ்சமயி லின்புறமெல் வந்தருளி யென்கவலை
கொன்றருள்நி றைந்தகழ லின்றுதாராய் ;
எஞ்சியிடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொங்கைகர முங்கொளாமல்-
* எந்தவுடை சிந்தபெல மிஞ்சியமு தம்புரள
இந்துதுத லும்புரள கங்குல்மேகம் ;
அஞ்சுமள கம்புரள மென்குழைக ளும்புரள
அம்பொனுரு மங்கைமண முண்டபாலா-
அன்பர்குல வுந்திருநெ டுங்களவ ளம்பதியி
லண்டரய னும்பரவு தம்பிரானே.

குறட்டி.

[புதுக்கோட்டைக்குக் கிழக்கு 5-மைல்.]

பு. **897.**

கூரிய கடைக்க ணலு மேருநிக ரொப்ப தான
கோடதனில் மெத்த வீறு மூலியாலுங்-
கோபவத ரத்தி னலு மேவிடு விதத்து ளால
கோலவுத ரத்தி னலு மொழியாலும் ;

---

* எந்த = மீற.

சீரிய வலீக்கை யாலு மேகலீ நெகிழ்ச்சி யேசெய்
சீருறு நகுப்பி னலும் விலீமாதர்-
சேறுதனி னித்த மூழ்கி நாளவ மிறைத்து மாயை
சேர்தரு முளத்த னாகி யுழல்வேனே ;
தாரணி தனக்குள் வீறி யேசமர தட்ட னன
ராவணன் மிகுத்த தாளை பொடியாகச்-
சாடுமுவ ணப்ப தாகை நீடுமுகி லொத்த மேனி
தாதுறை புயத்து மாயன் மருகோனே ;
வாரண மூரித்து மாதர் மேகலீ வலீக்கை நாண
மாபவி முதற்கொ ணுதன் முருகோனே-
வாருறு தனத்தி னர்கள் சேருமதி னுப்ப ரீகை
வாகுள குறட்டி மேவு பெருமாளே. (க)

898.

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு முளநோய்கள்-
நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை தசைதோல்சீ ;
பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை நரிநாய்பேய்-
பாறெடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி லுழல்வேனே ;
நாரணி யறத்தி னரி ஆறுசம யத்தி பூத
நாயக ரிடத்து காமி மகமா யி-
நாடக நடத்தி கோல நீலவரு ணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி திரிசூலி ;
வாரணி மூலச்சி ஞான பூரணி கலீச்சி நாக
வாணுத லளித்த வீர மயிலோனே-
மாடமதில் முத்து மேடை கோபுர மணத்த சோலீ
வாகுள குறட்டி மேவு பெருமாளே. (உ)

அத்திப்பட்டு.

[புதுக்கோட்டைக் கடுத்த கந்தர்வ கோட்டையி லிருந்து 7-மைல். தென் ஆற்காடு ஜில்லா திருவெண்ணெய் நல்லூர், குறிஞ்சிப்பாடி ஆகிய சப்டிஸ்டிரிக்டுக்களிலும், வடஆற்காடு ஜில்லா செங்கம் சப்டிஸ்டிரிக்டிலும், செங்கற்பட்டுஜில்லா சைதாப் பேட்டை சப்டிஸ்டிரிக்டிலும் 'அத்திப்பட்டு' எனப் பெயரிய கிராமங்கள் உள்ளன.]

899.

கருகியறி வகலவுயிர் விட்டுக் கிக்கிளைஞர்
கதறியழ விரவுபறை மூட்டக் கொட்டியிட
கனகமணி சிவிகையில மர்த்திக் கட்டையினி
லிடைபோடாக்-

கரமலர்கொ டரிசியினை யிட்டுச் சித்ரமிகு
கலையையுரி செய்துமறைகள் பற்றப் பற்றுகனல்
கணகணென எரியவுடல் சுட்டுக் கசுபியவர் வழியேபோய்;

மருவுபுனல் முழுகிமனை புக்குத் துக்கமறு
மனிதர்தமை யுறவுநிலை சுட்டுச் சுட்டியுற
மகிழ்வுசெய்து அழுதுபட வைத்தத் துட்டன் மதன்
மலராலே-

மயல்விளைய அரிவையர்கள் கைப்பட் டெய்த்துமிக
மனமழியு மடிமையைநி னைத்துச் சொர்க்கபதி
வழியையிது வழியெனவு ரைத்துப் பொற்கழல்கள்
தருவாயே ;

பொருவின்மலி யரையனருள் பச்சைச் சித்ரமயில்
புரமெரிய இரணியத னுக்கைப் பற்றியியல்
புதியமுடு கரியதவ முற்றுக் கச்சியினி லுறமேவும்-

புகழ்வனிதை தருபுதல்வ பத்துக் கொத்துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக் கைக்கடவுள்
பொறியரவின் மிசைதுயிலு சுத்தப் பச்சைமுகில்
மருகோனே ;

அரியமர கதமயிலி லுற்றுக் கத்துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக் கட்டையற
அமர்பதி யினியகுடி வைத்தற் குற்றமிகு மிளையோனே-
அருணமணி வெயில்பரவு பத்துத் திக்குமிகு
மழகுபொதி மதர்மகுட தத்தித் தத்திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப் பட்டிலுறை
பெருமாளே.

அத்திக்கரை.

[புதுக்கோட்டையைச் சார்ந்த அத்திப்பட்டுக்கு 3-மைலில் 'அத்திக்கரை' என்னும் ஓரூர் உண்டு.]

900.

தொக்கைக்கழு விப்பொற் றகுமுடை
சுற்றிக்கல னிட்டுக் கடி-தரு
சொக்குப் *புலி யப்பிப் புகழுறு களியாலே-
சுத்தத்தைய கற்றிப் பெரியவர்
சொற்றப்பிய கத்தைப் புரிபல
சுற்றத்துட னுற்றிப் புவியிடை யலையாமல்;
முக்குற்றம கற்றிப் பலகலை
கற்றுப்பிழை யற்றுத் தனையுணர்
முத்தர்க்கடி மைப்பட் டிலகிய அறிவாலே-
முத்தித்தவ சுற்றுக் கதியுறு
சத்தைத்தெரி சித்துக் கரையகல்
முத்திப்புண ரிக்குட் புகவர மருள்வாயே;
திக்கெட்டும டக்கிக் கடவுள
ருக்குப்பணி கற்பித் தருளறு
சித்தத்தொட டுத்துப் படைகொடு பொருசூர்-

---

* புலி=நால்வகைச் சாந்தி லொன்று.

செச்சைப்புய மற்றுப் புகவொரு
சத்திப்படை விட்டுச் சுரர்பதி
சித்தத்துயர் கெட்டுப் பதிபெற அருள்வோனே ;
அக்கைப்பூனை கொச்சைக் குறமக
ளச்சத்தையொ ழித்துக் கரிவரும்
† அத்தத்தி லழைத்துப் பரிவுட னணைவோனே-
அப்பைப்பிறை யைக்கட் டியசடை
அத்தர்க்கரு மைப்புத் திரவிரி
அத்திக்கரை யிச்சித் துறைதரு பெருமாளே.

கந்தனூர்.

[புதுக்கோட்டைக்குத் தெற்கு 3-மைல்.]

901.

விந்துபே தித்தவடி வங்களா யெத்திசையு
மின்சரா சர்க்குலமும் வந்துலாவி-
விண்டுபோய் விட்டவுடல் கிந்தைதா னுற்றறியு
மிஞ்சநீ விட்டவடி வங்களாலே ;
வந்துநா யிற்கடைய னெஞ்துளூ னப்பதவி
வந்துதா இக்கணமெ யென்றுசூற-
மைந்தர்தா விப்புகழ தந்தைதா யுற்றுருகி
வந்துசே யைத்தழுவல் கிந்தியாதோ ;
அந்தகா ரத்திலிடி யென்பவாய் விட்டுவரு
மங்கிபார் வைப்பறையர் மங்கிமாள-
அங்கைவேல் விட்டருளி யிந்த்ரலோ கத்தின்மகி
ழண்டசே றக்கிருபை கொண்டபாலா ;

---

* அக்கு = சங்குமணி. † அத்தம் = சிறுவழி.

எந்தனு விக்குதவு சந்த்ரசேர் வைச்சடைய
மெந்தைபா கத்துறையு மந்தமாது-
எங்குமாய் நிற்குமொரு கந்தனூர் சத்திபுக
ழெந்தைபூ சித்துமகிழ் தம்பிரானே.

வாலிகொண்டபுரம்.

[திருச்சிராப்பள்ளியிலிருந்து 4-மைல் சென்று திருவானைக் காவைச் சேர்ந்து, அங்கிருந்து 28-மைல் சென்று பெரம்பலூரைச் சேர்ந்து, அங்கிருந்து 8-மைல் சென்றால் இத்தலத்தை யடையலாம்.]

902.

யெறும்புநரி நாய்க ணங்கழுகு
காக முண்பவுட லேசு மந்துஇது
எல்வ தென்றுமத மேமொ ழிந்துமத *வும்பல்போலே-
எது மென்றனிட கோலெ னும்பரிவு
மேவி நம்பியிது போது மென்கசில
ரேய்த னங்கள்தனி வாகு சிந்தைவச னங்கள்பேசிச்;
சீத தொங்கழை காவ ணிந்துமணம்
வீச மங்கையர்க ளாட வெண்கவரி
சீற கொம்புகுழ லூத தண்டிகையி லந்தமாகச்-
சேர்க னம்பெரிய வாழ்வு கொண்டுழலு
மாசை வெந்திடவு ஞசை மிஞ்சிசிவ
சேவை கண்டுனது பாத தொண்டனென அன்புதாராய்;
சூதி ருந்தவிடர் மேயி ருண்டகிரி
சூரர் வெந்துபொடி யாகி மங்கிவிழ
சூரி யன்புரவி தேர்க டந்துருடு பங்கிஞைடச்-
சோதி யந்தபிர மாபு ரந்தரனு
மாதி யந்தமுதல் தேவ ருந்தொழுது
சூழ மன்றில்நட மாடு மெந்தைமுத லன்புகூர;

---

* உம்பல் = யானை.

வாது கொண்டவுணர் மாள செங்கையயி
லேவி யண்டர்குடி யேற விஞ்சையர்கள்
மாதர் சிந்தைகளி கூர நின்றுநட னங்கொள்வோனே-
வாச கும்பதன மானை வந்துதினை
காவல் கொண்டமுரு காள ணும்பெரிய
வாலி கொண்டபுர மேய மர்ந்துவளர் தம்பிரானே.

திருமாந்துறை.

[திரிசிராப்பள்ளிக்கடுத்த திருவானைக்காவுக்கு வடகிழக்கு 10-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது.]

903.

ஆங்குடல்வ ளைந்து மீங்குபல்நெ கிழ்ந்து
ஆய்ஞ்சுதளர் சிந்தை தடுமாறி-
ஆர்ந்துளக டன்கள் வாங்கவும றிந்து
ஆண்டுபல சென்று கிடையோடே;
ஊங்கிருமல் வந்து வீங்குகுடல் நொந்து
ஓய்ந்துணர்வ ழிந்து உயிர்போமுன்-
ஓங்குமயில் வந்து சேண்பெறஇ சைந்து
ஊன்றியப தங்கள் தருவாயே;
வேங்கையுமு யர்ந்த தீம்புனமி ருந்த
வேந்திழையி னின்ப மணவாளா-
வேண்டுமவர் தங்கள் பூண்டபத மிஞ்ச
வேண்டியப தங்கள் புரிவோனே;
மாங்கனியு டைந்து தேங்கவயல் வந்து
மாண்புநெல்வி ளைந்த வளநாடா-
மாந்தர்தவ ரும்பர் கோன்பரவி நின்ற
மாந்துறைய மர்ந்த பெருமாளே.

வ ய லூ ர்.

[இது திருச்சிராப்பள்ளிக்குத் தென்மேற்கு 6-மைல். வழியில் $2\frac{1}{2}$-மைலில் 'உய்யக்கொண்டான்' என வழங்குந் 'திருக்கற்குடி' என்னுந் தேவாரமும் திருப்புகழும் பெற்ற ஸ்தலம் இருக்கின்றது. வயலூருக்கு 'மணப்பாறை' ரெயில்வே ஸ்டேஷனி லிருந்தும் போகலாம். இந்நூலாசிரியர் திருப்புகழ் நித்தம் பாடும் அன்பை வயலூரில் அநுக்கிரகிக்கப் பெற்றனர். 105-ஆம் பாடலைப் பார்க்க.]

பு. 904.

அரிமரு கோனே நமோவென் றறுதியி லானே நமோவென்
றறுமுக வேளே நமோவென் றுனபாதம்-
அரகர சேயே நமோவென் றிமையவர் வாழ்வே நமோவென்
றருணை சொரூபா நமோவென் றுளதாசை;
பரிபுர பாதா சுரேசன் றருமக ஞதா வராவின்
பகைமயில் வேலா யுதாடம் பரநாளும்-
பகர்தலி லாதாளே யேதுஞ் சிலதறி யாவேழை நானுன்
பதிபசு பாசோப தேசம் பெறவேணும்;
கரதல சூலாயு தாமுன் சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் டியுமாடக்-
கரிபரி மேலேறு வானுஞ் செயசெய சேனு பதீயென்
களமிசை தானேறி யேயஞ் சியசூரன்;
குரல்விட நாய்பேய்கள் பூதங் கழுகுகள் *கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும் பலதோளா-
குடதிசை வாராழி போலும் படர்ந்தி காவேரி சூழுங்
குளிர்வய லூரார மேவும் பெருமாளே. (க)

---

* கோமாயு=நரி.

905.

ஆரமுலை காட்டி மாரநிலை காட்டி
யாடையணி காட்டி அதுராக-
ஆலவிழி காட்டி ஓசைமொழி காட்டி
ஆதரவு காட்டி எவரோடும்;
ஈரநகை காட்டி நேரமிகை காட்டி
யேவினைகள் காட்டி யுறவாடி-
ஏதமயல் காட்டு மாதர்வலை காட்டி
யீடழிதல் காட்ட லமையாதோ;
வீரவப ராட்டு சூரர்படை காட்டில்
வீழனலை யூட்டி மயிலூர்தி-
வேலையுறை நீட்டி வேலைதனி லோட்டு
வேலைவிளை யாட்டு வயலூரா;
சேரமலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சிலிகுற வாட்டி மணவாளா-
தேசுபுகழ் நீட்டி யாசைவரு கோட்டி
தேவர்சிறை மீட்ட பெருமாளே. (உ)

906.

இகல்கடின மூகபடவி சித்ரத்து திக்கைமத
மத்தக்க ளிற்றையெதிர்
புளகதன மிளகஇனி தெட்டிக்க ழுத்தொடுகை
கட்டிப்பி ணித்திறுகி
யிதழ்பொதியி னமுதமுறை மெத்தப்பு சித்துருகி
முத்தத்தை யிட்டுநக தந்தமான-
இடுகுறியும் வரையையுற நெற்றித்த லத்திடையி
லெற்றிக்க லக்கமுற
இடைதுவள வுடைகழல இட்டத்த ரைப்பையது
தொட்டுத்தி ரித்துமிக
இரணமிடு மூரணர்விழி யொக்கக்க றுத்தவிழி
செக்கச்சி வக்கவலை செங்கைசோர;

அகருவிடு ம்ருகமதம ணைத்துக்க னத்தபல
கொத்துக்கு ழற்குலைய
மயிர்ப்புறவு குயில்ஞிமி று குக்கிற்கு ரற்பகர
நெக்குக்க ருத்தழிய
அமளிபெரி தமளிபட வக்கிட்டு மெய்க்கரண
வர்க்கத்தி னிற்புணரு மின்பவேலை-

அலையின்விழி மணியின்வலை யிட்டுப்பொ ருட்கவர
கட்டுப்பொ றிச்சியர்கள்
மதனகலை விதனமறு வித்துத்தி ருப்புகழை
யுற்றுத்து திக்கும்வகை
அபரிமித சிவஅறிவு சிக்குற்று னர்ச்சியினில்
ரசுவித்த ளித்தருள்வ தெந்தநாளோ;

திகுடதிகு தகுடதக தித்குத்தி குத்திகுட
தத்தித்த ரித்தகுட
செகணசெக சகணசக செக்கச்செ கச்செகண
சத்தச்ச கச்சகண
திகுதிகுத்தி தகுதகுத்த தித்குத்தி குத்திகுத்தி
தக்குத்த குத்தகுத்த திங்குதீதோ-

திரிரிதிரி தரிரிதரி தித்தித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி
டிகுடடகு டகுடடிகு டிட்டிடடி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட
தெனதிமிர்த தவில்மிருக டக்கைத்தி ரட்சலிகை
பக்கக்க ணப்பறைத வண்டைபேரி;

வகைவகையின் மிகவதிர வுக்ரத்த ரக்கர்படை
பக்கத்தி னிற்சரிய
எழுதுதுகில் முழுதுலவி பட்டப்ப கற்பருதி
விட்டத்த மித்தகென
வருகுறவி பெருகுகுரு திக்குட்கு ளித்துழுது
தொக்குக்கு னிப்புவிட வென்றவேலா-

வயலிஙகர் பயில்குமர பத்தர்க்க நுக்ரகவி
சித்ரப்ர சித்தமுறு
அரிமருக அறுமுகவ முக்கட்க ணத்தர்துதி
தத்வத்தி றச்சிகர
வடகுவடில் நடனமிடு மப்பர்க்கு முத்திஙெறி
தப்பற்று ரைக்கவல தம்பிரானே. (ஙூ)

907.

இலகு முலைவிலை யசடிகள் கசடிகள்
கலைகள் பலவறி தெருளிகள் மருளிக
ளெயிறு கடிபடு முதடிகள் பதடிகள் எவரோடும்-
இனிய ஙயமொழி பழஙிக ளழஙிகள்
மடையர் பொருள்பெற மருவிகள் சருவிகள்
யமனு மிகையென வழிதரு முழிதரும் விழிவாளால்;
உலக மிடர்செயு நடலிகள் மடலிகள்
சிலுகு சிலரொடு புகலிக ளிகலிக
ளுறவு சொலவல துரஙிகள் விரஙிகள் பிறைபோலே-
உகிர்கை குறியிடு கமுஙிகள் சமுஙிகள்
பகடி யிடவல கபடிகள் முகடிகள்
உணர்வு கெடும்வகை பருவிக ளுருவிக ளுறவாமோ;
அலகை புடைபட வருவன பொருவன
கலக கணஙிரை ஙுவன தகுவன
அசுரர் தசைவழி நிமிர்வன திமிர்வன பொடியாடி-
அலரி குடதிசை யடைவன குடைவன
தரும வஙிதையு மஙிழ்வன புகழ்வன
அகில புவனமு மரகர கரவென அமர்வேள்வி;
திலக நுதலுமை பணிவரு செயமகள்
கலையி னடமிட வெரிவிரி முடியினர்
திரள்ப லுயிருடல் குவடுக ளெனநட மயிலேறிச்-
சிறிது பொழுதினி லயில்விடு குருபர
அறிவு நெறியுள அறுமுக இறையவ
த்ரிசிர கிரியயல் வயலியி லினிதுறை பெருமாளே.()

908.

என்னுல் பிறக்கவும் என்னு லிறக்கவும்
என்னுல் துதிக்கவும் கண்களாலே-
என்னு லழைக்கவும் என்னுல் நடக்கவும்
என்னு லிருக்கவும் பெண்டிர்வீடு;
என்னுல் சுகிக்கவும் என்னுல் முசிக்கவும்
என்னுல் சலிக்கவும் தொந்தநோயை-
என்னு லெரிக்கவும் என்னுல் நினைக்கவும்
என்னுல் தரிக்கவும் இங்குநானுர்;
கன்னு ருரித்தஎன் மன்னு எனக்குநல்
கர்ணு மிர்தப்பதம் தந்தகோவே-
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
* கண்ணு டியிற்றடம் கண்டவேலா;
மன்னுன தக்கனை முன்னுள்மு டித்தலை
வன்வாளி யிற்கொளும் தங்களுபன்-
மன்னு குறத்தியின் மன்னு வயற்பதி
மன்னு முவர்க்கொரு தம்பிரானே. (நு)

909.

கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுகிர்தழ் எழிலாகும்-

---

* திருமுருகன்பூண்டி யென்னுந் தலத்தில் முருகபிரான் வேல் கொண்டு தடங் (தீர்த்தங்) கண்டதைத் திருமுருகன்பூண்டிப் புராணம் உபதேசச் சருக்கம்-ஈஈ-ஆம் பாடலிலும், தீர்த்தச் சருக்கம்-ச, நு-ஆம் பாடல்களிலுங் காண்க.

தோட்டு நாண்மலர்க் கடுக்கையந் தொங்கலார்க் கன்பா
யாட்ட நீர்த்தட மண்மையி லின்றிய வதனுல்
நீட்டு பொற்றிருக் கைத்திரு வேலையக் நிலத்தில்
நாட்டி னுனிலங் கீண்டது நாகமுண் ணுடுங்க. (ஈஈ)

பழுத்த கொற்றவேற் படைமிகு விரைவினுற் பாய்ந்த
வழித்த லத்திடை வந்ததோர் மாசறு தீர்த்தம். (ஈச)

கரிபோற் கிரிமூலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியரை யெனவாகும்;
உடல்காட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கெறுவித நடையாலும்-
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனே;
குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப் பலஅல கைகள்பேய்கள்-
கொலைபோர்க் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக வுயர்தாழ்;
மடல்கிற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே-
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே. (சு)

பு. 910.

சுமலத் தேகு லாவு மரிவையை
நிகர்பொற் கோல மாதர் மருள்தரு
கலகக் காம நூலை முழுதுண ரிளைஞோர்கள்-
கலவிக் காசை கூர வளர்பரி
மளகற் பூர தூம கனதன
கலகத் தாலும் வானி னைசையுமி னிடையாலும்;
விமலச் சோதி ரூப இமகர
வதனத் தாலு நாத முதலிய
விரவும் *றூறு கால்கள் சுழலிருள் குழலாலும்-
வெயிலெப் போதும் வீசு மணிவளை
அணிபொற் றோள்க ளாலும் வடுவகிர்
விழியிற் பார்வை யாலு மினியிடர் படுவேனே;

* ஆறு கால்கள் = வண்டுகள்.

சமரிற் பூதம் யாளி பரி*பிணி
கனகத் தேர்கள் யானை யவுணர்கள்
தகரக் கூர்கொள் வேலை விடுதிற லுருவோனே-
சமுகப் பேய்கள் வாழி யெனவதிர்
புகழக் கானி லாடு பரிபுர
சரணத் தேக வீர †அமைமன மகிழ்வீரா;
அமரர்க் கீச னுன சசிபதி
மகள்மெய்த் தோயு நாத குறமக
ளணையச் சூழ்நீ தகரமிசை யுறுவேலா-
அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியி
னழகுக் கோயில் மீதில் மருவிய பெருமாளே. (எ)

911.

கீமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
கலையுற்று மாயாது மந்த்ரவாதக்-
கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டுபூணுஞ்;
சமயத்த ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளோராரு நண்புளோர்செய்-
சரியைக்ரி யாயோக நியமத்தின் மாயாது
சுலனப்ப டாஞானம் வந்துதாராய்;
அமரிற்சு ராபான திதிபுத்ர ராலோக
மதுதுக்க மேயாக மிஞ்சிடாமல்-
அடமிட்ட வேல்வீர திருவொற்றி யூர்நாதர்
அருணச்சி காமீஷ. கண்டபார;
மமபட்ச மாதேவ ரருமைச்சு வாமீநி
மலநிட்க ளாமாயை விந்துநாதம்-
வாசத்தி மேலான பரவத்து வேமேலே
வயலிக்குள் வாழ்தேவர் தம்பிரானே. (அ)

* பிணி=பிணித்த : கட்டிய. † அமை=அம்மை.

912.

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு *மலமல மழிகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை †மடைபாயல்-

குளிரி லறையக மிவைகளு மலமல
மனவி மகவினை யநுசர்கள் முறைமுறை
குனகு கினைஞர்க ளிவர்களு மலமல மொருகாலு;

சுருதி வழிமொழி ‡சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி யயலார்பால்-

சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை யெனதுள மகிழ்வுற அருள்வாயே;

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
§முகுற ||ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட-

விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும்
வடிவேலா;

மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வன்ச மலர்சுனை புளிதுழை முழையுடை யவிராவி-

மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு பெருமாளே.(கூ)

---

* அலம் அலம்=போதும் போதும். †மடை=சோறு.

‡ சிவ கலை=சைவசித்தாந்த நூல்.

§ முகுற=குமுற; எழுத்து நிலைமாறல். ||கக பதி=கருடன்.

913.

குயிலோமொழி அயிலோவிழி கொடியோஇடை பிடியோநடை
குறியீர்தனி செறியீரினி யென்றுபாடிக்-
குனகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலீயாவல்கு லீரோயாவிரு கொங்கைமீதிற்;
பயிலாமன மகிழ்மோகித சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நிணையாதுற நண்புகூரும்-
பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணைகர
பதிநேருநி னருளால்மெயு ணர்ந்திடேனே;
வெயில்வீசிய கதிராயிர வருணேதய விருணாசன
விசையேழ்பரி ரவிசேயெனு மங்கராசன்-
விகிகாகவ மயல்பேடிகை படுபோதுசன் னிதியானவன்
விதிதேடிய திருவாளிய ரன்குமாரா;
அயலாருறை மயிலாபல கலிமானுழை புலி*தோல்கலி
யகிலாகம தெறிகாவிரி வண்டல்மேவும்-
அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசர
அமராபதி யதில்வாழ்பவர் தம்பிரானே. (கo)

914.

கோவை வாயி தழுக்குந் தாக போக மளிக்குங்
கோதை மாதர் மூலைக்குங் குறியாலுங்-
கோல மாலை வளைக்குந் தோளி னூலு மணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்;
ஆவி கோடி யவிக்குஞ் சேலி னூலு மயக்குண்
டாசை யா†யினு நித்தந் தளராதே-
ஆசி லாத மறைக்குந் தேடொ ணாதொரு வர்க்கொன்
றுடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே;
சேவி லேறு நிருத்தன் தோகை பாக னளிக்குந்
த்யாக சீல குணத்தன் திருமாலும்-

---

* தோல் = யானை. † இனும் = இன்னும்.

தேடொ ணாத பதத்தன் தீதி லாத மனத்தன்
தேயு வான நிறத்தன் புதல்வோனே;
காவி டாத திருச்செங் கோடு நாடு தனக்குங்
காவி சூழ் வயலிக்கும் ப்ரியமானுய்-
காதி மோதி யெதிர்க்குஞ் சூர தீரர் ப்ரமிக்குங்
கால னுடல் தவிர்க்கும் பெருமாளே. (கக)

915.

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணைநி னீப்பி லடியேனத்-
தாதவிழ்க் டுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென * மெத்தி யவிராலி;
மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவெனஅ ழைத்தென் மனதாசை-
மாசினைய றுத்து ஞானமுத வித்த
வாரமினி நித்த மறவேனே;
காமனையெ ரித்த தீநயன நெற்றி
காதியசு வர்க்க நதிவேணி-
காணிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா;
சோமனெ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா-
சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த பெருமாளே. (கஉ)

916.

திருவு ரூப நேராக அழக தான மாமாய
திமிர மோக மானுர்கள் கலைமூடுஞ்-
சிகரி யூடு தேமாலை யடவி யூடு போயாவி
செருகு மால ஞசார வினையேனைக்;

* மெத்திய = மிகுந்த.

கருவி லாது சீரோதி யடிமை பூண லாமாறு
கனவி லாள்சு வாமீநின் மயில்வாழ்வுங்-

கருணை வாரி சூரேக முகமும் வீர மாறுத
கழலு நீப வேல்வாகு மறவேனே ;

சருவ தேவ தேவாதி நமசி வாய நாமாதி
சயில நாரி பாகாதி புதல்வோனே-

சதம கீவல் போர்மேவு குலிச பாணி மால்யாணை
சகச மான சாரீசெ யிளையோனே ;

மருவு லோக மீரேழு மளவி டாவொ ணுவான
வரையில் வீசு தாள்மாயன் மருகோனே-

மது நியாய சோணாடு தலைமை யாக வேமேலை
வயலி மீது வாழ்தேவர் பெருமாளே. (கங)

917.

நெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பத்ம நறுதுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ பிணையோ இனிதூறும்-

நெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ அறவேதெய்ந்;

தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்-

இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ந பரிபுர இருகா லொருகால் மறவேனே;

புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகவ டுயவே உமையாள்தன்-

புத்ர னெனஇசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்ப கவுணியர் பெருமா ளுருவாய் வருவோனே;
*சத்த முடையவுண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா புளையா யொளிகூருஞ்-
சக்ர தரஅரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
†தட்ப முளதட வயலூ ரியலூர் பெருமாளே. (கச)

918.

முலைம றைக்கவும் வாசலி லேதலை
மறைய நிற்கவும் ஆசையு ளோரென
முகிழ்ந கைச்சிறு தூதினை யேவவு முகமோடே-
முகம ழுத்தவும் ஆசைகள் கூறவு
நகம ழுத்தவும் லீலையி லேயுற
முறைம சக்கவும் வாசமு லாமல ரணைமீதே;
கலைந கிழ்க்கவும் வாலிப ரானவர்
உடல்ச ளப்பட நாள்வழி நாள்வழி
கறைய ழிக்கவு நானென வே‡யணி விலையீதே-
கடிய சத்திய மாமென வேசொலி
யவர்சொ டப்பண மாறிட வீறுடு
கடுக டுத்திடு வாரொடு கூடிய தமையாதோ;
மலைய மத்தென வாசுகி யேகடை
கயிறெ னத்திரு மாலொரு பாதியு
மருவு மற்றது வாலியு மேலிட அலையாழி-
வலய முட்டவொ ரோசைய தாயொலி
திமிதி மித்திமெ னுவெழ வேயலை
மறுகி டக்கடை யாவெழ மேலெழு மமுதோடே;

---

* சத்தம் = சக்தம். † தட்பம் = குளிர்ச்சி.
‡ அணி = அண்ணி: சார்ந்து.

*துலைவ ருத்†திரு மாமயில் வாழ்வுள
வயலை யற்புத னேவிசை யானவை
தொடர றுத்திடு மாரிய‡ கேவலி மணவாளா-

துவள்க டிச்சிலை §வேள்பகை வா‖திரு
மறிவை யெட்டுட னுயிர மேலொரு
துகள றுத்தணி யாரழ காசுரர் பெருமாளே. (கநி)

919.

மேமகலை நெகிழ்த்துக் காட்டி வார்குழல் விரித்துக் காட்டி
வேல்விழி புரட்டிக் காட்டி யழகாக-

மேனியை மினுக்கிக் காட்டி நாடக நடித்துக் காட்டி
வீடுக ளழைத்துக் காட்டி மதராசன்;

ஆகம மூரைத்துக் காட்டி வாரணி தனத்தைக் காட்டி
யாரொடு நகைத்துக் காட்டி விரகாலே-

ஆதர மனத்தைக் காட்டி வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக் காட்டி யழிவேனே;

மோகன விருப்பைக் காட்டி ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா-

மூவுல களித்துக் காட்டி சேவலை யுயர்த்திக் காட்டு
மூரிவில் மதற்குக் காட்டு வயலூரா;

வாகையை முடித்துக் காட்டி கானவர் சமர்த்தைக் காட்டி
வாழ்மயில் நடத்திக் காட்டு மிகையோனே-

மாமலை வெதுப்பிக் காட்டி தானவர் திறத்தைக் காட்டி
வானவர் சிரத்தைக் காத்த பெருமாளே. (ககசு)

---

*துலை வரு = ஒப்பாக வந்த. †திரு மா மயில் = லக்ஷ்மி.

‡கேவலி = மூத்தியைத் தரவல்ல தெய்வயானை.

§வேள் பகைவன் = மன்மதன் தரத்தக்க சிற்றின்பத்துக்கு எதிரிடையாகிய பேரின்பத்தைத் தருபவன்.

‖திரு மறு = சிறப்பான மச்சரேகை.

920.

வாளின் முனையினு நஞ்சினும் வெஞ்சம
ராஜ கடையினு மம்பதி னும்பெரு
வாதை வகைசெய்க ருங்கணு மெங்கணு மரிதான-
வாரி யழுதுபொ சிந்துக சிந்தசெ
வாயு நகைமுக வெண்பலு நண்புடன்
வாரு மிருமெனு மின்சொலு மிஞ்சிய பனிநீருந்;
தூளி படுநவ குங்கும முங்குளி
ராச மகில்புழு கும்புனை சம்பரம
சோதி வளர்வன கொங்கையு மங்கையு மெவசேனுந்-
தோயு மளறெனி தம்பமு முந்தியு
மாயை குடிகொள்கு டம்பையுள் மன்பயில்
சூலை யரையெதிர் கண்டும ருண்டிட லொழிவேனே;
காளி திரிபுரை யந்தரி சுந்தரி
நீலி கவுரிப யங்கரி சங்கரி
காரு ணியசிவை குண்டலி சண்டிகை த்ரிபுராரி-
காதல் மனைவிப ரம்பரை யம்பிகை
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை
கான நடனமு கந்தவள் செந்திரு அயன்மாது;
வேளி னிரதிய ருந்ததி யிந்திர
தேவி முதல்வர்வ ணங்குத்ரி யம்பகி
மேக வடிவர்பின் வந்தவள் தந்தரு ளிலையோனே-
வேலு மயிலுநி னைந்தவர் தந்துயர்
தீர வருள்தரு கந்தநி ரந்தர
மேலை வயலையு கந்துள நின்றருள் பெருமாளே.(கள)

921.

விகட பரிமள முருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு
மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்

கலவி விதவிய னரிவையர் மருள்வலை
யிட்டுத்து வக்கியிடர் பட்டுத் தியக்கியவர்
விரவு ஙவமணி முகபட எதிர்பொரு
புரண புளகித இளமுலை புரமிசை
தைக்கக் கழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி யன்புகூர-

விபுத ரமுதென மதுவென அறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை
துய்த்துக்க ளித்துங்கம் வைத்துப்ப லிற்குறியின்
வரையு முறைசெய்து முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை
தொட்டுக்கு லைத்துதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி
கற்றிட்ட புட்குரல்மி டற்றிற்ப யிற்றிமடு வுந்திமூழ்கிப்;

புகடு வெகுவித காணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென்
ஒப்பித்த நெய்த்தபல புட்பக்கு ழற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை
சித்தத்த ழுத்தியது வர்க்கத்து ருக்கியொரு
பொழுதும் விடலரி தெனுமது பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
னத்துப்ரி யப்படந டித்துத்து வட்சியினில் நைந்துசோரப்-

புணரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு திரிமலம்
அற்றுக்க ருத்தொருமை யுற்றுப்பு லத்தலையில்
மறுகு பொறிகழல் நிறுவியெ சிறிதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருஜக
வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மதுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொளியையு மறிவிவ
தத்வப்ர சித்திதனை முத்திச்சி வக்கடலை யென்றுசேர்வேன்;

திகுட் திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி என்றுபேரி-

திமில கரடிகை பதலச லரிதவில்
தமர மூரசுகள் குடமுழ வொடுதுடி
சுத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர
அசுரர் குலஅரி அமரர்கள் ஜயபதி
குசல பசுபதி குருவென விருதுகள்
ஒத்தத்தி ரட்பலவு முற்றிக்க லிக்களமு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென
எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற றப்பிளிற நின்றசேடன்;

மகுட சிரதலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமும் ஹரஹர ஹரவென
நக்ஷத்ர முக்கிவிழ வக்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலிசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்
பக்கப்ப முத்தவுடல் செக்கச்சி வத்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்
பகுத்து நிர்த்தமிட ரகுத்த லப்பரவி யும்பர்வாழ-

மடிய அவுணர்கள் குரகத கஜரத
கடக முடைபட வெடிபட எழுகிரி
அற்றுப்ப றக்கவெகு திக்குப்*ப டித்துஉவ

---

* படித்து = படிந்து.

நதிகள் குழைதர இபபதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை
அக்குக்கு டக்கொடிசெ ருக்கப்பெ ருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
இயலு மிசைகளு நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கஸ்த்யர்க்கு ணர்த்தியருள்
தம்பிரானே. (கஅ)

திருத்தவத்துறை.

[திரிசிராப்பள்ளிக் கடுத்த திருவானைக்காவி லிருந்து 12-மைல். இது 'லாலிகுடி' என வழங்குகின்றது. தேவார வைப்பு ஸ்தலம்.]

922.

காரணி யுங்குழ லுக்கு வித்திடு
கோகன கங்கொடு மெத்தெ னப்பிறர்
காணவ ருந்திமு டித்தி டக்கடு விரகாலே-

காதள வுங்கய லிப்பு ரட்டிம
ஞதிகள் வஞ்சமி குத்தி டப்படி
காமுக ரன்புகு வித்த கைப்பொரு ளுறவாகிப்;

பூர்ண கும்பமெ னப்பு டைத்தெழு
சீதள குங்கும மொத்த சித்திர
பூஷித கொங்கையி லுற்று முத்தணி பிறையான-

போருவை யொன்றுநெ கிழ்த்து ருக்கிமெய்
யாரையும் நெஞ்சைவி லிப்ப டுத்திடு
பூவையர் தங்கள்ம யக்கை விட்டிட அருள்வாயே;

வீர புயங்கிரி யுக்ர விக்ரம
பூத கணம்பல நிர்த்த மிட்டிட
வேக முடன்பறை கொட்டி டக்கழு கினமாட-

வீசிய பம்பர மொப்பெ னக்களி
வீசந டஞ்செய்*வி டைத்த னித்துசர்
வேதப ரம்பரை யுட்க ளித்திட வரும்வீரா;
சீரணி யுந்திரை தத்து முத்தெறி
காவிரி யின்கரை மொத்து மெத்திய
சீர்புனை கின்றதி ருத்த வத்துறை வரும்வாழ்வே-
சீறிய தெர்ந்தவ ரக்க ரைக்கெட
மோதிய டர்ந்தருள் பட்ச மூற்றிய
தேவர்கள் தஞ்சிறை வெட்டி விட்டருள் பெருமாளே. (க)

923.

நிரைத்த நித்தில நீள்மணி மாலைகள்
பொறுத்த வெற்பிணை மார்மூலை மேலணி
நெறித்த நெய்க்குழல் வாள்விழி மாமதி முகமானுர்-
நெளித்த சிற்றிடை மேல்கலை யாடையை
யுடுத்தி யத்தமு ளோர்தமை யேமயல்
நிரப்பி நித்தமும் வீதியில் நேருறு நெறியாலே;
கரைத்தி தக்குயில் போல்மொழி மாதர்கள்
வலைக்கு ளிற்சுழ லாவகை யேயுன
கழற்று தித்திடு வாழ்வது தான்மன துறமேவிக்-
கதித்த பத்திமை சாலடி யார்சபை
மிருத்தி ழிக்குண பாதக னேனுயர்
கதிக்க டுத்துயர் வாகவு மேயரு ளுரையாதோ;
வரைத்த நுக்கார் மாதவ மேவின
ரகத்தி டத்தினில் வாழ்சிவ னுர்திரு
மணிச்செ விக்குள்மெய்ஞ் ஞானம தோதிய வடிவேலா-
மதித்த மூத்தபி ழாய்வினர் மேலவ
ருரைத்து ளத்திரு வாசக மானது
மனத்து †ளெத்தழ கார்புகழ் வீசிய மணிமாடத்;

---

* விடைத் தனித் துசர் = விடைக் கொடி யுடைய சிவபிரான்.
† எத்து = எத்து.

திரைக்க டற்பொரு காவிரி மாநதி
பெருக்கெ டுத்துமெ பாய்வள நீர்பொலி
செழித்த நெற்செநெல் வாரிக ளேகுவை குவையாகச்-

செருக்கு செய்ப்பதி வாழ்முரு காவறம்
வளர்த்த நித்யகல் யாணிக்ரு பாகரி
திருத்த வத்துறை மாநகர் தானுறை பெருமாளே. (உ)

பூவாளூர்

[இது திருத்தவத்துறைக்கு வடக்கு உ-மைல். ஸ்தல புராணம் உண்டு.]

924.

கரலன் வேற்கணி யிர்வா ளாலமு
நேர்க ணுற்கொலை சூழ்மா பாவிகள்
காம சாத்திர வாய்பா டேணிக ளெவரேனுங்-

காத லார்க்குமெ வ்வாய் கூறிகள்
போக பாத்திர மாமூ தேவிகள்
காசு கேட்டிடு மாயா ரூபிக ளதிமோக;

மாலை மூட்டிகள் வானு டேநிமிர்
ஆண போற்பொர நேரே போர்முலை
மார்பு காட்டிகள் நாணு பேதக மெனமாயா-

மாப சாக்கிக ளோடே சிரிய
போது போக்குத லாமோ நீயினி
வாவெ னுப்பரி வாலே யாள்வது மொருநாளே;

பால முத்திரு வாயா லோதிய
ஏடு நீர்க்கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிரு நாலா யிர சமண்மூடர்-

பாரின் மேற்கழு மீதே யேறிட
நீறி டாத்தமிழ் நாடு டேறிட
பாது காத்தரு ளாலே கூனிமி ரிறையோனும்;

ஞால மேத்திய தோர்மா தேவியும்
ஆல வாய்ப்பதி வாழ்வா மாறெணு
ஞான பாக்கிய பாலா வேலவ மயில்வீரா-

ஞான தீக்ஷித சேயே காவிரி
யாறு தேக்கிய கால்வாய் மாவள
நாடு போற்றிய பூவா ளூருறை பெருமாளே.

திருப்பராய்த்துறை.

[திரிசிராப்பள்ளிக் கடுத்த எழுமணூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடமேற்கு 1½-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது.]

925.

வாசனை மங்கையர் போற்று சிற்றடி
பூஷண கிண்கிணி யார்ப்ப ரித்திட
மாமலை ரண்டென நாட்டு மத்தக மூலையானை-

வாடைம யங்கிட நூற்ற சிற்றிழை
நூலிடை நன்கலை தேக்க இக்குவில்
மாரன்வி டுங்கணை போற்சி வத்திடு விழியார்கள்;

நேசிகள் வம்பிக ளாட்ட மிட்டவர்
தீயர்வி ரும்புவர் போற்சு ழற்றியெ
நீசனை யும்படி யாக்கி விட்டொரு பிணியான-

நீரின்மி குந்துழ லாக்கை யிற்றிட
யோகமி குந்திட நீக்கி யிப்படி
நீயக லந்தனில் வீற்றி ருப்பது மொருநாளே;

தேசம டங்கலு மேத்து மைப்புய
லாயெ டுந்தகை வாழ்த்த வச்சிர
தேகமி லங்கிய நீர்க்க புத்திர மூதல்வோனே-

தீரனெ னும்படி சாற்று விக்ரம
சூரனு டங்கிட வாய்த்த வெற்புடல்
தேயந டந்திடு கீர்த்தி பெற்றிடு கதிர்வேலா;

மூசலி பம்பிய னூற்றி தழ்க்கம
லாசனன் வந்துல காக்கி வைத்திடு
வேதன கர்தையை மாற்றி முக்கண ரறிவாக-

மூதறி வுந்திய தீகைகூ செப்பிய
ஞானம்வி ளங்கிய மூர்த்தி யற்புத
மூவரி லங்குப ராய்த்து றைப்பதி பெருமாளே.

தென்கடம்பத்துறை.

[''கடம்பத்துறை'' என்பது ''கடம்பர்கோயில்''. திரிசிராப் பள்ளிக்கு மேற்கேயுள்ள குழித்தலை ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கு 1-மைல். திருநாவுக்கரசு ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தலமான்மியம் இருக்கின்றது.]

926.

புணரியும மனங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலிணெடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புது*நிலவ ருந்தியுந் துஞ்சுநஞ் சும்பொருப் பெறிவேலும்-
பொருவெனஇ கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்
றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புவியிளைஞர் மூன்பயின் றம்பொனின் †கம்பிதக்
குழைமோதிக்;

குணகையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங் குங்கடைக்
கணினர்பால்-

---

*நில வருந்தி = சகோரபட்சி. †கம்பிதம் = அசைதல்.

குல்வுபல சந்தனந் தந்துதந் தின்புறுந்
தீர்விதகர ணங்களுங் கந்தநின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற் றமைவேலே;
துணர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பசுஞ் சந்தனங் குங்குமந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத்
திருதோளுந்-
தொலைவில்சண்மு கங்களுந் தந்தாமந் தரங்களும்
பழநிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தையுஞ் சென்று*செய்ப்
பதிவாழ்வாய்;
கணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுந்
குரவுமறு குங்குலுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக் குருநாதா-
கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனி கமண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப்
பெருமாளே. (க)

கருவூர்.

[ரெயில்வே ஸ்டேஷன். திரிசிராப்பள்ளிக்கு மேற்கு 45-மைல். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது. இதுவே "வஞ்சி" என்பாருமுளர்.]

பு. 927.

மதியால்வித் தகனெகி— மனதாலுத் தமனெகிப்;
பதிவாகிச் சிவஞான— பரயோகத் தருள்வாயே;
நிதியேநித் தியமேயென்— நிஜவேதற் பொருளாயோய்;
கதியேசொற் பரவேளே— கருவூரிற் பெருமாளே.

---

* செய்ப் பதி = வய லூர்.

928.

இளகிர்க் குவட்டுமூலை யமுதத் தடத்தைகனி
யிரதக் குடத்தையெணு மரபோடே-
இருகைக் கடைத்துயிடை துவளக் குழற்சரிய
இதழ்சர்க்க ரைப்பழமொ டுறமூறல்;
*முளரிப்பு வொத்தமுக முகம்வைத் தருத்திநில
முதிரத்து வற்பஅல்குல் மிசைமூழ்கி-
மொழிதத்தை யொப்பகடை விழிகட்†சி வப்பமளி
முழுகிச்சு கிக்கும்வினை யறஆளாய்;
நளினப் பதக்கழலு மொளிர்செச்சை பொற்புயமெ
னயனத்தி லுற்றுநட மிடும்வேலா-
நரனுக் கமைத்தகொடி யிரதச்‡சு தக்களவ
னறைபுட்ப நற்றுளவன் மருகோனே;
களபத் தனத்திசுக சரசக் குறத்திமுக
கமலப் புயத்துவளி மணவாளா-
கடலைக் குவட்டவுணை யிரணப் படுத்தியுயர்
கருவைப் பதிக்குளுறை பெருமாளே. (உ)

929.

தசையா கியகற் றையினுல் முடியத்
தகாகா லழவொப் பனையாயே-
தகுமா றுதல்சற் றொருநா ளுலகிற்
றவிரா வுடலத் தினைநாயேன்;
பசுபா சமும்விட் டறிவா லறியப்
படுபூ ரணகிஷ் களமான-
பதிபா வனையுற் றநுபூ தியிலப்
படியே யடைவித் தருள்வாயே;

---

* முளரிப் பு=முளரிப் பூ. † சிவப்ப அமளி எனப்பிரிக்க.

‡ சுதக் களவன்=சூதக் களவன்; சூதன்=(அருச்சுனனுக்குத்) தேர்ப்பாகன்.

அசலே சுரர்புத் திரனே குணதிக்
கருணே தயமுத் தமிழோனே-
அகிலா கமவித் தகனே துகளற்
றவர்வாழ் வயலித் திருநாடா;
கசிவா ரிதயத் தமிர்தே மதுபக்
கமலா லயன்மைத் துனவேளே-
கருணை கரசற் குருவே குடகிற்
கருவூ ரழகப் பெருமாளே. (சு)

930.

நித்தப் பிணிகொடு மேவிய காயமி
தப்புப் பிருதிவி வாயுவு தேயுவு
நிற்பொற் ககனமொ டாமிவை பூதக லவைமேவி-
நிற்கப் படுமூல காளவு மாகரி
டத்தைக் கொளவுமெ நாடிடு மோடிடு
நெட்டுப் பணிகலீ பூணிடு நானெனு மடவாண்மை;
எத்தித் திரியுமி தேதுபொ யாதென
வுற்றுத் தெளிவுண ராதுமெய் ஞானமொ
டிச்சைப் படஅறி யாதுபொய் மாயையி லுழல்வேனை-
எத்திற் கொடுகின தாரடி யாரொடு
முய்த்திட் டுனதரு ளாலுயர் ஞானமு
திட்டுத் திருவடி யாமுயர் வாழ்வுற இனிதாள்வாய்;
தத்தத் தனதன தானன தானன
தித்தித் திமிதிமி தீதக தோதக
டத்தக் குடகுகு தாகுட தீகுட வெனபேரிச்-
சத்தத் தொலிதிகை தாவிட வானவர்
திக்குக் கெடவரு சூரர்கள் தூள்பட
சர்ப்பச் சதமுடி நாணிட வேலைத யெறிவோனே;
வெற்றிப் பொடியணி மேனியர் கோகுல
சத்திக் கிடமருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணிய ரருள்பாலா-

வெற்புத் தடமூலி யாள்வளி நாயகி
சித்தத் தமர்கும ராளமை யாள்கொள
வெற்றிப் புகழ்கரு வூர்தனில் மேவிய
பெருமாளே. (ச)

931.

முட்டம ருட்டி யிருகுழை தொட்டக டைக்க ணியலென
மொட்பைவி ளைத்து முறையளித் திடுமாதர்-
முத்தமி ரத்ந மரகதம் வைத்தவி சித்ர முகபட
மொச்சிய பச்சை யகில்மணத் தனபாரம்;
கட்டிய ணைத்து நகதுதி பட்டக முத்தி லிறுகிய
கைத்தல மெய்த்து வசனமற் றுயிர்சோருங்-
கட்டமு யக்கி னதுபவம் விட்டவி டற்கு நியமித
கற்பனை பகூ முடனளித் தருளாதோ;
வெட்டிய கட்க முனைகொடு வட்டகு ணத்து ரணமுக
விக்ரம வுக்ர வெகுவிதப் படைவீரா-
வெற்றியை யுற்ற குறவர்கள் பெற்றகொ டிக்கு மிகமகிழ்
வித்தக சித்த வயலியிற் குமரேசா;
கிட்டிய பற்கொ டசுரர்கள் மட்டற வுட்க வடலொடு
கித்திர டக்கு மலகைசுற் றியவேலா-
கெட்டவ ருற்ற துணையென நட்டருள் சிட்ட பசுபதி
* கேர்ப்பபு ரத்தி லறுமுகப் பெருமாளே. (ஞ)

932.

சஞ்சல சரித பரநாட்டர்கள்
மந்திரி குமரர் படையாட்சிகள்
சங்கட மகிபர் தொழஆக்கினை மூடிசூடித்-
தண்டிகை களிறு பரிமேற்றனி
வெண்குடை நிழலி லுலவாக்கன
சம்பரம விபவ சவுபாக்கிய முடையோராய்க்;

---

* கேர்ப்ப புரம் = கரு ஊர்.

குஞ்சமும் விசிற இறுமாப்பொடு
பஞ்சணை மிசையி லிசையாத்திரள்
கொம்புகள் குழல்கள் வெகுவாத்திய மியல்கீதங்-
கொங்கணி மகளிர் பெருநாட்டிய
நன்றென மனது மகிழ்பார்த்திபர்
கொண்டைய னெழுதும் யமகோட்டியை யுணராரே;
பஞ்சவர் கொடிய வினைதூற்றுவர்
வென்றிட சகுனி கவறுற்பொருள்
பங்குடை யவனி பதிதோற்றிட அயலேபோய்ப்-
பண்டையில் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருஷ முறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு வருளாலே;
வஞ்சணை நழுவி நிரைமீட்சியில்
மூர்த்துத முடைய மனைவாழ்க்கையின்
வந்தபி னுரிமை யதுகேட்டிட இசையாநாள்-
மண்கொள விசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருக வயலூர்க்குக
வஞ்சியி லமரர் சிறைமீட்டருள் பெருமாளே. (சு)

933.

முகிலள கஞ்சரி யாக்குழை யிகல்வன கண்சிவ வாச்சிவ
முறுவல்மு கங்குறு வேர்ப்பெழ வதுபோக்-
முலைபுள கஞ்செய வார்த்தையு நிலையழி யும்படி கூப்பிட
முகுளித பங்கய மாக்கர நுதல்சேரத்;
துயரொழு குஞ்செல பாத்திர மெலியமி குந்துத ராக்கினி
துவளமு யங்கிவி டாய்த்தரி வையர்தோளின்-
துவயலி னின்றன வ்யாத்தமும் வயலியல் வஞ்சியில் மேற்பயில்
சொருபமு நெஞ்சிலி ராப்பகல் மறவேனே;
சகலம யம்பர மேச்சுரன் மகபதி யுய்ந்திட வாய்த்தருள்
சரவண சம்பவ தீர்க்கஷண் முகமாகிச்-

சருவுக்ர வுஞ்சசி லோச்சய முருவவெ றிந்தகை வேற்கொடு
சமர முகந்தனில் நாட்டிய மயிலேறி;
அகிலமு மஞ்சிய வாக்ரம விகடப யங்கர ராக்கத
வசுரர கங்கெட வார்த்திடு கொடிகூவ-
அமரர டங்கலு மாட்கொள வமரர்த லங்குடி யேற்றிட
வமரரை யுஞ்சிறை மீட்டருள் பெருமாளே. (எ)

கருவூர்.

[கருவூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 6-மைல்]

934.

குருவு மடியவ ரடியவ ரடிமையு
மருண மணியணி கணபண விதகர
குடில செடிலினு நிகரென வழிபடு குணசீலர்-
குழுவி லொழுகுதல் தொழுகுதல் விழுகுத
லழுகு தலுமிலி நலமிலி பொறையிலி
குசல கலையிலி தலையிலி நிலையிலி விலமாதர்;
மருவு முலையெனு மலையினி லிடறியு
மளக மெனவள ரடவியில் மறுகியு
மகர மெறியிரு கடலினில் முழுகியு முழலாமே-
வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே;
உருவு பெருகயல் கரியதொர் முகிலெனு
மருது நெறிபட முறைபட வரைதனி
லுரலி லொடுதவழ் விரகுள இளமையு மிகமாரி-
உமிழ நிரைகளி னிடர்கெட வடர்கிரி
கவிகை யிடவல மதுகையு நிலைகெட
வுலவில் நிலவறை யுருவிய வருமையு மொருநூறு;

நிருப ரணமுக வரசர்கள் வலிதப
விசயன் ரதமுதல் நடவிய வெளிமையு
நிகில செகதல மூரைசெயு மரிதிரு மருகோனே-
நிலவு சொரிவவீ வயல்களரு நெடுகிய
குடக தமனியு நளினமு மருவிய
நெருவை நகருறை திருவுரு வழகிய பெருமாளே.

திருவெஞ்சமாக்கூடல்.

[கருவூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 12-மைல். சுந்தரமூர்த்தி ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

935.

வண்டுபோற் சாரத் தருள்தேடி-
மந்திபோற் காலப் பிணிசாடிச்;
செண்டுபோற் பாசத் துடனுடிச்-
சிந்தைமாய்த் தேசித் தருள்வாயே;
தொண்டராற் காணப் பெறுவோனே-
துங்கவேற் கானத் துறைவோனே;
மிண்டராற் காணக் கிடையானே-
வெஞ்சமாக் கூடற் பெருமாளே.

திருப்பாண்டிக்கொடுமுடி:

[ரெயில்வே ஸ்டேஷன். ஈரோட்டுக்குத் தென்கிழக்கு 23-மைல். கருவூருக்கு மேற்கு 17-மைல். மூவர் தேவாரமும் பெற்ற ஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

936.

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி-
இடர்கள்பட் டலையப் புகுதாதே;

திருவருட் கருணைப் ப்ரபைய்யாலே-
திரமெனக் கதியைப் பெறுவேனே;
அறியயற் கறிதற் கரியானே-
அடியவர்க் கெளியற் புதனேயா;
குருவெனச் சிவனுக் கருள்போதா-
கொடுமுடிக் குமரப் பெருமாளே. (க)

937.

காந்தட் காவலி சேந்துற் றிடமத
காண்டத் தரிவைய ருடனூசி-
காந்தத் துறவென வீழ்ந்தப் படிகுறி
காண்டற் கதுபவ விதமேவிச்;
சாந்தைத் தடவிய கூந்தற் கருமுகில்
சாய்ந்திட் டயில்விழி குழைமீதே-
தாண்டிப் பொரவுடை தீண்டித் தனகிரி
தாங்கித் தழுவுத லொழியேனே;
மாந்தர்க் கமரர்கள் வேந்தற் கவரவர்
வாஞ்சைப் படியருள் வயலூரா-
வான்கிட் டியபெரு மூங்கிற் புனமிசை
மான்கிற் றடிதொழு மதிகாமி;
பாந்தட் சடைமுடி யேந்திக் குலவிய
பாண்டிக் கொடுமுடி யுடையாரும்-
பாங்கிற் பரகுரு வாங்கற் பணியொடு
பாண்சொற் பரவிய பெருமாளே. (உ)

சேலம்.

[ரெயில்வே ஸ்டேஷன்.]

938.

பரிவுறு நாரற் றழல்மதி வீசச்
சிலைபொரு காலுற் றதனூலே-

பன்னிபடு சோலைக் குயிலது கூவக்
குழல்தனி யோசைத் தரலாலே;
மருவியல் மாதுக் கிருகயல் சோரத்
தனிமிக வாடித் தளராதே-
மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள்முரு காவுற் றணைவாயே;
கிரிதனில் வேல்விட் டிருதொளை யாகத்
தொடுகும ராமுத் தமிழோனே-
கிளரொளி நாதர்க் கொருமக ணுதித்
திருவளர் *சேலத் தமர்வோனே;
பொருகிரி சூரக் கிளையது மாளத்
†தனிமயி லேறித் திரிவோனே-
புகர்முக வேழக் கணபதி யாருக்
கிளையவி நோதப் பெருமாளே.

ராஜபுரம்.

[இது சேலம் (சூரமங்கலம்) ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 20-மைல். இங்கு ஸ்வாமி இருதேவிமார் சமேதராய் ஆறு திரு முகங்களுடன் வீற்றிருக்கின்றார். இத்தலத்துக்கு மேற்கு 3-மைலிற் 'கொங்கணகிரி' இருக்கின்றது.]

939.

சங்கு வார்முடி பொற்கழல் பொங்கு சாமரை ‡கத்திகை
தண்டு மாகரி பெற்றவன் வெகுகோடிச்-
சந்த பாஷைகள் கற்றவன் மந்த்ர வாதிச துர்க்கவி
சண்ட மாருத மற்றுள கவிராஜப்;

---

* "சோலைக் கமர்வோனே" என்றும் பாடம்; சோலை = சோலைமலை = பழமுதிர் சோலை.

† 'தனிமயிலேறிப் பொருவோனே' என்றும் பாடம்.

‡ கத்திகை = விருதுக்கொடி.

பங்கி பாலச ரச்வதி சங்க நூல்கள்வி தித்தப்ர
பந்த போதமு ரைத்திடு புலவோன்யான்-
பண்டை * மூவெழு வர்க்கெதிர் கண்ட நீயுமெ னச்சில
பஞ்ச பாதக ரைப்புகழ் செயலாமோ;
வெங்கை யாணை †வ னத்திடை துங்க மாமுத லிக்குவெ
ருண்டு மூலமெ னக்கரு டனிலேறி-
விண்ப ராவஅ டுக்கிய மண்ப ராவஅ தற்குவி
தம்ப ராவஅ டுப்பவன் மருகோனே;
கொங்க ணுதித ரப்பெறு கொங்கி னூடுசு கித்திடு
கொங்கின் வீரக ணப்ரிய குமராபொற்-
கொங்கு லாவுகு றக்கொடி கொங்கை யேதழு விச்செறி
கொங்கு ராஜபு ரத்துறை பெருமாளே.

விஜயமங்கலம்.

[இது ஈரோட்டுக்கும் திருப்பூருக்கும் மத்தியில் உள்ள தொரு ரெயில்வே ஸ்டேஷன்.]

940.

கலக சம்ப்ரமத் தாலேவி லோசன
மலர்சி வந்திடப் பூணுர மானவை
கழல வண்டெனச் சாரீரம் வாய்விட அபிராமக்-
கன்த னங்களிற் கோமாள மாகியெ
பலந கம்படச் சீரோடு பேதக
கரண முஞ்செய்துட் பாலூறு தேனித ழமுதூறல்;
‡செலுவி மென்பணைத் தோளோடு தோள்பொர
நிலைகு லைந்திளைத் தேராகு மாருயிர்
செருகு மூந்தியிற் போய்வீழு மாதுட னநுராகந்-

---

* மூவெழுவர்—தலை யிடை கடைப் படுஉக-வள்ளல்கள்.
† வனத்திடை=ஜலத்தி னிடத்தில்.
‡ செலுவி=செலுத்தி.

தெரிகு மண்டையிட் டாராத சேர்வையி
லுருகி மங்கையர்க் காளாகி யேவல்செய்
திடினு நின்கழற் சீர்பாத ஞானினி மறவேனே;

உலக கண்டமிட் டாகாச மேல்விரி
சலதி கண்டிடச் சே*ராய மாமவ
ருடன்ம டிந்திடக் கோபாலர் சேரியில் மகவாயும்-

உணர்சி றந்தசக் ராதார ஞாரணன்
மருக மந்திரக் காபாலி யாகிய
உரக கங்கணப் பூதேசர் பாலக வயலூரா;

விலத ருங்கொலைப் போர்வேடர் கோவென
இனையு மங்குறப் பாவாய்வி யாகுலம்
விடுவி டென்றுகைக் கூர்வேலை யேவிய இளையோனே-

விறல்சு ரும்புரந் க்ரௌதேசி பாடிய
விரைசெய் பங்கயப் பூவாடை மேவிய
விஜய மங்கலத் தேவாதி தேவர்கள் பெருமாளே.

சிங்கை (காங்கேயம்.)

[இது ஈரோட்டு-திருப்பூர் மார்க்கத்தில் உள்ள ஊற்றுக்குழி ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 14-மைல்.]

941.

சஞ்சரியு கந்து நின்றுமூரல் கின்ற
தண்குவளை யுந்து குழலாலுந்-
தண்டாரள தங்க மங்கமணி கின்ற
சண்டவித கும்ப கிரியாலும்;
நஞ்சவினை யொன்றி தஞ்சமென வந்து
நம்பிவிட நங்கை யுடனுசை-

---

* ஆயம் = கூட்டம்.

நண்புறினை யின்று நன்றில்வினை கொன்று
நன்றுமயில் துன்றி வாவேணும்;
கஞ்சமலர் கொன்றை தும்பைமகிழ் விஞ்சி
கந்திகமழ் கின்ற கழலோனே-
கன்றிடுபி ணங்கள் தின்றிடுக ணங்கள்
கண்டுபொரு கின்ற கதிர்வேலா;
செஞ்சொல்புனை கின்ற எங்கள்குற மங்கை
திண்குயம ணைந்த திருமார்பா-
செண்பகமி லங்கு மின்பொழில்சி றந்த
சிங்கையில மர்ந்த பெருமாளே. (க)

பு. 942.

சந்திதொறு நாண மின்றியகம் வாடி
உந்தி பொரு ளாக அலைவேனை-
சங்கைபெற நாளு மங்கமுள மாதர்
தங்கள்வச மாகி அலையாமற்;
சுந்தரம தாக எந்தன்வினை யேக
சிந்தைகளி கூர அருள்வாயே-
தொங்குசடை மீது திங்களணி நாதர்
மங்கைகரு ணாளி தலைசாயத்;
தொந்திதிமி தோதி தந்திதிமி தாதி
யென்றுநட மாடு மவர்பாலா-
துங்கமுள வேடர் தங்கள்குல மாதை
மங்களம தாக அணைவோனே;
கந்தமுரு கேச மிண்டசுரர் மாள
அந்தமுனை வேல்கொ டெறிவோனே-
கும்பர்கயி லாசர் மைந்தவடி வேல
சிங்கைநகர் மேவு பெருமாளே. (உ)

———

எருகை

பட்டாலி யூர்.

[இது 'பட்டாலி சிவமலை' என வழங்கும். காங்கேயத்துக்குச் சமீபம். ஸ்தலபுராணம் உண்டு.]

943.

இருகுழை யிடறிக் காது மோதுவ
பரிமள நளினத் தோடு சீறுவ
இணையறு வினையைத் தாவி மீளுவ வதிசூர-

எமபடர் படைகெட் டோட நாடுவ
அமுதுடன் விடமொத் தாளி யீருவ
ரதிபதி கலிதப் பாது சூழுவ முநிவோரும் ;

உருகிட விரகிற் பார்வை மேவுவ
பொருளது திருடற் காசை கூறுவ
யுகமுடி விதெனப் பூச லாடுவ வடிவேல்போல்-

உயிர்வதை நயனக் காதல் மாதர்கள்
மயல்தரு கமரிற் போய்வி ழாவகை
உனதடி நிழலிற் சேர வாழ்வது மொருநாளே;

முருகவிழ் தொடையைச் சூடி நாடிய
மரகத கிரணப் பீலி மாமயில்
முதுரவி கிரணச் சோதி போல்வய லியில்வாழ்வே-

முரண்முடி யிரணச் சூலி மாலினி
சரணெனு மவர்பற் றுன சாதகி
முடுகிய கடினத் தாளி வாகினி மதுபானம்;

பருகினர் பரமப் போக மோகினி
அரகர வெனும்விக் தாரி யாமளி
பரிபுர சரணக் காளி கூளிகள் நடமாடும்-

பறையறை சுடலைக் கோயில் நாயகி
இறையொடு மிடமிட் டாடு காரணி
பயிரவி யருள்பட் டாலி யூர்வரு பெருமாளே. (க)

944.

கத்தூரி யகரு மருகமத வித்தார படிர இமசல
கற்பூர களப மணிவன மணிசேரக்-
கட்டார வடமு மடர்வன நிட்டுர கலக மிடுவன
கச்சோடு பொருது நிமிர்வன தனமாதர்;
கொத்தூரு நறவ மெனவத ரத்தூறல் பருகி யவரொடு
கொற்சேரி யுலையில் மெழுகென வுருகாமே-
கொக்காக நரைகள் வருமுன மிக்காய வினமை யுடன்முயல்
குற்றேவல் அடிமை செயும்வகை யருளாதோ;
அத்தூர புவன தரிசன நித்தார கனக நெடுமதி
லச்சான வயலி நகரியி லுறைவேலா-
அச்சோவெ னவச வுவகையி லுட்சோர்த லுடைய பரவையொ
டக்காகி விரக பரிபவ மறவேபார்;
பத்தூரர் பரவ விரைவுசெல் மெய்த்தூதர் விரவ வருடரு
பற்றுய பரம பவருஷ குருநாதா-
பச்சோலை குலவு பனைவளர் மைச்சோலை மயில்கள் நடமிடு
பட்டாலி மருவு மமரர்கள் பெருமாளே. (உ)

945.

சங்கைக்கத் தோடு சிலுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
சங்கற்பித் தோதும் வெகுவித கலிஞானச்-
சண்டைக்குட் கேள்வி *யலமல மண்டற்குப் பூசை யிடுமவர்
சம்பத்துக் கேள்வி யலமல மிமவானின்;
மங்கைக்குப் பாக னிருடிக ளெங்கட்குச் சாமி யெனவடி
வந்திக்கப் பேசி யருளிய சிவதூலின்-
மந்த்ரப்ரஸ்த் தார தரிசன யந்த்ரத்துக் கேள்வி யலமலம்
வம்பிற்சுற் றுது பரகதி யருள்வாயே;
வெங்கைச்சுக் ரீபர் படையையி லங்கைக்குப் போக விடவல
வென்றிச்சக் ரேசன் மிகமகிழ் மருகோனே-

---

*அலம் அலம் = போதும் போதும்.

வெண்ப்பட்டுப் பூணல் வனகமு கெண்பட்டுப் பாளை விரிபொழில்
விஞ்சிட்டுச் சூழ வெயில்மறை வயலூரா;
கொங்கைக்கொப் பாகும் வடகிரி செங்கைக்கொப் பாகு நடமலர்
கொண்டைக்கொப் பாகு முகிலென வனமாதைக்-
கும்பிட்டுக் காதல் குனகிய இன்பச்சொற் பாடு மிளையவ
கொங்கிற்பட் டாலி நகருறை பெருமாளே. (கூ)

திருமுருகன் பூண்டி.

[திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு ப-மைல். சுந்தர மூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல்பெற்றது. ஸ்தலபுராண முண்டு.]

946.

அவசிய*முன் வேண்டிப் பலகாலும்-
அறிவினுணர்ந் தாண்டுக் கொருநாளில்;
தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்-
சரணமதும் பூண்டற் கருள்வாயே;
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்-
சடுசமயங் காண்டற் கரியானே;
†சிவகுமரன் பீண்டிற் பெயரானே-
திருமுருகன் பூண்டிப் பெருமாளே.

அ வி ந ா சி.

[திருப்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு 8-மைல். சுந்தர மூர்த்தி ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

---

* உன் வேண்டி = உன்னே வேண்டி.

† 'சிவகுமர அன்பு ஈண்டில் பெயரானே' எனப் பிரித்துக்கொள்க.

947.

இறவாமற் பிறவாமல் - எணையாள்சற் குருவாகிப்;
பிறவாகித் திரமான - பெருவாழ்வைத் தருவாயே;
குறமாதைப் புணர்வோனே - குகனேசொற் குமரேசா;
அறநூலைப் புகல்வோனே - அவிநாசிப் பெருமாளே. (க)

948.

பந்தப்பொற் பாரப யோதர
மூந்திச்சிற் ரூடகை மேகலே
பண்புற்றுத் தாளொடு மேவிய துகிலோடே-
பண்டெச்சிற் சேரியில் வீதியில்
கண்டிச்சிச் சாரொடு மேவியெ
பங்குக்கைக் காசுகொள் வேசியர் பணிநீர்தோய்;
கொந்துச்சிப் பூவணி கோதையர்
சந்தச்செத் தாமரை வாயினர்
கும்பிட்டுப் பாணியர் வீணிய ரநுராகங்-
கொண்டுற்றுப் பாயலின் மூழ்கினு
மண்டிச்செச் சேயென வானவர்
கொஞ்சுற்றுத் தாழ்பத தாமரை மறவேனே;
அந்தத்*தொக் காதியு †மாதியும்
வந்திக்கத் தானவர் வாழ்வுறும்
அண்டத்துப் பாலுற மாமணி யொளிவீசி-
அங்கத்தைப் பாவைசெய் தாமென
சங்கத்துற் ரூர்தமி ழோதவு
வந்துக்கிட் டார்கழ வேறிட வொருகோடிச்;
சந்தச்செக் காளகி சாசரர்
வெந்துக்கத் தூளிப டாமெழ
சண்டைக்கெய்த் தாரம ராபதி குடியேறத்-

---

* தொக்கு ஆதி = சரீர சிருட்டிக்குத் தலைவ னான பிரமன்.
† ஆதி = 'ஆதிமூலம்' என்னும் விஷ்ணு.

தங்கச்*செக் கோலசை சேவக
கொங்கிற்றெக் காரவி ஈாசியில்
தண்டைச்†சிக் காரயில் வேல்விடு பெருமாளே. (உ)

949.

மனத்தி னைந்தெழு மீனாயு மேலிட
கறுத்த குஞ்சியு மேனரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேனடை தடுமாறி-
வருத்த மூன்தர தாய்மனீ யாள்மக
வெறுத்தி டங்கினீ யோருடன் யாவரும்
வசைக்கு ழுஞ்சொலி னுல்மிக வேதின நகையாட;
எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ திர்ந்தழல் வாய்விட வேபய முறவேதான்-
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்;
கனத்த செந்தமி ழால்நினை யேதின
நினைக்க வுந்தரு வாயுன தாரருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்-
கடற்ச லந்தனி லேயொளி சூரனை
யுடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா;
அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசர்-
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு வாரம ராய்புரி
யருட்செ றிந்தவி ஈாசியுள் மேவிய பெருமாளே.(ஊ)

---

* செக்கோல்=செங்கோல். † சிக்கார=சிங்கார.

திருப்புக்கொளியூர்.

[இஃது அவிநாசிக்குச் சமீபம். சுந்தாமூர்த்தி ஸ்வாமிகள் முதலேவாயினின்றும் பிராமணப் பிள்ளேயை மீட்டுக் கொடுத் தருளிய எரிக்குத் தெற்கில் இவ்வூர் இருந்ததாம். இப்பொழுது கொல்லே வெளியா யிருக்கின்றது.]

950.

படிக்குவ வாசார லட்சண சாகாதி
பட்சண மாமோன சிவயோகர்-
பத்தியி லாறுறு தத்துவ மேல்வீடு
பற்றுகி ராதார நிலையாக;
அக்கண மேமாய தூர்க்குணம் வேறுக
அப்படை யேஞான வுபதேசம்-
அக்கற வாய்பேசு சற்குரு நாதாவு
னற்புத சீர்பாத மறவேனே;
உக்கிர வீராறு மெய்ப்புய னேலே
வுற்பல வீராசி மணநாற-
ஒத்தகி லாவீசு நித்தில நீராவி
யுற்பல ராசிவ வயலூரா;
பொக்கமி லாவீர விக்ரம மாமேனி
பொற்ப்ரபை யாகார அவிநாசிப்-
பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
புக்கொளி யூர்மேவு பெருமாளே. (க)

951.

மதப்பட்டவி சாலக போலமு
முகப்பிற்சன வாடையு மோடையு
மருக்கற்புர லேபல லாடமு மஞ்சையாரி-
வயிற்றுக்கிடு சிகர பாணியு
மிதற்செக்கர்வி லோசன வேகமு
மணிச்சத்தக டோரபு ரோசமு மொன்றுகோல;

விதப்பட்டவெ ளானையி லேறியு
நிறைக்கற்பக நீழலி லாறியும்
விஷத்துர்க்கன சூளிகை மாளிகை யிந்த்ரலோகம்-
விளக்கச்சுரர் சூழ்தர வாழ்தரு
பிரப்புத்வகு மாரசொ ரூபக
வெளிப்பட்டெனை யாள்வய லூரிலி ருந்தவாழ்வே;
இதப்பட்டிட வே*கம லாலய
வொருத்திக்கிசை வானபொ ஞயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய தொண்டர்தாள-
இசைக்கொக்கவி ராசத பாவனை
யுளப்பெற்றுரு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென வந்துகானிற்;
றிதப்பட்டெதி ரேபொதி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியி லேவரு
திசைக்குற்றச காயனு மாகிம றைந்துபோமுன்-
செறிப்பித்தக ராவதின் வாய்மக
வழைப்பித்தபு ராணக்ரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே. ()

952.

வனப்புற்றெழு கேத மேவு கோகிலம்
அழைக்கப்பொரு மார னேவ தாமலர்
மருத்துப்பயில் தேரி லேறி மாமதி †தொங்கலாகி-
மறுத்துக்கடல் பேரி மோத வேயிசை
பெருக்கப்படை கூடி மேலெ ழாவணி
வகுத்துக்கொடு சேம மாக மாலையில் வந்துகாதிக்;
கனக்கப்பறை தாய ளாவ ரீள்கன
கருப்புச்சிலை காம ரோவில் வாளிகள்
களித்துப்பொர வாசம் வீசு வார்குழல் மங்கைமார்கள்-

---

* கமலாலய ஒருத்தி = திருவாரூரிற் பரவையார்.

† தொங்கல் = வெண்குடை.

கலைக்குட்படு பேத மாகி மாயும
தனைக்குப்ரிய மோக்ரு பாக ராஇது
கடைக்கப்படு நாம மான ஞானம தென்றுசேர்வேன்;
புனத்திற்றினை காவ லான காரிகை
தனப்பொற்குவ டேயு மோக சாதக
குனித்தப்பிறை சூடும் வேணி நாயகர் நன்குமாரா-
பொறைக்குப்புவி போலு நீதி மாதவர்
சிறக்கத்தொகு பாசி சோலை மாலிகள்
புயத்துநீறணி பாவ சூர ரருயிர் கொண்டவேலா;
சினத்துக்*கடி வீசி மோது மாகட
லடைத்துப்பிசி தாச ரதி மாமுடி
தெறிக்கக்கணை யேவு வீர மாமனும் உந்திமீதே-
செனித்துச்சதுர் வேத மோது நாமனு
மதித்துப்புகழ் சேவ காவி ழாமலி
திருப்புக்கொளி யூரில் மேவு தேவர்கள் தம்பிரானே. (ங)

பேரூர்.

[கோயமுத்தூர் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 3-மைல். தேவார வைப்புஸ்தலம். ஸ்தலபுராணம் உண்டு.]

953.

தீராப் பிணிதீர - சிவாத் துமஞான ;
ஊராட் சியதான - ஓர்வாக் கருள்வாயே ;
பாரோர்க் கிறைசேயே - பாலாக் கிரிராசே ;
பேராற் பெரியோனே - பேரூர்ப் பெருமாளே. (க)

954.

மைச்சு ரோருக நச்சு வாள்விழி
மாது ரோடே நாணர் நீயா செனுமாறு-

---

* கடி = விரைவாக.

வைத்த போதக சித்த யோகியர்
வாணுள் கோணுள் வீணுள் காணு ரதுபோலே ;
நிச்ச மாகவு மிச்சை யானவை
நேரே தீரா வூரே பேரே பிறவேயென்-
நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே ;
மிச்ச சோருக வச்ர பாணியன்
வேதா வாழ்வே நாதா தீதா வயலூரா-
வெற்பை யூடுரு வப்ப டாவரு
வேலா சீலா பாலா காலா யுதமாளி ;
பச்சை மாமயில் மெச்ச வேறிய
பாகா சூரா வாகா போகா தெனும்வீரா-
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரு ராசூழ் பேரூ ராள்வார் பெருமாளே. (உ)

[☞690-ஆம் பாடலையும் இத்தலத்துக்கு உரியதாகக் கொள்ளலாம்.]

கொடும்பாளூர்.

[திருச்சிராப்பள்ளிக் கடுத்த விராலிமலையிலிருந்து 3-மைல். ராமநாதபுரத்துக் கடுத்த உத்தரகோச மங்கைக்குச் சமீபத்திற் "கொடுமளூர்க் குமரன்கோயில்" என்னும் ஒரு சுப்பிரமணியர் கோயில் இருக்கின்றதாம்.]

955.

கலைஞரெணுங் கற்புக் கலியுகபந் தத்துக்
கடனையம் பட்டுக் கசடாகுங்-
கருமசடங் கச்சட் சமயிகள்பங் கிட்டுக்
கலகலெனுங் கொட்புற் றுடன்மோதும் ;
அலகில்பெருந் தர்க்கப் பலகலியின் பற்றற்
றரவியிடந் தப்பிக் குறியாத-

அறிவையறிந் தப்பற் றதனிலொடுஞ் சற்றுற்
றருள்வசனங் கிட்டப் பெறலாமோ ;
கொலைஞரெனுங் கொச்சைக் குறவரிளம் பச்சைக்
கொடிமருவுஞ் செச்சைப் புயமார்பா-
கொடியநெடுங் கொக்குக் குறுகவுணன் பட்டுக்
குரைகடல்செம் பச்சக் காவாளச் ;
சிலைபகளண் டிக்குத் திகிரிகளும் பத்துத்
திசைகளினுந் தத்தச் செகமேழுந்-
திருகுசிகண் டிப்பொற் குதிரைவிடுஞ் செட்டித்
திறலகோடும் பைக்குட் பெருமாளே.

கீரனூர்.

[பழநிக்கு வடக்கு 10-மைல். தாராபுரம் போகும் வழி.]

956.

தோர மோடுசி ரித்துவ ருத்தவும்
நாத கீதந டிப்பிலு ருக்கவும்
ஏவ ராயினு மெத்திய ழைக்கவு மதராஜன்-
*ஏவின் மோதுக ணிட்டும ருட்டவும்
வீதி மீதுத லைக்கடை நிற்கவும்
ஏறு மாறும னத்தினி னைக்கவும் விலைகூறி ;
ஆர பாரதனத்தைய சைக்கவு
மாலை யோதிகு லைத்துமு டிக்கவும்
ஆடை சோரஅ விழ்த்தரை சுற்றவும் அதிமோக-
ஆசை போல்மன இஷ்டமு ரைக்கவு
மேல்வி ழாவெகு துக்கட்வி லக்கவும்
ஆன தோதக வித்தைகள் கற்பவ ருறவாமோ ;
பார மேருப ருப்பத மத்தென
நேரி தாகவ டுத்துட னட்டுமை
பாக ராவ டப்பணி சுற்றிடு கயிறுகப்-

---

* ஏவின் = அம்பு போல.

பாதி வாலிபி டித்திட மற்றொரு
பாதி தேவர் பிடித்திட லக்ஷ்மி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு ;
கீர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தைய ளித்தக்ரு
பாரு வாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே-
கேடி லாவள கைப்பதி யிற்பல
மாட கூடம லர்ப்பொழில் சுற்றிய
கீர னூருறை சத்தித ரித்தருள் பெருமாளே.

குளந்தைநகர்.

[‘குளந்தைநகர்’ என்பது ‘பெரியகுளம்’. மதுரைஜில்லா “கொடைக்கானல் ரோட்” என்னும் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 28-மைல்.]

பு. 957.

தரங்க வார்குழற் றதுதுதல் விழியாலம்-
தகைந்த மாமுலைத் துடியிடை மடமாதர் ;
பரந்த மாலிருட் படுகுழி வசமாகிப்-
பயந்து காலனுக் குயிர்க்கொடு தவியாமல் ;
வரந்த ராவிடிற் பிறரெவர் தருவாரே-
மகிழ்ந்து தோகையிற் புவிவலம் வருவோனே ;
குரும்பை மாமுலைக் குறமகண் மணவாளா-
குளந்தை மாநகர்த் தளியுறை பெருமாளே.

தனிச்சயம்.

[இது மதுரைக்கு மேற்கே யுள்ளது. சோழவந்தான் சப்டிஸ்டிரிக்டைச் சேர்ந்தது. “ஐயங்கோட்டை தனிச்சயம்” என வழங்கும். பாண்டியன் தனித்து நின்று இந்திரனை ஜயித்த இடம்.]

958.

இலச்சுருட்கொ டுத்தணைத் தலத்திருத்தி மட்டைகட்
கிதத்தபுட்கு ரற்கள்விட் டதுராகம்-
எழுப்பிமைக்க யற்கணைக் கழுத்தைமுத்த மிட்டணைத்
தெடுத்திதழ்க்க டித்துரத் திடைதாவி ;
அலைச்சலுற்றி லச்சையற் றரைப்பைதொட்டு ழைத்துழைத்
தலக்கணுற்று யிர்க்களைத் திடவேதான்-
அறத்தவித்தி ளைத்துறத் தனத்தினிற்பு ணர்ச்சிபட்
டயர்க்குமிப்பி றப்பினித் தவிராதோ ;
கொலைச்செருக்க ரக்கரைக் கலக்குமிக்க குக்குடக்
கொடித்திருக்க ரத்தபொற் பதிபாடுங்-
குறித்தநற்றி ருப்புகழ்ப் ப்ரபுத்துவக்க வித்துவக்
குருத்துவத்தெ ணைப்பணித் தருள்வோனே ;
தலைச்சுமைச்ச டைச்சிவற் கிலக்கணத்தி லக்கியத்
தமிழ்த்ரயத்த கத்தியற் கறிவோதுஞ்-
சமர்த்தரிற்ச மர்த்தபச் சிமத்திசைக்கு ளுத்தமத்
தனிச்சயத்தி னிற்பிளைப் பெருமாளே. (க)

959.

உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்
கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்
தொலித்தி டுஞ்செவி செவிடுற வொண்கட் குருடாகி-
உரத்த வெண்பலு நழுவிம தங்கெட்
டிரைத்து கிண்கிணை னிருமலெ ழுந்திட்
டுளைப்பு டன்தலை கிறுகிறெ னும்பித் தமுமேல்கொண்;
டரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்து ளஞ்செயல் வசனம் வரம்பற்
றடுத்த பெண்டிரு மெதிர்வ ரிந்தித் தனவோரும்-
அசுத்த னென்றிட வுணர்வது குன்றித்
துடிப்ப துஞ்சிறி துளதில தென்கைக்
கவத்தை வந்தயி ரலமரு மன்றைக் கருள்வாயே ;

திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்
டுடுட்டு டுண்டுடு டுடுடுடு டுண்டுட்
டிகுட்டி குண்டிகு டிகுடிகு டிண்டிட் டிகுதீதோ-
திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை துந்துமி மூரசு முழங்கச்
செருக் களந்தனில் நிருதர் தயங்கச் சிலபேய்கள்;
தரித்து மண்டையி லுதிர மருந்தத்
திரட் பருந்துகள் குடர்கள் பிடுங்கத்
தருக்கு சம்புகள் நிணமது சிந்தப் பொரும்வேலா-
* தடச் சிகண்டியில் வயலியி லன்பைப்
படைத்த நெஞ்சினி லியல்செறி கொங்கிற்
றனிச்ச யந்தனி லினிதுறை கந்தப் பெருமாளே.(உ)

மதுரை.

[இஃது ஆலவாய், கூடல் எனவும் பெயர்பெறும். பொற் றூமரைத் தீர்த்தம். சிவபெருமான் சங்கப்புலவர்களுடன் வீற் றிருந்து தமிழை வளர்த்தருளிய திருப்பதி. திருஞான சம்பந்த ஸ்வாமிகள் சமணரை வாதில் வென்ற வளம்பதி. ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகள் பொருட்டுச் சிவபிரான் நரிபரியாக்கிய திருநகர். அவர் இதுபோல் சுசு-திருவிளையாடல்களே இயற்றியருளிய அரு நகர். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது ஸ்தல புராணங்கள் உள்ளன.]

960.

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலிதொளை யுருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக-
அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்பெ லாமுரு கன்புரிதோ;

---

* "தழைத்த கண்டியில் வயலியி லன்பை" என்றும் பாடம்.

கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவுங்-

கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு முதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென் ;

இலகுக டலைகற் கண்டு தேரொடு
மிரதமு முதிரைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகரும் பெம்பி ராலைரு கொம்பினுலே-

எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை யன்றுசூழ ;

வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுணை மூண்டுலாவு-

மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ராற்தொழு தம்பிரானே. (க)

961.

ஆனைமுக வற்கு நேரிளைய பத்த
ஆறுமுக வித்த கமரேசா-

ஆதியர னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆணமு ரைத்த குருநாதா ;

தானவர் குலத்தை வாள்கொடு துணித்த
சால்சதுர் மிகுத்த திறல்வீரா-

தாளினைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே ;

வானெழு புவிக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கு மறியாத-

மாம்துரை சொக்கர் மாதுமை களிக்க
மாமயில் நடத்து முருகோனே ;
தேனெழு புனத்தில் மான்விழி குறத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா-
தேவர்கள் கருத்தில் மேவிய பயத்தை
வேல்கொடு தணித்த பெருமாளே. (உ)

962.

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
* பவனி வரும்படி யதனுலே-
பகர வளங்களு நிகர விளங்கிய
† இருளை விடிந்தது நிலவாலே ;
வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசை தரும்பத மதுபாடி-
வளமொடு செந்தமி ழுரைசெய அன்பரு
மகிழ வரங்களு மருள்வாயே ;
அரஹர சுந்தர அறுமுக என்றுனி
அடியர் பணிந்திட மகிழ்வோனே-
அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
குறமக ளிங்கித மணவாளா ;
கருதரு கிண்புய சரவண குங்கும
களபம ணிந்திடு மணிமார்பா-
கனக மிகும்பதி மதுரை வளம்பதி
யதனில் வளர்ந்தருள் பெருமாளே. (ங)

963.

பழிப்பர் வாழ்த்துவர் சிலசில பெயர்தமை
ஒருத்தர் வாய்ச்சுரு ளொருவர்கை யுதவுவர்
பணத்தை நோக்குவர் பிணமது தழுவுவர்
அளவளப் பதனுலே-

---

* பவனி வரும்படி யதனுலே = பவனிவருந் தரத்தைச் சிறப்பித்தும். † இருளை விடிந்தது நிலவாலே = இருளைப் போக்கி உதயமாகுஞ் சந்திரனைச் சிறப்பித்தும்.

படுக்கை வீட்டினு ளவுஷத முதவுவர்
அணைப்பர் கார்த்திகை வருதென வுறுபொருள்
பறிப்பர் மாத்தையி லொருவிசை வருகென
அவரவர்க் குறவாயே ;
அழைப்ப ராஸ்திகள் கருதுவ ரொருவரை
மூடுக்கி யோட்டுவ ரழிகுடி யரிவையர்
அலட்டி னுற்பிணை யெருதென மயலெனு
நரகினிற் கழல்வேனே-
அவத்த மாய்ச்சில படுகுழி தனில்விழும்
விபத்தை நீக்கியு னடியவ ருடனெணை
அமர்த்தி யாட்கொள மனதினி லருள்செய்து
கதிதனைத் தருவாயே ;
தழைத்த சாத்திர மறைபொரு ளறிவுள
குருக்கள் போற்றிவ நெறிதனை யடைவொடு
தகப்ப னுர்க்கொரு செவிதனி லுரைசெய்த
முருகவித் தகவேளே-
சமத்தி னுற்புகழ் சனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கத னுடலது துணிசெய்து
சயத்த யோத்தியில் வருபவ னரிதிரு
மருமகப் பரிவோனே ;
செழித்த வேற்றணை யசுரர்க ளுடலது
பிளக்க வோச்சிய பிறகம ரர்கள்பதி
செலுத்தி யீட்டிய சுரபதி மகள்தணை
மணமதுற் றிடுவோனே-
திறத்தி னுற்பல சமணரை யெதிரெதிர்
கழுக்க ளேற்றிய புதுமையை யினிதொடு
நிருத்த மாய்ப்புகழ் மதுரையி லுறைதரும்
அறுமுகப் பெருமாளே. (ச)

964.

சீத வாசணை மலர்க்குழல்பி லுக்கிமுக
மாய வேல்விழிபு ரட்டிநகை முத்தமெழ
தேமல் மார்பினிள பொற்கிரி பளப்பளென
தொங்கலாரஞ்-

சேரு மோவியமெ னச்சடமி னுக்கிவெகு
வாசை நேசமும்வி னோத்துஇடை யுற்றவரி
சேலை காலில்விழ விட்டுநடை யிட்டுமயி லின்கலாபச்;
சாதி யாமெனவெ ருட்டிநட மிட்டுவலை
யான பேர்தமையி ரக்கவகை யிட்டுகொடி
சாக நோய்பிணிகொ டுத்திடர்ப டுத்துவர்கள் பங்கினூடே-
தாவி மூழ்கிமதி கெட்டவல முற்றவனை
பாவ மானபிற விக்கடலு ழப்பவனை
தாரு லாவுபத பத்தியிலி ருத்துவது மெந்நாளோ;
வாத ஆரணம தித்தொருகு ருக்களென
ஞான பாதம்வெளி யிட்டுரரி யிற்குழுவை
வாசி யாமெனந டத்துவகை யுற்றரச னண்புகாண-
மாடை யாடைதர பற்றிமுன கைத்துவைகை
யாறின் மீதுநட மிட்டுமணி டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுதுகர் பித்தனருள் கந்தவேளே;
வேத லோகர்பொனி லத்தர்தவ சித்தரதி
பார சீலமுனி வர்க்கமுறை யிட்டலற
வேலை யேவியவு ணக்குலமி றக்கநகை கொண்டசிலா-
வேத மீனகம லக்கணர்மெய் பச்சைசரு
ராம ரீணமயி லொக்கமது ரைப்பதியின்
மேவி வாழமரர் முத்தர்சிவ பத்தர்பணி தம்பிரானே. (நு)

965.

புருவச் செஞ்சிலை கொண்டிரு கணைவிழி
யெறியக் கொங்கையி ரண்டெனு மதகரி
பொரமுத் தந்தரு பிங்கித நயவித மதனுலே-
புகலச் சங்கிசை கண்டம தனிலெழு
உருவச் செந்துவர் தந்தத ரமுமருள்
புதுமைத் தம்பல முஞ்சில தரவரு மனதாலே;
பருகித் தின்றிட லஞ்சக மெனமன
தருகிக் குங்கும சந்தன மதிவியர்
படியச் சம்பிரம ரஞ்சித மருள்கல வியினுலே-

பலருக் குங்கடை யென்றெனை யிகழவு
மயலைத் தந்தரு மங்கையர் தமைவெகு
பலமிற் கொண்டிடு வண்டனு முனதடி பணிவேனெ;

திருவைக் கொண்டொரு தண்டக வனமிசை
வரவச் சங்கொடு வந்திடு *முழையுடல்
சிதறக் கண்டக வெங்கர னெடுதிரி சிரனெடு-

திமிற் றங்கிய கும்பக னெருபது
தலைபெற் றும்பரை வென்றிடு மவனெடு
சிலையிற் கொன்றமு குந்தன லகமகிழ் மருகோனே;

மருவைத் துன்றிய பைங்குழ லுமையவள்
சிவனுக் கன்பரு ளம்பிகை கவுரிகை
மலையத் தன்தரு சங்கரி கருணைசெய் முருகோனே-

வடவெற் பங்கய லன்றணி குசசர
வணையிற் றங்கிய பங்கய முகதமிழ்
மதுரைச் சங்கிலி மண்டப இமையவர் பெருமாளே. (சு)

966.

முகமெ லாநெய் பூசித் தயங்கு
நுதலின் மீதி லேபொட் டணிந்து
முருகு மாலை யோதிக் கணிந்த மடமாதர்-

முதிரு மார பாரத் தனங்கள்
மிசையி லாவி யாய்நெக் கழிந்து
முடிய மாலி லேபட் டலைந்து பொருள்தேடிச்;

செகமெ லாமு லாவிக் கரந்து
திருட னுகி யேசற் றுழன்று
திமிர னுகி யோடிப் பறந்து திரியாமல்-

தெளியு ஞான மோதிக் கரைந்து
சிவபு ராண நூலிற் பயின்று
செறியு மாறு தாளைப் பரிந்து தரவேணும்;

---

* உழை=மானுருக்கொண்ட மாரீசன்.

அகர மாதி யாமகூ ரங்க
ளவனி கால்வி ணூரப் பொடங்கி
அடைய வேக ரூபத்தி லொன்றி முதலாகி-

அமரர் காண வே*யத்த மன்றி
லரிவை பாட ஆடிக் கலந்த
அமல நாத னர்முற் பயந்த முருகோனே ;

சகல வேத் சாமுத்ரி யங்கள்
சமய மாறு லோகத்ர யங்கள்
தரும நீதி சேர்த்தத் துவங்கள் தவயோகம்-

தவறி லாம லாளப் பிறந்த
தமிழ்செய் மாறர் கூன்வெப் பொடன்று
தவிர ஆல வாயிற் சிறந்த பெருமாளே. (எ)

967.

ஏலப்பனி நீரணி மாதர்கள்
கானத்தினு மேயுற வாடிடு
மீரத்தினு மேவஹ சேர்கர மதனுலும்-

ஏமக்கிரி மீதினி லேகரு
நீலக்கய மேறிய னேரென
ஏதுற்றிடு மாதன மீதினு மயலாகிச் ;

சோலைக்குயில் போல்பொழி யாலுமெ
தூசுற்றிடு தூலிடை யாலுமெ
தோமிற்கத லீநிக ராகிய தொடையாலும்-

சோமப்ரபை வீசிய மாமுக
சாலத்தினு மாகடு வேல்விழி
சூதத்தினு நானவ மேதின முழல்வேனை;

ஆலப்பணி மீதினில் மாசறு
மாழிக்கிடை யேதுயில் மாதவ
னணைக்கினி தாயுத வீயருள் நெடுமாயன்-

* அத்த மன்று=பொன்னம்பலம்.

ஆதித்திரு நேமியன் வாமன
னீலப்புயல் நேர்தரு மேனியன்
ஆரத்துள வார்திரு மார்பினன் மருகோனே;
கோலக்கய மாவுரி போர்வையர்
ஆலக்கடு வார்கள நாயகர்
*கோவிற்பொறி யால்வரு மாசுத குமரேசா-
கூர்முத்தமிழ் வாணர்கள் வீறிய
சீரற்புத மாநக ராகிய
கூடற்பதி மீதினில் மேவிய பெருமாளே. (அ)

968.

கலைமேவு ஞானப் பிரகாசக்–கடலாடி ஆசைக் கடலேறி;
பலமாய வாதிற் பிறழாதே–பதிஞான வாழ்வைத் தருவாயே;
மலைமேவு மாயக் குறமாதின்–மனமேவு வாலக் குமரேசா;
சிலைவேட சேவற் கொடியோனே–திருவாலி கூடற் பெருமாளே.

969.

நீதத் துவமாகி– நேமத் துணையாகிப்;
பூதத் தயவான– போதைத் தருவாயே;
நாதத் தொனியோனே–ஞானக் கடலோனே;
கோதற் றமுதானே– கூடற் பெருமாளே. (கo)

970.

மனநினை சுத்தஞ் சூது காரிகள்
அமளிவி லோக்குங் கூளி மூளிகள்
மதபல நித்தம் பாரி நாரிக ளழகாக-
வளைகுழை முத்தும் பூணும் வீணிகள்
விழலிகள் மெச்சுண் டாடி பாடிகள்
வரமிகு வெட்கம் போல வோடிகள் தெருவூடே;
குனகிகள் பகுடம் போல பேசிகள்
தனகிரி ரிச்சம் பேசி கூசிகள்
குசலிகள் வர்க்கஞ் சூறை காரிகள் பொருளாசைக்-

* கோ = கண்.

கொளுவிக ளிஷ்டம் பாறி வீழ்படட
அருளமு தத்தின் சேரு மோர்வழி
குறிதனி லுய்த்துன் பாத மேறிட அருள்தாராய்;

தனதன தத்தந் தான தானன
டுடுடு டுட்டுண் டுடு டுடுடு
தகுதிகு தத்தந் தீத தோதக எனபேரி-

தவில்முர சத்தந் தாரை பூரிகை
வனிதுடி பொற்கொம் பார சூரரை
சமர்தனில் முற்றும் பாறி றூறிட விடும்வேலா;

திணைவன நித்தங் காவ லாளியள்
நகைமுறை மூத்தின் பாவை மான்மகள்
திகழ்பெற நித்தங் கூடி யாடிய முருகோனே-

திரிபுர நக்கன் பாதி மாதுறை
யழகிய சொக்கன் காதி லோர்பொருள்
செலவரு ளித்தென் கூடல் மேவிய பெருமாளே.()

971.

முத்துநவ ரத்நமணி பத்திநிறை சுத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு வெனவோதும்-

முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
மூப்படுமு வர்க்கசுர ரடிபேணி;

பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி
*பற்குனனே வெற்றிபெற ரதமூரும்-

பச்சைநிற மூற்றபுய லச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே;

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்த்ததென தெனனென-

திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை யெனஆடும்;

---

* பற்குனனே = பற்குனன் : அருச்சுனன்.

அத்தனுட னெனத்தநட நித்ரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா-

*அற்பவிடை †தற்பமது முற்றுநிலை பெற்றுவள
‡ரற்§கனக பத்மபுரி பெருமாளே. (கூ)

ஸ்ரீ புருஷமங்கை.

[இது 'நாங்குநேரி' என வழங்கும். திருநெல்வேலியி லிருந்து 19-மைல்.]

972.

ஆடல்மத னம்பின் மங்கைய
ராலவிழி யின்பி றங்கொளி
யாரமத லம்பு கொங்கையின் மயலாகி-

ஆதிகுரு வின்ப தங்கலீ
லீதியுட னன்பு டன்பணி
யாமல்மன நைந்து நொந்துட லழியாதே;

வேடசென நின்ற ஐம்புல
னுகர ணங்க ளின்தொழில்
வேறுபட நின்று ணர்ந்தருள் பெறுமாறென்-

வேடைகெட வந்து சிந்தின
மாயையற வென்று துன்றிய
வேதமுடி வின்ப ரம்பொரு ளருள்வாயே;

தாடகையு ரங்க டிந்தொளிர்
மாமுனிம கஞ்சி றந்தொரு
தாழ்வறந டந்து திண்சில முறியாவொண்-

---

* அற்ப இடை = துண்ணிய இடையையுடைய மாதர்கள்.
† தற்பம் = மெத்தைவீடு. ‡ அல் = மதில்.
§ கனக பத்மம் = பொற் றாமரை.

ஜர்ஙித னங்க லந்தபின்
ஊரில்மகு டங்க டந்தொரு
தாயர்வ சனஞ்சி றந்தவன் மருகோனே;
சேடன்முடி யுங்க லங்கிட
வாடைமுழு தும்ப ரந்தெழ
தேவர்கள்ம கிழ்ந்து பொங்கிட நடமாடுஞ்-
சீர்மயில மஞ்சு துஞ்சிய
சோலைவளர் செம்பொ னுந்திய
ஸ்ரீபுருட மங்கை தங்கிய பெருமாளே. (க)

973.

கார்குழல்கு லைந்த லைந்து வார்குழையி சைந்த சைந்து
காதலுறு சிந்தை யுந்து மடமானுர்-
காமுகர ணங்க லங்க போர்மருவ மூந்தி வந்த
காழ்கடிய கும்ப தம்ப இருகோடார்;
பேர்மருவு மந்தி தந்தி வாரணஅ னங்க னங்க
பேதையர்கள் தங்கள் கண்கள் வலையாலே-
பேரறிவு குந்து நொந்து காதலில லைந்த சிந்தை
பீடையற வந்து நின்ற னருள்தாராய்;
வர்மருவு தண்டை கொண்ட தாளசைய வந்த கந்த
ஏகமயி லங்க துங்க வடிவேலா-
ஏமனுமை மைந்த சந்தி சேவலணி கொண்டு அண்ட
ரீடெறஇ ருந்த செந்தில் நகர்வாழ்வே;
தேருகள்மி குந்த சந்தி வீதிகள ணிந்த கெந்த
சீலர்கு ளுந்து யர்ந்த பொழிலோடே-
சேரவெ யிலங்கு துங்க வாவிக ளிசைந்தி ருந்த
ஸ்ரீபுருட மங்கை தங்கு பெருமாளே. (உ)

974.

வேனின்மத னைந்து பாணம்விட நொந்து
வீதிதொறு நின்ற மடவார்பால்-

திருப்புகழ்.

வேலேயென வந்து தாளினில் விழுந்து
வேடைகெட நண்பு பலபேசித்;
தேனினு மணந்த வாயமுத முண்டு
சீதள தனங்க ளினின்மூழ்கித்-
தேடிய தனங்கள் பாழ்பட முயன்று
*சேர்கதிய தின்றி யுழல்வேனே;
ஆனிரை துரந்து மாநில மளந்தொ
ராலிலேயி லன்று துயில்மாயன்-
ஆயர்மனை சென்று பால்தயி ரளுந்த
ஆரண முகுந்தன் மருகோனே;
வானவர் புகழ்ந்த கானவர் பயந்த
மாணெடு விளங்கு மணிமார்பா-
மாமறை முழங்கு ஸ்ரீபுருட மங்கை
மாநக ரமர்ந்த பெருமாளே. (கூ)

இலஞ்சி.

[இது தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு $3\frac{1}{2}$-மைல் தூரத்தி லுள்ள 'குற்றாலம்' என்னும் ஸ்தலத்துக்குச் சமீபத்தி லுள்ளது.]

975.

கரங்க மலமின தரம்ப வளம்வளை
களம்ப கழிவிழி மொழிபாகு-
கரும்ப முதுமுலை குரும்பை குருகுப
கரும்பி டியினடை யெயின்மாதோ;
டரங்க நககன தனங்கு தலியிசை
யலங்க நியமுற மயில்மீதே-

---

* 'சேர்கதி யகன்று நிரிவேனே';—என்றும் பாடம்.

அமர்ந்து பவவினை களைந்து வருகொடி
யவந்த கனகல வருவாயே ;

தரங்க முதியம கரம்பொ ருததிரை
சலந்தி நதிகும ரெனவான-

தலம்ப ரவமறை புலம்ப வருசிறு
சதங்கை யடிதொழு பவராழி ;

இரங்கு *தொலைதிரு வரங்கர் மருகப
னிரண்டு புயமலை கிழவோனே-

இலங்கு தரதமிழ் விளங்க வருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே. (க)

976.

கொந்தள வோலை குலுங்கிட வாளிச்
சங்குட ணூழி சுழன்றிட மேகக்
கொண்டைகள் மாலை சரிந்திட வாசப் பனிநீர்சேர்-

கொங்கைகள் மார்பு குழைந்திட வாளிக்
கண்கயல் மேனி சிவந்திட கோவைக்
கொஞ்சிய வாயி ரசங்கொடு மோகக் கடலூடே ;

சந்திர ஆர மழிந்திட நூலிற்
பங்கிடை யாடை துவண்டிட நேசத்
தந்திட மாலு தறும்பியு மூழ்குற் றிடுபோ துன்-

சந்திர மேனி முகங்களு நீலச்
† சந்தகி மேல்கொ டமர்ந்திடு பாதச்
‡ சந்திர வாகு சதங்கையு மோசற் றருள்வாயே ;

சுந்தரர் பாட லுகந்திரு தாளைக்
கொண்டுநல் தூது நடந்தவ ராகத்
தொந்தமொ டாடி யிருந்தவள் ஞானச் சிவகாமி-

---

* தொலை = தொல்லை. † சந்தகி = மயில்.

‡ சந்திர வாகு சதங்கை = சுகத்தைச் செய்கின்ற திரமான அழகையுடைய சதங்கை.

தொண்டர்க ளாக மமர்ந்தவள் நீலச்
சங்கரி மோக சவுந்தரி கோலச்
சுந்தரி காளி பயந்தரு ளாணைக் கிளையோனே ;
இந்திர வேதர் பயங்கெட சூரைச்
சிந்திட வேல்கொ டெறிந்துகல் தோகைக்
கின்புற மேவி யிருந்திடு வேதப் பொருளோனே-
எண்புன மேவி யிருந்தவள் மோகப்
பெண்திரு வாகி * மணந்திய லார்சொற்
கிஞ்சி யளாவு மிலஞ்சி விசாகப் பெருமாளே. (உ)

977.

சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரந்தெறி கின்ற விழிவேலால்-
சுழன்று சுழன்று துவண்டு துவண்டு
சுருண்டு மயங்கி மடவார்தோள் ;
விரும்பி வரம்பு கடந்து நடந்து
மெலிந்து தளர்ந்து மடியாதே-
விளங்கு கடம்பு விழைந்தணி தண்டை
விதங்கொள் சதங்கை யடிதாராய் ;
பொருந்த லமைந்து சிதம்பெற நின்ற
பொலங்கிரி யொன்றை யெறிவோனே-
புகழ்ந்து மகிழ்ந்து வணங்கு குணங்கொள்
புரந்தரன் வஞ்சி மணவாளா ;
இரும்புன மங்கை பெரும்புள கஞ்செய்
குரும்பை மணந்த மணிமார்பா-
இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று
இலஞ்சி யமர்ந்த பெருமாளே. (ரு)

978.

மாலையில் வந்து மாலை வழங்கு
மாலை யநங்கன் மலராலும்-

* மணந்தியல் = மணந்த இயல்.

வாடை யெழுந்து வாடை செறிந்து
வாடை யெறிந்த அனலாலுங் ;
கோல மழிந்து சால மெலிந்து
கோமள வஞ்சி தளராமுன்-
கூடிய கொங்கை கீடிய அன்பு
கூரவு மின்று வரவேணும் ;
கால னடுங்க வேலது கொண்டு
கானில் நடந்த முருகோனே-
கான மடந்தை நாண மொழிந்து
காத லிரங்கு குமரேசா ;
சோலை வளைந்து சாலி விளைந்து
சூழு மிலஞ்சி மகிழ்வோனே-
சூரிய னஞ்ச வாரியில் வந்த
சூரனை வென்ற பெருமாளே. (ச)

திருக்குற்றாலம்.

[தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு 3½மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகளுடைய பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

979.

ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடைநி லாவிய
ஏதப்பொற் றேள்மிசை மூடிய கரமாதர்-
ஏதத்தைப் பேசுப ணுளிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
ஏறிட்டிட் டேணியை வீழ்வீடு முழுமாயர் ;
மாடொக்கக் கூடிய காமுகர்
மூழ்குற்றுக் காயமொ டேவரு
வாயுப்புற் சூலவி யாதிக ளிவைமேலாய்-

மாசுற்றுப் பாசம்வி டாசம
ஞார்புக்குப் பாழ்ந்ர கேவிழு
மாயத்தைச் சிவியு ஞதர வருள்வாயே;

தாடுட்டுட் டுடுடு டீடிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத ஞவென வெகுபேரி-

தாளைத்தப் பூதப சாசுகள்
*வாய்விட்டுச் சூரர்கள் சேனைகள்
சாகப்பொற் ரேகையி லேறிய சதிரோனே;

கூடற்கச் சாலிகி ராமலீ
காவைப்பொற் காழிவெ ளூர்திகழ்
கோடைக்கச் சூர்கரு வூரிலு முயர்வான-

கோதிற்†பத் தாரொடு மாதவ
சிலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் ருலமு லாவிய பெருமாளே. (க)

980.

வேதத்திற் கேள்வி யிலாதது
போதத்திற் காண வொணாதது
வீசத்திற் ரூர மிலாதது கதியாளர்-

ரீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய வொணாதது
வேகத்துத் தீயில் வெகாதது சுடர்கானம்;

வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு-

மாயத்திற் காய மதாசல
நீதர்க்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி யருள்வாயே ;

---

* வாய்விட்டு = வாய்விட. † பத்தார் = பத்தர்கள்.

காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணர்-

காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே ;

கோதைப்பித் தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே-

கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே. (உ)

981.

முத்தோலித ணைக்கி ழித்தயி
லப்போரிக ளிச்சி வத்துமு
கத்தாமரை யிற்செ ருக்கிடும் விழிமானர்-

முற்றுதிள ஙிப்ப ணைத்தணி
கச்சாரம றுத்த நித்தில
முத்தாரம ழுத்து கிர்க்குறி யதனாலே;

வித்தாரக வித்தி றத்தினர்
பட்டோலிகி கர்த்தி ணைத்தெழு
வெற்பானத னத்தில் நித்தலு முழல்வேனை-

மெய்த்தேவர்து திக்தி டத்தரு
பொற்பார்கம லப்ப தத்தினை
மெய்ப்பாகவ ழுத்தி டக்ருபை புரிவாயே ;

பத்தானமு டித்த லைக்குவ
டிற்றுடவ ரக்க ருக்கிறை
பட்டாவிவி டச்செ யித்தவன் மருகோனே-

*பற்பாசன்மி கைச்சி ரத்தைய
றுத்தாதவ னேச்சி னத்துறு
பற்போகவு டைத்த தற்பரன் மகிழ்வோனே ;
கொத்தார்கத விப்ப முக்குலே
வித்தாரவ ருக்கை யிற்சுரா
கொத்தோடுதி ரக்கு திக்தெழு கயலாரங்-
கொட்டாசுழி யிற்கொ ழித்தெறி
சிற்றுறுத னிற்க ளித்திடு
குற்றுலரி டத்தி லுற்றருள் பெருமாளே. (ரு)

ஆய்க்குடி.

[தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கு 5-மைல்.]

982.

வாட்படச் சேனைபட வோட்டியொட் டாரையிறு
மாப்புடைத் தாளரசர் பெருவாழ்வும்
மாத்திரைப் போதிலிடு காட்டினிற் போமெனஇல்
வாழ்க்கைவிட் டேறுமடி யவர்போலக் ;
கோட்படப் பாதமலர் பார்த்திலோப் பாறவினை
கோத்தமெய்க் கோலமுடன் வெகுரூபக்-
கோப்புடைத் தாகியல மாப்பினிற் பாரிவரு
கூத்தினிப் பூரையிட அமையாதோ
தாட்படக் கோபவிஷ பாப்பினிற் பாலன்மிசை
சாய்த்தொடுப் பாரவு†நிள் கழல்தாவிச்-
சாற்றுமக் கோரவுரு கூற்றுதைத் தார்மவுலி
தாழ்க்கவஜ் ராயுதனு மிமையோரும் ;

---

* பற்பாசன் = பத்மாசனன் : பிரமன்.

† 'நீள்' என்பது 'நிள்' எனக் குறுகியது.

ஆட்படச் சாமபா மேட்டியைக் காவலிடு
மாய்க்குடிக் காவலவு தகிமீதே -
ஆர்க்குமத் தானவரை வேற்கரத் தால்வரையை
ஆர்ப்பெழச் சாடவல பெருமாளே.

திருப்புத்தூர்.

[மதுரைக்கு வடகிழக்கு 30-மைல். அறந்தாங்கிக்குத் தென் மேற்கு 27-மைல். திருஞான சம்பந்த ஸ்வாமிகள், திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு. திருப்புத்தூருக்கு வடமேற்கு 15-மைலிற் 'பிரான்மலை' என்று வழங்கும் கொடுங்குன்றமும், திருப்புத்தூருக்குக் கிழக்கு 7-மைலிற் குன்றக்குடியும் இருக்கின்றன.]

983.

கருப்புச் சாப னணைய இளைஞர்கள்
ப்ரமிக்கக் காத லுலவு நெடுகிய
கடைக்கட் பார்வை யினிய வனிதையர் தனபாரங்-
களிற்றுக் கோடு கலச மலிநவ
மணிச்செப் போடை வனச நறுமலர்
கனத்துப் பாளை முறிய வருநிக ரிளநீர்போலும் ;
பொருப்பைச் சாடும் வலியை யுடையன
அறச்சற் றுன இடையை நலிவன
புதுக்கச் சார வடமொ டடர்வன எனநாளும்-
புகழ்ச்சிப் பாட லடிமை யவரவர்
ப்ரியப்பட் டாள வுரைசெ யிழிதொழில்
*பொகட்டெப் போது சரியை கிரியைசெய்
துயிர்வாழ்வேன் ;

---

* பொகட்டு=போகவிட்டு.

இருட்டுப் பாரில் மறலி தனதுடல்
பதைக்கக் கால்கொ டுதைசெய் தவன்விழ
*எயிற்றுப் போவி யமர ருடலவர் தலைமாலை-

எலுப்புக் கோவை யணியு மவர்மிக
அதிர்த்துக் காளி வெருவ நொடியினி
லெதிர்த்திட் டாடும் வயிர பயிரவர் நவநீத;

திருட்டுப் பாணி யிடப முதுகிடை
சமுக்கிட் டேறி யதிர வருபவர்
செலுத்துப் பூத மலகை யிலகிய படையாளி-

செடைக்குட் பூளை மதிய மிதழிவெ
ளெருக்குச் சூடி குமர வயலியல்
திருப்புத் தூரில் மருவி யுறைதரு பெருமாளே. (க)

984.

வேலை தோற்க விழித்துக் காதினி
லோலை காட்டி நகைத்துப் போதொரு
வீடுகாட்டி யுடுத்தப் போர்வையை நெகிழ்வாகி-

மேனி காட்டி வளைத்துப் போர்மூலை
யாணை காட்டி மறைத்துத் தோதக
வீறு காட்டி யெதிர்த்துப் போரெதிர் வருவார்மேல்;

கால மேற்க வுழப்பிக் கூறிய
• காசு கேட்டது கைப்பற் றுஇடை
காதி யோட்டி வருத்தப் பாடுடன் வருவார்போல்-

காதல் போற்று மலர்ப்பொற் பாயலின்
மீத ணைப்பு மசட்டுச் சூளைகள்
காம நோய்ப்படு சித்தத் தீவினை யொழியேனே;

ஆல கோட்டு மிடற்றுச் சோதிக
பாலி பார்ப்பதி பகூதத் தால்நட
மாடி காத்திரி பட்சித் தாவென வுமிழ்வாளி-

---

* எயில் துப்பு ஒவி = திரிபுரங்களின் வலியைத் தொலைத்து.

ஆடல் கோத்த சிலைக்கைச் சேவக
ஞைடை பூத்த தளக்கட் சானவி
யாறு தேக்கிய கற்றைச் சேகர சடதாரி;
சில மாப்பதி மத்தப் பாரிட
சேஜை போற்றிடு மப்பர்க் கோதிய
சேத னூர்த்தப்ர சித்திக் கேவரு முருகோனே-
சேல ருக்கயல் தத்தச் சூழ்வய
லூர வேற்கர விப்ரர்க் காதர
தீர தீர்த்த திருப்புத் தூருறை பெருமாளே. (உ)

திருவாடானை.

[மானமதுரை ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து, சிவகங்கை, காளையார்கோயில் என்னும் ஊர்கள் வழியாகப் போஞல் 44-மைல். பரமகுடி, இராமநாதபுரம், அறந்தாங்கி ஆகிய ரெயில்வே ஸ்டேஷன்களி லிருந்து 30-மைல். ஆனல் இவ்வழிகள் கஷ்டம். திருஞானசம்பந்த ஸ்வாமிக ளுடைய பாடல் பெற்றது.]

985.

ஒளரு முட்பிணியு மானக வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனல்-
ஊரார் குவித்துவர ஆவா வெனக்குறுகி
ஓயா முழக்கமெழ அழுதோய;
நாஞ விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாரு தெடுத்தடவி யெரியூடே-
நாணுமல் வைத்துவிட நீருமெ னிப்பிறவி
நாடா தெனக்குனருள் புரிவாயே;
மானக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே-
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வாஞரு மட்டகுல கிரியாவும்;

ஆனவரக்கருடன் வானுர் பிழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்-
ஆசார பத்தியுடன் ஞானக மத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே.

உத்தரகோசமங்கை.

[ராமநாதபுரம் ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து 7-மைல். இது மாணிக்கவாசக ஸ்வாமிகளால் மிகப் பாராட்டப்பெற்றது. ஸ்தலபுராணம் உண்டு.]

பு. 986.

கற்பக ஞானக் கடவுண்மு ணண்டத்
திற்*புத சேனைக் கதிபதி யின்பக்
கட்கழைதபாகப் பமமுது வெண்சர்க் கரைபால்தேன்-
கட்டிள நீர்முக் கனிபய றம்பொற்
ரெருப்பையி னேறிட் டருளிய தந்திக்
கட்டினை யாய்பொற் பதமதி றைஞ்சிப் பரியாய;
பொற்சிகி யாய்கொத் தருண்மணி தண்டைப்
பொற்சரி நாதப் பரிபுர என்றுப்
பொற்புற வோதிக் கசிவொடு சிந்தித் தினிதேயான்-
பொற்புகழ் பாடிச் சிவபத மும்பெற்
றுப்பொருள் ஞானப் பெருவெளி யும்பெற்
றுப்புக லாகத் தமுதையு முண்டிட் டிடுவேனே;
‡தெற்ப முளாகத் திரள்பரி யும்பற்
குப்பை களாகத் தசுரர்பி ணந்திக்
கெட்டையு மூடிக் குருதிகள் §மங்குற் செவையாகித்-
திக்கய மாடச் சிலசில பம்பைத்
தத்தன தானத் தடுடுடு வென்கச்
செப்பறை தாளத் தகுதொகு வென்கச் சிலபேரி;

---

* புத சேனை = தேவசேனை. † பாகு அப்பம் அமுது.
‡ தெற்பம் = போர்ச் செருக்கு. § மங்குல் = திசை.

*உற்பன் மாகத் †தடிபடு ‡சம்பத்
தற்புத மாகத் தமரர்பு ரம்பெற்
றுட்செல்வ மேவிக் கனமலர் சிந்தத் தொடுவேலா-
§உட்பொருள் ஞானக் குறமக ளும்பற்
சித்திரை கீடப் பரிமயில் முன்பெற்
றுத்தர கோசத் தலமுறை கந்தப் பெருமாளே.

இ ரா மே சு ர ம்.

[ரெயில்வே ஸ்டேஷன். திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திரு நாவக்கரசு ஸ்வாமிகள் ஆகிய இருவர் பாடல் பெற்றது. ஸ்தல புராணம் உண்டு.]

987.

வாலவய தாகியழ காகிமத ஞகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகி||மட கூடமொடு பொருள்தேடி-
வாசபுழு கேடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களே மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்த்;
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்-
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழுறு மூலகசு மாலமென நாறியுட லழிவேனே;

---

* உற்பனம் = தோற்றம். † தடி = மின்னல். ‡ சம்பம் = இடி.
§ உட்பொருள் ஞானக் குறமக ளும்பொற்
சித்திர நீலப் பரிமயி லுஞ்சுற்
றுத்தர கோசத் தருள்கொடு கந்தப் பெருமாளே.—
என்றும் பாடம். || மட கூடம் = மாட கூடம்.

நாலுமுக ஞதியரி யோமென*அ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மீவையோனே-
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வாணமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா;
ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக ணேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக-
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவலீ
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காளனெவ
யோதமறை ராமெசுர மேவுகும ராவமரர் பெருமாளே. (க)

988.

வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை யறியாதே-
மானுர் வலிக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே யணைத்துதவு மதனுலே ;
தேனே கருப்பிலெழு பாகோ விதற்கிணைக
ளேதோ வெனக்கலவி பலகோடி-
தீரா மயக்கிலெடு நாகா படத்திலெழு
சேருடல் பெற்றதுய ரொழியேனே ;
மேனாடு பெற்றுவளர் சூராதி பற்கெதிரி
னூடேகி நிற்குமிரு கழலோனே-
மேகார வுக்ரபரி தானேறி வெற்றிபுனை
வீரா குறச்சிறுமி மணவாளா ;
ஞாலு பாற்கினிய வேதாக மப்பொருளீ
நாணு துரைக்குமொரு பெரியோனே-
நாரா யணற்குமரு காவீறு பெற்றிலகு
ராமே சுரத்திலுறை பெருமாளே. (உ)

---

* அதாரம் = ஆதாரம்.

எஅக

இடம் விளங்காத ஸ்தலங்கள்.

1. இந்தம்பலம்.

989.

அமல கமலவுரு சங்கந் தொனித்த*மறை
அரிய பரமவெளி யெங்கும் பொலித்தசெய
† ளவு மசலமது கண்டங் கொருத்தருள வறியாத-
தகர முதலுருகொ ளோம்பந் தொரகூரமொ
டகில புவனநதி யண்டங் களுக்குமுத
லருண கிரணவொளி யெங்கெங் குமுற்றுமுதல் நடுவான;
கமல துரியமதி லிந்துங் கதிர்ப்பரவு
கனக நிறமுடைய பண்பம் ‡ படிக்கதவ
ககன சுழிமுனையி § லஞ்சுங் களித்தமுத சிவயோகம்-
கருணை யுடனறிவி தங்கொண் டிடக்கவுரி
குமர குமரகுரு வென்றென் றுரைப்பமுது
கனிவு வரஇளமை தந்துன் பதத்திலெனை யருள்வாயே;
திமிலை பல||முருடு திந்திந் திமித்திமித
டுமுட டுமுடுமுட டுண்டுண் டுமுட்டுமுட
திகுட திகுடதிகு திந்திந் திகுர்த்திகுர்த திகுதீதோ-
செகண செகணசெக செஞ்செஞ் செகக்கணென
அகில முரகன்முடி யண்டம் பிளக்கவெகு
திமிர்த குலவிருது சங்கந் தொனித்தசுரர் களமீதே;
அமரர் குழுமிமலர் கொண்டங் கிறைத்தருள
அரிய குருகுகொடி யெங்குந் தழைத்தருள
அரியொ டயன் முனிவ ரண்டம் பிழைத்தருள விடும்வேலா-

---

* மறை = இரகசியம். † அளவும் = அளவிட் டறியும்.
‡ படிக் கதவம் = படிகக் கதவு.
§ அஞ்சும் = பஞ்சேந்திரியங்களும்.
|| முருடு = ஒரு வாத்தியம்.

அரியின் மகள்தனமொ டங்கம் புதைக்கமுக
அழகு புயமொடணை யின்பங் களித்துமகிழ்
அரிய மயிலயில்கொ டிந்தீ பலந்தின்மிழ் பெருமாளே.

---

2. எழுகரைநாடு.

990.

விரகற நோக்கியு முருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்-
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமார ;
முருகஷ டாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி-
மொழிகுழ றுத்தொழு தழுதழு தாட்பட
*முழுதும லாப்பொருள் தந்திடாயோ ;
பரகதி காட்டிய விரகசி லோச்சய
பரமப ராக்ரம சம்பராரி-
படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே ;
இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
எழுகிரி யார்ப்பெழ வென்றவேலா-
இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே.

---

3. ஒடுக்கத்துச் செறிவாய்.

991.

வழக்குச் சொற்பயில் வாற்ச ளப்படு
மருத்துப் பச்சில தீற்று மட்டைகள்
வளைத்துச் சித்தச சாத்தி ரக்கள வதனலே-

---

* முழுதும் அல்லாப் பொருள்=உலகப்பொருள் யாவற்றையுங் கடந்த பொருள்.

மனத்துக் கற்களை நீற்று ருக்கிகள்
சுகித்துத் தெட்டிக ளூர்த்து நிப்பரை
மருட்டிக் குத்திர வார்த்தை செப்பிகள் மதியாதே;
கழுத்தைக் கட்டிய ணுப்பி நட்பொடு
சிரித்துப் பற்கறை காட்டி கைப்பொருள்
கழற்றிக் கற்புகர் மாற்று ரைப்பது காரிசாணி-
கணக்கிட் டுப்பொழு தேற்றி வைத்தொரு
பிணக்கிட் டுச்சிலு காக்கு பட்டிகள்
கலைக்குட் புக்கிடு பாழ்த்த புத்தியை யொழியேனே;
அழற்கட் டப்பறை மோட்ட ரக்கரை
நெருக்கிப் பொட்டெழ தூக்கி யக்கணம்
அழித்திட் டுக்குற வாட்டி பொற்றன கிரிதோய்வாய்-
அகப்பட் டுத்தமிழ் தோத்த வித்தகர்
சமத்துக் கட்டியி லாத்த மூற்றவன்
அலைக்குட் கட்செவி மேற்ப டுக்கையி லுறைமாயன்;
உழைக்கட் பொற்கொடி மாக்கு லக்குயில்
விருப்புற் றுப்புணர் தோட்க்கு பைக்கடல்
உறிக்குட் கைத்தல நீட்டு மச்சுதன் மருகோனே-
உரைக்கச் செட்டிய ணுய்ப்பன் மூத்தமிழ்
மதித்திட் டுச்செறி நாற்க விப்புணர்
ஒடுக்கத் துச்செறி வாய்த்த லத்துறை பெருமாளே.

---

4. காமத்தூர்.

992.

ஆகத் தேதப் பாமற் சேரிக்
கார்கைத் தேறற் கணையாலே-
*ஆலப் பாலிப் போலக் கோலத்
தாயக் காயப் பிறையாலே;

---

* ஆலம் = விஷம்.

போகத் தேசற் றேதற் பாயற்
பூவிற் றீயிற் கருகாதே-
போதக் காதற் போகத் தாளைப்
பூரித் தாரப் புணராயே;
தோகைக் கேயுற் றேறித் தோயச்
சூர்கெட் டோடப் பொரும்வேலா-
*சோதிக் காலைப் போதக் கூவத்
தூவற் சேவற் கொடியோனே;
பாகொத் தேசொற் பாகத் தாளைப்
பாரித் தார்நற் குமரேசா-
பாரிற் காமத் தூரிற் சிலப்
பாலத் தேவப் பெருமாளே.

---

5. மூள்வாய்.

993.

மின்னுர் பய்ந்த மைந்தர் தன்னு டினங்கு விந்து
வெவ்வே றுழன்று ழுன்று மொழிகூற-
விண்மேல் நமன்க ரந்து மண்மே †லுடம்பொ ருங்க
மென்னு ளறிந்த டைந்து உயிர்போமுன்;
பொன்னுர் சதங்கை தண்டை மூந்நூல் கடம்ப ணிந்து
பொய்யார் மனங்கள் தங்கு மதுபோலப்-
பொல்லே னிறைஞ்சி ரந்த சொன்னீ தெரிந்த ழுங்கு
புன்னு யுளுங்க வின்று புகுவாயே;
பன்னு னிறைஞ்சு மன்பர் ‡பொன்னு டுறங்கை தந்து
பன்னு கணேந்து சங்க முறவாயிற்-

---

* சோதி = சூரியன்.

† 'உடம்பு ஒருங்கு அ மெல் நாள்' எனப் பிரிக்க; ஒருங்கல் = அடங்கல்.

‡ 'பொன்னுடு உற அம் கை தந்து' எனப் பிரிக்க.

பன்னூல் முழங்க லென்று விண்ணோர் மயங்க நின்று
பண்ணூது கின்ற கொண்டல் மருகோனே;

முன்னுப் மதன்க ரும்பு வின்னோர் தடந்தெ ரிந்து
முன்னோர் பொருங்கை யென்று மூணியாட-

மொய்வார் நிமிர்ந்த கொங்கை மெய்ம்மாதர் வந்தி றைஞ்சு
முள்வாய் விளங்க நின்ற பெருமாளே.

---

6. வ ா ை க ம ா க ர்.

[திருவோத்தூர் சப்டிஸ்ட்ரிக்டில் வாகை என்னும் ஓரூர் இருக்கின்றது.]

994.

ஆலி யான மொழிக்கு மாலை யூடு கிழிக்கு
மால கால விழிக்கு முறுகாதல்-

ஆசை மாத ரழைக்கு மோசை யான தொனிக்கு
மார பார மூலைக்கு மழகான;

ஓலை மேவு குழைக்கு மோடை யாணை நடைக்கு
மோரை சாயு மிடைக்கு மயல்மேவி-

ஊறு பாவ வுறுப்பி லூறல் தேறு கரிப்பி
லூர வோடு விருப்பி லுழல்வேனே;

வேலை யாக வலைக்கை வேடர் பாவை தனக்கு
மீறு காத லளிக்கு முகமாய-

மேவு வேடை யளித்து நீடு கோல மளித்து
மீள வாய்மை தெளித்து மிதண்மீது;

மாலை யோதி முடித்து மாது தாள்கள் பிடித்து
வாயி லூறல் குடித்து மயல்தீர-

வாகு தோளி லணைத்து மாக மார்பொழி லுற்ற
வாகை மாநகர் பற்று பெருமாளே.

---

7. விசுவை.

புத. **995**.

திருகு செறிந்த குழலே வகிர்ந்து
முடிமலர் கொண்டொ ரழகாகச்-
செயவரு துங்க முகமும் விளங்க
முலைகள் குலுங்க வருமோக;
அரிவையர் தங்கள் வலையில் விழுந்து
அறிவு மெலிந்து தளராதே-
அமரர் மகிழ்ந்து தொழுது வணங்கு
னடியிணை யன்பொ டருள்வாயே;
வரையை முனிந்து விழவெ கடிந்து
வடிவெ லெறிந்த திறலோனே-
மதுரித செஞ்சொல் குறமட மங்கை
நகிலது பொங்க வரும்வேலா;
விரைசெறி கொன்றை யறுகு புனைந்த
விடையரர் தந்த முருகோனே-
விரைமிகு சந்து பொழில்கள் துலங்கு
விசுவை விளங்கு பெருமாளே.



வேலு மயிலுந் துணை.

பாட்டு முதற்குறிப் பகராதி.

உடுக்குறி [*] யுற்றன புதிய பாடல்கள்.

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
அக்குப்பீலை	621	ச அ0	அரியயனறியா	745	நு அச
அச்சாயிறுக்காலி	737	நுளஅ	அரியயன்புட்பிக்	459	ங சகூ
அஞ்சனவேல் விழிமடமாதர்	887	எ0ச	அருக்கார்	534	ச0ரு
அஞ்சனவேல் விழி யிட்ட	495	ஙளசு	அருக்கிமெத் தெனச்சிரித் துமைக்கணிட்	791	சு உங
அஞ்சுவித	758	நுகசு	அருமாமதனேப்	535	ச0எ
அடப்பக்கம்	620	சளக	அருவமிடையென	510	ங அஅ
அடலரிமகவு	660	நுகக	அருவரை	659	நுகஅ
அடல்வடி	733	நுளநு	அலகிலவுணரைக்	960	எசுநு
அணிசெவ்வி	686	நுஙஅ	அலங்கார	883	எ0க
*அண்டர்பதி	729	நுளஉ	அலைகடல்	768	சு0நு
அதிகாரய்ப்	670	நுஉநு	அவகுண	611	சளக
அதிமதங்	451	ஙசஉ	அவசியமுன்	946	எநுநு
அத்தனன்னை	617	சளள	அழுதுமா	536	ச0எ
அமருமமரினி	692	நுசஙு	அளிசுழலளகக்	782	சுகநு
அமலகமல	989	எஅக	அறமிலாவதி	694	நுசச
அமுதமூழு	526	ச00	அறிவிலாதவர்	753	நுகஉ
*அமுதினை	792	சுஉச	அறிவிலாப்பித்த	494	ஙளநு
அம்புராசியிற்	888	எ0நு	அறுகுநுனி	862	சு அஉ
அம்புலி	496	ஙளள	அற்றைக்கற்றைக்	473	ஙசு0
அயிலப்புக்	478	ஙஙஙு	அற்றைக்கிரை	471	ஙநுகூ
அயிலார்மைக்கடு	840	சுசுஙு	அனலப்பரிபுக்	795	சுஉள
அயிலொத்	693	நுசச	அனித்த	497	ஙளள
*அரிமருகோனே	904	எஉ0	அனுத்தே	714	நுசு0

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
அன்னமிசைச்	815	ரூசஉ	இரவுபகற்	541	சக0
ஆகத்தே	992	எகக	இருகுழையிடறிக்	943	எடுரு
ஆங்குடல்	903	எகஙு	இருவர்மயலோ	542	சகக
ஆசாரவீனக்	877	ரூகஙு	இருவினைப் பிறவிக்	936	எசஎ
ஆடல்மத	972	எஎச			
ஆடல்மாமத	793	ரூஉடு	இருவினையஞ்ச மலவகைமங்க	543	சகத
ஆதவித	703	டுடுக			
*ஆதிமுத	707	டுடுடு	இருவினையஞ்ச வருவினை	855	ரூஎரு
ஆரத்தன	746	டுஅடு			
ஆரத்தோடணி	622	சஅக	இருவினையின்	592	சடுஉ
ஆரமணி	498	ஙுஅ	இருவினையூண்	544	சகஉ
ஆரமூலை	905	எஉக	இருளளக	545	சகஉ
ஆலம்போல்	684	டுஙரு	இருளுமோர்கதி	637	சகஙடு
ஆலம்வைத்த	499	ஙுஎக	இருள்காட்டு	618	சஎஅ
ஆலவிழி	524	ஙுகஙு	இலகுகுழை	863	ரூஅஙரு
ஆலையான	994	எகஙரு	இலகுமூலவிலை	907	எஉரு
ஆறுமாறு	739	டுஅ0	இலக்சுருட்	958	எரூச
ஆனைமுகவற்கு	961	எரூசு	இல்லையென	666	டுஉஉ
ஆனைவரிக்	537	ச0அ	இளஙிர்க்	928	எசஉ
இகலவருதிரை	695	டுசடு	இறவாமற்	947	எடுரு
இகல்கடின	906	எஉக	இறுகுமணிமுலை	546	சகஙரு
இடமடுசுறவை	532	ச0டு	இறைச்சிப்பற்	467	ஙுடுள
இடருக்கிட	538	ச0அ	இறையத்தனை	806	ரூஙுச
இணங்கித்	630	சஅஅ			
இணையதில	696	டுசடு	ஈயெறும்புகரி	902	எகஅ
இதசந்தன	854	ரூஎடு	ஈரமோடி	956	எரூஉ
இதத்துப்பற்	465	ஙுடுடு	ஈளைசரங்குளிர்	794	ரூஉடு
இந்துகதிர்ச்	867	ரூஅரூ			
இபமாந்தர்	816	ரூசஙு	உரத்துறை	783	ரூகரூ
இமாஜ	539	ச0க	உரமுற்றிருசெப்	835	ரூடுக
இரக்குமவர்க்	797	ரூஉஎ	உருகுமாமெழு	527	ச0க
இரசபாகொத்த	636	சகஙு	உருக்கார்	715	டுரூக
இரதசுரத	540	ச0க	உரைக்கா	500	ஙுஎக
இரதமான	769	ரூ0ரூ	உரைத்தசம்பரம	959	எரூச
இரத்தமுஞ்சியு	847	ரூரூஅ	உரையொழிந்து	829	ரூடுச
இரவியுமதியுங்	530	ச0ஙு	உலையிலன	547	சகச

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
ஊனத்தசை	770	ரூ0எ	கந்தவார்குழல்	889	எ0டு
ஊனுரு	985	எஅடு	கமரிமலர்குழல்	517	ரூகூச
எகினினம்	856	ரூஎஎ	*கமலத்தே	910	எஉடு
எத்தனே	784	ரூகஎ	கமலமுகப்	549	சகடு
எந்தன்சட	805	ரூரூரூ	கமலமொட்டைக்	550	சகடு
எருவாய்	851	ரூஎஉ	கமலரு	480	ரூரூடு
எலும்புத்தோல்	626	சஅச	கமையற்ற	911	எஉசு
எழுகடல்	634	சகூஉ	கயல்விழித்	518	ரூகூடு
எனக்குச்சற்	466	ரூடுசு	கரங்கமல	975	எஎசு
என்னுல்பிறக்கவு	908	எஉச	கரமுமுளரியின்	825	ரூடு0
ஏடுக்கொத்	979	எஎக	கரிமுகக்	551	சகசு
ஏட்டின்விதிப்படி	789	ரூஉக	கரியகுழல்சரிய	874	ரூகூக
ஏலப்பலி	967	எஎக	கரியமுகில்	690	டுசஉ
ஏழுலே	709	டுடுஎ	கரியமேக	615	சஎடு
ஐய்யாரச்சிலே	771	ரூ0எ	கரியுரி	528	ச0உ
ஒருவரைச்	672	டுஉஎ	கருகியறிவகல	899	எகடு
ஒருவழிபடாது	828	ரூடுரு	கருணைசிறிதுமில்	511	ரூஅக
ஒங்குமைம்புல	836	ரூரூ0	கருத்திதப்படு	853	ரூஎச
ஒலமறைக	501	ரூஅ0	கருநிறஞ்சிறந்	552	சகஎ
ஒலமிட்டி	832	ரூடுஎ	கருப்பற்றிப்	469	ரூடுஅ
கங்குலின்குழற்	595	சடுச	கருப்புச்சாப	983	எஅரூ
கச்சிட்டணிமுலே	479	ரூரூச	கருமமான	481	ரூரூசு
கடகரிமருப்பிற்	879	ரூகூரூ	கருமுகில்திர	502	ரூஅக
கடத்தைப்பற்	468	ரூடுஎ	கருமுகில்போல்	735	டுஎசு
கடலொத்த	837	ரூரூ0	கலகசம்பரமத்	940	எடு0
கடல்பரவு	548	சகச	கலகலெனச்சில	727	டுஎ0
கடல்போற்	909	எஉச	கலகலெனப்	482	ரூரூசு
கடியவேக	698	டுசஎ	கலகவிழி	827	ரூடுஉ
கட்காமக்ரோ	772	ரூ0அ	கலைஞரெணுங்	955	எரூக
கட்டிமுண்டகர	612	சஎஉ	கலைமேவு	968	எஎஉ
கண்கயற்பிணை	734	டுஎடு	கழைமுத்து	764	ரூ0க
கதித்துப்பொங்	599	சடுக	களபமணி	697	டுசரு
கத்தூரியகரு	944	எடுச	கள்ளமுள்ள	664	டுஉக
			கறுக்கப்பற்	470	ரூடுக
			கறுத்தகுஞ்சி	872	ரூஅக

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
கறவிமைக்கணிட்	762	ருகக	குமரகுருபர குணதர	509	கூஎள
கறவுமிக்	519	ஈகூசு			
கறையிலங்	457	நுசஎ	கும்பமுனிகர்த்த	857	சூஎள
*கற்பகஞானக்	986	எஅசு	குயிலோமொழி	913	எஉஅ
கனகசபை	590	சருக	குரவநறு	557	சஉஉ
கனவாலங்	677	நுகக	குருதிகிருமிகள்	912	எஉஎ
கனகதம்	452	நுசஉ	குருநிபுலாலென்பு	504	ஈஅரு
கனக்ரவுஞ்	454	நுசச	குருவுமடியவ	934	எசசு
கனிதருங்	460	ஈரு0	குரைகட	757	நுகருு
கனைகடல்	529	ச0ரு	குலையமயிரோதி	673	நுஉஅ
கன்னலொத்த	830	சுருநு	குவலயமல்கு	662	நுஉ0
காணுதநூர	553	சகஅ	குவளைபொருதிரு	795	சுஉசு
காணுணுதது	741	நுஅக	குழவியுமாய்மோக	558	சஉரு
காதைக்காதி	623	சஅஉ	குறித்தநெஞ்	884	எ0உ
காதோடு	810	சுரூள	கூடாதே	820	சுசஅ
காந்தட்கரவளை	937	எசஅ	கூந்தலாழ	616	சஎசு
*காயமாய	610	சஎக	*கூரியகடைக்க	897	எகரு
காரணியுங்குழ	922	எரூசு	கூர்வாய்	821	சுசஅ
காராடக்குழல்	554	சகக	கெண்டைகள்	858	சுஎஅ
காருமருவும்	555	சஉக	கெண்டைநே	869	சுஅஅ
கார்குழல்குலைந்	973	எஎநு	கெஜநடை	533	ச0நு
கார்க்கொத்த	682	நுரூநு	கேதகைய	559	சஉச
கார்ச்சார்குழ	685	நுரூள	கைத்தருண	591	சருக
காலமுகிலென	736	நுளள	கொக்குக்	475	ரூரூக
காலன்வேற்கணை	924	எரூஅ	கொங்குலாவிய	773	சு0க
காவிப்பூவை	503	ரூஅஉ	கொத்தார்	483	ரூசுள
காவியுடுத்துந்	638	சகசு	கொந்தரங்குழல்	604	சசுநு
கீதவிநோத	556	சஉக	கொந்தளம்புழு	596	சருநு
குகனெருபர	593	சநுஉ	கொந்தள வோலைகளாடப்	632	சக0
குங்குமகற்	811	சுரூஅ	கொந்தள வோலைகுலுங்கிட	976	எளள
குசமாதி	702	நுநு0	கொந்தார்	861	சுஅக
குடங்கள்	885	எ0உ	கொள்ளை யாசைக்	624	சஅரூ
குடத்தாமரை	754	நுகரூ			
குடல்மிணமென்பு	819	சுசஎ			
குதிபாய்ந்திரத்தம்	722	நுரூசு			

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
கோடானை	560	ரூஉச	சீரிமுப்புரக்	485	ரூசுஅ
கோடுசெறி	561	ரூஉடு	சீதமதிய	744	டுஅச
கோதிக்கோதிக்	639	ரசுஎ	சீதவாசனை	964	எசுஅ
கோலமறை	747	டுஅசு	*சீதளவாரிஜ	730	டுஎஉ
கோவைச்சுத்தத்	484	ரூசுஅ	சீருலாவிய	716	டுசுக
கோவைவாயித	914	எஉஅ	சுக்கிலச்சுரொணி	565	ரூஉஅ
சகசம்பக்குடை	640	சகஅ	சுடரனைய	643	டுoக
சகுடமுந்துங்	641	சகக	சுத்தச்சித்தத்	474	ரூசுo
சங்குவார்முடி	939	எசக	சுருதிமறைக	718	டுசுரூ
சங்கைக்கத்	945	எடுச	சுருதியாயிய	841	சுசுரூ
சஞ்சரியுகந்து	941	எடுக	சுரும்பணி	977	எஎஅ
சஞ்சலசரித	932	எசச	சுரும்புற்ற	629	சஅள
சதங்கைமணி	895	எகஉ	சூலமென	790	சுஉஉ
சதுரத்தரை	751	டுகo	சூழும்வினைக்கட்	843	கசுடு
சந்தனந்தி	839	சுசுஉ	சூழ்ந்தேன்ற	804	சுரூஉ
சந்தனம்பரிமள	774	சுகo	செக்கர்வானப்	777	சுகஉ
*சந்திதொறு	942	எடுஉ	செங்கலச	614	சஎடு
சந்திரவோலை	609	சஎo	செஞ்சொற்பண்	566	சஉக
சயிலாங்கனைக்	723	டுசுசு	செடியுடம்	453	ரூசரூ
சரக்கேறித்தப்	587	சசஅ	செறிதரும்	458	ரூசஅ
சரம்வெற்றிக்	765	சுoஉ	சென்னித்திடுஞ்	873	சுகo
சருவியிதழ்ந்து	775	சுகo	சேலாலமொண்	671	டுஉசு
சலமலம்	463	ரூடுரூ	சேலையுடுத்து	844	சுசுசு
சாந்துடனே	642	டுoo	சொரியுமாமுகி	891	எoஅ
சாலநெடு	708	டுடுசு	சொருபப்பிர	691	டுசஉ
*சிகரமருந்த	658	டுகள	சொற்பிழை	852	சுளரூ
*சிகரிகளிடிய	661	டுகக	சோதிமந்திரம்	809	சுரூசு
சித்திரத்திலு	818	சுசடு	சோதிமாமதி	687	டுடுக
சிந்துற்றெழு	776	சுகக	தாலமெங்கும்	710	டுடுள
சிரத்தானத்திற்	588	சசக	திசைதுறுந்	461	ரூடுக
சிரித்துச்சங்	600	சகo	துசையாகிய	929	எசஉ
சிலநுதல்	562	சஉடு	துத்தித்தத்திச்	476	ரூசுஉ
சிவமாதுடனே	563	சஉசு	துத்தைமயில்	644	டுoஉ
சினமுடுவல்	564	சஉள			

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
தத்தையென்	601	ரசக	தேனிருத்த	859	சஎக
தமரகுரங்களுங்	567	ரசo	தொக்கைக்கழு	900	எக்ச
தமிழோதிய	568	ரசக	தொடுத்தாள்	842	சக்ச
*தரங்கவார்குழற்	957	எசச	தோய்யில்	665	நுஉஉ
தருணமணி	521	கக்கஎ	தோடப்பாமற்	712	நுநுஅ
தருவூரிசை	813	சரo	தோடுறுங்குழை	705	நுநுஉ
தரையினில்	878	சகநு	தோடுற்றுக்	881	சகக
தலங்களில்	704	நுநுக	தோதகப்பெரும்	572	ரசர
தலைகாளிற்பத	814	சரக	தோலெலும்பு	719	நுசச
தலையைமழித்துச்	569	ரசஉ	தோழமை	711	நுநுஅ
தலைவலை	464	கநுர	நகையா	633	ரகக
தவர்வாட்டோமர	681	நுகர	நசையொடு	669	நுஉநு
தறுகணன்	635	ரக்க	நச்சரவ	486	கசக
தனத்திற்குங்	602	ரசஉ	*நஞ்சினைப்	613	ரஎர
தனுதுதல்	866	சஅச	*நாடாபிறப்பு	646	நுoர
தாதுமாமலர்	625	ரஅர	நாடித்தேடித்	505	கஅர
தாமரையின்	915	எஉக	நாட்டந்தங்கிக்	759	நுகச
தாரகாசுரன்	740	நுஅo	நாலுசதுரத்த	647	நுoர
தாரணிக்கதி	655	நுகநு	நிகரில்பஞ்ச	674	நுஉக
திட்டெனப்பல	882	எoo	நிணமொடு	749	நுஅஅ
தீமிரமாமன	717	நுசஉ	நித்தப்பினர்	930	எரக
தீயங்குஞ்சஞ்	605	ரசச	நிரைதரு	700	நுரஅ
*தீருகுசெறிந்த	995	எக்ர	நிரைத்தித்தில	923	எகஎ
தீருட்டுவாணிப	603	ரசர	நிறைத்தபித்தழ்	506	கஅர
*தீருமொழி	755	நுக்ர	நீதத்துவ	969	எஎஉ
தீருவுரூப	916	எஉக	நீதானெத்	823	சரக
தீரைவார்கடல்	699	நுரஎ	நீரிழிவு	898	எக்ர
தீனமணி	778	சகஉ	நீலக்குழ	648	நுoசு
தீராப்பிணி	953	எசo	நீலமயில்	726	நுசக
துகிலும்முகமத	512	கக்o	நீலமாமுகில்	627	ரஅநு
துத்திபொற்றன	645	நுoசு	*நீலமுகிலான	846	சசஎ
தும்பிமுகத்	868	சுஅஎ	நீள்புயற்	720	நுசர
தெரியலஞ்	455	கரநு	நூலினையொத்த	845	சசர
தேதென	571	ரசர			

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
நெய்த்தசுரிகுழ	917	எசo	*பிறவியான	731	நுஎசு
பகருமுத்தமிழ்ப்	798	சுஉஅ	புணரியு	926	எசo
பக்குவவாசார	950	எநுஅ	புணர்முலே	575	சசுசு
பங்கயனுர்	589	சசகூ	புருவச்செஞ்சிலே	965	எசுகூ
*பசையற்ற	756	நுகூசு	புஷ்பபடுஞ்	462	சநுஉ
பச்சிலேயிட்டு	728	நுஎக	புலவரை	831	சுநுசு
பச்சையொண்கிரி	812	சுசகூ	புலேயனை	576	சசுஎ
பஞ்சபுல	896	எகசு	*புவிபுனல்	679	நுசசு
பஞ்சுசேர்	870	சுஅஅ	புழுகொடுபனி	865	சுஅநு
படிபுனல்	799	சுஉகூ	புனமடந்	456	சுசசு
படியையள	864	சுஅசூ	பூத்தார்சூடுங்	763	சுoo
படிரெழுக்கமு	487	சுஎo	*பூமாதுர	779	சுகசு
*பட்டுமணிக்	875	சுசுஉ	பெருக்கமாகிய	801	சுசுo
பந்தப்பொற்	948	எநுசு	பேதகவிரோதத்	525	சுகூக
பரவியுனது	675	நுஉக	பையரவுபோலு	667	நுஉசு
பரவுநெடுங்	962	எசுஎ	பொக்குப்பைக்	477	சுசுசு
பரவுவரிக்	742	நுஅஉ	பொருவனகள்ள	663	நுஉக
பரிமளமிகவுள	507	சுஅநு	பொன்றுமன்	678	நுசுஉ
பரியகைப்	520	சுகூசு	போகதற்பக்	577	சசுஎ
பரிவுறு	938	எசஅ			
பருவம்பிணை	606	சசுஎ	மகரகுண்டல	880	சுகூஅ
பலபலத்துவ	748	நுஅஎ	மகரக்குழைக்கு	808	சுசுநு
பழிப்பர்	963	எசுஎ	மகரமதுதெட	824	சுநுo
பழியுறுசட்	800	சுஉக	மகரமெறிகடல்	513	சுகூக
*பனகப்பட	807	சுசுச	மகரமொடுறு	650	நுoஎ
பனிபோலத்துளி	649	நுoஎ	மகுடக்கொப்	488	சுஎo
பாடகச்சிலம்	785	சுகஎ	மக்கட்குக்	489	சுஎக
பாணமலரது	573	சசுநு	மங்கைக்கணை	656	நுகசு
பாலாய்நூலாய்	574	சசுநு	மச்சமெச்சு	651	நுoஅ
*பாலோதேலே பலவுறு	826	சுநுக	மதப்பட்ட	951	எநுஅ
பாலோதேலே பாகோ	822	சுசுக	மதவெங்கரிக்	607	சசுஅ
பாவநாரிகள்	738	நுஎக	மதனச்சொற்	780	சுகச
பாற்றுக்கணங்கள்	683	நுசுசு	மதிக்குநேரெனும்	750	நுஅகூ

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
மதியஞ்சத்திரு	860	௯அ0	முட்டமருட்டி	931	எசச
மதியமண்குண	652	ருo௯	முட்டுப்பட்டுக்	472	ஈருங
*மதியால்லித்	927	எசக	முத்தமோகன	654	ருகஈ
மந்தரமென்குவ	597	சருசு	முத்துநவ	971	எஎஈ
*மயலோது	490	ஈஎஉ	*முத்துரத்த	491	ஈஎஈ
மருக்குலாவிய	802	ஈஈக	முத்தோலை	981	எஅக
மருமல்லி	689	ருசக	முருகுசெறிகுழல்	515	ஈகஉ
மருவுகடல்முகில்	653	ருக0	முலைகுலுக்கிகள்	803	௯ஈக
மருவுமஞ்சூத	676	ருஈo	முலைமறைக்கவும்	918	எஈக
மருவுலாவிடு	890	எoஎ	முல்லைமலர்	619	சஎஅ
மலைக்கனத்தென	850	௯எக	முழுகிவட	522	ஈகஎ
மனத்திரைந்	949	எருஎ	மூலமுண்டகனு	766	ஈo௯
மனநினைசுத்தஞ்	970	எஎஉ	மூலாதாரமொ	787	ஈகக
மனமெனும்	876	௯ஈஈ	மேகமொத்த	580	சசo
மனைமாண்சுத	724	ருசுஎ	மேகலை	919	எஈஉ
மாதர்	721	ருசுரு	மேகவார்குழ	788	௯உo
மாத்திரையாகிலு	752	ருகஈ	மைக்குழ	838	௯௯க
மார்புரம்பினளி	833	சுருஅ	மைச்சரோருக	954	எசo
மாலிலுலெடுத்த	786	சுகஅ	மொழியநிறங்	581	சசக
மாலுதனில்	871	௯அக	வங்கார	817	௯சச
மாலையில்வந்து	978	எஎஅ	வடவையன	523	ஈகஅ
மானேர்விழி	886	எoஈ	வடிவது	680	ருஈஈ
மானைவிடத்தைத்	578	சஈஅ	வண்டணியுங்	767	ஈo௯
மின்னுர்பயந்த	993	எகஉ	வண்டுபோற்	935	எசஎ
மின்னிடை	688	ருசo	வண்டையொத்	594	சருஈ
முகசந்திர	608	சசஅ	வதனசரோருக	668	ருஉச
முகத்துலக்கிகள்	579	சஈக	வந்துவந்துவித்	598	சருஅ
முகமெலாநெய்	966	எஎo	வம்பழச்சில	492	ஈஎஈ
*முகவண்டெ	849	௯எo	வரித்தகுங்	848	௯௯க
முகிலளகஞ்சரி	933	எசரு	வருமயில்	701	ருசக
முகிலாமெனும்	725	ருசஅ	வலிவாத	582	சசக
முகிலக்காரைச்	893	எக0	வழக்குச்சொற்	991	எகo
முகிலயிகல்	514	ஈகஉ	வனப்புற்றெழு	952	எருக

முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.	முதற்குறிப்பு.	பாட்டின் எண்.	பக்க எண்.
வாசனை	925	எசுக	விதியதாகவெ	584	சசசு
வாசித்த	713	நுடுக	விந்துபேதித்த	901	எகவ
வாட்டியெனைச்	760	நுகள	விந்துப்புளகித	585	சசசு
வாட்படச்	982	எஅஉ	விரகற	990	எசுஒ
வாதபித்தமொடு	628	சஅசு	விரகொடு	531	சஒச
வாய்ந்தப்பிடை	493	சுஎச	விலையறுக்கவு	706	நுடுசு
வாருமிங்கே	761	நுகஅ	விழுதாதெனவே	834	சுடுஅ
வாலவயதாகி	987	எஅஎ			
வாளின்	920	எசுசு	வீங்குபச்சிள	892	எஒக
வானோர்வழுத்து	988	எஅஅ	வீறுபுழுகான	586	சசள
விகடசங்கட	894	எகக	வேதத்திற்	980	எஅஒ
விகடபரிமள	921	எசுசு	*வேலிரண்டெனு	732	நுளச
விடமுமமுதமு	516	சுசுசு	வேலேதோற்க	984	எஅச
விடமும்வேலன	743	நுஅசு	வேலேப்போல்	508	சுஅசு
*விடமென	781	சுகச	வேழமுண்ட	657	நுகள
விடுங்கைக்	631	சஅக	வேனின்மத	974	எளடு
விடுமதவேள்	583	சசஉ			

7555a

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS.